ஷ. அமனஷ்வீலி

# குழந்தைகள் வாழ்க

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர் இரா. பாஸ்கரன்

**Ш. Амонашвили**

ЗДРАВСТВУЙТЕ, ДЕТИ!

*на тамильском языке*

**Sh. Amonashvili**

HELLO, CHILDREN!

*in Tamil*

© Издательство «Педагогика», 1983
© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1987

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{4306000000-367}{014(01)-87}$ 330—87

## பொருளடக்கம்

அணிந்துரை . . . . . . . . . . . . . . . . 7
முன்னுரை . . . . . . . . . . . . . . . . 11
அத்தியாயம் ஒன்று. கல்வியாண்டு துவங்கும் தருவாயில் (ஆகஸ்டு 31) . . . . . . . . . 15
குழந்தைகள்—என் ஆசிரியர்கள் . . . . . . . 15
பூர்வாங்க அறிமுகம் . . . . . . . . . . 19
முதல் ஆசிரியர் . . . . . . . . . . . . 24
ஆசிரியர் வேலையில் நேர ஒதுக்கீடு . . . . . 28
அத்தியாயம் இரண்டு. ''நான் சிறுவனாக இருந்த போது...'' (முதல் நாள்) . . . . . . . . 32
எதிர்கால மனிதன் . . . . . . . . . . . 32
பள்ளி உன்னுடையது . . . . . . . . . . 36
வார்த்தைகளின் படிகத்தன்மை . . . . . . . 40
பாடங்களுக்கு இடையிலான நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது? . . . . . . . . . . . 50
''நம்மில் யார் சரி, யார் தவறு?'' . . . . . 59
குழந்தையுடைய மனதின் ஒவ்வொரு அம்சத்தையும் பேணிக்காத்தல் . . . . . . . . . . . 68
வளர்ச்சியில் ஒரு படி . . . . . . . . . . 72
முட்டுக்கட்டை . . . . . . . . . . . . . 75
பெற்றோர் கூட்டம் . . . . . . . . . . . 78
80ஆம் ஆண்டுகளின் போக்கு . . . . . . . 85
முன்மொழிவுகள், கேள்விகள் . . . . . . . . 90
அத்தியாயம் மூன்று. பாடவேளையின் போது மோர்பேய்க்கு எதிராக மோமுஸ் (20வது நாள்) . . . . . . . . . . . . . . . 94

பரஸ்பர உறவு பற்றிய விதி . . . . . . . . 94
''எழுத்து வெறி'' . . . . . . . . . . 95
புதியவற்றை அறியும் மகிழ்ச்சி எப்படிப் பிறக்கிறது? . . . . . . . . . . . . . 99
சிந்திக்கும் மனிதனைப் பார்ப்பதே மகிழ்ச்சி . . 112
ஆசிரியரின் நொடிகளைப் பிரித்தல் . . . . . 131
மனச்சாட்சியைத் தட்டியெழுப்பு . . . . . 136
கலந்து பழகும் மகிழ்ச்சி . . . . . . . . 142
வெவ்வேறு விதமான தந்தைகள் . . . . . . 150
குடும்பத்திற்கும் பள்ளிக்கும் இடையிலான தொடர்புகள் . . . . . . . . . . . . . 157
கூடுதல் பள்ளி நேரம்: பன்முக நடவடிக்கை . . 163
அத்தியாயம் நான்கு. அரிச்சுவடி விழா (84வது நாள்) . . . . . . . . . . . . . . . . 175
படிப்பது—புதியவற்றை அறியும் வழி . . . . . 175
முதல் பாடநூல்களை உருவாக்கும் கோட்பாடு . 183
எழுத்துகளே! உமக்கு நன்றி! . . . . . . . 185
பள்ளி முழுவதும் பாராட்டுகிறது . . . . . . 188
குழந்தை—எல்லையற்ற திறமையின் மாடல் . . 191
ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள உரிமை . . . 195
அதிசயத்தின் ''ரகசியங்கள்'' . . . . . . . 199
ஆறு வயதுக் குழந்தைகளின் மகிழ்ச்சிகளும் வருத்தங்களும் . . . . . . . . . . . . . . 204
பெற்றோர்களுக்கான கலை நிகழ்ச்சி . . . . . 210
கசப்பான மனப் புண் . . . . . . . . . . 213
அத்தியாயம் ஐந்து. பள்ளி நாளின் முழு இசைக் குறியீடு (122வது நாள்) . . . . . . . . 217
இசையும் ஆசிரியரியலும் . . . . . . . . 217
பாடவேளையின் போது குழந்தையின் வாழ்க்கையைத் தொடரும் கோட்பாடு . . . . . . 226
பாடவேளையின் போது குழந்தைகளுடன் காரிய ரீதியான உறவுகளை ஏற்படுத்தும் கோட்பாடு 230
குழந்தைகளின் வயதுச் சிறப்பியல்புகளுக்கேற்ற வேகத்தில் பாடம் நடத்தும் கோட்பாடு . . . 235
கணிதப் பாடம் . . . . . . . . . . . 241
முதல் 10 நிமிட இடைவேளை . . . . . . . 246

தாய் மொழிப் பாடம் . . . . . . . . . . 247
இரண்டாவது 10 நிமிட இடைவேளை . . . 251
கலைப் பாடம் . . . . . . . . . . . . . 252
நீண்ட இடைவேளை . . . . . . . . . . 254
உழைப்புப் பாடம் . . . . . . . . . . . 254
பாடங்களுக்குப் பின் . . . . . . . . . . 255
கல்வி முறையியல் தவறுகள் . . . . . . . . 255
மாயா மட்டும் நோய்வாய்ப்படாதிருந்தால் . . 261
''என் அப்பாவாக இருங்கள்...'' . . . . . . 265
அத்தியாயம் ஆறு. தனிநபர் (கடைசி, 170வது நாள்) . . . . . . . . . . . . . . . . . . 269
வார்த்தைகள், வாக்கியங்களின் வீரதீரம் . . 270
யாரை விருந்தினராக அனுப்புவது? . . . . . 273
ரகசியக் கூட்டங்கள் . . . . . . . . . . . 277
பிறந்த நாள் . . . . . . . . . . . . . 283
தனிநபரும் பேனா மையின் நிறமும் . . . . . 289
''சின்ன'' விஷயங்களைப் பற்றி . . . . . . 294
நீங்கள் இல்லாத வெற்று வகுப்பில் எனக்குச் சலிப்பாக உள்ளது . . . . . . . . . . . . . 299
''பள்ளியின் ஆன்மா'' . . . . . . . . . 307
பெற்றோர்களுக்கு பாக்கெட்டுகள் . . . . . 317
எங்களுடைய கண்காட்சி . . . . . . . . . 323
மரங்களுடன் விடைபெறுதல் . . . . . . . . 327
எனக்கு 114 கடிதங்கள் வரும் . . . . . . . 330
ஆறு வயதுக் குழந்தைகளின் நாளைய தினம் பற்றிய சிந்தனைகள் . . . . . . . . . . 334

# அணிந்துரை

ஷல்வா அலெக்சாந்தரவிச் அமனஷ்வீலியின் இந்நூலை ஒரு குறிப்பிட்ட வகையை மட்டும் சேர்ந்த நூலாகக் கருத முடியாது. எல்லாமே மிக எளிமையானதாகத் தோன்றக் கூடும்—நூலாசிரியர் தன் பல்லாண்டு நடைமுறைப் பயிற்சியின் அடிப்படையில், ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தரும் அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். வாசகரைப் பொறுத்தமட்டில் ஷ. அமனஷ்வீலி சாதாரண ஆரம்பப் பள்ளியாசிரியர். உண்மையிலோ இவர் பிரபல சோவியத் விஞ்ஞானி, மனோதத்துவ இயலில் டாக்டர் பட்டம் பெற்றவர், பேராசிரியர். ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தரும் முறைகளும் வழிகளும் இந்நூலில் சுட்டிக் காட்டப்படுகின்றன. எழுதப் படிக்கவும் ஆரம்பக் கணிதத்தையும் சொல்லித் தரும் ஏராளமான முறையியல் சாதனங்கள், படங்கள் மற்றும் வரைபடங்களுடன் விளக்கப்பட்டுள்ளதானது இதற்கேற்றவாறு உள்ளது. நூலாசிரியரும் இவரது சகாக்களும் இவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்தி, குழந்தைகள் அந்தந்தப் பாடங்களின் அடிப்படைகளை நன்கு கிரகிக்குமாறு செய்கின்றனர். இதில் வாசகரும் (குறிப்பாக ஆரம்பப்பள்ளியாசிரியரும் குழந்தைகளுக்கான தோட்டப் பள்ளியின் ஆசிரியரும்) கல்வி கற்பிப்பதற்கான ஏராளமான முறையியல் சாதனங்களைக் காணலாம். இவற்றை உருவாக்கியதில் எல்.எஸ். விகோத்ஸ்கி, டி. என். உஸ்னாட்ஸே, எல்.வி. ஸான்கோவ், பி.இ. ஹச்சாபுரீட்ஸே, டி.பி. எல்கோனின், வி.வி. தவீதவ் மற்றும் பல சோவியத் மனோதத்துவ வல்லுநர்கள் ஆகியோரின் மனவியல்-ஆசிரியர் பயிற்சி கருத்துகள் பெரும் பங்காற்றின. அப்படியென்றால், இந்நூல் ஒரு முறையியல்

பாடநூல், ஆரம்பப் பள்ளியாசிரியர்களுக்கான பாடப் புத்தகம் என்று பொருளாகுமா? கிடையவே கிடையாது. இந்நூல் உண்மையிலேயே ஒரு முழு கல்வியியல் காவியமாகும். அ.எஸ். மக்காரென்கோ எழுதிய **கல்வியியல் காவியம்** என்ற பிரபல நூலிற்குப் பின் காவிய நடையிலான கல்வியியல் எனும் வரையறுப்பிற்கு இவ்வளவு தூரம் பொருந்தி வரும் நூலை நான் பார்க்கவில்லை. ஷ.அ. அமனஷ்வீலியைப் பொறுத்தமட்டிலும் கூட இந்தப் படைப்பு வெறும் கல்வியியல் காவியம் மட்டுமின்றி கல்வியியல் இன்னிசையும் ஆகும். நூலாசிரியர் குழந்தைகளுடன் கலந்து பழகும் ஒவ்வொரு தருணத்திலும் நுண்ணிய இன்சுவை மிக்க இசை நயம் ஒலிக்கிறது. தன் சின்னஞ்சிறு மாணாக்கர்களுடனான ஒவ்வொரு சந்திப்பையும் நூலாசிரியர், ''எண்ணற்ற வகை மாறுபாடுகளையுடைய கல்வி எனும் இசைவெள்ளமாகக்'' கருதுவது தற்செயலானதல்ல. ''ஒவ்வொரு பள்ளி நாளின் இன்னிசையும் என் காதுகளில் குழந்தைகள் போடும் சத்தமாக ஒலிக்கிறது'' என்று எழுதுகிறார் ஷ. அமனஷ்வீலி.

குழந்தைகளின் மீதான அன்பு, குழந்தைகளின் மென்மையான இதயத்தின் பாலான நுட்பமான அணுகுமுறை ஆகியனதான் இந்நூலை எழுதத் தூண்டிய முக்கியக் காரணிகளாகும். குழந்தைகளின் மென்மையான இதயத்தைப் புண்படுத்துவது, ஒரு கவனமற்ற வார்த்தையால் அல்லது செயலால் காயப்படுத்துவது எளிது. திபிலீசி நகரில் ஷ.அ. அமனஷ்வீலி ஒரு வகுப்பை நடத்திக் கொண்டிருந்ததை நான் பார்க்க நேர்ந்தது. அவர் வகுப்பில் உள்ளவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ஒரு சில குழந்தைகள் பதில் தெரியுமென கரங்களை உயர்த்தினர். தனக்கே உரித்தான பாணியில் மும்முரமாக நடந்து வந்த அமனஷ்வீலி ஒரு சிறுவனை அணுகி மெதுவாகச் சொல்கிறார்: ''தாத்தோ, மெதுவாக என் காதில் சொல்.'' தாத்தோ ஏதோ உற்சாகமாக அவர் காதில் கிசுகிசுக்கிறான். ஷ.அ. அமனஷ்வீலி புன்முறுவலோடு கேட்டு, பின் அவனது தலையை அன்பாகக் கோதிவிட்டபடியே மிக மிக மெதுவாகக் கூறுகிறார்: ''தாத்தோ, எங்கே இன்னும் சிறிது யோசி, பார்க்கலாம்.'' தாத்தோ தன் அடர்த்தியான கறுப்புப் புருவங்களை சுருக்கியபடியே ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குகிறான். இந்த சமயத்தில் ஆசிரியர் இன்னொரு சிறுவனின் அருகே நிற்கிறார்,

அவனோ எழுந்து நின்று உரக்க, உறுதியோடு பதில் சொல்கிறான்.

சமீபத்தில் எனக்கு தெரிந்த பெண்மணி ஒருவர் தன் ஐந்து வயதுச் சிறுமியைப் பற்றிச் சொன்னார்: ''நான் அறையில் நுழைந்து பார்த்தால் என் மகள் தான்யா எதைப் பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தாள், தன்னுள்ளேயே மிகவும் லயித்திருந்தாள். இரண்டு முறை நான் கூப்பிட்ட பின்தான் அவள் தன் நிலைக்கே வந்தாள். 'என்ன யோசனை' என்று நான் கேட்டேன். அவள் திடீரென பதில் சொன்னாள்: 'ஒன்றுமில்லை அம்மா, நான் என் விஷயமாக, குழந்தைகள் விஷயமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்...'. '' ஆம், குழந்தைகள் தம் விஷயங்களை, குழந்தைகள் விவரங்களைப் பற்றி சிந்திக்கின்றனர். அது இவர்களின் சின்னஞ்சிறு உலகம், பெரியவர்களாகிய நாம் இந்த உலகத்தினுள் நுழைவதே கடினம். ஆனாலும் நாம் இந்த உலகத்தினுள் நுழைய வேண்டும். இல்லாவிடில் பெரியவர்களின் உலகத்தை இவர்களுக்கு நம்மால் காட்ட முடியாது, எனவே இவர்களுக்கு அவசியமான சமூக அம்சங்களை அளிக்க முடியாது, நமக்கு உகந்த வழியில் இவர்களை வளர்க்க இயலாது. கட்டளைகள், அச்சுறுத்தல், நிர்ப்பந்தம் மூலம் இதைச் செய்ய முயலலாம் அல்லது ஷ.அ. அமனஷ்வீலி செய்வதைப் போல் குழந்தையின் எண்ணங்களுக்குள், குழந்தையின் நடவடிக்கைகளின் உட்பொருளினுள் ஆழப் புகுவதன் மூலம், குழந்தையின் உள்ளாற்றல்களைப் பயன்படுத்தி, அன்பு, பரந்த மனப்பாங்கு, நகைச்சுவை உணர்வு, துடியார்வம், எதார்த்தத்தை அறியும் ஆக்கபூர்வமான அணுகுமுறை ஆகியவற்றைத் தட்டியெழுப்பி இதைச் செய்யலாம். இந்த விஷயத்தில் ''தனக்கே உரித்தான, குழந்தைகள் விஷயம்'' சிறுவனுக்கு ஒரு மகிழ்ச்சியாக மாறுகிறது, இதை ஆசிரியருடன் கூடிய விரைவில் பகிர்ந்து கொள்ள அவன் துடிக்கிறான். தமக்கு சுவாரசியமானவையும், முக்கியமானவையுமான எல்லாமே ஆசிரியருக்கும் சுவாரசியமானவை, முக்கியமானவை என்று குழந்தைகளுக்குத் தெரியும். ஆசிரியரின் எல்லா முடிவுகளும் நடவடிக்கைகளும் விவாதத்திற்கு அப்பாற்பட்டவை என்று கூற முடியா விட்டாலும் அவருடைய உள்ளத்தில் போதனை முறை சம்பந்தமான ஆக்கபூர்வமான அணுகுமுறை

பொங்குகிறது. ஆசிரியரையும் குழந்தைகளையும் இணைக்கும் இழை, நூல் பூராவும் ஓரிடத்தில் கூட அறுந்து போகவில்லை, நூலாசிரியரின் சிந்தனைகள் மற்றும் செயல்களின் பாலான வாசகரின் கவனம் ஒரு நிமிடம் கூடக் குறைவதில்லை.

ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருதல் எனும் ஒரு மிக முக்கிய, கடினமான பிரச்சினைக்கு இந்நூல் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தற்போது சோவியத் நாட்டில், 1984ஆம் ஆண்டு பொது மற்றும் தொழிற்கல்வி சீர்திருத்தத்தின்படி ஆறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு கல்வி ஆரம்பமாகிறது. இதை எப்படி நடைமுறையில் செயல்படுத்துவது? இது குழந்தைகளுக்குப் பாதகமாக அமையாதா? இது அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்து ஓராண்டைப் பிடுங்கி விடாதா? இப்பிரச்சினைத் தொடர்பாக சோவியத் நாட்டில் எழுபதாம் ஆண்டுகளில் பெரும் விவாதங்கள் நடைபெற்றன. ஐந்து, ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருவதன் நோக்கம் குழந்தையின் வளர்ச்சியை வேகப்படுத்தி, முடுக்கி விடுவது அல்ல, மாறாக விரிவுபடுத்துவதே, அதாவது குழந்தைகளின் ஆன்மிக உலகைச் செழுமைப்படுத்தி, அவர்களின் அறிவாற்றலுக்கு ஊக்கமளித்து, கண்ணோட்டங்களை விரிவுபடுத்துவதுதான் இதன் நோக்கமென இப்பணிக்குத் தலைமை தாங்கும் பேரவை விஞ்ஞானி அ.வி. ஸப்பரோஷட்ஸ் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சோவியத் யூனியன் ஆசிரியரியல்
விஞ்ஞானப் பேரவை உறுப்பினர்
அ. வி. பெத்ரோவ்ஸ்கி

# முன்னுரை

ஆரம்பப் பள்ளியின் தயாரிப்பு வகுப்பில் (பல சமயங்களில் இதை பூஜ்ஜிய வகுப்பு என்கின்றனர்) உள்ள ஆறு வயதுக் குழந்தைகளுடன் ஆசிரியர் எப்படிக் கலந்து பழக வேண்டும் என்பது பற்றிய நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இந்த ''அசாதாரண'' மாணவர்களுடன் கடந்த 15 ஆண்டுகளாகக் கலந்து பழகிய அனுபவம் இந்நூலில் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பெற்றோர்கள் சந்தேகப்பட்டனர் (''இந்த வயதில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமா?'' என்றனர் அவர்கள்), ஒரு சில விஞ்ஞானிகள் மறுப்பு தெரிவித்தனர் (''எதற்கு அவசரம்? குழந்தைகளின் மனநிலை இதற்குத் தயாராயில்லை!'' என்றனர் இவர்கள்)... ஆண்டுகள் உருண்டோடின, தயாரிப்பு வகுப்பு பற்றிய பிரச்சினை அரசு முக்கியத்துவத்தைப் பெற்றது.

பள்ளியில், நர்சரிப் பள்ளியில் அல்லது வீட்டுச் சூழ்நிலையில் ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தர முடியுமா, இது அவசியமா என்று இந்நூலில் நான் நிரூபிக்கப் போவதில்லை. விஞ்ஞான அடிப்படையில், வாழ்க்கையே முன் வைக்கும் கோரிக்கைகளின் அடிப்படையில், படிப்பதன் மீது குழந்தைகளுக்கே இருக்கும் நாட்டத்தின் அடிப்படையில் இப்பிரச்சினை ஏற்கெனவே தீர்க்கப்பட்டுவிட்டது. ஆறு வயதுக் குழந்தைகளுக்கு என் கருத்துப்படி எப்படிப்பட்ட பள்ளி வாழ்க்கையை அளிக்கலாம் என்பது பற்றி இந்நூலில் கூற விழைகிறேன்.

இந்நூலை எழுதும் போது கீழ்க்காணும் கடமைகளை என் முன் வைத்துக் கொண்டேன்: ஆரம்பப் பள்ளியின், இயன்ற அளவிற்கு செகன்டரி பள்ளியின் முழுமையான முறை எனும் படிகத்தின் ஊடாக தயாரிப்பு வகுப்பை

புரிந்து கொள்வது; ஆறு வயதுக் குழந்தையைப் பள்ளிச் சிறுவனாக மட்டும் காட்டாமல் (உண்மையில் இவனைப் பள்ளிச் சிறுவன் என்று கூறுவதே கடினம்) முதலில் இவனை, தன் பன்முக வாழ்வைக் கொண்ட, சுற்றியுள்ளவர்களுடன் சிக்கலான பரஸ்பர உறவுகளையுடைய ஒரு வளரும் மனித னாகக் காட்டுவது; இதற்கேற்றபடி, ஒவ்வொரு குழந்தை யின் உண்மையான வாழ்க்கை, இவனது மகிழ்ச்சி, அதிருப்தி, தேவைகள், நாட்டங்கள், திறமைகள், நம்பிக்கைகள் ஆகிய வற்றைக் கவனத்தில் கொள்வதன் மூலமாக மட்டுமே இவனைப் புரிந்து கொண்டு ஒரு தனிநபர் என்ற வகையில் வளர்க்க முடியும் என்று காட்டுவது; ஆறு வயதுக் குழந்தை கள் ஒரு விசேஷப் பிரிவினர், முதல் வகுப்பு சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற அதே முறையை இயந்திர கதியாக இவர் களுக்கும் பயன்படுத்தக் கூடாது என்று தெட்டத் தெளி வாக நிரூபிப்பது என்பனதான் என் முன் நின்ற கடமை களாகும். இது தவிர, பள்ளி வாழ்க்கையின் போதனை முறை யில் மனிதாபிமான மற்றும் எதிர்கால நன்னம்பிக்கை அடிப் படைகளை ஊர்ஜிதப்படுத்தும் கடமையும் என் முன் நின்றது.

இக்கடமைகள்தான் இந்த ‘‘பூஜ்ஜிய வகுப்பினருட னான’’ பணியின் நடைமுறை வடிவங்களை வரையறுத்தன. தன் செயல்முறை, தன் முயற்சிகள், கண்டுபிடிப்புகள், தோல்விகள் பற்றிய ஆசிரியரின் சிந்தனைகள் இவற்றிலடங் கும். நான் ஐந்து பாட நாட்களை சித்தரிக்கிறேன். இவற்றில் ஒவ்வொன்றும் குழந்தைகளுடைய பள்ளி வாழ்க்கையின் குறிப்பிட்ட கட்டத்தோடு (பள்ளி வாழ்க்கையின் துவக்கம், எழுத்துகளைக் கற்றுக் கொள்வது இத்தியாதி) தொடர் புடையது.

என் முன் தோன்றும் பாடக்கல்வி சம்பந்தமான கடமை களை விளக்கும் போது, குழந்தைகளின் பாலான மனிதாபி மான அணுகுமுறையின் அடிப்படையில் இவற்றைத் தீர்க் கும் முறைகள், கோட்பாடுகளைப் பற்றி சிந்திக்கிறேன், இப் படிப்பட்ட கடமைகளை நிர்ப்பந்த நிலையிலிருந்து தீர்க் கும் முறைகளோடு இவற்றை ஒப்பிடுகிறேன்.

முதலாவது வகுப்பில் ஆறு வயதுக் குழந்தைகளுக்கு அந்தந்தப் பாடங்களைக் கற்பிக்கும் முறையியல் நூலை உருவாக்க நான் திட்டமிடவில்லை. முதலாவதாக,

குழந்தைகளின் பள்ளி வாழ்வை ஒழுங்கமைக்கும் பொது அணுகுமுறையை விளக்குவதும், இரண்டாவதாக, மிகச் சிறு பள்ளி மாணவர்களை வளர்த்து, கல்வி கற்பிப்பதில் மேன்மேலும் புதிய கடமைகளைத் தீர்க்கும் ஆசிரியரின் ஆக்கபூர்வமான முறைகளை விளக்குவதும் தான் எனக்கு முக்கியமாக இருந்தன. பள்ளியாண்டு துவங்கும் முதல் நாளாகிய செப்டெம்பர் 1ஆம் தேதிக்கு முந்தைய தருணத்தின் சிந்தனையிலிருந்து துவங்கும் இந்நூல் ஆறு வயதுக் குழந்தைகளின் நாளைய தினத்தைப் பற்றிய எண்ணங்களுடன் முடிவடைகிறது.

என்னுடைய இந்த அனுபவம் பரிசோதனை ரீதியானது, விசேஷமானது, பள்ளியின் எதார்த்த சூழ்நிலைகளிலிருந்து தள்ளி இருப்பது, பரிசோதனை ரீதியான தயாரிப்பு வகுப்பிற்காகக் குழந்தைகள் விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர், எனது ஆசிரியர் பணிக்கு ஒரு ஈடு இணையற்ற தனித்துவம் உண்டு என்றெல்லாம் ஒருவேளை உங்களுக்குத் தோன்றக் கூடும். நிச்சயமாக, ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவருக்கே உரித்தான அம்சம் இருக்க வேண்டும், ஒவ்வொரு வகுப்பிற்கும் அதற்கே உரித்தான தன்மைகள் இருக்க வேண்டும், ஒவ்வொரு பள்ளியும் ஆசிரியர் குழாமும் குழந்தைகளை வளர்த்து படிப்புச் சொல்லித் தருவதற்கான விசேஷ சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. இவையெல்லாம் உண்மை. ஆனால் இதனால், நான் கூறும் பரிசோதனைப் பணியின் அனுபவம் எங்கோ ஆகாயத்தில் மிதக்கிறது, இதற்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி அதிகம் என்று பொருளாகாது. சாதாரண பள்ளிச் சூழலில், விசேஷமாக குழந்தைகள் யாரையும் தேர்ந்தெடுக்காமலேயேதான் இந்த அனுபவம் கிடைக்கப் பெற்றது. என் பாணி என்று தனியாகக் கூற முடியாது, பல சோவியத் ஆசிரியர்களின் ஆசிரியர் பயிற்சி அம்சங்கள் இதில் கலந்துள்ளன. சிறு பள்ளி மாணவர்களுடன் கலந்து பழகுவது சம்பந்தமாக எம்மால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் சரியானவை என்று இவர்கள் மெய்ப்பித்துள்ளனர், சமீப ஆண்டுகளில் இவர்கள் தம் கூட்டு உழைப்பால் பல நல்ல முறையியல் வழிகளையும் வடிவங்களையும் முன்மொழிவுகளையும் கூறியுள்ளனர். குழந்தைகளின் மீதான உண்மையான அன்பு, இவர்களின் உறுதியான, செயல்முனைப்பான, ஆக்கபூர்வமான உழைப்பு

ஆகியவற்றால் இவையனைத்தும் சாத்தியமாகியுள்ளன.

குழந்தைகளுடன் நான் கலந்து பழகிய அனுபவமும், பள்ளியில் இவர்களின் மகிழ்ச்சிகரமான, சுவாரசியமான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்வதற்கான வழிகளின் விஞ்ஞான பூர்வமான தேட்டமும், நீண்ட காலமாகப் பல பரிசோதனை வகுப்பு ஆசிரியர்களுடன் இருந்து வரும் ஆக்கபூர்வ மான, விஞ்ஞான ஒத்துழைப்பும் ஒரு சில போதனைமுறை நம்பிக்கைகள் என்னிடம் உருவாக வழிகோலின. குழந்தை களை வளர்த்து, கல்வி கற்பிப்பது சம்பந்தமான மனிதாபி மானம் மிக்க, எதிர்கால நன்னம்பிக்கையுள்ள அடிப்படை களிலிருந்து இந்நம்பிக்கைகள் வருகின்றன. அனேகமாக எனது கருத்துக்கள் எல்லாமே விவாதத்திற்கு அப்பாற்பட் டவையாக இல்லாமலிருக்கலாம். ஆனால், பள்ளிச் சூழலில் ஆறு வயதுக் குழந்தைகளை வளர்த்து படிப்புச் சொல்லித் தர ஒரு விசேஷ போதனைமுறை வேண்டும், நவீன வாழ்க்கை மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு ஆரம்பப் பள்ளியின் உள்ளடக்கத்தையும் முறை யியலையும் மாற்றியமைக்க வேண்டும் எனும் முக்கிய அம்சத் தில் நாம் கருத்தொருமித்தவர்களாக இருந்தால் இந்நூலின் லட்சியம் அடையப்பட்டு விட்டதாக நான் கருதுவேன்.

## அத்தியாயம் ஒன்று

# கல்வியாண்டு துவங்கும் தருவாயில்*
# (ஆகஸ்டு 31)

### குழந்தைகள்—என் ஆசிரியர்கள்

ஜார்ஜிய சோவியத் சோஷலிசக் குடியரசின் தலைநகரமாகிய திபிலீசியில் ஆகஸ்டு மாதக் கடைசியில் எப்போதும் வெப்பமாக இருக்கும். தார் உருகி ஓடும், மக்களுக்கு எதன் மீதுமே அக்கறையில்லாததைப் போல் தோன்றும்.

தெருக்களில் குழந்தைகள் அதிகமில்லை. இவர்களில் பெரும்பாலோரை பெற்றோர்கள் கோடை ஓய்விடங்களுக்கும், சொந்த கோடையில்லங்களுக்கும், பயனீர் முகாம்களுக்கும், குறிப்பாக கிராமங்களில் உள்ள தாத்தா, பாட்டி, மற்ற உறவினர்களிடமும் அனுப்பி விட்டனர்.

கிராமத்திற்குச் செல்லவும் அங்கேயுள்ள கிராமச் சிறுவர் சிறுமியருடன் சேர்ந்து விளையாடவும் அவர்களோடு சேர்ந்து காடுகளுக்குச் சென்று பழங்களைச் சேகரிக்கவும் கூடை பின்னவும் குழந்தைகளுக்குப் பிடிக்கும். காஹேத்தியாவின் சமவெளிகளில் நான் கழித்த குழந்தைப் பருவம் என்னுள் இப்போது விழித்துக் கொண்டது. நான் கிராமக் குழந்தைகளோடு சேர்ந்து ஆற்றில் குளிக்க ஓடியதுண்டு, சமவெளியில் மேய்ந்து கொண்டிருந்த குதிரை மீதேறி அமர்ந்து களைப்பின்றி சவாரி செய்ததுண்டு; மக்காச்சோளமும் கோதுமையும் நிறைந்த மூட்டைகளைத் தோள்கள் மீது சுமந்து கொண்டு நீர் சக்தியால் இயங்கும் அரவை இயந்திரத்திற்கு எடுத்துச் சென்றதுண்டு, தானியக் களஞ்சியத்தினுள் மணம் மிகு மாவைக் கொட்டியபடி தட்டையான பெரும்வட்டக் கற்கள் சுற்றுவதைப் பார்க்க சுவார

---

* சோவியத் நாட்டில் பள்ளியில் கல்வியாண்டு செப்டெம்பர் 1ஆம் தேதி ஆரம்பமாகும்.—(ப-ர்.)

சியமாக இருக்கும்; மல்யுத்தப் போட்டிகள் நடக்கும் போது அவற்றைக் கண்டு களிப்பதற்காக கிராமம் முழுவதுமே சிறு திறந்தவெளியில் கூடும். குழந்தைகளுக்கு கிராமத்திற்குச் செல்ல மிகவும் பிடிக்கும். இது எனக்கு நிச்சயமாகத் தெரியும், ஏனெனில் நானும் குழந்தையாக இருந்தவன். அங்கே நிறைய மகிழ்ச்சி கிடைக்கும், அதிக சுதந்திரம் உண்டு, ஆர்வம் மிக்க, ஆபத்தான அதிசாகசச் செயல்களுக்கு அங்கே பரவலான இடமுண்டு.

ஆகஸ்டில் திபிலீசியில் கடும் வெப்பம் நிலவும். செப்டெம்பர் 1 தேதி விரைவிலேயே வரவிருக்கிறது. ஆனால் தெருக்களில் இன்னமும் குழந்தைகளின் ஆரவாரத்தைக் காணோம், குறைந்த அளவே குழந்தைகள் காணப்படுகின்றனர்.

கடும் வெப்பத்தின் காரணமாக கல்வியாண்டு இம்முறை செப்டெம்பர் 1ஆம் தேதி துவங்கப் போவதில்லை, இரண்டு வாரமோ, ஒரு மாதமோ கழித்து தான் வகுப்புகள் ஆரம்பமாகும் என்றொரு வதந்தி மின்னல் வேகத்தில் பரவுகிறது. தம் கனவுகள் பலிக்கின்றன என்று குழந்தைகளுக்குத் தோன்றுகிறது.

பெற்றோர்களும் நம்புகின்றனர். ஏனெனில் வகுப்புகளை ஒத்திப் போடுவதற்கான காரணங்கள் நிறையச் சேருகின்றன.

ஆனால் ஆகஸ்டு மாதத்தின் கடைசி நாட்களில் இக்கனவுகள் கலைகின்றன. ‘‘பள்ளிக்கூடங்களில் வகுப்புகள் கோடை விடுமுறைக்குப் பின் செப்டெம்பர் 1ஆம் தேதி மீண்டும் துவங்கும்’’ என்ற பத்திரிகைச் செய்திகள் இதற்கு வழிகோலுகின்றன.

பள்ளி அழைக்கிறது! இது ஒரு புனிதமான அறைகூவல்.

பாடங்கள் விரைவில் ஆரம்பமாகும்! இரண்டு மூன்று நாட்களில் சூரிய வெப்பத்தால் தகித்துக் கொண்டிருக்கும் நகரம், மனதைக் கிறங்க வைக்கும் வாசனையுடன் கூடிய ஒரு பெரிய, அழகிய, பல வண்ண மலர் விரிவதைப் போல் காட்சியளிக்கிறது. இந்த மலரை உயரே, பறவைகள் பறக்கும் உயரத்திலிருந்து பார்த்தால் அது எவ்வளவு அழகிய, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் தெரியுமா!

நகரத்திற்கு உயிர் வருகிறது, உத்வேகம் வருகிறது, நகரம் தலையை உயர்த்தி, மெல்லிய காற்றில் ரோஜா செடியின் தண்டு ஆடுவதைப் போல் மெதுவாக ஆடத்

துவங்குகிறது. ஒரு உண்மையை (இது ஒருவேளை இது வரை தெரியாமலேயே இருந்திருக்கலாம்) நன்கு உணருகிறோம்: 1500 ஆண்டுகட்கும் மேலாக நிலவி வரும் இந் நகரத்தில் இதன் மிகச் சிறு குடிமக்களாகிய குழந்தைகள் இல்லாவிடில் நகரமே வெறிச்சோ களையிழந்து உள்ளது.

சத்தம்! தெருவில்தான் எவ்வளவு சத்தம், மகிழ்ச்சி, உற்சாகம்! குழந்தைகள் அவசர அவசரமாகப் போகின்றனர், ஓடுகின்றனர், பாதசாரிகளுக்கான இடங்களில் போவோர் வருவோர் மீது படாமல் வளைந்து வளைந்து மிதிவண்டி ஓட்டுகின்றனர். அமைதியாக, நிதானமாக நாம் தெருக்களில் நடப்பதற்கு அவர்கள் இடையூறு செய்கின்றனர், ''என்ன வெப்பம்'' என்ற நமது வழக்கமான கோடை காலப் பேச்சின் போக்கை மாற்றுகின்றனர். வருவோர் போவோரின் முகங்களில் ஒரு விதக் களை, கவலை, மகிழ்ச்சி—குழந்தைகள் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர்!

வெப்பமானியில் வெப்பம் இறங்கவேயில்லை. ஆனால் குழந்தைகளுக்கு வெப்பமானியைப் பற்றி என்ன கவலை!

இன்று 38 டிகிரி. அவர்களுக்கு வெப்பமாக இல்லையா என்ன?

இல்லை, குழந்தைகளுக்கு வெப்பமாயில்லை. அவர்களுக்கு வேறு கவலை—அவர்கள் பள்ளி செல்ல தயாராகின்றனர். பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், பேனாக்கள், ஸ்கேல்கள், வரைபடச் சாதனங்கள், வண்ணப் பென்சில்கள் முதலியவற்றை வாங்க வேண்டும். இவற்றையெல்லாம் பள்ளிப் பையில் வைக்க வேண்டும். சீருடையை ஒழுங்குபடுத்த வேண்டும். அழகாகக் காட்சியளிக்க வேண்டும்...

ஆசிரியர்களாகிய நாங்களும் எம் அறைகளில் குழுமியிருக்கின்றோம். பரஸ்பரம் முகமன் கூறிக் கொண்டோம், கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். புதிய கல்வியாண்டிற்கான புதிய போதனைமுறைத் திட்டங்களும் புதிய நம்பிக்கைகளும் நம்மிடமும் இருக்க வேண்டும், சிறுவர் சிறுமியரைச் சந்திக்கும் ஆர்வம் மிக்க எதிர்பார்ப்பு நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்க வேண்டும்.

மகிழ்ச்சியும் பதட்டமும் கலந்த ஒரு தெளிவற்ற நிலை ஒருவேளை உங்களை ஆட்கொள்ளக் கூடும்; கல்வி கற்பித்தல் எனும் விஞ்ஞானம் மற்றும் கலையின் சாரத்தை நம்மால் அறிய முடியுமா என்ற அச்சம் கூடத் தோன்றலாம்.

இத்தகைய உணர்வுகள் உண்மையிலேயே உங்களை ஆட்கொண்டால் அது நல்லது, நீங்கள் கண்டிப்பாக வெற்றி பெறுவீர்கள், குழந்தைகளின் அன்பு, நம்பிக்கை எனும் மிக கௌரவமான பரிசு உங்களுக்கு கிடைக்கும். உங்களுடைய எதிர்கால வகுப்புகளைப் பற்றிய எண்ணமே, கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய விரும்பாத இவர்களுடனான சந்திப்பைப் பற்றிய எண்ணமே உங்களைத் துன்புறுத்தினால் என்ன செய்வது?

அது வரை விஷயம் போகமாலிருந்தால் நல்லது...

எப்படி நடந்து கொள்வதென நீங்களே முடிவு செய்யுங்கள்.

நான், ஆகஸ்டு மாதக் கடைசி நாட்களில் நள்ளிரவு வரை என் மேசையில் அமர்ந்து வேலை செய்கிறேன். நன்கு சிந்திக்கிறேன், திட்டமிடுகிறேன், மதிப்பிடுகிறேன், பொதுமைப்படுத்துகிறேன், என்னுடனேயே விவாதித்துக் கொள்கிறேன், என் ஆசிரியர் பயிற்சி அனுபவத்தை யோசித்துப் பார்க்கிறேன். பல தலைமுறைகளைச் சேர்ந்த குழந்தைகளை வளர்த்து ஆளாக்கிய நான் என் குழந்தைகளோடு சேர்ந்து வளர்ச்சியடைய விரும்புகிறேன்.

அவர்களை விட ஒரு நல்ல அனுகூலமான நிலையில் நான் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. எனது ஆறு வயதுக் குழந்தைகளுக்கு நான் ஒருவன்தான் ஆசிரியன், எனக்கோ முப்பத்தாறு அல்லது அதற்கும் அதிகமான ஆசிரியர்கள். இவர்கள் அனைவரும் எனது மிக விடாப்பிடியான ''ஆசிரியர்களாக'' விளங்குவார்கள். நான் அவர்களுக்கு படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் வரையவும் பாடவும் சொல்லித் தர அவர்கள் எனக்கு மிக உயர்வான போதனைமுறைக் கல்வியைத் தருவார்கள். குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட ஆசிரியர் வேண்டும் என்பதை அறிய தன்னை கல்வி கற்பவனாக, வளர்க்கப்படுபவனாக உணர வேண்டும். என் மேசை முன் அமர்ந்து, புதிய தயாரிப்பு வகுப்புடனான சந்திப்பைப் பற்றிச் சிந்திக்கும் போது ஒரு தாளில் பின்வருமாறு எழுதிக் கொள்கிறேன்:

> குழந்தைகளுடைய மனதின் ரகசியத்தையும், ஆசிரியர் பயிற்சி எனும் கலையையும், ஆசிரியனின் திறமையையும் அறிய முற்படுகையில், ஒவ்வொரு குழந்தையிடமும் நான் எனது ஆசிரியனை, ஆசானைக் காண்பேன்.

இந்த வாசகத்தின் உண்மையை, பயனை இருபத்தொன்பது முறை நான் சோதித்து சரிபார்த்திருக்கிறேன். முப்பதாவது தடவையாக சரிபார்க்கப் போகிறேன்.

## பூர்வாங்க அறிமுகம்

என் குழந்தைகளின் பெயர்ப் பட்டியலை நான் கையோடு வீட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு குழந்தையுடனும் அறிமுகம் செய்து கொள்ள விரும்புகிறேன். அவர்களின் புகைப்படங்களை எடுக்கிறேன். அவற்றை மேசை மீது வரிசையாக வைக்கிறேன். இதோ என் வகுப்பு! பறவைகளின் கீதமும் கணீரென்ற சிரிப்பும் என் காதுகளில் ஒலிக்கின்றன. என்ன இது? குழந்தைகளின் சத்தமா? இதை சத்தம் என்று சொல்ல முடியாது. குழந்தைகளின் இந்த சத்தத்தில், இன்னிசைக் குழுவின் வாத்தியங்கள் சுருதி கூட்டப்படுவதை ஒத்த ஒலிகளைக் கேட்க ஆசிரியனுக்கே உரிய காது வேண்டும், எதிர்கால வாழ்க்கை எனும் சிம்பனி இசையை ரசித்த உணர்வு அப்போது ஏற்படும். பறவைகள் சத்தம் போடுகின்றன, கூச்சலிடுகின்றன என்று நாம் கூறுவதில்லை அல்லவா. அவை பாடுவதாக ஏன் நமக்குத் தோன்ற வேண்டும்? பாடுவதைத் தவிர அவற்றிற்கு வேறு கவலைகள் கிடையாதா? அதே போல்தான் குழந்தைகளாலும் சத்தம் போட முடியாது. பள்ளியில் நிறைந்திருக்கும் அந்த விசேஷ குழந்தைகளின் ஒலியைச் சித்தரிக்க நான் அறிந்த வார்த்தைகளிலேயே ''ஷிரியாமூலி'' என்ற ஜார்ஜிய சொல்தான் மிகப் பொருத்தமானதென எனக்குத் தோன்றுகிறது. இது பறவைகள், குழந்தைகளின் மகிழ்ச்சிகரமான ஒலிக் கலவையை குறிக்கிறது. மனிதர்களின் சாதாரணமான பேச்சொலியை குழந்தைகளின் மகிழ்ச்சிகரமான, உற்சாகமான சத்தத்திலிருந்து பிரிப்பதற்காக நம் முன்னோர்கள் இச்சொல்லைக் கண்டுபிடித்தனர்.

என்னுடைய முப்பத்தாறு குழந்தைகளின் புகைப்படங்களை நான் பார்க்கிறேன், என் காதுகளில் வாத்தியங்கள் சுருதி கூட்டுகின்றன, இந்த இசையை, இந்தக் குழந்தைகளின் ''ஷிரியாமூலியை'' எப்போது கேட்போம் என்று

மனது துடிக்கிறது. ''ஷிரியாமூலியை'' என்னால் புரிந்து கொள்ள முடிகிறது; குழந்தைகளின் மீதான என் அன்பிற்கு இதுதான் நிரூபணம்; சிம்பனி இசைக்கு முன் இவ்வாறாக வாத்தியங்கள் சுருதி கூட்டப்படுவது, இந்த குழந்தைகளின் ''ஷிரியாமூலி'' என் காதுகளுக்கு இனிமையாக உள்ளதால் நானே கல்வி கற்பவனாக, வளர்க்கப்படுபவனாக மாற முடியும். நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் அது உங்கள் விஷயம், என்னால் இப்படிக் கூற முடியும்:

> குழந்தைகளின் ''ஷிரியாமூலி'' யாருக்குப் பிடித்துள்ளதோ அவருக்கு ஆசிரியர் தொழிலின் மீது நாட்டம் உண்டு, இதன் மீது யார் தீவிர ஆர்வம் காட்டுகிறாரோ அவர் தன் தொழில் ரீதியான மகிழ்ச்சியை அடைவார்.

எப்படிப்பட்ட அழகிய குழந்தைகள், எவ்வளவு புன்சிரிப்புகள்! பள்ளி துவங்கும் முன் தம் மகிழ்ச்சியை காட்டிக் கொள்வதற்காக மட்டுமா இவர்கள் அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்?

குழந்தைகளே, நீங்கள் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றீர்கள்? உங்களுடைய புன்முறுவல்கள் ஒரு மகிழ்ச்சி கலந்த பதட்டத்தை என்னுள் ஏற்படுத்துகின்றன. நீங்கள் உங்கள் ஆசிரியரின் பால் பெரிதும் தாராளமாய் இருக்கின்றீர்கள், ஆசிரியரை நம்புகின்றீர்கள். நீங்கள் இன்னமும் என்னைப் பார்த்தது கூட இல்லை. அதற்குள் இவ்வளவு அழகாக புன்முறுவல் பூக்கின்றீர்கள், மிகவும் நம்பிக்கையுடன் என்னை உற்றுப் பார்க்கின்றீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? பல்வேறு விஞ்ஞானங்களை நான் உங்களுக்குச் சொல்லித் தர வேண்டுமா? நான் கொடியவனாக, கண்டிப்பானவனாக இருந்து, ஒவ்வொரு செய்கைக்கும் தண்டித்து, உங்களைப் பார்த்துக் கத்தினால் என்ன செய்வீர்கள்? எப்படியிருந்தாலும் நீங்கள் விஞ்ஞானத்தின் மீது அக்கறை காட்டுவீர்களா? இல்லை, இது இப்படி நடக்காது என்று எனக்கு நிச்சயம் தெரியும். ஆசிரியரையும் ஆசிரியரின் விஞ்ஞானத்தையும் அவரது ஞானத்தையும் நல் விருப்பங்களையும் நீங்கள் விரும்ப மாட்டீர்கள். சரி, உங்களுடைய புன்முறுவல்களின் பொருள்தான் என்ன? இவற்றிலிருந்து நான் என்ன முடிவிற்கு வருவது?

''நாங்கள் பிறந்ததிலிருந்தே நல்லவர்கள், எங்களைக் கொடியவர்களாக ஆக்காதீர்கள்!''

உங்களில் யாருக்கு இப்படிச் சொல்ல துணிவுள்ளது? அஞ்ச வேண்டாம், ஒளிவு மறைவின்றி சொல்லுங்கள்.

என் கரத்தில் கிடைத்த முதல் புகைப்படத்தை எடுக்கிறேன். என்னைப் பார்த்து சிரிக்கும் அச்சிறுமியின் புகைப் படத்தின் பின் ''தேயா'' என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. இம்முகத்தை நினைவில் வைத்து, நாளை இச்சிறுமியை பெயர் சொல்லிக் கூப்பிட வேண்டும். ஒருவேளை நீ இப் படிச் சொல்லியிருப்பாயோ?

இன்னொரு புகைப்படத்தை எடுக்கிறேன். ''கோச்சா'' என்று அதன் பின் எழுதப்பட்டுள்ளது. என்ன சுருட்டை யான தலை முடி. முடியை வெட்டுமாறு நான் பெற்றோர் களிடம் சொல்லப் போவதில்லை. அப்படியே இருக்கட்டும். இதிலென்ன தப்பு? கோச்சா கணீரென சிரிக்கிறான். ''பார், நான் நாளை உன்னை முப்பத்தாறு குழந்தைகளின் மத்தி யில் அடையாளம் கண்டு கொள்வேன். நீ வம்புக்கிழுக்கும் குணமுள்ளவனா? முரண்டு பண்ண மாட்டாயே?''

''நியா'' என்று அடுத்த புகைப்படத்தின் பின் எழுதப் பட்டுள்ளது. அவள் புன்முறுவல் பூக்கிறாள், இல்லை யில்லை, சிரிக்கிறாள், முன் பற்களில் ஒன்று கூட இல்லாதது எனக்கு நன்கு தெரிகிறது. பல ஒலிகளை சரியானபடி உச் சரிப்பது அவளுக்கு அனேகமாக கடினமாக இருக்கும். ஆனால் வேறு எந்தக் குழந்தையும் இவளை கேலி செய்ய நான் விட மாட்டேன். அதற்குள் பற்கள் முளைத்து விடும். ''நியா, நீ கோள் சொல்ல மாட்டாயே? ஒருவர் மீது ஒருவர் கோள் சொல்வது நம் வகுப்பில் கூடவே கூடாது. இதை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

அச்சிறுவனுக்கு சற்றே நீண்ட தாடை. கண்கள் கூர்மை யானவை, ஏதோ கள்ள சிந்தனை, ஒரு கண்டிப்பான புன் சிரிப்பு. ''சாஷா'' என்று பின்புறம் எழுதப்பட்டிருந்தது. இரு இரு, நீ அந்த சாஷாவா? நீ பிறக்கும் முன்னரே உன் தாய் உன்னை எந்த பள்ளியில் சேர்ப்பது என்று முடிவு செய் தாள். ஆறு ஆண்டுகளுக்கு முன் உன் தாயை நான் வேலை விஷயமாகச் சந்தித்தேன். அப்போது என் ஆசிரியர் பயிற்சி நோக்கங்களைப் பற்றி, குழந்தைகளுடனான என் வேலை யைப் பற்றிக் கூறினேன். ''நான் என் குழந்தையை உங்கள்

வகுப்பிற்கு அனுப்புவேன்'' என்று அவள் அப்போது கூறினாள். நீ நன்கு அறிமுகமானவன். ஆனால் நாளை முதன் முதலாக நாம் கைகுலுக்கிக் கொள்வோம்.

''போன்தோ''. சற்றே தலையை சாய்த்தபடி, களங்கமற்ற புன்முறுவல். ''எங்களை கொடியவர்களாக ஆக்காதீர்கள் என்று ஒருவேளை நீதான் என்னை கேட்டாயோ? சரி, நீ உண்மையில் அன்பானவனா? மிட்டாயை இன்னொருவனுடன் பகிர்ந்து கொள்வாயா? தோழிக்கு விட்டுக் கொடுப்பாயா? பலவீனமானவனைப் பாதுகாப்பாயா? மிக்க நன்று!''

இது யார்? ''ஏல்லா''. சற்றே குண்டான சிறுமி. ஆனால், அவள் சிரிக்கிறாளா, கவிதை படிக்கும் தருணத்தில் புகைப்படக்காரர் படமெடுத்துள்ளாரா என்று புரியவில்லை. ''ஏல்லா, உனக்கு நிறைய கவிதைகள் தெரியுமா? பத்து வரை எண்ணத் தெரியுமா? படிக்கத் தெரியுமா? இவையெல்லாம் உனக்குத் தெரிந்தால் நான் உன்னுடன் என்ன செய்வது? பள்ளியின் மீதான ஆர்வம் போகாமலிருக்க வேறு விஷயங்களைச் சொல்லித் தரவா? சரி, பார்ப்போம்.''

குழந்தைகளை இருக்கைகளில் அமர்த்துவதைப் போன்றே புகைப்படங்களை வரிசையாக வைக்கிறேன். கீகா, அனேகமாக நீ உயரமானவன் என்று நினைக்கிறேன். லேலாவும் உயரமானவள். இவர்களைக் கடைசி மேசையில் உட்கார வைக்கலாம். மாரிக்கா முதல் வரிசையில் இடது புறமாக உட்காரட்டும். விக்டரை ஜன்னலருகே உட்கார வைப்பேன்... என் மேசையில் வகுப்பறையின் காட்சி நிழலாடுகிறது. நான் கரும்பலகையருகே நிற்கிறேன். இன்னமும் என்ன வேண்டும்?

''குழந்தைகளே, நீங்களனைவரும் நல்லவர்கள் என்று நீங்களா என்னிடம் சொன்னீர்கள்?'' நான் என்னுள்ளேயே கேட்டுக் கொள்கிறேன்.

''ஆமாம்'' என்று என் காதுகளில் ஒருமித்த பதில் ஒலித்ததைப் போலிருந்தது.

''குழந்தைகளே, உங்களைக் கொடியவர்களாக மாற்ற வேண்டாம் என்று நீங்களா என்னை கேட்டுக் கொண்டீர்கள்?''

''ஆமாம்... ஆமாம்!''

வகுப்பு எப்படி அமையும் என்பதைப் பார்த்துக் கொள்வோம். இப்போது எல்லா முகங்களையும் பெயர்களையும் இன்னொரு முறை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். இது, அனேகமாக மாக்தாவாக இருக்க வேண்டும். புகைப் படத்தைத் திருப்புகிறேன். சரிதான்... இது தாத்தோ. இல்லை, தப்பு, இது தேன்கோ. தாத்தோ இதோ... சரி பார்க்கிறேன். சரி... இது தேக்கா... இது...

என் குழந்தைகள் அனேகமாக இந்நேரம் உறங்குவார்கள். நேரமாகி விட்டது. ஆனால் அவர்களுக்கு உறக்கம் வருமா? நாளை செப்டெம்பர் 1ஆம் தேதியாக இருக்கையில் அவர்களால் அமைதியாக உறங்க முடியுமா! ஒருவேளை பெரியவர்கள் அனைவரும்—அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி—காலையில் விழிப்பு வராமல் உறங்கி விட்டால் என்ன செய்வது! குழந்தைகளை யார் எழுப்புவது? முதல் வகுப்பைத் தவற விட்டு விடலாமே. தாமதமாக செல்லக் கூடாது. அதிகாலையில் விழிக்காமல் இருப்பதை விட தூங்காமலே இருப்பது நல்லது. இது விளையாட்டா என்ன! ஆறு வயதுக் குழந்தை பள்ளிக்குச் செல்லப் போகிறான்! அப்பாவும் அம்மாவும் அவனை உறங்கச் சொல்லுகின்றனர், கடிகாரங்களில் விழிப்பு மணியை சரி செய்கின்றனர்...

ஒவ்வொரு வருங்காலப் பள்ளி மாணவனுக்கும் நான் ஒரு வாரம் முன் அனுப்பிய வாழ்த்துக் கடிதங்கள் அவர்களுக்குக் கிடைத்திருக்குமென எண்ணுகிறேன். அம்மாவையோ அப்பாவையோ, தாத்தாவையோ பாட்டியையோ இதைப் படித்துக் காட்டுமாறு பன்முறை அவர்கள் நச்சரித்திருப்பார்கள். நான் எழுதியது இதுதான்:

அன்புள்ள... வணக்கம்.

நான் உன் ஆசிரியர். என் பெயர் ஷல்வா அலெக்சாந்தரவிச். நீ பள்ளிக்குச் செல்லப் போகிறாய், பெரியவனாகி விட்டாய். வாழ்த்துக்கள். நீயும் நானும் நல்ல நண்பர்களாவோம், வகுப்பில் உள்ள அனைவருடனும் நீ நட்புக் கொள்வாய் என்று நம்புகிறேன். உன் வகுப்பில் எவ்வளவு சக தோழர்கள் தெரியுமா? முப்பத்தைந்து பேர்கள். நம் பள்ளிக் கட்டிடம் பெரியது, நான்கு மாடிகள், இடைவழிகள் எல்லாம் உள்ளன. நீதான் பெரியவன் அல்லவா, எனவே நீயேதான் உன் வகுப்பைக் கண்டுபிடிக்க வேண்டும். எப்படிக் கண்டுபிடிப்பது என்று நினைவில் வைத்துக் கொள். சிவப்பு

நிற அம்புக் குறிகள் இருக்கும். அவற்றைப் பின் தொடர்ந்து வந்தால் உன் வகுப்புக்கு வரலாம். வகுப் பறையின் கதவில் பறவையின் படம் வரையப்பட்டிருக் கும்.வழிதெரியாவிடில் கவலைப்படாதே, இடைவெளி களில் நிற்கும் பயனீர்கள் கண்டிப்பாக உனக்கு உதவி புரிவார்கள்.

உன்னுடன் அறிமுகம் செய்து கொள்ள வகுப்பறை யில் உனக்காக மகிழ்ச்சியுடன் காத்திருப்பேன்.

ஆசிரியர்.

பல குழந்தைகளின் தலையணை அடியில் இந்தக் கடி தங்கள் உள்ளன என்பதை நிரூபிக்க வேண்டுமா என்ன? வண்ணத் தாளில் அவனுக்கென்றே எழுதப்பட்டு பள்ளி யிலிருந்து, முதல் ஆசிரியரிடமிருந்தல்லவா இக்கடிதம் வந்துள்ளது!

இந்த முதல் ஆசிரியர் எப்படிப்பட்டவர்?

## முதல் ஆசிரியர்

கடந்த சில நாட்களாக ஒவ்வொரு குடும்பத்திலும் என்னைப் பற்றித்தான் பேசுகின்றனர் என்பதில் சந்தேகமே யில்லை. தனிப்பட்ட முறையில் என்னைப் பற்றி இல்லாவிட் டாலும், மேற்கூறிய கடிதத்தை அனுப்பிய, செப்டெம்பர் 1ஆம் தேதி தன் மாணவனைச் சந்திக்கப் போகும் ஆசிரி யரைப் பற்றிப் பேசுகின்றனர். அம்மாவோ அப்பாவோ, தாத்தாவோ பாட்டியோ ஒவ்வொருவரும் ஒரு மாதிரியாக, குழந்தையைத் தமக்கு எவ்வளவு தெரியுமோ அதைப் பொருத்து, குழந்தை வளர்ப்பைப் பற்றிய தம் கண்ணோட் டத்தின்படிப் பேசுகின்றனர். தான் இதுவரை கண்டிராத தன் முதல் ஆசிரியரைப் பற்றி ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எவ்வாறெல்லாம் கற்பனை செய்வார்கள் என்று கூறத் தேவையே இல்லை. இவர்கள் ஆசிரியரையும் அவரது குண நலன்களையும் பல்வேறு விதமாக சிந்தித்துப் பார்க்கின்ற னர். என் கடிதத்தின் இறுதியில் நான் குழந்தைகளுக்கு ''வண்ணப் பென்சில்களையும் காகிதத்தையும் எடுத்து உன் முதல் ஆசிரியர் எப்படியிருப்பார் என்று வரை'' என ஏன் தான் எவ்வித வேண்டுகோளையும் விடுக்கவில்லையோ!

ஒரு சில குடும்பங்களில் ஆசிரியரை, எல்லாவற்றையும் அறிந்த, அன்பான, மென்மையான, குழந்தைகளைப் பெரி

தும் விரும்புபவராக பெற்றோர்களும் பெரியவர்களும் சித்தரிக்கின்றனர். இந்தக் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் என்னை சர்வ வல்லமை படைத்த அன்பானவனாக வரைந்திருப்பார்கள். இவர்கள் பள்ளிக்கு வந்ததும் என் பின்னால் சுற்றி வருவர், என் முன் முழங்காலிட்டு நின்றிருப்பார்கள், ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்டிருப்பார்கள், தம்மைப் பற்றி மூச்சு விடாமல் சொல்லி, என் மீது உடனேயே அன்பு மழை பொழிந்திருப்பார்கள், ஏனெனில் இப்படிப்பட்ட ஆசிரியரை நேசித்தாக வேண்டுமே. நிச்சயமாக, இதற்கு நான் அத்தகைய அன்பு ஆசிரியருக்குரிய எல்லாத் தன்மைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

மற்ற சில குடும்பங்களில் பெற்றோர்களும் பெரியவர்களும் ஆசிரியரைப் பற்றிப் பின்வருமாறு கூறுவார்கள்: ஒவ்வொரு குழந்தையின் ஒவ்வொரு சிறு நடவடிக்கையையும் உன்னிப்பாக அவர் கவனிப்பார், பெரியவர்கள் சொல்வதை எல்லாம் யார் கேட்கவில்லையோ, அம்மாவோ பாட்டியோ தருவதையெல்லாம் யார் சாப்பிடவில்லையோ, யார் முரண்டு பிடிக்கின்றார்களோ, சத்தம் போடுகின்றார்களோ, குறும்பு செய்கின்றார்களோ அவர்களையெல்லாம் ஆசிரியர் கடுமையாக தண்டித்து, பள்ளியிலிருந்தே துரத்தி விடுவார், அவர்... இதனிடையே இக்குழந்தைகள் என்னை ஒரு சூனியக்கார கிழவியைப் போல் படம் வரைந்திருப்பார்கள். மறு நாள் பள்ளிக்கு வந்து தன் ஆசிரியரைக் கண்டதும் சூனியக் கிழவியைக் கண்டது போல் பார்த்து, அம்மாவைக் கட்டிப் பிடித்து, ''பள்ளிக்கூடம் வேண்டாம், வீட்டிற்குப் போகலாம்'' என்று இதயத்தைக் கரைக்கும் அளவிற்கு கூக்குரலிடுவார்கள். இந்த முதல் ஆசிரியரிடம் உண்மையிலேயே சூனியக் கிழவியின் குணங்கள் இருந்தால் என்ன ஆகும்? குழந்தைக்கு என்ன நேரிடும் என்று சிந்திக்கவே அச்சமாக உள்ளது. அன்பான ஆசிரியரின் மூளையும் பொறுமையும் மட்டுமே குழந்தையின் கனவுகளைக் காப்பாற்றும்.

மற்றும் சில வகையான குடும்பங்களிலோ குழந்தைகளால் ஒன்றுமே வரைய இயலவில்லை. ஆம், சிடுசிடுப்பான ஆசிரியரை எப்படி வரைவது? அவர் கண்ணுக்குத் தெரியாமல் வந்து குழந்தைகளைத் தூக்கிச் செல்வார், ஏன் ஒருவேளை குழந்தைகளை சாப்பிடக் கூடும். அவர் சர்வ

வல்லமை படைத்தவர், எல்லாம் அவருக்குத் தெரியும், உன் மனதில் என்ன உள்ளது என்று கூட அவர் கண்டுபிடித்து விடுவார், எனவே அவருக்குப் பிடிக்காத ஒன்றைப் பற்றி எண்ணிக் கூடப் பார்க்காதீர்கள். இப்படிப்பட்ட ஆசிரியரை குழந்தை எப்படி கற்பனை செய்ய முடியும்? மறு நாள் சிறுவன் உண்மையான ஆசிரியரை வகுப்பறையில் பார்ப்பான், உதடுகளைக் கூட அசைக்காமல் அமைதியாக உட்கார்ந்திருப்பான், எதைப் பற்றியும் மோசமாகக் கூட யோசிக்க மாட்டான். சிடுசிடுப்பான ஆசிரியர், அதுவும் முதல் ஆசிரியர். இப்படிப்பட்டவர் எங்காவது இருக்கின்றாரா? அச்சத்திலிருந்து குழந்தைகளை விடுவிக்க, இவர்களின் சிந்தனைகளை விலங்கிலிருந்து விடுவிக்க, அவர்கள் சுதந்திரமாகப் பேசும்படி செய்ய அன்பான ஒரு ஆசிரியர் தேவை.

ஏன் ஒரு சில குடும்பங்களில் ஆசிரியர் அன்பு மிக்கவராயும் வேறு குடும்பங்களில் சூனியக் கிழவியைப் போன்றும் இன்னும் சில குடும்பங்களில் சிடுசிடுப்பானவராகவும் சித்தரிக்கப்படுகிறார்? இந்த ஆறு வயதுக் குழந்தைகளின் பெற்றோர்கள் அனேகமாக இளைஞர்களாக இருக்க வேண்டும், இவர்களுக்கு எவ்வித சூனியக்காரியையும் சிடுசிடுப்பானவரையும் கண்டு அச்சமில்லையே, ஏன் இவர்கள் தம் குழந்தைகளுக்குப் பயம் காட்டுகின்றனர்? தம் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதில் இவர்கள் ஏன் இந்தப் பயங்கர கதா பாத்திரங்களின் உதவியை நாடுகின்றனர்?

குழந்தையை பயமுறுத்துவதன் மூலம் எளிதாக வளர்க்கலாம் என்று ஏன் பெற்றோர்கள் எண்ணுகின்றனர்? மனிதனை வளர்த்து ஆளாக்குவதைப் பற்றிய அரிச்சுவடி கூட இளம் பெற்றோர்களுக்குத் தெரியாது என்று என் அனுபவம் காட்டுகிறது.

ஆம், உண்மையில் அவர்களுக்கு இந்த விஞ்ஞானம் எப்படித் தெரியும்? பள்ளியில் யாரும் அவர்களுக்கு இதை சொல்லித் தரவில்லை, அவர்கள்தான் எதிர்காலப் பெற்றோர்கள் என்பதை யாரும் உணரவில்லை. பள்ளியை முடித்ததுமே அந்த இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ளலாம், 16 வயது வாலிபர்களும் யுவதிகளும் பெற்றோர்கள் ஆகலாம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே தான் குழந்தை முரண்டு செய்யாமல் இருப்பதற்காக, குழந்தையை சாந்தப்படுத்துவதற்காக, அங்குமிங்கும் ஓடி,

சத்தம் போட்டு விளையாட்டு சாமான்களை உடைக்காமலி ருப்பதற்காக சகலவித பயங்கர கதா பாத்திரங்களும் வீட்டிற்குள் வருகின்றன. குழந்தை இத்தகைய பயங்கர கதா பாத்திரங்களைப் பார்த்ததில்லையாதலால் முதல் ஆசிரியரை இவ்வாறு சித்தரிக்கும் வாய்ப்பு தோன்றுகிறது.

லட்சோப லட்சம் வாலிபர்களுக்கும் இளம் பெண்களுக்கும் உயர்கல்விக் கூடங்களில் சகலவித விஞ்ஞானங்களையும் சொல்லித் தந்து இவர்களை முதல் தர நிபுணர்களாகப் பயிற்றுவிக்கின்றனர். ஆனால் இவர்கள் எதிர்காலப் பெற்றோர்கள் என்பதையும் குழந்தை வளர்ப்பு விஞ்ஞானம் இவர்களுக்குத் தேவை என்பதையும் இங்கும் மறந்து விடுகின்றனர். இதில் கற்றுக் கொள்ள ஒன்றுமேயில்லையா, இது அவ்வளவு எளிமையானதா? என்ன ஒரு தவறான கருத்து!

செப்டெம்பர் 1ஆம் தேதிக்கு முதல் நாள் நள்ளிரவு வரை என் மேசை முன் அமர்ந்து நான் எதைப் பற்றி எண்ணுகிறேன்? எல்லா பெரிய வகுப்புகளிலும் பள்ளி மாணவர்கள் தம் கரங்களில் மிக அழகிய புத்தகத்துடன் மிக சுவாரசியமான வகுப்பிற்கு விரைந்து செல்ல வேண்டும்... எல்லா தொழிற் கல்விக் கூடங்கள், உயர்கல்விக் கூடங்களின் மாணவர்களும் இதே போன்ற அழகிய நூலுடன் மிக சுவாரசியமான விரிவுரையைக் கேட்க விரைந்து செல்ல வேண்டும். இந்த நூல்களிலும், சுவாரசியமான பாடங்களிலும் விரிவுரைகளிலும் உள்ள பாடத்திற்கு "மனிதனை உருவாக்குபவன் மனிதனே" என்று நான் தலைப்பு தருவேன். ஆசிரியர் பயிற்சி எல்லோருக்கும் கட்டாயமான ஒரு பாடமாகிறது, ஏனெனில் குழந்தை வளர்ப்பாளராக இருப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையுமாகும். இக்கனவு நிறைவேற நீண்ட நாட்களாகுமா? இந்த இடைவெளியைக் குறைக்க எவ்வளவு விருப்பமாயுள்ளது.

பள்ளியில் நான் என்னாலியன்றதைச் செய்வேன்...

குழந்தைகளே, உங்களது புன்முறுவல்கள் எவ்வளவு அழகாக உள்ளன! வகுப்பில் இப்புன்முறுவல்களை மழுங்கடிக்கும் உரிமை எனக்கு உண்டா என்ன? அப்பாவோ, அம்மாவோ, பாட்டியோ, தாத்தாவோ என்னைப் பற்றி ஏதாவது சொல்லி உங்களில் யாரையாவது அச்சுறுத்தியிருக்கக் கூடும். இந்தப் பெரியவர்கள் ஏன் இப்படியிருக்கின்றனர்!

உங்களுக்கெதிராக என்னையும் கூட்டு சேர்த்துக் கொள்ள முடியுமென்று நம்பிக் கொண்டிருக்கும் அவர்கள் அனைவரையும் நான் ஏமாற்றுவேன். என் அன்புக் குழந்தைகளே, பயப்படாதீர்கள், நான் அச்சுறுத்த மாட்டேன், நான் கொடியவன் அல்ல! நாளை தாமதமின்றி வாருங்கள். உங்களனைவரையும் எனக்கு மிகவும் பிடிக்கும், நான் உங்களுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

என்னுடைய வகுப்புடனான கற்பனைப் பேச்சை நான் முடிக்கிறேன். ஒவ்வொரு புகைப்படத்தையும் கோப்பில் வைக்கிறேன். இவற்றை நாளை பள்ளிக்கு திரும்ப எடுத்துச் செல்ல வேண்டும்.

## ஆசிரியர் வேலையில் நேர ஒதுக்கீடு

செப்டெம்பர் மாதம் பிறக்கும் தருவாயில், கல்வி யாண்டு முழுவதற்கும், நான்காண்டு கால ஆரம்பக் கல்வி காலம் முழுவதற்குமான எனது எதிர்காலப் பள்ளி நாட்கள், பாடவேளைகளைக் கணக்கிடுவது, நான் குழந்தைகளுடன் நேரடியாக கலந்து பழகும் நிமிடங்களைக் கூட எண்ணிப் பார்ப்பது என் வழக்கம். இப்பழக்கம் எப்போது, ஏன் தோன்றியது என்று கூட எனக்கு நினைவில்லை. இதனால், நேரப் பற்றாக்குறைக் கவலை என்னை எப்போதுமே ஆட்கொண்டது, ஆசிரியர் வேலைக்கு அர்ப்பணிக்காமல் வெறுமனே ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கக் கூடாது என்ற பொறுப்புணர்வு என்னிடம் எப்போதுமே நிறைந்திருக்கும்.

நான் சிறுவனாக இருந்த போது கிராமச் சிறுவர் சிறுமியருடன் சேர்ந்து அறுவடைக்குப் பிந்திய வயலில் எஞ்சியிருந்த கதிர்களைப் பொறுக்குவது வழக்கம். நாங்கள் ஒவ்வொரு கதிராகப் பொறுக்கினோம், ஆனால் அவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்த போது எவ்வளவு தானியத்தை இழக்க நேரிட்டிருக்கும் என்று பெரியவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

சரி, வீணாகும் நொடிகளையும் நிமிடங்களையும் எப்படி ஒன்று திரட்டுவது?

குழந்தைகள் நிறைந்துள்ள வகுப்பறைகளும் பள்ளித் தாழ்வாரங்களும் கல்வி கற்பிக்கும், அவர்களை வளர்த்து ஆளாக்கும் ஒரு வயல் போன்றும், ஆசிரியர் எனும் இயந்

திரம் இடையறாது இவ்வயலில் பாடுபட்டு விதைகளை விதைத்தும் அறுவடை செய்தும் உழைப்பதாயும் சில சமயங்களில் எனக்குத் தோன்றுவதுண்டு. ஆனால் சுவடின்றி மறைந்து போன ஆயிரக்கணக்கான நொடிகளையும் நிமிடங்களையும் மட்டும் மீண்டும் சேகரிக்கவே முடியாது. கவனக் குறைவான விவசாயி கோதுமையை விதைக்கும் போது விதைகளை கவனமின்றி இடப்புறமும் வலப்புறமும் வாரியிறைப்பதைப் போல், வயல்களுக்கு வெளியிலும் உழுது பண்படுத்தப்படாத நிலத்திலும் இவை விழுவதை கவனிக்காமலிருப்பது போல் கவனக்குறைவான ஆசிரியரும் திரும்பக் கிடைக்காத, விலைமதிப்பற்ற படிப்பு நேரத்தை வலப்புறமும் இடப்புறமுமாகவும் ஜன்னலுக்கு வெளியிலும் வாரியிறைக்கிறார். இந்த மதிப்பு மிக்க நொடிகளை ஒன்று திரட்டி சிக்கனமாக, உட்பொருளோடு, கவனமாகச் செலவழித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? எவ்வித கஷ்டமும் இன்றி நாம் பாட நேரத்தை குறைத்து இடைவேளையை அதிகப்படுத்தலாம். முக்கியமானது என்னவெனில் குழந்தைகளின் உரிய வளர்ச்சி பாதிக்கப்படாது. ஏனெனில் படிப்பு நேரத்தில் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு பள்ளிச் சிறுவனுக்கும் குறிப்பிட்ட தருணத்தில்தான் வேண்டுமே தவிர, முன்னரோ பின்னரோ அல்ல.

படிப்பு நேரத்தை வீணாக்கக் கூடாது, ஏனெனில் இந் நேரம் நமக்குப் போதாது, இதைப் பெருக்கவோ, தடுத்து நிறுத்தவோ யாராலும் முடியாது.

இச்சிந்தனைகளுடன் நான் ஒரு தாளை எடுத்து அதில் செப்டெம்பர் முதல் மே மாதம் வரையிலான கல்வியாண்டின் காலண்டரை தீட்டுகிறேன். பின், ஒவ்வொரு காலாண்டிலும் எவ்வளவு வேலை நாட்கள், எவ்வளவு பாடவேளைகள், எவ்வளவு சனி, ஞாயிற்றுக் கிழமைகள், எவ்வளவு பண்டிகைகள், மற்ற விடுமுறைகள் என்று நிமிடங்களில் கணக்கிடுகிறேன்.

என் நடைமுறையில் நான் நீண்ட நாட்களாக ஐந்து வேலை நாள் வாரத்தையும் 35 நிமிடப் பாடவேளை முறையையும் பின்பற்றி வருகிறேன். சனிக்கிழமைகளில் குழந்தைகள் வீட்டிலிருப்பார்கள், பெற்றோர்கள் விரும்பினால் இவர்களை பள்ளிக்குக் கூட்டி வரலாம். நான் அவர்களுக்காக விளையாட்டுக்களை ஏற்பாடு செய்வேன், உலாவக்

கூட்டிச் செல்வேன், கலைக்காட்சி கூடங்களுக்கும் விலங்கியல் பூங்காவிற்கும் சர்க்கசிற்கும் திரைப்படங்களுக்கும் கூட்டிச் செல்வேன். இதனால் பின்வருமாறு நேரம் பங்கிடப்படுகிறது.

ஆசிரியர் வேலையில் நேர ஒதுக்கீடு

| | |
|---|---|
| ஓராண்டில் பாடங்கள் நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை . . . . | 170 |
| பூஜ்ஜிய வகுப்பில் பாடங்களின் எண்ணிக்கை . . | 680=23,800 நிமிடங்கள் |
| 1,2,3வது வகுப்புகள் ஒவ்வொன்றிலும் பாடங்களின் எண்ணிக்கை . . . . | 850=29,750 நிமிடங்கள் |
| முதல் நான்காண்டு கால ஆரம்பக் கல்வியில் பாடங்களின் எண்ணிக்கை . . | 3,230=113,050 நிமிடங்கள் |
| குழந்தைகளுடன் ஆசிரியர் நெருங்கிக் கலந்து பழகும் நேரம் (பாடங்கள், இடைவேளைகள், பாடங்களுக்குப் பின்), பூஜ்ஜிய வகுப்பு . . | 32,300 நிமிடங்கள் |
| 1,2,3வது வகுப்புகள் ஒவ்வொன்றிலும் குழந்தைகளுடன் ஆசிரியர் நெருங்கிக் கலந்து பழகும் நேரம் . | 39,950 நிமிடங்கள் |
| முதல் நான்காண்டுக் கால ஆரம்பக் கல்வியின் போது குழந்தைகளுடன் ஆசிரியர் நெருங்கிக் கலந்து பழகும் நேரம் . . . . . . | 154,700 நிமிடங்கள் |

கல்வியாண்டு எவ்வளவு பெரியது என்று தோன்றுகிறது அல்லவா! ஆனால் வளரும் மனிதனை மாற்றியமைக்கும் நிகழ்ச்சிப் போக்கு எவ்வளவு சிறு எண்களில் அடங்கி விடுகிறது! 3,230 பள்ளிப் பாடங்களில் குழந்தை உடல் வளர்ச்சியிலும் மூளை வளர்ச்சியிலும் அடையாளம் தெரியாதபடி வளர்ந்து விடுகிறான். இப்பாடங்கள் அதிகமா, குறைவா? இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமா? இங்கே

இன்னொரு கணக்கையும் பார்ப்போம். முதல் நான்காண்டு காலக் கல்வியின் போது குழந்தைகளுடன் ஆசிரியர் கலந்து பழகும் நேரத்திற்கும் குழந்தைகளின் நான்காண்டுக் கால வாழ் நாட்களுக்கும் உள்ள விகிதம் என்ன? கணக்குப் போடும் சிறு இயந்திரத்தில் 154,700 என்று போட்டு, அதை நூறால் பெருக்கி, 2,103,380ஆல் வகுக்கிறேன். ...சுமார் 7% என்ற விடை வருகிறது. இவ்வளவு குறைவா? சிறு பள்ளி மாணவனின் வாழ்நாளில் 7% நேரம் மட்டுமே பள்ளிக் கல்விக்குச் செல்கிறது!

எனக்குக் கவலை உண்டாகிறது. ஒருவேளை ஐந்து நாள் பாடத்திற்குப் பதில் ஆறு நாள் பாடம் அவசியமோ! பாட வேளையை 10 நிமிடம் குறைக்க வேண்டாமோ! ஆனால் குழந்தைகளுக்கு வேலை செய்ய உதவ, நன்கு சிந்திக்க உதவ எனக்கு குறுகிய பாடவேளைகள் தேவை.

இப்படியாக, ஆசிரியர் வேலையில் எனக்கு நேரப் பற்றாக்குறை. என்ன செய்வது? வாழ்க்கையை நேசித்து, செய்யும் காரியத்தில் ஈடுபாடுள்ள ஒருவனுக்கு எப்போதுமே நேரம் போதாது. நாளை முதல் நான் கடைப்பிடிக்கப் போகும் உறுதிமொழியை எழுதிக் கொள்கிறேன்:

> எனது ஆசிரியர் தொழிலில் நேரப் பற்றாக்குறை இருக்கும் போது, கல்வி மற்றும் வளர்ப்பு சம்பந்தமான மிக சிக்கலான பிரச்சினைகளை ஒரு சில நொடிகளில் தீர்க்கும் கட்டாயத்தை நான் அடிக்கடி சந்திக்க நேரிடும். இப்பிரச்சினைகள் குழந்தையின் எதிர்கால வாழ்க்கை முழுவதையுமே மாற்றி விடக் கூடியவை. எனவே நான் இதில் அவசரப்படக் கூடாது, குழந்தையின் எதிர்காலத்திற்கு நான் பொறுப்பானவன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் இரண்டு

# "நான் சிறுவனாக இருந்த போது..."
# (முதல் நாள்)

### எதிர்கால மனிதன்

''செப்டெம்பர் 1ஆம் தேதி பள்ளிக்கு வந்து குழந்தைகளைச் சந்திக்கும் போது நான் சாகாவரம் பெற்றவள் என்று தோன்றுகிறது'' என என் தோழியும் சக ஊழியருமான தினா தீன் மிஹைலவ்னா கிலாஷ்வீலி கூறினார். உண்மையில், ஆசிரியரால் தன் மாணவர்களின் மனதில் அன்பை ஊட்டி மனித நலன்களின் பால் இவர்களது இதயம் அக்கறை காட்டும்படி செய்ய முடிந்தால் சாகாவரம் பெறும் உரிமை இவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு என்று நான் அப்போது நினைத்தேன். உண்மையான ஆசிரியர்கள் இறப்பதில்லை, இவர்கள் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகளில் கரைந்து இவர்களை உயர்ந்த லட்சியங்களை உடைய நபர்களாக மாற்றுகின்றனர்.

இன்று செப்டெம்பர் 1ஆம் தேதி, நான் பெருமிதம் அடைகிறேன். 20ஆம் நூற்றாண்டின் 80ஆம் ஆண்டுகளின் சோவியத் ஆசிரியர் 21ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; நாளைய தினத்தைப் பற்றிய கற்பனையை குழந்தைகளின் மனதில் மூட்டி விட்டு, நாளைய வாழ்க்கையின் தெளிந்த, ஒளிமயமான, மகிழ்ச்சிகரமான ஓடையை இன்றைய தினத்தின் மகிழ்ச்சியிலும் முயற்சிகளிலும் திறந்து விடுவதற்காக இவர் வந்துள்ளார் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன்.

அதிகாலையில் நான் பள்ளிக்குக் கிளம்புகிறேன். பள்ளி என் வீட்டிற்கு அருகாமையில் உள்ளது, இன்று கால்நடையாகச் செல்வதே நல்லது. முதலில், இன்னமும் நேரமுள்ளது, இரண்டாவதாக, சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது.

நான் குழந்தைகளைப் பார்த்ததும் முதன் முதலாக உச்சரிக்க வேண்டிய சொற்கள் எவை? ''குழந்தைகளே, வணக்

கம்!'' என்று சொல்ல வேண்டுமென்பது நான் நீண்ட காலத்திற்கு முன்னரே கண்டுபிடித்த விஷயம். 170 பாட நாட்கள் என் வகுப்பில் உண்டு. ஒவ்வொரு நாளும் காலையில் வகுப்பறையில் நுழையும் போது ''குழந்தைகளே, வணக்கம்!'' என்று சொல்வேன்.

வெறும் வார்த்தைகள் ஒரு புறமிருக்க, நான் எப்படி இவற்றைச் சொல்லுகிறேன், என் முக பாவம் எப்படியுள்ளது என்பது முக்கியமானது. என் குரல் அன்பானதாக, கவர்ச்சிகரமானதாக இருக்க வேண்டும். என் முக பாவம் குரலுக்கேற்றபடி இருக்க வேண்டும். எல்லாம் புரியும்படி இருந்தாலும் நடைமுறையில் எல்லாமே இது போல் நடக்கிறதென்று நான் நம்பவில்லை. சில சமயங்களில் மிகக் கறாராக, காரிய ரீதியில் என் குரல் ஒலிக்கும், சில சமயம் மிதமிஞ்சிய உற்சாகத்துடன் ஒலிக்கும், சில நேரங்களிலோ ஏனோ தானோவென்று இருக்கும் (இதை ஒப்புக்கொள்ளக் கூட வெட்கப்படுகிறேன்). இந்த சமயங்களில் எனக்குத் திருப்தி இருக்காது.

முகமன் கூறும் சாதாரண வார்த்தைகளை உச்சரிப்பது சம்பந்தமாக வெறுமனே மண்டையை போட்டுக் குழப்பிக் கொள்வது ஒருவேளை அவசியமில்லையோ? ஒருவேளை இதில் ஆசிரியரின் பிரச்சினை எதுவுமே இல்லையோ? ''குழந்தைகளே, வணக்கம்!'' என்று நான் அன்றாடம் எப்படிக் கூறுகிறேன் என்பது அவர்களுக்கு முக்கியமில்லையோ! ஒரு முறை இப்படிப்பட்டதொரு சம்பவம் நிகழ்ந்தது. நான் நடத்திய ஒரு வகுப்பிற்கு 15 ஆசிரியர்கள் வந்திருந்தனர். மேற்கூறியவாறு முகமன் கூறி நான் பாடத்தை துவக்கினேன், நான் விரும்பிய விசேஷமான வகையில் இவ்வார்த்தைகளை உச்சரித்ததை உணர மகிழ்ச்சியாக இருந்தது. பாடம் முடிந்ததும் நான் ஒவ்வொருவரையும் அணுகி '' 'குழந்தைகளே, வணக்கம்!' என்பதை நான் எப்படிக் கூறினேன் கவனித்தீர்களா? இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?'' என்று கேட்டேன். அவர்களால் ஒன்றுமே கூற இயலவில்லை, நான் என்ன சொன்னேன் என்பதைக் கூட சரிவர நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. ''சாதாரண முகமன், இதிலென்ன விசேஷம்?..'' என்று அவர்கள் புரியாமல் கேட்டார்கள். முகமன் கூறுவதில் உள்ள விசேஷமான—கவர்ச்சிகரமான, அன்பான, மன உற்சாகத்தை

அதிகப்படுத்தக் கூடிய, மகிழ்ச்சிகரமான—தொனியை ஒரு வருக்கொருவர் பரஸ்பரம் அன்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் முறையாகப் பயிற்றுவிக்க முடியாதா என்ன என்று நான் ஆச்சரியப்பட்டேன். ''வணக்கம்'' எனும் சொல்லை இரக்கமாக அல்லது அன்பை வெளிப்படுத்தும் முறையில் ஒருவரிடம் சொல்லிப் பாருங்கள், வெவ்வேறு விதமாக உச்சரிக்கப்பட்ட ஒரே சொல் மனிதர்களின் உறவை எப்படி மாற்றுகிறது என்று நீங்கள் உணருவீர்கள்.

''குழந்தைகளே, வணக்கம்!'' என்று எப்படி முகமன் கூறுவது எனும் பிரச்சினை ஒரு தீவிரமான ஆசிரியர் பிரச்சினையாகும். என்னைப் பொறுத்த மட்டில் எப்போது இதை எப்படி, எந்த முக பாவத்தோடு சொல்லுவது என்பது முக்கியமாகும். ஏனெனில் எனக்கு இப்படிப்பட்டதொரு உறுதிமொழி உண்டு:

> குழந்தைகளின் மீதான உண்மையான அன்பை வெளிப் படுத்த நான் விரும்பினால் நான் இதை மிகச் சிறந்த வடிவங்களில் செய்ய வேண்டும்.

தெருவில் போகும்போது நான் இதைப் பயிற்சி செய்ய முயலுகிறேன். ''குழந்தைகளே, வணக்கம்!'' என்று முறு முறுத்தபடியே இந்த முறுமுறுப்பைக் கேட்கிறேன். என் முன் குழந்தைகள், யாருமில்லாததால்தான் இது சரியாக வர வில்லை போலும். இவர்களைக் கற்பனை செய்து கொள்ள வேண்டும்: இதோ என் வகுப்பு, நான் இதில் நுழைகிறேன், குழந்தைகள் என்னை ஆர்வத்துடன் பார்க்கின்றனர், நான் அனைவரையும் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடியே ''குழந்தைகளே, வணக்கம்!'' என்கிறேன்... அது சரி, இந்த வழிப்போக்கர் ஏன் என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்?..

முதல் பாடவேளையின் போது நான் என்ன செய்யப் போகிறேன்? ஒருவேளை இதுவும் பிரச்சினை அல்லவோ?

முதல் பாடவேளையின் போதும், பிந்தைய பாடங்களின் போதும் படிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் மக்களின் வாழ்க்கையில் ஞானத்தின் அவசியம் பற்றியும் நான் குழந்தைகளுக்கு ஒன்றும் சொல்லப் போவதில்லை. பள்ளியிலும் வகுப்பிலும் எப்படி நடந்து கொள்ள வேண் டும் என்ற விதிமுறைகளை அவர்களுக்குச் சொல்லித் தரப்

போவதில்லை. இப்போதுதான் பள்ளிக்கு வந்துள்ள குழந்தைகளுக்குப் படிப்பின் முக்கியத்துவம், ஞானத்தின் அவசியம் பற்றிச் சொல்வது தேவையில்லை. இதைப் பற்றிப் பொதுவில் சொல்வதே அவசியமா? சமுதாய வாழ்வில் ஞானம் மற்றும் கல்வியின் முக்கியத்துவம் தெட்டத் தெளிவாக இருக்கையில் இதை—அதுவும் ஆறு வயதுக் குழந்தைகளின் மத்தியில்—சந்தேகத்திற்கு உள்ளாக்க வேண்டுமா என்ன? கல்வி கற்க வரும்படி அவர்களுக்கு அறைகூவல் விட வேண்டாம், தம் இயல்பினாலேயே அவர்கள் கல்வியின் பால் ஈர்க்கப்படுகின்றனர். அவர்கள் மீது கல்வியைத் திணித்து, அதே சமயம் ''இது அவசியம்'' என்று வற்புறுத்தும் போது இந்த ஈர்ப்புச் சக்தி பாதிக்கப்படும்.

பள்ளியிலும் வகுப்பிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பொறுத்த மட்டிலும் இப்பேச்சு எதைச் செய்யக் கூடாது, கடமைகள் என்ன என்ற பட்டியலுடன் முடியும்; மறுநாள் குழந்தை பள்ளிக்கு வராமலிருக்கத் தயங்க மாட்டான். எனது மாணவன் ஒவ்வொருவனும் தன் வயதையொத்த மாணவர்களின் மத்தியில் பழகும் போது எப்படிப் பழகுவது என்பதையும், சமுதாயத்தில் தன் நடத்தை முறைகளையும் தானே முடிவு செய்ய வேண்டும் என்றுதான் நான் விரும்புவேன். தானே என்று நான் சொல்லும் போது நான் கடைப்பிடிக்கும் போதனா முறையை நான் குறிப்பிடுகிறேன்; இது சுயமான தார்மிக, அழகியல் முடிவுகளுக்கு குழந்தையை இட்டுச் செல்லும்.

சரி, அப்படியெனில், முதல் பாடவேளையின் போது நான் எதைப் பற்றிப் பேசுவேன்? என் பெயரைக் கூறுவேன், அவர்கள் அனைவரையும் சந்திக்க ஆவலோடு காத்திருந்ததாகச் சொல்லுவேன். பின்னர், அவர்களும் பாடம் படிக்கத் துடிப்பதால், ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காது உடனடியாக விஷயத்திற்கு வருவோம். பாடத்தின் இறுதியில் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொள்ளுமாறு முன்மொழிவேன். கடைசி பாடவேளையின் போது பின்வரும் கேள்விகளைக் கேட்பேன்: ''உங்களில் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இன்று என்ன முக்கிய சம்பவம் நடந்தது? பள்ளியில் உங்களை என்ன விஷயங்கள் எதிர்நோக்கியுள்ளன?'' இக்கடைசிக் கேள்வியை நான் கேட்டதும், பல்லாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் என் நெஞ்சில் நிழலாடும்; அப்

போது ஒரு ஆறு வயதுச் சிறுவன் தன்னிடத்திலிருந்து துள்ளி எழுந்து உற்சாகமாக, கருத்தாழத்தோடு ''பெரிய, மிகப் பெரிய விஷயங்கள் எதிர்நோக்கியுள்ளன!..'' என்று பதில் சொன்னான்.

என் சிந்தனைகள் அறுபடுகின்றன. திபிலீசி நகரில் உள்ள 1வது எண் பள்ளியின் மூன்றாவது மாடிக்கு நான் ஏறிச் செல்கிறேன். அங்குதான் என் அறை உள்ளது. எனது ஆறு வயதுக் குழந்தைகள் அருகேயுள்ள வகுப்பறையில் உட்கார்ந்து படிப்பார்கள், மகிழ்வார்கள், கும்மாளம் அடிப்பார்கள்.

## பள்ளி உன்னுடையது...

இன்னும் ஒரு மணி நேரம் கழித்துதான் வகுப்புகள் ஆரம்பமாகும். பரிசோதனை ரீதியான தயாரிப்பு வகுப்பின் கதவருகே நான் இரண்டு பெற்றோர்களையும் ஐந்து குழந்தைகளையும் கண்டேன். வகுப்பறையின் கதவு திறந்திருந்த போதிலும் அறையினுள் யாரும் இல்லாததால் அவர்கள் உள்ளே நுழையத் துணியவில்லை. என் நினைவில் மூன்று புகைப்படங்கள் பளிச்சிடுகின்றன.

''வணக்கம்!'' என்று அனைவரையும் பார்த்து நான் சொல்கிறேன். ''ஏன் நீங்கள் இவ்வளவு சீக்கிரம் வந்தீர்கள்?''

குழந்தைகள் பேசாமல் நிற்கின்றனர். நான்தான் அவர்களின் முதல் ஆசிரியர் என்று அவர்களுக்கு இன்னமும் தெரியாது.

''உன் பெயர் கீகா, இல்லையா?''

சிறுவனுக்கு வியப்பு.

''ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''வணக்கம், கீகா!'' அச்சிறுவன் நீட்டிய சிறு கையை இறுகப் பற்றிக் குலுக்குகிறேன்.

''நீ மாரிக்கா!.. இல்லையா, வணக்கம்!''

அவளது சிறு கையை மென்மையாகப் பற்றுகிறேன். அது மென்மையானது, மெல்லியது. சின்னஞ்சிறு பெண்ணாக காட்சி தருகிறாள். அவளுக்கு வயதென்ன?

''வணக்கம், ஏல்லா!'' என்று மூன்றாவது சிறுமியைப் பார்த்துக் கூறுகிறேன். புகைப்படத்திலிருந்ததைப் போன்றே

இவள் குண்டாக இருக்கிறாள். ஏல்லா புன்முறுவல் பூத்தபடியே தன் குண்டு கரத்தை நீட்டுகிறாள்.

''உங்களை எனக்கு நினைவில் இல்லையே'' என்று எஞ்சியிருந்த ஒரு சிறுவனையும் சிறுமியையும் பார்த்துக் கூறுகிறேன்.

''குழந்தையைப் பரிசோதனை வகுப்பில் சேர்த்துக் கொள்ளக் கோரும் விண்ணப்பத்தை எங்களால் உரிய நேரத்தில் தர இயலவில்லை. எனவே ஆசிரியருக்காகக் காத்திருக்கின்றோம்!''

நான் என்ன செய்வது? சட்டப்படி வகுப்பில் 25 பேர் கள் மட்டுமே இருக்க வேண்டும். என்னிடமோ ஏற்கெனவே 36 பேர்கள் உள்ளனர்.

''பள்ளியில் உள்ள கல்விப் பிரிவின் தலைமை அதி காரியை சென்று பாருங்களேன்.''

பெற்றோர்கள் வருத்தப்பட்டனர்.

''நாங்கள் அவரை ஏற்கெனவே சந்தித்து விட்டோம். உங்கள் வகுப்பில் சேருவது நீங்களே தீர்மானிக்க வேண் டிய விஷயம் என்றார்.''

சங்கடத்துடன் விளக்கத் துவங்குகிறேன்.

''தயவு செய்து நான் சொல்வதை சரிவரப் புரிந்து கொள்ளுங்கள். நாங்கள் கண்டிப்பாக இச்சிறுமியையும் சிறுவனையும் சேர்த்துக் கொள்வோம். ஆனால் வகுப்பில் இடம் இல்லையே என்ன செய்ய!''

''ஓரிருவர் கூடவோ குறைவாகவோ இருந்தால் என்ன?''

''இல்லையில்லை, இது எங்களுக்கு ஒரு பெரிய விஷ யம்.''

''நீங்கள் யார்?'' சிறுவனின் தாயார் கேட்கிறார்.

''நான்... நான் இந்த வகுப்பின் ஆசிரியர்.''

இரண்டு தாயார்களும் வியப்படைந்தனர். சிறுமியின் தாயார் வற்புறுத்துகிறார்:

''உங்களுக்குத் தெரியுமா, என் மகள் மிகவும் புத்தி சாலி... அவளுக்குப் படிக்கத் தெரியும், நூறு வரை எண்ணத் தெரியும், பல கவிதைகள் தெரியும். இவள் நன்கு வளர்ச்சியடைந்தவள்... இசை பயிலுகிறாள்... நல்ல திற மையானவள், உங்கள் வகுப்பிற்கு ஏற்றவள்... இவளைக் கொண்டு எவ்வளவு பரிசோதனை வேண்டுமானாலும் செய் யுங்கள், எல்லாவற்றையும் தாங்கிக் கொள்வாள்...''

இந்த அம்மாவிற்கு நான் என்ன சொல்வது என்று யாராவது ஆலோசனை சொல்லுங்களேன்! குழந்தைக்கு நூறு வரை எண்ணத் தெரிந்ததும், ஒரு சில கவிதைகளை குழந்தை மனப்பாடம் செய்ததும், நன்கு படிக்கத் தெரிந்ததும் அவன் திறமையானவன், மேதை என்று ஏன் பல தாய்மார்கள் எண்ணுகின்றனர்? நிச்சயமாக, மேதாவிலாசம் மிக்க குழந்தைகள் இருக்கின்றனர். உங்கள் குழந்தை எல்லோரையும் போல் சாதாரணமானவனா, அல்லது திறமை மிக்கவனா, மேதாவிலாசமுள்ளவனா என்று கேட்டால் பெரும்பாலான தாய்மார்கள் எவ்விதத் தயக்கமும் இன்றி ''என் குழந்தை திறமை மிக்கவன்... மேதை!'' என்றுதான் பதில் சொல்வார்களென என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். ஒருவேளை இந்த அழகிய சிறுமி பிறப்பிலேயே அசாதாரணத் திறமையுடன் பிறந்திருக்கலாம், நம் நாட்களில் இத்தகைய குழந்தைகள் மேன்மேலும் அதிகரித்து வருகின்றனர். நான் விஷயத்தின் இன்னொரு அம்சத்தை அவருக்கு விளக்க முற்படுகிறேன்:

''விசேஷ திறமைகளையுடைய குழந்தைகளை நாங்கள் சேர்த்துக் கொள்வதில்லை! மற்ற தயாரிப்பு வகுப்புகளைப் போன்றே இவ்வகுப்பில் உள்ளவர்களும் சாதாரணமானவர்கள். ஆனால் வகுப்பில் இடமில்லையே...''

அத்தாய் தொடருகிறார்:

''அமைச்சகத்தின் சிபாரிசை வேண்டுமானால் கொண்டு வருகிறேன்... ஒரு விதிவிலக்காக...''

வகுப்பு ஆரம்பிக்கும் நேரத்தில் மனநிலையை மோசமாக்கி கொள்ளாமலிருக்கப் பொறுமையாக இருக்க வேண்டும். எவ்வித சிபாரிசுகளும் தேவையில்லை என்றும் தலைமை அதிகாரியைச் சந்தித்து குழந்தைகளை வேறு வகுப்பில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்குமாறும் இரண்டு தாய்மார்களுக்கும் விளக்குகிறேன்.

தாய்மார்கள் இருவரும் ஒப்புக் கொள்ளவில்லை: என் வகுப்பில்தான் அவர்களின் குழந்தைகளை சேர்க்க வேண்டுமாம். நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்ற உறுதியோடு அவர்கள் கிளம்பிச் செல்லுகின்றனர். குழந்தைகளுக்கு நான் பார்வையாலேயே விடை தருகிறேன். சிறுவன் என் மீது வைத்த பார்வையை அகற்றவேயில்லை. அவன் கண்களில் நீர் ததும்புகிறது. அவன் திடீரெனக் கையை

உதறிக் கொண்டு என்னை நோக்கி ஓடி வருகிறான், என் முழங்காலைப் பிடித்துக் கொண்டு கேவியபடியே கூறு கிறான்:

''மாமா, என்னைத் துரத்தாதீர்கள்... நான் ஒழுங் காகப் படிப்பேன்...''

நான் சிறுவனைத் தூக்குகிறேன்.

''அழாதே, நீ ஆண் பிள்ளையல்லவா!'' என்றேன். அவன் அழுகையை நிறுத்தவில்லை. ''பள்ளிக்கூடம் உன் னுடையது, நான் எப்படி உன்னை பள்ளியிலிருந்து விரட்ட முடியும்!.. சரி, வா வகுப்பிற்குப் போகலாம்!..''

தனக்கே உரித்தான திறந்த மனதுடன், நெஞ்சார சிறு வன் ஆசிரியரின் மனதைத் தொடும்படி கூறும் வார்த்தை கள் எந்த ஒரு சிபாரிசையும் விட வலிமையானவை.

நான் அந்த ஐவரையும் வகுப்பில் சேர்த்துக் கொள் கிறேன், வகுப்பறையை அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக் கிறேன், பூச்செடிகளுக்குத் தண்ணீர் விடவும் ஜன்னல்களைத் திறக்கவும் அவர்கள் எனக்கு உதவுகின்றனர். தனித்தனி யாகவும் பெற்றோர்களுடனும் வரும் மற்ற குழந்தைகளும் படிப்படியாக இவ்வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

''தாத்தோ, வணக்கம்!''

தாத்தோவிற்கு ஒரே வியப்பு.

''மாயா, வணக்கம்!''

மாயாவிற்கு ஆச்சரியம்.

''கோத்தே, வணக்கம்!''

கோத்தேவிற்கும் வியப்புத் தாளவில்லை.

''நீக்கா, வணக்கம்!''

நீக்காவிற்கு என்னைப் பார்த்ததில் மகிழ்ச்சி.

''எனக்கு உன் பெயர் மறந்து விட்டது, ஞாபகப் படுத்து.''

''கியோர்கி!''

''கியோர்கி, வணக்கம்!..''

அனைவரின் கரங்களையும் பற்றிக் குலுக்குகிறேன், கண் பார்வையிலேயே அவர்களின் உயரங்களைக் கணித்து அதற் கேற்றபடி உட்கார வைக்கிறேன்.

தீமாவைக் கூட்டி வந்தார்கள். இச்சிறுவன் சற்றே மனச் சோர்வானவன்.

''தீமா, வணக்கம்!'' என்று கூறியபடியே கையை நீட்டுகிறேன்.

அவன் கரத்தை நீட்டவில்லை. தன் கணவன் வெளி நாட்டில் வேலை செய்ததாகவும் அங்கு இரண்டு வருடங்கள் வாழ்ந்ததாயும், குழந்தைகள், முன் பின் அறிமுகமில்லாதவர்களுடன் சிறுவனுக்குப் பழக்கமில்லை என்றும், அவனுக்கு நண்பர்கள் மிகக் குறைவாகவே இருந்ததாயும் தாய் விளக்குகிறாள்.

தீமா தன் தாயின் கரங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட மறுக்கிறான். விக்டரும் அம்மா இல்லாமல் வகுப்பறையினுள் நுழைய மறுத்து விடுகிறான். சரி, அம்மாக்களும் வகுப்பறையினுள்ளேயே உட்கார்ந்திருக்கட்டும்.

அதிகார தோரணையுடைய ஒரு பெண்மணி திடீரென அறையினுள் நுழைந்து தன் மகனை என் வகுப்பிற்கு மாற்றப் போவதாக அறிவிக்கிறாள். இது இயலாது என்று நான் விளக்க முற்படுகிறேன்.

''ஆனால், இப்போதுதான் நீங்கள் இரண்டு குழந்தைகளை இவ்வகுப்பில் சேர்த்தீர்களே!'' என்று அவள் கோபத்தோடு கூறுகிறாள்.

வகுப்பில் இடமில்லை என்பதைக் காட்டி அமைதியாக, சன்னமான குரலில் நான் தரும் விளக்கங்களில் திருப்தியடையாத அப்பெண்மணி அமைச்சகத்தில் முறையீடு செய்யப் போவதாகச் சொல்லி விட்டு வெளியேறுகிறாள்.

### வார்த்தைகளின் படிகத்தன்மை

இசை நயத்தோடு, இனிமையாக பள்ளி மணி ஒலிக்கிறது...

நான் கதவை மூடுகிறேன். கதவிற்கு வெளியே ஒரு சில அம்மாக்களும் பாட்டிகளும் உள்ளனர். வகுப்பறையில் ஐந்து அம்மாக்கள் உட்கார்ந்திருக்கின்றனர்.

''எழுந்து நில்லுங்கள், குழந்தைகளே!''

குழந்தைகள் துள்ளியெழுந்து நின்றபடியே ''அடுத்து என்ன நடக்கப் போகிறது?'' என்று என்னைப் பார்க்கின்றனர்.

''குழந்தைகளே, வணக்கம்!''

அவர்கள் பலவாறாக முகமன் கூறுகின்றனர். பரவா

யில்லை, சீக்கிரம் பழகி விடுவீர்கள்; ''குழந்தைகளே, வணக்கம்!'' என்று நான் எனக்கே உரித்தான தொனியில் கூறுவது உங்களைச் சந்திப்பதில் எனக்குள்ள மகிழ்ச்சியை எப்படி குறிக்குமோ அதே போல் நீங்கள் கூறும் முகமன் என்னைச் சந்திப்பதில் உள்ள மகிழ்ச்சியைக் குறிக்கும். இன்று என் தொனியில் எனக்கு திருப்தியில்லை. வகுப்பு துவங்கும் முன் வந்த அந்த அதிகார தோரணையுள்ள பெண்மணி என் மனநிலையை மோசமாக்கி என்னைப் பதட்டமடைய செய்ததற்காக அவள் மீது குற்றஞ் சாட்டுகிறேன்.

''உட்காருங்கள்... நான் உங்கள் ஆசிரியர். உங்களுடைய பள்ளி வாழ்க்கை இன்று துவங்குவது குறித்து வாழ்த்துக்கள். பாடங்களை படிக்கத் துவங்க வேண்டுமென நீங்கள் துடித்துக் கொண்டிருப்பீர்கள். சரி, ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காது ஆரம்பிப்போம் வாருங்கள்... நமது முதல் பாடம் நம் தாய்மொழிப் பாடம். உங்கள் தாய்மொழி என்ன என்று தெரியுமா?''

''ஜார்ஜிய மொழி!''

''உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏராளமான ஜார்ஜியச் சொற்கள் தெரியும். எங்கே, இச்சொற்களை இந்த அட்டைப்பெட்டியில் சேகரிக்கலாம் வாருங்கள்!''

என் கரங்களில் அழகிய சிறு அட்டைப்பெட்டி இருக்கிறது. இதே போன்ற சிறு பெட்டிகள் குழந்தைகளின் முன் உள்ளன: நேற்றே நான் ஒவ்வொரு குழந்தையின் மேசையிலும் சிறு அட்டைப்பெட்டியை வைத்தேன். இந்த அட்டைப்பெட்டியில் பத்து நீலநிற அட்டைக் குறிவில்லைகளை வைத்தேன். இந்த நீலநிற செவ்வக அட்டைக் குறிவில்லை ஒவ்வொன்றும் ஒரு சொல்லைக் குறிக்கும். ஒவ்வொரு சொல்லையும் தெட்டத் தெளிவாக, எல்லோருக்கும் கேட்கும்படி உச்சரிக்க வேண்டும்; ஒவ்வொரு சொல்லையும் உச்சரிக்கையில் இந்த அழகிய அட்டைப்பெட்டியில் ஒவ்வொரு குறிவில்லையையும் போட வேண்டும். இலிக்கோ இந்த அட்டைப்பெட்டியை எடுத்துச் சென்று உங்கள் சொற்களை ''சேகரிப்பான்''.

இலிக்கோ தயார். குழந்தைகள் தம் கரங்களில் குறிவில்லைகளை எடுத்துக் கொண்டனர்.

''முதல் சொற்களை நான் அட்டைப்பெட்டியில் போடட்டுமா?''

ஒவ்வொரு சொல்லையும் நான் தேர்ந்தெடுத்து உச்சரித்து இலிக்கோவின் அட்டைப்பெட்டியில் குறிவில்லைகளைப் போடுகிறேன்: தாய்நாடு... மகிழ்ச்சி... அன்பு...

இலிக்கோ மெதுவாக குழந்தைகளின் வரிசைகள் ஊடாக நடக்கிறான். முதற்சொற்களையடுத்து குறிவில்லைகள் அட்டைப்பெட்டியில் குவிகின்றன: பந்து, பெஞ்சு, மேசை, பென்சில், புத்தகம், மிதி வண்டி, பொம்மை...

இல்லையில்லை, இவை சொற்கள் அல்ல, இவை பொருட்கள்! பொருட்களினால் குறிவில்லைகள் குவிகின்றனவே தவிர சொற்களால் அல்ல. வகுப்பில் தாம் பார்ப்பதை அல்லது வீட்டிலோ, வேறெங்கோ பார்த்ததை குழந்தைகள் கூறுகின்றனர். ''காற்று'' எனும் சொல்லைப் பார்க்க முடியாது, ஆகையால் எனது 38 மாணவர்களில் ஒருவர் கூட இச்சொல்லை உச்சரிக்கவில்லை. இதோ சான்ட்ரிக்கோ எழுந்து நின்று, வாயைத் திறந்தபடி, கரும்பலகை, சாக்பீஸ் என்று உச்சரித்து இரண்டு குறிவில்லைகளைப் போடுகிறான், பின் இன்னும் எந்தப் ''பொருளை'' இப்பெட்டியில் போடலாம் என்று யோசித்தபடி அறையை சுற்றும் முற்றும் பார்க்கிறான். ருசிக்கோ ''வீடு'' என்று சொல்லி குறிவில்லையைப் போட்டு விட்டு நிறுத்தினாள். விக்டர் இவ்வீட்டை சுவர், கூரை, தரை, பால்கனி... மலர்கள்... என்று தனித்தனியே பிரித்துக் கூறினான்.

அவர்கள் வார்த்தைகளின் கடலில் குளிக்கின்றனர், ஆனால் வார்த்தைகளைப் பார்க்கவில்லை; காட்டில் விளையாடுகின்றனர், ஆனால் மரங்களைப் பார்க்கவில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில் யதார்த்தம் என்ற வகையில், விசேஷ உலகம் என்ற வகையில் வார்த்தைகள் இல்லை. குழந்தைகளுக்கு வார்த்தைகள் கண்ணாடியைப் போல் ஒளி புகும் தன்மையுள்ளவை, இவற்றின் ஊடாகப் பொருட்கள் தெரியும் என்று விஞ்ஞானம் கூறுகிறது. ஆனால் அக்கண்ணாடி தனியே தெரிவதில்லை!

நான் இக்கண்ணாடியின் மீது அடர்த்தியான ''வண்ணம் பூசி'' இதன் வழியாகப் பார்க்கையில் ஒன்றும் தெரியாதபடி செய்கிறேன். அப்போது குழந்தை தன் பேச்சுப் பிரவாகத்தை நிறுத்தி, தனக்காக பல்வண்ண யதார்த்தத்தை திறப்பான், தன் பேச்சை செழுமைப்படுத்தி, மேம்படுத்தி, மெருகிடத் துவங்குவான். கண்ணுக்குத் தெரியும் பொருட்

களிலிருந்து குழந்தைகளின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டும், இந்த மந்திர வட்டத்திலிருந்து அவர்கள் விடுபட உதவ வேண்டும். இலிக்கோவுடன் சேர்ந்து நான் வகுப் பறையின் நடுவில் நின்று விடுகிறேன்.

''நான் இன்னும் சில சொற்களை சொல்லட்டுமா?''

நீல நிறக் குறிவில்லைகளைப் போட்டபடியே சொற் களைத் தேர்ந்தெடுத்து சொல்கிறேன்:

''அழகிய... நாளைய...''

இப்போது நானும் இலிக்கோவும் அட்டைப்பெட்டியைக் கையில் ஏந்தியபடி விரைந்து நடை போடுகின்றோம். அட்டைப்பெட்டியில் ''போடப்படும்'' சொற்களைத் திரும்ப உச்சரிக்குமாறு நான் இலிக்கோவின் காதில் முணுமுணுக் கிறேன்.

''அன்பு... மென்மை... கனவு...''

''நன்றி, மாயா!''

''நேற்று... வேண்டும்... குதிக்கிறான்... நிமிடம்...''

''நன்றி, சாஷா!''

''விருப்பம்... பறக்கின்றன...''

மாரிக்கா நீண்ட நேரம் யோசித்து, குறிவில்லையை எறிந்து விட்டு மகிழ்ச்சியாகக் கத்துகிறாள்:

''மூக்கு...''

கியோர்கியும் ருசுதானும் மனித உடலை மீண்டும் பகுதி பகுதிகளாகப் ''பிரித்தனர்'':

''தலை... முடி... காதுகள்... வாய்... பற்கள்...''

மீண்டும் இப்படியாகத் தொடர்ந்தது...

சரி. ''கண்ணாடிக்கு வண்ணம் பூசும்'' கடமையை இன்று நிறைவேற்ற இயலாது. ஒரே ''வண்ணத்தைக்'' கொண்டும் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வேறொரு ''வண் ணத்தை'' பயன்படுத்த முயற்சிக்கிறேன். யாருக்கெல்லாம் நூறு வரை எண்ணத் தெரியுமெனக் கேட்கிறேன்: ''அட்டைப்பெட்டியில் நாம் எவ்வளவு சொற்களைச் சேர்த்துள்ளோம் என்று எண்ண வேண்டும்!'' இலிக்கோ, தேன்கோ, மாயா மூவரும் இதைச் செய்யத் தயார். ''சரி, இடைவேளையின் போது இச்சொற்களை எண்ணி எனக்குச் சொல்லுங்கள்!'' அடுத்த பயிற்சிக்கு வருகிறேன்.

''நான் மெதுவாக, சற்றே இழுத்தபடி, கிசுகிசுவென

ஒரு சொல்லை உச்சரிக்கப் போகிறேன். இது என்ன சொல் என்று கண்டுபிடியுங்கள்.''

மெதுவாகவும் இழுத்தபடியும் சொல்லக் காரணம், குழந்தைகள், வார்த்தையின் ஒலியமைப்பை ''நிறுத்தி'', அதை உற்றுக் கவனிக்க வேண்டும் என்பதாகும். மேலும் இவர்கள் சொல்லின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், அரிச்சுவடிக் கட்டத்தில் இச்சொற்களை இவர்கள் இதே மாதிரி இழுத்தபடி உச்சரிப்பார்கள். கிசுகிசுவென சொல்லக் காரணம், கேட்கும் திறனை, ஒலி இயல் ரீதியான செவியுணர்வை வளர்ப்பது ஆகும், அதோடு கூட கவன உணர்வையும் அதே சமயம் சிறிது விளையாட்டு தன்மையையும் வளர்க்க வேண்டும். நான் கரும்பலகையருகே நின்று கொண்டு சற்றே முன்னுக்குச் சாய்ந்து ரகசியத்தை சொல்வது போல் முணு முணுக்கிறேன்:

''அஅஅஅம்ம்ம்ம்மாமாமா.''

முதல் ஒலியாகிய அவிற்குப் பின் எழுத்தால் குறிக்கப் பட முடியாத ஏதோ ஒரு ஒலியை எழுப்புகிறேன்; இந்த குறிப்பிடப்பட முடியா ஒலியை 2—3 நொடிகளுக்கு இழுக்கிறேன், இதற்குப் பிந்தைய ஒலிகளையும் இதே போல் உச்சரிக்கிறேன். நான் ஒவ்வொரு ஒலியையும் தனித்தனியே பிரிப்பதில்லை, இவற்றைத் தனியான, சுயமான அலகுகளாகப் பிரித்துக் காட்டுவதில்லை.

'''அம்மா'... நீங்கள் 'அம்மா' என்று சொன்னீர்கள்!'' குழந்தைகள் உரக்கக் கத்துகின்றனர். ஆனால் எல்லாக் குழந்தைகளும் இப்படிக் கத்தவில்லை. பலருக்கு யோசித்துப் பார்க்கவே நேரம் போதவில்லை, மற்றவர்கள் முந்தி விட்டனர். ஒவ்வொருவரும் தம் பதிலை என் காதில் மெதுவாகச் சொல்லும் முறையை அமல்படுத்த வேண்டும். முதலில், இம்முறை குழந்தைகளுக்குப் பிடிக்கும், இரண்டாவதாக, பலரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யலாம்.

''இப்போது நான் வேறொரு வார்த்தையை உச்சரிப்பேன். யாருக்குப் பதில் தெரியுமோ அவர்கள் பதிலை என் காதில் மெதுவாகச் சொல்ல வேண்டும்! புரிந்ததா?'' அதே போல் ரகசியமாக, இன்னமும் மெதுவாக, சரிவரக் கேட்காதபடி உச்சரிக்கிறேன்:''தாாாாாாாயயயயககககம்ம்ம்.''

முதல் கரங்கள் உயர்ந்தன. ஒவ்வொருவரையும் அணுகி, குனிந்து காதை நீட்டுகிறேன். குழந்தைகள் இரு கரங்களா

லும் என் கழுத்தைக் கட்டிப் பிடித்தபடி என் காதருகே வாயை வைத்துத் தம் பதில்களைச் சொல்கிறார்கள். ''நல்லது, நன்றி!'' சரியான பதில் சொல்பவர்களைப் பார்த்து உரக்கச் சொல்கிறேன். ''நன்கு யோசி... தாாாயயககம்ம்... திரும்ப உன்னிடம் வருவேன்'' என்று மற்றவர்களிடம் மெதுவாகக் கூறுகிறேன். கிட்டத்தட்ட அனைவரும் என் காதுகளில் தம் பதில்களைச் சொல்லி விட்டனர். நான் மீண்டும் என் வலது கையை முன்னுக்கு நீட்டியபடி கரும்பலகையருகே நிற்கிறேன்.

''நான் கையை அசைத்ததும் நீங்களனைவரும் சேர்ந்து நமது ரகசியச் சொல்லைக் கூற வேண்டும்!.. தயாரா... எங்கே, வார்த்தையை நாக்கிற்குக் கொண்டு வாருங்கள்...''

காற்றில் எதையோ பிடிக்கப் போவது போல் நான் வேகமாகக் கையை வீசியதும் வகுப்பறையில் குழந்தைகளின் மகிழ்ச்சிக் குரல் ஒலிக்கிறது:

''தாயகம்!''

நான் மீண்டும் ஏதோ ரகசியத்தைச் சொல்லும் பாணியில் நின்றபடி முணுமுணுக்கிறேன்:

''ரொாாாாட்ட்ட்டிடிடிடி.''

உடனடியாக சாதாரண நிலைக்கு வந்து சொல்கிறேன்:

''யோசியுங்கள்!.. வார்த்தையை நாக்கிற்குக் கொண்டு வாருங்கள்!.. எங்கே!..''

குழந்தைகள் மகிழ்ச்சியோடு உச்சரிக்கும் ''ரொட்டி'' என்ற சொல்லை காற்றில் ''பிடிக்கிறேன்''. ஏதோ மந்திரத்தால் கட்டிப் போடப்பட்டதைப் போன்ற ஒரு நிலையில் அவர்கள் அடுத்த வார்த்தைக்காக ஆவலோடு காத்திருக்கின்றனர். ஒவ்வொரு பத்து வினாடிகள் கழிந்ததும் ''கனவு'', ''சூரியன்'', ''கோளம்'' என்ற சொற்கள் உரக்க ஒலிக்கின்றன. பின்னர் விரைவாக எல்லோரையும் சுற்றி வருகிறேன், குழந்தைகளின் சுரங்கள் என்னைத் தம்மை நோக்கி இழுக்கின்றன, உதடுகள் பதில்களை முணுமுணுக்கின்றன.

தேம்பியழுதபடியே தன்னைப் பள்ளியிலிருந்து விரட்ட வேண்டாமெனக் கெஞ்சிய சூரிக்கோ என்ற சிறுவனோ குழந்தைக்கே உரிய தாராள மனப்பாங்குடன் என்னை இரண்டு கரங்களாலும் கட்டிப் பிடித்தபடி, முப்பத்தெட்டு குழந்தைகளிலேயே முதலாவதாக, தன் வாழ்வின் முதல் பாடவேளையிலேயே என்னை மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்

கடித்தான். நான் பின்னால் மற்ற எல்லாக் குழந்தைகளிட மும் இதையேதான் எதிர்பார்க்க ஆரம்பிப்பேன். ''மாமா, நீ நல்ல ஆசிரியர். எனக்கு உன்னைப் பிடித்துள்ளது'' என்று அச்சிறுவன் என் காதில் முணுமுணுக்கிறான்.

இதற்குப் பின் கெட்ட ஆசிரியராக இருக்க முடியுமா என்ன!

இவ்வளவு தாராளமாக, நம்பகமாக, எதிர்பாராவித மாக, இன்னும் நான் ஒன்றும் சாதித்து விடும் முன்னராகவே நீ ஏன் என் மீது உன் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாய்? நிச்சயமாக, உனக்கேற்ற ஆசிரியராக இருக்க நான் மிகவும் பாடுபடுவேன், முயற்சி செய்வேன், உன்னுடைய நம்பிக்கை களை மெய்ப்பிப்பதற்காக நான் இரவும் பகலும் உழைப் பேன், உனக்காக உன்னோடு சேர்ந்து வளருவேன். சரி, துவக்கத்திலேயே, உனது பள்ளி வாழ்க்கையின் முதல் நிமி டங்களிலேயே எனது ஆசிரியர் மனசாட்சியின் தூய்மைக் கான பொறுப்பை ஏன் என் மீது சுமத்துகிறாய்!

இத்தருணத்தில் குழந்தைகள் என்னைப் பார்க்காமல் இருந்தால் நல்லது.

''பெஞ்சைப் பார்த்து தலையைக் குனியுங்கள்... கண் களை மூடுங்கள்!.. உங்களுக்கு மிகவும் சிரிப்பை வர வழைக்கக் கூடிய ஏதாவது ஒன்றை, உங்கள் குறும்புகளில் ஒன்றை நினைத்துக் கொள்ளுங்கள்.''

நான் சுதாரித்துக் கொண்டு, குழந்தைகள் தம் தலை யைக் கரங்களால் பிடித்துக் கொண்டு, கண்களை இறுக்க மூடியபடி தம் குறும்புகளை நினைத்துக் கொள்வதைப் பார்க்கிறேன். சத்தம் போடாமல் மெதுவாக குழந்தை களின் வரிசைகளிடையே நடந்தபடியே கிசுகிசுவெனச் சொல்கிறேன்:

''பெரும் சிரிப்பேற்படுத்தக் கூடியதை... உங்களது குறும்புகளிலிருந்து... சிரிப்பானவற்றை... இடைவேளையின் போது எனக்கு அவற்றைச் சொல்லுங்கள்...''

திடீரென ஒரு சலசலப்பு கேட்டது. மூலிகை மருந்துகள் அடங்கிய நீரூற்று ஒன்று பூமியைப் பிளந்து கொண்டு மேலே வருவதைப் போலிருக்கிறது. இந்த அடக்கமான, அமுக்க மான சிரிப்பை விவரிப்பதே கடினம். இது சிறிது சிறிதாகப் பெருகி வெடிச் சிரிப்பாக உருவெடுத்தது. முப்பத்தெட்டு குழந்தைகள் தலையைக் குனிந்தபடி, கண்களை மூடிக்

கொண்டு கலகலவென சிரிக்கின்றனர். பின் அனைவரும் அமைதியானர்கள். ''படிகத்தன்மையுள்ள கண்ணாடிக்குத் திரும்பி வர வேண்டும்.''

''நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நாம் இப்போது வார்த்தைகளைப் பார்த்தோம், இனி வாக்கியங் களைக் கவனிப்போம்... தலையை உயர்த்துங்கள்!.. நேராக நிமிருங்கள்!''

கரும்பலகையை மூடியிருந்த திரையை அகற்றுகிறேன். அங்கே ஒரு படம் உள்ளது. அதில் ஒரு சிறுவன் புத்தகம் படிக்கிறான்.

''இப்படத்தைப் பார்த்து வாக்கியத்தை அமையுங்கள். இச்சிறுவன் எதைச் செய்கிறான்?''

''சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான்.''

தாம்ரிக்கோ வாக்கியத்தை உருவாக்க வேண்டுமென எண்ணவில்லை. படத்தைப் பார்த்து அவள் என் கேள் விக்குப் பதில் சொன்னாள், அவ்வளவுதான். இப்போது, ''சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான்'' எனும் இப்பதிலை வாக்கியம் என்போம்.

''இவ்வாக்கியத்தை எல்லோரும் சேர்ந்து சொல்லுங் கள் பார்க்கலாம்.''

குழந்தைகள் ஒரே குரலில் சொல்லும் பதில்களை என் கரங்களால் நான் ஒழுங்குபடுத்துகிறேன். திரையை மூடி விட்டு மூன்று நீலநிற முக்கோண அட்டைவில்லைகளை (வார்த்தைகளின் அடையாளங்களை) எடுக்கிறேன்.

இவ்வாக்கியத்தை எழுத்தைக் குறிக்கும் அட்டைவில்லை களின் உதவியால் ''எழுதுகிறேன்''. **சிறுவன்** (அனைவருக் கும் தெரியும்படியான ஓரிடத்தில் ஒரு அட்டைவில்லையை வைக்கிறேன்)... **புத்தகத்தை** (அருகே அடுத்த அட்டை வில்லையை வைக்கிறேன்)... **படிக்கிறான்** (பின் மூன்றாவது அட்டைவில்லையை வைத்து இறுதியில் முற்றுப் புள்ளியுடன் கூடிய அட்டைவில்லையை வைக்கிறேன்).

''எங்கே இந்த வாக்கியத்தைப் 'படியுங்கள்' ''.

நான் ஒவ்வொரு அட்டைவில்லையாக சுட்டிக் காட்ட குழந்தைகள் ''படிக்கின்றனர்'': ''சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான்''.

இப்போது ஒரு சிவப்புநிற அட்டைவில்லையை எடுக் கிறேன்.

''இந்த அட்டைவில்லை 'சுவாரசியமான' எனும் சொல்லைக் குறிக்கிறது. எங்கே திரும்பச் சொல்லுங்கள்... சரி, இப்போது இந்த வார்த்தையை வாக்கியத்தின் எந்த இடத்தில் வைத்தால் நன்றாக இருக்கும்?''

ஆரம்பத்தில் வைத்தால் நன்றாயிருக்கும் என்று யாரோ பதில் சொன்னார்கள். சரி, பார்ப்போம்:

**சுவாரசியமான சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான்.**

வேறு பதில்களும் வந்தன:

**சிறுவன் புத்தகத்தை சுவாரசியமான படிக்கிறான்.**
**சிறுவன் சுவாரசியமான புத்தகத்தைப் படிக்கிறான்.**
**சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான் சுவாரசியமான.**

மற்ற அட்டைவில்லைகளின் இடையில் சிவப்புநிற அட்டைவில்லை இடம் மாறிக் கொண்டே இருக்கிறது. எல்லா மாதிரிகளையும் முயற்சி செய்த பின் ''சுவாரசியமான'' எனும் சொல்லை இரண்டாவது இடத்தில் வைக்குமாறு குழந்தைகள் எனக்கு ஆலோசனை கூறுகின்றனர். பின் நான் கேள்விகளைத் தொடுக்கிறேன்:

''இந்த வாக்கியத்தில் எவ்வளவு சொற்கள்?.. இந்த வாக்கியத்திலிருந்து கடைசிச் சொல்லை எடுத்து விட்டால்''—நான் கடைசி அட்டைவில்லையை எடுக்கிறேன்—''என்ன மிஞ்சும்?''

குழந்தைகள் ''படிக்கின்றனர்'': **''சிறுவன் சுவாரசியமான புத்தகத்தை''.**

''இது நன்றாக இல்லை, வார்த்தையை பழைய இடத்திலேயே திரும்ப வையுங்கள்!'' யாரோ ஆலோசனை கூறுகின்றனர்.

அதை வைத்து விட்டு மூன்றாவது சொல்லை எடுக்கிறேன். குழந்தைகள் ''படித்து விட்டு'' சிரிக்கின்றனர்.

''நன்றாக இல்லை!''

அட்டைவில்லையைத் திரும்ப வைக்கிறேன். இரண்டாவது சிவப்புநிற அட்டைவில்லையை எடுக்கிறேன்.

''இது 'மிகவும்' எனும் சொல். இச்சொல்லை எந்த சொற்களுக்கு இடையில் வைத்தால் நன்றாக இருக்கும் சொல்லுங்கள். என் காதில் மெதுவாகச் சொல்லுங்கள்.''

ஒவ்வொருவரையும் விரைவாக அணுகுகிறேன்: ''நன்றி!... நல்லது!.. நன்றி!..'' இதில் கிட்டத்தட்ட யாருமே

தவறிழைக்கவில்லை. போன்தோ திடீரென என் கையைப் பற்றிக் கொண்டு, சிரித்தபடியே ''நான் உங்களை விட மாட்டேன்'' என்கிறான்.

''சரி, அப்படியெனில் என்னைப் பிடித்துக் கொள், சேர்ந்து வகுப்பறையைச் சுற்றுவோம்.''

போன்தோ என் பின்னால் வருகிறான்.

'''மிகவும்' எனும் சொல்லை 'சிறுவன்' எனும் சொல்லிற்கும் 'சுவாரசியமான' எனும் சொல்லிற்கும் இடையில் வைக்கும்படி நீங்கள் கூறினீர்கள்.''

நான் வேண்டுமென்றே வேறு அட்டைவில்லைகளை நகர்த்தி விட்டு அவற்றின் இடையே புதியதை வைக்கிறேன். போன்தோவுடன் சேர்ந்து ஒரு புறமாக விலகி நின்று சற்று பேச்சை நிறுத்துகிறேன். ஒரு சிறுமி மட்டுமே நான் செய்ததைக் கவனிக்கிறாள்.

''நீங்கள் வார்த்தையைச் சரியானபடி வைக்கவில்லை!'' மாயா கரும்பலகையை நோக்கி ஓடுகிறாள். ''இதை இங்கே வைக்க வேண்டுமே தவிர அங்கல்ல.''

அவள் அட்டைவில்லைகளை மாற்றியமைக்கிறாள். நான் அவள் கரங்களைப் பற்றிக் குலுக்குகிறேன்.

''நன்றி, மாயா, மிக்க நன்றி, நீ என் தவறைக் கண்டு பிடித்தாய்!''

இப்போது நாங்கள் மூவருமாக வகுப்பின் முன் நிற்கிறோம்.

''சரி, நாம் இன்று என்ன செய்தோம் என்று பார்ப்போம் வாருங்கள்.''

''நாங்கள் உங்கள் காதில் முணுமுணுத்தோம்...''

''கண்களை மூடிக் கொண்டு பெஞ்சில் தலையைக் கவிழ்த்தபடி இருந்தோம்...''

''அட்டைப்பெட்டியில் வார்த்தைகளைச் சேகரித்தோம்...''

''நீங்கள் மெதுவாக கிசுகிசுவென கூறிய வார்த்தைகளை நாங்கள் கண்டுபிடித்தோம்...''

''பிறகு வாக்கியம்...''

''வாக்கியத்தில் நாங்கள் 'சிவப்பு' வார்த்தைகளைச் சேர்த்தோம்...''

''எங்கள் குறும்புகளை நினைத்துப் பார்த்தோம்...''

''சிரித்தோம்...''

நான்: ''தாய்மொழிப் பாட வகுப்பு உங்களுக்குப் பிடித்திருந்ததா?''

''மிகவும்... ஆம்... பிடித்திருந்தது...''

இனிய மணியொலி கேட்கிறது. முதல் பாடம் முடிந்து விட்டது.

''அடுத்த பாடம் கணிதம்! எங்கே, குழந்தைகளே, எழுந்திருங்கள்!..''

எல்லா சிறுவர்களையும் பார்த்துச் சொல்கிறேன்: ''வகுப்பறையில் உள்ளே வரும்போதும் வெளியே போகும் போதும் முதலில் சிறுமிகளுக்கு இடம் விடுங்கள்!.. இப்போது ஓய்வெடுங்கள்!''

## பாடங்களுக்கு இடையிலான நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது?

நமது முதல் இடைவேளை பத்து நிமிடங்கள் நீடிக்கும். பின் 30 நிமிடங்கள், 10 நிமிடங்களுக்கு இன்னும் இரண்டு இடைவேளைகள் உண்டு. மொத்தம் 50 நிமிடங்கள்.

பாடங்களுக்கு இடையிலான இடைவேளை சம்பந்தமாக ஆசிரியரியலில் பிரச்சினை எதுவும் இருக்கிறதா? இல்லை, பிரச்சினை எதுவும் கிடையாது. பள்ளி நடைமுறையிலும் இப்படிப்பட்ட பிரச்சினை எதுவும் கிடையாது. பாடவேளை களுக்கு இடையிலான இச்சிறு இடைவேளைகளை எப்படி ஒழுங்கமைப்பது என்பது பற்றி ஆசிரியர்கள் எந்த ஆசிரியர் ஆலோசனைக் கூட்டத்திலாவது தீவிரமாக விவாதித்ததாக நான் கேள்விப்பட்டதேயில்லை. இந்த இடைவேளைகளின் போது குழந்தைகள் அங்குமிங்கும் முரட்டுத்தனமாக ஓடிக் கை கால்களை உடைத்துக் கொள்ளாமலும், எதையும் பாழ்படுத்தாமலும், சண்டை போடாமலும், ஒருவர் காலை ஒருவர் வாரி விடாமலும், சிறுவர்கள் சிறுமியரை கலாட்டா செய்யாமலும் பார்த்துக் கொள்ள ஒருவரை ஏற்பாடு செய்வது தவிர வேறெந்த பிரச்சினையும் இதில் இல்லாதது ஒரு வேளை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

பள்ளியின் சார்பாக ஒரு மேற்பார்வையாளர் கையில் சிவப்புப் பட்டையைக் கட்டிக் கொண்டு ஒழுங்குமுறையைக் கவனித்துக் கொள்கிறார். இவரைப் பார்த்ததும், குழந்தை

கள் இடைவெளியில் கால்பந்தாட்டம் விளையாடுவதை நிறுத்திப் பேசாமல் செல்கின்றனர். பள்ளி இடைவெளி களில் விதிமுறைகளை மீறுபவர்கள் வகுப்புப் பொறுப்பாசிரி யரிடம், தலைமையாளரிடம் அல்லது பள்ளி இயக்குநரி டம் அனுப்பப்படுவார்கள். குழந்தைகளுக்கு இந்தப் பள்ளி விதிமுறைகள் தெரியும். எனவே, இவற்றை மீறி, பெரிய வர்களின் கோபத்தையும் திட்டுக்களையும் பெற அவர்கள் துணிவதில்லை.

பள்ளியில் மிகச் சிறந்த ஒழுங்குமுறையும் கடுமையான கண்டிப்பும் நிலவுவதாகப் பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால் இவையனைத்தும் குழந்தை வளர்ப்பில் வெறும் சம்பிரதாயங்கள் மட்டுமே, சிவப்பு கைப்பட்டையை உடைய மேற்பார்வையாளர் மட்டும் இல்லாவிடில் குழந்தை கள் தம் சக்திகளை முற்றிலும் வேறுவிதமாக ஆக்கபூர்வ மான வழிகளில் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதை மட் டும் இவர்கள் கூற மாட்டார்கள். என்றாலும் கூட கடும் கட்டுப்பாடு நிலவும் போதும், யாருக்கும் தெரியாமல் குறும்பு கள் செய்யும் குழந்தைகள் இருக்கத்தான் செய்கின்றனர்.

''ஓ!'' என்று கத்தியபடியே ஒரு சிறுமி மேற்பார்வை யாளரிடம் ஓடி வருகிறாள். ''நீனா பித்ரோவ்னா, குழா யிலிருந்து யாரோ என்னைச் சுட்டார்கள்'' என்று தன் கன் னத்தில் விழுந்த, கசங்கிய காகிதத் துண்டைக் காட்டு கிறாள். கன்னம் வலிக்கிறது. மேற்பார்வையாளர் கவன மாக சுற்றும் முற்றும் பார்க்கிறார். சிறுவர் சிறுமியர் அடங் கிய குழு ஒன்று அவரைக் கடந்து செல்கிறது. அப்போது அதே போன்ற கசங்கிய காகிதத் துண்டு நீனா பித்ரோவ்னா வின் இடது கன்னத்தின் மீதே விழுகிறது. அவர் சிறுவர் சிறுமியரை நிறுத்திக் கேட்கிறார்: ''யார் இதைச் செய்தது? யார் எறிந்தது?'' யாராவது பதில் சொல்வார்களா என்ன! இக்காரியத்தைச் செய்த குறும்புக்காரச் சிறுவனோ இன்று மட்டுமல்ல, நாளையும் கூட தன் ''வீரத்தைப்'' பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்வான்.

இடைவேளைகளின் போது பெரிய, சிறிய குழந்தைகள் அனைவருக்கும் வெறுமனே இடைவெளிகளில் நடப்பது மட்டும் போதாது, வேறு ஏதாவது செய்யவும் வேண்டும். குழந்தைகள் தமது உடல் பலத்தையும் மூளையையும் சுவார சியமாகப் பயன்படுத்தி தம் அறிதல் ஆர்வங்களைப் பூர்த்தி

செய்து கொள்ள வல்ல எதுவும் சுற்றிலும் இல்லாவிடில் என்ன செய்வது? ஏதோ முழு ஒழுங்கு நிலவுவதாக பாவனை செய்தபடியே குழந்தைகள் தம் குறும்புகளை இவ்வளவு திறமையாக மூடி மறைப்பதைக் கண்டு கோபம் கொள்ளா தீர்கள். உங்களை நோக்கி எறியப்பட்ட காகிதத் துண்டு களைப் பொறுத்துக் கொள்ளுங்கள், ஏனெனில் யார் இதைச் செய்தது என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்.

''உணர்வு பூர்வமான கட்டுப்பாடு'' என்று சொல்ல நாம் விரும்புகின்றோம். இதற்கு என்ன பொருள்? குழந்தை கள், சமூகக் கோரிக்கைகளை முழுமையாகப் புரிந்து கொண்டு தம் சக்தியை அடக்க வேண்டுமா என்ன? அதுவும் அவர்கள் நமது அறிவுரைகளின் மூலம் இதை கிரகிக்கின் றனர்—எது நல்லது? எது தவறானது? குறும்புகள் செய்தால் என்ன தண்டனை கிடைக்கும் என்பதைக் குழந்தைகள் நன்கு உணர்ந்து இதற்காக அஞ்ச வேண்டுமா? இத்தகைய உணர் வுப் ''பாலங்கள்'' உண்மையிலேயே குழந்தைகளைத் தவிர்க்க இயலாத தோல்விகளிலிருந்து காப்பாற்றுகின்றன. கண்டிப் பான தடைகள் அவசியம் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் நிச்சயமாக இருக்கின்றன. தேவையானது உணர்வை விட வலிமையானதாக இருந்தால், அமைதியாக இருக்கக் குழந் தையால் முடியாவிடில், குழந்தைக்கு இதில் விருப்பம் இல் லாவிடில், குறும்பு செய்யாமல் இருக்க முடியாவிடில் என்ன செய்வது?

இப்படிப்பட்ட அமைதியான, எல்லாவற்றிலும் சாந்த மான, உன் கண்களைப் பார்த்ததும் எதை செய்யக் கூடாதோ அதைச் செய்ய அஞ்சும் குழந்தைகளுடன் கலந்து பழக எனக்கு விருப்பமில்லை. குழந்தைகளின் குறும்புகளும் சேட்டை செய்யும் குழந்தைகளும் இல்லாமல் உண்மையான ஆசிரியரியலை உருவாக்க முடியாது. இவை ஆசிரியரியலின் சிந்தனையை முன்னுக்குத் தள்ளுகின்றன, ஆசிரியர்கள் ஆக்க பூர்வமாக சிந்தித்து, புதிய அம்சங்களையும் ஆசிரிய ரியலின் துணிவையும் வெளிப்படுத்துமாறு செய்கின்றன. சுய உணர்வுள்ள, முதிர்ச்சியடைந்த குழந்தைகளுடன் கலந்து பழகுவது எவ்வளவு சலிப்பைத் தரும் தெரியுமா? நான் முதலில் இப்படிப்பட்ட குழந்தைகளை குறும்பு செய்யுமாறு, அங்குமிங்கும் ஓடித் திரியுமாறு தூண்டி விட்டுப் பின்னர் அவர்களைப் பயிற்றுவிக்கும் வழிகளைத் தேடுவேன்.

குழந்தைகளின் குறும்புகளுக்கு நாம் ஏன் எதிர்ப்பாய் இருக்கின்றோம்? பெரியவர்கள் ஏன் இவற்றை ஏதோ குற்றங்களாக, உணர்வு பூர்வமான கட்டுப்பாடு மீறப்பட்ட தாகப் பார்க்கின்றனர்? குறும்பு என்றால் என்ன, இந்தக் குறும்புக்காரர்கள் யார் என்று நமக்கு நன்றாகத் தெரியாதது தான் இதற்குக் காரணமென எனக்குத் தோன்றுகிறது. குறும்புகள் மற்றும் குறும்புக்காரர்களின் மனநிலை சம்பந்த மான நூல்களை நான் எவ்வளவு விருப்பத்தோடு படிப்பேன் தெரியுமா! ஆனால் இப்படிப்பட்ட நூல்கள் இல்லையே!

குழந்தைகளின் குறும்பு நமது அமைதியைக் குலைக் கிறது, குழந்தை வளர்ப்பில் பிரச்சினைகளை ஏற்படுத்து கிறது, ஆசிரியரியல் வழிகளால் இவற்றைப் பல நேரங்களில் தீர்க்க முடியாது, நாம் தடைகளை, கட்டுப்பாடுகளை நாடு கின்றோம்.

குறும்புக்காரக் குழந்தைகள் உற்சாகமானவர்கள்; சோம் பலற்றவர்கள், ஒளிவுமறைவற்றர்கள், இவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது. பின்னவர்கள் உற்சாகமாக ஓடியாட, தற்காப்பில் ஈடுபட குறும்புக்காரக் குழந்தைகள் உதவு கின்றனர்.

குறும்புக்காரக் குழந்தைகள் அறிவுக் கூர்மை உடையவர் கள், நுண்ணறிவு வாய்ந்தவர்கள், எந்த ஒரு எதிர்பாரா சந் தர்ப்பத்திலும் இவர்கள் தம் திறமைகளைப் பயன்படுத்தி, அதன் மூலம் நிலவரத்தையும் உறவுகளையும் மறுமதிப்பீடு செய்யும் அவசியத்திற்குப் பெரியவர்களை ஆளாக்குவார் கள்.

குறும்புக்காரக் குழந்தைகளிடம் சுய வளர்ச்சி, சுய இயக்க உணர்வுகள் அதிகமாக இருக்கும்; தம் தனிப்பட்ட திறமைகளின் வளர்ச்சி பற்றிய ஆசிரியர்களின் தவறான கணிப்புகளை இவர்கள் தம்முள்ளேயே ஈடு கட்டிக் கொள் கின்றனர்.

குறும்புக்காரக் குழந்தைகள் நகைச்சுவையுணர்வு மிக்க வர்கள், விளையாட்டுத்தனமற்றதில் இவர்கள் சிரிப்பைப் பார்ப்பார்கள், கவனக் குறைவானவர்களை அசாதாரண மான ஒரு நிலைக்குத் தள்ளி வேடிக்கை பார்ப்பார்கள்; இவர்கள் தமக்கு மட்டுமின்றி, தம்மைச் சுற்றியுள்ளவர் களின் மத்தியில் நகைச்சுவையுணர்வு மிக்கவர்களுக்கும் நல்ல மனநிலையையும் சிரிப்பையும் தருவார்கள்.

குறும்புக்காரக் குழந்தைகள் நன்கு கலந்து பழகக் கூடிய வர்கள், ஏனெனில் தம் குறும்புகளில் யாரையெல்லாம் ஈடுபடுத்த முடியுமோ அவர்களுடன் கலந்து பழகும் போது தான் குறும்புகள் பிறக்கின்றன.

குறும்புக்காரக் குழந்தைகள் செயல்முனைப்பான கற் பனையாளர்கள், இவர்கள் சுற்றியுள்ளவற்றை சுயமாக அறியவும் மாற்றியமைக்கவும் விழைகின்றனர்.

குழந்தைகளின் குறும்புகள்—வாழ்க்கையின் மீது இவர் களுக்குள்ள நேயத்தின் வெளிப்பாடு, மகிழ்ச்சியின் பாலுள்ள நாட்டம், இவர்களுடைய மூளைத் திறமைகள் மற்றும் உடல் பலத்தின் இணைப்பு.

குறும்புக்காரக் குழந்தைகள் உண்மையான குழந்தை கள், இவர்கள் ஆசிரியர்களின் சிந்தனை, ஆசிரியரியலின் ஆராய்ச்சிப் பொருள்.

குறும்புக்காரர்களைத் தண்டிக்கலாம், ஆனால் ஊக்கு விக்க வேண்டியதும் அவசியம்.

எனவேதான் குறும்புக்காரர்களை நான் விரும்புகிறேன். இவர்கள் என்னுடைய ஆசிரியர் திறமையை இடையறாது வளர்க்கின்றனர், சுய வளர்ச்சிக்கு வழிகோலுகின்றனர்.

பள்ளி இடைவேளைகளின் போது வகுப்பறையிலோ, பள்ளி இடைவழிகளிலோ இக்குறும்புக்காரச் சிறுவர்கள், இந்த செயல்முனைப்பான கற்பனையாளர்கள் என்னதான் செய்ய வேண்டும்? சுவரில் தொங்கும் சுவர் பத்திரிகைகளைப் படிக்க வேண்டுமா? அல்லது இடைவழிகளில் நடந்து கோஷங் களையும் சுவரொட்டிகளையும் அறிவிப்புப் பலகைகளையும் காட்சிப் பெட்டிகளையும் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது பிரபல எழுத்தாளர் கள், விஞ்ஞானிகளின் படங்களை முடிவற்றபடி பார்த்து அவர்களைப் போல் ஆக வேண்டும் என்று கனவு காண வேண்டுமா? இப்படிப்பட்ட வளர்ப்பு முறை குழந்தைக்கு ஒத்து வராது; உணர்வு பூர்வமாக கட்டுப்பாடாக இருக்க வேண்டியதன் அவசியத்தை குழந்தை புரிந்து கொள்வதே கடினம்.

குறும்புத்தனம் என்பது குழந்தைகளிடம் உள்ள ஒரு நல்ல குணமாகும். இதை சரிவர அணுகிப் பயன்படுத்த வேண்டும். கீழ்க்காணும் முடிவிற்கு நான் எப்போதோ வந்து விட்டேன்:

> குழந்தை ஒழுக்கம் என்பது குறும்புகளை மாற்றியமைப்பதில்தான் உள்ளதே தவிர இவற்றை அடக்கி ஒடுக்குவதில் அடங்கியிருக்கவில்லை. நமது பயிற்சி முறையின் மூலம் அவர்களின் உள்ளே புகுத்த முடியாததைச் செய்யும்படி அவர்களைக் கோர வேண்டாம்.

குழந்தைகளின் குறும்புகள் அடக்கி ஒடுக்கப்படாமல் மாற்றியமைக்கப்பட என்ன செய்ய வேண்டும்? அதுவும் குறிப்பாக இடைவேளைகளின் போது இதை எப்படிச் செய்வது? ஏனெனில் இடைவேளைகளின் போதுதான் உட்சக்திகள் அடக்க இயலாதவாறு பொங்குகின்றன, இவற்றின் சுதந்திரமான உந்து சக்திகளுக்கு குழந்தைகள் ஆளாகுகின்றனர். இவ்வாறாக, பள்ளி இடைவேளைகள் மற்றும் பள்ளிக் கட்டுப்பாடு சம்பந்தமான சிக்கலான ஆசிரியரியல் பிரச்சினை எனக்குத் தோன்றுகிறது. இப்பிரச்சினையை நான் தீர்க்கவில்லை, அனேகமாக இதைத் தீர்க்கவும் முடியாது. என்றாலும் ஒரு சில சக ஆசிரியர்களை விட சற்றே அதிகமாக நான் நிம்மதியாக இருக்க முடியும். ஏனெனில் என் சிறுவர் சிறுமியர் எதைக் கண்டிப்பாகச் செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

இலிக்கோ, தேன்கோ, மாயா ஆகிய மூவரையும் வார்த்தை அட்டைவில்லைகளை எண்ணுவதற்காக அறையின் ஒரு மூலைக்கு அனுப்பினேன்.

போன்தோ பையிலிருந்து ஒரு பெரிய ஆப்பிளை எடுத்து அதைக் கடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான்.

ருசிக்கோ தன் ‘‘சான்ட்விச்சை’’ சாப்பிடுவதில் ஈடுபட்டிருக்கிறாள்.

ஒரு சில சிறுமியர் மேற்கோட்டுகளை மாட்டும் இடத்தில் ஸ்கிப்பிங் கயிறுகளைக் கண்டுபிடித்தனர். இடைவழியில் அவர்கள் குதித்து விளையாடும் லயமும் கணீரென்ற சிரிப்பும் என் காதுகளை எட்டுகின்றன.

இடைவழியிலுள்ள சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் சிரிப்புப் படங்கள் ஒரு சிலரின் மகிழ்ச்சிகரமான மனநிலையை அதிகப்படுத்துகின்றன.

வகுப்பறையில் இரண்டு மீட்டர் நீளமுடைய ஒரு பெரிய, கெட்டியான வெற்றுத் தாள் தொங்குகிறது. இதைச் சுற்றி

மரச்சட்டம் உள்ளதால் இது ஒரு படத்தைப் போல் உள்ளது. ''விருப்பப்பட்டதை வரை'' என்று ஒரு அறிவிப்பு அதன் மேல் உள்ளது. அருகே வண்ணப் பென்சில்கள் இருக் கின்றன. 4—5 பேர் ஏற்கெனவே அதில் தம் கைவண்ணங் களைக் காட்டிக் கொண்டிருப்பார்கள் என்று நம்பு கிறேன்.

குறுகலான நீண்ட கரும்பலகையும் அருகே வண்ண சாக் பீஸ்களும் துண்டும் உள்ளன. அனேகமாக ஒரு சிலர் இந் நேரம் தம் கரங்களையும் முகங்களையும் அழுக்குப்படுத்தி யிருப்பார்கள்.

வெவ்வேறு வார்த்தைகள், பழமொழிகள், பாடல் வாச கங்கள், விடுகதைகள், எண்கள் முதலியன பெரும் எழுத்துக் களில் எழுதப்பட்ட அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன. குழந்தைகளில் ஒரு பகுதியினர் கண்டிப்பாக இவற்றைப் படிக்க முயலுவார்கள்.

குழந்தைகள் பார்த்து, படித்து, வரைவதற்கு ஏற்ற வாறு இவையெல்லாம் அவர்களுக்கு எட்டக் கூடிய உயரங் களிலேயே மாட்டப்பட்டுள்ளன.

நான்கு சிறு மேசைகளில் (இவற்றைச் சுற்றி சிறு நாற் காலிகள் போடப்பட்டுள்ளன) வண்ணப் படங்களுடன் கூடிய நூல்கள், குழந்தைகளுக்கான சஞ்சிகைகள், கணித விளையாட்டு, சிறு விளையாட்டுக் கட்டுமானப் பொருட் கள், சொக்கட்டான், சதுரங்கம் முதலியன வைக்கப்பட்டுள் ளன. இவை அனைத்தும் பயன்படுத்தப்படுகின்றன.

சில நாட்களுக்குப் பின் வகுப்பறையில் வில்லும் அம்பும் இருக்கும். அப்போது என் பங்கேற்போடு இதில் போட்டி நடக்கும்.

இடைவழியில் சுவர் ஓரமாக ஒரு செங்குத்தான ஏணி வைத்து, தரையில் மெத்தென்ற விளையாட்டு மெத்தையை விரிக்க எண்ணியுள்ளேன். குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா?

ஒரு நாள் நானே நிச்சயமாகக் குழந்தைகளுக்கு குழாய் களைக் கொண்டு வந்து தருவேன். அப்போது ஒருவரை யொருவர் பரஸ்பரம் சுட்டுக்கொள்வோம். ஆனால் கசங்கிய காகிதத் துண்டுகளுக்குப் பதில் சுத்தமான ''குண்டுகளைப்'' பயன்படுத்துவோம்.

இவையனைத்தையும் நேரத்திற்குத் தக்கபடி, ஒவ்வொரு

வகுப்பிலும் குழந்தைகள் வளருவதைப் பொறுத்து, இவர்களின் குறும்புகள் மாறுவதைப் பொறுத்து நான் மாற்றுவேன். எனது கற்பனைத் திறன் மற்றும் குறும்பு இதில் பெரும் பங்காற்றும். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை, ஏனெனில் தன் குழந்தைகளின் குறும்புகளை மாற்றியமைக்கும் முறையை ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டுமெனில் அவருக்கே குறும்பு செய்யத் தெரிந்திருக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது.

> குழந்தைகள் பெரியவர்களாக உதவ வேண்டும் என்றால் அவர்களில் தன்னைப் பார்க்க வேண்டும்; அவர்களின் மூலம் தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்ள தனது குழந்தைப் பருவத்தை மீண்டும் அவர்களின் உருவத்தில் காண வேண்டும்; என்றென்றும் மனிதாபிமானம் மிக்க ஆசிரியராக இருக்க வேண்டுமெனில் குழந்தையோரு குழந்தையாக வாழ வேண்டும்.

குழந்தைகள் மாற்றத்தை நாடும் ஆக்கபூர்வமான கற்பனையாளர்கள், சுறுசுறுப்பானவர்கள். எனவே, இவர்களுக்கு ஒரு தனிப்பட்ட சூழலை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இச்சூழல் இவர்களை அச்சுறுத்தக் கூடாது, விளைவுகளை நினைவுபடுத்தக் கூடாது, அறிவுரைகளைக் கூறக் கூடாது, மாறாக இது இவர்களின் நடவடிக்கைகளை வழி காட்டி நடத்த வேண்டும்.

கரும்பலகையில் நான் கணிதப் பாடத்திற்கான கணக்குகளை எழுதுகிறேன். ஒரு சில குழந்தைகள் என்னைச் சுற்றிக் கொண்டு நான் என்ன செய்கிறேன் என்று ஆவலோடு கவனிக்கின்றனர்.

''மாமா, நீங்கள் என்ன எழுதுகின்றீர்கள்?''

''அவர் மாமா இல்லை, ஆசிரியர்...''

''ஏன் வண்ண சாக்பீஸ்களால் எழுதுகின்றீர்கள்?''

''நான் ஏன் சிரித்தேன் என்று சொல்லட்டுமா?''

கோத்தே: ''நான் சிறுவனாக இருந்த போது...''

ஏக்கா: ''நீ இப்போதும் சிறுவன்தான்...''

கோத்தே: ''பொறு... நான் மிகவும் சிறுவனாக இருந்த போது மேசை விரிப்பைப் பிடித்திழுத்து அறை வழியே இழுத்துச் சென்றேன், மேசை மீது பல பொருட்கள் இருந்ததால் எல்லாம் தரையில் விழுந்தன...''

நாத்தோ: ‘‘இதில் சிரிக்க என்ன உள்ளது...’’

தாம்ரிக்கோ: ‘‘இது முட்டாள்தனமானது...’’

கோத்தே: ‘‘ஏன், நான் என்ன செய்கிறேன் என்றுதான் எனக்குத் தெரியாதே!’’

நாத்தோ: ‘‘அடி வாங்கியிருந்தால் அப்போது தெரிந்திருக்கும்...’’

நீக்கோ: ‘‘நான் சிறுவனாக இருந்த போது என்ன நடந்தது தெரியுமா? என்னை ஒரு முறை வீட்டில் தனியே விட்டுச் சென்றார்கள். அப்போது, யார் வந்து தட்டினாலும் கதவைத் திறக்க வேண்டாம் என்றார்கள். சிறிது நேரம் கழித்து யாரோ கதவைத் தட்டினார்கள். நான் மிகவும் பயந்து, ‘உதவி, உதவி!’ என்று கத்தத் துவங்கினேன். கதவைத் தட்டும் சத்தம் அதிகமாகியது, நானோ ‘உதவி!’ என்று இன்னமும் பலமாகக் கத்தினேன். பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடி வந்து, ‘பயப்படாதே, கதவைத் திற, உனது சகோதரி பள்ளியிலிருந்து வந்திருக்கிறாள்!..’ என்றனர். பின்னர் நான் விழுந்து விழுந்து சிரித்தேன்.’’

நான் சிரிக்கிறேன், சுற்றியிருந்த குழந்தைகளும் சிரிக்கின்றனர்: ‘‘இது உண்மையிலேயே சிரிப்பானது!’’

தாத்தோ: ‘‘எனக்கு இரண்டு வயதாயிருந்த போது என் அம்மா என்னை நர்சரிப் பள்ளியில் சேர்க்க விரும்பினாள். எனக்கு அங்கு செல்ல விருப்பமில்லை, எனவே, ஒளிந்து கொள்ள ஓடிய நான் படிக்கட்டில் தலைகீழாக விழுந்தேன்...’’

கியோர்கி: ‘‘நான் சிறுவனாக இருந்த போது, என்னை என் அப்பா நர்சரிப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் விளையாடினோம், சண்டை போட்டுக் கொண்டோம், நான் அலமாரியில் ஒளிந்து கொண்டேன்.’’

கோச்சா: ‘‘நீ கோழை, எனவேதான் ஒளிந்து கொண்டாய்.’’

எலேனா: ‘‘நான் சிறுமியாக இருந்த போது...’’

இராக்ளி: ‘‘நான் சிறுவனாக இருந்த போது...’’

குழந்தைகள் ஒருவர் பேசுவதில் ஒருவர் குறுக்கிடுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ‘‘நான் சிறுவனாக (சிறுமியாக) இருந்த போது’’ என்று துவங்குவதை அப்போதுதான் நான் கவனித்தேன். அப்படியென்றால் அவர்கள்

இப்போது தம்மைச் சிறுவர் சிறுமியராகச் கருதவில்லை. ஏனெனில் அவர்கள்தான் பள்ளிக்கு வந்து விட்டார்களே. ஒருவேளை, பெரியவர்களாகி விட்ட இந்த உணர்வை அவர் களிடம் நான் உறுதிப்படுத்த வேண்டுமோ!

விரைவில் அடுத்த பாடவேளை துவங்கும் மணி அடிக் கும். நான் ஏற்படுத்திய சூழல் இடை வேளையில் எப்படி இயங்குகிறது என்று பார்க்க வேண்டும். என்ன நடக்கிறது? இன்று தாமாகவே மேற்பார்வையாளர்களாக இருக்கும் பெற்றோர்கள் சுவரில் தொங்கும் தாளில் குழந்தைகள் வரைவதைத் தடை செய்கின்றனர், சிரிப்புப் படங்களைத் தொட விடாமல் தடுக்கின்றனர், குழந்தைகளிடமிருந்து விளையாட்டுச் சாமானைப் பிடுங்குகின்றனர். குழந்தை களை அடக்கும் குடும்ப அனுபவம் பள்ளி இடைவழியில் புகுந்து, குழந்தைகளின் குறும்புகளை மாற்றியமைக்கும் என் நோக்கங்களுக்குக் குறுக்காக நிற்கிறது. ''குழந்தை வளர்ப்பு, பெற்றோர் வளர்ப்பிலிருந்து துவங்க வேண்டும்'' என்று எப்போதோ ஒரு முறை ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூறியது என் நினைவிற்கு வருகிறது. இன்றே முதல் பெற் றோர் கூட்டத்தை நடத்துவது என்ற முடிவிற்கு வருகிறேன். முதல் இடைவேளையைக் குலைக்க பெற்றோர்கள் செய்த முயற்சி பலிக்கவேயில்லை.

நான்காண்டு காலக் கல்வியின் போது மொத்த இடை வேளை நேரம் 166,500 நிமிடங்கள். இந்த நேரத்தை வீணாக்காமல் நன்கு பயன்படுத்த வேண்டும், ஏனெனில் இது ஆசிரியர் தன் மாணவர்களுடன் நன்கு கலந்து பழகும் 175 நாட்களுக்குச் சமமாகும்.

இனிய மணியோசை கேட்கிறது.

''குழந்தைகளே, வகுப்பறையினுள் வாருங்கள். சிறு வர்களே, நீங்கள் ஆண் பிள்ளைகள் என்பது நினைவில் இருக்கட்டும்!''

### ''நம்மில் யார் சரி, யார் தவறு?''

அனேகமாக எல்லாக் குழந்தைகளுக்கும் பத்து வரை அல்லது இருபது வரை, ஏன் நூறு வரை கூட எண்ணத் தெரிந் திருக்கும். என் அனுபவத்திலிருந்து இது எனக்குத் தெரி

யும். இவர்களில் ஒவ்வொருவரும் ''ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு—ஐந்து'' எனும் ''பாடலை'' தங்கு தடையின்றி சரளமாகச் சொல்வதை சரிபார்க்க வேண்டுமா என்ன? இதை இன்று செய்ய வேண்டிய அவசியமே இல்லை, ஏனெனில் குழந்தைகளுக்கு எண்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்களுக்குப் பழக்கமில்லாதவற்றிலிருந்து துவங்குவது நல்லது. இது அவர்கள் ஏற்கெனவே அறிந்தவற்றைப் பயன்படுத்துவதாயும், ''ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு—ஐந்து'' எனும் மனப்பாடப் ''பாட்டிற்கு'' பொருளைத் தருவதாயும் இருக்கும்...

ஆனால், முதலில், நமது தாய் மொழிப் பாடவேளையில் அட்டைப்பெட்டியில் எவ்வளவு அட்டைவில்லைகள் (சொற்கள்) சேர்ந்தன என்பதைப் பார்க்க வேண்டும். இலிக்கோ அட்டைப்பெட்டியை எடுத்து வர அவன் பின் தேன்கோவும் மாயாவும் வருகிறார்கள்.

''ஏராளமாக உள்ளன!'' என்கிறாள் மாயா.

''நூறுக்கும் மேலே!'' என்று விளக்கினான் தேன்கோ.

''பார்த்தீர்களா, இன்று நாம் எவ்வளவு வார்த்தைகளைச் சேகரித்துள்ளோம்! நாளை நாம் இன்னமும் அதிகமாகச் சேர்க்க வேண்டும்'' என்று நான் குழந்தைகளைப் பார்த்துக் கூறுகிறேன். ''வார்த்தை அட்டைவில்லைகளை எண்ண உதவியதற்கு உங்களுக்கு மிக்க நன்றி.''

''உங்களுக்கு எதற்கு இவ்வளவு நிறைய சொற்கள்?'' என்று நாத்தோ கேட்கிறான்.

எனக்கு வேண்டும்!

''நான் இதை அடுத்த முறை விளக்குவேன்!'' என்று நான் நாத்தோவிடம் கூறுகிறேன். ''இப்போது கணிதப் பாடத்தைத் துவக்குவோம்.''

சாதாரணமாக முதல் கணித வகுப்பில், குழந்தைகள் கூட்ட, கழிக்க, பெருக்க, வகுக்க கற்றுக் கொள்ளத் துவங்குவதாக விளக்குவார்கள். இது குழந்தைகளுக்குப் புரியக் கூடிய ஒரு விளக்கம் என்று கருதப்படுகிறது. ஒருவேளை உண்மையிலேயே இது சரியாக இருக்கலாம். ஆம், உண்மையிலேயே, ஐந்து ஆப்பிள்களிலிருந்து மூன்று ஆப்பிள்களை எப்படிக் கழித்து மீதியிருப்பதை அறிவது; அல்லது மூன்று கடலைகளுடன் ஆறு கடலைகளை எப்படிச் சேர்ப்பது, பத்து பேரிக்காய்களை இருவருக்கு எப்படிப் பகிர்ந்தளிப்பது

என்றெல்லாம் கூறினால் குழந்தைகளுக்கு நன்கு விளங்கும். ஆனால் கூட்டுவதும் கழிப்பதும், பெருக்குவதும் வகுப்பதும் மட்டுமே கணிதத்தின் சாரம் இல்லை அல்லவா!

முறையியல் ரீதியாக நான் தவறிழைத்தாலும் நான் செய்வது இப்படித்தான்.


''குழந்தைகளே, கணித விஞ்ஞானம் என்றால் என்ன தெரியுமா?''

**தாம்ரிக்கோ:** ''அதாவது, நூறு வரை எண்ணுவது...''

**எலேனா:** ''நூறு வரை எண்ணத் தெரிய வேண்டும், இது தவிர கூட்டத் தெரிய வேண்டும்... எனக்கு கூட்டத் தெரியும்... ஐந்தும் ஐந்தும் பத்து...''

**வாஹ்தாங்:** ''எனக்கும் கூட்டவும் கழிக்கவும் தெரியும்... அப்பா சொல்லித் தந்தார்...''

நான் கரும்பலகையை அணுகி, திரையை விலக்குகிறேன். அதில் நியூட்டன் விதியும், வழிச் சார்பும் வண்ண சாக்பீஸ்களால் எழுதப்பட்டிருந்தன, டெக்கார்ட்டிசின் கூற்றுத் தொகுதி சார்பலனோடு வரையப்பட்டிருந்தது.




**சாஷா:** ''என்ன இது? எவ்வளவு அற்புதமான எழுத்துக்கள்!''

பலரின் கண்கள் அகல விரிந்தன, கரும்பலகையில்

உள்ளதை நன்கு பார்ப்பதற்காகப் பலர் தம் இடங்களை விட்டு எழுந்தனர்.

''இது உண்மையான கணிதம், அளவின உறவுகள் மற்றும் இடஞ்சார்ந்த வடிவங்களைப் பற்றிய விஞ்ஞானம்.''

''எவ்வளவு அழகாயுள்ளது!'' என்று கரும்பலகையிலிருந்து கண்களை அகற்றாதபடி லேலா ஆச்சரியத்துடன் கூறுகிறாள்.

''ஏனெனில் கணிதமே அழகானது, இதுதான் விஞ்ஞானங்களிலேயே ராணி போன்றது என்கின்றனர் அறிஞர்கள். இந்தச் சூத்திரங்கள் உங்களுக்குப் பிடித்துள்ளனவா?''

கணிதத்தைப் பற்றிய இவ்விளக்கம் குழந்தைகளுக்குப் புரியுமா? நான் கூறியதிலும் காட்டியதிலும் பல விஷயங்கள் அவர்களுக்கு நிச்சயமாகப் புரியவில்லை. ஆனாலும் அவர்களுக்கு எவ்வளவு சுவாரசியமாக இருந்தது தெரியுமா!

''கணிதம் உங்களுக்குப் பிடிக்கின்றதா?''

''பிடிக்கும்!'' என்று உற்சாகமாக, ஒரே குரலில் பதில் வருகிறது.

ஏக்கா: ''இதை எங்களுக்குச் சொல்லித் தருவீர்களா?'' (சூத்திரங்களைக் காட்டுகிறாள்.)

''நீங்கள் இத்தகைய சூத்திரங்களைப் புரிந்து கொள்ளத் துவங்க நான் உங்களுக்குப் பயிற்சியளிக்கட்டுமா?''

மீண்டும் உற்சாகமும் ஏகோபித்த ஆமோதிப்பும்: ''ஆமாம்!''

''சரி, ஆரம்பிப்போம்!.. நேராக உட்காருங்கள்!.. இந்த வடிவங்களைப் பாருங்கள், அவை எந்த வரிசையில் உள்ளன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

வடிவங்கள் வரையப்பட்டுள்ள சதுர அட்டைகளை நான் கரும்பலகையருகே வைக்கிறேன்:



''ஞாபகம் வைத்துக் கொண்டீர்களா?.. தலையைத் தொங்கப் போடுங்கள்... கண்களை மூடுங்கள்... தலையைத் தூக்குங்கள்... வடிவங்களின் வரிசைக் கிரமத்தில் என்ன மாற்றம் என்று சொல்லுங்கள்.''

இப்போது இவற்றின் வரிசைக் கிரமம் பின்வருமாறு உள்ளது:

△ ○ • A □ /

கீகா கரும்பலகையை நோக்கி ஓடி வந்து உரக்கச் சொல்லுகிறான்:

''நீங்கள் இதை மாற்றி விட்டீர்கள்... இது இங்கே இருந்தது'' (புள்ளியைக் காட்டுகிறான்), ''A என்ற எழுத்து இங்கேயிருந்தது!'' அவன் அவற்றைப் பழைய இடத்தில் திரும்ப வைக்கிறான்.

''வடிவங்கள் எந்த வரிசைக் கிரமத்தில் உள்ளன என்று மீண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்... தலையைக் கீழே போட்டுக் கண்களை மூடிக் கொள்ளுங்கள்... எவற்றை நான் மாற்றி வைத்திருக்கிறேன் என்பதை என் காதில் மெதுவாகச் சொல்லுங்கள்... தலையை உயர்த்திப் பாருங்கள்.''

குழந்தைகளுடன் முணுமுணுவென்று பேசியபடியே நான் வகுப்பறையைச் சுற்றி வருகிறேன். ஒரு பதில் கூட சரியானதாக இல்லை. நான், வரிசைக் கிரமத்தில் ஒரு மாற்றத்தையும் செய்யவில்லை. என்ன விஷயம்? சிக்கலான கடமையா? இருக்க முடியாது. அனேகமாக, நான் இம்மாதிரி செய்ய முடியும் என்று எனது நம்பகமான குழந்தைகள் எண்ணியிருக்க மாட்டார்கள். எந்த மாற்றங்களைப் பற்றி நான் கூறினேனோ அவை இல்லாவிட்டாலும் கூட அவற்றை அவர்கள் தேடுகின்றனர்.

''இங்கு எதையும் நான் தொடவேயில்லை, எல்லாம் அதனதன் இடத்தில் இருந்தபடியே உள்ளன என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா, குழந்தைகளே?''


**மாயா:** ''எல்லாம் அப்படியே உள்ளன என்பதை நான் கவனித்தேன், ஆனால் நான் நம்பவில்லை...''


**தாத்தோ:** ''நீங்கள் கரும்பலகையருகே ஏதோ செய்ததைப் பார்த்தால், அங்கே எதையோ உண்மையிலேயே மாற்றி வைத்தீர்கள் என்று நினைத்தேன்...''

''அடுத்த முறை இன்னமும் கவனமாக இருங்கள். இப்போது அடுத்த பயிற்சிக்கு வருவோம்: எது அதிகம் என்று நீங்கள் சொல்ல வேண்டும்.''

குழந்தைகளின் முன் இரண்டு கரும்பலகைகள் உள்ளன. இடைவேளையின் போது இவற்றில் பலவற்றை வரைந்தேன்: எவ்வளவு, எது அதிகம், எதிலிருந்து, எங்கே அதிகம்

(வலப்புறம், இடப்புறம், கீழே, மேலே) என்னும் கேள்விகளைக் கேட்க இவை வசதியாக இருக்கும். இவை எல்லாம் முதல் கரும்பலகையில் உள்ளன. அடுத்த கரும்பலகை பூராவும் பல வடிவங்கள் உள்ளன.





''எது எவ்வளவு'' என்று குழந்தைகள் கண்டுபிடிக்க வேண்டும். முதல் கரும்பலகையின் மூன்றிலொரு பகுதியைத் திறந்து காட்டுகிறேன்.

''இங்கே எவ்வளவு வட்டங்கள் உள்ளன?''

''ஐந்து!'' என்கின்றனர் குழந்தைகள்.

''இதில் ஐந்தாவது எது என்று யாரால் சொல்ல முடியும்?'' பூஜ்ஜியம் முதல் ஒன்பது வரை எழுதப்பட்டுள்ள அட்டைகளைக் காட்டுகிறேன்.

''அதோ, நடுவில் உள்ள அட்டை'' என்று பலர் பதில் கூறுகின்றனர்.

''இதுவா?'' 3 என்று எழுதப்பட்டுள்ள அட்டையைக் காட்டுகிறேன்.

''இல்லை! அதற்கு அருகே உள்ளது!''

''ஓ, இதுவா!'' என்றபடியே 4 என்று எழுதப்பட்ட அட்டையை எடுக்கிறேன்.

''இல்லை!'' என்கிறாள் மாயா, ''நீங்கள் தவறான அட்டையைக் காட்டுகின்றீர்கள்... நான் காட்டட்டுமா?''

''தயவு செய்து, காட்டேன்!''

மாயா ஓடி வந்து 5 என்று எழுதப்பட்ட அட்டையை எடுக்கிறாள்.

''இது என்ன எண்?'' என்று குழந்தைகளிடம் காட்டி கேட்கிறேன்.

''ஐந்து!'' என்கின்றனர் அவர்கள்.

''நன்றி, மாயா.''

4 என்று எழுதப்பட்ட அட்டைக்குப் பதில் 5 என்று எழுதப்பட்ட அட்டையை நான் கரும்பலகையில் வைக்கிறேன். இப்போது எல்லாம் சரி.

முக்கோணங்கள் வரையப்பட்டுள்ள இடத்தைக் காட்டி, இதில் எவ்வளவு முக்கோணங்கள் உள்ளன என்று கேட்கிறேன்.

''நான்கு... நான்கு!'' என்று பலவாறாக பதில் வருகிறது.

''இதில் 4 எது? இதுவா?''—2 என்ற எண்ணைக் காட்டியபடி நான் கேட்கிறேன்.

''இல்லை... இது இரண்டு.''

''ஒருவேளை இதுவோ?''—6 என்ற எண்ணைக் காட்டுகிறேன்.

''இல்லை... அது ஆறு.''

''அப்படியானால் இதுவா?''

''இல்லை... இது ஏழு.''

குழந்தைகளுக்கு ஒரே உற்சாகம். 4 என்ற எண்ணை எனக்குக் காட்ட அவர்கள் துடிக்கின்றனர். மாக்தா ஓடி வந்து என் கையைப் பிடித்து 4 என்று எழுதப்பட்ட அட்டையைச் சுட்டிக் காட்டுகிறாள்.

''இதோ, இதுதான் நான்கு!''

''4 என்ற எண்ணைக் கண்டுபிடிக்க உதவியதற்கு நன்றி, மாக்தா. இதில் எவ்வளவு சதுரங்கள் உள்ளன?''

''ஆறு!'' என்று பதில் வருகிறது. 6 என்று எழுதப்பட்ட அட்டையை எடுத்து மற்ற எண்களின் அருகில் தலைகீழாக வைக்கிறேன். குழந்தைகள் உற்சாகமாக என்னைத் திருத்து கின்றனர்:

''இப்போது நீங்கள் வைத்துள்ளது ஒன்பது, அதைத் திருப்பி வைத்தால்தான் ஆறு வரும்.''

நான் அப்படியே செய்கிறேன்.

கோத்தே நேர்க்கோடுகளைப் பார்த்தபடியே, அங்கே ஏழு நேர்க்கோடுகள் உள்ளன என்று கத்துகிறான்.

''இங்கே ஏழு நேர்க்கோடுகள் உள்ளன என்கிறான் கோத்தே, எனக்கோ இவை எட்டு என்று தோன்றுகிறது. யார் சொல்வது சரி?''

''நீங்கள் சொல்வதுதான் சரி!'' என்று பலர் யோசிக் காமலேயே கத்துகின்றனர்.

''கோத்தேதான் சரி!'' என்று மிகச் சிலர் அவனைச் சுட்டிக்காட்டியபடி கூறுகின்றனர்.

மாயா கரும்பலகையை உற்றுக் கவனித்தபடி ஏதோ முணுமுணுக்கிறாள். அவள் இடத்திலிருந்து எழுந்து கூறு கிறாள்:

''நான் சொல்லட்டுமா?.. அங்கே ஏழு நேர்க்கோடுகள் தான் உள்ளனவே தவிர எட்டு அல்ல. எனவே,கோத்தேதான் சரியே தவிர நீங்கள் அல்ல.''

''மாயா சொல்வதை நீங்கள் எல்லோரும் ஒப்புக் கொள் கின்றீர்களா?''

எனது ஆதரவாளர்கள் குறைந்து விட்டனர். ஏல்லா எழுந்து விரைவாக கரும்பலகையை அணுகி நேர்க்கோடு களைத் தானாகவே எண்ணுகிறாள்.

''என்ன விஷயம், ஏல்லா?''

''ஏழு நேர்க்கோடுகள்தான் உள்ளனவே தவிர எட்டு அல்ல!'' என்று இப்படிச் சொல்லி விட்டு அவள் தன்னிடத் திற்கு ஓடுகிறாள்.

''வாருங்கள், எல்லோரும் சேர்ந்து எண்ணுவோம்.''

நான் சுட்டுக் குச்சியின் உதவியால் ஒவ்வொரு நேர்க் கோடாகக் காட்டுகிறேன்.

‘‘ஒன்று... இரண்டு... மூன்று!’’ என்று குழந்தைகள் ராகம் போட்டு எண்ணுகின்றனர்.

நான்காவது கோட்டைச் சுட்டிக் காட்டியதும் அதே இடத்தில் சற்று தாமதிக்கிறேன்.

‘‘நான்கு... ஐந்து!’’ எனது சுட்டுக் குச்சி அசையாததை யும் பொருட்படுத்தாமல் குழந்தைகள் தொடருகின்றனர். எல்லாம் குழம்பி விட்டது, இப்படித் தொடர முடியாது என்று மாயா எதிர்ப்புத் தெரிவிக்கின்றாள். மீண்டும் ஆரம்பிக் கின்றோம். இப்போது எனது சுட்டுக் குச்சி வேகமாக நகருகிறது. ‘‘ஏழு’’ என்று ராகமான பதில் வந்ததும் மீண் டும் அதே நேர்க்கோடுகளைச் சுட்டிக் காட்டுவதைத் தொடருகிறேன்.

‘‘எட்டு... ஒன்பது... பத்து... பதினொன்று!..’’

ஆனால் படிப்படியாகக் குரல்கள் குறைகின்றன, மீண் டும் எல்லாம் குழம்பி விட்டது என்று பலருக்கு இறுதியாகப் புரிகின்றது. நேர்க்கோடுகளை எண்ண உதவி புரியுமாறு மாயாவை நான் கரும்பலகைக்கு அழைக்கிறேன். மூன்றாவது முறை மாயாவின் உதவியோடு எல்லாம் வெற்றிகரமாக முடிகிறது.

‘‘நிச்சயமாக, ஏழு நேர்க்கோடுகள்தான் உள்ளனவே தவிர எட்டல்ல. கோத்தே சொன்னதுதான் சரி’’ என்று சொன்னபடியே நான் கரும்பலகையில் மற்ற எண்களின் அருகே 7 என்ற எண்ணையும் வைக்கிறேன். நான் தவறு செய்கிறேனா இல்லையா என்று குழந்தைகள் உன்னிப்பாக கவனிக்கின்றனர். ‘‘இது ஏழு அல்ல!’’ என்று கூட யாரோ கத்தினார்கள். ஆனால் மற்றவர்கள் இது ஏழுதான் என்று ஊர்ஜிதப்படுத்தினர்.

‘‘இப்போது இப்புள்ளிகளைப் பாருங்கள். எவ்வளவு புள்ளிகள் உள்ளன என்று எண்ணி என் காதில் சொல்லுங் கள்!’’

என்னைக் கூப்பிடுபவர்கள் அருகில் வேகமாகச் செல் கிறேன். கணித விஞ்ஞான துல்லியத்தின் எல்லா அடிப்படை களையும் மீறும் பதில்கள் என் காதில் ஒலிக்கின்றன: ‘‘ஐந்து... ஒன்பது... பத்து... இருபது... நூறு... ஆயிரம்... மில்லியன்!’’ தேயா, அங்கே ஏராளமான புள்ளி கள் உள்ளதால் அவற்றை எண்ணவே முடியாதெனக் கூறு கிறாள். நான் அவளுடைய பெஞ்ச் அருகே நிற்கிறேன்.

''தேயா, எல்லோருக்கும் கேட்கும்படி உரக்க பதில் சொல் பார்க்கலாம்: அங்கே எவ்வளவு புள்ளிகள்?''

''அங்கே ஏராளமான புள்ளிகள் உள்ளன, அவற்றை எண்ணுவதே கடினம்!''

''நன்றி, தேயா!.. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?..''

### குழந்தையுடைய மனதின் ஒவ்வொரு அம்சத்தையும் பேணிக்காத்தல்

திடீரென கதவு பெரும் சத்தத்துடன் திறக்கிறது. ''அதிகாரத் தோரணையை உடைய'' அம்மா, பகட்டான ஆடையணிந்த ஒரு சிறுவனை உள்ளுக்குள் தள்ளி, கையில் பையைத் திணித்து, என்னால் புரிந்து கொள்ள இயலா ஒரு அச்சுறுத்தல் குரலில் தொனிக்க என்னைப் பார்த்து சத்தமிட்டுச் சொல்கிறாள்:

''என் மகனுக்கு வகுப்பில் இடம் கண்டுபிடித்துத் தாருங்கள்! அமைச்சரகத்திலிருந்து உங்களுக்கு போன் வரும்!..''

அப்பெண்மணி அதே சத்தத்துடன் கதவை இழுத்து மூடி, சிறுவனை வகுப்பில் விட்டுச் செல்கிறாள். அவளுடைய காலணி ஓசையிலிருந்து, அவள் இடைவழியில் எப்படி விரைவாக நடந்து செல்கிறாள் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது.

நான் என்ன செய்வது?அந்தத் தாயின் பின் ஓடிச் சென்று, குழந்தையைத் திருப்பி அழைத்துச் சொல்லும்படி கட்டாயப்படுத்துவதா? சிறுவனை வகுப்பை விட்டு வெளியேற்றி இடைவழியில் நிறுத்துவதா? வகுப்பறையில் குழந்தைகளின் எண்ணிக்கை 39 ஆகும். இன்னுமொரு பெஞ்சு தேவைப்படும். அதை எங்கே போடுவது? விஷயம் இதில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. மிக முக்கியமானது என்னவெனில் வகுப்பிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் மிக அவசியமான எனது கவனம், அன்பு, அக்கறை, உதவியில் இன்னுமொரு பங்கு குறையும். உங்கள் குழந்தைக்கும் மற்ற குழந்தைகளுக்கும் நீங்கள் என்ன கேடிழைக்கின்றீர்கள் என்று தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள், தாயே. வகுப்பில் எவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் ஒரே விதமான பயனைத் தர வல்ல முறையியலோ, ஆசிரியரோ கிடையாது. அளவிற்கதிகமான பயணிகளையுடைய விமானத்திற்குப் பறக்க

அனுமதி தருவது பெரிதும் ஆபத்தானது. விமானிகளைக் கேளுங்கள், இப்படிப்பட்ட பயணம் எப்படிப்பட்டது என்று கூறுவார்கள். ''ஒருவர் அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால்தான் என்ன?'' இல்லை, இதற்குப் பெரும் முக்கியத்துவம் உண்டு. நன்றாகவோ மோசமாகவோ வளர்க்கப்பட்ட ஒருவர் இருப்பதற்கு எவ்வித விளைவும் இருக்காதா என்ன! ஆயிரக் கணக்கான எனது சக ஆசிரியர்களைப் போன்றே நானும் ஒவ்வொரு குழந்தையையும் தனிநபராக வளர்க்க பாடுபடுகிறேன். ஆறு வயதுக் குழந்தைகளைக் கொண்ட ஒரு வகுப்பு என்பது ஒரேமாதிரியான கல்வியறிவையும் வளர்ப்பையும் கொண்ட குழந்தைகளைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைப் பிரிவல்ல. இங்கே குழந்தையுடைய மனதின் ஒவ்வொரு பகுதியையும் சீராட்டி வளர்க்க வேண்டும், சிறு இதயங்களின் ஒவ்வொரு ஜீவ அணுவிலும் மனித நேயத்தை ஊட்ட வேண்டும். 17ஆம் நூற்றாண்டிலிருந்த யான் அமோஸ் கமேன்ஸ்கிதான் ஒரே சமயம் ஒரு வகுப்பில் 300 மாணவர்களுக்கு கல்வி போதிக்கலாம் என்று கருதினார். அந்த மேதையின் தவறுக்கு அவரை மன்னிப்போமாக. 21ஆம் நூற்றாண்டு பிறக்கப் போகும் இத்தருணத்தில் ''மொத்தமான'' வளர்ப்பு எனும் முறை சரிப் பட்டு வருமா?

ஒரே ஒரு குழந்தை வகுப்பில் ஆசிரியருடன் இருப்பதும் சரியல்ல. ஏனெனில் அக்குழந்தைக்கு விரைவிலேயே சலிப் பேற்படும்: அருகே தான் செய்யும் அதே காரியத்தில் ஈடுபடும் தன்னையொத்த சிறு குழந்தைகள் இல்லாவிடில் ஆர்வம் மிக்க விஷயங்கள் கூட அக்குழந்தைக்கு சலிப்பை ஏற்படுத்தும். ஒரு குழந்தை மற்ற குழந்தைகளுடன் கலந்து பழகிதான் வாழவும் அறியவும் விரும்புகிறான், அவன் அவர்கள் மத்தியில்தான் ஒரு தனிநபராக உருவெடுக்க வேண்டும். அவன் மட்டும் தனியாக இருக்கும் ஒரு வகுப்பிலோ, அளவிற்கு அதிகமான மாணவர்கள் உள்ள வகுப்பிலோ (இங்கே மாணவர்கள் எறும்புப் புற்றில் உள்ள எறும்புகளைப் போலிருப்பார்கள், ஒவ்வொருவருக்கும் அவரவர் காரியமே சரியாக இருக்கும், அவர்களுக்குப் பொது லட்சியங்கள், நோக்கங்கள், மகிழ்ச்சிகள், கவலைகளே இருக்காது) அவன் இவ்வாறு ஆக முடியாது. வகுப்பில் ஒரே ஒரு குழந்தை மட்டும் இருந்தால் அவன் யாருமேயில்லை, அவனுக்கு வாழ்வில்

சலிப்பேற்படும். அவன் 25 குழந்தைகளின் மத்தியிலிருந்தால் மற்றவர்களைப் போன்றே அவனும் மற்றவர்களுக்கு அவசியமானவன் ஆவான், அவன் ஒரு தனிநபராகத் திகழுவான், அவனுக்கு வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாயும் சுவாரசியமானதாயும் இருக்கும். அவன் வகுப்பில் 45 குழந்தைகள் இருந்தால், அவன் மற்றவர்களைப் போன்று வெறும் குழந்தை மட்டுமே, மற்றவர்களுக்கு இவனைப் பற்றி அதிகம் தெரியாது, இவனுக்கும் மற்றவர்களைப் பற்றி குறைவாகவே தெரியும், இவனுக்கு சலிப்பேற்படும், ஆர்வம் குறையும். இவனை மற்றவர்கள் அறிய, மதிக்க, இவன் தன்னாலியன்ற வரை தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் பல வழிகளை நாடுகிறான்.

இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நீங்கள் பார்த்திருக்கக் கூடும்: ஒரு குழந்தை சாதாரணமாக வீட்டில் பெரியவர்களுக்கு அதிகம் இடையூறு விளைவிக்காமல் இருக்கும், குழந்தையை எளிதாக சமாதானப்படுத்தலாம். ஆனால் 3—4 குழந்தைகள் ஒன்றுசேர்ந்தால் (மற்றவர்கள் விருந்தினர்களாக வந்தார்கள் என்று வைத்துக் கொள்வோமே), அவர்களை சரிவர கவனிக்காவிடில் ''பூகம்பமே'' ஏற்பட்டு விடும். 40—50 குழந்தைகள் ஒன்றுசேர்ந்தால் (இவர்கள் புத்திசாலியான, அமைதியான, சாந்தமான குழந்தைகளாக இருந்தாலும்) பெரும் ரகளையும் கூச்சலும் ஏற்படும், வீட்டில் ''மிகக் கடும் பூகம்பமே'' ஏற்படும். சாதாரண குழந்தைக் குறும்பு பன்முக நடவடிக்கையின் மிகச் சிறந்த வடிவங்களாக மாறாது, அதற்குப் பதில் முரட்டுத்தனம், கவனமின்மை, அவசியப் பொருட்களை வீணாக்குதல் போன்ற மோசமான நடவடிக்கைகளாக மாறும்.

இதோ போன்தோ தன் காலணிகளைக் கழற்றி மேசை மீது வைத்து ரசிக்கிறான். அவனை அமைதியாக அணுகி, பாடவேளையின் போது இவ்வாறு செய்யக் கூடாது என்று விளக்க வேண்டும்.

ருசிக்கோ திடீரென எழுந்து கதவை நோக்கிச் செல்கிறாள்.

''ருசிக்கோ, நீ எங்கே போகிறாய்?''

அவள் பதில் சொல்லவில்லை. கதவைத் திறந்து வெளியில் பார்க்கிறாள். அங்கு தன் தாய் இல்லாததைக் கண்ட

தும் அழத் துவங்குகிறாள். அவளை சமாதானப்படுத்த வேண்டும்.

அடடா, இச்சிறுமிக்கு என்ன ஆயிற்று?

''குழந்தைகளே, விரைவாகத் தலையைத் தொங்கப் போடுங்கள்! கண்களை மூடுங்கள்! உங்கள் வாழ்க்கையில் நடந்த சிரிப்பு நிகழ்ச்சிகளை நினைத்துப் பாருங்கள்!''

வகுப்பிலேயே மிகச் சிறிய அப்பெண்ணைக் கரங்களில் ஏந்தி வகுப்பறைக்கு வெளியே வருகிறேன்.

''தயவு செய்து உதவி செய்யுங்கள், சிறுமிக்கு உடல் நிலை சரியில்லை'' என்று வெளியில் நிற்கும் அம்மாமார் களைப் பார்த்துச் சொல்கிறேன்.

யாரோ ஒருவர் மருத்துவரைக் கூப்பிட ஓடுகிறார். இன்னொருவர் சிறு மேசை மீதுள்ள எல்லாவற்றையும் கீழே போட்டு விட்டு என் கைகளிலிருந்து சிறுமியை வாங்கி மேசை மீது படுக்க வைக்கிறார். மயக்கம் விரைவிலேயே தெளிகிறது. மருத்துவர் வந்து சிறுமியைத் தன்னறைக்குக் கூட்டிச் செல்கின்றார்.

இச்சிறுமியின் தாய் எங்கே? ஏன் அவள் இங்கு இல்லை? தன் மகளின் நோயைப் பற்றி அவள் ஏன் என்னை எச்சரிக்க வில்லை?

நடந்ததிலிருந்து இன்னமும் முற்றிலும் மீளாத ஒரு நிலையில் வகுப்பறைக்குள் திரும்புகிறேன். குழந்தைகள் அனைவரும் அதே போல் தலைகளைத் தொங்கப் போட்டு, கண்களை மூடியபடி உள்ளனர். அவர்கள் ஏற்கெனவே சிரித்துக் கொண்டிருந்தனர்.

''எங்கே, தலையைத் தூக்குங்கள்!''

அவர்கள் எதையாவது பார்த்தார்களா? இல்லை. ருசிக்கோ மட்டுமே எதையாவது பார்த்திருக்கக் கூடும், ஆனால் அவள் அழுதபடி அம்மாவைத் தேடிக் கொண்டிருந் ததால் எதையும் கவனிக்கவில்லை; இந்தப் புதுச் சிறுவன் ஒருவேளை பார்த்திருக்கலாம். நான் அவன் கரத்தைப் பற்றிக் குலுக்கி விட்டு நடு வரிசையில் மூன்றாவது இடத்தில் உட்கார வைக்கிறேன். ருசிக்கோவை சமாதானப்படுத்து கிறேன் (''வா, இருவரும் சேர்ந்து வகுப்பறையைச் சுற்றி வருவோம்''). போன்தோ விரைவாகக் காலணிகளை அணிய உதவுகிறேன்.

(''ஒரு குழந்தை அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால் என்ன ஆகிவிடும்!'')

''உங்களுடைய சிரிப்புச் சம்பவங்களை இடைவேளையின் போது சொல்லுங்கள்!'' என்றபடியே கரும்பலகையில் உள்ள இரண்டாம் பகுதியைத் திறக்கிறேன். ''இங்கே (வட்டங்களைச் சுட்டிக் காட்டுகிறேன்) எட்டு வட்டங்கள் உள்ளன என்று நினைக்கிறேன்!'' என்று ஏதோ இன்னொரு முறை சரிபார்ப்பது போல் பாவனை செய்கிறேன். ''நான் சொன்னது சரியா?''

## வளர்ச்சியில் ஒரு படி

''நான் சிறுமியாக இருந்த பொழுது ஒரு பெரிய நாய் என்னைத் துரத்தி வந்தது. நான் பயந்து போய் ஓடினேன், நாயும் என் பின்னாலேயே ஓடி வந்தது. 'காப்பாற்றுங்கள்!' என்று நான் கத்தினேன். திடீரென நான் தடுக்கி விழுந்தேன். நாய் என்னை நெருங்கி வந்தது, நான் பயத்தால் உறைந்து போனேன். நாயோ என் ஆடையை அன்போடு கவ்வி, நான் எழ உதவியது...''

''நான் என் நாயை பனிச்சறுக்கு வண்டியில் வைத்து சிறு குன்றிலிருந்து தள்ளினேன். நாய் குலைத்தது, பனிச்சறுக்கு வண்டி கவிழ்ந்து, நாய் தலைகீழாக வெண் பனியில் கீழே விழுந்தது. அது நாயா, வெண் பனிக் கட்டியா என்று கண்டுபிடிப்பதே கடினமாக இருந்தது...''

''ஒரு நாள் என் சகோதரன் குளியலறையில் குளித்தபடியே பாடிக் கொண்டிருந்தான். என்ன பாடுகிறான் என்று கவனித்தேன். குளியலறைக் கதவைத் திறந்தேன். அவன் உடல் முழுவதும் சோப்பு போடப்பட்ட நிலையில் கண்களை மூடியபடி தண்ணீரின் கீழ் நின்று தன் பாட்டைத் தொடர்ந்தான். நான் 'வள் வள்' என்று குலைத்துக் காட்டினேன். அவன் பயந்து நடுங்கி 'அம்மா!' என்று கத்தினான்.''

''நான் சிறுமியாக இருந்த போது என்னை சர்க்கசிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே கோமாளிகள் செய்ததைப் பார்த்து நான் மிகவும் சிரித்து ரசித்தேன்.''

''நான் சிறுமியாக இருந்த போது தம்பியோடு கூட நர்சரிப் பள்ளிக்குச் சென்று வந்தேன். ஒரு நாள் என் அம்மா எங்களை கூட்டிச் செல்ல வந்தார். மழை பெய்ததால்

நடைபாதையில் தண்ணீர் தேங்கியிருந்தது. 'காலைத் தூக்கு!' என்றார் அம்மா. நான் காலைத் தூக்கி நேரே அக்குட்டையில் விழுந்தேன்.''

''நான் சிறுவனாக இருந்த போது ஒரு சிறுவன் குளிர்ந்த நீரைக் குடிப்பதற்காக என்னை ஒரு நீரூற்றிற்கு இட்டுச் சென்றான். தண்ணீர் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது, தொண்டையே கட்டி விடும் போலிருந்தது. நான் பாறை மீது சற்று உயரே சென்று பார்த்தேன், அங்கு தண்ணீர் இன்னமும் குளிர்ச்சியாக இருந்தது, நான் குளிர் தாங்காது நேரடியாக என் தோழனின் தலை மீது விழ, அவன் குட்டையில் வீழ்ந்தான்.''

''ஒரு நாள் நானும் என் சகோதரனும் ஒரு மாவு மூட்டையை எடுத்து, மூட்டையைக் கிழித்து ஒருவர் மீது ஒருவர் மாவை வாரி இறைக்க ஆரம்பித்தோம்.''

''நீங்கள் எல்லாம் இப்போது வளர்ந்து பெரியவர்களாகி விட்டீர்கள். சிறு குழந்தைகளைப் பார்க்க விரும்புகின்றீர்களா!''

''எங்கே அவர்கள்?''

நர்சரிப் பள்ளியில் இருக்கின்றனர். நான் உங்களை அங்கு கூட்டிச் செல்லட்டுமா? நீங்கள் அவர்களை கவனித்துப் பாருங்கள். பின் அவர்கள் எப்படி நடந்து கொண்டனர் என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொள்வோம்!.. தயாரா!.. இரண்டு இரண்டு பேராக நில்லுங்கள்... இப்படித்தான்! ஆளுக்கொரு கொடியை எடுத்துக் கொள்ளுங்கள், எப்போதும் தெருவில் செல்லும் போது கொடிகளுடன்தான் செல்வோம். வாருங்கள் போவோம்! அம்மாமார்களே, தயவு செய்து எங்களுடன் கூட வாருங்கள்!..''

நர்சரிப் பள்ளி பள்ளிக்கு அருகே, வேலிக்கு அப்பால் உள்ளது. வேலியோரமாக செடிகளும் மரங்களும் நடப்பட்டுள்ளன. நர்சரிப் பள்ளியில் குழந்தைகள் இப்போது வெளியே விளையாடுகின்றனர். செடிகளுக்குப் பின்னால் ஒளிந்தபடி நின்று, அச்சிறுவர் சிறுமியர் என்ன செய்கின்றார்கள் என்று கவனிக்கும்படி என் வகுப்புக் குழந்தைகளிடம் சொல்கிறேன்.

குழந்தைகள் வேலியோரமாக அமருகின்றனர். சிலர் புல்தரையில் உட்காருகின்றனர், சிலர் முழங்காலிட்டுப் பார்க்கின்றனர். ஒவ்வொருவரும் செடிகளின் மத்தியில் சிறு ஓட்டையைக் கண்டுபிடித்து அதன் வழியாகப் பார்க்கின்ற

னர். நான், பதுங்கு குழியில் உள்ள கமான்டரைப் போல் ஒவ்வொரு சிறு கூட்டத்தையும் அணுகி, விவரங்களைச் சேகரிக்கிறேன், அவர்களோடு சேர்ந்து கவனிக்கிறேன்...

சிறு குழந்தைகளின் குறும்புகளையும் விளையாட்டுகளை யும் பார்த்ததும் என் வகுப்பினருக்கு சிரிப்பு தாளவில்லை. அவர்கள் தம்மைப் பெரியவர்களாகக் கருதினர். நான் அவர் களை ஒரு புறமாக கூட்டிச் சென்றதும் அவர்கள் சகல வித மான வெளிப்பாடுகளின் மூலமாயும், இந்தச் சிறுவர்கள் எவ்வளவு ஆனந்தமானவர்கள் என்று எனக்கும் பரஸ்பரம் ஒவ்வொருவருக்கும் கூறுகின்றனர்.

''ஒருவன் சிறு விளையாட்டுச் சம்மட்டியால் மணலை வாளியினுள் எடுத்துப் போட்டு, உடனேயே எல்லாவற்றை யும் கொட்டினான், என்ன முட்டாள்தனம்!''

''சிறுவன் சிறுமியைத் துரத்திக் கொண்டு சென்றான். அவள் கல்லையெடுத்து அவன் மீது வீச விரும்பினாள். ஆனால் நல்ல வேளையாக தாதி ஆசிரியை சரியான சமயத் தில் வந்தாள்...''

''அங்கே, ஒரு சிறு விளையாட்டு வீட்டினுள் ஐந்து சிறு வர்கள் நுழைந்தனர், பின்னர் மிகக் கஷ்டப்பட்டுதான் அவர் களால் வெளிவர முடிந்தது...''

''ஒரு சிறுமி ஒரு பொம்மையை வைத்துக் கொண்டு தானும் விளையாடவில்லை, மற்றவர்களுக்கும் விளையாடத் தரவில்லை. பொம்மையைப் பிடுங்க ஆரம்பித்ததில் தலை பிய்ந்து வந்தது...''

''ஒரு சிறுவன் கார் செல்வதைப் போல் ஓடிக் கொண்டே யிருந்தான், மிகச் சிரிப்பாக இருந்தது...''

''இரண்டு சிறுவர்கள் ஓடியதில் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டு கீழே விழுந்தனர். ஒருவன் எப்படிக் கத்தினான் தெரியுமா! 'அம்மா!' ''

''அவர்கள் எவ்வளவு முட்டாள்தனமானவர்கள்... நீங் கள் எங்களை மீண்டும் இங்கே கூட்டி வருவீர்களா?''

கண்டிப்பாகக் கூட்டி வருவேன். உங்களுக்குத்தான் பெரியவர்களாக இருக்க அவ்வளவு விருப்பமாக உள்ளதே! உங்களை விடச் சிறியவர்களாக உள்ள குழந்தைகளின் நட வடிக்கைகளை கவனிக்கும் போது, அவர்கள் மீது அக்கறை காட்டுகையில் நீங்கள் பெரியவர்களின் கடமையை உணரு கின்றீர்கள், இந்த உணர்வு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமா

கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நீங்கள் பெரியவர்களாவீர்கள்! ஆனால் இப்பாதை நீண்டது, பெரியது. நீங்கள் பெரியவர்களாக உதவும் பொருட்டு நானும் மற்ற ஆசிரியர்களும் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டி வரும்!..

## முட்டுக்கட்டை

முதல் நாளின் கடைசிப் பாடவேளை முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

குழந்தைகள் தாங்கள் விருப்பப்பட்டதை வரைந்த தாள்களைத் தருகின்றனர். தங்கள் பெயர், குடும்பப் பெயர், ஏதாவது தெரிந்த வார்த்தைகள், எழுத்துகள், எண்கள் முதலியவற்றையும் எழுதும்படி நான் கேட்டுக் கொண்டேன். இவற்றை எல்லாம் நான் பின்னால் பார்ப்பேன்.

முதல் பள்ளி நாளைப் பற்றிய கருத்துக்கள் இப்பொழுது கிடைத்த பின், நான் மிக முக்கியமானதைப் பற்றி அவர்களிடம் கேட்டேன். அவர்களுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது, அவர்களின் வாழ்க்கையில் முழு மாற்றம் ஏற்பட்டுள்ளது. ‘‘குழந்தைகளே, உங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் என்ன முக்கிய நிகழ்ச்சி நடந்துள்ளது’’ என்ற கேள்விக்கு அவர்கள் என்ன பதில் சொல்வார்கள்? ‘‘நாங்கள் பள்ளிக்குச் சென்றோம்!’’ ‘‘நாங்கள் பள்ளி மாணவர்களானோம்!’’ ‘‘நாங்கள் படிக்க ஆரம்பித்தோம்!’’ என்று அனேகமாக அவர்கள் பதில் சொல்வார்கள்.

நான் இந்தக் கேள்வியைப் பற்றி, சரியாகச் சொன்னால், குழந்தைகளிடமிருந்து எப்படிப்பட்ட பதில் கிடைத்தால், அதை ஆதாரமாகக் கொண்டு அவர்களை உலகை அறியும் போக்கினுள் மேன்மேலும் ஆழமாக இட்டுச் செல்ல முடியும் என்று நிறைய சிந்தித்தேன்.

முதல் கேள்விக்குப் பின், இன்னொரு முடிவான கேள்வியைக் கேட்பேன்: ‘‘பள்ளியில் எப்படிப்பட்ட விஷயங்கள் உங்களை எதிர்நோக்கியுள்ளன?’’

இந்த இரண்டு கேள்விகளும் ஒன்றோடொன்று தர்க்க ரீதியாகத் தொடர்புடையவை என்று எனக்குப் பட்டது. இரண்டாவது கேள்வியைக் கேட்பதற்கான அடித்தளத்தை முதல் கேள்வி தயார்படுத்துகிறது.

வரையப்பட்ட தாள்கள் ஒன்று திரட்டப்பட்டு விட்டன. குழந்தைகள் என் கண்களைப் பார்க்கின்றனர்.

''குழந்தைகளே, உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் இன்று என்ன முக்கிய சம்பவம் நடந்தது?''

பதில்கள் என்னை பிரமிக்க வைத்தன.

''எங்கள் வீட்டை இடித்தார்கள்!''

''எங்கள் வீட்டின் பின் கார் எரிந்தது!''

''எங்கள் தெருவில் விபத்து நடந்தது!''

''கார் ஒரு ஆள் மீது மோதியது!''

''என் அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லை!''

''எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் இறந்தார்!''

''கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன!''

''எங்கள் தண்ணீர்க் குழாய் உடைந்தது!''

''என் தாத்தாவை மருத்துவமனையில் சேர்த்தார் கள்!..''

என்ன இது?

குழந்தைகள் என்னை ஏமாற்றியிருக்க முடியாது.

நான் கேள்வியை சரியாகக் கேட்கவில்லையா என்ன? அல்லது, தன் வீட்டை இடித்ததாக முதலில் பதில் சொன்ன வனை அடுத்து கண்மூடித்தனமாக, ஆட்டு மந்தையைப் போல் நடந்து கொண்டார்களா? எரிந்தது, மோதியது, சாவு போன்ற சோக நிகழ்ச்சிகள் மட்டும் ஏன் எல்லோர் கவனத்திலும் முன் வந்தன?

நான் எதிர்பார்த்தபடி பதில்கள் வரவில்லை என்று தெரிந்ததுமே ஒருவேளை நான் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டுமோ? ''என்ன நீங்கள் இப்படிக் கேட்கின்றீர்கள்? நாங்களனைவரும் பள்ளிக்கு வந்தது அல்லவா எங்கள் வாழ்க் கையில் முக்கியமான நிகழ்ச்சி'' என்று யாராவது ஒருவன் எழுந்து சொல்லுவான் என்று நான் நம்பினேன்.

ஒ, கேள்வியே! நீ ஆசிரியருக்கு ஒரு முட்டுக்கட்டை!

''இவையெல்லாம் வருத்தம் தரத்தக்கவைதான், குழந் தைகளே. ஆனால் நான் இதைப் பற்றிக் கேட்கவில்லை. உங்கள் வாழ்க்கையில் என்ன முக்கியமான, மகிழ்ச்சிகரமான சம்பவம் நடந்தது? நன்றாக யோசித்துப் பாருங்கள்.''

குழந்தைகளுக்கோ யோசிக்கவே விருப்பமில்லை. அவர் கள் பதில் சொல்லத் தயார். நான் காத்துக் கொண்டிருப் பதைச் சொல்ல மாட்டார்களோ! அப்படியேதான் நடந்தது.

‘‘எங்களுக்குப் புது வீடு கிடைத்துள்ளது!’’

‘‘என்னை ஞாயிற்றுக்கிழமை சர்க்கசிற்குக் கூட்டிச் செல் வதாக அம்மா சொன்னாள்!’’

‘‘நாங்கள் பியானோ வாங்கினோம்!’’

‘‘நேற்று என் அப்பா வேலைப் பயணத்திலிருந்து திரும்பினார்!’’

‘‘கிராமத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்துள்ளனர்!’’

‘‘என் நாய் திரும்பி வந்தது!’’

‘‘என் தாத்தா நேற்று மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்தார்!’’

‘‘இன்று எனக்கு சைக்கிள் வாங்கித் தருவார்கள்!’’

‘‘என் அம்மாவின் தலையிலிருந்து கட்டைப் பிரித்து விட்டனர், காயம் தெரியவில்லை!’’

என்ன செய்வது! இவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகள் எனக்குத் தம் பாடத்தைச் சொல்லித் தந்தனர், நானும் சிலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம், குழந்தைகளுக்கு எது மகிழ்ச்சி தருகிறது, எது வருத்தம் தருகிறது என்று எனக்கு ஓரளவு தெரியும். ஆசிரியரின் கேள்விகளுக்கான குழந்தைகளுடைய பதில்களின் துல்லியம் விஷயத்தின் தர்க்கத்தை விட குழந்தையின் அனு பவத்தின் தர்க்கத்தை அதிகமாகச் சார்ந்துள்ளது என்ற ஒரு முக்கியமான முடிவிற்கு நான் வருகிறேன். தம் வாழ்க்கை யில் என்ன முக்கிய, மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடை பெற்றன என்று குழந்தைகள் தொடர்ந்து கூறிக் கொண்டே இருக்கையில் நான் என் குறிப்பேட்டில் ஒரு ‘‘முதுமொழியை’’ எழுதுகிறேன். இதை இனிமேல் பின்பற்றுவேன்:

> குழந்தைகளை நோக்கி ஆசிரியர் கேட்கும் கேள்வி என்பது முறையியலுக்கு மட்டுமின்றி ஆசிரியரியல் முழுவதற்குமே ஒரு ஜீவ அணுவாகும். இதை நுண் ணோக்கி ஆடியின் கீழ் பார்த்தால் அதில் கல்வி போதிக் கும் முழு நிகழ்ச்சிப் போக்கு மற்றும் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவு முறைகளின் தன்மை ஆகியவற்றின் போக்கு முழுவதையும் அறிந் துணரலாம்; இதில் ஆசிரியரையே கூட அறிந்துணர லாம், ஏனெனில் கேள்வி என்பது அவருடைய ஆசிரி யர் திறமையின் வெளிப்பாடாகும்.

''உங்களிடம் இவ்வளவு மகிழ்ச்சியான செய்திகள் உள்ளனவா! மிக்க நன்று! சரி, இப்போது நீங்கள் எந்த இடத்தில் இருக்கின்றீர்கள்?''

''பள்ளியில்.''

நல்ல, கூட்டிசையான பதில்! நன்றி, குழந்தைகளே!

''பள்ளியில் உங்களை என்ன விஷயங்கள் எதிர்நோக்கி யுள்ளன என்று சொல்லுங்களேன்.''

''சுவாரசியமான விஷயங்கள்!''

''பெரிய, மிகப் பெரிய விஷயங்கள்!''

''தயவு செய்து திரும்பச் சொல்லுங்கள்!''

''மிகப் பெரிய விஷயங்கள் எம்மை எதிர்நோக்கி யுள்ளன!''

எளிய, தெளிவான பதில்! இதே போன்ற உற்சாகத்துடனும் காரிய முனைப்புடனும் ஒரு சில ஆண்டுகட்கு முன் எனது ஆறு வயது மாணவர்களில் ஒருவன் கூறிய அதே வார்த்தைகளை நான் மீண்டும் கேட்டேன்...

நாங்கள் படிகளின் வழியே மாடியிலிருந்து கீழே இறங்கி வருகின்றோம். பெற்றோர்கள் வாயிலருகே எங்களுக்காகக் காத்திருக்கின்றனர்.

''நாளை குழந்தைகளை பைகள் இல்லாமல் கூட்டி வாருங்கள்!''

''புத்தகங்கள், மற்ற பொருட்கள் இல்லாமலா? வியப்பா யுள்ளது... என்ன இருந்தாலும் பள்ளி அல்லவா!..'' என்று அவர்கள் குழம்பினர்.

பெற்றோர்களின் ஆச்சரியக் குரல்களுக்கு நடுவே ஒரு சிறுவனின் உற்சாகமான குரல் மீண்டும் மீண்டும் கேட்கிறது:

''அம்மா, அம்மா! எவ்வளவு சுவாரசியமாக இருந்தது தெரியுமா! அம்மா, எவ்வளவு சுவாரசியமாக இருந்தது தெரியுமா!..''

## பெற்றோர் கூட்டம்

அன்புள்ள பெற்றோர்களே, வணக்கம்.

நமது முதல் கூட்டத்திற்கு உங்களில் பெரும்பாலோர் தாயும் தந்தையுமாகச் சேர்ந்து வந்துள்ளது குறித்து மகிழ்ச்சி. உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்ல ஆரம்பித் துள்ளது. இது ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி. என் மன

மார்ந்த நல்வாழ்த்துக்கள். இன்று முதல் உங்கள் குழந்தைகளின் வாழ்வில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டுள்ளது—கல்விதான் அவர்களுடைய நடவடிக்கையில் முக்கிய அம்சமாகும்.

''உங்கள் குழந்தை சமுதாயத்தில் நல்லவனாக விளங்குமாறு குழந்தையை வளர்க்க நீங்கள் விரும்புகின்றீர்களா?'' என்று நான் கேட்டால், அனேகமாக நீங்களனைவரும் ஒரே மனதாக ''ஆம், நிச்சயமாக!'' என்று கூறுவீர்கள். ஆனால், ஆசைப்படுவது ஒரு விஷயம், இவ்வாறு உண்மையாக வளர்ப்புப் பணியில் ஈடுபடுவது வேறு விஷயம்.

குடும்பத்திலும் பள்ளியிலும் குழந்தை வளர்ப்புத் தன்மைகள் ஒன்றிற்கொன்று எதிராக இருக்கக் கூடாது. குழந்தைகள் வளர்ப்பிலும் அவர்களுக்குக் கல்வி போதிப்பதிலும் பள்ளிதான் மையமாக விளங்குவதால், குடும்ப வளர்ப்பின் விஷயத்தில் குறிப்பிட்ட கோரிக்கைகளைப் பெற்றோர்கள் முன் வைக்க பள்ளிக்கு உரிமையுண்டு.

நம் சோவியத் நாட்டில் மனிதர்களுக்கு இடையிலான உறவுகள் உயர்வான மானுடக் கோட்பாடுகளின் அடிப்படையிலானவை. நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் பன்முக நடவடிக்கையும் நம் சமுதாய அமைப்பின் உண்மையான மனிதாபிமானத்தை உருக்கொண்டிருக்க வேண்டும், வளர்க்க வேண்டும், ஊர்ஜிதப்படுத்த வேண்டும். மனிதாபிமான அடிப்படைகள் தான் நமது வளர்ப்புப் பணியை வழி நடத்த வேண்டும்.

இது எளிதானதாக இருக்குமா?

இருக்காது.

ஏனெனில் இப்படிப்பட்ட வளர்ப்பு அனுபவம் நம்மிடையே அதிகமில்லை. குழந்தைகளின் பால் மனிதாபிமான உறவைக் கொள்ள வேண்டுமெனில், இப்படிப்பட்ட வளர்ப்பின் மாற்றியமைக்கும் சக்தியை நம்ப வேண்டும், ஒவ்வொரு குழந்தையின் எல்லையற்ற உள்ளாற்றல்களை நம்ப வேண்டும், ஒரு ஆசிரியருக்கே உரித்தான பெரும் பொறுமை வேண்டும், அவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும், குழந்தையின் மனதை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதாபிமான அடிப்படைகளில் வளர்ப்புக் கடமைகளை நிறைவேற்றுவது என்பது, குழந்தையை முரட்டுத்

தனமாக அடக்கி ஒடுக்குவதன் மூலம் இவற்றிலிருந்து தப்பு வதை விடப் பன்மடங்கு சிக்கலானது.

இக்கருத்தை அடையாளச் சிறப்போடு விளக்கும் ஒரு சம்பவத்தை இப்போது சொல்வேன்.

குழந்தைகளுக்கான பொருட்கள் விற்கும் ஒரு கடையில் ஒரு சிறுவன், தனக்கு பெரிய குதிரைப் பொம்மையை வாங்கித் தருமாறு தந்தையிடம் கேட்டான். மகனுடன் அன் பாக நடந்து கொள்ள வேண்டுமென முடிவு செய்த தந்தை தன் பைகளைத் துழாவினார். ''நான் உனக்கு அந்தச் சிறிய குதிரைப் பொம்மையை வாங்கித் தரட்டுமா?'' என்றார் தந்தை. ''சிறிய பொம்மை வேண்டாம், பெரிய குதிரைப் பொம்மைதான் வேண்டும்!'' தந்தை தொடர்ந்து தன் பைகளைத் துழாவினார். ''பார், இந்தச் சிறிய பொம்மை எவ்வளவு அழகாக உள்ளது!'' ''பார்க்க மாட்டேன்...பெரிய பொம்மை வாங்கித் தா!'' ''என்னிடம் போதுமான பண மில்லையே, நாளை வாங்கித் தரட்டுமா?'' விளக்கினார் தந்தை. ''நாளை வேண்டாம், இப்போதே வாங்கித் தா!'' சிறுவன் கத்தினான். தந்தைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்போது வெள்ளை மேலங்கி அணிந்த ஒரு வர் அன்பாகச் சிரித்தபடியே அங்கு வந்தார். ''நான் குழந்தை களைக் கவனித்து கொள்ளும் ஆசிரியர், இக்கடையில் வேலை செய்கிறேன். என்னுடன் உங்கள் பையனை இரண்டு நிமிடங்களுக்கு அனுப்புங்கள்.'' அவர் புன்சிரிப்புடன் சிறு வனைத் தன்னறைக்கு அழைத்துச் சென்றார். இரண்டு நிமிடங்கள் கழித்து அச்சிறுவன் அமைதியாக அறையி லிருந்து வெளியே வந்தான். அந்த ஆசிரியரோ அடிக்கடி கடைக்கு வரும்படி புன்சிரிப்போடு அழைப்பு விடுத்தார். ''நீ அந்த மாமாவுடன் போயிருந்த போது நான் கைப்பை யில் இன்னும் பணம் கண்டுபிடித்தேன். எனவே இப்போது பெரிய குதிரைப் பொம்மை வாங்கலாம்'' என்றார் தந்தை. ''வேண்டாம், அப்பா, எனக்குப் பெரிய பொம்மை தேவை யில்லை, சிறிய பொம்மையே வாங்கித் தா!'' என்றான் மகன். ''நீ பெரிய பொம்மை வேண்டுமென்று பெரிதும் ஆசைப்பட்டாயே!'' தந்தை ஆச்சரியப்பட்டார். ''எனக்கு பெரிய பொம்மை வேண்டாம், சிறியதையே வாங்கித் தா!'' என்று மகன் கோரினான். தந்தை சிறு குதிரைப் பொம்மையை வாங்கித் தந்தார், இருவரும் வீதிக்கு வந்த

னர். ''அந்த வெள்ளை மேலங்கி அணிந்திருந்த மாமா உன்னிடம் என்ன சொன்னார்?'' என்று அக்கடை ஆசிரியரின் இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காக மனிதாபிமான உணர்வு மிக்க தந்தை கேட்டார். அந்த மாமா அருகில் இருக்கின்றாரா என்று பயந்தபடியே சிறுவன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு பின் தன் தந்தையின் காதில் மெதுவாகச் சொன்னான்: '''நீ இப்போது அழுவதை நிறுத்தி, சிறிய பொம்மைக்கு ஒத்துக் கொள்ளாவிடில் உன்னை அடிக்கும் அடியில் கடையிலிருந்து பறந்து போவாய்' என்றார் அந்த மாமா''.

இங்கு பார்த்தீர்களா, குழந்தைகள் கடையின் ஆசிரியர் வளர்ப்புப் பிரச்சினை ஒன்றை மிக எளிதாகத் தீர்க்கிறார். மனிதாபிமான உணர்வு மிக்க தந்தையோ, வளர்ப்புப் பிரச்சினைகளை இதற்குகந்த வழிகளிலேயே எப்படித் தீர்ப்பது என்று இன்னமும் யோசித்து கொண்டிருக்கிறார். ஏனெனில் மனிதாபிமான வளர்ப்புதான் உண்மையான வளர்ப்பு முறையாகும்.

அந்தக் குழந்தைகள் கடையின் ஆசிரியரைப் போல் இருக்க விரும்புகின்றீர்களா?

விரும்ப மாட்டீர்களென எண்ணுகிறேன்.

மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்க்க விரும்புகின்றீர்களா?

இது உங்கள் முகங்களில் நன்கு தெரிவது குறித்து மகிழ்ச்சி.

சரி, மனிதாபிமான அடிப்படையிலான வளர்ப்பின் சாரம் என்ன?

குழந்தையை மாற்றியமைப்பதற்காக நமது வளர்ப்புக் கடமைகளுக்குக் குழந்தை இயல்பாக ஒத்துவருமாறு செய்ய வேண்டும், இந்த வளர்ப்புப் பணியில் குழந்தையையே நமது கூட்டாளியாக்கிக் கொள்ள வேண்டும்; குழந்தைக்கு ஞானத்தின் பால் விருப்பம் உண்டாகவும் சுயமான கல்வி, அறிதல் நடவடிக்கையின் மீது ஆர்வம் ஏற்படவும் உதவ வேண்டும்.

கட்டாயமான, அதிகாரத் தொனியிலான வளர்ப்பில் எவ்வித பிரச்சினையும் இல்லை. குழந்தையின் மீதான நிர்ப்பந்தத்தை அதிகப்படுத்தி, தன் கடமையைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தினாலே போதும். பல நுட்பமான கட்டாய, நிர்ப்பந்த வழிகள் வளர்ப்புப் பிரச்சினைகளை எளிதாக

அகற்றி விடுகின்றன. ஆனால் இப்படிப்பட்டதொரு சூழ்நிலை குழந்தை பன்முக ரீதியாக, முழுமையாக வளர்ச்சியடைய வழிகோலுவதில்லை, குழந்தையின் முழு மனவளர்ச்சிக்கு உதவுவதில்லை.

இப்பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்க எது நமக்கு இடையூறாக உள்ளது?

குழந்தையின் இயல்புதான் இடையூறாக உள்ளது!

குழந்தை—உணர்ச்சிகரமான ஒரு ஜீவன் இன்றைய மகிழ்ச்சி, திருப்தியில்தான் அவன் வாழ்கிறான். வளமான, உட்பொருள் மிக்க, பன்முக எதிர்கால சமூக வாழ்விற்கு அக்குழந்தையைத் தயார்படுத்த அக்குழந்தையின் இன்றைய வாழ்வை இதற்கு கீழ்ப்படுத்த நாம் விரும்புகிறோம். இந்த எதிர்கால சமூக வாழ்க்கை அக்குழந்தைக்கு உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வருமென நாம் நம்புகிறோம். வளர்ப்பவர், வளர்க்கப்படுபவரின் இப்போக்குகளுக்கு இடையிலான முரண்பாட்டை எப்படி அகற்றுவது?

கல்வி கற்பிப்பது என்பது ஒரு எளிய நிகழ்ச்சிப் போக்கல்ல. குழந்தையின் சக்தியையும் திறமைகளையும் வளர்க்கும் பொருட்டு இது கடினமானதாகத்தான் இருக்க வேண்டும். புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டு குழந்தை அஞ்சாவிட்டாலும் பல காரணங்களினால்—முக்கியமாக என் கருத்துப்படி, தன் கடமையைச் செய்யும்படி அக்குழந்தையை நிர்ப்பந்திப்பதன் காரணத்தால்—படிக்கும் ஆர்வம் மறைகிறது. குன்றாத வளமாகிய இக்கல்வி ஆர்வத்தை குழந்தையிடம் எப்படி ஊக்குவித்து வளர்ப்பது?

நம் முன் இரண்டு வழிகள் உள்ளன: ஆசிரியர்களின் சித்தத்திற்குக் கட்டுப்படுமாறு குழந்தையைக் கட்டாயப்படுத்தலாம், நிர்ப்பந்திக்கலாம் அல்லது சுயவளர்ப்பு, சுய கல்விப் பாதையில் அக்குழந்தை நடைபோட உதவலாம். இந்த இரண்டாவது பாதையைத் தேர்ந்தெடுக்குமாறு உங்களை அறைகூவி அழைக்கிறேன்.

குழந்தை வளர்ப்பில் நம் முயற்சிகள் ஒன்றிற்கொன்று முரண்படாமல் இருக்க நான் ஒரு சில சிபாரிசுகளை உங்கள் முன் வைக்கிறேன். இவற்றைக் கடைபிடித்தால் நன்றாயிருக்கும். இவற்றை உருவாக்கிய போது—நான் இவற்றை ‘‘முதுமொழிகள்’’ என்று நிபந்தனையோடு அழைக்கிறேன்—மூலச்

சிறப்புள்ள ஆசிரியரியல் பாரம்பரியம், கம்யூனிச சமுதாயத்தின் லட்சியங்கள், சிறந்த ஆசிரியர்களின் அனுபவங்கள், குழந்தை வளர்ப்பு சம்பந்தமான என் சொந்த நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டேன்.

இவற்றை முழுமையான வளர்ப்புக் கடப்பாடுகளாகக் கருத வேண்டாம். உங்கள் அனுபவம், நமது கூட்டு முயற்சிகளின் அனுபவம் ஆகியவை இவற்றில் பல திருத்தங்களைச் செய்யுமென நம்புகிறேன்.

நான் இச்சிபாரிசுகளை — ''முதுமொழிகளை'' — பல தாள்களில் அச்சிட்டுள்ளேன். தயவு செய்து, ஒவ்வொருவரும் ஒரு பிரதியை எடுத்துக் கொள்ளுங்கள், மௌனமாக படித்துப் பாருங்கள்.

ஒரு ஆசிரியரின் பத்து ''முதுமொழிகள்''

1. மனிதாபிமான உணர்வு மிக்க சமுதாயத்தில் மனிதாபிமான அடிப்படையில்தான் வளர்ப்புப் பணியும் நடக்க முடியும். இதன் முக்கியக் கோட்பாடு—குழந்தையை இந்த நிகழ்ச்சிப் போக்கில் ஈடுபடுத்த வேண்டும், இந்த வளர்ப்பில் குழந்தையே தானாக நம் உதவியாளனாகும்படி செய்ய வேண்டும்.

2. கலந்து பழகுவது என்பது மனித வாழ்க்கையின் சாரம். மனிதாபிமான வளர்ப்பின் முக்கிய முறை, அக்குழந்தையுடன் கலந்து பழகும் மகிழ்ச்சியை, கூட்டாக விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், கூட்டு உழைப்பு, விளையாட்டு, ஓய்வு ஆகியவற்றின் மகிழ்ச்சியை குழந்தைக்குத் தருவதாகும்.

3. அன்றாட வாழ்க்கை, பெரியவர்களின் உறவுகளின் தன்மை—இச்சூழலில்தான் எதிர்கால மனிதனின் மனநிலை உருவாகிறது. எனவே, நமது அன்றாட வாழ்க்கை, நமது பரஸ்பர உறவுகள், எந்த ஒரு லட்சியத்தை குழந்தையின் மனதில் புகுத்த முயலுகின்றோமோ அதற்கு இயன்ற அளவு ஏற்றதாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது மிக முக்கியமாகும். 80ஆம் ஆண்டுகளின் ஆசிரியர்கள் 21ஆம் நூற்றாண்டு மனிதர்களை நினைவிலிறுத்த வேண்டும்.

4. மனிதர்களின் மீதான நம்பிக்கையும், சொந்தக் கருத்துகளின் மீதான நம்பிக்கையும் மனிதர்கள் ஒருவருடன்

ஒருவர் முழுமையாகக் கலந்து பழகுவதற்கும் தனிநபரை மேன்மையாக்கவும் அடிப்படையாகும். எனவே, நம் மீதான—தன் ஆசிரியர்களின் மீதான—நம்பிக்கையை, தன் சக நண்பர்கள், மனிதர்கள் மீதான நம்பிக்கையை, தன் மீதான சுய நம்பிக்கையை குழந்தைகளிடம் ஊட்டி வளர்க்க வேண்டும்.

5. சோஷலிச சமுதாயம் என்பது சமமான, பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்டும் மனிதர்களின் சமுதாயமாகும். நம் வளர்க்கும் முறையில் ஒவ்வொரு குழந்தையின் மனநிலையின் மீதான மதிப்பு ஊடுருவி நிற்க வேண்டும், நண்பர்கள், உறவினர்கள், பொதுவாக மனிதர்களைப் பற்றிய அக்கறையை அவர்களிடம் ஊட்ட வேண்டும்.

6. எந்த ஒரு சமுதாயத்தில் மனிதன் தான் சக சமுதாய உறுப்பினர்களுக்குத் தேவை என்று உணருகிறானோ, எங்கே இவனை செயற்கையாக உயர்த்தாமலும் தாழ்த்தாமலும் இருக்கின்றார்களோ அங்குதான் தன் திறமைகள், சக்திகள் முழுவதையும் அவனால் வெளிப்படுத்தி வளர்க்க முடியும். தான் வாழும் சமுதாயத்தில் குழந்தை இப்படிப்பட்ட உணர்வுகளைத்தான் கொண்டிருக்க வேண்டும்.

7. குழந்தை உணர்ச்சிகரமான ஒரு ஜீவன், நம்மைப் புரிந்து கொள்வதே அவனுக்குக் கடினம். ஆசிரியர்களும் பெற்றோர்களுமாகிய நாம்தான் குழந்தையைப் புரிந்து கொண்டு அக்குழந்தையின் மனநிலைக்கேற்ப நம் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

8. வளர்ப்புப் பணி என்பது ஒரு மறைவான, நீண்ட நிகழ்ச்சிப் போக்கு. எனவே, எல்லாத் திட்டவட்டமான வளர்ப்புக் கடமைகளின் நிறைவேற்றத்திலும் நாம் அறிவுக் கூர்மை, தொடர்ச்சி, பொறுமை ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

9. கூருணர்வுத் திறம், இரக்கம், அன்பு, பாசம், மென்மை, திறந்த மனது, எப்போதும் உதவத் தயாராக இருப்பது, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய குணநலன்களை நாம் கொண்டிருக்க வேண்டும். இவற்றோடு கூட நம் பாலும் குழந்தைகளின் பாலும் கண்டிப்போடு நடந்து கொள்ள வேண்டும், வளரும் தலைமுறையின் முன் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும், தாயகத்தின் எதிர்காலத்தின் மீது அக்கறை காட்ட வேண்டும்.

10. தான்தோன்றித்தனம், அதிகாரம் செய்வது, கத்து வது, திட்டுவது, தன்மானத்தைப் புண்படுத்துவது, கிண்டல் செய்வது, முரட்டுத் தனமாக நடப்பது, அச்சுறுத்துவது, நிர்ப்பந்திப்பது போன்றவற்றைக் கண்டிப்பாக நாம் கைவிட வேண்டும். இவை மனிதாபிமான வளர்ப்பிற்கு முரணானவை.

இந்த "முதுமொழிகளை" நடைமுறையில் நிறை வேற்றத் தயாரான முறை எதுவும் நம்மிடமில்லை. எனவே, நாம் ஆக்கபூர்வமாக இவற்றை அணுகி, மனிதாபிமான அடிப்படைகளில் குழந்தைகளை வளர்க்கும் வழிகளை இடை யறாது தேட வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் மீதுமான நம் உயர்வான அக்கறை இதில்தான் வெளிப்பட வேண் டும்.

அடுத்து, ஒரு பெரும் வேண்டுகோள். பள்ளிக்கு உங் களால் எவ்விதத்தில் உதவ முடியும் (அதாவது வகுப்பறை மற்றும் தாழ்வாரங்களை ஒழுங்குபடுத்துவது, வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுவது போன்றவை) என்று தயவு செய்து ஒரு தாளில் எழுதித் தாருங்கள். மேலும் உங்கள் குழந்தை களின் பள்ளி வாழ்க்கையை ஒழுங்கமைப்பது சம்பந்தமான யோசனைகளையும் எழுதுங்கள்.

நாம் கூட்டாக செயல்பட்டு சிறிது அனுபவம் கிடைத்த பின் ஓரிரு மாதம் கழித்து நாம் மீண்டும் சந்தித்து நம் குழந்தைகளின் வளர்ப்பைப் பற்றிப் பேசலாம்...

### 80ஆம் ஆண்டுகளின் போக்கு

செப்டெம்பர் முதல் தேதி, எனது ஆறு வயதுக் குழந்தை களின் முதல் பள்ளி நாள் பழையதாகி விட்டது. நாளை குழந்தைகளுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சிந்திக்க எனக்கு உதவாமல் இது என்னை விட்டு அகலாது.

எனது ஆறு வயதுக் குழந்தைகள் எப்படிப்பட்டவர்கள்? (இவர்களில் பலருக்கு ஆறு வயதாக இன்னமும் 2—3 மாதங் கள் உள்ளன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்).

நான் அவர்கள் வரைந்த படங்களைப் பார்க்கிறேன், அவர்கள் எழுதிய சொற்களையும் வாக்கியங்களையும் படிக் கிறேன்.

சாதாரணப் படங்கள். பெரும் பிறவித் திறமையை வெளிப்படுத்தும் படங்களை அவற்றின் இடையே நான் காணவில்லை. ஆனால் இவற்றின் சாரம் என்னைக் கவர்ந்தது. குழந்தைகள் என்ன வரைகின்றார்கள்? விண்கப்பல்கள், விண்வெளி வலவர்கள், விமானங்கள், கார்கள், உயரமான வீடுகள், பள்ளிக்கூடம், சர்க்கஸ் காட்சிகள், விலங்கியல் பூங்காவில் உலாவும் காட்சி, மலைகள், காடுகள், புல்வெளிகள், மலர்கள், அம்மா, விழாக்கள், விளையாடும் குழந்தைகள், பலூன்கள், மனித உருவங்கள், விலங்குகள், பெரும் சூரியன் ஆகியவற்றை அவர்கள் வரைகின்றனர்.

சுருங்கச் சொன்னால் அவர்கள் மகிழ்ச்சியை வரைகின்றனர், தாங்கள் உலகத்தை எப்படிப் பார்க்கின்றனர் என்று அவற்றில் காட்டுகின்றனர். ஒருவன், ஒளிக் கற்றைகளுடன் கூடிய புன்சிரிப்பைச் சிந்தும் பெரும் வட்டத்தை வரைந்து, அதற்கு ஒரு நூலையும் வரைந்திருந்தான். ஒரு சிறுவன் அதைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். சிறுவன் ஓடியபடியே அதை இழுத்துச் செல்கிறான். ''நான் சூரியனைப் பிடித்து விட்டேன்'' என்று விளக்கினான் அந்த ''ஓவியன்''. மற்றப் படங்களில் ''இது டாங்கி'', ''நிலா'', ''நான் விளையாடு கிறேன்'', ''என் அம்மா'', ''பள்ளிக்கூடம்'', ''எங்கள் வீட்டின் பின்புறம்'', ''என் தம்பி'', ''காளான்'' என்று எழுதப்பட்டிருந்தது.

படங்களின் கீழ் உள்ள சொற்கள், வாக்கியங்கள், எண்களை என் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்கிறேன் இருவரைத் தவிர எல்லாக் குழந்தைகளுக்கும் தம் பெயர்களையும் வெவ்வேறு சொற்கள், வாக்கியங்களையும் எழுதத் தெரிந்திருந்தது. ''எனக்குப் படிக்கவும் எழுதவும் தெரியும், என் அப்பா சொல்லித் தந்தார்'' என்று தேன்கோ எழுதினான். ''நான் ஏற்கெனவே ஒரு புத்தகத்தைப் படித்து விட்டேன்'' என்று தேயா எழுதினாள். மாக்தா கீழ்க்காணும் பல கணக்குகளை எழுதியிருந்தாள்: $10+5=15$, $100-90=10$, $100+100=200$...

பார்த்தீர்களா, எப்படிப்பட்ட அசாதாரணமான குழந்தைகள், 80ஆம் ஆண்டுகளின் போக்கு! ஏன் இவர்கள் எழுத்துகள், நூல்கள், எண்கள் மீது இப்படி அக்கறை காட்டுகின்றனர்? கண்ணாமூச்சி விளையாட்டோ வேறு விளையாட்டோ விளையாடலாம், தாண்டிக் குதித்துக் கொண்டிருக்க

லாம். ‘‘இங்கு என்ன எழுதியுள்ளது?’’, ‘‘இது என்ன எழுத்து?’’ என்று தொலைக் காட்சிப் படங்களின் தலைப்பு எழுத்துகளையும் தெருக்களில் தென்படும் பலகைகளில் உள்ளவற்றையும் சுட்டிக் காட்டி ஏன் இவர்கள் தம் தாய், தந்தை, தாத்தா, பாட்டிகளைக் கேள்வி கேட்டுத் துளைக்கின்றனர்? பத்திரிகையில் உள்ள தமக்குத் தெரியாத எழுத்துகளைக் கண்டுபிடிப்பதில் ஏன் இவர்கள் இப்படி கஷ்டப்படுகின்றனர்? ஐந்து வயதான குழந்தைகள், ஏன் நான்கு வயதான குழந்தைகள் கூடப், படிக்க முயலுகின்றனர். இதைச் சொல்லித்தருமாறு அவர்கள் தம் பெற்றோர்களைக் கட்டாயப்படுத்துகின்றனர். தமது சைக்கிள்கள், கார் பொம்மைகள், மற்ற விளையாட்டுப் பொருட்களை மறந்து விட்டு இவர்களே அடிக்கடி பரஸ்பரம் எழுத்துகள், எண்களைச் சொல்லித் தருகின்றனர். இந்த ஆறு வயதுக் குழந்தைகள் புதியவற்றை அறிந்து கொள்ளும் நாட்டத்தோடு மட்டுமின்றி குறிப்பிட்ட அளவு ஞானத்தோடும் (இது பள்ளிப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ளது) வகுப்பறைக்கு வந்துள்ளனர்.

பல குழந்தைகளுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரியும் என்பது குறித்து ஆசிரியர்கள் அதிருப்தி தெரிவிப்பதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். ‘‘இப்போது என்ன செய்வது?’’ என்று கூட அவர்கள் குறைப்பட்டுக் கொண்டனர். ‘‘படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் வீட்டில் குழந்தைகளுக்குச் சொல்லித் தர வேண்டாம், ஏனெனில் இவர்கள் இதையே வகுப்பறையிலும் படிக்க வேண்டி வருவதால் பாடவேளையின் போது இவர்களுக்குச் சலிப்பேற்படும்’’ என்று ஒரு பத்திரிகையில் ஆசிரியை ஒருவர் பெற்றோர்களுக்கு அறைகூவல் விடுத்ததைக் கூட நான் பார்த்தேன். ஆனால் பெற்றோர்கள் விசேஷப் பாடத்திட்டத்தின்படி தம் குழந்தைகளுக்கு ஒன்றும் சொல்லித் தருவதில்லையே. குழந்தைகளே தமது ‘‘ஏன்’’, ‘‘எப்படி’’, ‘‘இது என்ன’’, ‘‘இப்படியிருந்தால்’’ போன்ற கேள்விகள் மூலம் தமது கல்வியைப் பெறுகின்றனர். வீட்டில் குழந்தைக்கு எழுதப் படிக்கச் சொல்லித்தராமலிருக்குமாறு கோருவதில் பொருளில்லை என்று எனக்குப் படுகிறது, ஏனெனில் இன்றைய குழந்தையின் அறிந்துணரும் நாட்டத்தை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. முக்கியமானது என்ன

வெனில், இப்படி தடை செய்ய வேண்டியது அவசியமா? இது குழந்தையின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்குமே.

ஒரு வகுப்பில் குழந்தைகள் வெவ்வேறான ஞான மட்டங்களில் இருக்கும் போது ஆசிரியரின் பணி நிச்சயமாகக் கடினமாகும். ஏனெனில் ''பூஜ்ஜியத்திலிருந்து'' கல்வி துவங்கும் போது தயாராக உள்ள முறை இச்சந்தர்ப்பங்களில் எடுபடாது. கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டி வரும், சில சமயங்களில் ஒன்றிற்குப் பதிலாக இன்னொன்றைக் கூடப் பயன்படுத்த நேரிடும். நடைமுறையில் இது, ஆசிரியர் தன் முறையியல் கோட்பாடுகளை மாற்றுவதைக் குறிக்கும், சில சமயங்களில் ஆசிரியருக்கே உரித்தான தன் சொந்த சடத்துவத்திற்கெதிராகப் போராடுவதைக் குறிக்கும்; சில ஆசிரியர்கள் வழக்கமான கல்வி முறைகளை மாற்றுவதன் தீமைகள் குறித்து வாய்வீச்சுக்களின் மூலம் இதைத் திறமையாக மூடி மறைப்பார்கள். ஆம், சில சந்தர்ப்பங்களில் ஒரு சில ஆசிரியர்களின் செயலற்ற மந்தநிலை மற்ற ஆசிரியர்களின் படைப்பாற்றலை மழுங்கடிக்கச் செய்கிறது, புதியவற்றை நாடும் ஆசிரியர்களைக் ''கட்டிப்போடுகிறது''. ஒரு விந்தையான நிலை ஏற்படுகிறது: ஆக்கபூர்வமான அணுகுமுறையற்ற ஒரு ஆசிரியர் தன் மாணவர்களைச் சோம்பேறிகளெனக் கூறுகிறார். மிக மோசமாகப் பாடம் நடத்தும் ஆசிரியர் (இதற்கு அவருக்கு பூஜ்ஜியம் மார்க்குதான் போடலாம்) தன் மாணவர்களுக்கு இப்பாடத்தில் பூஜ்ஜியம் மார்க்கு போடுகிறார்.

குடும்பம், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், குழந்தைகளுக்கான நர்சரிப் பள்ளிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், திரைப்படம், விளையாட்டுப் பொருட்கள், மனிதர்கள், நமது நவீன வாழ்க்கை எல்லாம் சேர்ந்துதான் இன்று என் முன் உட்கார்ந்துள்ள இந்த அசாதாரணக் குழந்தைகளை உருவாக்கியுள்ளன. பள்ளிக்கு வந்த போது இவர்களில் பலருக்குப் படிக்கவும் எழுதவும் கூட்டவும் கழிக்கவும் வகுக்கவும் பெருக்கவும் (பத்து வரைக்கும் மட்டுமல்ல அதற்கு மேலும் கூட) தெரியும். இன்று இவர்கள் தம் வளர்ச்சியாலும் ''கல்வியறிவாலும்'' என்னைப் பன்முறை வியப்பில் ஆழ்த்தினர். என்னால் இவர்களை ஒன்றுமறியாத சிறுவர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆறு வயதுக் குழந்தைகள் உள்ள மற்ற பல வகுப்பு

களைப் போன்றே என் வகுப்பிலும் வெவ்வேறு திறமைகளை யும் வெவ்வேறு மட்ட ஞானத்தையும் உடைய குழந்தைகள் நிறைந்திருக்கட்டும். தனிப்பட்ட அணுகுமுறைக் கோட்பாடு என் வகுப்புகளில் எடுபடவில்லையெனில் ஏன் போதனை முறை இக்கோட்பாடு குறித்து இவ்வளவு பெருமிதம் கொள் கிறது?

அதே சமயம், ஆறு வயதுக் குழந்தைகள் பள்ளிக்கு வந்துள்ளார்கள் என்றால், இவர்கள் பள்ளிக்கு வரும் முன் னரே புதியவற்றை அறியும் நாட்டத்தை வெளிப்படுத்தினார் கள் என்றால், இவர்கள் மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டு முழுப் பொறுப்போடு பாடம் படிப்பதில் ஈடுபடுவார் கள் என்று நான் நினைக்கிறேனா? நான் இப்படி நினைத் தால், குழந்தைகளின் உண்மையான வாழ்விலிருந்து தள்ளி நிற்கும் ஒரு எளிய ஆசிரியனாக அல்லவா இருப்பேன்! எனது வேலையின் சிக்கலே எதுவெனில், அவர்களின் ஞானம் எப் படிப்பட்டதாயிருந்தாலும் அவர்கள் குழந்தைகளாகத்தான் இருப்பார்கள், அவர்களுக்கு விளையாட்டுதான் வாழ்வின் உட்பொருள் என்பதாகும்.

ஒரு முறை ஒரு ஐந்து வயதுச் சிறுமியை அவளுக்கு எவ்வளவு ''கல்வியறிவு'' உள்ளது என்று சோதித்துப் பார்ப் பதற்காக என்னிடம் கூட்டி வந்தனர். அச்சிறுமி நன்றாகப் படித்தாள், பல கதைகளைப் படித்திருந்தாள், தன் மனப் பதிவுகளை அவளால் எழுத்து வடிவில் வடிக்க முடிந்தது, கடிகாரத்தில் மணி பார்த்துச் சொன்னாள், வகுத்தாள், பெருக்கினாள், மூளை வளர்ச்சியை நிர்ணயிக்கும் பல சிக்க லான சோதனைகளில் நன்கு தேறினாள். நான் அவளைப் போகச் சொல்லிவிட்டு, பெற்றோர்களுடன் பேசத் துவங்கி யதுமே அவள் மேசையின் அடியில் புகுந்து கொண்டு எங் களைப் பார்த்து நாய்க்குட்டியைப் போல் குரைக்க ஆரம்பித்தாள்.

பள்ளிப் பாடங்கள் நான்கு, ஐந்து, ஆறு ஏன் ஏழு-எட்டு வயதுக் குழந்தைகளின் இயல்பை அடியோடு மாற்றுவ தில்லை, அதாவது குழந்தைப்பருவம் என்றழைக்கப்படுவதி லிருந்து இவர்களைப் பிரிப்பதில்லை. கருத்தாழமுள்ள விஷ யங்களைத் தெரிந்திருப்பதாலும், மேன்மேலும் இவற்றை அறிந்து கொள்ள முயலுவதாலும் மட்டுமே குழந்தை பொறுப்புள்ளவனாகி விடுவதில்லை. ஆறு வயதுக் குழந்தை

களுக்கு எனது கட்டளைகள், தடைகள், அறைகூவல்களைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும், நீண்ட நேரம் அவர்களால் பாடம் படிக்க முடியாது, ஒரே மாதிரியான நிலை அவர்களுக்கு விரைவிலேயே சலிப்பேற்படுத்தும்...

இன்று என் வகுப்பில் எப்படியிருந்தது? குழந்தைகள் களைத்து விட்டனர், அவர்களுக்குச் சலிப்பாயுள்ளது என்பதை இரண்டு முறை உணர்ந்தேன். இன்னமும் குறைவான பாடவேளைகளைப் பற்றி நான் யோசித்துப் பார்க்க வேண்டுமோ! ஒவ்வொரு பாடவேளையிலும் 15 நிமிடங்கள் பாடம் நடத்தினால் போதுமோ? ஒரு நாளில் எட்டு சிறு பாட வேளைகள். இல்லை, தாய்மொழி, கணிதம், ருஷ்ய மொழி வகுப்புகளை மட்டும் இப்படிப் பிரிப்பது நல்லது. வரைதல், பாட்டு வகுப்பு, உடற்பயிற்சி வகுப்புகளை விட இவற்றிற்குப் பெரும் மூளை உழைப்பு தேவைப்படும். தாய் மொழிப் பாடம் 15 நிமிடங்கள் நடந்ததும் வகுப்பு மணியடிக்கும். பின் வகுப்பை விட்டு வெளியே போகாமலேயே 5 நிமிடங்கள் ஓய்வு. எஞ்சிய 15 நிமிடங்களை கணிதத்திற்கு ஒதுக்குவோம். நாளை இப்படிச் செய்து பார்க்க வேண்டும்...

## முன்மொழிவுகள், கேள்விகள்

...பெற்றோர்கள் எந்த விதமான உதவிகளைச் செய்வதாக வாக்களிக்கின்றனர், ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தருவது சம்பந்தமாக எப்படிப்பட்ட கருத்துக்கள் அவர்களிடம் உதிக்கின்றன என்பது சுவாரசியமானது. மனிதாபிமான அடிப்படையில் குழந்தைகளை வளர்க்கும் திட்டத்தில் அவர்களை செயல்முனைப்போடு ஈடுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் நான் சொல்வதை ஏற்றுக் கொள்வார்களா? முந்திய ஆண்டுகளில் பல பெற்றோர்கள் இதில் பெரும் உற்சாகத்தோடு ஈடுபட்டார்கள், இந்த அனுபவம் இன்று எனக்கு ஊக்கமளித்தது, எனவே தான் நானே உருவாக்கிய ''முதுமொழிகளைத்'' துணிவாகப் பெற்றோர்கள் முன் வைத்தேன்.

அவர்கள் என்ன செய்வதாக வாக்களிக்கின்றனர், அவர்களது கருத்துக்கள் யாவை?

முதலில் ''வாக்குறுதிகளைப்'' பார்ப்போம்,

''நான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர். தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிக் குழந்தைகளுக்கு சுவாரசியமாக எடுத்துச் சொல்ல என்னால் முடியும், ஜார்ஜியாவின் பண்டைய தலை நகரமாகிய மித்ஸ்ஹேத்தாவிற்கு அவர்களை அழைத்துச் சென்று தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களைக் காட்ட முடியும். இது அவர்களுக்கு நிச்சயமாகச் சுவாரசியமாக இருக்கும்.'' கோத்தேயின் பாட்டி.

*2—3 ஆம் வகுப்புகளில் இப்படிச் செய்யலாமே!*

''என்னால் ஆண்டிற்கு இரு முறை பேருந்திற்கு ஏற் பாடு செய்ய இயலும். நகரத்திற்கு வெளியே சுற்றுலா செல்லலாம். இரண்டு வாரத்திற்கு முன் சொன்னால் போதும்.'' கியோர்கியின் தந்தை.

*இது நல்லது! அக்டோபர் மாதம் நகரத் தாவரவியல் பூங்காவிற்கு முதல் சுற்றுலாச் செல்ல நான் திட்டமிட்டுள் ளேன். இலையுதிர் காலத்தில் இயற்கை எப்படி மாற்ற மடைகிறது என்று கவனிக்கலாம்.*

''குழந்தைகளுக்காக ஒரு மின்சார போர்டு செய்ய முடி யும், பல்வேறு மின் உபகரணங்களையும் செய்ய இயலும். எப்படிப்பட்ட பாடச் சாதனங்கள் வகுப்பிற்குத் தேவை என்று மட்டும் சொல்லுங்கள்.'' தேயாவின் தந்தை.

*இந்த வாரமே தேயாவின் தந்தையோடு பேச வேண்டும்.*

''நானும் என் மனைவியும் இசையமைப்பாளர்கள். ஒரு சிறு குழந்தைகள் ஒப்பேராவை எங்களால் தயாரிக்க முடி யும். பாட நேரத்திற்குப் பின் நாங்களே ஒத்திகைகளை நடத்துவோம். எல்லாக் குழந்தைகளும் இதில் பங்கேற்பார் கள்.'' கோச்சாவின் பெற்றோர்கள்.

*பெரிதும் சுவாரசியமான முன்மொழிவு.*

''இரண்டு மூன்று பெற்றோர்கள் உதவினால் வகுப்பறை யின் சுவர்களுக்கு வர்ணம் பூசி உற்சாகமாயும் சுவாரசிய மாயும் இருக்கும்படிச் செய்ய இயலும்.'' தாம்ரிக்கோவின் தந்தை.

*இதைப் பற்றி யோசித்து முடிவு செய்ய வேண்டும்.*

''நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டேன். பெற் றோர்களின் முறை அலுவலுக்கு ஏற்பாடு செய்ய இயலும். என்னால் தாழ்வாரத்தில் ரோந்து வர முடியும், எல்லாவற்றி லும் உங்களுக்கு உதவுவோம்.'' மாயாவின் பாட்டி.

*பெற்றோர்களின் முறை அலுவல் தேவையான ஒரு*

விஷயம். இந்த முன்மொழிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''வகுப்பறைக்காக ஸ்டேன்டு, சிறு மேசைகள் போன்ற வற்றைச் செய்ய முடியும்.'' ஏக்காவின் தந்தை.

ஒரு சுவர் முழுவதும் வரும்படியாக ஸ்டேன்டு செய்தால் நன்றாயிருக்கும். எல்லாக் குழந்தைகளின் குழந்தைப்பருவப் படங்களையும் இதில் மாட்டலாம். பின் ஒவ்வொரு குழந்தையின் பிறந்த நாள் வரும் போதும் அக்குழந்தை யின் புகைப்படத்தை மாட்டலாம்.

''குழந்தைகளை அச்சகத்திற்கு அழைத்துச் சென்று புத்தகங்கள் எப்படி அச்சிடப்படுகின்றன என்று காட்ட முடியும்.'' எலேனாவின் அம்மா.

குழந்தைகள் 2வது வகுப்பிற்கு வந்ததும் நிச்சயம் அங்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

''எங்கள் வீட்டில் சிறு தோட்டம் உள்ளது. அங்கு பல் வேறுவிதமான பூச்செடிகள் இருக்கின்றன. வகுப்பறைக்காக சில பூந்தொட்டிகளில் இச்செடிகளைக் கொண்டு வர முடி யும். குழந்தைகள் இவற்றிற்கு நீர் ஊற்றி வளர்க்கலாம். அவ்வப்போது இவற்றை முறையாக மாற்றி வேறு பூச்செடி களைக் கொண்டு வருவேன். குழந்தைகள் பல்வேறுவித மான மலர்களோடு அறிமுகமாகலாம்.'' நீயாவின் தாய்.

சுவாரசியமான விஷயம். இதை உடனே செய்யும்படி அவரிடம் கூற வேண்டும்.

டேப்ரிக்கார்டர், கிராமபோன், மீன் தொட்டி போன்ற வற்றை வகுப்பறைக்குப் பரிசளிப்பது; படம் வரைய சொல்லித் தருவது, பல்வேறு விளையாட்டுக்களைச் சொல்லித் தருவது, தாழ்வாரத்தில் திரைகளைத் தொங்க விட்டு அழகு படுத்துவது, குழந்தைகளைப் படமெடுத்து மாட்டுவது போன்ற பல்வேறு மற்ற முன்மொழிவுகளும் வந்தன. இவற்றையெல்லாம் தேவையான போது நான் பயன்படுத்திக் கொள்வேன்.

அடுத்து, பெற்றோர்களின் கேள்விகள், ஆலோசனை களைப் பார்ப்போம்.

''ஆறு வயதுக் குழந்தைகளை ஏன் பள்ளியில் சேர்த்துக் கொள்கின்றனர் என்று விளக்குவீர்களா? நாம் ஏன் அவசரப் பட வேண்டும்? குழந்தைப்பருவத்தை ஏன் அவர்களிட மிருந்து பிடுங்க வேண்டும்?'' நான் கண்டிப்பாக விளக்கம் தருவேன்.

''இளம் பெற்றோர்களுக்காக ஆசிரியர் பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். இது எங்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது!'' இந்த வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்.

''அடிக்கடி குழந்தைகளைக் காற்றாட அழைத்துச் செல்வீர்களா?'' கண்டிப்பாக, ஒவ்வொரு நாளும் அழைத்துச் செல்வேன்.

''காலை வேளைகளில் முரண்டு பிடிக்காமல் நன்கு சாப்பிடும்படி குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். நீங்கள் சொன்னால் அவர்கள் நன்கு கேட்பார்கள்.'' சரி... காலையில் வெறும் வயிற்றோடு பள்ளிக்கு வரக் கூடாதென குழந்தைகளிடம் சொல்ல வேண்டும்.

''உங்களது கல்வி முறையின் சாரம் என்ன என்று விளங்குமாறு தயவு செய்து சொல்லுங்கள். திட்டவட்டமான உதாரணங்களோடு பாடங்களை எப்படி நடத்தப் போகின்றீர்கள் என்று சொல்லுங்கள்!'' ஆம், இதற்கு பெற்றோர்களுக்கு முழு உரிமையுண்டு. முதல் வாய்ப்பு கிட்டியதுமே இதைச் செய்ய வேண்டும்.

''பெற்றோர்கள் பாடங்களுக்கு வரலாமா?'' ஓ, வரலாமே. இப்படிப்பட்ட பொதுவான பாடங்கள், திட்டவட்டமான உதாரணங்களோடு நமது கல்வி முறையைப் பற்றிப் பெற்றோர்களுக்கு எடுத்துரைக்க உதவும். தாய், தந்தை, தாத்தா, பாட்டிகளுக்கான இப்படிப்பட்ட பொதுவான பாடவேளைகள்தான் எனக்கும் ஒவ்வொரு குழந்தையின் குடும்பத்திற்கும் இடையில் பரஸ்பர மன ஒற்றுமையை ஏற்படுத்த சிறந்த வழி.

''மனிதாபிமான வளர்ப்பைப் பற்றி நீங்கள் கூறியதெல்லாம் மிக சுவாரசியமானவை. ஆனால் இவையெல்லாம் நடைமுறையில் சாத்தியமா?''

மனிதாபிமான வளர்ப்பைப் பற்றிய கருத்தின் மீது இவர்களுக்கு எப்படி நம்பிக்கையை ஊட்டுவது? இவர்களின் குழந்தைகள் வளர்ந்து, மாற்றமடையும் போது ஒருவேளை இதை நம்புவார்களோ?

குழந்தைகளே, கட்டாயம், நிர்ப்பந்தமின்றி உங்களை வளர்க்க இயலும் என்று நிரூபிக்க நீங்கள் எனக்கு உதவுவீர்களா? ''சரி!'' எதற்காக ஒப்புதல் தேவைப்படுகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்காமலேயே ''சரி'' என்று ஒரே குரலில் கூறுவதை மாற்ற வேண்டும்.

அத்தியாயம் மூன்று

# பாடவேளையின் போது மோர்பேய்க்கு எதிராக மோமுஸ் (20வது நாள்)

## பரஸ்பர உறவு பற்றிய விதி

இனிய மணியொலி கேட்கிறது...

நான் திடீரென வகுப்பறையினுள் நுழைந்து குழந்தைகளைப் பார்க்கிறேன். உடனே நிசப்தம் நிலவுகிறது.

''குழந்தைகளே, வணக்கம்!'' என்று மகிழ்ச்சியோடு கூறுகிறேன்.

வகுப்புகள் தொடங்கி இன்று இருபதாவது நாள். குழந்தைகள் என்னிடம் நெருங்கி வருவதை என்னால் உணர முடிந்தது.

ஒரு சிறுவன் சனிக்கிழமையும் தன்னைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லுமாறு எப்படி வேண்டினான் என்று அவனுடைய தாய் கூறினாள். ''இன்று விடுமுறை நாள்'' என்றாள் அம்மா. ''நான் அங்கு ஓய்வெடுக்கிறேன்!.. ஏன் பள்ளியில் ஓய்வெடுக்கக் கூடாது?'' என்று அச்சிறுவன் பிடிவாதமாக இருந்தான்.

ஆம், குழந்தைகள் பள்ளியை நோக்கி, சக நண்பர்கள், ஆசிரியரை நோக்கி, பாடங்களை நோக்கிக் கவர்ந்திழுக்கப் படுகின்றனர். ஏன்? எது இவர்களை இப்படி ஈர்க்கிறது?

ஆசிரியர் பணியில் வெளிப்படும் ஒரு விசேஷமான புறவய விதி உள்ளது என்று நம்ப விரும்புகிறேன். இதை ''பரஸ்பர உறவு பற்றிய விதி'' என்றழைக்கலாம்:

> குழந்தைகளைச் சந்திக்க ஆசிரியர் எப்போதுமே விருப்பத்தோடு செல்லட்டும், இவர்களைக் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மகிழ்ச்சியடையட்டும்; அப்போது குழந்தைகளும் விருப்பத்தோடு பள்ளிக்கு வருவார்கள், தம் ஆசிரியரைச் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மகிழ்ச்சியடைவார்கள்.

''வணக்கம்!'' என்று அவர்கள் மகிழ்ச்சியோடு பதில் அளிக்கின்றனர்.

''உட்காருங்கள்! இன்று நிறைய வேலைகள் நமக்கு உள்ளன. ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காது துவங்குவோம் வாருங்கள்!''

படிக்கத் துவங்க வேண்டுமென பல குழந்தைகள் பொறுமையின்றித் துடிக்கின்றனர். ''எழுத்துகளைப் படிக்க ஆரம்பிப்போம்!'' என்று 3—4 நாட்களாக அவர்கள் இடையறாது என்னிடம் வேண்டினார்கள். ''எழுத்துகளைச் சொல்லிக் கொடுப்பதற்கு முந்தைய காலகட்டத்தை'' 3—4 நாட்கள் குறைக்க வேண்டுமென நான் இப்போது நினைக்கிறேன், நான் எனது கட்டமைப்புப் பகுப்பாய்வில் சிறிது அதிக நேரத்தைக் கழித்து விட்டேன்.

நான் என்ன செய்ய வேண்டும்!

வார்த்தைகளைப் பற்றிய ஒலிப் பகுப்பாய்வுக் கோட்பாட்டை குழந்தைகள் புரிந்து கொண்ட பின் (15 பாட நாட்களுக்குப் பின் இவ்வாறு புரிந்து கொண்டனர்) குழந்தைகளுக்கு எழுத்துகளைச் சொல்லித் தரத் துவங்கியிருக்க வேண்டும், கூடவே, வார்த்தைகள், வாக்கியங்களை எழுதும் முறைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லித் தர ஆரம்பித்திருக்க வேண்டும்.

நானோ, ஏதோ தெளிவற்ற ''எழுத்துக்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு முந்தைய கட்டத்தை'' பின்பற்றினேன். குறைந்த பட்சம் குழந்தைகளை 3—4 நாட்கள் தாமதப் படுத்தி விட்டேன். ''குழந்தைகளே, என்னை மன்னியுங்கள், நான் வேண்டுமென்றே இப்படிச் செய்யவில்லை. நீங்கள் போகும் போக்கிலேயே எனது விஞ்ஞானத்தை முறிக்கின்றீர்கள், எனக்கு எல்லாவற்றையும் முன்கூட்டியே பார்ப்பது கடினம். இப்போது $1^1/_2$—2 வயதுள்ளவர்கள் நான்கு வருடங்கள் கழித்து என் வகுப்பிற்கு வரும்போது இதை நான் சரி செய்கிறேன்!''

## ''எழுத்து வெறி''

என் வகுப்புக் குழந்தைகள் எழுத்துக்களை நோக்கிப் பாய்கின்றனர். நானே இதற்கு துணை புரிந்தேன் வகுப்பறைக்கு வெளியில் உள்ள தாழ்வாரத்தில் அழகிய படங்களுடன் கூடிய குழந்தை நூல்கள் சிறு மேசைகளில் வைக்கப்

பட்டன. இவற்றில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆசை. ஆனால் படிக்கத் தெரியவில்லை. லேலா என்னிடம் ஓடிவந்து கேட்கிறாள்: ''இங்கு என்ன எழுதி யுள்ளது!'' கியோர்கி கேட்கிறான்: ''இந்தக் கதையை தயவு செய்து படித்துக் காட்டுங்கள்!'' சாஷா, இடைவேளை களின் போது ஏதாவது புத்தகத்தை எடுத்துக் கொண்டு சொற்களையும் வாக்கியங்களையும் படிக்க முயலுகிறான். ''இது என்ன எழுத்து? இது க இல்லையா?'' என்று தோழர் களைக் கேட்கிறான்.

ஒவ்வொரு நாளும் நான் காலையில் முன்னதாகவே வந்து, தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையில் சில வார்த்தைகளை யும் எழுத்துகளையும் எழுதுவேன். குழந்தைகள் காலையில் வரும் போதே கரும்பலகையில் ஏதோ புதிதாக எழுதப்பட் டுள்ளதைப் பார்த்து விடுவார்கள். உடனே விவாதம் ஆரம்ப மாகும்:

''இது த!''

''இல்லை, இது த இல்லை ட!''

''இதோ ட, இது த. எனக்கு நன்கு தெரியும்.''

''இங்கு 'மகிழ்ச்சி' எனும் சொல் எழுதப்பட்டுள்ளது.''

'' 'நெநெநெ... நெருப்பு.' நான் படித்து விட்டேன்!.. 'நெருப்பு!..' ''

'' 'மக்க்க்கள்!..' மக்கள்! ஓ... நானும் படித்து விட் டேன்!''

எங்கள் வகுப்பிற்கு வெளியே சலசலவென ஒலி எழுந் தது. இதை விட இசை நயமானதை எந்தக் காட்டிலும் கேட்க முடியாது. எழுத்துகள், வார்த்தைகளைப் படிக்க குழந்தைகள் பரஸ்பரம் உதவி செய்து கொண்டனர். நான் கரும்பலகையில் எழுதிய சொற்கள் தற்செயலானவையல்ல. இவையெல்லாம் வகுப்பறையில் ஏற்கெனவே ஒலித்தவை, இவை ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாக ஒலிப் பகுப்பாய்வு நடத்தியுள்ளோம். எனவே, வகுப்பறையில் பாடங்களின் போது ''எழுத்துகளைச் சொல்லிக் கொடுப்பதற்கு முந்தைய கட்டம்'' நீண்டு கொண்டே போன போது தாழ்வாரத்தில் ''எழுத்துக் கட்டம்'' மும்முரமாக இருந்தது. கடந்த 3—4 நாட்களாக என் வகுப்புக் குழந்தைகளை ஆட்கொண்ட நிலையை ''எழுத்து வெறி'' என்றுதான் என்னால் அழைக்க முடியும்.

இந்த எழுத்துக் கட்டத்தை உடனடியாகத் தாழ்வாரத்திலிருந்து வகுப்பறைக்கு, பாடங்களுக்கு மாற்ற வேண்டும். இல்லாவிடில், பேச்சு யதார்த்தம் பற்றி அவர்களிடம் சமீபத்தில் கேள்வி கேட்ட போது ஏற்பட்டதைப் போன்ற முட்டுக்கட்டை உண்டாகும். அப்போதுதான் வெறிக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன.

''நான் இப்போது செய்யப் போவதை எந்தச் சொல்லால் குறிக்கலாம்?''

நான் வகுப்பறையில் நடந்து காட்டினேன்.

''நடப்பது!.. என்று குழந்தைகள் பதில் சொன்னார்கள்.

''இது?''

''உட்காருவது!..''

''இது?''

கையில் சாக்பீசை எடுத்துக் கொண்டு தற்செயலாக தோன்றிய சொல்லை எழுதி விட்டு ''எழுதுவது'' என்று பதில் வருமென நம்பிக்கையோடு திரும்பிப் பார்க்கிறேன்.

**ஏக்கா:** ''துணிவு.''

''துணிவா! அப்படியென்றால் என்ன?'' என்று நான் வியப்போடு கேட்டேன்.

**வோவா:** ''நீங்கள்தானே 'துணிவு' என்று எழுதினீர்கள்.''

''நான் என்ன எழுதினேன் என்று கேட்கவில்லை. நான் செய்த செயலை எப்படி அழைக்கலாம் என்றுதான் கேட்கிறேன். இதோ பாருங்கள்!'' என்றபடியே நான் இன்னமும் சிக்கலான ஒரு வார்த்தையை (''எதிர்பார்த்திரு'') தெளிவின்றி விரைவாக எழுதிக் காட்டுகிறேன். ''இந்தச் செயலுக்கு என்ன பெயர்?''

எழுதுவது என்று பெயர். அதே சமயம் என்ன நடந்தது தெரியுமா? பலர் தம் விரல்களைச் சுட்டிக் காட்டியபடியே மெதுவாக உச்சரிக்கத் துவங்குகின்றனர்.

**மாயா:** ''எஎஎ...திர்...''

**தாத்தோ:** ''எதிர்பார்...''

**கீகா:** ''இல்லை! எதிர்காண்!''

**மாயா:** ''எதி-ர்-பா-ர்... எதிர்பார்த்திரு!'' என்று உற்சாகமாகக் கூறுகின்றனர் ''அங்கே 'எதிர்பார்த்திரு' என்று எழுதியுள்ளது.''

''சரி, நல்லது!'' என்று நான் யோசித்தபடியே பேச்சு

யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் பயிற்சிகளை நிறுத்தினேன். ''அடுத்த முறை வேறு பயிற்சிகளில் இதைத் தொடருவோம்! இப்போது...''

''சிறிது விளையாடுவோமா? நான் வார்த்தைகளை எழுதுவேன். உங்களால் முடிந்தால் உடனேயே இவற்றை உரக்கப் படியுங்கள்.''

நான் கரும்பலகையை விட்டு அகன்று குழந்தைகள் நான் எழுதியதைப் பார்த்ததுமே ''சூரியன்!'' என்று ஒரு பெரும் ஓசை எழுந்தது.

நான் மீண்டும் அவர்களுக்குத் தெரியாதபடி கரும்பலகையின் முன் நின்று ஒரு வார்த்தையை எழுதி விட்டு நகர்கிறேன்.

''மரம்!'' என்று மகிழ்ச்சியோடு குழந்தைகள் கூறுகின்றனர்.

பின்னர்: ''வீடு!.. அம்மா!.. அப்பா!.. பாட்டி!..''

எல்லோரும் படிக்கவில்லை. எழுத்துக் கூட்டிப் படிக்கச் சிலருக்கு நேரம் போதவில்லை, மற்றவர்கள் இவ்வார்த்தையை உச்சரித்தனர்.

முடிவாக ஒரு துணிச்சலான சம்பவம் பற்றிய கதையைப் படித்தோம். ஓய்வு நேரம் கிடைத்த போதும், பெரும் இடைவேளைகளின் போதும், பூங்காவில் உலாவும் போதும் இப்படிப்பட்ட புத்தகத்தை என்னாலியன்றவரை உணர்ச்சியோடு, பாவனை நயத்தோடு படித்துக் காட்டினேன். படிப்பதைத் தொடர்ந்து கேட்கவே அவர்களுக்குப் பொறுமையில்லை. ''இப்படிப் படிக்க முடியுமெனில் நீங்கள் எவ்வளவு சந்தோஷமானவர்!'' என்று சமீபத்தில் ஏல்லா கூறினாள். ''ஆம், குழந்தைகளே, படிக்கத் தெரிந்திருப்பதும், படிக்கும் ஆர்வமும் உண்மையான மானுட மகிழ்ச்சி. புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளப் படிக்கும் ஆர்வத்தை உங்களுக்கு எப்படி ஊட்டுவது? இதுதான் இனி என் அக்கறை!'' என்று நான் என் மனதினுள்ளேயே ஏல்லாவிற்குப் பதில் சொல்லிக் கொண்டேன்.

நான் இப்படியாக ''எழுத்து வெறியை'' ஏற்படுத்தினேன்: குழந்தைகள் என்னையும், தம் பெற்றோர்களையும் துளைத்து எடுத்தனர். ''இது என்ன எழுத்து!.. இங்கு என்ன எழுதியுள்ளது!.. இதைப் படித்துக் காட்டு!'' என்று கேட்ட வண்ணமிருந்தனர். தாழ்வாரத்திலிருந்த கரும்பல

கையில் காலைதோறும் நான் எழுதிய எழுத்துகள், சொற்கள், வாக்கியங்களின் அருகிலேயே நீண்ட நேரம் நின்றார்கள்...

நாளை முதல் அவர்களுக்கு எழுத்துக்களைச் சொல்லித்தர ஆரம்பிப்பேன். அப்போது விரைவாகத் தெரிந்து படிக்கும் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்துவேன். இன்று 25 நிமிட மினி-பாடவேளைகளின் போது வார்த்தைகளின் கட்டமைவுப் பகுப்பாய்வு சம்பந்தமான பயிற்சிகளைத் தருவேன், படிக்கவும் எழுதவும் பயிற்றுவிக்க வேண்டும்.

இந்த மினி-பாடவேளைகள் எவ்வளவு நல்லவை, கச்சிதமானவை, முழுமையானவை தெரியுமா! குழந்தைகள் களைப்படைவதேயில்லை, இடைவேளை நேரம் வந்ததும் உலோகத்தாலான ஒரு வளையத்தில் மாட்டப்பட்டுள்ள மூன்று பொன்னிற மணிகளை எடுத்து ஆட்டி ஐந்து நிமிட வகுப்பு இடைவேளை ஆரம்பமாகியதைக் குறிப்பிடுகிறேன். சில சமயங்களில் குழந்தைகள் என்னுடன் சேர்ந்து உடற்பயிற்சிகள் செய்வார்கள். சில சமயங்களில் அவர்கள் விருப்பப்படி விட்டு விடுவேன். மற்றும் சில நேரங்களில் தலையைக் குனிந்தபடி இருந்த இடத்திலேயே உட்கார்ந்தபடி நல்ல இசையைக் கேட்கும்படி அல்லது ஏதாவது நல்ல விஷயங்களைப் பற்றி யோசிக்கும்படி சொல்வேன், கற்பனை செய்து பார்க்கும்படி சொல்வேன். பின் என் கைவசமுள்ள மணிகள் ஐந்து நிமிடங்களுக்குப் பின் இனிய ஒலியை எழுப்பும். பள்ளி முழுவதற்குமான மின்சார மணி அடித்து இடைவேளை ஆரம்பமாகும் வரை எங்கள் பாடம் தொடரும்.

## புதியவற்றை அறியும் மகிழ்ச்சி எப்படிப் பிறக்கிறது?

என் வகுப்புக் குழந்தைகளுக்கு நடனமாடப் பிடிக்கும். சில சமயம் இடைவேளைகளின் போது அவர்களே கிராமபோனைப் போடுவார்கள். எனவே, இவர்களுக்கு நடனமாடப் பிடிக்குமெனத் தெரிகிறது. மோட்சார்ட், ஷோபேன், சய்கோவ்ஸ்கி, பாலியஷ்வீலி ஆகிய பெரும் இசைக் கலைஞர்களின் படைப்புகளை நான் தேர்ந்தெடுத்தேன். இசைக்கேற்ப நடனமாடும் போது ராகத்தைக் கேட்க வேண்டும், இதில் எம்மாதிரியான உணர்வுகள் பிரதிபலிக்

கின்றன என்று புரிந்து கொள்ள முயல வேண்டும், இவற்றைத் தம் அசைவுகளில் வெளிப்படுத்த வேண்டும் என்று விளக்க முற்பட்டேன்.

இப்போது சய்கோவ்ஸ்கியின் ''பழைய பிரெஞ்சுப் பாடல்'' ஒலிக்கிறது. குழந்தைகள் தம்மிடங்களிலிருந்து எழுந்து நடனமாட வசதியான இடத்தைத் தேடி வந்தனர். பல சிறுமிகள் நேர்த்தியாக நடனமாடுகிறார்கள். சில சிறு வர்கள் இந்த நடனத்தை ஒரு விளையாட்டாக மாற்றினர்—ஒருவருடன் ஒருவர் மோதியபடி அவர்கள் குதிக்கின்றனர். மாரிக்கா மட்டும் தனியே நின்று கொண்டிருக்கிறாள். சாஷா வும் தேன்கோவும் பெஞ்சில் உட்கார்ந்திருக்கின்றனர். என் னருகே வந்து, மற்றவர்கள் நடனமாடுவதைப் பார்க்கும்படி அவர்களுக்குச் சொல்கிறேன். மெதுவாக நாங்கள் பேசிக் கொள்கிறோம்.

''மாயாவைப் பாருங்கள்... அவள் எவ்வளவு அழகாக நடனமாடுகிறாள், எவ்வளவு மென்மையாகக் கரங்களை அசைக்கின்றாள்!'' என்கிறேன் நான். ''சரி, யாருடைய நடனம் உங்களுக்குப் பிடித்துள்ளது?''

''யாருடைய நடனமும் எனக்குப் பிடிக்கவில்லை!'' என் கிறான் சாஷா.

''ஏல்லா சிரிப்பு வரும்படி நடனமாடுவது எனக்குப் பிடித் துள்ளது. அவள் எப்படிச் சுற்றுகிறாள் பார்த்தாயா!''

''கோத்தே நடனமாடுவது உங்களுக்குப் பிடிக்க வில்லையா?''

சரி, இது என்ன? போன்தோ சிறுமிகளின் கால்களை வாரி விட்டுக் கொண்டிருக்கிறானே. அவர்கள் அவனைப் பிடித்துத் தள்ளுகின்றனர். ''போ, தொந்தரவு செய்யாதே!'' என்று கூறியபடியே தொடர்ந்து நடனமாடுகின்றனர். ஆனால் போன்தோ நிற்கவில்லை. போன்தோ காலை வாரி யதைக் கவனிக்காத மாயா கீழே விழுந்தாள்.

''சிறுவர்களே, நீங்கள் போய் மாயாவிற்கு எழுந்திருக்க உதவுங்கள். போன்தோவை இங்கே அழைத்து வாருங்கள்.''

ஆனால் போன்தோ அவர்கள் சொல்வதைக் கேட்க வில்லை. நானே தலையிட வேண்டி வந்தது. போன்தோ பயந்தபடியே என்னைப் பார்க்கிறான். அவனுக்க என்ன ஆயிற்று என்றே புரியவில்லை.

''போன்தோ, உனக்கு நடனமாட விருப்பமில்லையா?''

''இருக்கிறதே!''

''பின், ஏன் சிறுமிகளின் கால்களை வாரி விடுகிறாய்? என் குரலில் அச்சுறுத்தும் தொனியே தென்படாவிட்டாலும் போன்தோ கவலைப்பட்டான்.

''அவளேதான் கீழே விழுந்தாள்.''

நான் என்ன செய்வது? பொய்யை அம்பலப்படுத்துவதா? சாஷா அவன் மீது பாயவே தயாராயிருக்கிறான்.

''சாஷா, சற்று பொறு. ஒருவேளை அவன் தெரியாமல் செய்திருக்கலாம்.''

பின் நான் அவனை என்னை நோக்கி இழுக்கிறேன். அவனோ முரண்டு பிடிக்கிறான். நான் குனிந்து அவன் காதில் மெதுவாகச் சொல்கிறேன்:

''சிறுமிகளுக்குத் தொந்தரவு செய்ய உனக்கு விருப்பமில்லை என்பதை நான் நம்புகிறேன். சரி, நீ போய் நடனமாடு. நாங்கள் பார்ப்போம்.''

போன்தோ அவர்களுடன் சென்று கலந்து, ஒழுங்காக நடந்து கொண்டான். இதனிடையே மாரிக்கா என் காலருகே உட்கார்ந்தாள், சாஷாவும் என்னுடன் ஒட்டிக் கொண்டான். நாங்கள் நால்வருமாக சேர்ந்து நடனமாடுபவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இசை ஒலிக்கிறது, குழந்தைகள் நடனமாடுகின்றனர். இந்த 20 நாட்களில் இவர்கள் உண்மையிலேயே வளர்ந்து விட்டார்களா, அல்லது எனக்குத்தான் இப்படித் தோன்றுகிறதா? இல்லை, இவர்கள் இன்னமும் தம் வயதைக் கடக்கவில்லை. ''நேராக உட்காருங்கள்! கைகளைப் பின்னால் கட்டுங்கள்! அசையாதீர்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்!'' போன்ற வழக்கமான முறைகளில் பாடங்கள் நடத்தினால் குழந்தைகள் உடனேயே சலிப்படைவார்கள், கொட்டாவி விடுவார்கள். முழுக்க முழுக்கத் தூய்மையான போதனை முறையின்படி இவர்களுக்கு கண்டிப்பாக, கருத்தாழமுள்ள வேலைகளைத் தந்தால் விரைவிலேயே குழந்தைகளுக்குப் படிப்பில் சலிப்பேற்படும்.

பரிசோதனைக்காக இப்படிப்பட்ட பாடங்களைச் ''சொல்லிப் புரிய வைக்கும்'' கோட்பாட்டின்படி நடத்த நான் முயன்றேன். இவற்றில் குழந்தைகள் என்னிடமிருந்து விலகிப் போனதாக எனக்குப் பட்டது. இத்தகைய பாடவேளைகளின் போது சலிப்பாக இருந்தது, ஏதோ நான்

விசாரணை நடத்துவது போன்றும் அவர்களை ஏதோ முக்கியமான ரகசியத்தைச் சொல்லுமாறு கட்டாயப்படுத்துவது போன்றும் அவர்கள் என்னை நம்பாதது போலும் எனக்குப் பட்டது. அவர்கள் கரங்களை உயர்த்தினார்கள், என் கேள்விகளுக்குப் பதில் சொன்னார்கள். இவற்றில் மகிழ்ச்சியும் உற்சாகமும் இருக்கவில்லை. ''கரங்களை உயர்த்துங்கள்! எல்லோரும்!.. எல்லோரும் யோசியுங்கள்!'' என்று அடிக்கடிச் சொல்லும்படி நேரிட்டது. இதே கடமைகள் சிக்கலானவையாக மாறின. இப்பாடங்களில் என்ன மாற்றம் நடந்தது? எனது உறவு முறை மாறியது: நான் அதிகார பூர்வமானவனாக, பிழைபடாதவனாக, கண்டிப்பானவனாக, தெரிந்தவற்றையெல்லாம் சொல்லும்படி குழந்தைகளைக் கட்டாயப்படுத்துபவனாக நான் மாறினேன். அவர்களது அறிவைப் பதிவு செய்பவனாக நான் மாறினேன். அனேகமாக இது குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை போலும். பாட முடிவில் சாஷா (இவன் என்னை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டேயிருந்தான்) என்னை அணுகிக் கேட்டான்:

''ஏன் இன்று நீங்கள் எல்லா பாடவேளைகளிலும் சோர்வாயிருந்தீர்கள்? உங்களுக்கு உடல்நிலை சரியில்லையா?''

''உனக்குப் பாடங்கள் பிடிக்கவில்லையா?'' என்று நான் கேட்டேன்.

''இல்லை!'' என்றான் சிறுவன்.

''நாங்கள் ஒரு முறை கூட சிரிக்கவில்லை'' என்று கூடச் சேர்ந்து கொண்டான் இலிக்கோ.

திடீரென எனக்குப் பட்டது: பாடம் எப்படியிருந்தது, எனக்கு அவர்களால் என்ன சொல்ல முடியும், பாடவேளைகளில் என்ன செய்ய வேண்டுமென விரும்புகின்றார்கள் என்றெல்லாம் குழந்தைகளிடமே அடிக்கடி கேட்பது நன்றாயிருக்கும். அல்லது, பாடம் துவங்கும் முன்னரே, எப்படி பாடத்தை நடத்துவது என்று குழந்தைகளிடம் கேட்டால் நல்லதோ! ''குழந்தைகளே, நன்றி. எனது ஆசிரியர் திறமையை மேம்படுத்தும் ஆசிரியர்களாக உங்களைப் பார்ப்பது தற்செயல் அல்ல!'' இத்தகைய பரிசோதனைகளை இனி மேற்கொள்வதில்லை, கூட்டான மகிழ்ச்சியைத் தராதபடி பாடங்களை நடத்துவதில்லையென முடிவு செய்தேன். பின்வருமாறு எனக்கு நானே முடிவு செய்து கொண்டேன்:

தூக்கம் மற்றும் சோர்வின் கடவுளாகிய மோர்பேயை வகுப்பறையிலிருந்து விரட்டும் பொருட்டு மோமூஸ் எனும் சிரிப்பு, மகிழ்ச்சிக் கடவுளை அடிக்கடி பாடங்களுக்கு அழைக்க வேண்டும்.

குழந்தைகள் பாடவேளைகளில் எப்போது மகிழ்ச்சியடைகின்றனர்?

என்னிடம் கால்பந்து உள்ளது.

''நான்கையும் ஐந்தையும் கூட்டினால் எவ்வளவு வரும்?''

கால்பந்து அறையின் வலது மூலைக்குச் செல்கிறது. யார் இதைப் பிடிக்கின்றார்களோ அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

''ஒன்பது!'' என்று அதைப் பிடித்த சிறுவன் பதில் கூறி விட்டு பந்தைத் திரும்பி எறிந்தான்.

''ஒன்பதிற்கும் மூன்றிற்கும் இடையிலான வித்தியாசம் எட்டு. சரியா?'' பந்து நடு பெஞ்சுகளை நோக்கிச் செல்கிறது.

''தப்பு! ஒன்பதிற்கும் மூன்றிற்கும் இடையிலான வித்தியாசம் ஆறு.''—பந்து திரும்ப என்னிடம் வருகிறது.

''எந்த மூன்று எண்களைச் சேர்த்தால் பத்து வரும்?''

''ஏன் பந்து?'' என்று எனக்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடும். ''இக்கணக்குகளை பந்தின்றித் தீர்க்க முடியாதா?''

நிச்சயமாக பந்தின்றியே பதில் சொல்லியிருப்பார்கள். ஆனால் உற்சாகம் இருந்திருக்காது.

''தலையைத் தொங்கப் போடுங்கள். கண்களை மூடுங்கள்... நான் உங்களுக்குக் கணக்குகளைச் சொல்வேன். நீங்கள் தலையை உயர்த்தாமல் விடையைக் கை விரல்களால் காட்டுங்கள்.''

குழந்தைகள் தலைகளைத் தொங்கப் போட்டனர், கண்களை மூடிக் கொண்டனர். நான் மெதுவான குரலில் சொல்கிறேன்:

''நான் ஒரு எண்ணை மனதில் வைத்திருக்கிறேன். இதனுடன் 3ஐச் சேர்த்தால் 8 வரும். என் மனதில் உள்ள எண் எது?''

ஐந்து விரல்களுடன் பலர் கைகளை உயர்த்துகின்றனர். கையை உயர்த்திய ஒவ்வொருவரையும் நான் அணுகி, விரல்களைத் தொட்டபடியே மெதுவாகக் கூறுகிறேன்: ''சரி! தவறு! சரி! நன்கு யோசி!''

''நான் ஒரு எண்ணை நினைத்துள்ளேன். இதிலிருந்து

4ஐக் கழித்தால் 3 எஞ்சும். நான் நினைத்துள்ள எண் எது?''

இப்போது குழந்தைகள் இரு கரங்களையும் உயர்த்தி நான் நினைத்த எண்ணை விரல்களால் காட்டுகின்றனர். ''சரி! சரி! தவறு! சரி!'' மீண்டும் நான் அவர்களின் விரல்களைத் தடவியபடியே காதுகளில் கூறுகிறேன்.

தலைகளைத் தொங்கப் போடுமாறு ஏன் நான் குழந்தைகளிடம் கூறுகிறேன்? சாதாரணமாக உட்கார்ந்த நிலையில் இவர்களால் கணக்குகளைப் போட முடியாதா என்ன? நிச்சயமாக முடியும். ஆனால் இந்த உற்சாகம் இருக்காது.

''இதே போன்ற கணக்குகளை நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்'' என்று நான் குழந்தைகளிடம் கூறுகிறேன்.

''2+8ன் கூட்டுத் தொகையையும் 6+4ன் கூட்டுத் தொகையையும் ஒப்பிடுங்கள்'' என்று ஒரு சிறுவன் கூறுவான்.

''வெகு சுலபம்!'' என்று கரும்பலகையில் கணக்கை எழுதியபடியே உச்சரிக்கிறேன்: ''$2+8>6+4$. யாராவது இதை விடக் கடினமான கணக்கைச் சொல்லுங்கள்.''

ஆனால் குழந்தைகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

''என்ன விஷயம்?.. ஓ, மன்னியுங்கள், 'குறைவானது' என குறியிட வேண்டுமல்லவா...''

வகுப்பறையில் மீண்டும் அதிருப்தி.

''என்ன நடந்தது?.. தவறா?'' என்று கரும்பலகையில் எழுதியதைக் கவனமாகப் பார்ப்பது போல் பாவனை செய்கிறேன். ''ஆமாம்... 2ஐயும் 8ஐயும் கூட்டினால் 11 வரும், 6ஐயும் 4ஐயும் கூட்டினால் 10 வரும்.'' எனவே, ''பெரியது'' என்ற குறிக்குப் பதில் ''சிறியது'' என்ற குறியை இடுகிறேன்.

''இரண்டும் சமமானவை... சமம் என்ற குறியிட வேண்டும்... சமக்குறி... பத்தும் பத்தும் சமம்!'' என்று குழந்தைகள் கத்துகின்றனர்.

குழந்தைகளுடைய ''கலகத்தின்'' காரணம் எனக்கு ஒரு வழியாகப் புரிகிறது.

''மன்னியுங்கள்! இங்கே சமக்குறி அல்லவா இருக்க வேண்டும். பத்தும் பத்தும் சமம்...''

இது என்ன சொந்த செல்வாக்கைக் குறைத்துக் கொள்ளும் முறை என்று நீங்கள் கேட்கக் கூடும். எதற்கு இந்த நடிப்பு? ''2+8ன் கூட்டுத் தொகைக்கும் 6+4ன் கூட்டுத் தொகைக்கும் இடையில் என்ன குறியிட வேண்டும்?'' என்று

சாதாரணமாகக் கேட்டிருந்தால் அவர்கள் எவ்விதக் குழப்பமும் இன்றி சமக்குறி இட வேண்டுமெனக் கூறியிருப்பார்கள். விஷயம் அத்துடன் முடிந்திருக்கும். இங்கோ குழந்தைகள் பொங்கியெழுகின்றனர், வகுப்பறையில் ஒரே சத்தம்! இதெல்லாம் எதற்கு?

ஆம், மற்ற ஆசிரியர்கள் பல சமயங்களில் இன்னமும் பின்பற்றும் சடத்துவம் பலமானது. இதைப் பற்றி மாபெரும் ருஷ்ய எழுத்தாளரும் ஆசிரியருமான லேவ் டால்ஸ்டாய் பின்வருமாறு கூறினார்: குழந்தைகள் படிக்க வசதியான வகையில் பள்ளிகள் அமைக்கப்படுவதில்லை, மாறாக, ஆசிரியர்களுக்குச் சொல்லித் தர வசதியாகப் பள்ளி அமைக்கப்படுகிறது.

ஒரு ஆசிரியரைப் பொறுத்தமட்டில், திட்டவட்டமான கேள்விகளைக் குழந்தைகளிடம் கேட்டு அதற்கு சரியான, தெளிவான, முழு பதில்களைப் பெறுவது எளிது. குழந்தைகள் படித்தாக வேண்டும், அவர்களுக்கு வேறு வழியில்லை. எனவே, கேள்வி கேள், அவர்கள் மண்டைகளைப் பிய்த்துக் கொள்ளட்டும். பின் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் குறுகிய, நீண்ட நேரங்களுக்கு அவர்கள் எதைப் படித்துள்ளார்கள் என்று கேள்விகள் கேள். எவ்வித் ''தந்திரங்களும்'' தேவையில்லை. ''சொல்லித் தருவது ஆசிரியர்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு'' எல்லாவற்றையும் சுலபமாக முடித்து விடலாம்.

விஞ்ஞான அறிவை கிரகிப்பது, பன்முகத் திறமைகளை வளர்ப்பதன் அவசியம் பற்றி ஏதாவது அவசரமாகக் கூற அஞ்சுகிறேன். ஞானம், திறமைகள், பழக்கங்கள்! மனிதன் வாழ்விலும் வேலையிலும் ஆக்கப் பணியிலும் இவை எவ்வளவு முக்கியமானவை! பல பொருட்களையுடைய எண்களில் வெளிப்படும் இவை எல்லாம் மிகுந்திருந்த போதிலும் இவை மட்டுமே தனிநபரை உருவாக்கப் போதாதவை. குறிப்பிட்ட அளவு ஞானம் இல்லாவிடில் தனிநபர் நிலவ முடியாது, ஆனால் வளம் மிகு ஞானம் மட்டுமே தனிநபரை உருவாக்கி விடுவதில்லை. ஏனெனில், யதார்த்தத்தின் பால், மனிதர்களின் பால், சுற்றியுள்ளவர்களின் பால், ஞானத்தின் பால் மனிதனுக்கு உள்ள **உறவுதான்** இவனைத் தனிநபராக்குகிறது. தன் செயல்முனைப்பு மற்றும் உலகக் கண்ணோட்

டத்தால்தான் அவன் தனிநபராகிறான். தனிநபர் என்பது போராடும் மனிதனைக் குறிக்குமே தவிர சற்றும் பிறழாது கண்மூடித்தனமாகத் தன் கடமைகளை நிறைவேற்று பவனைக் குறிக்காது. போராளியாக விளங்க நவீன, பன்முக ஞானமும், மாறி வரும் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் இவற்றைப் பயன்படுத்தும் திறமைகளும் பழக்கங்களும் தேவை.

''பழைய பிரெஞ்சுப் பாடலுக்கேற்ப'' வகுப்பறையில் நடனமாடும் இந்தச் சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களில் ஞானத்தையும் உறவுமுறைகளையும் எப்படி இரண்டறக் கலந்து ஊட்டுவது, இவர்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் தனிச் செயல்முனைப்பை எப்படி ஊக்குவிப்பது? இந்தப் பாதை எவ்வளவு சிக்கலானது என்று என் ஆசிரியர் அனுபவம் காட்டுகிறது. நான் என் வகுப்புக் குழந்தைகளுடன் இப்பாதையின் ஆரம்பத்தில் நிற்கிறேன். நாங்கள் இப்பாதையில் முதலடிகளை எடுத்து வைக்கின்றோம். நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவர்கள் இப்பாதையில் மெதுவாக ஊர்ந்து செல்லும்படி கட்டாயப்படுத்தி, அவர்களின் புகார்களைக் கண்டும் காணாமல் இருப்பதா? வேறு பாதை கிடையாது, என்ன நேர்ந்தாலும் எல்லா தடைகளையும் கடக்க வேண்டும் என்பதைக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தைகளே, உங்களுக்கு விளையாடப் பிடிக்குமா? விளையாட்டுதானே உங்கள் வாழ்க்கையின் அடிப்படை. மிக்க நன்று. உங்களுடன் விளையாடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. நாம் என்ன விளையாட்டு விளையாடுவது? நீங்கள்—குழந்தைகள், பள்ளி மாணவர்கள், நான்—உங்க்ள் ஆசிரியர், பெரியவர். நான் சொல்லித் தருகிறேன், நீங்கள் கற்றுக் கொள்கின்றீர்கள், நான் கணக்குகளைத் தர நீங்கள் அவற்றைப் போடுகின்றீர்கள், நான் கேள்விகளைக் கேட்க, நீங்கள் பதில் சொல்கின்றீர்கள். ஏன் சோர்வடைகின்றீர்கள்? இப்படி விளையாட மாட்டார்களா? இது விளையாட்டில்லையா? ஏன், இதிலென்ன தவறு? இந்த விளையாட்டில் எல்லாமே உண்மை என்பதாலா? அதாவது நான் உண்மையில் ஆசிரியர், நீங்கள் உண்மையில் மாணவர்கள் என்பதாலா? இங்கே கற்பனைக்கும், மாற்றங்களுக்கும் இடம் இல்லை, இங்கே கற்பனைப் பாத்திரங்கள் கிடையாது. அப்படித்தானே? நான் உங்களைச் சரியாகப் புரிந்து கொண்

டேனா? சரி, அப்போது வேறு விதமாகச் செய்வோம். நாமனைவரும் நண்பர்கள்; நீங்கள் என் சக ஊழியர்கள், கருத்தாழமுள்ள, வயது வந்த மனிதர்கள்; நான் கவனக் குறைவான, ஞாபகமறதியுள்ள ஆசிரியனாக இருக்கிறேன், நீங்கள் என்னை விட்டு விடாமல், கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நான் விளையாட்டில் முன்னின்று விளையாடுபவன். இந்தக் கற்பனை நிலையை யதார்த்தமாக்க உங்களுக்கு உதவுகிறேன்; நீங்கள் உண்மையிலேயே வயது வந்த, விளை யாட்டுத்தனமற்ற நபர்கள் என்று நீங்கள் நம்ப உதவுகிறேன். இவ்வாறு ஒன்றாகச் சேர்ந்து நம் பாடங்களைப் ''படைப் போம்'' வாருங்கள். ''தாய்நாடு'' எனும் சொல்லில் எவ் வளவு எழுத்துகள் உள்ளன என்று எனக்குத் ''தெரியாது''. ஐந்து எழுத்துகளா? ஏழு எழுத்துகளா? இதில் கடைசி எழுத்திற்கு முந்தைய எழுத்து எது? **நா** எனும் எழுத்தா, **ய்** எனும் எழுத்தா?.. பத்து மணி நேரமாக கார் நிறுத்தும் ஓரிடத்தில் ஒவ்வொரு மணி நேரமும் எட்டு கார்கள் வந்து, ஏழு கார்கள் வெளியேறின என்றால் அங்கு எவ்வளவு வாக னங்கள் எஞ்சியுள்ளன? இதுவும் எனக்குத் தெரியாது! நீங் கள் ஏன் இவ்வளவு அவசரப்படுகின்றீர்கள்? என்னால் உங்களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை! நீங்கள் பத்து கார்கள் என்கின்றீர்கள், எனக்கோ ஒன்பது கார்கள் என்று படுகிறது!

நீங்கள் மகிழ்ச்சியை விரும்புகின்றீர்கள். உங்களுக்கு எது மகிழ்ச்சி தருகிறது? சாக்லேட்டா? புதிய விவரங்களைத் தெரிந்து கொள்வதா? நிச்சயமாக இரண்டும் மகிழ்ச்சி தருவ தாகும். புதியவற்றைத் தெரிந்து கொள்ளும் மகிழ்ச்சியை —கல்வி கற்கும்போது தோன்றும் இடர்ப்பாடுகளை அகற்று வதன் மூலம்—அளிப்பதை நான் என் கடமையாகக் கருது கிறேன். நான் கல்வியை உங்கள் தலைகளில் ''புகுத்தும்'' வழி களைத் தேடவில்லை, மாறாக, நீங்கள் என்னிடமிருந்து இவற்றை ''எடுத்துக் கொள்ள'' முயலும்படி செய்ய, என் னுடன் ''அறிவுச் சண்டை'' போட்டு இவற்றை கிரகிக்குமாறு செய்ய, இடைவிடாத தேட்டங்களின் மூலம், அயராத வேட் கையின் மூலம் இவற்றைப் பெறுமாறு செய்ய நான் பாடுபடு கிறேன். இவற்றை செயல்படுத்தும் பொருட்டு நான் உங்கள் அறிதல் பாதையில் தடைகளை வைப்பேன், நீங்கள் உங்கள்

மூளையைப் பயன்படுத்தி இவற்றைக் கடக்க வேண்டும்.

புதியவற்றைத் தெரிந்து கொள்வதில் ஏற்படும் சண்டைகளினால் உண்டாகும் குழந்தைகளின் சிரிப்பு நம் பாடங்களுக்கு அழகூட்டும். இப்படிப்பட்ட சிரிப்பு இவ்வாறு புதியவற்றைத் தெரிந்து கொள்வதை ஊக்குவிப்பதோடன்றி, புதிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வழிகளில் ஒன்றாயும் இந்நிகழ்ச்சிப் போக்கின் விளைவுகளில் ஒன்றாயும் இருப்பது என் அனுபவத்திலிருந்து எனக்குத் தெரியும். சிரிப்பு மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் சிறந்த முறையாகும். தேவையற்று இச்சிரிப்பு பாடவேளைகளிலிருந்து அகற்றப் பட்டுள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. பல ஆசிரியர்கள், புதியவற்றைத் தெரிந்து கொள்வதில் ''சண்டைகளை'' மூட்டி விட்டு சிரிப்பை வரவழைப்பதற்குப் பதில் இதை விரட்டியடிக்கின்றனர். என்னைப் பொறுத்த மட்டில் குழந்தைகளின் சிரிப்பு ஒரு ஆசிரியரின் முக்கியப் பிரச்சினையாகும், என் பாடவேளைகளில் இவர்கள் அடிக்கடி ''கருத்தாழத்தோடு'' சிரிப்பார்கள். நகைச்சுவையான படக்கதைகளைச் சொன்னால் வகுப்பறையில் சிரிப்பு வெடிக்கும். ''ஏன் நீங்கள் சிரிக்கின்றீர்கள்? இதில் சிரிப்பதற்கென்ன உள்ளது?'' என்று நான் கேட்டதும் குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு விஷயத்தை விவரிப்பார்கள், அது ஏன் சிரிப்பிற்கிடமானது என்று விளக்குவார்கள். நாங்கள் சேர்ந்து சிரிப்போம். இதே திருப்தியை, மகிழ்ச்சியை பெற்றோர்களுக்கும் குடும்பத்தினருக்கும் விளக்குமாறு—விஷயத்தை வார்த்தைகளால் விவரிக்குமாறு—நான் கேட்டுக் கொள்வேன். ''உங்களால் மற்றவர்களைச் சிரிக்க வைக்க முடிந்தது என்றால், உங்களால் நன்றாக, உள்ளது உள்ளபடி கதை சொல்ல முடியுமென்று பொருள்'' என்று நான் குழந்தைகளிடம் சொல்வேன்.

''பிழைகளைக்'' கண்டுபிடிக்குமாறு அவர்களிடம் சொல்லி நான் வேண்டுமென்றே தப்பாகப் படித்துக் காட்டும் போது குழந்தைகள் சிரிப்பார்கள். அவர்கள் தாம் சொல்வது சரி என்று நிரூபிக்கும் வரை நான் விடாப்பிடியாகத் தீவிரமாக நிற்பேன். பின் அவர்களை எனக்குக் கணக்கு தரச் சொல்லி வேண்டுமென்றே நான் அவற்றை தவறாகப் போடும் போதும் அவர்கள் சிரிப்பார்கள். என் ''தவறு'' என்ன என்று அவர்கள் சிரிப்புடன் நிரூபிப்பார்கள்.

அனேகமாக சிரிப்பு என்பது நம்பிக்கையை வெளிப் படுத்தவும் நிலையை ஊர்ஜிதப்படுத்தவும் சிறந்த வழிகளில் ஒன்றாயிருக்கும். குழந்தைகளுடனான பணியில் நான் இதை இப்படித்தான் பார்ப்பேன். மகிழ்ச்சிகரமான சிரிப்பை குழந்தைகளிடம் வரவழைப்பதற்காக மட்டும் நான் ''தவறு செய்யப்'' போவதில்லை. எனது ''தவறுகள்'' குழந்தையின் சிந்தனையைத் தட்டி விடும். குழந்தைகள் என்னுடன் விவா தம் செய்யத் துவங்குவார்கள், நான் ஒப்புக் கொள்வேன்: ''நீங்கள் சொன்னது சரி... என்னை மன்னிக்கவும்!''

நான் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? ஆசிரியர் தவறிழைத்து விட்டுப் பின் குழந்தைகள் முன் மன்னிப்பு கேட்கலாம், குழந்தைகள் ஆசிரியருடன் விவாதிக்கலாம் என் பதை ஆசிரியரியல் ஒப்புக் கொள்கிறதா என்ன? இது பற்றி இப்போது என்னால் ஒன்றும் சொல்ல இயலாது. இது புதிய வற்றை அறிய உயிர்த்துடிப்புள்ள, சுவாரசியமான பாதை யென அனுபவம் எனக்குச் சொல்கிறது. குழந்தைகள் இதை மேம்படுத்த எனக்கு உதவுவார்கள்.

தம் கருத்து நிலைகளை, கண்ணோட்டங்களை, தமது சொந்த தனித்துவத்தை என்னிடமில்லாது வேறு யாரிடம் இவர்களால் நிலைநாட்ட முடியும்? என்னுடன் நடத்தும் விவாதங்களில் இல்லாமல் வேறு எதில் இவர்கள் தம் அறிவு வெற்றியின் மகிழ்ச்சியை, உண்மையைக் கண்டறிந்த சந்தோஷத்தை அடைவார்கள்?

ஆறு வயதுக் குழந்தைகளுடனான ''அறிவுச் சண்டை யில்'' வெற்றி பெறுவது அவ்வளவு கடினமா என்ன! ஆனால், ''அறிவுச் சண்டையின்றி'' இதற்கான தயாரிப்பு முகமாக சலிப்பான ''தேர்வுகளை'' முடித்து விட்டு அவர்கள் அன் றாடம் பள்ளியிலிருந்து திரும்புவதால் யாருக்கு என்ன பயன்?

சிக்கலான கணக்குகளைப் போட நான் குழந்தை களுக்குக் கற்றுத் தருவேன். அதே சமயம் நான் ''தவறிழைப் பேன்''. பாவனை நயத்தோடு படிக்கச் சொல்லித் தருவேன். பின் அவர்கள் நான் படிக்கும் போது என்னைத் திருத்துவார் கள். சதுரங்கம் விளையாடக் கற்றுக் கொள்வேன், பின்னர் அவர்கள் என்னை வெற்றியடையும் போது மகிழட்டும்.

அவர்கள் புதியவற்றை அறிந்து கொள்வதன் மீது ஆர் வம் காட்டுவார்கள். ''உங்களுக்கு எந்த மாதிரிக் கணக்கு களைத் தரட்டும்? சிக்கலான, கடினமான கணக்குகளையா,

எளிய, சாதாரணமான கணக்குகளையா?'' என்று கேட்கையில் ''சிக்கலான, மிகச் சிக்கலான கணக்குகளைத் தாருங்கள்'' என்று ஒருமித்த குரலில், வீராவேசமாக அவர்களிடமிருந்து பதில் வரும். எல்லோராலும் கணக்குகளைப் போட முடியாவிடில் பரவாயில்லை! ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு எல்லோரையும் உயர்த்தப் பாடுபட வேண்டும். குழந்தை சிந்தனை உலகில் மூழ்குவான், புதியவற்றை அறிய முற்படுவான்.

குழந்தைகளே, நீங்கள் விரைவிலேயே பள்ளி வாழ்க்கையை விரும்பத் துவங்குவீர்களென நம்புகிறேன். நீங்கள் பாடங்களின் மீது ஆர்வம் காட்டுவீர்கள். பாடங்கள் உங்கள் வாழ்க்கையின் உட்பொருளாகும். எனது செல்வாக்கைப் பொறுத்தமட்டில், உங்களது நல்லறிவையும் நுட்பமான மனதையும் நான் நம்புகிறேன். அனேகமாக, நான் எப்படிப் பட்ட ஆசிரியர் என்று உங்கள் மத்தியில் விவாதம் தோன்றக் கூடும்.

''நீங்கள் எவ்வளவு நகைச்சுவையுணர்வு மிக்கவர்!'' என்பாள் மாரிக்கா. ''நீங்கள் எங்களுக்கு எப்போதும் எவ்வளவு சிரிப்பு வரவழைக்கின்றீர்கள் தெரியுமா?''

''இல்லை!'' என்று அவளுடன் விவாதம் செய்வான் சாஷா. ''அவர் மிகவும் புத்திசாலியானவர்.''

''நீங்கள் அனேகமாக நூறுக்கு மேற்பட்ட நூல்களைப் படித்திருப்பீர்கள், அப்படித்தானே?'' என்று போன்தோ என்னைக் கேட்பான்.

''நீங்கள் ஏன் தப்பு செய்கின்றீர்கள்? உண்மையிலேயே உங்களுக்கு இந்த எளிய சொற்களை எழுதத் தெரியாதா?'' என்று தேன்கோ ஆச்சரியப்படுவான்.

''நீ என்ன, அவர் வேண்டுமென்றேதான் தப்பு செய்கிறார்'' என்று என்னைப் பாதுகாப்பான் கோச்சா.

''நீங்கள் வேண்டுமென்றேதான் தவறு செய்கின்றீர்களா? ஏன்?'' என்று புரியாமல் கேட்பாள் ஏக்கா.

''நான் விட்டம் என்றால் என்ன என்று சொல்லித் தந்தேனே உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று கீகா தம் பட்டம் அடித்துக் கொள்வான்.


நீ ஒன்றும் அவருக்குச் சொல்லித் தரவில்லை, அவருக்கு எல்லாமே தெரியும்'' என்று மாயா மறுப்பாள்.

''அவரும் மனிதர் தானே, அவருக்கு எப்படி எல்லாவற்றையும் அறிந்து நினைவில் வைத்துக் கொள்ள முடியும்? இது முடியாது, இல்லையா?'' என்று இராக்ளி என்னைக் கேட்பான்.

என் அன்புக் குழந்தைகளே, இப்படிப்பட்ட உங்களுடைய சந்தேகங்களில்தான் உங்கள் கண்களில் என் செல்வாக்கு வளரும். உங்கள் ஆசிரியரும் ஒரு மனிதர், உங்களுக்குத் தேவையானவர் என்பது புரியும். நான் விருப்பமானவராக இருந்தால் இதை விட உயர்ந்த அங்கீகாரம் உங்கள் மத்தியில் எனக்குத் தேவையில்லை.

இப்படிப்பட்ட முறைக்கெதிராக குரல் எழுப்பும் பாரம்பரிய போதனைமுறையைப் பொறுத்த வரை, அது கிடக்கட்டும். உங்கள் மீதான நம்பிக்கை எப்போதும் தொடர்ச்சியாக இருக்க எனக்கு உதவும்.

இப்போது, அடுத்த 15 நிமிடப் பாடவேளை துவங்கும் போது நான், கடைசி பெஞ்சில் தாத்தோ அருகே உட்கார்ந்து, கரும்பலகையை மூடியுள்ள திரையை விலக்கி வலது பகுதியைக் காட்ட யாரிடமாவது சொல்வேன். அங்கே பின்வருமாறு வரையப்பட்டிருக்கும்:



''குழந்தைகளே, எனக்கு ஆறு முக்கோணங்கள் தெரிகின்றன!''

''முக்கோணங்கள் அல்ல சதுரங்கள்'' என்று உங்களில் யாராவது என்னைத் திருத்தக் கூடும்.

''ஆமாம், ஆமாம், சதுரங்கள்! நான் என்ன சொன்னேன்?.. அங்கே ஆறு சதுரங்கள் வரையப்பட்டுள்ளதாக எனக்குப் படுகிறது. சரியா?..''

...5 நிமிட இடைவேளையின் கடைசி நொடிகள். நம்

கல்விப் பாதையில் தொடர்ந்து செல்ல வேண்டும். இன்னுமொரு கட்டத்தை அனேகமாக நாம் கடக்கக் கூடும்.

''மாரிக்கா, மடி மீதிருந்து இறங்கு. சஷாா, நமது மணியை எடுத்து அடி.''

''டிங், டிங், டிங்!''—இனிய மணியோசை ஒலிக்கிறது.

### சிந்திக்கும் மனிதனைப் பார்ப்பதே மகிழ்ச்சி

''குழந்தைகளே, எனக்கு ஆறு முக்கோணங்கள் தெரிகின்றன.''

''அவை முக்கோணங்கள் அல்ல சதுரங்கள்'' என்று ஒரு சில குரல்கள் ஒலிக்கின்றன.

''ஆமாம், ஆமாம், சதுரங்கள். என்னைத் திருத்தியதற்கு நன்றி. கவனமாகப் பாருங்கள். அங்கே எவ்வளவு சதுரங்கள் உள்ளன? ஆறா? ஏழா?''

''ஆறு!'' என்று சிலர் அவசரமாகக் கூறுகின்றனர்.

''ஏழு!'' என்று இன்னும் சிலர் கத்துகிறார்கள்.

ஏன் ஆறு வயதுக் குழந்தைகளின் நாக்கு இப்படி சிந்தனையை முந்துகிறது? மற்றவர்கள் சிந்திக்க இடையூறாக இவர்கள் தம் பதிலை உரக்கச் சொல்வதில் மட்டும் விஷயம் இல்லை. சாதாரணமாக நடைமுறையில் ஆசிரியர்கள் பாடவேளைகளின் போது வரும் இப்படிப்பட்ட கூச்சல்களை எளிய வழிகளில் கட்டுப்படுத்தி விடுவார்கள்: கட்டுப்பாட்டை மீறியதற்காக குழந்தைகளைக் கண்டிப்பார்கள், கை உயர்த்தவும் கேட்கும் வரை காத்திருக்கவும் சொல்லித் தருவார்கள். ஆனால் இதனால் என்ன மாறுகிறது? பதிலின் உட்பொருள் அடையப்படும் பொழுது இது நல்ல வழி. குழந்தை தன் பதிலை யோசித்து, சரிபார்த்து, வார்த்தைகளைக் கண்டுபிடித்து, பின் கையை உயர்த்திக் கூப்பிடும் வரை அமைதியாகக் காத்திருப்பான். ஆனால் பிரச்சினை என்னவெனில் குழந்தையால் அமைதியாகக் காத்திருக்க இயலாது, விஷயத்தை இன்னமும் முழுமையாக அறிந்துணரவில்லை, ஆனால் அதற்குள்ளாகவே மற்றவர்களை முந்திக் கொண்டு பதில் சொல்ல அவசரப்படுகிறான். பல நேரங்களில் நான் கேள்வி கேட்பதற்காக வாயைத் திறந்ததுமே குழந்தைகளின் கரங்கள் உயரும். ''நான் என்ன கேட்கப் போகிறேன் என்றே உங்களுக்குத் தெரியாதே'' என்று நான் ஆச்சரியப்படுவேன்.

அனேகமாக அவர்களுக்குப் பதில் சொல்வதுதான் முக்கியமே தவிர, என்ன கேள்வி, பதில் சரியா என்பதெல்லாம் அவ்வளவு முக்கியமல்ல.

அவர்கள் ஆசிரியரின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல எப்போதும் ''தயார்''. அவர்களுடைய மூளை நாக்கிற்கு ''இடம் மாறியது'' போன்றும், எல்லா சிக்கலான கேள்விகளுக்கும் பதில்கள் ஏற்கெனவே ''தயார்'' போன்றும் அவை நாக்கின் நுனியில் உள்ளன போன்றும் தோன்றும். இதோ, அவர்கள், பதில்கள் தவறு என்பதைப் பற்றிச் சிந்திக்காமலேயே ''ஆறு'', ''ஏழு'' என்று கத்துகின்றனர். சிந்திக்கவில்லை, ஆனால் பதில் சொல்கின்றனர், சொல்ல அவசரப்படுகின்றனர்.

ஒருவேளை தம் ஆசிரியருடன் கலந்து பழக முயலுகின்றார்களோ? மற்றவர்களிடமிருந்து தனித்துத் தம்மை வெளிப்படுத்த ஒருவேளை விரும்புகின்றார்களோ? அல்லது சிந்திக்க வேண்டுமென அவர்களுக்குத் தெரியாதோ, அல்லது எப்படி சிந்திப்பதெனத் தெரியாதோ? இவர்களுடைய நடவடிக்கைகளின் திடீர் எழுச்சிகள் ஒரு புறமிருக்க இவர்களுடைய யோசனையற்ற கூச்சல்களுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எனவே, நான் இக்கூச்சல்களை வெறுமனே கட்டுப்படுத்த வேண்டியதில்லை. குழந்தைகள் சரியான பதிலைச் சொல்லும் போது, உண்மையைக் கண்டறிந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் போது இவை அவ்வளவு பயங்கரமானவையல்ல. ஒருவன் உண்மையைக் கண்டறிந்ததும் இதை மற்றவர்களுக்குச் சொல்ல அவசரப்படுவது இயல்பே. ஏதாவது ஒரு விஷயத்தில் முதன்முதலாகக் கண்டுணரவும் இதற்காக மகிழ்ச்சியடையவும் உரிமையுண்டு. சரி, குழந்தைகள் திடீரென எதையாவது புரிந்து கொண்டதும், உண்மை''பிடிக்கப் பட்டதும்'' அல்லது கண்டுபிடிக்கப்பட இருக்கையில் கையை உயர்த்தியபடி எனது பொறுமையான அழைப்பிற்காக அவர்கள் அமைதியாக உட்கார்ந்திருக்கும்படி எப்படி செய்வது? ''குழந்தைகளே, கூச்சல் போடாதீர்கள், என்னைக் கூப்பிடாதீர்கள், சத்தம் போடாதீர்கள், அமைதியாக உட்காருங்கள்'' என்று அவர்களிடம் எப்படிச் சொல்வது? எல்லோரும் பதில் சொல்ல விரும்பும் போது முதலாவதாக நான் (உதாரணமாக) தாத்தோவிற்கு பதில் சொல்ல வாய்ப்

பளித்தால், அதன் மூலம் உண்மையைக் கண்டுபிடித்ததில் தாத்தோவிற்கு முதல் இடத்தை செயற்கையாக அளிக்க வில்லையா? ஒவ்வொருவரும் ''கொலம்பசாக'' முடியும். அப்படியிருக்கையில் எனது நடவடிக்கையின் மூலம் நான் தேர்ந்தெடுக்கும் ஒருவனை ''கொலம்பசாக்குகிறேன்''. இது நியாயமா? இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லோரை யுமே ''கொலம்பசாக்கவே'' நான் விரும்புகிறேன். நான் வகுப்பறையின் நடுவில் நின்று கொண்டு, எல்லோரும் ஒரே குரலில் பதில் சொல்லும் வாய்ப்பைத் தருகிறேன். அப் போது எல்லோருக்கும் திருப்தி.

எனவே, கூச்சல்களை அடக்க வேண்டியதில்லை, யோசிக்கப்படாத பதில்களுக்குத்தான் முடிவு கட்ட வேண் டும். இதை நளினமாகச் செய்ய வேண்டும். ''யோசியுங்கள், யோசியுங்கள்'' என்று நான் குழந்தைகளுக்குச் சொல்வது உதவி புரியுமா? எப்படி யோசிப்பது என்று அவர்களுக்கு நன்கு சொல்லித் தராவிடில், உண்மையை அறியும் போக்கு தனியாக முன் நிற்பதைக் காட்டிலும் முக்கியமானதாகும் படி அவர்களுடன் நான் கலந்து பழகாவிடில் இது சாத்திய மில்லை.

இதை எப்படிச் செய்வது?

எல்லோர் முன்னும் அடிக்கடி வாய் விட்டு யோசித்து நடந்து கொள்வேன்; இதன் மூலம் எப்படி யோசிப்பது, செயல்படுவது என்று நடைமுறையில் காட்டுவேன்.

அவர்களிடம் விசேஷக் கேள்விகளைக் கேட்பேன். நன்கு சிந்திக்காமல் இவற்றிற்கு பதில் சொல்ல முடியாது. தொடர்ச்சியான மூளை நடவடிக்கைகளைத் திட்டமிட அவர்களுக்கு உதவுவேன்.

அவர்கள் சுதந்திரமாக விவாதிக்க, நிரூபிக்க, மறுக்க, சந்தேகிக்கத் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்துவேன்.

யோசிக்கவும் சிந்தனையில் பதில்களை முடிவு செய்யவும் அவர்களை பழக்கப்படுத்துவேன். அப்போது, இவற்றிற்குப் பின்தான் பதில் சொல்லும் பழக்கம் வரும்.

நன்கு சிந்திக்க, யோசிக்க, ''அவசரப்பட்டு பேசாம லிருக்க'' ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள நாட்டத்தை பலப் படுத்துவேன்.

இப்போது ''ஆறு'', ''ஏழு'' என்ற கூச்சல்களின் மீது நான் கவனம் செலுத்தவில்லை. எனது கருத்தை சரிபார்ப்

பதில் இறங்குகிறேன்—எனக்குள் முணுமுணுத்தபடியே படத்தில் உள்ள சதுரங்களை எண்ணுகிறேன். நான் செய்வதையே குழந்தைகளும் திரும்பச் செய்கின்றனர். நான் இன்னமும் சதுரங்களை எண்ணிக் கொண்டிருக்க, பலர் ஏற்கெனவே சரியாக எண்ணி விட்டனர்:

''ஆறல்ல, ஐந்து சதுரங்கள்தான்.''

''நான்கு சிறிய சதுரங்களும் ஒரு பெரிய சதுரமும்.''

''நீங்கள் ஏழு சதுரங்கள் என்று சொன்னீர்கள், அங்கு ஐந்துதான் உள்ளன.''

சில நிமிடங்களுக்கு முன் லேலா நன்கு சிந்திக்காமல் ''ஏழு சதுரங்கள்'' என்று கத்தியதைக் கேட்டேன்.

''லேலா, அங்கு ஐந்து சதுரங்கள்தான் உள்ளன என்று உன்னால் நிரூபிக்க இயலுமா? ஒருவேளை, மூக்குக் கண்ணாடி இல்லாததால் எனக்குச் சரியாகத் தெரியவில்லையோ, அங்கு ஏழு சதுரங்கள் உள்ளதாக எனக்குப் படுகிறதோ?''


லேலா, தான் ''ஏழு சதுரங்கள்'' என்று கத்தியதையே மறந்து விட்டாள். இப்போது அவள் சரியாக எண்ணினாள். ஓடி வந்து எல்லாவற்றையும் காட்டுகிறாள்.

''ஆம், நான் சரியாகப் பார்க்கவில்லை. நன்றி. சரி, அங்கு ஐந்து சதுரங்கள் உள்ளன?..''

நான் கரும்பலகையை நோக்கிச் செல்கிறேன்.

''இப்போது இன்னமும் சிக்கலான ஒரு கேள்வி. இங்கே நான் சில சதுரங்களை வரைந்திருக்கிறேன், ஆனால் இவற்றை எண்ண முடியவில்லை. நீங்கள் கவனமாகப் பார்த்து எண்ணி என் காதில் மெதுவாகச் சொல்லுங்கள்.''

கரும்பலகையின் இன்னொரு பகுதியைத் திறக்கிறேன், அங்கு பின்வருமாறு வரையப்பட்டுள்ளது:



''பதில் சொல்ல அவசரப்படாதீர்கள்!'' என்று குழந்தைகளை எச்சரித்து விட்டு, நானும் கணக்கில் ஈடுபடுகிறேன். வகுப்பறையின் நடுவே நின்று கொண்டு விரலால் சுட்டிக் காட்டியபடி ''ஒன்று, இரண்டு, மூன்று...'' என்று எனக்குள்ளேயே எண்ணுகிறேன்.

ஒரு சிலர் பதில் சொல்வதற்காக என்னை ஏற்கெனவே அழைக்கின்றனர். ''நான்கு'', ''எட்டு'', ''பன்னிரண்டு'', ''நூறு'', ''மூன்று'' என்று ஏராளமான தப்புப் பதில்கள் வருகின்றன. தம் பதிலைச் சரிபார்க்குமாறு ஒவ்வொருவர் காதிலும் சொல்கிறேன். சிலருக்கு ஒன்பதாவது சதுரத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறேன், இது படத்தின் மையத்தில் உள்ளது, சிவப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளது. இதைத்தான் பலர் கவனிக்கவில்லை.

ஒரு நிமிடம் கூடக் கழியும் முன், ரகசியம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. இந்தக் ''கண்டுபிடிப்பாளர்களால்'' பதிலைக் கூச்சலிட்டுக் கூறாமல் இருக்க முடியவில்லை.

''எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள்!'' என்று கூறியபடியே சைகை காட்டுகிறேன்.

''எட்டு!.. ஒன்பது!''

8 மற்றும் 9 என்று நான் கரும்பலகையில் எழுதுகிறேன்.

''இங்கு எட்டு சதுரங்கள் உள்ளன என்று கூறுபவர்கள் கைகளை உயர்த்துங்கள்!'' கிட்டத்தட்ட பாதிப் பேர் கைகளை உயர்த்தினர். ''இப்போது, ஒன்பது சதுரங்கள் உள்ளன என்று கருதுபவர்கள் கைகளை உயர்த்துங்கள்!'' எஞ்சியவர்கள் கைகளை உயர்த்தினர்.

இரு தரப்பின் சார்பாயும் மாக்தாவையும் மாயாவையும் கரும்பலகைக்கு அழைக்கிறேன்.

''நிரூபியுங்கள்!''

''இங்கே ஒன்பது சதுரங்கள் உள்ளன'' என்கிறாள் மாயா.

''இல்லை, எட்டு!'' என்று மற்றவர்கள் கத்துகின்றனர்.

''இதோ பாருங்கள்!'' என்று மாயா ஒவ்வொரு சதுரமாக அடையாளக் குச்சியால் சுட்டிக் காட்டத் துவங்குகிறாள். ''ஒன்று, இரண்டு, மூன்று... ஒன்பது!'' இறுதியாக, மையத்தில் உள்ள சிறு சிவப்பு சதுரத்தைச் சுட்டிக் காட்டுகிறாள்.

''ஓ!'' என்று ஒரு பாதியினர் பெருமூச்சு விடுகின்றனர்.

"நாங்கள் சொன்னதுதான் சரி!" என்று மற்றப் பகுதியினர் மகிழ்கின்றனர்.

"இப்போது குனிந்து கண்களை மூடுங்கள்" என்கிறேன் நான்.


உடனே வகுப்பறையில் சத்தம் நின்றது. கணக்குப் போட்ட போது தோன்றிய உணர்ச்சிகளிலிருந்து குழந்தைகளின் கவனம் திரும்புகிறது. இப்போது வேறு கேள்வியைக் கேட்கலாம். வரிசைகளின் இடையே நடந்தபடியே மெதுவாகச் சொல்கிறேன்:

"இன்னமும் சிக்கலான கணக்கைத் தரட்டுமா?"

"தாருங்கள்!"

"நான் கரும்பலகையில் A, B என்று இரண்டு தொகுதி சதுரங்களை வரைந்தேன். எந்தத் தொகுதியில் சதுரங்கள் அதிகம் என்று சொல்லுங்கள். நீங்கள் எப்படி சிந்திப்பீர்களென நான் உங்கள் முகங்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அனேகமாக சிலரின் முகங்கள் கருத்தாழம் மிக்கவையாக, ஒருமுனைப்படுத்தப்பட்டவையாக இருக்கும். சரிபார்க்காத எதையும் வாய் சொல்லும்படி விட்டு விடாதீர்கள். நான் கரும்பலகையில் உள்ள திரையை விலக்குகிறேன்.) நிமிருங்கள். பாருங்கள், சிந்தியுங்கள்."

கரும்பலகையில் பின்வருமாறு வரையப்பட்டிருக்கிறது:





குழந்தைகள் என்ன பதில் சொல்வார்கள்?

அனேகமாகப் பெரும்பாலோர் A தொகுதியில் B தொகுதியில் உள்ளதை விட அதிக சதுரங்கள் உள்ளன என்று கூறுவார்கள். கண்டிப்பாக இவர்கள் எண்ணிக்கையையும்

பரப்பளவையும் குழப்புவார்கள். ‘‘எவ்வளவு’’ என்பதை ‘‘பரப்பளவில் பெரிய’’ என்று ஏற்றுக் கொள்வார்கள்.

சமீபத்தில் இதே மாதிரி கேள்விகளைக் கேட்ட போது அனைவரும் சரியாகப் பதில் சொல்லவில்லை. கரும்பலகையில் வரையப்பட்டிருந்த மூன்று சிறிய, இரண்டு பெரிய பேரிக்காய்களைக் காட்டிக் கேட்டேன்:


‘‘எங்கே பேரிக்காய்கள் அதிகமுள்ளன? வலப்புறமா, இடப்புறமா?’’



‘‘வலது புறம்!’’ என்று கூறினார்கள்.

‘‘வாருங்கள், எண்ணிப் பார்ப்போம்!’’ என்றேன் நான்.

எண்ணினோம்: இடது புறம்—மூன்று, வலது புறம்—இரண்டு. பேரிக்காய்களின் படத்தின் கீழ் நான் எண்களை எழுதினேன்:




‘‘எது அதிகம், மூன்றா, இரண்டா?’’

‘‘மூன்று அதிகம்!’’ என்றனர் குழந்தைகள்.

‘‘அப்படியெனில் எங்கே பேரிக்காய்கள் அதிகம் உள்ளன—இடதுபுறமா, வலதுபுறமா?’’

‘‘வலதுபுறம்.’’

‘‘ஏன்?’’

குழந்தைகள் எனக்கு விளக்கினார்கள்: வலதுபுறம் உள்ளவை அளவில் பெரியவை, இடதுபுறம் சிறியவை.

அப்போது சாஷா மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை.

''தப்பு!'' என்றான் அவன். ''இடதுபுறம் மூன்றும் வலது புறம் இரண்டும் உள்ளன. எனவே, இடதுபுறம்தான் அதிகம்.''


நான் வகுப்பறையின் குறுக்காக நடந்து சென்று சிறுவனை நோக்கிக் கையை நீட்டினேன். அவன் கையைப் பிடித்துக் குலுக்கினேன். சாஷா புரியாதபடியே கையை நீட்டினான். வகுப்பில் உள்ளவர்கள், என்ன நடந்தது என்று ஆர்வத்தோடு பார்த்தார்கள்.

''நீ யோசித்து பதில் சொன்னதற்கு நன்றி, சாஷா. நீ என்னை மிகவும் சந்தோஷப்படுத்தினாய்.''

சாஷாவோடு சேர்ந்து நாங்கள் கரும்பலகையை அணுகினோம்.

''பாருங்கள், சாஷா எப்படி யோசிக்கிறான்!.. சாஷா, இங்கே எந்த இடத்தில் அதிக வட்டங்கள் உள்ளன என்று சொல் பார்க்கலாம்'' என்று கூறியபடியே இரண்டு ஓரங்களிலும் உள்ள கரும்பலகைகளைத் திறந்து காட்டி, நடுவில் உள்ளதை மூடினேன்.

இடதுபுறமுள்ள பலகையில் ஆறு வட்டங்கள் ஒன்றுக்குள் ஒன்றாக வரையப்பட்டிருந்தன. வலதுபுறமுள்ள பலகையில் வட்டங்கள் எல்லா இடங்களிலும் வரையப்பட்டிருந்தன. சிறுவன் இரு பலகைகளிலும் உள்ள படங்களை கவனமாகப் பார்க்கத் துவங்கினான்.



''சாஷா, எங்கே எனக்கு உதவி செய்.இப்போதுஇங்குள்ளவர்களுக்கு என்னை விட அதிகமாக உன்னால் உதவ முடியும். இப்போது இவர்களுக்கு நீதான் தலைசிறந்த ஆசிரியர்'' என்று எனக்குள் நான் எண்ணிக் கொண்டேன்.

நான் வகுப்பறையின் நடுவில் நின்றபடி முழு நிசப்தத்தில் மெதுவாகப் பேசினேன்:

''பாருங்கள், அவன் எப்படி கவனமாக நோக்குகிறான்... அவன் ஒன்றுமே பேசவில்லை, கவனித்தீர்களா!.. தவறு செய்யாமலிருப்பதற்காகத் தன் நாக்கை அடக்கிக் கொண்டு நிற்கிறான்.''

சாஷா இடது பலகையை அணுகி வட்டங்களை விரல் விட்டு எண்ணுகிறான். நான் குழந்தைகளிடம் மெதுவாகச் சொல்கிறேன்.

''பார்த்தீர்களா, அவன் தன்னைத் தானே சரிபார்த்துக் கொள்கிறான்.''

''சாஷா, இப்போது தயவு செய்து தப்பு செய்து விடாதே! மனிதனுக்குச் சிந்திப்பது எவ்வளவு முக்கியம், அவசியம், சிந்திக்கும் மனிதனைப் பார்க்க எவ்வளவு அழகாக உள்ளது என்று எல்லாக் குழந்தைகளுக்கும் காட்ட வேண்டியது மிக மிக அவசியம்'' என்று என் மனதிற்குள்ளாகவே சாஷாவை நோக்கி கூறிக் கொண்டேன்.

சாஷா வகுப்பை நோக்கித் திரும்பினான்; அவன் கண்கள் சுருங்கியிருக்கின்றன, ஜன்னல் வழியே எங்கோ பார்க்கின்றன.

ஒன்றுக்குள் ஒன்றாக வட்டங்களிருந்த பலகையைக் காட்டி ''இதில் 6 வட்டங்கள் உள்ளன'' என்றும் அடுத்த பலகையைக் காட்டி ''இதில் 5 வட்டங்கள் உள்ளன'' என்றும் ''எனவே, முதல் பலகையில் அதிக வட்டங்கள் உள்ளன'' என்றும் கூறுகிறான்.

சிலர் சாஷாவுடன் விவாதித்தனர்: ''இல்லை, ஓரிடத்தில் 6 வட்டங்களும் இன்னொரு இடத்தில் 5 வட்டங்களும் இருந்தால் என்ன; வலதுபுற பலகை பூராவும் வட்டங்கள் உள்ளதால் அங்குதான் இவை அதிகம். இங்கு பார்த்தாயா எவ்வளவு வெற்றிடம்!''

ஆனால் சாஷா தான் சொல்வதே சரியெனப் பிடிவாதம் பிடித்தான். வகுப்பில் தனக்கு ஆதரவாளர்களைக் கண்டு பிடித்தான். ''என்ன வித்தியாசம்? வட்டங்கள் சிதறிக் கிடந்தால் என்ன, ஒன்றுக்குள் ஒன்றாக இருந்தால் என்ன? ஆறு எப்பவுமே ஐந்தை விட அதிகம்!'' என்றனர் அவர்கள்.

...ஒரு சில நாட்களுக்கு முன் இப்படியிருந்தது. இன்று இதே விஷயத்திற்கு நான் திரும்பி வருகிறேன்.

''நிமிர்ந்து பாருங்கள், யோசியுங்கள்!''

ஆனால் குழந்தைகள் தலையைத் தூக்கி படத்தின் மீது கண்பார்வை பட்டதுமே பலர் கைகளைத் தூக்கினர்.

''பாருங்கள், இலிக்கோ எப்படி யோசிக்கிறான். அவன் பதில் சொல்ல அவசரப்படவில்லை. நீங்களும் முதலில் யோசியுங்களேன்?''

எல்லோரும் கைகளைக் கீழே போடுகின்றனர், கரும் பலகையை கவனமாக உற்று நோக்கும் இலிக்கோ மீது கண்பார்வைகள் செல்கின்றன. அவன் தனக்குள்ளாகவே ஏதோ கூறியபடி விரலால் சுட்டிக்காட்டி சதுரங்களை எண்ணுகிறான்:

ஒரு நிமிட சிந்தனை... குழந்தைகள் மீண்டும் கைகளை உயர்த்துகின்றனர். ஒவ்வொருவரின் அருகேயும் குனிந்து பதிலைக் கேட்கிறேன். B என்ற தொகுதியை விட A தொகுதியில் சதுரங்கள் அதிகமிருப்பதாக ஏற்கெனவே 6 அல்லது 8 குழந்தைகள் என் காதில் சொல்லி விட்டனர். ''இல்லை, தப்பு'' என்று ஒவ்வொருவர் காதிலும் நான் திரும்பச் சொன்னேன். ஆனால் ஏக்கா, B என்ற தொகுதியில் பத்து சதுரங்களும் A தொகுதியில் ஒன்பதும் இருப்பதாக என் காதில் கூறினாள்.

''ஏக்கா சரியாகச் சொன்னாள்'' என்று கூறுகிறேன். ''நன்றி, ஏக்கா!'' என்று அவள் கையைப் பற்றிக் குலுக்குகிறேன்.

நீக்கா, இராக்ளி, நாத்தோ, இயா, கீயா, மாக்தா முதலானோர் தவறாக பதில் சொன்னார்கள். ''ஒவ்வொரு தொகுதியிலும் எவ்வளவு சதுரங்கள் என்று எண்ணிப் பாருங்கள்!'' அவர்களுக்கு நான் யோசனை சொல்கிறேன். கீகா, சான்த்ரோ, தேயா, மாயா, நீயா, தேன்கோ ஆகிய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உரக்க ''நன்றி'' சொல்லி, கரங்களைப் பற்றிக் குலுக்குகிறேன்.

யோசித்து, நல்ல விடையை கண்டுபிடித்து, அதைச் சொல்லி நிரூபிக்கும் போது நான் குழந்தைகளுக்கு ''நன்றி'' சொல்லி அவர்களின் கரங்களைப் பற்றிக் குலுக்குகிறேன்.

கல்வியின் பால் ஆர்வத்தையும், சுய முயற்சியையும், சிந்தனையையும், துணிவையும் விடாமுயற்சியையும் குழந்தை வெளிப்படுத்தும் போது நான் குழந்தைக்கு ''நன்றி'' சொல்கிறேன். தன் வளர்ப்பிலும் கல்வியிலும் இதன் மூலம்

அவனே என் உதவியாளனாகிறான். குழந்தையின் ஒவ்வொரு முயற்சியையும், தன் வளர்ச்சியில் இன்னுமொரு கட்டத்திற்கு உயர அது மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் ஊக்குவிக்க வேண்டும். எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் நட்பையும் வெளிப்படுத்துவதை விட இதற்கு வேறு வழி எனக்குத் தெரியாது.

...சரி, இன்றுள்ள நிலை என்ன? என் வகுப்புக் குழந்தைகளால் இந்த இடையூறுகளைக் கடக்க முடியும். அனேகமாக பயிற்சியும் கல்வியும் இப்போக்கை விரைவுபடுத்தக் கூடும்.

''வாருங்கள், A தொகுதியில் எவ்வளவு சதுரங்கள் உள்ளன என்று எண்ணுவோம்'' என்று நான் முன்மொழிகிறேன்.

ஒன்றுசேர்ந்து எண்ணினோம். ஒன்பது சதுரங்கள் இருக்கின்றன. இதைப் படத்தின் கீழ் எழுதுகிறேன்.

B தொகுதியில் உள்ள சதுரங்களை எண்ணினோம். அதில் பத்து சதுரங்கள் இருக்கின்றன. இதை அந்தப் படத்தின் கீழ் எழுதுகிறேன்.

''எதில் அதிக சதுரங்கள் உள்ளன?''

''B தொகுதியில்'' என்று வகுப்பு முழுவதும் சேர்ந்து சொல்லுகிறது. சிறிது நேரத்திற்கு முன்னர்தான் வேறுவிதமாகக் கூறிய குழந்தைகள் கூடத் தம்மை மாற்றிக் கொண்டனர்.

''அப்படியெனில் A தொகுதியில் அதிக சதுரங்கள் உள்ளதாக ஏன் ஒரு சிலருக்குத் தோன்றியது?''

தான் ஏன் தவறு செய்தேன் என்று மாக்தா எப்படி விளக்கப் போகிறாள்!

''இதில் பலகை முழுவதும் சதுரங்கள் சிதறிக் கிடப்பதால் B தொகுதியை விட இதில் அதிக சதுரங்கள் இருப்பதாக எனக்குப் பட்டது.''

இராக்ளி (இவனும் முதலில் தவறான பதிலைச் சொன்னான்) பின்வருமாறு கூறுகிறான்: ''அவை எப்படி சிதறியுள்ளன என்று பார்க்க வேண்டாம், அவற்றை எண்ணி ஒப்பிட வேண்டும். சிந்திக்க வேண்டும்!''

''ஆம், எப்போதும் யோசித்துப் பார்க்க வேண்டும்.


இப்படிப்பட்ட கேள்விகள் உங்களுக்குப் பிடித்துள்ளன என்று எனக்குத் தெரிகிறது.''


''ஆம், மிகவும் பிடித்துள்ளன.''


''அப்படியெனில், யாருக்கெல்லாம் விருப்பம் உள்ளதோ அவர்கள் எல்லாம் பாடங்கள் முடிந்த பின் என்னிடம் வாருங்கள். இப்படிப்பட்ட கேள்விகள் பல அடங்கிய பாக்கெட்டைத் தருவேன்.''

எல்லோரும் இப்பாக்கெட்டை வாங்க விரும்பினார்கள். அவர்கள் இரண்டு முறை இப்படிப்பட்ட கேள்விகளை வீட்டிற்கு எடுத்துச் சென்றனர், இதோ இப்போது மீண்டும் கேட்கின்றனர். ஆண்டு பூராவும் பல்வேறு விதமான கேள்விகளை பாக்கெட்டுகளில் பன்முறை தருவேன்; ஒவ்வொரு முறையும் ''யாருக்கு வேண்டும்... விருப்பமிருந்தால்!..'' என்று கூறிய பின்தான் தருவேன். கடினமான அல்லது எளிதான கேள்விகள் வேண்டுமா என்பதை அவர்களே முடிவு செய்யும்படி விட்டு விடுவேன். ஓரிரு நாட்களுக்குப் பின் பதில்கள் வந்ததும் அவற்றை அந்தந்த குழந்தையோடு சேர்ந்து ஓய்வு நேரத்தில் சரிபார்ப்பேன், பின் அவரவரைப் பற்றிய தனிக் கோப்பில் அவற்றைச் சேர்ப்பேன்.

இம்முறை பின்வரும் கேள்விகள் அடங்கிய அட்டைகளை பாக்கெட்டுகளில் போட்டேன்:









''கவலைப்படாதீர்கள். விருப்பப்படும் அனைவருக்கும் பாக்கெட் கிடைக்கும். இப்போது வடிவ கணிதப் படங்கள் உள்ள பெட்டிகளைத் திறந்து வையுங்கள்.''

''ஓ!'' என்று உற்சாகம்.

ஒவ்வொரு பெஞ்சின் மீதும் ஒவ்வொரு குழந்தைக்கும் முன்னும் சிறிய, தட்டையான பிளைவுட் பெட்டி உள்ளது (பெற்றோர்களுக்கு நன்றி!). அதில் ''மந்திர'' விளையாட்டுகள் உள்ளன. பேராசிரியர் பி.இ. ஹச்சாபுரீத்ஸே இவற்றைக் கண்டுபிடித்தார். இவற்றில் வட்டம், முக்கோணம், சதுரம், செவ்வகம், முட்டையுரு ஆகிய வடிவங்களாலான அட்டைகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மூன்று அளவுகளும் (பெரிய, நடுத்தர, சிறிய) நான்கு நிறங்களும் (சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள்) உள்ளன. ஆக 12 வட்டங்கள், 12 முக்கோணங்கள்... என்று மொத்தமாக 60 அட்டைகள் பெட்டியில் உள்ளன.




முதலில் எளிய கட்டளைகளைத் தந்தேன். ஒரே வித மான வடிவங்கள், பெரிய அல்லது சிறிய வடிவங்கள், சிவப்பு, பச்சை... நிறங்கள் போன்றவற்றை மட்டும் தனியே எடுக்கும்படி சொன்னேன்... ஒவ்வொரு முறையும் குழந்தை கள் அந்தந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட வடிவங் களை மட்டும் பகுப்பாய்வு செய்தனர். பின், இரண்டு குணங்கள் (அளவு, நிறம்), மூன்று குணங்களுக்கேற்ப (வடி வம், அளவு, நிறம்) அட்டைகளைச் சேர்க்க சொல்லித் தந்தேன், அட்டைகளுக்கிடையே ஒற்றுமையையும் வேற்று மையையும் கண்டுபிடிக்கச் சொல்லித் தந்தேன்.அதே சமயம் எல்லா வடிவங்களின் பெயர்களையும் குழந்தைகள் கற்று வந்தனர்.

இப்படிப்பட்ட கணக்குகளைப் போட்ட பின் கற்பனை யில் இறங்குமாறு அவர்களுக்கு முன்மொழிந்தேன்: இவற் றைக் கொண்டு உதாரணமாக விமானங்கள், விண்வெளி ராக்கெட்டுகள், கப்பல்கள், கார்கள், வீடுகள் போன்ற வற்றைக் கட்டுமாறு கூறினேன். நானும் அவர்களோடு சேர்ந்து கற்பனையில் மூழ்கினேன்: மேசையிலிருந்த பெரிய வடிவங்களை எடுத்து கப்பல்களையும் கார்களையும் கட்டி னேன். சிலருக்கு என் ''கற்பனைகள்'' பிடிக்கவில்லை, இவற்றில் ஏதோ சரியில்லை, பொருத்தமில்லை என்று கண்டுபிடித்தனர், இவற்றைச் சரி செய்து, மேம்படுத்த உதவினர்.

இரண்டு நாட்களுக்கு முன் சிக்கலான கணக்கைக் கொ டுத்தேன்.

'' கண்களை மூடுங்கள்... இப்போது உங்களிடம் இரண்டு நேர்க்கோண முக்கோணங்கள் இருப்பதாக

வைத்துக் கொள்ளுங்கள். இவற்றை ஒன்றுடன் ஒன்று சேர்த்தால் என்ன வடிவம் கிடைக்கும்?''

ஒரு நொடி நிசப்தம் நிலவியது.

லாலி கண்களைத் திறக்காமலேயே சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொண்டாள்:


''முக்கோணங்கள் ஒரே மாதிரியானவையா?''

''ஆமாம், ஆமாம். தெளிவுபடுத்தியதற்கு நன்றி.''


குழந்தைகள் நிமிர்ந்து என் காதில் தம் பதில்களைச் சொல்லத் துவங்கினர். வகுப்பு முழுவதும் சுற்றி வந்ததும் நான் வியப்புடன் குழந்தைகளிடம் கேட்டேன்:

''இது எப்படி சாத்தியம்? சிலருக்கு மீண்டும் முக்கோணம் வருகிறது, சிலருக்குச் செவ்வகம் கிடைக்கிறது, சிலருக்கோ சதுரம், நாற்கோணம் வருகிறது...''

நாங்களனைவரும், இரண்டு சமமான நேர்க்கோண முக்கோணங்களை எடுத்துக் கொண்டு இவற்றை இணைக்கத் துவங்கினோம். மூன்று வெவ்வேறு விதமான வடிவங்கள் கிடைத்தன. இவற்றை நான் கரும்பலகையில் வரைந்தேன்:



வெவ்வேறு விதமாக குழந்தைகள் முயற்சி செய்தனர். ஆனால் கரும்பலகையில் வரையப்பட்டுள்ள வடிவங்களே தான் மீண்டும் மீண்டும் கிடைத்தன. சில சமயங்களில் இவை ஒன்றுடன் ஒன்று வேறுவிதமாக இணைந்திருந்தன. உதாரணமாக, பின்வருமாறு இருந்தது:



இப்படிப்பட்ட தீர்வு முன்மொழியப்பட்டது:



''இது பாய்மரக் கப்பல்!'' என்றனர் குழந்தைகள்.

சுருங்கச் சொன்னால், வரைகணித வடிவங்களுடனான விளையாட்டு குழந்தைகளுக்குப் பிடித்திருந்தது. இரு முறை இப்பெட்டிகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று விளையாட அனுமதியளித்தேன். ஒரு வாரத்திற்குப் பின் இவற்றை அவர்களுக்கே தந்துவிடுவேன். வகுப்பறைக்கு இவை இனி தேவையில்லை. வீட்டில் இவற்றை வைத்துக் குழந்தைகள் நிறைய விளையாடுவார்கள்.

இன்று, கவனம் மற்றும் விமரிசனப் பார்வையை வளர்க்கும் இரண்டு அல்லது மூன்று கட்டளைகளை அவர்களுக்குத் தருவேன்.

''உங்கள் முன் உள்ள பெட்டியிலிருந்து இதோ இந்த வடிவத்தை எடுங்கள்.''

பெரிய கறுப்பு நிற சதுரத்தைக் காட்டுகிறேன். கறுப்புச் சதுரம் யாரிடமும் கிடையாது.

''அடுத்து...'' என்று சொல்லியபடியே, இப்படிப்பட்ட சதுரம் இல்லையென யார் சொல்வார்கள் என்று நான் கவனிக்கிறேன். ''அடுத்து, இதோ இதை எடுங்கள்!'' என்று பெரிய சிவப்பு நிற முக்கோணத்தைக் காட்டுகிறேன்.

**வாஹ்தாங்:** ''எப்படி கறுப்பு சதுரத்தை எடுப்பது? எங்களிடம்தான் கறுப்பு நிற வடிவங்களே இல்லையே!''

**நான்:** ''நான் கறுப்புச் சதுரத்தையா எடுக்கச் சொன்னேன்?''

**குழந்தைகள்:** ''நீங்கள் கறுப்புச் சதுரத்தைக் காட்டுகின்றீர்கள், எங்களிடம் கறுப்பு நிறமே இல்லை!''

நான் ''தவறு'' செய்ததை ''இப்போதுதான் உணர்ந்தேன்''.

''இல்லையில்லை, இதுவல்ல, இதோ இது!'' என்று கூறியபடியே சிவப்பு நிற பல்கோணத்தைக் காட்டுகிறேன். ஆனால் சிலர் சிந்தித்தனர்.

''இது என்ன வடிவம்? இது எங்களிடம் இல்லையே.''

''ஏன், உங்களிடம்தான் சிவப்பு வடிவங்கள் உள்ளனவே.''

**சூரிக்கோ:** ''சிவப்பு வடிவங்கள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் காட்டும் வடிவம் இல்லை.''

**ஏக்கா:** ''இந்த வடிவத்தின் பெயரென்ன?''

**நான்:** ''இது சதுரமல்லவோ?'' என்று நான் கேள்வியைக் கண்டு ''வியப்படைகிறேன்''. பின் கையில் உள்ள வடிவத்தைக் கவனமாகப் ''பார்க்கிறேன்''. ''ஓ, மன்னி

யுங்கள்... மீண்டும் தவறு. இது பல்கோணம். எனக்கு என்ன வேண்டும் தெரியுமா... (மேசையில் தேவையான வடிவத்தைத் தேடுகிறேன்) இதோ இந்த மாதிரி வடிவம்!'' என்று பெரிய சிவப்புச் சதுரத்தைக் காட்டுகிறேன்.

குழந்தைகள் சிவப்புச் சதுரங்களை எடுத்து எனக்குக் காட்டி விட்டுத் தம் முன் வைக்கின்றனர்.

''இதோ இம்மாதிரியான வடிவத்தையும் எடுங்கள்!'' என்று பெரிய சிவப்பு நிற முக்கோணத்தைக் காட்டுகிறேன். '' இவ்வடிவங்களை அருகே வைத்துக் கொண்டு, இந்த சதுரத்தில் இம்மாதிரியான முக்கோணங்கள் எவ்வளவு அடங்குமென கண்டுபிடியுங்கள்.''

''இரண்டு!''

''சரிபாருங்கள்.''

குழந்தைகள் சரிபார்க்கின்றனர்: பெரிய சதுரத்திற் குள் பெரிய முக்கோணங்களை வைக்கின்றனர்.

''சரியாக இரண்டு முக்கோணங்கள் அடங்கின!''

''எல்லோரும் ஒப்புக் கொள்கின்றீர்களா?.. மிக நல்லது. அந்த இரண்டு முக்கோணங்களையும் ஓரமாக வைத்து விட்டு இதோ இந்த வடிவத்தை எடுங்கள்!'' என்று நடுத்தர அளவுள்ள சிவப்பு முக்கோணத்தைக் காட்டுகிறேன். ''இதை சதுரத்தின் அருகே வையுங்கள். இதே மாதிரி எவ்வளவு முக்கோணங்கள் சதுரத்தினுள் அடங்குமென கண்களா லேயே கணித்துச் சொல்லுங்கள்.''

சிலர் மூன்று என்றும் சிலர் நான்கு என்றும் சிலர் ஐந்து, ஏன் ஆறு என்றும் கூறுகின்றனர்.

''சரிபாருங்கள்.''

குழந்தைகள் அதே முறையில் சரிபார்க்கின்றனர்: நடுத் தர அளவுள்ள முக்கோணங்களை சதுரத்தினுள் வைக் கின்றனர். சதுரத்தினுள் நான்கு முக்கோணங்கள் அடங்குவ தாகப் பலர் கூறுகின்றனர். சிலருக்கோ முக்கோணங்கள் சதுரத்தினுள் அடங்கவேயில்லை.

நானும் இதற்குக் கரும்பலகையில் விடை கண்டுபிடிக்க ''முயல்கிறேன்'', வாய்விட்டு யோசிக்கிறேன், ''கஷ்டப்படு கிறேன்'', குழந்தைகள் சொல்லித் தருகின்றனர், முடிவாக விடை கண்டுபிடித்தாகி விட்டது.

''அந்த முக்கோணங்களை ஒரு ஓரமாக வைத்து விட்டு இதோ இந்த வடிவத்தை எடுங்கள்!'' என்று சிறிய சிவப்பு

முக்கோணத்தைக் காட்டுகிறேன். ''இதையும் பெரிய சிவப்பு சதுரத்தின் அருகே வைத்து, எவ்வளவு இப்படிப்பட்ட முக் கோணங்கள் அதனுள் அடங்குமெனக் கண்களாலேயே கணித்துச் சொல்லுங்கள்.''

இக்கணக்கைப் போட குழந்தைகள் கஷ்டப்படுகின்ற னர். 5,6,8,10,12,20 என்று தோன்றிய விடையைச் சொல் கின்றனர்.

''வைத்துப் பார்க்கும் அளவு இவ்வளவு சிறு முக் கோணங்கள் நம்மிடமில்லை. இதை எப்படி செய்யலாம் என்று யோசித்து பதில் சொல்லுங்கள்.''

இல்லை, என் வகுப்பிலுள்ள ஆறு வயதுக் குழந்தை களுக்கு, தம் கல்வியின் முதல் மாத இறுதியில், நடுத்தர மற்றும் பெரிய முக்கோணங்களை அளவுகோலாகப் பயன் படுத்தலாம் என்று தெரியாது. சரி, நாளையோ, நாளைய மறுநாளோ இதற்குத் திரும்பி வருவோம். இதற்கான தீர்வை அவர்களே ''கண்டுபிடிக்க'' உதவும் வழியை நான் முடிவு செய்தாக வேண்டும்.

''நல்லது! இந்தக் கணக்கை நாளை போட முயற்சிப் போம். இப்போது இந்த வடிவங்களிலிருந்து ஏதாவதொரு பூவின் பல்வண்ணப் பட்டையை உருவாக்குங்கள்.''


''ரயில் வண்டி செய்யலாமா?''


''யாருக்கு விருப்பமோ அவர்கள் ரயில் வண்டியையோ வேறு எதையாவதையோ செய்யுங்கள்.''


குழந்தைகளின் பல்வண்ணப் பட்டையைப் பார்த்து ஆமோதிக்கிறேன், திருத்துகிறேன், ஆலோசனை கூறு கிறேன்.


கணிதப் பாடவேளையின் பதினைந்தாவது நிமிடம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது.


பின் இன்னுமொரு கணித மினி-பாடம் உண்டு. ஒவ் வொருவருக்கும் ஒரு வேலைத் தாள் தரப்படும்: படங் களின்படி கணக்குகளை உருவாக்கி விடை கண்டுபிடித்து, எழுத வேண்டும். வேலைத் தாள் இப்படிப்பட்டது:


1 


2


3


4


5


6

இப்படிப்பட்ட வேலைகளை நான் இதற்கு முன் தரவில்லை. ஒருவேளை கடினமாக இருக்குமோ? ஒருவருடன் ஒருவர் கலந்தாலோசித்தோ என்னுடன் கலந்து பேசியோ இவற்றைச் செய்ய நான் அனுமதியளிப்பேன். எங்களுடைய மினி-பாடவேளையின் போது நிச்சயமாக எல்லோராலும் ஆறு கணக்குகளையும் போட முடியாது. ஒரு சிலர்

இவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று, வகுப்பில் போட முடியாதவற்றை வீட்டில் செய்ய விரும்புவார்கள்.

''வடிவங்களை உள்ளே போடுங்கள்!.. எழுந்திருங்கள்!.. சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பதை மறந்து விட வேண்டாம்.''

நீண்ட இனிய பள்ளி மணியொலி கேட்கிறது.

### ஆசிரியரின் நொடிகளைப் பிரித்தல்

எனது சக ஆசிரியர்கள் முதலில் 15 நிமிடப் பாட வேளைகளை சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர்.

''உங்கள் பாடங்கள் எப்படி நடக்கின்றன?'' என்று அவர்கள் அடிக்கடி ஆர்வத்தோடு கேட்டனர்.

''ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை... என்னால் முடியவில்லை'' என நான் சொல்வேன் என்று அவர்கள் எதிர் பார்த்தனர்.

என்றாலும் இப்படிப்பட்ட பதிலுக்காகக் காத்திராமல் மினி-பாடவேளைகளுக்கு வர விருப்பம் தெரிவித்தனர்.

ஆம், அவர்களுக்கு உயிரோட்டமுள்ள, கச்சிதமான, உணர்ச்சிகளும் சிந்தனைகளும் நிரம்பிய இந்தப் பாட வேளைகள் பிடித்துப் போயின. குழந்தைகள் களைப்படைவதில்லை, ஒரே விதமான சலிப்பு இல்லை. அன்றாடம் பாட வேளைகளும் இடைவேளைகளும் கிட்டத்தட்ட இன்றிருந்த மாதிரி இருக்கும்.

### செவ்வாய்க்கிழமை

1. தாய் மொழிப் பாடம் (ஜார்ஜிய மொழி).
   ஐந்து நிமிட வகுப்பு இடைவேளை: இசைக்கேற்ப நடனமாடுமாறு குழந்தைகளிடம் கூறுகிறேன்.
   கணிதப் பாடம்.
   பள்ளி இடைவேளை (10 நிமிடங்கள்).
2. ருஷ்ய மொழிப் பாடம்.
   ஐந்து நிமிட வகுப்பு இடைவேளை: இசைப் பின்னணியில் ருஷ்ய கிராமியக் கதையைக் குழந்தைகள் கேட்கும்படிச் செய்கிறேன்.
   கணிதப் பாடம்.
   பெரும் பள்ளி இடைவேளை (30 நிமிடங்கள்): தூய காற்றில் உலாவச் செல்கிறோம்.



2

3

4

5

6

இப்ப

வில்லை.

ஒருவர் க

இவற்றை

மினி-பாட

ஆறு கன

3. ருஷ்ய மொழிப் பாடம்.
ஐந்து நிமிட வகுப்பு இடைவேளை: தலையைக் குனி
கண்களை மூடியபடி ஏதாவது நல்ல, அன்ப
மகிழ்ச்சியான விஷயங்களைப் பற்றி யோசிக்குமாறு
கிறேன்.
தாய் மொழிப் பாடம் (ஜார்ஜிய மொழி).
பள்ளி இடைவேளை (10 நிமிடங்கள்).
4. ஓவிய வகுப்பு (ஓவிய, பாட்டு, இசை, வேலை வ
களும் உடற்பயிற்சி வகுப்புகளும் முழுமையான
தலா 35 நிமிடங்கள்).

இப்படிப்பட்ட பாட அட்டவணை எனக்குப் பல வே
களைக் கூட உண்டாக்குகிறது. பாடவேளைகளின் உ
டமைப்பை நான் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். இந்த
நொடிகளை நன்கு பிரித்து, நல்ல பயனுள்ள கிரியை
படும்படியும் தேவையான சக்தி வெளிப்படும்ப
செய்து,

வாழ்க்கையின் மகிழ்ச்சியும்
புதியவற்றை அறியும் மகிழ்ச்சியும்
கலந்து பழகும் மகிழ்ச்சியும்
வளர்ந்து பெரியவர்களாகும் மகிழ்ச்சியும்

அவர்களுக்கு கிட்டுவதற்கு இதைப் பயன்படுத்த வேண்

குழந்தையால் மகிழ்ச்சிக்காக காத்திருக்க இய
அவனுக்குப் பொறுமையில்லை. அவன் இன்றே, இப்பே
மகிழ்ச்சிகரமானவனாய் இருக்க விரும்புகிறான், இ
வேண்டும். நான் அக்குழந்தையுடன் கலந்து பழகும்
வொரு நொடியும் அவனை மகிழ்ச்சியானவனாக, சந்தே
மானவனாக, புத்திசாலியாக, அனுபவம் உள்ளவ
மாற்றாவிடில் நான் என்ன ஆசிரியர்!

இப்படிப்பட்ட மகிழ்ச்சியை எல்லா குழந்தைகளுக்
சேர்த்தும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் அளி
நான் ஒவ்வொரு பாடவேளை, இடைவேளை குறித்
பல மணி நேரங்கள் சிந்தித்து முடிவு செய்ய வே
யுள்ளது.

ஆசிரியரின் நொடிப்பொழுதுகள் எனக்கு மிகவும் ப
புள்ளவை.

நான் குழந்தைகளை நோக்கி அவசரமாகச் செல்
போது பாடவேளைகளுக்கு முன் என்னை யாரும் தடு
நிறுத்தி தாமதப்படுத்த வேண்டாம்!

மிக அவசியம் இருந்தால் தவிர யாரும் பாடநேரத்தின் ‍து கதவைத் தட்ட வேண்டாம்!

நான் குழந்தைகளுடன் இருக்க வேண்டிய நேரத்தில், ா அவர்களுக்கு அவசியமான போது, யாரும் என்னை ர்களிடமிருந்து பிரிக்க வேண்டாம்!

எது எப்படியிருந்தாலும் நான் யாருக்கும் அடங்கி ்க மாட்டேன்! ஏனெனில், நான் தாயகத்தின் முன், தகுலத்தின் முன், எதிர்காலத்தின் முன் மாபெரும் வை செய்து கொண்டிருக்கிறேன், இதில் பெரிதும் ஈடு டுள்ளேன்.

மினி-பாடவேளைகளில் ஷவியம் அடங்கியிருக்கவில்லை. ரியரின் நொடிப்பொழுதுகளுக்கு உள்ள மதிப்பை அறிந் க்க வேண்டும், இப்பாடவேளைகள் இதற்கு எனக்கு வின. இந்த நொடிப்பொழுதுகளை விழுங்கி ஏப்பம் ம் வெற்று வார்த்தைகளுடன் நான் எப்படி குழந்தை ா அணுக முடியும்? வெற்று வார்த்தைகள் என்றால் ன தெரியுமா?

''இப்போது நான் சொல்லப் போவதைக் கவனி கள்... கவனமாகக் கேளுங்கள்... ஒரு சிறுமி கடையில் று நோட்டுப் புத்தகங்களை வாங்கினாள். புரிந்ததா? று நோட்டுப் புத்தகங்கள்... ஒவ்வொரு நோட்டுப் புத் ்தின் விலையும் இரண்டு கோப்பெக்குகள். அச்சிறுமி று நோட்டுப் புத்தகங்களுக்கு எவ்வளவு காசு தந் ?.. அவசரப்படாதீர்கள். முதலில் யோசியுங்கள், நன்கு சியுங்கள். கணக்கைத் திருப்பிச் சொல்லட்டுமா? ஒரு ட்டுப் புத்தகத்தின் விலை இரண்டு கோப்பெக்குகள் றால் மூன்று நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன?.. ததா? சத்தம் போடாதீர்கள்... எல்லோரும் யோசி கள். அவசரப்படாதீர்கள்!..''

குழந்தைகள் அவசரப்படவில்லை. ஒருவேளை முன்னர் ர்கள் அவசரப்பட்டிருக்கலாம், இன்று பருவநிலை எப் ்பட்டது, மூன்று நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன று சொல்ல முன்னர் முந்திக் கொண்டு வந்திருக்கலாம் ால் இன்று மான் வேகம் ஆமை வேகமாகிவிட்டது. லில் இவர்கள் தெளிவற்ற வார்த்தைகளிலிருந்து மை விடுவித்துக் கொள்ள வேண்டும். நொடிகள் ஓடிக் ண்டிருந்தன. இவற்றை இனி பிடிக்கவே முடியாது,

3. ருஷ்ய மொழிப் பாடம்.
ஐந்து நிமிட வகுப்பு இடைவேளை: தலையைக் குனிந்து, கண்களை மூடியபடி ஏதாவது நல்ல, அன்பான, மகிழ்ச்சியான விஷயங்களைப் பற்றி யோசிக்குமாறு கூறுகிறேன்.
தாய் மொழிப் பாடம் (ஜார்ஜிய மொழி).
பள்ளி இடைவேளை (10 நிமிடங்கள்).

4. ஓவிய வகுப்பு (ஓவிய, பாட்டு, இசை, வேலை வகுப்புகளும் உடற்பயிற்சி வகுப்புகளும் முழுமையானவை, தலா 35 நிமிடங்கள்).

இப்படிப்பட்ட பாட அட்டவணை எனக்குப் பல வேலைகளைக் கூட உண்டாக்குகிறது. பாடவேளைகளின் உள்கட்டமைப்பை நான் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். இந்த 600 நொடிகளை நன்கு பிரித்து, நல்ல பயனுள்ள கிரியை ஏற்படும்படியும் தேவையான சக்தி வெளிப்படும்படியும் செய்து,

வாழ்க்கையின் மகிழ்ச்சியும்
புதியவற்றை அறியும் மகிழ்ச்சியும்
கலந்து பழகும் மகிழ்ச்சியும்
வளர்ந்து பெரியவர்களாகும் மகிழ்ச்சியும்

அவர்களுக்கு கிட்டுவதற்கு இதைப் பயன்படுத்த வேண்டும்.

குழந்தையால் மகிழ்ச்சிக்காக காத்திருக்க இயலாது அவனுக்குப் பொறுமையில்லை. அவன் இன்றே, இப்போதே மகிழ்ச்சிகரமானவனாய் இருக்க விரும்புகிறான், இருக்க வேண்டும். நான் அக்குழந்தையுடன் கலந்து பழகும் ஒவ்வொரு நொடியும் அவனை மகிழ்ச்சியானவனாக, சந்தோஷமானவனாக, புத்திசாலியாக, அனுபவம் உள்ளவனாக மாற்றாவிடில் நான் என்ன ஆசிரியர்!

இப்படிப்பட்ட மகிழ்ச்சியை எல்லா குழந்தைகளுக்கும் சேர்த்தும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் அளிக்க, நான் ஒவ்வொரு பாடவேளை, இடைவேளை குறித்தும் பல மணி நேரங்கள் சிந்தித்து முடிவு செய்ய வேண்டியுள்ளது.

ஆசிரியரின் நொடிப்பொழுதுகள் எனக்கு மிகவும் மதிப்புள்ளவை.

நான் குழந்தைகளை நோக்கி அவசரமாகச் செல்லும் போது பாடவேளைகளுக்கு முன் என்னை யாரும் தடுத்து நிறுத்தி தாமதப்படுத்த வேண்டாம்!

மிக அவசியம் இருந்தால் தவிர யாரும் பாடநேரத்தின் போது கதவைத் தட்ட வேண்டாம்!

நான் குழந்தைகளுடன் இருக்க வேண்டிய நேரத்தில், நான் அவர்களுக்கு அவசியமான போது, யாரும் என்னை அவர்களிடமிருந்து பிரிக்க வேண்டாம்!

எது எப்படியிருந்தாலும் நான் யாருக்கும் அடங்கி நடக்க மாட்டேன்! ஏனெனில், நான் தாயகத்தின் முன், மனிதகுலத்தின் முன், எதிர்காலத்தின் முன் மாபெரும் சேவை செய்து கொண்டிருக்கிறேன், இதில் பெரிதும் ஈடு பட்டுள்ளேன்.

மினி-பாடவேளைகளில் ஷவியம் அடங்கியிருக்கவில்லை. ஆசிரியரின் நொடிப்பொழுதுகளுக்கு உள்ள மதிப்பை அறிந் திருக்க வேண்டும், இப்பாடவேளைகள் இதற்கு எனக்கு உதவின. இந்த நொடிப்பொழுதுகளை விழுங்கி ஏப்பம் விடும் வெற்று வார்த்தைகளுடன் நான் எப்படி குழந்தை களை அணுக முடியும்? வெற்று வார்த்தைகள் என்றால் என்ன தெரியுமா?

''இப்போது நான் சொல்லப் போவதைக் கவனி யுங்கள்... கவனமாகக் கேளுங்கள்... ஒரு சிறுமி கடையில் மூன்று நோட்டுப் புத்தகங்களை வாங்கினாள். புரிந்ததா? மூன்று நோட்டுப் புத்தகங்கள்... ஒவ்வொரு நோட்டுப் புத் தகத்தின் விலையும் இரண்டு கோப்பெக்குகள். அச்சிறுமி மூன்று நோட்டுப் புத்தகங்களுக்கு எவ்வளவு காசு தந் தாள்?.. அவசரப்படாதீர்கள். முதலில் யோசியுங்கள், நன்கு யோசியுங்கள். கணக்கைத் திருப்பிச் சொல்லட்டுமா? ஒரு நோட்டுப் புத்தகத்தின் விலை இரண்டு கோப்பெக்குகள் என்றால் மூன்று நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன?.. புரிந்ததா? சத்தம் போடாதீர்கள்... எல்லோரும் யோசி யுங்கள். அவசரப்படாதீர்கள்!..''

குழந்தைகள் அவசரப்படவில்லை. ஒருவேளை முன்னர் அவர்கள் அவசரப்பட்டிருக்கலாம், இன்று பருவநிலை எப் படிப்பட்டது, மூன்று நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன என்று சொல்ல முன்னர் முந்திக் கொண்டு வந்திருக்கலாம் ஆனால் இன்று மான் வேகம் ஆமை வேகமாகிவிட்டது. முதலில் இவர்கள் தெளிவற்ற வார்த்தைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். நொடிகள் ஓடிக் கொண்டிருந்தன. இவற்றை இனி பிடிக்கவே முடியாது,

இவற்றிலிருந்து ஆசிரியருக்குத் தேவையான சக்தியை இனிப் பெறவே இயலாது. விலங்கியல் பூங்காவில் அடைபட்ட ஒரு மானுக்கு துள்ளி குதித்தோடப் போதிய இடம் இல்லா விடில் தன் மீது பாய்ந்து தாக்கவல்ல புலியும் அருகில் ஒரு கூண்டில் அடைபட்டுக் கிடக்கிறது என்பதற்காக மகிழ்ச்சி யடையுமா என்ன?

பாடவேளைகளின் போது வெற்று வார்த்தைகள் என்றால் என்ன?

இது கல்வி போதிக்கும், வளர்க்கும் அரட்டை, ஆசிரியரின் முட்டாள்தனமாகும். இது பறந்து திரிவதற்கென்றே பிறந்துள்ள குழந்தையின் மூளையையும் உரிமைகளையும் ''கட்டிப் போடும்''. இது பறவைகளின் இறக்கைகளைக் கட்டிப் போடும் சிலந்திவலை, மான்களின் கால்களில் இடப்பட்ட விலங்கு. இது புதியவற்றை அறியும் ஆர்வத்தை அணைக்கும், கல்வி மகிழ்ச்சி எனும் தொடர் போக்கைத் தடுத்து நிறுத்தும். ''நேரம் போதவில்லை'' என்று சொல்லும் ஒரு ஆசிரியர் அதே பாடவேளையில் வெற்றுச் சொற்களால் எவ்வளவு நேரம் வீணாயிற்று என்றே யோசிப்பதில்லை.

எனது மினி-பாடவேளைகள் இதைத்தான் (இவற்றிற்கு வேறு நோக்கங்களும் இருந்த போதிலும்) எனக்குச் சொல்லித் தந்தன.

செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் பின்வரும் சுவாரசியமான நிகழ்ச்சி நடைபெற்றது. ஜார்ஜிய மொழிப் பாடவேளையில் கடைசி பத்து நிமிடங்கள் எஞ்சியிருந்தன. இது மூன்றாவது பாடவேளையாக இருந்தது. நாங்கள் வார்த்தைகளின் பகுப்பாய்வில் மூழ்கியிருந்தோம். நான் குழந்தைகளை நோக்கி ஒலிகளை ''விட்டெறிய'', அவர்கள் ''பிடித்தனர்''. திடீரெனப் பார்த்தால் வோவா கண்களை மூடியபடி ஒலிகளை ''பிடிக்காமல்'' மேசையில் சாய்ந்திருந்தான்.

''அவன் தூங்கி விட்டான்!'' என்று வோவாவைச் சுட்டிக் காட்டியபடி தாம்ரிக்கோ கூறினாள்.

குழந்தைகள் சிரித்தனர்.

சத்தம் போட வேண்டாமெனக் குழந்தைகளிடம் சொல்லி விட்டு நான் வோவாவை நெருங்கினேன். அவன் கவலையின்றி உறங்கிக் கொண்டிருந்தான். சில நிமிடங்கள்

முன் வரை அவன் சுறுசுறுப்பாகச் சிரித்துக் கொண்டிருந் தான், மகிழ்ச்சியோடிருந்தான். மகிழ்ச்சியாலும் களைப் பேற்படலாம், சிறிதே கண்ணயர விருப்பமேற்படும். நான் என்ன செய்வது? சிறுவனை எழுப்பி, பாடவேளையில் தூங்கக் கூடாது என்று விளக்குவதா?

''குழந்தைகளே, ஒருவன் தூங்கும் போது இடையூறு செய்யக் கூடாது, ஏனெனில் தூக்கத்தின் போது மனிதன் தான் இழந்த சக்திகளை மீட்கிறான். எனவே, வோவாவை எழுப்பிவிடாதபடி அமைதியாகப் பாடம் படிப்போம் வாருங்கள்!'' என்றேன் நான்.

நான் குரலைத் தாழ்த்தியபடி அவர்களை நோக்கி ஒலி யலைகளை ''விட்டெறியத்'' துவங்கினேன்.

குழந்தைகள் என்ன செய்தார்கள் தெரியுமா?

அவர்கள் திடீரெனப் பெரும் அக்கறையுள்ளவர்களாக, மென்மையானவர்களாக மாறினர். ஒவ்வொரு முறை பதில் சொன்ன பிறகும், எங்கே வோவாவை எழுப்பி விட் டோமோ என்று அவனைப் பார்த்தார்கள். இடைவேளை வந்ததும் அரவமின்றி மெதுவாகத் தாழ்வாரத்திற்கு வந்தார்கள், யார் நாற்காலியை நகர்த்தினாலும் உரக்கப் பேசினாலும் அவர்களைக் கண்டிப்போடு பார்த்தனர்.

சில சமயங்களில் குழந்தைகள் களைத்துள்ளதைப் பார்த்ததும்—இவர்களில் சிலர் கொட்டாவி விட்டனர், சோம்பல் முறித்தனர்—நான் அவர்களுக்கு தலையைக் குனிந்து, வசதியாக உட்காரும்படியும் கண்களை மூடிக் கொண்டு கதை கேட்கும்படியும் முன்மொழிவேன். கதையை மிக மெதுவான, சாந்தப்படுத்தும் குரலில் நான் சொல்வேன். முழு நிசப்தம் நிலவும், குழந்தைகள் ஒவ் வொரு வார்த்தையையும் கிரகித்தபடிக் கண்ணயர்வார் கள். இப்படிப்பட்ட ஐந்து நிமிட ஓய்விற்குப் பின் அவர்கள் இழந்த சக்தியை விரைவாக மீட்டதையும் பின் முன் போன்றே மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பாடங்களைத் தொடர்ந்ததையும் நான் பார்த்திருக்கிறேன்.

இந்த அனுபவம் எதைக் காட்டுகிறது? ஆறு வயதுக் குழந்தைகள் பள்ளி வாழ்க்கைக்குப் பழகுவது கடினமானது என்பதை ஒருவேளை இது காட்டுகிறதோ? இவர்களுடைய மூளை அறிவைப் பெறத் தயார். ஆனால் உட்கார்ந்த நிலை யில் உடல்பலம் செலவாவதால் இவற்றை மீட்க விசேஷ

வழிகள் தேவைப்படுகின்றன. மினி-பாடவேளைகள், வெவ்வேறுவிதமான வகுப்பு, பள்ளி இடைவேளைகள் போன்றவை குழந்தைகளின் களைப்பை அகற்றி இது ஏற்படாது செய்யும் வழிகளாகத்தான் என் நடைமுறையில் வந்தன.

விரைவில் மினி-பாடவேளைகள் தேவையிருக்காது என்று எண்ணுகிறேன். இவை பள்ளிக் கல்விக்குப் பழக்கப் படும் வாய்ப்பை குழந்தைகளுக்கு அளித்தன, பாடவேளையின் நேரத்தை மதிப்பிட எனக்குச் சொல்லித் தந்தன.

## மனச்சாட்சியைத் தட்டியெழுப்பு

பத்து நிமிடப் பள்ளி இடைவேளைகளின் போது எனக்கு எப்போதும் வேலையிருக்கும். இந்தச் சமயங்களில் நான் அடுத்த பாடவேளைக்குத் தேவையானவற்றைக் கரும் பலகையில் எழுதுவேன், உதவி செய்யும் குழந்தைகளுடன் சேர்ந்து பாடத்திற்குத் தேவையானவற்றை எல்லா பெஞ்சுகளுக்கும் பகிர்ந்து அளிப்பேன், மீன்தொட்டியையும் பூந் தொட்டிகளையும் பராமரிக்க குழந்தைகளுக்கு உதவுவேன்.

ஆனால் இதைவிட முக்கியமான ஒரு வேலை உண்டு. இதன் உட்பொருளை முன் கூட்டியே கணிக்க முடியாது. அதாவது குழந்தைகளுக்கு நடுவராக இருக்க வேண்டும், அவர்களிடையே தோன்றும் பூசல்களைத் தீர்க்க வேண்டும், அவர்களோடு கலந்து பழக வேண்டும், உறவு முறைகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

இதோ இப்போது இதற்கு அவசியமேற்பட்டுள்ளது.

இலிக்கோ, கோச்சா, எலேனா, நீக்க ஆகியோர் என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

''நீங்கள் என்ன எழுதுகின்றீர்கள்?''

''இவை கடினமானவையா?''

''இவை என்ன என்று எனக்குத் தெரியும்.''

இலிக்கோவும் கோச்சாவும் சிவிங்கத்தையும் மிட்டாயையும் பகிர்ந்து கொண்டனர். இலிக்கோ மிட்டாயை உடனே வாயில் போட்டுக் கொண்டான், கோச்சா தன் சிவிங்கத்தைச் சிறுமிகளுடன் பகிர்ந்தபடி எனக்கும் நீட்டினான்.

''நன்றி!'' என்றபடியே சிவிங்கத்தை வாங்கி மென்றேன். ''மிகச் சுவையாக உள்ளது!''

‘‘மிட்டாயும் சுவையாக உள்ளது!’’ என்கிறான் இலிக்கோ. ‘‘உங்களுக்கு வேண்டுமா?’’

‘‘நன்றி, வேண்டாம், என்னிடம் சிவிங்கம் உள்ளது.’’

‘‘ஆனால் மிட்டாய் சிறந்தது!’’ என்கிறான் இலிக்கோ. வாயிலிருந்து எஞ்சிய துண்டை எடுத்து என் வாயருகே நீட்டுகிறான். ‘‘சாப்பிட்டுப் பாருங்கள்!’’ நான் விருப்பத் தோடு வாயைத் திறக்கிறேன்.

‘‘நன்றி, இலிக்கோ! உண்மையிலேயே சுவையான சாக் லேட்.’’

இது சுகாதாரக் கேடானது என்று சொல்லாதீர்கள்! இது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் வளர்ப்புப் பணிக்கு ஏற்றது: குழந்தைகள் தமக்கு விருப்பமான தின் பண்டங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள, என்னோடு நட்புக் கொள்ள முயல்கின்றனர், இதற்காக ரொட்டித் துண்டை, திராட்சைக் குலையை, இன்ன பிறவற்றை நீட்டு கின்றனர். சில நாட்களுக்கு முன் சூரிக்கோ தாழ்வாரத் தில் என் கையில் ஒரு சாக்லேட்டைத் திணித்தான்.

‘‘உனக்கு இருக்கிறதா?’’ என்றேன் நான்.

‘‘எனக்கு வேண்டாம், இது உங்களுக்கு.’’

சாக்லேட் வழவழவென்று இருந்தது. எனக்குத் தரு வதா, தானே சாப்பிடுவதா என்று இதை கையில் வைத்த படி அவன் நீண்ட நேரம் யோசித்தது எனக்கு நன்கு புரிந்தது.

‘‘வா, பகிர்ந்து கொள்ளலாம்!’’ என்றேன் நான்.

‘‘சரி!’’ என்று மகிழ்ந்தான் சூரிக்கோ.

நாங்கள் சாக்லேட்டைப் பகிர்ந்து கொண்டோம். பின் எங்களைச் சுற்றிலும் இருந்தவர்களுக்கும் பகிர்ந்தளித் தோம்...

இப்படிப்பட்ட சம்பவங்களும் பள்ளியில் நடப்பதுண்டு: யாராவது கண்ணாடியை உடைப்பார்கள், புத்தகத்தைக் கிழிப்பார்கள், யாராவது யாரையாவது அடிப்பார்கள். இருவர், மூவர் அல்லது அதற்கும் அதிகமானோர் அங்கிருந்தால் அவர்கள் உடனே பரஸ்பரம் மற்றவர் மீது குற்றஞ்சாட்டத் துவங்கி தம்மை நியாயப்படுத்தத் துவங்கு வார்கள். உண்மையில் பல சந்தர்ப்பங்களில் யாரைக் ‘‘குற்றவாளியாகக்’’ கருதுவது என்று குழந்தைகளுக்குத் தெரியாது என்பதை நான் நம்புகிறேன். தான் குற்ற

வாளியல்ல—அவ்வளவுதான். பெரியவர்கள் யார் குற்றவாளியென குழந்தைகளிடம் பெரிதும் தீவிரமாயும் கண்டிப்புடனும் விசாரித்து, ஒரு சாரர் சொல்வதை நம்பாமல் மறு சாரார் சொல்வதை நம்பி ''குற்றம்'' புரிந்தவருக்கு புத்திமதி சொல்வதும் தண்டிப்பதும் எனக்குப் பிடிப்பதில்லை.

தண்டிக்கப்பட்டவன் தவறிழைக்காதவனாக இருந்தால் என்ன செய்வது? அவனது ''குற்றத்திற்காக'' சொல்லப்பட்ட புத்திமதி அல்லது கொடுக்கப்பட்ட தண்டனை தன் காரியத்தைச் செய்யும், குழந்தையை எச்சரித்து அவன் இனி தவறிழைக்காதவாறு பார்த்து கொள்ளும் என்று நம்ப முடியுமா? இப்படி மட்டும் இருந்தால் இது ஆசிரியரியலில் குழந்தைகளின் சகலவிதக் குறும்புகளுக்கும் ஒரு சஞ்சீவி மருந்தாகத் திகழும். செய்யப் போகும் குறும்புகளுக்காக முன்கூட்டியே எல்லோரையும் தண்டித்து விட்டால் கண்டிப்பாக புத்திமதிகளைக் கூறிவிட்டால் எல்லா குழப்பங்களுக்கும் என்றென்றைக்குமாக ஒரு முடிவு கட்டி விடலாம். தான் தப்பு செய்யவில்லை என்று கருதும் ஒரு குழந்தையைக் குற்றஞ்சாட்டுவது ஆசிரியரியலில் தீய செயலாகும். இது இக்குழந்தையை எதிர்காலத்தில் தவறுகள் செய்யாமல் காப்பாற்றாது, ஆனால் தன்னை நம்பாத பெரியவர்கள், நண்பர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும். தப்பு செய்தவனைத் தேடாமல், அவன் முன்னிலையில், அவன் பங்கேற்போடு ஒழுங்கை நிலைநாட்டி, நடந்ததை மதிப்பிடுவதே சிறந்தது என்று நான் கருதுகிறேன். தப்பு செய்தவர்களைத் தேடி கண்டிக்காமல் விடுவதன் மூலம் அவர்கள் மீண்டும் இதே மாதிரி செய்ய ஊக்கம் தருகிறோம் என்று யாராவது மறுப்புத் தெரிவிக்கக் கூடும். இல்லை, நான் இப்படிக் கருதவில்லை. இது குழந்தையின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பும், செய்யும் காரியங்களுக்கான பொறுப்புணர்வை ஏற்படுத்தும்.

கண்டிப்புகளும் தண்டனைகளும் குழந்தைகள் மத்தியில் அதிகம் நிலவினால் எப்படியிருக்கும்? கட்டுப்பாடு அதிகமாகும், தப்புகள் குறையுமா? குழந்தைகளிடம் மனச்சாட்சியும் பொறுப்புணர்வும் கூடுமோ? இல்லை, இப்படி நடக்காதென்றே எனக்குத் தோன்றுகிறது. அனேகமாக இதற்கு மாறாக நடக்கக் கூடும்: அச்சுறுத்தப்பட்ட குழந்தைகள்

ஒழுங்காக நடந்து கொள்வார்கள், ஆனால் யாரைக் கண் டெல்லாம் அவர்கள் அஞ்சுகின்றார்களோ அவர்களுடனெல் லாம் பூசல் மனப்பாங்கில் இருப்பார்கள்; பரஸ்பரம் ஒருவர் பால் ஒருவர் கடுமையாக நடப்பார்கள்; பிறர் இன்ப துன் பங்களைப் பகிர்ந்து கொள்ளும் உணர்வு, மென்மை, உத வும் மனப்பாங்கு முதலியன குறையும். ''குறையும்'' என்று நான் சொல்லும் போது இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களுக்கு மாறாக வேறொரு சூழல் தோற்றுவிக்கப்படலாம் என்பதை மனதில் இருத்தியே இப்படிக் கூறுகிறேன். அதில் குழந்தை யின் மனச்சாட்சியை தட்டியெழுப்பி, உணர்வு பூர்வமான ''நான்'' எனும் உணர்வு வளரச் செய்து, இரக்கம், அன்பு, பிறர்க்கு செவிமடுக்கும் உணர்வு போன்றவற்றை வளர்க் கும் அக்கறை மேலோங்கியிருக்கும். நிச்சயமாக, ஒரு தனி நபரின் குணநலன்கள் இவற்றுடன் நின்று விடுவதில்லை: அத்தனிநபர் இன்னமும் இறுதியானவராக, செயல்முனைப் பானவராக, ஒரு லட்சிய அடிப்படையை உடையவராக இருக்க வேண்டும். இந்த ஆசிரியர் பாதையில் செல்லத்தான் நான் விரும்புகிறேன். இதில் பல விஷயங்கள் எனக்குத் தெரியாது, ஏனெனில், இப்பாதையில் இதுவரை யாரும் சென்றதில்லை, எனவே, இதில் சில ஆசிரியர் தவறுகளைச் செய்யும் அபாயத்தை மேற்கொள்கிறேன்.

குழந்தைகளின் முரட்டுத்தனத்தைக் கண்டுதான் நான் எல்லாவற்றிற்கும் மேலாக அஞ்சுகிறேன். சில சமயங்களில் அவர்கள் ஒருவர் பால் ஒருவர் எப்படி இரக்கமற்று நடந்து கொள்கின்றனர்! அதிலும் குறிப்பாக ஒரு தனிப்பட்ட குழந் தைக்கு எதிராகப் பல குழந்தைகள் நிற்கும் போது எப்படி யிருக்கும் தெரியுமா! ஒரு சிறுவன் வேண்டுமென்றே தப்பு செய்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம் (குழந்தை கள் எப்போதுமே காரண காரியங்களைப் பார்க்க மாட் டார்கள்). கவனக்குறைவான ஆசிரியர் குழந்தைகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவார்: ''அவன் நம்மை எப்படி கஷ்டத்திற்கு உள்ளாக்கி விட்டான் பார்த்தீர்களா? அவனது செயலைப் பற்றி என்ன சொல்கின்றீர்கள்? அவனை எப் படித் தண்டிப்பது?''

குழந்தைகளின் மதிப்பீடுகளைக் கண்டு நான் பயப்படு கிறேன். ஏனெனில் இவர்களைப் பொறுத்த மட்டில், வேண்டு மென்றே மேசை விரிப்பின் மீது இங்க் பாட்டிலைக் கொட்டி

சிறு கறையை ஏற்படுத்தியவனை விட தற்செயலாக, தெரியாமல் பெரும் கறையை ஏற்படுத்தியவன் அதிகம் குற்றம் செய்தவனாவான். அவன் கெட்டவன், கொடியவன், அவனுடன் நட்புக் கொள்ளக் கூடாது, அவனைப் பள்ளியிலிருந்து கூட விரட்டலாம் என்றெல்லாம் குழந்தைகள் கூறுவார்கள். கவனக்குறைவான ஆசிரியர் இப்படிச் செய்து இதை நியாயப்படுத்தக் கூட செய்வார், கூட்டு வளர்ப்பு என்று இதற்குப் பெயரிடுவார். ஆனால் இதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்: இது கூட்டு வளர்ப்பா, கூட்டாக குழந்தையை இழிவுபடுத்தி அழித்தொழிப்பதா?

இல்லை, நண்பர்களின் மௌனமான இரக்கத்தைப் பள்ளிச் சிறுவன் உணருமாறு செய்வதும், அவன் செய்த காரியத்தைப் பற்றிய பொதுவான கருத்தை அவனை நோக்கி தனிப்பட்ட முறையில் கூறாமல் பொதுவாகக் கூறி அவன் அதை உணர உதவுவதும், தான் உடைத்த பூந்தொட்டிக்காக, தன் குற்றத்தால் நண்பனின் காலில் ஏற்பட்ட காயத்திற்காக அவன் வருந்துவதும் நல்லது... இதைத்தான் என்னால் கூட்டு வளர்ப்பு என்று ஏற்றுக் கொள்ள முடியும்.

என் வகுப்பில் இன்னமும் கூட்டு இல்லை. இக்குழந்தைகள் இன்று இருபதாவது தடவையாக ஒன்றுசேர்ந்திருக்கின்றனர். இவர்களுக்கு மற்ற அனைவரின் பெயர்கள் கூட முழுமையாகத் தெரியாது, இவர்கள் இன்னமும் எல்லோருடனும் நட்புக் கொள்ளவில்லை, பொது நோக்கத்தை இன்னமும் இவர்கள் உணரவில்லை. கூட்டுணர்வு என்பது கூட்டான, செயல்முனைப்பான நடவடிக்கையில்தான் பிறக்கிறது. நாங்கள் இப்போதுதான் இந்நடவடிக்கையையே துவக்குகின்றோம். எனவே, இவர்களை ஒருவர் பால் ஒருவர் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள வழிகோலுவது சிறந்ததல்ல, அன்பின் அடிப்படையில் இவர்கள் நெருங்கி வரும்படி செய்ய வேண்டுமே தவிர முரட்டுத்தனமான நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அல்ல...

...இதோ அவன்* உடைந்து போன பூந்தொட்டியின் முன் நின்று கொண்டிருக்கிறான், மண் தரையில் சிந்திக்

---

*சில இடங்களில் பெயருக்குப் பதில் அவன், அவள், சிறுவன், சிறுமி என்ற சொற்களை நான் பயன்படுத்துகிறேன். இதன் காரணம் வாசகர்களுக்குப் புரியுமென நம்புகிறேன்.—ஆ-ர்.

கிடக்கிறது, செடி கீழே கிடக்கிறது. கசப்பானதொரு காட்சி! நான் திட்ட வாய்திறந்தாலே போதும், குழந்தைகள் அவன் மீது பாய்ந்து விடுவார்கள். எனது சிறு ஏளனப் புன்னகை போதும், குழந்தைகள் தம் ஏளனத்தால் அவனை அழித்தே விடுவார்கள். ஆனால் இப்படிச் செய்யக்கூடாது. மௌனமான இரக்கம், அக்கறை பற்றிய ஒரு சில பாடங்களை நான் அவர்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறேன். நூற்றுக் கணக்கான இடைவேளைகளில் இன்னமும் இதே போன்ற பிரச்சினைகளை நான் பன்முறை தீர்க்க வேண்டியிருக்குமென எண்ணுகிறேன்.

நான் செடியைக் குனிந்து எடுக்கிறேன்.

''இப்படிச் செய்யலாமா, யார் இதைச் செய்தது? இப்போது செடியைக் காப்பாற்றுவது முக்கியம்!'' குழந்தைகள் இரைந்து கிடப்பவற்றை அள்ளுகின்றனர்.

''நமது வாளியை எடுத்து வாருங்கள். நாளை வரை செடியை அதில் வைத்திருப்போம்.''

செடியை வாளியில் வைக்கின்றோம்.

''பார்த்தீர்களா, உடைந்த தண்டிலிருந்து எப்படி இரத்தம் வருகிறது... இந்த வெள்ளைத் திரவம்தான் இதன் ரத்தம்!..''

''இது ஒரு மூலிகைச் செடி என்று அம்மா சொல்லியிருக்கிறார்'' என்று நாத்தோ சொல்கிறான்.

''தண்டு முறிந்த இடத்தில் அதற்கு வலிக்குமா?''

**நான்:** ''அதற்கு மட்டும் பேச முடிந்தால் அது என்ன சொல்லும்?''

'' 'என் மீது பாவமாயில்லையா' என்று சொல்லும்.''

'' 'ஏன் ஜன்னல் அருகேயிருந்து கீழே தள்ளினாய்? எச்சரிக்கையாயிருக்க வேண்டும்' என்று சொல்லும்.''

'' 'நான் உங்களுக்கு இனி மருந்துச் செடியாக இருக்க மாட்டேன்' என்று கோபம் கொண்டு சொல்லும்.''

''இல்லை, அது அப்படி சொல்லாது, அது அன்பான செடி.''

**நான்:** ''' 'நாளை பூந்தொட்டி கொண்டு வந்து என்னை அதில் நடுங்கள். விரைவில் எனக்கு சரியாகும்படிப் பராமரியுங்கள்' என்றும் சொல்லும்.''

''அதற்குத் தேவையான பூந்தொட்டியையும் மண்ணையும் நான் கொண்டு வருவேன்.''

‘‘நானும் தொட்டியைக் கொண்டு வருவேன்.’’

இதோ மணி அடித்தாகி விட்டது. தரை சுத்தப்படுத்தப் பட்டு விட்டது. செடி வாளியில் உள்ளது. நாளை அதை வேறொரு தொட்டியில் நடுவோம்—அவன்தான் ஒரு தொட்டியையும் மண்ணையும் கொண்டு வருவதாக உறுதி அளித்துள்ளானே. இப்போது வகுப்பறைக்குள் வர வேண்டும்.

‘‘சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பது நினைவிலிருக்கட்டும்.’’

குழந்தைகள் வகுப்பறைக்குள் வந்து கொண்டிருக்கையிலேயே ஒரு வாக்கியத்தைப் பன்முறை திரும்பத் திரும்பச் சொல்கிறேன். அப்போதுதான் இது மறக்காது, ஏனெனில் எனக்கு ஒரு முதுமொழியாகும்:

> வளர்ப்புப் பணிக்கு ஆரம்பமோ, முடிவோ, இடைவேளைகளோ இல்லை.

## கலந்து பழகும் மகிழ்ச்சி

பள்ளி வாழ்க்கையின் இரண்டாவது நாளன்று நான் குழந்தைகளைக் கேட்டேன்:

‘‘ருஷ்ய மொழி பயில விருப்பமா?’’

அவர்கள் உற்சாகமாக பதிலளித்தனர்:

‘‘ஆம்.’’

அவர்கள் ‘‘ஆம்’’ என்று சொல்ல ஆர்வமும் எதற்கு ஒப்புக் கொள்கிறோம் என்று தெரியாததும் மட்டும் காரணமல்ல, அவர்கள் உண்மையிலேயே ருஷ்ய மொழி பேச விரும்புவதுதான் காரணம். குடும்பத்தில் இவர்கள் ருஷ்ய மொழியின் முக்கியத்துவம் பற்றி நிறையக் கேட்டிருக்கின்றனர், தொலைக்காட்சியில் வரும் ருஷ்ய மொழி நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள இவர்கள் விரும்புகின்றனர், மாஸ்கோவிற்குச் செல்ல வேண்டுமென ஆசைப்படுகின்றனர், ருஷ்யமொழியில் பேசும் தம் வயதுச்சிறுவர் சிறுமியருடன் கலந்து பழக விரும்புகின்றனர். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

அவர்களுக்கு ருஷ்ய மொழி போதிக்க எனக்கும் பல காரணங்கள் உள்ளன.

தாய்மொழி உங்கள் மனதின் தொட்டில், ருஷ்ய மொழி

உங்களது பன்முக வாழ்வின், நமது மாபெரும் நாட்டுக் குடிமகனின் தொட்டிலாகும்.

ஓ, எனது சொந்த ஜார்ஜிய மொழியே! உனது புதல்வர்கள் பலரைப் போன்றே என்னுள்ளும் எனது மக்களின் மனச்சாட்சி, மகிழ்ச்சி, இன்பம், துன்பம் எல்லாவற்றையும் ஊட்டி என்னை மனிதனாக்கியிருக்கின்றாய்! ஜார்ஜியாவை எனக்குப் பரிசாக வழங்கியிருக்கின்றாய், இதன் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய அக்கறையை என் மீது சுமத்தியிருக்கின்றாய்! தாராளமனப்பான்மை மிக்க, நேர்மையான ஜார்ஜிய மொழியாகிய நீதான், நான் சோவியத் நாட்டின் குடிமகன் என்று பெருமிதமடையக் கற்றுக் கொள்வதற்காக என்னை உன் மாபெரும் சகோதரனாகிய ருஷ்ய மொழியிடம் அனுப்பியிருக்கின்றாய்!

ஓ, மாபெரும் சர்வதேசியமாகிய ருஷ்ய மொழியே, உண்மையான ருஷ்ய மனநிலையைப் பேணிக்காக்கும் மொழியே! கலந்து பழகும் மகிழ்ச்சிக்காக ஏங்கித் தவிக்கும் எண்ணற்ற ஏராளமானோரைப் போன்றே எனக்கும் நம்பகரமான பாலமாக நிற்கிறாய்; இப்பாலம் சகாப்தங்கள், கலாசாரங்களின் ஊடாக ருஷ்யர்களின் இதயங்களை நோக்கி, விரிந்து பரந்த என் தாயகத்தின் பல்வேறு மக்களினத்தவரின் இதயங்களை நோக்கி, நல்லெண்ணம் கொண்ட உலக மக்களின் இதயங்களை நோக்கிச் செல்கிறது.

குழந்தைகளே, நீங்கள் கண்டிப்பாக மாஸ்கோவிற்குச் செல்வீர்கள், லெனின் கல்லறை, கிரெம்ளின் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்ப்பீர்கள், உங்கள் தாயகத்தைப் பற்றிய பெருமிதம் உங்களை ஆட்கொள்ளும். நீங்கள்—அனேகமாக முதன்முதலாக—உங்களில் ஒவ்வொருவரும் மாபெரும் லட்சியங்களை நிறைவேற்றுவதற்காகப் பிறந்திருக்கின்றீர்கள், உங்கள் மீது பெரும் நம்பிக்கைகள் உள்ளன என்பதை உணருவீர்கள். ஒருவேளை நீங்கள், சோவியத் யூனியனின் குடிமகனாக இருப்பது எவ்வளவு கௌரவமானது, பொறுப்பு மிக்கது என்பதை முதன்முதலாக உணருவீர்கள். இன்று குறும்புக்காரச் சிறுவர்களாயிருக்கும் உங்களுக்கு ருஷ்ய மொழியைச் சொல்லித் தருகிறேன், இது உங்களுக்கு நீண்ட, தொலைதூரப் பயணங்களுக்கு இறக்கைகளாயிருக்கும். உங்கள் இறக்கைகளில் நீங்கள் எங்கு பறந்து சென்றாலும், எவ்வளவு தொலைதூர பிரதேசங்களுக்குப் போனா

லும், எப்படிப்பட்ட மக்களோடு கலந்து பழகினாலும், எங்கும், எல்லா இடங்களிலும் உங்களது ஜார்ஜிய மனப்பாங்கு, திறமை, படைப்பாற்றல், உழைப்பார்வம், நேர்மை, நட்புக் கொள்ளும் குணம் ஆகியவற்றைக் கண்டு மக்கள் மகிழ வேண்டுமென நான் கனவு காண்கிறேன்.

நான் உங்களுக்கு ருஷ்ய மொழியைச் சொல்லித் தரத் துவங்கும் போது என் முன் உள்ள லட்சியங்கள் இவைதான். இதன் மீது உங்களுக்கு அன்பு பிறக்க நான் பாடுபடுவேன். எப்படிப்பட்ட முறையைப் பயன்படுத்துவது? இந்நோக்கங்களின் அடிப்படையில் இதைத் தேடுவேன். எனது முயற்சிகளில் தோல்விகள் ஏற்பட்டால் மன்னியுங்கள், இவை வேண்டுமென்றே செய்யப்படுபவை அல்ல. லட்சியத்தைத் தேர்ந்தெடுப்பதில் தவறு செய்யாமலிருப்பதுதான் முக்கியம்.

சரி, எந்த முறையைப் பயன்படுத்துவது? இது எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்? நான் பின்வரும் கோட்பாடுகள் முக்கியமெனக் கருதுகிறேன்.

முதலில் ஒரு ஜார்ஜியனுக்கு ருஷ்ய மொழியில் பேசக் கற்றுக் கொள்வது எளிதான காரியமல்ல என்றாலும் இது ஒன்றும் முற்றிலும் கடினமான விஷயமல்ல என்பது குழந்தைகளுக்குப் புரிய வேண்டும். பல குழந்தைகள், தம் தவறுகளைக் கண்டு நண்பர்கள் சிரித்துப் பரிகசிக்கக் கூடாதே என்பதற்காக ருஷ்ய மொழியில் பேச அஞ்சுகின்றனர்; பெரியவர்களான பின் கூட இந்த அச்சம் மறைவதில்லை: ருஷ்ய மொழியில் தப்புந் தவறுமாகப் பேச வெட்கப்படுகின்றனர். என் வகுப்புக் குழந்தைகளுக்கு இந்த அச்சம் இருக்கக் கூடாது. அவர்கள் அடிக்கடி சைகைகள் செய்யட்டும், தாய் மொழிச் சொற்களைப் பயன்படுத்தட்டும், தப்புகள் செய்யட்டும். முக்கியமானது என்னவெனில் ருஷ்ய மொழியில் கலந்து பேசும் நாட்டத்தை, மொழியுணர்வை அவர்களிடம் வளர்ப்பதாகும். குழந்தைகளுக்கு நான் எப்படி ருஷ்ய மொழி போதிக்கிறேன் என்பதை அவர்கள் கிட்டத்தட்ட கவனிக்க மாட்டார்கள், ஏனெனில் இது அவர்கள் கலந்து பேசிப் பழகும் போது நேரிடையாக செய்யப்படும்.

இரண்டாவதாக, தமக்கு ருஷ்ய பேச்சு புரிகிறது, தம்மால் ஏற்கெனவே இம்மொழியில் விளக்க முடியும் எனும் உணர்வு இயன்ற அளவு விரைவாகக் குழந்தைகளிடம்

தோன்ற வேண்டும். இது இவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும், மொழியைப் பயிலும் ஆர்வத்திற்கு ஊக்கமளிக்கும். குழந்தை என்னிடம் ஏதோ ருஷ்ய மொழியில் கூறுகிறான், நான் உன்னிப்பாகக் கேட்கிறேன், ''ஆமாம், ஆமாம், எனக்கும் புரிகிறது'' என்று நான் தலையாட்டுகிறேன். இயன்றவரை அதிகமாக, நீண்ட நேரம் பேசும்படி அவனை ஊக்குவிக்கிறேன், ''அப்படியா? என்ன? எப்போது இப்படி நடந்தது?'' என்றெல்லாம் ஆச்சரியப்படுகிறேன். ஏதோ ருஷ்ய மொழி மீது எனக்கு அக்கறையில்லாதது போன்றும், அவன் சொல்வதன் மீதுதான் அக்கறையுள்ளது போன்றும் பாவனை செய்கிறேன். கதை, கவிதைகளைப் படிக்கும் போது அவர்களுக்கு நன்கு புரிவதற்காகப் பல சமயங்களில் சைகைகளை, பாவனைகளை, நடிப்பைப் பயன்படுத்துகிறேன். சொற்கள், வாக்கியங்கள், சொற்றொடர்களைப் புரியும்படியும் தெளிவாயும் உச்சரிப்பேன்.

ஒவ்வொரு முறையும் குழந்தைகளுக்குப் புத்தம் புதியவற்றை படிக்கப் போவதில்லை. 10—12 கதைகள், கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வெவ்வேறு பாடங்களில் படிப்பது சிறந்ததாயிருக்கும். குழந்தைகளுக்கு இவை உடனடியாகப் புரியாமலிருக்கலாம், ஆனால் இவற்றை மீண்டும் மீண்டும் படிப்பது இரண்டு விஷயங்களைச் செய்யும்: ருஷ்ய மொழியின் இனிமை, வார்த்தைகளின் ஒலியமைப்பு குழந்தைகளுக்குப் புரியும்; அந்தந்த வார்த்தைகள், சொற்றொடர்கள் படிப்படியாகப் புரிவதும், உள்ளடக்கத்தில் மூழ்குவதும் மொத்தத்தில் புதியவற்றை அறியும் மகிழ்ச்சியைத் தரும். இரண்டு, மூன்று வருடங்களுக்குப் பின் இந்தக் கதைகள், கவிதைகளை இவர்கள் தம் பாடநூல்களில் சந்தித்தால் எவ்வளவு சிறப்பாயிருக்குமென நான் எண்ணுகிறேன். இவ்வாறு படிக்கும் போது முன்னர் கேட்டது புரிந்தும் புரியாததுமாய் நினைவிற்கு வரும். இப்போது எளிதாகப் படித்து, புரிந்து கொள்கையில் குழந்தைக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா! அல்லது இக்கதையை நினைத்துப் பார்க்கையில் ஞாபகத்திலிருக்கும் பல வார்த்தைகள், சொற்றொடர்கள் திடீரெனப் பலவற்றைச் சொல்லும், உடனே குழந்தை ''அப்படியா விஷயம், நான் வேறு மாதிரியாக அல்லவா நினைத்தேன்!..'' என்று சொல்லிக் கொள்வான்.

மூன்றாவதாக, சொல்லிக் கொடுக்கும் போது பாடத்

தோடு சம்பந்தப்படாத பேச்சு சூழ்நிலைகளை அடிக்கடி ஏற்படுத்த முயலுவேன். அதாவது, நான் ருஷ்ய மொழியை போதிப்பதைக் குழந்தை உணர மாட்டான், எனக்கு எதையோ சொல்ல விரும்பி, என்னோடு உரையாட விரும்பி பேசத் துவங்குவான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் விளை யாட்டுக்களின் போது தோன்றும். அதுவும் குழந்தைகளே இவற்றைச் சிந்தித்து உருவாக்கும் போது சிறப்பாயிருக்கும். விளையாட்டுக்களின் விஷயத்தில் நான் பின்வரும் முது மொழியைப் பின்பற்றுகிறேன்:

> எந்த விளையாட்டுகள் எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்தும் ஒவ்வொருவரையும் தனித் தனியாயும் சுயகௌரவ மட்டத்திற்கு உயர்த்து கின்றனவோ அவற்றைத்தான் வகுப்பறைக்கேற்ற விளையாட்டுகளாகக் கருத முடியும். வேறு விளையாட்டு கள் குழந்தைகளின் மேன்மைக்கு சிறிதளவு பங்கமேற் படுத்தினாலும் இவை வகுப்பறைக்கு ஏற்றவையல்ல, இவற்றை வகுப்பறையில் அனுமதிப்பது ஒழுக்கக் கேடானது.

''குழந்தைகளே, இன்று யாரை விண்வெளி வலவர் களாகத் தேர்ந்தெடுப்பது?''

ஆம் எப்போதுமே ''யாரைத் தேர்ந்தெடுப்பது?'', ''யாரை அனுப்புவது?'', ''நீங்களே சொல்லுங்கள்!'' என்று தான் கேட்கின்றேனே தவிர ''யார் விரும்புவது?'' என்று எப்போதுமே கேட்பதில்லை. ''என்னைத் தேர்ந்தெடுங் கள்!.. என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள்!'' என்று குழந்தை கள் தம்மைத் தாமே முன்மொழிய, நான் அவர்கள் மத்தியிலிருந்து விண்வெளி வலவர்கள், கட்டமைப்பாளர் கள், மருத்துவர்கள், பொறியியலாளர்களைத் தேர்ந்தெடுப் பதற்குப் பதில், அவர்கள் தம்மைத் தாமே தேர்ந்தெடுப் பதையே நான் விரும்புகிறேன். யாராவது கவனிக்கப்ப டாமலிருந்தால் மட்டுமே நான் தலையிடுவேன். விண்வெளி வலவர் விளையாட்டு, எல்லைக் காவல் வீரர் விளையாட்டு, போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் விளையாட்டு, எதுவா யிருந்தாலும் எங்கள் வகுப்பில் எல்லோரும் பங்கேற்பார்கள்.

இதோ குழந்தைகள் மூன்று விண்வெளி வலவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டனர். அவர்கள் விண்கப்பலில் அமர் கின்றனர்.

‘‘பூமியில் சந்திப்போம்!’’

‘‘போய் வருகிறோம்!’’

பூமியில் தங்குகின்ற நாங்கள் கைகளை ஆட்டுகிறோம்: ‘‘பயணம் சிறக்கட்டும்!.. மகிழ்ச்சியாகச் சென்று வாருங்கள்!’’

‘‘ஊ ஊ ஊ ஊ...’’

ராக்கெட் பறந்து போய் விட்டது.

பயணத்தில் முதல் நாள்... இரண்டாவது நாள்...

நாங்கள் வானொலி ஒலிபரப்புக்களைக் கேட்கின்றோம். நான் அறிவிப்பாளனாகிறேன்: ‘‘நமது வீரம் மிகு விண்வெளி வலவர்களாகிய சூரிக்கோ, தேயா, போன்தோ மூவரும் ஏற்கெனவே ஆறு நாட்களாக விண்வெளியில் பறக்கின்றனர். அவர்கள் அங்கு நிறைய ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இன்று அவர்களுக்கு ஓய்வு நாள்.’’

‘‘விண்வெளியிலிருந்து’’ நேரடியாக வரும் ஒலிபரப்பைப் பார்க்கின்றோம்: சூரிக்கோ, தேயா, போன்தோ மூவரும் தம் கரங்களில் அட்டைப்பெட்டியின் விளிம்பைப் பிடித்தபடி (இதுதான் தொலைக்காட்சிப் பெட்டியின் திரை) பேசுகின்றனர்.

சூரிக்கோ: ‘‘நிலம், கடல் தெரிகிறது... இதோ நம் பள்ளி...’’ (பார்வையாளர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.)

தேயா: ‘‘வானம் மிக அழகாக உள்ளது... பூமி மிக அழகாக இருக்கின்றது! நான் பயப்படவில்லை, இதோ போன்தோதான் பயப்படுகிறான்.’’ (பார்வையாளர்கள் சிரிக்கின்றனர்.)

போன்தோ: ‘‘தேயா சும்மா சொல்கிறாள், நான் பயப்படவில்லை. இன்று நான்... நான்... அதாவது... ராக்கெட்டிலிருந்து விண்வெளிக்கு வெளியே வந்தேன்!..’’ (பார்வையாளர்கள் கை தட்டுகின்றனர்.)

இதோ தரையிறங்கும் நேரம் வந்து விட்டது.

விண்வெளி வலவர்கள் விண்கப்பலிலிருந்து வெளிவருகின்றனர். காத்திருந்தவர்கள் இவர்களை வரவேற்கின்றனர்.

‘‘வணக்கம்!..’’

‘‘வணக்கம்!..’’

‘‘உங்களை பூமியில் காண்பது குறித்து மகிழ்ச்சி...’’

‘‘நன்றி.’’

''களைப்பாய் உள்ளதா?''

''இல்லை!..''

''அப்படியெல்லாம் இல்லை!''

''மீண்டும் பறக்க விரும்புகின்றீர்களா?''

''ஆம், விரும்புகிறோம்!..''

''நீங்கள் வீரர்கள்!''

விண்வெளி வீரர்கள் வரிசைகளின் இடையே நடந்து செல்ல, இவர்களின் கரங்களைப் பிடித்துக் குலுக்குகின்றனர். அவர்கள் தம்மிடங்களில் அமர, விளையாட்டு முடிவடைகிறது. ஒவ்வொரு புதிய ''பறத்தலின்'' போதும் ஒவ்வொரு முறை புதிதாக விளையாடும் போதும் ஏராளமான பாவனைகள், புதுப்புதுக் கற்பனைகள், புதிது புதிதாத விளையாடுகிறோம், ஏனெனில் களைப்பேற்படுவதேயில்லை.

இன்று எங்கள் பள்ளி வாழ்வின் இருபதாவது நாளன்று நான் பதினைந்தாவது ருஷ்ய மொழிப் பாடத்தை நடத்துகிறேன். ''இது என்ன'' என்ற வழக்கமான கேள்வியை நான் இந்த வகுப்புகளில் கேட்பதுமில்லை, ''இது நாற்காலி... இது மேசை... இது பெஞ்சு...'' என்ற வழக்கமான பதில்களை அவர்கள் சொல்வதுமில்லை. குழந்தைக்கு மேன் மேலும் நிறைய சொற்கள் தெரிந்திருக்க வேண்டும் என்கின்றனர். ஆனால் பேசுவதற்கு சொற்கள்தான் அடிப்படையா என்ன? ஒரு கட்டிட வேலை நடக்குமிடத்தில் கட்டுமானத்திற்கு அவசியமான எல்லாப் பொருட்களும் (செங்கற்கள், மணல், சிமெண்ட்) உள்ளன என்று வைத்துக் கொள்வோம். இவையின்றி, இன்னும் சில இன்றி நிச்சயமாக வீடு கட்ட முடியாது. ஒரு அழகிய, நல்ல வீடு கட்ட மனிதனுக்கு என்ன வேண்டும்? ஆம், இன்னுமொரு முக்கிய நிபந்தனை இல்லாவிடில் இப்பொருட்கள் எல்லாம் பயனற்றுப் போகும். வீட்டை மனதில் கற்பனை செய்து கட்டும் திறமைதான் அந்த நிபந்தனையாகும். நம் விஷயத்தில் இது வார்த்தைகளையும் மொழிச் சாதனங்களையும் பேச்சாக இணைக்கும் திறமையாகும். இது இல்லாவிடில் பேச முடியாது. ''இது மேசை, இது நாற்காலி'' என்பதெல்லாம் கட்டிடம் கட்டுமிடத்தில் உலாவும் மனிதன் ''இது செங்கல், இது மணல்'' என்பதற்குச் சமம். ஆனால் அவன் இவற்றை எப்பெயரிட்டு அழைத்தாலும் எவ்வளவு முறை திரும்பச்

சொன்னாலும் வீடு தானாக வராது. எனவேதான் பொருட்களைப் பெயரிட்டு அழைப்பதன் மூலம் வார்த்தைகளை சேமிக்கும் வழியை நான் நிராகரித்தேன்.

குழந்தை ருஷ்ய மொழியை தனித்தனியாகக் கேட்கக் கூடாது, மொத்தமாக, இதன் இயக்கத்தில், செழுமையில் கேட்க வேண்டும். இந்த முழுமையைத்தான் நான் மொழி நுட்பம் என்கிறேன். ஆசிரியருடனான உரையாடல், தம்மிடையே கலந்து பேசுவது, விசேஷ பேச்சுப் பயிற்சிகள் முதலியன குழந்தைகள் மிகச் சிறப்பாக ருஷ்யப் பேச்சைப் புரிந்து கொள்ள உதவுகின்றன...

...குழந்தைகள் தம் ருஷ்ய மொழி நோட்டுப் புத்தகங்களைத் திறந்தனர் (ஆம், எங்களிடம் இத்தகைய நோட்டுப் புத்தகங்கள் உள்ளன, இவற்றில் பல ''குறிப்புகள்'', படங்கள், வரைபடங்கள் இருக்கின்றன), பேனாக்களைத் தயார்படுத்திக் கொண்டனர்.

''இன்று நாம் **நடத்தல்** எனும் வார்த்தையைப் பார்போம், இந்த வார்த்தையை வைத்து வாக்கியங்களையும் சிறு கதையையும் உருவாக்குவோம்!'' என்கிறேன் நான்.

எல்லோரும் சரிவர வாக்கியங்களை அமைக்கவில்லை, குறிப்பாகச் சரியாக உச்சரிக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் உதவ நான் விரைகிறேன். இந்த உதவி பல்வேறு வகைப்பட்டது: சில சமயங்களில் ''இப்படிச் சொல்லத்தானே நீ விரும்பினாய்?'' என்று கேட்டு உதவுகிறேன்; ''இப்படிச் சொல்ல வேண்டும்... எங்கே திரும்பச் சொல்!'' என்று சில சமயங்களில் திருத்துகிறேன்; பல சமயங்களில் குழந்தைகளிலேயே யாரையாவது உதவும்படி வேண்டுகிறேன்: ''இலிக்கோ, உனக்குதான் ருஷ்ய மொழி நன்கு தெரியுமே! இதை எப்படி சரியாகச் சொல்வது?..'' இலிக்கோ தன் நண்பர்களைத் திருத்துவான், வாக்கியங்களை எப்படி உருவாக்கி, உச்சரிப்பதென விளக்குவான்.

பின்னால் சிக்கலான வேலை உள்ளது: தாம் உருவாக்கிய வார்த்தைகளின் நுட்பமான உட்பொருள்களை அவர்கள் புரிந்து கொள்ளவும் இச்சொற்களில் எல்லாவற்றையும் பேச்சில் பயன்படுத்த முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவும் உதவ வேண்டும்.

நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகள் தங்கு தடையின்றி உற்சாகமாக ருஷ்ய மொழியில் பேச ஆரம்பிப்பார்

கள். உதாரணமாக, மார்ச், ஏப்ரலில் லேலா இடைவேளை சமயத்தில் என்னிடம் வந்து விலங்கியல் பூங்காவில் (அல்லது சர்க்கசில்) எவ்வளவு சுவாரசியமாக இருந்தது, சென்ற சனிக்கிழமையன்று எப்படிப்பட்ட சிரிப்பான சம்பவம் நடந்தது என்று சொல்வாள். அவள் ருஷ்ய மொழியில் பேசுவாள், சில சமயம் ஜார்ஜிய சொற்களைப் பயன்படுத்தினாலும் அவற்றைக் கவனிக்க மாட்டாள். எங்கள் வகுப்புகளில் இவர்கள் குறைகளற்று சரியான உச்சரிப்பில், ஏற்ற இறக்கங்களுடன் பேசுவார்கள் என்றெல்லாம் நான் உறுதியளிக்கவில்லை. ஆனால் அவர்கள் ருஷ்ய மொழியைப் பயிலுவது குறித்து மகிழ்ச்சியடைவார்கள், இம்மொழியில் உரையாட முயலுவார்கள்—இதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

## வெவ்வேறு விதமான தந்தைகள்

நீண்ட இடைவேளை. நாங்கள் உலாவத் தயாராகின்றோம்.

பள்ளிக்கு அருகே ஒரு பூங்கா உள்ளது. சாலையைக் கடக்கக் கூடத் தேவையில்லை. அங்கே ஓடியாடி விளையாடலாம், தூய காற்றை சுவாசிக்கலாம். நீண்ட இடைவேளை வரும் போதெல்லாம் நாங்கள் இங்கு செல்வோம், அற்புதமாக உலாவுவோம்.

நான் குழந்தைகளை விளையாடும்படி கட்டாயப்படுத்துவதில்லை, ''ஓடாதீர்கள், குறும்பு செய்யாதீர்கள், பெஞ்சில் உட்காருங்கள்'' என்றெல்லாம் வற்புறுத்துவதில்லை. குழந்தைகள் ஓடுவார்கள், குறும்பு செய்வார்கள். சிலர் எறும்புப் புற்றை கவனித்துக் கொண்டிருப்பார்கள், சிலர் மரக் கிளைகள், இலைகளைச் சேகரிப்பார்கள், சிறுமிகள் ஸ்கிப்பிங் கயிற்றை எடுத்து வந்து, களைப்பின்றி குதித்துக் கொண்டிருப்பார்கள்; ''இது என்ன?'', ''ஏன்'', ''நீங்கள் என்ன புத்தகத்தைப் படிக்கின்றீர்கள்?'' என்று சிலர் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பார்கள். நான் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருப்பேன், என் குழந்தைகளை நன்கு புரிந்து கொள்ள முயலுவேன்.

இன்றும் பூங்காவில் சுவாரசியமாக இருக்குமென நம்பு

கிறேன். இன்று என்ன நடக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. சிலர் கண்டிப்பாக எறும்பும் புற்றைக் கவனிப்பார்கள். ஆச்சரியக் குரல்கள் என் காதுகளை எட்டும்.

''பாருங்கள், இவை எப்படி வேகமாக ஓடுகின்றன?''

''இதோ... இந்த எறும்பு... எவ்வளவு பெரிய இரையை எடுத்துச் செல்கிறது!''

''இவையெல்லாம் ஒரே கோட்டில் முன்னும் பின்னுமாகச் செல்வதைப் பார்த்தீர்களா!''

''இவை எங்கே போகின்றன என்று தேடுவோமா!''

''அவை மரத்தின் மீது ஏறுகின்றன!''

''இவை ஒன்றையொன்று சந்திக்கும் போது, நின்று, தம் தலைப்பகுதியை அசைப்பதைக் கவனித்தீர்களா!''

''இவை இப்படித்தான் முகமன் கூறிக்கொள்கின்றன!''

''இரை எங்குள்ளது என்று இவை ஒன்றிற்கொன்று சொல்லிக் கொள்கின்றன.''

''இவற்றால் பேச முடியாது!''

''இல்லை, முடியும்!''

''உனக்கு அவை பேசுவது கேட்கிறதா?''

''கேட்கவில்லை அதனால் என்ன... அவை தலையால் பேசுவது தெரிகிறதே!''

''தலையால் எப்படிப் பேச முடியும்!''

''ஏன், நன்றாக முடியுமே!''

''இதோ ஷல்வா அலெக்சாந்தரவிச்சைக் கேட்போம், அவர் சொல்வார்.''

இந்த விவாதம் ஒரே இரைச்சலாக இருக்கும். எறும்புகளுக்கு மொழி உண்டா எனும் பிரச்சினைக்குத் தீர்வு காண குழந்தைகள் என்னிடம் வருவார்கள். ''இவர்களுக்கு என்ன பதில் சொல்வது? எறும்புகளின் வாழ்க்கையைப் பற்றிச் சிறிதாவது தெரிந்திருந்தால் நல்லது... இப்படிப்பட்ட கேள்விகள் வரும் என்று நான் யோசித்திருக்க வேண்டும்!'' என்று நான் எண்ணுவேன்.

இம்முறை தீர்வு கண்டாகி விட்டது. ''யார், என்ன'' எனும் கலைக்களஞ்சியத்தை நாளை கண்டிப்பாக எடுத்து வந்து எறும்புகளின் வாழ்க்கையைப் பற்றிய கட்டுரையை வாசிப்பதாக உறுதியளிப்பது சிறந்ததாயிருக்கும். ''எறும்புகளின் வாழ்க்கை ஒரு சுவாரசியமான விஷயம் தெரியுமா,

குழந்தைகளே! பூமியின் அடியில் இவற்றிற்கு பெரும் நகரங்கள் உள்ளன. எறும்புகள் இறக்கைகளுடன் பிறக்கின்றன தெரியுமா? சரி, உங்களுக்கு இவ்வளவு ஆர்வமிருப்பதால் நாளை நான் அந்தக் கட்டுரையைப் படிப்பேன், நீங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்வீர்கள்!''

சாஷா, மாயா அல்லது தேயா, நான் என்ன புத்தகத்தைப் படிக்கிறேன் என்று கண்டிப்பாகக் கேட்பார்கள். குலிவேர் பயணம் பற்றிய இந்நூலின் மீது குழந்தைகளுக்கு ஆர்வமேற்படுவதற்காக இதை பூங்காவிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். லிலிபுட் என்ற குள்ளர்களின் நாட்டிலும், அசுரர்கள் நாட்டிலும் மற்ற கற்பனை நாடுகளிலும் குலிவேரின் வீர சாகசங்களைப் பற்றியும் இந்நாடுகளில் உள்ள மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் இதில் எழுதப்பட்டுள்ளதாக நான் குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்வேன்.

திடீரென யாராவது ஒரு சிறுவன் ஓடி வந்து ''நாங்கள் ஒரு ஆமையைக் கண்டுபிடித்து விட்டோம்'' என்று முழுக் குரலில் அறிவித்தால் இப்பேச்சு தடைப்படும்.

குழந்தைகள் தம்மிடங்களிலிருந்து துள்ளி எழுந்து இதை நோக்கி ஓடுவார்கள். விரைவிலேயே இரைச்சலிட்டுக் கொண்டு திரும்பி வருவார்கள்:

''பத்திரமாகப் பிடி!''

''பயப்படாதே, கடிக்காது!''

''சிறிய ஆமையா?''

''நம்மோடு ஆமையை எடுத்துச் செல்லலாம்'' என்று நான் குழந்தைகளிடம் சொல்வேன்.

நாங்கள் ஆமையோடு பள்ளிக்குத் திரும்பி வருவோம்.

பூங்காவில் நாங்கள் உலாவும் இந்த 30 நிமிடங்களில் இவ்வளவு சுவாரசியமான விஷயங்கள் நடக்கும். எனவே தான் நானும் குழந்தைகளும் நீண்ட இடைவேளைகளை விரும்புகின்றோம்...

''தயாரா?'' நாங்கள் மாடியிலிருந்து இறங்கி பள்ளி முற்றத்திற்கு வந்து பூங்காவை நோக்கி புறப்படுகிறோம்.

ஆனால் திடீரென...

''நில்லுங்கள்!'' கோத்தே தனியாக வருகிறான், அவனருகே அவனுடைய நண்பனைக் காணோம்.

அவர்கள் சேர்ந்தல்லவா வந்து கொண்டிருந்தார்கள்.

அவன் நம்முடன் அல்லவா இருந்தான்? சிறுவன் எங்கே?

''கோத்தே, எங்கே அவன்?''

''அவனை ஒரு மாமா கூட்டிச் சென்று விட்டார்.''

''எந்த மாமா?''

''தெரியாது... உயரமாயிருந்தார்...''

''எப்போது?''

''நாம் படியில் இறங்கி வந்த போது!''

மற்ற குழந்தைகளும் பார்த்திருக்கின்றனர்: உயரமான ஒருவர் சிறுவனை நெருங்கி ''என்னோடு போகலாம் வா'' என்றார். அவர் சிறுவனின் கையைப் பிடித்து வெளியே கூட்டிச் சென்றார்.

யார் சிறுவனைக் கூட்டிச் சென்றிருக்க முடியும்? ஏன் அவர் என்னிடம் செல்லவில்லை? நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒருவேளை அவர்கள் அங்கு தாழ்வாரத்திலேயே தங்கி விட்டார்களோ, சிறுவன் இப்போது இறங்கி வந்து விடுவானோ?

''கோத்தே, மேலே ஏறிச் சென்று வகுப்பறையில் அவனைத் தேடு. நாங்கள் அவனுக்காகக் காத்திருப்பதைச் சொல்.''

கோத்தே விரைவாகத் திரும்பி வந்து அங்கு யாருமில்லை என்று சொன்னான்.

ஆம், ஏதோ நடந்து விட்டது. அந்த ''உயரமான மாமா'' வேறொரு வாசல் வழியே வெளியேறியிருக்க வேண்டுமென்பது தெளிவு. அப்படியெனில், அவர் உண்மையிலேயே எனக்குச் சொல்லாமல் சிறுவனைக் கூட்டிச் செல்ல விரும்பியிருக்கின்றார்.

''குழந்தைகளே, இங்கேயே நில்லுங்கள்... நான் இதோ வருகிறேன்!..''

அவர்களைப் பிடிக்கும் பொருட்டு வேறு வாசலை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் செல்கிறேன். அவர்கள் ஏற்கெனவே வீதியில் இருக்கின்றனர். சிறுவன் முரண்டு பிடிக்கிறான், பெரியவரோ கார் கதவைத் திறந்து ''சீக்கிரமாக உட்கார், நமக்குத் தாமதமாகிறது'' என்று குழந்தையைப் பார்த்து அதிகாரத் தொனியில் கூறுகிறார்.

''பொறுங்கள்!'' என்று காரை நோக்கி விரைந்தபடியே நான் கத்துகிறேன்.

அந்த நபரோ ஏதோ என் குரலையே கேட்காதது போல் அவசர அவசரமாகக் காரில் உட்காருகிறார். இப்படிப்பட்டவர்களின் கார் இயந்திரங்கள் உடனடியாக வேலை செய்ய ஆரம்பிக்காதது எவ்வளவு நல்லது!

''ர்ர்ர்...'' என்று என்ஜின் சத்தமிடுகிறது.

இந்த நொடிப்பொழுதில் நான் காரை நெருங்குகிறேன்.

''உடனே குழந்தையை வெளியே விடுங்கள், நீங்களும் காரை விட்டு வெளியே வாருங்கள்.''

''வணக்கம்!'' என்கிறார் அந்நபர். ''ஏன் கோபப்படுகின்றீர்கள்? எனக்கு விருப்பமான போது என் மகனைப் பள்ளியிலிருந்து கூட்டிச் செல்ல முடியாதா என்ன!''

''இல்லை, முடியாது, காரை விட்டு வெளியே வாருங்கள்.''

''எங்களுக்கு அவசர வேலையுள்ளது, எங்களுக்குத் தாமதமாகிறது!''—பிள்ளைப் பாசமுள்ள தந்தைக்கு கோபம் வருகிறது.

''எனக்கு இப்போதுள்ள வேலையை விட அவசரமான வேலை இருக்க முடியாது. காரை விட்டு வெளியே வாருங்கள்!''

சிறுவன் கதவைத் திறந்து, காரிலிருந்து குதித்து என்னை நோக்கி ஓடி வந்து ஒட்டிக் கொள்கிறான்.

''சரி பையா, நான் வகுப்புகள் முடிந்ததும் வந்து உன்னைக் கூட்டிச் செல்வேன்'' என்று பாசமுள்ள தந்தை சொல்கிறார். அச்சிறுவனின் கைகள் நடுங்குவதை நான் நன்கு உணருகிறேன்.

''இல்லை, நீங்களும் வெளியே வாருங்கள், என்ன நடந்தது என்று பேசுவோம்.''

''பேச என்ன இருக்கிறது! நான் தந்தை, அவன் என் மகன்! அவசரமான ஒரு தனிப்பட்ட காரியத்திற்கு அவனைக் கூட்டிச் செல்ல விரும்பினேன். தனிப்பட்ட விஷயங்களே இருக்க முடியாதா என்ன! நீங்கள் எனக்கு இடையூறு செய்கின்றீர்கள், இன்னும் பேச வேறு வேண்டுமா!''

''காரை விட்டு வெளியே வாருங்கள், பள்ளி இயக்குநரிடம் செல்வோம்.''

வேறு வழியில்லை என்பது ஒருவழியாக பாசமுள்ள தந்தைக்கு புரிந்தது. அவர் காரை விட்டு வெளியே வந்து ரகசியக் குரலில் விளக்க முற்படுகிறார்:

''இன்று சிறுவனின் விதி முடிவு செய்யப்படுகிறது, புரிந்து கொள்ளுங்கள்.''

''பள்ளி இயக்குநரிடம் போகலாம் வாருங்கள்...''

''எதற்கு பள்ளி இயக்குநரிடம்?..''

'' வேண்டும்! நீ நண்பர்களிடம் ஓடு, அவர்கள் பள்ளி முற்றத்தில் காத்திருக்கின்றனர்.''

சிறுவன் ஓடுகிறான். தந்தையைத் திரும்பிப் பாராமல் ஓடுவதிலிருந்து அவனுக்கு மகிழ்ச்சி எனத் தெரிகிறது.

பள்ளி இயக்குநரின் அறையில், என்ன நடந்தது என்று பேச நாங்கள் முற்படுகிறோம்.

பாசமுள்ள தந்தை ஏன் ஆசிரியருக்குத் தெரியாமல் தன் மகனைக் கூட்டிச் சென்றார்?

ஏன் அவர் தன் மகனை வலுக்கட்டாயமாகக் கூட்டிச் சென்றார்? ஏன் சிறுவன் தன் அன்புத் தந்தையுடன் செல்ல விரும்பவில்லை?

தன் மனைவியிடமிருந்து பிரிந்து விவாகரத்து பெறும் தந்தைக்கு யாருடைய விதியில்—தன் விதியிலா, தன் மகனின் விதியிலா—பெரும் அக்கறையிருக்கிறது?

ஏன் அவர் மகனை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார்?

வழக்கு எப்போது ஆரம்பமாகப் போகிறது? மூன்று மணி நேரம் கழித்தா? அது வரை அவர் குழந்தையுடன் என்ன செய்யத் திட்டமிட்டிருந்தார்?

இப்பாசமுள்ள தந்தை தன் ஆறு வயது மகனை அச் சுறுத்தி, நீதிமன்றத்தில் பொய்சாட்சி சொல்லும்படி கட்டாயப்படுத்த விரும்பினாரோ?

தன் வகுப்பு குழந்தை காணவில்லை என்று ஆசிரிய ருக்குத் தெரிய வந்தால் அவருக்கு எப்படியிருக்கும் என்பது இந்தப் பாசமுள்ள தந்தைக்கு, அதுவும் உயர்கல்விக்கூட ஆசிரியருக்கு விளங்கவில்லையா? மகனைக் கூப்பிடத் தாய் வந்தால் அவரிடம் ஆசிரியர் என்ன சொல்வார்?

ஆம், இதைப் பற்றியெல்லாம் உயர்கல்விக்கூட மேலாள ருக்கும் நீதிமன்றத்திற்கும் தெரியப்படுத்த வேண்டும்.

சரி, இப்போது போய் வாருங்கள். எங்களுக்கு எல்லாம் புரிந்து விட்டது. தந்தையர்கள் பல்வேறு விதமானவர்கள், இவர்களில் சிலரிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பது நன்கு புரிகிறது.

இப்படிப்பட்ட தந்தைக்கு நம் பாடங்கள், நாம் உலாவுவதன் மீது என்ன அக்கறை? நம் மகிழ்ச்சிகள், இன்ப துன்பங்கள் மீது என்ன அக்கறை? கோச்சா இன்று பூங்காவில் ஆமையைக் கண்டெடுக்காவிடில் இவருக்கு என்ன? எறும்புகளின் வாழ்க்கையைப் பற்றி அங்கு பேசாவிடில் இவருக்கென்ன கவலை? புதிய நாடுகளைப் பற்றிய குலிவேரின் கதையைக் குழந்தைகள் கேட்காவிடில் இவருக்கென்ன கவலை? அடுத்த பாடங்களைச் சரிவர நடத்துவதே சந்தேகமாயிருக்கும் அளவிற்கு ஆசிரியர் உணர்ச்சி வசப்பட்டிருப்பது குறித்து இப்படிப்பட்ட தந்தைக்குக் கவலையா என்ன?

நான் குழந்தைகளிடம் திரும்பி வருகிறேன். நான் வருவேன், சுவாரசியமாக உலாவலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் 30 நிமிடங்கள் அங்கேயே நின்று கொண்டிருக்கின்றனர்.

''சிறுவனே, கெட்ட விஷயத்திலிருந்து நான் உன்னைக் காப்பாற்றினேனா? உனது துக்கம் பெரியது! இதனால்தான் உன் கண்கள் அவ்வளவு சோகமாக உள்ளனவா, நமது மினி-பாடவேளைகளில் எதைப் பற்றியோ அடிக்கடி சிந்தனையில் மூழ்குகின்றாயோ? 'கவனக் குறைவானவன், மறதி மிக்கவன்' என்று உன்னைப் பற்றி என் நாட்குறிப்பில் எழுதினேன். இன்றுதான் எனது கவனக் குறைவு புரிந்தது. என்னை தயவு செய்து மன்னித்து விடு.''

''ஓ!'' என்று என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சியால் கத்தினார்கள் குழந்தைகள். கலைந்து நின்றவர்கள் மீண்டும் ஒழுங்காக நிற்க, ''பூங்காவை நோக்கிச் செல்கிறோம்!'' என்கின்றனர்.

ஆம், இப்போது மினி-பாடவேளைகளை நடத்த முடியாது. விரைவிலேயே இவற்றை ஈடு கட்ட நேரம் கண்டு பிடிக்க வேண்டும். இப்போது இவர்களைப் பூங்காவிற்கு அழைத்து செல்வேன். ஒருவேளை அவர்கள் உண்மையிலேயே ஆமையைக் கண்டு பிடிப்பார்களோ?

## குடும்பத்திற்கும் பள்ளிக்கும் இடையிலான தொடர்புகள்

அடுத்த திங்கட்கிழமையிலிருந்து கூடுதல் பள்ளி நேரத்திற்கு மாறுவோம். குழந்தைகளை இரண்டு குழுக்களாகப் பிரித்தோம். ஒவ்வொரு குழுவிற்கும் பெயர் (''ரோஜா'', ''மல்லிகை'') கூடக் கண்டுபிடித்தாகி விட்டது. இன்று வகுப்பறையில் பெற்றோர்களும் உதவியாசிரியர்களும் கூடுவார்கள், இக்குழுக்களில் என்ன செய்வது என்று கூட்டாக விவாதிப்போம்.

வகுப்பறையையும் தாழ்வாரத்தையும் ஒழுங்குபடுத்தி பலவற்றை மாற்றியமைத்ததில் பெற்றோர்கள் காட்டிய அக்கறை, ஆர்வம் குறித்து எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி.

தாழ்வாரத்தில் ஜன்னல்களில் ரோஜாப் பூ வண்ணத்தில் திரைச் சீலைகள் தொங்க விடப்பட்டுள்ளன, நன்கு வசதியான சூழல் உடனேயே ஏற்பட்டது.

தரையில் வைக்கோலால் செய்யப்பட்ட விரிப்பும் கம்பளமும் விரிக்கப்பட்டிருந்தன, கம்பளத்தில் குழந்தைகள் குட்டிக்கரணம் போட்டு விளையாடுகின்றனர்.

சுவரில் மின்சாரக் கணக்கு அட்டவணை தொங்கியது· இதில் கூட்டலாம், கழிக்கலாம், சிறிது நாட்களுக்குப் பின் பெருக்கலாம், வகுக்கலாம்.

ஜன்னலருகே மீன்தொட்டி உள்ளது. இதில் மீன்களும் நத்தைகளும் நீந்துகின்றன, நீர்ப்பாசி வளருகிறது.

வீடு, கட்டிடங்களைக் கட்டி விளையாடத் தேவையான விளையாட்டுப் பொருட்களும் உட்கார்ந்த இடத்திலேயே விளையாடும் பல சாமான்களுமாக ஏராளமான விளையாட்டுப் பொருட்கள் சேர்ந்துள்ளன. இவற்றை வைப்பதற்காக ஜன்னலருகே காலியான இடத்தில் அலமாரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வகுப்பறையிலும் தாழ்வாரத்திலும் ஒவ்வொரு முறையும் ஏதாவது புதிதாகத் தோன்றும் போதெல்லாம் குழந்தைகள் மகிழ்ச்சியடைந்தனர். ''பெற்றோர்களுக்கு நன்றி சொல்வோம்'' என்று ஒவ்வொரு முறையும் சொல்வேன்; பின் சாக்பீசால் தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையில் கீழ்வருமாறு எழுதுவேன்:

| |
|---|
| எங்கள் தாழ்வாரத்தை<br>திரைச் சீலைகளால்<br>அழகுபடுத்தியதற்காக<br>அவ்தன்தீல் மாமாவிற்கு நன்றி! |

அல்லது:

| |
|---|
| மீன்தொட்டி கொண்டு வந்ததற்காக<br>கேத்தினோ அத்தைக்கு நன்றி! |

அல்லது:

| |
|---|
| வாஹ்தாங் மாமா,<br>நீங்கள் மிக அன்பானவர்!<br>உங்களுக்கு நன்றி! |

பெற்றோர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கையில் நான் இப்போது பள்ளிக்கும் குடும்பத்திற்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றிச் சிந்திக்கிறேன்.

சில சமயங்களில் இத்தொடர்பு எவ்வளவு மெல்லியதாக, உறுதியற்று இருக்கிறது! சில சமயங்களில் இரு தரப்புகளிலுமாக இது எப்படி இழுக்கப்படுகிறது! குழந்தைகள் பள்ளியில் எப்படிப் படிக்கின்றனர், எப்படி நடந்து கொள்கின்றனர் என்பது தொடர்பான விவரங்களைப் பெற்றோர்கள் பெறுவதற்காக சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட நாட்களையும் நேரத்தையும் முடிவு செய்து அறிவிப்பார்கள். வேறு சிலரோ குழந்தைக்கு புத்தி சொல்லவும், படிப்பில் துணை புரியவும் உதவுமாறு பெற்றோர்களைக் கோருவார், குழந்தைகளின் செயல்களைப் பற்றிப் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதுவார், குழந்தையின் நாட்குறிப்பில் அதிருப்தியான, அச்சுறுத்தும் குறிப்புகளை எழுதுவார். வேறு சில ஆசிரியர்கள், குடும்பத்தில் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்று பெற்றோர் கூட்டங்களிலும் விரிவுரைகளிலும் பெற்றோர்களுக்குப் போதனை செய்வார். எனவே, பள்ளியைப் பொறுத்த மட்டில் இது குழந்தைகளின் நடத்தை, கல்வி பற்றிப் பெற்றோர்களுக்கு அறிவிக்க மட்டுமே செய்கிறது, எப்படி வளர்க்க வேண்டுமென ஆலோ

சனை கூற மட்டுமே செய்கிறது என்றாகிறது. அதுவும் குழந்தை ஏதாவது தப்பு செய்தால் மட்டுமே இதற்கான அவசியம் ஏற்படுகிறது. தம் குழந்தைகளைப் பற்றிய வசவு களைக் கேட்கும் பொருட்டு ஆசிரியர்களிடம் செல்ல அம்மாக்கள் எவ்வளவு தூரம் தயங்குகின்றனர், தந்தைமார் களோ இச்சந்திப்புகளை எப்படி உறுதியோடு தவிர்க்கின்ற னர் பாருங்கள். தாம் ஒரு தடவை கூட பள்ளி வாசல்படியை மிதித்ததில்லை, பள்ளி எங்கேயுள்ளது என்று கூடத் தெரி யாது—தம் மகன் எவ்வளவு நல்லவன்—என்றெல்லாம் சில அம்மாக்களுக்கு எவ்வளவு பெருமிதம்!

பள்ளிக்கும் குடும்பத்திற்கும் இடையிலான தொடர்பு களின் சாராம்சம் என்ன? பள்ளிக்குத் தேவையான துரித மான வளர்ப்பு உதவியை அளிப்பதும், குழந்தையின் விஷ யத்தில் பலவீனமான பள்ளியின் நிலையை வலுப்படுத்து வதுமா இதன் உட்பொருள்?

இந்நிலவரத்தைக் கண்டு யாரும் வியப்படைய வேண் டாம். ஆறு வயதுச் சிறுவனின் தாய் வெட்கத்தால் முகம் சிவக்க ஆசிரியையின் முன் நின்று அவனது குறைகளைக் கேட்கிறாள்: ''உங்கள் சிறுவன் கவனக் குறைவானவன், மேசைக்குப் பின் நாற்காலியில் உட்காரத் தெரியவில்லை. மோசமாக எழுதுகிறான். சொன்ன பேச்சைக் கேட்பதில்லை. அவனுக்கு ஓடிக் குதித்துக் கொண்டிருப்பதே போதும். அவனை சரியாக வளர்ப்பதன் மீது பெரும் கவனம் செலுத்த வேண்டும்''. சிறுவன் அருகேயே நிற்கிறான், ஏதோ விஷ யம் சரியில்லை என அவனுக்குப் புரிகிறது, தாயோ ''நேராக நில்! வீட்டிற்கு வா ஒரு கை பார்க்கிறேன்!'' என்று கூறுவது போல் அவன் கையைப் பிடித்து வலிக்கும் படி திருகுகிறாள். சிறுவனின் மனதில் ஆசிரியை முதல் எதிரியாகிறாள்.

ஒருவேளை இங்கு ஆசிரியை, பள்ளிக்கும் குடும்பத் திற்கும் இடையிலான தொடர்பு எனும் புனிதமான கோட் பாட்டை நிறைவேற்றினாளோ! சரி, அப்படியெனில் அத் தாய் வீடு திரும்பியதும் எப்படி நடந்து கொள்கிறாள் என்று பார்ப்போம். ஏனெனில் ஆரம்பத்திலேயே குழந்தை யை சரியான பாதையில் திருப்ப வேண்டுமே! இன்றே அவன் பள்ளியில் கவனக் குறைவாக இருந்தால், குறும்பு செய்தால், படிக்காவிட்டால், சொன்ன பேச்சைக் கேட்கா

விட்டால் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின், என்ன நடக்கும்? ஆறு வயதுக் குழந்தையின் அனுபவமேயில்லாத பெற்றோர்கள் தம் முதல் குழந்தையை வளர்க்கும் போது என்ன செய்வார்கள்? ''இது மாதிரி இனி செய்யக் கூடாது'' என்று தந்தை விரலை ஆட்டி அச்சுறுத்துவார். தாய் கிட்டத்தட்ட தன் மகனை வலுக்கட்டாயமாக மேசை முன் அமர்த்தி எழுதப் படிக்கச் சொல்வாள். பாட்டி கூட கதவின் முன் நின்று கொண்டு ''படித்து முடிக்கும் வரை விளையாட வெளியே விடமாட்டேன்'' என்பாள். குழந்தையோ, இவையெல்லாம் பெரியவர்களின் சதியென எண்ணி வருந்துவான்.

இச்சிறுவனின் விஷயத்தில் பள்ளிக்கும் குடும்பத்திற்கும் இடையிலான தகவல் ரீதியான, கட்டளை பிறப்பிக்கும் தொடர்பு என்ன செய்தது? குழந்தை வளர்ப்பில் குடும்பம் மற்றும் பள்ளியின் முயற்சிகளை இது ஒன்றிணைத்ததா? இல்லை.

பள்ளிக்கும் குடும்பத்திற்கும் இடையே வெறும் தொடர்பு மட்டும் போதாது. முழுமையான வளர்ப்பு, குழந்தையின் பாலான சர்வாம்ச அணுகுமுறை தேவை. எவ்வொரு குழந்தையையும் சுற்றி மனிதாபிமான பள்ளிச் சூழலை ஏற்படுத்துவதில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் பொது அக்கறையில் இந்த முழுமை பிரதிபலிக்க வேண்டும், இது இச்சூழலை ஏற்படுத்துவதில் பள்ளியின் முக்கியப் பாத்திரத்தைக் குறிக்க வேண்டும்.

வளர்ப்பின் முழுமைக்கு வழிகோலும் இப்படிப்பட்ட தொடர்பை எப்படி நிறைவேற்றுவது? ஒருவேளை இதே லட்சியத்தைக் கொண்டுள்ள ஆயிரக் கணக்கான என் சக ஆசிரியர்கள் தம் நடைமுறையில் பள்ளிக்கும் குடும்பத்திற்கும் இடையிலான செயல் பூர்வமான தொடர்புக்கான பல சுவாரசியமான வழிகளைக் கண்டுபிடித்திருக்கலாம். எனது ஞானத்தை செழுமைப்படுத்த இவர்களின் அனுபவம் தேவை. தற்போது நான் கீழ்வரும் ''முதுமொழியைப்'' பின்பற்றுகிறேன்:

> பள்ளியில் வளர்ப்புப் பணியைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதில் எந்த அளவிற்குக் குடும்பம் ஈடுபாடு கொள்கிறதோ அந்த அளவிற்குத்தான் பள்ளி, குடும்ப வளர்ப்பின் முழுமையும், குடும்ப வளர்ப்பின் போக்கை நிர்ணயிப்பதில் பள்ளியின் முக்கியப் பாத்திரமும் பொறுத்துள்ளன.

பெற்றோர்களுக்காக ஒரு சில வெளிப்படையான பாடங்களை நடத்தி, பின் இவற்றைப் பற்றி இவர்களுடன் சேர்ந்து விவாதிக்கலாமா? குழந்தைகளுக்குப் பாடம் நடக்கும் போது இப்பாடங்களுக்கு பெற்றோர்கள் வர அனுமதிக்கலாமா? அனுமதிக்கலாம், அது மட்டுமல்ல, இதைச் செய்ய வேண்டியது அவசியமும் கூட. சக ஆசிரியர்களை மட்டுமல்ல, குறிப்பாக பெற்றோர்களை இப்பாடங்களுக்கு அழைக்க வேண்டும். கல்வி சொல்லிக் கொடுப்பதும் குழந்தை வளர்ப்பும் எவ்வளவு கடினமானது, சிக்கலானது என்று அவர்கள் உணரட்டும். இது அவசியமாகும். ஆறு வயதுக் குழந்தைகளின் பெற்றோர்கள் எப்படிப்பட்டவர்கள்? இவர்கள்தாம் பள்ளியில் மிகவும் இளைய பெற்றோர்கள், இவர்களுக்குக் குழந்தை வளர்ப்பு அனுபவம் மிகக் குறைவே. ஆனால் வியப்பு என்னவெனில், குழந்தை வளர்ப்பும் கல்வி போதிப்பதும் இவர்களுக்கு எளிய காரியமாகப் படுகின்றன. ஏன் இப்படித் தெரிகிறது? மாபெரும் ருஷ்ய ஆசிரியர் கான்ஸ்தன்தீன் திமீத்ரியெவிச் உஷின்ஸ்கி இதில் நமக்கு உதவுகிறார். குழந்தை வளர்ப்புக் கலைக்கு ஒரு சிறப்பு அம்சம் உண்டு என்றார் இவர். அதாவது கிட்டத்தட்ட அனைவருக்கும் இது தெரிந்த, புரிந்த விஷயமாக, ஒரு சிலருக்கு எளிய காரியமாகக் கூடத் தோன்றும். அவர்கள் தத்துவ ரீதியாகவும் நடைமுறையிலும் எவ்வளவுக்கெவ்வளவு இதைப் பற்றிக் குறைவாக அறிந்திருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு இது புரியக் கூடியதாயும் எளிதானதாயும் தோன்றும்.

இது தவறு என்று என் வகுப்புச் சிறுவர் சிறுமியரின் பெற்றோர்களுக்கு எப்படி உணர்த்துவது? நான் இவர்களை வகுப்புகளுக்கு அழைக்கப் போகிறேன்: ‘‘வாருங்கள், பாருங்கள், பின்னர் கலந்து பேசுவோம்’’. அவர்களுக்கு எப்போது ஓய்வு கிடைக்குமோ அப்போது வகுப்பில் வந்து அமர நான் அனுமதி தருவேன். குழந்தைகளின் பாலான மனிதாபிமான அணுகுமுறைக் கோட்பாடுகளை நான் எப்படி நிறைவேற்றுகிறேன், எப்படிப்பட்ட முறைகளையும் வழிகளையும் பின்பற்றுகிறேன், ஒவ்வொரு குழந்தையுடனும் நான் எப்படிக் கலந்து பழகுகிறேன் என்று அவர்கள் பார்க்கட்டும். முக்கியமானது என்னவெனில், தங்கள் குழந்தை

எப்படிப் படிக்கிறான், சம வயதுக் குழந்தைகளுடன் வகுப்பில் எப்படி இருக்கிறான் என்று அறிந்து கொள்ளட்டும். அப்போதுதான் தம் குழந்தையின் வளர்ச்சி பற்றிய உண்மையான கருத்து பெற்றோர்களுக்கு உருவாகும், ஆசிரியரின் மீது நம்பிக்கை வரும். சில சமயங்களில் என்ன நடக்கிறது தெரியுமா? அந்த ''அதிகாரத் தொனியுள்ள'' தாய் என்னை ஒவ்வொரு நாளும் சந்தித்து தன் மகனுக்காக விசேஷ சலுகைகளைக் கோருகிறாள்: ''ஏன் அவனை இரண்டாவது பெஞ்சில் உட்கார வைத்தீர்கள்? ஏன் நீங்கள் அவனிடம் அடிக்கடி கேள்வி கேட்பதில்லை? ஏன் அவனிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வதில்லை? ஏன்?..'' உண்மையிலேயே நான் அக்குழந்தையிடம் பாரபட்சமாக நடந்து கொள்கிறேனா என்ற சந்தேகம் தோன்றுகிறது. விஷயத்தை வேறுவிதமாக எடுத்துச் சொல்லவே பயப்படுகிறேன். ஒவ்வொரு தாய், தந்தை, பாட்டி, தாத்தாவின் நம்பிக்கையும் எனக்கு மிக மிக அவசியம். சின்ன விஷயங்களுக்காக மிக முக்கியமானவற்றிலிருந்து கவனத்தை திசை திருப்பாமலிருக்கவும் ஏதோ ஒவ்வொரு குழந்தைக்கும் என்னாலியன்ற அனைத்தையும் தராமல் இருக்கிறேனோ என்று என்னை நானே வருத்திக் கொள்ளாமல் இருக்கவும் இந்த நம்பிக்கை எனக்கு உதவும்.

வளர்ப்புப் பணி ஒரு சமுதாயப் பணியாகும், இதை ஒளிவு மறைவின்றிச் செய்ய வேண்டும். நான் மருத்துவரோ, பொறியியலரோ, பிட்டரோ, திராட்சை பயிரிடும் விவசாயியோ அல்ல. நான் ஆசிரியன், குழந்தைகளை வளர்ப்பவன். எனது துறை மிகச் சிக்கலானது, மிகவும் பொறுப்புள்ளது. ஆசிரியனும் குழந்தை வளர்ப்பாளனுமாகிய நான் எல்லோருக்கும் அவசியமானவன். குழந்தையின் முதல் ஆசிரியனாகிய என்னோடு கலந்து பேசாமல், எனது வகுப்புகளில் இல்லாமல் வேறு எங்கு இந்த இளம் பெற்றோர்கள், தமது முதல் குழந்தைகளை நவீன முறையில் வளர்ப்பதன் அடிப்படைகளைக் கற்றுக் கொள்ள முடியும்?

என் வகுப்புக் குழந்தைகளின் பெற்றோர்களை நோக்கி ''என் வகுப்புகளுக்கு தயவு செய்து வந்து பாருங்கள்'' என்று அழைப்பு விடுக்கும் போது, இவர்களின் முன், சமுதாயத்தின் முன், எனது அர்ப்பணிப்பையும் ஆசிரியர் திறமையையும் காட்டுவதாக உறுதி ஏற்கிறேன்.

எனது வகுப்புகளுக்கு வரும் பெற்றோர்களுடன் நான் எளிதாக ஒரு பொது மொழியைக் கண்டுபிடிக்க முடியும், குழந்தைகள் வளர்ப்பு பற்றிய கருத்தொருமித்த திட்டத்தைத் தீட்ட முடியும் என்று அனுபவம் காட்டுகிறது.

நான் இன்னமும் ஒரு படி முன் செல்லத் தீர்மானித்தேன்—தம் குழந்தைகளைப் பள்ளியில் வளர்க்க வருமாறு பெற்றோர்களுக்கு அழைப்பு விடுத்தேன்.

## கூடுதல் பள்ளி நேரம்: பன்முக நடவடிக்கை

திங்கட்கிழமை முதல் கூடுதல் பள்ளி நேரம் ஆரம்பமாகும். அதாவது வகுப்புகள் முடிந்த பின் குழந்தைகள் 6—7 மணி நேரத்தைப் பள்ளியில் கழிப்பார்கள். இந்நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது? அவர்கள் பள்ளியில் சலிப்போடு உட்கார்ந்திருக்க விடக் கூடாதல்லவா!

தான் வளர்க்கப்பட வேண்டுமெனக் குழந்தை விரும்புகிறான் என நான் நம்புகிறேன். ஆனால் அக்குழந்தையால் இதை வாய்விட்டுச் சொல்ல முடியாது, ஏனெனில் இதை அவன் இன்னமும் முழுமையாக உணரவில்லை. ஓய்வு நேரம் என்றழைக்கப்படுவதை அவன் விரும்புவதில்லை. இச்சமயத்தில் என்ன செய்வதென அவனுக்குத் தெரியாது. குழந்தை சும்மாயிருக்கலாம் என்றால் என்ன பொருள்? விரும்பமானதைச் செய் என்று பொருளா?ஆனால் அவன் என்ன விரும்புகிறான் என்பது அவனுக்கு என்ன வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தது. குழந்தை ஓடியாடித் திரியும் தன்மையுள்ளவன், சுறுசுறுப்பானவன். என்ன செய்வது என்று தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லாவிடில் சுதந்திரம், ஓய்வு நேரம் என்பதெல்லாம் அவனைப் பொறுத்த மட்டில் ஒன்றையுமே குறிப்பதில்லை. கூடுதல் பள்ளி நேரத்தின் போது பல்வேறு விதமான, உணர்ச்சிகரமான, புதியவற்றை அறியும் விஷயங்களுக்கும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்யாவிடில் குழந்தைகளுக்குச் சலிப்பேற்படுமென நான் உறுதியாக நம்புகிறேன். குழந்தைகளுக்குப் பிடித்தவற்றைச் செய்ய வல்ல உற்சாகமான, அன்பான ஆசிரியர்களுக்காக அவர்கள் ஏங்குவார்கள். நாள் பூராவும் குழந்தைகள் குறிப்பிட்ட நோக்கமின்றி ஓடியாடி, அலைந்து திரிந்து, சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் அவர்

கள் முற்றிலுமாக மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர், இவை யெல்லாம் அவர்களுடைய முழுத் திருப்தியின் வடிவம் என்று யாரும் எண்ண வேண்டாம். பல விதங்களில் சலிப்பை வெளிப்படுத்தலாம், விஷயமின்றி குழந்தை அங்குமிங்கும் அலைந்து திரிந்தால் அவன் தன் சலிப்பை இதன் மூலம் வெளிப்படுத்துகிறான் என்று என்னால் நிச்சயம் கூற முடியும்.

எனது சக ஆசிரியர்களைப் போன்றே நானும் என் வகுப்புக் குழந்தைகளைப் பன்முக ரீதியாக வளர்க்க முயல்கிறேன், அவர்களின் அறிவு, உழைப்பு, தார்மிக, மானுட, அழகியல், உடற்கூறு வளர்ச்சிக்குப் பாடுபடுகிறேன். குழந்தையிடம் உருவாகும் மனநிலையில் இந்த அம்சங்கள் அனைத்தும் சீரிசைவாக இணைய வேண்டும், பரஸ்பரம் செயலாக்கம் புரிய வேண்டும் (ஏனெனில் மனநிலை என்பது மேற்கூறிய பண்புகளின் வெறும் கூட்டல் அல்ல, இது சீரிசைவான முழுமை) என்று விழைகிறேன். எனது இந்த ஆசை எதார்த்தமாக பன்முக நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதன் மீது அக்கறை காட்டுகிறேன். இவற்றில் எனது ஆறு வயதுக் குழந்தைகள் பங்கேற்கலாம், ஏனெனில் நடவடிக்கை தான் வளர்ச்சிக்கும் மனிதன் உருவாவதற்கும் தேவையான நிபந்தனையாகும்; ஒன்றுடன் ஒன்று செயல் நோக்கமுள்ள வகையில் தொடர்பு கொண்ட நடவடிக்கைகள் மட்டுமே சீரிசைவான, பன்முக வளர்ச்சிக்கான நிபந்தனையாக முடியும்.

ஆசிரியர்களால் மட்டும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது—குழந்தைகளுக்கு உற்சாகமான கூடுதல் பள்ளி நேரத்தை அளிக்க இயலாது. எங்களுக்கு உதவி வேண்டும். எந்த விதமான உதவி வேண்டும்? யாரிடமிருந்து?

பெற்றோர்களிடமிருந்து உதவி வேண்டும்.

பாடங்கள் முடிந்த பின் என் வகுப்புக் குழந்தைகளின் கூடுதல் பள்ளி நேரத்தை சிந்தித்துப் பார்க்கிறேன்: இந்த வகுப்பறையில், தாழ்வாரத்தில், பள்ளி முற்றத்தில், பூங்காவில் எப்படியிருக்குமென யோசித்துப் பார்க்கிறேன். அவர்களுடன் எப்படி பொழுதைக் கழிக்கலாம்?

வகுப்பறையில் மேசைகள் அகற்றப்பட்டு விட்டன. அறையின் நடுவில் நாற்காலிகள் மட்டும் அரை வட்ட வடிவத்தில் போடப்பட்டுள்ளன. சிலர் உட்கார்ந்திருக்கின்றனர்,

சிலர் நிற்கின்றனர். குழந்தைகளிடம் மரக் கரண்டிகள், முக் கோணங்கள், கஞ்சிரா, பேரிகைகள், கிசிலோஃபான் எனும் இசைக் கருவி முதலியன உள்ளன. இது சந்த இசைக் குழு. கோச்சாவின் தந்தையாகிய வலேரி மாமா உருவாக்கியுள்ள இசை நாடகத்தை இவர்கள் நடத்துகிறார்கள். சமீபத்தில் தான் இவர் என்னிடம் வந்து, ''வீரமுள்ள முயல்'' எனும் இசை நாடகத்தைத் தான் எழுதியுள்ளதாக மகிழ்ச்சியோடு அறிவித்தார், சில பாடல்களைப் பாடிக் காட்டினார். அவை எனக்குப் பிடித்திருந்தன, சந்தமும் இசை நயமும் உள்ள வையாக, பாட எளிமையானவையாக இருந்தன. குழந்தைக ளுக்கு இசை வகுப்புகள் நடத்தவும் இசைக் குழுவை தோற்று விக்கவும் இவர் ஒப்புக் கொண்டார். இந்த உற்சாகமான, இசை நேயமுள்ள மனிதர், அதிசயமான இசையுலகை குழந்தைகளுக்குத் திறந்து காட்ட முயலுகிறார். இந்தக் கூடுதல் பள்ளி நேரத்தில் நடக்கப் போவதை நான் இப் படித்தான் கற்பனை செய்து பார்க்கிறேன்.

''நாம் இப்போது எந்த காட்சியை நடித்துக் காட்டு கிறோம்?''

''வீரம் மிக்க முயல் சிங்கத்திடம் செல்ல இருக்கையில் மற்ற மிருகங்கள் இதை வழியனுப்புகின்றன.''

''நமது இசைக்கருவிகள், பாடல் எதை வெளிப்படுத்த வேண்டும்?''

''மற்ற மிருகங்கள் முயலின் மீது இரக்கம் காட்டு கின்றனவா?''

''முயலை விட்டுப் பிரிவது குறித்து மற்ற மிருகங்கள் கவலை கொள்கின்றன.''

''நாம் துக்கத்தை, வருத்தத்தை வெளிப்படுத்த வேண் டும். ஏனெனில், முயல் ஒருவேளை திரும்பாமல் இருக்க லாம்.''

''நீ உனது கிசிலோஃபான் கருவியில் இதை எப்படி வாசிப்பாய்?.. பேரிகையில்... இப்படியில்லை, நாம் இசை யின் மூலம் அச்சத்தையும் முயலுக்கான கவலையையும் வெளிப்படுத்த வேண்டும்... தயாரா...''

இசைக் குழு இசைக்க, வலேரி மாமா கையை ஆட்டி, சைகை காட்டி, குரல் எழுப்பி இசைக் குழுவை வழிநடத்து கிறார்.

''நான் இப்போது உங்களுக்குச் சிறிது வாசித்துக் காட்டட்டுமா?'' என்று இறுதியில் அவர் குழந்தைகளைக் கேட்டுவிட்டு, பியானோ முன் அமருகிறார். குழந்தைகள் அவரைச் சுற்றிக் குழுமுகின்றனர்.

''இன்னமும் கொஞ்சம் வாசியுங்கள்!'' என்கின்றனர் குழந்தைகள். அவர் இன்னமும் வாசிக்கின்றார். குழந்தைகளுக்கோ வலேரி மாமாவை விடவே விருப்பமில்லை...

லேவானின் தந்தையாகிய நுக்ஸார் மாமாவும் குழந்தைகளிடம் வருவார். இவரும் உற்சாகமானவர், அன்பானவர், இளைஞர், ஒப்பேரா, பாலே நாடகமன்ற நாட்டியக் கலைஞர்.

''உங்களுக்கு நாட்டிய மொழியைச் சொல்லித் தரட்டுமா?'' குழந்தைகளுக்கு விருப்பம்தான்: நாட்டியமும் புன்சிரிப்பு மிக்க இளைஞரும்.

''நான் இப்போது உங்களுக்கு என்ன 'சொல்லப் போகிறேன்' தெரியுமா?'' என்று அவர் அங்கேயே சில நடன அம்சங்களைச் செய்து காட்டுவார்.

பின்னர் இவர் குழந்தைகளை வட்டமாக நிற்கச் செய்து பாலே நடன அம்சங்களைச் சொல்லித் தர ஆரம்பிப்பார். நுக்ஸார் மாமா கண்டிப்பானவர், ஒரே மாதிரியான பாவனையைப் பன்முறை செய்து காட்டும்படி செய்வார் என்றபோதிலும் குழந்தைகளுக்கு இந்த வகுப்புகள் பிடிக்கும். களைப்படைவார்களா? களைப்படைந்தால் நுக்ஸார் மாமா இவர்களை வட்டமாக உட்கார வைத்து நடனங்களைப் பற்றி சுவாரசியமான கதைகளைச் சொல்லுவார், எல்லோருக்கும் புரியக் கூடிய இந்த வியத்தகு ''நடன மொழி'' பற்றிக் கூறுவார்.

''ஞாயிற்றுக்கிழமை ஒப்பேரா, பாலே அரங்கின் காலைக் காட்சிக்கு வாருங்கள். நான் நடனமாடப் போகிறேன். பின்னர் உங்களுக்கு என்ன பிடித்தது, என்ன பிடிக்கவில்லையென்று சொல்லுங்கள்...''

நீனோவின் தந்தையாகிய கீவி மாமாவுடன் பேசுவதும் சுவாரசியமாக இருக்கும். இவர் பொம்மலாட்ட அரங்கில் பணி புரிகிறார். மழை பெய்யும் போது வீதியில் மனிதர்கள் எப்படி நடப்பார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள் என்று கூறி துவங்குவார். லேலா வெட்கப்படுகிறாள். ஏல்லாவிற்கு விருப்பமில்லை. மாக்தாவிற்கு சரியாக வர

வில்லை. மாயாவோ முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு அறையில் அங்குமிங்கும் நடந்து காட்டுகிறாள்.

''மழையில் இப்படியா நடப்பார்கள்?'' என்று ''பார்வை யாளர்கள்'' மறுப்பு தெரிவிப்பார்கள்.

லேரி தலையைப் பத்திரிகையால் மூடியபடி ''நடை பாதை'' விளிம்பில் கவனமாக நடக்கிறான். அவன் முற்றிலு மாக நனைந்து விட்டான், வழுக்கி, ''குட்டையில்'' வேறு விழுந்து விட்டான், எழுந்திருக்க முயன்று மீண்டும் விழு கிறான்; யாரோ அவனுக்கு எழ உதவுகின்றனர்; அருகேயுள்ள வீட்டு வாசலை நோக்கி ஓடுகிறான், அங்கே கும்பலாயிருந் தாலும் மழை கிடையாது.

கற்பனையான ஊமை நாடகம் மகிழ்ச்சிகரமானது, எல் லோருக்கும் புரியக் கூடியது. குழந்தைகள் சிரிக்கின்றனர், கை தட்டுகின்றனர். கீவி மாமாவும் நடித்துக் காட்டுகிறார்.

''நான் யார் மாதிரி நடிக்கிறேன் என்று சொல்லுங்கள்'' என்று அவர் செய்து காட்டுகிறார்.

''முதியவர் மாதிரி!''

''சரி, இப்போது?''

''நீங்கள் இளைஞர்கள் இருவர்களைப் போல் நடித்தீர் கள்... அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுகின்றனர்!''

''இப்போது?''

குழந்தைகள் உன்னிப்பாக கவனிக்கின்றனர். கீவி மாமா சிறுமியைப் போல் நடித்தாரென சிலரும், நாயுடன் உள்ள சிறுவனைப் போல் நடித்தாரென வேறு சிலரும் கூறுகின்ற னர். ஆனால் லேரி மட்டுமே கண்டுபிடித்தான்: ''நீங்கள் ஒரு சிறுமியைப் போல் நடித்தீர்கள். ஆனால் அவள் மழை யில் நடக்கவில்லை, மாறாக சூரியன் பிரகாசிக்கும் சூழலில் இருக்கிறாள்.''

பின் கீவி மாமா மகிழ்ச்சிகரமான ஒரு கவிதையை சோக மயமான குரலில் படித்து, தான் படித்தது சரியா, இல்லை யெனில் ஏன் என்று கேட்பார். பாடம் முடிவை நெருங்கும். ''நீங்கள் 'நாடக மொழியைக்' கற்பீர்கள்'' என்று விடை பெறுகையில் குழந்தைகளைப் பார்த்து கீவி கூறுவார்...

இந்த இசை, நாட்டிய, நுண்கலை, நாடக வகுப்புகள் குழந்தைகளின் அழகியல் உணர்வையும் ரசனையையும் வளர்க்கும். ''தன்னை வெளிப்படுத்தும் போது மனிதன்

வளருகிறான்... தன் உணர்வுகளைப் பாடலில், நடனத்தில், ஊமை நாடகத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் மனிதன் தன்னை நன்கு உணருகிறான்'' என்று சோவியத் ஆசிரியரிய லின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகிய நதேஷ்தா கான்ஸ் தன்தீனவ்னா குரூப்ஸ்கயா கூறினார்.

தனிப்பட்ட கலைகளைப் பயிற்றுவிப்பதன் சாரத்திற்குப் பொது அடிப்படை இருக்க வேண்டுமென நான் யோசிக் கிறேன். எது இப்படிப்பட்ட அடிப்படையாக இருக்க முடி யும்? சய்கோவ்ஸ்கியின் இசைத் தட்டைப் போட்டு இதற் கேற்ப மனதில் தோன்றுவதை வரையும்படி குழந்தைகளிடம் சொல்லலாமா? இது நல்லது. என்றாலும் இசை, வரைதல், நடனம், நாடகம் (இவற்றையெல்லாம் ஆறு வயதுக் குழந்தைகளுக்குக் கூடுதல் பள்ளி நேரத்தில் சொல்லித்தர விரும்புகிறேன்) ஆகியவற்றை இணைப்பது எது?

இதில் பிரச்சினை எதுவும் இருக்கக் கூடாது. எல்லா விஞ்ஞானங்களையும் போன்றே எல்லா வகையான கலையம் சங்களுக்கும் பொதுவானது யதார்த்தமாகும். ஆனால் கலை பிரதிபலிக்கும் யதார்த்தத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். தனியான பட்ட மரம் ஒன்றை ஓவியர் வரைகிறார், இதில் ஒரேயொரு இலை மட்டும் எப்படியோ தொங்கிக் கொண் டிருக்கிறது. ஓவியர் இதில் எதை பிரதிபலிக்கிறார்? இந்த மரத்தை இந்த இலையுடன் காட்டவா இவர் விரும்பினார்? ஒரு இசையமைப்பாளர் இசையை அமைக்கும் போது ஒலி களின் இணைப்புதான் எல்லாவற்றையும் விட முக்கிய மானதா?

உண்மையான கலைப் படைப்புகள் எல்லாவற்றிலும் மனிதர்களின் பால், இயற்கையின் பால், தன் மீது, மொத்த மாக வாழ்க்கையின் பால் தனி நபருக்குள்ள உணர்வு பூர்வமான, உணர்ச்சிகரமான உறவு பிரதிபலிக்கிறது. சிம்பனி இசை, சித்திரம், உடலின் வளைவு, நெளிவுகள்—இவையெல்லாம் மனித மகிழ்ச்சிகள், ஏமாற்றங்கள், நாட்டங்களின் பல்வேறு விதமான வெளிப்பாடுகளாகும். ஒவ்வொரு கலைப் படைப்பிலும் யதார்த்தம்—கலைஞன், இவனுடைய உலகக் கண்ணோட்டம், போராட்டம்—உருக் கொண்டு நிற்கிறது. ஒவ்வொரு கலையும் ஒவ்வொரு விதத்தில்—ஒலி, வண்ணம், நெளிவு சுழிவுகள் மூலம்—இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது... கலைப் படைப்பைப்

புரிந்து கொள்ள இந்தக் கலையின் மொழி தெரிந்திருக்க வேண்டும், எப்படி கிரகிப்பது, எப்படிக் கேட்பது, எப்படிப் படிப்பது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

சூரியன் பிரகாசிக்கும் பகல் பொழுதையோ தனியான மரத்தையோ வரையும்படி குழந்தையிடம் சொல்லும் போது நான் அவனுக்கு என்ன சொல்லித் தருகிறேன்? ''சூரியன் எப்போதும் ஒளிரட்டும்'' என்ற பாடலைப் பாடும்படி சொல்லும்போது, அல்லது இதே தலைப்பில் வரையும்படியும் நடனமாடும்படியும் சொல்லும் போது குழந்தையின் கற்பனை உணர்ச்சியை எத்திசையில் செலுத்துகிறேன்? யதார்த்தம் என்பது எப்போதுமே ஒன்றுதான், ஆனால் இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் மொழிதான் வெவ்வேறானது என்று குழந்தை புரிந்து கொள்ளுமாறு செய்யவே நான் எல்லா சந்தர்ப்பங்களிலும் பாடுபடுகிறேன். இந்த மொழி வேறுபாடுதான் வெவ்வேறு கலைப் பிரிவுகளைத் தோற்றுவிக்கிறது. குழந்தைகள் இன்றில்லாவிட்டாலும் நாளை இந்த யதார்த்தத்தைக் கண்டுபிடித்து, இதை வெவ்வேறு விதமாகப் பிரதிபலிக்கும் மொழிகளை கிரகிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அப்போது அவர்கள் தம்மை நன்கு புரிந்து கொள்வார்கள், இசையில், படங்களில், நடனத்தில் தம்மை வெளிப்படுத்துவது அவர்களுக்கு அழகியல் இன்பத்தைத் தரும், அவர்கள் உலகை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். எனவே, என் வகுப்புக் குழந்தைகளுடன் கூடுதல் பள்ளி நேரத்தில் கலந்து பழக இருப்பவர்கள் கலையின் இந்த முழுமையையும் ஒவ்வொரு குழந்தையின் மனநிலையின் முழுமையையும் மறந்து விட வேண்டாமென வேண்டிக் கேட்டுக் கொள்வேன். மகிழ்ச்சி (துக்கம்) வெவ்வேறு ஒலிகளாலும் மலர்களாலும் இயக்கங்களாலும் அழுத்தந்திருத்தமான பேச்சுகளாலும் வெளிப்படுத்தப்பட்டாலும் இது ஒன்றேதான் என்பது குழந்தைகளுக்குப் புரியட்டும்.

நீங்கள் யாரை வளர்க்க விரும்புகின்றீர்கள், பாடகர்களையா, ஓவியர்களையா, பாலே கலைஞர்களையா, நாடக, பொம்மலாட்டக் கலைஞர்களையா என்று என்னிடம் கேட்கக் கூடும். எனது வகுப்புக் குழந்தைகள் எதிர்காலத்தில் எப்படியிருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது; இசையமைப்பாளர்களாவார்களா, பாடகர்களாக மாறுவார்

களா, ஓவியர்களாகத் திகழுவார்களா, நடிகர்களாவார்களா என்று தெரியாது. விஷயம் அதுவல்ல. கலையினால் மகிழ்ச்சி உண்டாக, கலையினால் வளர்க்கப்பட மனித இதயத்தின், மனதின் எல்லாக் கதவுகளும் இதை ஏற்பதற்காக அகலத் திறக்கப்பட வேண்டும். மானுட உணர்வு, உணர்வுகளின் மனிதாபிமானம் அந்தந்த சூழ்நிலையில்தான், மானுடமய மாக்கப்பட்ட இயற்கையின் பயனாய் தோன்றும் என்று கார்ல் மார்க்ஸ் எழுதினார். இந்த ஆழ்ந்த சிந்தனையில் எனது குழந்தைகளின் கலைக் கல்வியையும் அழகியல் வளர்ப் பையும் எப்படி அணுக வேண்டுமென்பது தெரிகிறது.

பாலே வகுப்புகளும் நாடக வகுப்புகளும் எதற்கு என்று என்னைக் கேட்கக் கூடும். ஆனால் இக்கேள்வியைப் புரிந்து கொள்வது எனக்குக் கடினம். பெரும்பாலும் ஏன் குழந்தை கள் பாடலையும் சித்திரக் கலையையும் மட்டும் பயிலு கின்றனர், கலையின் மற்ற வகைகள் நிராகரிக்கப்படுகின்றன என்று நான் ஆச்சரியப்படுகிறேன். நடனம், நாடகத்தைக் கற்றுக்கொள்வதை விட பாடல், ஓவியத்தைக் கற்றுக்கொள் வது எளிதா என்ன? நாட்டியக் கலையும் நாடகமும் குழந் தையின் அழகியல் வளர்ச்சிக்கு அவ்வளவு முக்கியமானவை யில்லையா என்ன? வெவ்வேறு கலை வகைகளை எடை போடும் சாதனம் ஒன்றிருந்தால் எல்லாம் சமமானவையாக இருப்பது தெரியுமென நான் உறுதியாக நம்புகிறேன். இவை யெல்லாம் ஒரே மரத்தின் கிளைகள். குழந்தைகளுக்கு முழு மையான கலை கல்வியை அளித்து, இவர்களிடம் அழகியல் உணர்வுகளை வளர்க்க நான் விரும்பினால் இந்த மரத்தை இவர்கள் அடி முதல் உச்சி வரை பார்க்கவும் இதில் இவர் கள் ஏறவும் ஒரு கிளையிலிருந்து வேறு கிளைக்குச் செல்லும் மகிழ்ச்சியை இவர்கள் பெறவும் நான் உதவ வேண்டும். எனவேதான் கூடுதல் பள்ளி நேரத்தின் போது குழந்தைகள் இசை, பாலே நடனம், வரைதல், நாடகம் ஆகிய எல்லாவற் றிலும் ஈடுபாடு கொள்ள வேண்டுமெனக் கனவு காண்கிறேன், கலையின் வெவ்வேறு மொழிகளில் தம்மைத் தாமே வெளிப் படுத்திக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். இதனால் குழந்தை வளர்ப்பில் கலையின் முழுமைக்கு வழிகோலப் படும்.

பாடங்கள் முடிந்த பின் என் வகுப்புக் குழந்தைகளின் பள்ளி வாழ்க்கை நான் மேலே கூறியவற்றுடன் முடிந்து

விடுவதில்லை. வேறு காட்சிகளும் என் மனக் கண்ணில் தோன்றுகின்றன.

''யார் 'பிரதான படைத்தளபதியாக' இருந்து துருப்புகளை வழிநடத்த விரும்புகின்றனர்?'' சிறுவர்களும் சிறுமியரும் இரு சாராருமே ''பிரதான படைத்தளபதியாக'' இருக்க விரும்புகின்றனர்.

சதுரங்கம் விளையாடக் கற்றுக் கொள்வது இப்படித்தான் ஆரம்பமாகிறது. இந்த சுவாரசியமான விளையாட்டு எப்படி ஆரம்பமானது என்பது பற்றிய கதையை குழந்தைகளுக்குச் சொல்வேன். ஒவ்வொரு காயையும் எப்படி நகர்த்த வேண்டும், எளிய முறையில் எப்படி விளையாடுவது என்று விளையாடிக் காட்டுவேன். பின்னர் குழுக்களில் தீவிர சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் நடக்கும்.

என்ன இது? தோற்று விட்டதற்காக தாத்தோ வருந்துகின்றானா? அழுகின்றானா? அவனை சமாதானப்படுத்த வேண்டும், நன்றாக விளையாட விரைவிலேயே அவன் கற்றுக் கொள்வான், கவனமாயும், பொறுமையாயும் விளையாடுவான் என்று சொல்ல வேண்டும். தனது ''எதிரியிடம்'' கை நீட்டி, வெற்றி பெற்றதற்காகப் பாராட்ட மறக்கவில்லையே என்று கேட்க வேண்டும். பாராட்டினாயா? மிக நல்லது!

ஏக்கா ஏன் இப்படி சந்தோஷப்படுகிறாள்? ஜெயித்து விட்டாளா? தோற்றுப்போன லாலி எப்படி மனம் சோர்ந்திருக்கிறாள் என்பதை கவனித்தாளா? அவளை நெருங்கி ஏதாவது அன்பாகப் பேசட்டும்.

''சதுரங்கத்திற்கு யாரைப் பிடிக்கும், குழந்தைகளே?'' என்று ஒவ்வொரு முறை விளையாடத் துவங்கும் முன்னரும் இக்கேள்வியைக் குழந்தைகளிடம் கேட்க வேண்டும். அவர்கள் பின்வருமாறு பதில் சொல்வார்கள்:

''மனவுறுதி உள்ளவர்களை, பொறுமையானவர்களை!''

''வீரம் மிக்கவர்களை, துணிவானவர்களை!''

''முன்கூட்டியே கண்டுபிடிக்க வல்லவர்களை, கற்பனை செய்யக் கூடியவர்களை!''

''நேர்மையானவர்களை, நாசூக்கானவர்களை!''

''அழகை உணரக் கூடியவர்களை!''

''சதுரங்கம் உங்களை நேசிக்க வேண்டுமென விரும்புகின்றீர்களா?''

ஆம், எல்லோருக்கும் விருப்பம்தான்.

''அப்போது வாருங்கள், விளையாடுவோம்!''

தனது மகன் அல்லது மகளோடு சதுரங்கம் விளையாட சில தந்தையரும் தாய்மார்களும் நேரம் கண்டுபிடித்தாக வேண்டும். சில பெற்றோர்கள் தாமே சதுரங்கம் விளையாடக் கற்றுக் கொள்ள வேண்டும் (ஒருவேளை தம் குழந்தைகளிடமே கூட கற்றுக் கொள்ள நேரலாம்). அப்போது தான் தன் ஆறு வயதுக் குழந்தையுடன் சதுரங்கப் பலகையின் முன் அமர்ந்து ஒரு மணி நேரம் கடுமையாகப் ''போராட'' முடியும்.

இவையெல்லாம் வெறும் கற்பனையல்ல. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஆறு வயதுக் குழந்தைகளுக்கு முதன்முதலாக சதுரங்கம் சொல்லித் தந்த போதே இவற்றை நான் நடைமுறையில் சந்தித்தேன். அப்போது நான் ஒரு சில சதுரங்கப் பலகைகளையும் காய்களையும் மேசைகளில் வைத்தேன். குழந்தைகள் இந்த சதுரங்கக் காய்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தனர், இவற்றின் பெயர்களைப் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். சில சமயங்களில் யானை எப்படி நகரும், ராணிக்கும் சிப்பாய்க்கும் என்ன வித்தியாசம் என்று விவாதித்தனர், அடிக்கடி கேள்விகளோடு என்னிடம் ஓடி வந்தனர். மூன்று மாதங்களுக்குப் பின் கிட்டத்தட்ட எல்லா குழந்தைகளும் சதுரங்கம் விளையாடக் கற்றுக் கொண்டதைத் தெரிந்து கொண்டேன். ஒத்தி வைத்த ஆட்டங்களை இடைவேளைகளில் தொடர்ந்தனர், என்னோடும் விளையாடினார்கள், கடுமையான போராட்டத்தில் என்னைத் தோற்கடித்து விட்டாலோ ஆனந்தக் கூத்தாடினார்கள். சதுரங்கம் ஒரு சுவாரசியமான விளையாட்டு, குழந்தைகளுக்கு ஏற்றது என்பதை நான் அப்போதே புரிந்து கொண்டேன். இந்த விவேகமான, அழகான, வீரமான விளையாட்டை விளையாட அவர்கள் கற்றுக் கொண்டால் எப்படிப்பட்ட முக்கிய தனிக்குண நலன்கள் அவர்களிடம் உருவாகும் என்று நிரூபிக்க வேண்டிய அவசியமேயில்லை.

...சமுதாய ரீதியாகச் சுறுசுறுப்பானவனாக எப்படி மாறுவது? வகுப்புகளில் குழந்தைகள் இதையும் கற்றுக் கொள்வார்கள். நர்சரிப்பள்ளியில் உள்ள சிறு வயதுக் குழந்தைகளுக்கு எடுத்துச் சென்று பரிசளிப்பதற்காக என் வகுப்புச் சிறுவர் சிறுமியர் விளையாட்டு சாமான்களைத் தயார்படுத்துவார்கள். சுவர் பத்திரிகைகளைத் தயாரிக்கக் கற்றுக்

கொள்வார்கள், பின்னர் இவற்றை மற்ற வகுப்பு மாணவர்களுக்கு அனுப்புவார்கள். பத்திரிகையின் நோக்கமே மற்றவர்கள் படிக்க வேண்டும் என்பதுதானே. பட அட்டைகளைத் தயார்படுத்துவார்கள். வகுப்பிற்கு விருந்தினர்கள் வரும்போது அவர்களுக்கு நினைவாகப் பரிசளிக்க வேண்டுமல்லவா! பல்வேறு உலக நாடுகளில் குழந்தைகளின் வாழ்க்கையைப் பற்றி வந்துள்ள படங்களைச் சேகரித்து ஆல்பம் தயாரிக்கலாம். தமது விழாக்களுக்கு அழைப்பிதழ்களையும் அறிவிப்புகளையும் தயார் செய்யலாம்.

ஒவ்வொரு குழந்தையும் தனது சொந்த படைப்புகளின் ''தொகுதியைத்'' தயாரிக்கலாம். இதில் முதல் வார்த்தைகள், வாக்கியங்களடங்கிய தாள்கள், முதல் ''கட்டுரை'', கணக்குகள், வரைகணிதப் படங்கள், சித்திரங்கள், களிமண் வடிவங்கள், குறுக்கெழுத்துப் புதிர்கள் முதலியன இருக்கும்.

சித்திரக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்வது, புத்தாண்டு விழாக் கொண்டாடுவது, சுற்றுலாச் செல்வது, பள்ளிக்கருகே ஒவ்வொருவரும் ஒரு மரம் நடுவது போன்ற கருத்துகள் இந்தக் கூடுதல் பள்ளி நேரத்தின் போது பிறக்கும். அன்பை எப்படி வெளிப்படுத்துவது, எப்படி நட்புக் கொள்வது, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வது, பெற்றோர்கள் மீது மரியாதை செலுத்துவது என்பதைப் பற்றியெல்லாம் இங்கு விவாதங்கள் நடைபெறும். நான் அவர்களுக்கு சுவாரசியமான கதைகளைச் சொல்வேன், ஸ்லைடுகளையும் கார்ட்டூன் படங்களையும் காட்டுவேன்.

தம்மைப் பற்றி, தம் குழந்தைப்பருவம், வேலை பற்றிச் சொல்லவும் குழந்தைகளுடன் விளையாடவும் உலாவவும் பெற்றோர்களை அழைப்பேன். அடிக்கடி வருமாறு அழைக்கும் அழகிய அழைப்பிதழ்களைக் குழந்தைகள் அவர்களுக்கு வழங்குவார்கள். இவர்களைக் கௌரவிக்கும் முகமாக பத்திரிகையை வெளியிடுவார்கள், பரிசுகளை (படங்களுடன் கூடிய ஆல்பத்தை) தயார்படுத்துவார்கள்...

...இவையெல்லாம் நம்மை மிக முக்கியமானதற்கு, அதாவது ஒவ்வொரு குழந்தையின் மனநிலையையும் பன்முக ரீதியாக வளர்க்கும் நோக்கத்தோடு குடும்பத்திலும் பள்ளியிலும் குழந்தை வளர்ப்பின் முழுமைக்கு இட்டு வரும்.

கூடுதல் பள்ளி நேரம் எப்படியிருக்கும் என்று எனக்குத் தோன்றுவதை பெற்றோர்களுக்கு விளக்குவேன், என் அனு

பவத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்வேன், விவாதத்தின் போது நமது கூட்டு குழந்தை வளர்ப்புத் திட்ட நிறைவேற்றத்திற்குப் பொறுப்பானவர்களைப் பற்றி முடிவு செய்வோம். இரண்டு நாட்களுக்குப் பின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இது சம்பந்தமான டைப் செய்யப்பட்ட பிரதி அளிக்கப்படும்.

கூட்டத்தின் இறுதியில் நான் அவர்களுக்குப் பின்வருமாறு கூறுவேன்:

''அன்புசால் பெற்றோர்களே! நமது குழந்தை வளர்ப்புத் திட்டங்களின் நிறைவேற்றத்தில் பங்கேற்றதற்கும் உதவியதற்கும் நன்றி! 'வளர்ப்பு வண்டியை' எப்படி, எத்திசையில் இழுப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். இறுதி வரை இந்த விஷயத்தில் கருத்தொருமித்துச் செயல்படுவோம்!''

குழந்தைகள் எப்படி நடந்து கொள்வார்கள்? இப்படிப்பட்ட பள்ளி நாட்கள் அவர்களுடைய வாழ்வின் உட்பொருளாகுமா? ஒவ்வொரு குழந்தைக்கும் எல்லா வகுப்புகளுக்கும் வர வேண்டும், எல்லா விஷயங்களிலும் பங்கேற்க வேண்டுமென விருப்பமிருக்குமென நான் உறுதியாக நம்புகிறேன். ஏதாவது காரணங்களால் பள்ளிக்குச் செல்லாமலிருக்க நேரிட்டால் குழந்தைக்கு ஏமாற்றமாயிருக்கும். ''அப்படித் தானே, குழந்தைகளே? தாத்தோ, நீ என்ன சொன்னாய்? பெரியவர்கள் தம் வார்த்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்கிறாயா? ஆம், நீ சொல்வது சரி! மாயா, நீ இன்னமும் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா? அப்படியெனில், உன் கருத்துப்படி எல்லாமே, பெரியவர்கள் உங்களுடன் எப்படிக் கலந்து பழகுவார்கள் என்பதைப் பொறுத்துள்ளதா? அது தான் மிக முக்கியம்!''

## அத்தியாயம் நான்கு

# அரிச்சுவடி விழா
# (84 வது நாள்)

### படிப்பது—புதியவற்றை அறியும் வழி

எனது ஆசிரியர் தொழிலின் ஆரம்பத்தில் நான் குழந்தை களுக்கு எப்படி எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்தேன், எப் படி விளக்கினேன், படிக்கவும் எழுதவும் எப்படிச் சொல்லித் தந்தேன் என்று யோசித்துப் பார்க்கையில் எப்படியாவது மந்திரக்கோல் மூலம் பழைய நாட்களுக்குத் திரும்பி எனது அன்றைய குறைகளை நிவர்த்தி செய்யவும், சலிப்பான பாடங்கள், களைப்பேற்படுத்தும், புத்தி சொல்லும் படிப்பு முறைகள், கடுமையான கையெழுத்துப் பயிற்சிகள், பொது வாக அதிகாரத் தொனி ஆகியவற்றை மாற்றவும் முடிந் தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது. நான் இன்று பயன்படுத்தும் முறையின்படி அன்று அவர் களுக்கு சொல்லித் தந்திருந்தால், அவர்களுடைய இன்றைய வாழ்வில் என்ன மாறியிருக்குமென எனக்குத் தெரியாது. அனேகமாக அவர்களுடைய வளர்ச்சியை நான் துரிதப்படுத்தி யிருப்பேன், எழுத்துக் கட்டம் என்றழைக்கப்படும் கடின மான கால கட்டத்தை இரண்டு மடங்கு குறைத்திருப் பேன்.

யாராவது ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது ஆறு வயதுக் குழந்தைக்கு பாடநூலில் அவ்வரிகளைப் பின்பற்று வது கடினம் என்று எனக்குத் தெரிந்தால் இம்மாதிரி செய்யு மாறு ஏன் அவனைக் கட்டாயப்படுத்த வேண்டும்? அதுவும், ''திடீரென நிறுத்தி, உன்னைப் படிக்கும்படி சொல்வேன்'' என்று ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? கோடு போட்ட நோட்டுப் புத்தகத்தில் பெரிய எழுத்துகளை எழுதிப் பழகிய பின் சிறிதாக எழுதுவது கடினம் என்று எனக்குத் தெரியும் போது நான் ஏன் இவனை முட்டுக்கட்டைக்குத் தள்ள வேண்டும்?

எனது பாட முறைகள் கல்வியைக் கடினமாக்கி, குழந்தையை ஞானத்திலிருந்து தள்ளி, அவனுடைய வாழ்க்கையையும் நெருங்கியவர்களுடனான உறவையும் சிக்கலாக்கினால் இவற்றின் மனிதாபிமானம் எங்கே?

கல்வி முறைகளை எப்படி நிர்ணயிப்பது, இவற்றை எப்படி வகைப்படுத்துவது, எப்படிப்பட்ட பாட வரையளவுகளை நிலைநாட்டுவது, பாடத்தில் மூன்று, ஐந்து, ஏழு, பத்து அம்சங்களைப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டுமா என்றெல்லாம் கல்வி நிபுணர்கள் அடிக்கடி விவாதிக்கின்றனர். ஒருவேளை இந்தப் பன்முக சிந்தனை தன் சாரத்தில் மதிப்பு மிக்கதாக இருக்கலாம். மேற்கூறிய வகைபாடுகளும் வரையளவுகளும் கட்டமைப்புகளும் பாடவேளையின் போதும் பாடங்கள் முடிந்த பின்னரும் குழந்தையின் வாழ்க்கையை எப்படி இலகுவாக்கும், இவற்றைப் பயன்படுத்தி புதியவற்றை அறியும் மகிழ்ச்சியை, பள்ளி வாழ்க்கையின் சந்தோஷத்தைக் குழந்தைகளுக்கு எப்படியளிப்பது எனும் மிக முக்கிய அம்சத்திற்கு ஆசிரியரியல் விவாதங்களும் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் பதில் தராவிடில் இவற்றால் எப்போதுமே தத்துவத்தை முன்தள்ள முடியாது.

இன்று வகுப்பில் எழுத்து விழா: இன்று என் வகுப்புக் குழந்தைகள் எழுத்துகளைக் கற்றுக் கொள்வதை முடிக்கின்றனர். இன்று டிசம்பர் 28ஆம் தேதி, 84வது பள்ளி நாள், அரிச் சுவடியின் கடைசி எழுத்தைச் சொல்லித் தந்து விட்டு, எல்லா எழுத்துகளையும் படித்ததற்காகப் பாராட்டுவேன்.

நாங்கள் எப்படி எழுத்துகளைப் படித்தோம்?

ஒரு வார்த்தையில் ''புதிய ஒலியைத்'' தனியே சுட்டிக் காட்டி பின் இதன் வரி வடிவத்தைப் படிக்கும் அவசியமே ஏற்படவில்லை. பல வார்த்தைகளின் ஒலி உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்த என் வகுப்புக் குழந்தைகளுக்குக் கிட்டத் தட்ட ''புதிய ஒலி'' என்பதே இருக்கவில்லை. ''முதல் அசை என்ன... இரண்டாவது அசை... முதல் ஒலி...'' என்ற வகையில் நாங்கள் வார்த்தையை வழக்கமான முறையில் பகுப்பாய்வு செய்யவில்லை. ஏனெனில் இது அவர்களின் வளர்ச்சிக்குப் புதிதாக எதையுமே தரவில்லை (இது அவர்களிடம் ஏற்கெனவே வளர்ச்சியடைந்திருந்தது), அவர்கள் புதிதாக அறிந்து கொள்ளவும் உதவவில்லை (இந்த ''தேட்

டத்தில்'' எல்லாமே குழந்தைகளுக்குத் தெரிந்திருந்தது). எழுத்துகளைச் சொல்லித் தரும் போது நான் படங்களையும் பயன்படுத்தவில்லை; இவை ஏதோ வார்த்தையில் ஒலிப் பகுப்பாய்விற்கு உதவுவதாகக் கூறுகின்றனர். உதாரணமாக, சேவல் படத்தைக் காட்டினால் குழந்தைகள் இந்த வீட்டு மிருகத்தைப் பற்றித் தமக்கு தெரிந்தவற்றையெல்லாம் சொல்வார்கள், சேவல் என்று உச்சரிப்பார்கள் பின் இதை அசைகளாகவும் ஒலிகளாகவும் பிரிக்கத் தொடங்குவார்கள். இந்தப் பட முறையைக் கைவிட்ட நான் பொருளைப் பற்றிய பேச்சையும் கைவிட்டேன், ஏனெனில் இது உண்மையில் படிக்க வேண்டியதிலிருந்து குழந்தைகளின் கவனத்தைத் திசை திருப்பியது. வார்த்தையின் மிகச் சிறந்த வெளிப்பாடு இந்த வார்த்தையும் இதன் மாடலும்தான்.


இவ்வாறாக, நாங்கள் ''புதிய'' எழுத்தை நோக்கி (ஒலியைத் தாண்டி) நேரடியாக ''தாவிச்'' சென்றோம். நான் இதை எப்படிச் செய்தேன்?

முதல் முறை.

''குழந்தைகளே, இதைப் பாருங்கள், இன்று எந்த எழுத்தைப் படிக்கப் போகின்றோம் என்று சொல்லுங்கள்.''

கரும்பலகையில் உலகம் எனும் சொல் எழுதப்பட்டுள்ளது. இதில் இரண்டாவது எழுத்தாகிய ல என்பது புதிய எழுத்து. அருகே வட்டத்தினுள் அறிமுகமான, அறிமுகமற்ற எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன, ல எனும் எழுத்து மூன்று முறை எழுதப்பட்டுள்ளது.

''இவ்வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பாருங்கள். இங்கே ல என்ற எழுத்து உள்ளதா? எவ்வளவு ல உள்ளன?''




குழந்தைகளுக்கு அறிமுகமான எழுத்துகள் வார்த்தையைப் படிக்கவும், ''புதிய'' எழுத்து எது என்று கண்டுபிடிக்கவும், இதைச் சொல்லவும், வார்த்தையில் இதைச் சுட்டிக்காட்டவும் உதவும்.

இரண்டாவது முறை.

''இந்த வார்த்தைகளைப் பாருங்கள். நான் சொல்லித் தரப் போகும் எழுத்து இவற்றில் சிலவற்றினுள் ஒளிந்து கொண்டிருக்கிறது. இது என்ன எழுத்து? எந்தெந்த வார்த்தைகளில் இது உள்ளது?''

கரும்பலகையில் பதினொன்று வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு வார்த்தைகளில் ''புதிய'' எழுத்தாகிய **ப** உள்ளது. படிக்கப் போகும் எழுத்து தனியாக வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது. எழுத்துகள் மற்றும் வட்டங்கள் சேர்ந்து வார்த்தையைப் படிக்கவும் அதில் **ப** என்ற எழுத்தைக் கண்டுபிடிக்கவும் உதவும். எந்த வார்த்தையில், எந்த இடத்தில் ''புதிய'' எழுத்து உள்ளதென அவர்கள் சொல்கின்றனர், எனது செய்கைகளைக் கவனித்து, திருத்துகின்றனர். ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள **ப**. என்ற எழுத்தைக் கோடு போட்டு இணைக்கும் நான் ''கவனக் குறைவாக'' ''தவறு'' செய்யக் கூடாது அல்லவா! கரும்பலகையில் பின்வரும் படம் இருக்கும், இதன் நடுவே **ப** என்று நான் எழுதுகிறேன்.



மூன்றாவது முறை.

''இந்தப் படத்தைப் பாருங்கள், நாம் எந்த எழுத்தை இன்று படிக்கப் போகின்றோம் என்று கண்டுபிடியுங்கள்.''

இப்படத்தின் நடுவே ஒரு சிறு சதுரம் உள்ளது, அதில் கேள்விக்குறி இடப்பட்டுள்ளது; சதுரத்தைச் சுற்றிலும் வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் இன்று படிக்க வேண்டிய எழுத்தைச் சுற்றி வட்டமிடப்பட்டு, இவை கோடுகளால் நடுவிலுள்ள சதுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த எழுத்து ர என்று குழந்தைகள் கண்டுபிடித்ததும், சதுரத்தில் உள்ள கேள்விக்குறியை அழித்து விட்டு இந்த எழுத்தை எழுதுகிறேன். ஆனால் நான் ''தப்பு செய்யக் கூடும்'', ர என்பதற்குப் பதில் கு என்றோ வேறு எழுத்தையோ எழுதினால், குழந்தைகள் என்னைத் ''திருத்துவார்கள்.''




நான்காவது முறை.

''இங்குள்ளவற்றில் ந என்ற எழுத்து எது என்று உங்களில் யாரால் சொல்ல முடியும்?''

கரும்பலகையில் ஐந்து எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன: ஓ, க, ந, ம, ழ. இவற்றில் இரண்டு ஏற்கெனவே அவர்களுக்கு அறிமுகமானவை, மூன்று தெரியாதவை.

''ஒருவேளை இதுவோ?'' என்று முதல் எழுத்தைக் காட்டி நான் கேட்கிறேன்.

''இல்லை, அது ஓ!''

நான் அதைக் கரும்பலகையிலிருந்து அழிக்கிறேன்.

''ஒருவேளை இதுவோ!'' என்று இரண்டாவது எழுத்தைக் காட்டிக் கேட்கிறேன்.

''இல்லை இது க.'' அதையும் அழிக்கிறேன்.

''சரி, ந என்ற எழுத்து எங்கே இருக்கிறது?''

''நடுவில்!'' என்று குழந்தைகள் பதிலளிக்கின்றனர்.

''இதுவா?''

''ஆமாம்!''

''இவை என்ன எழுத்துகள்?'' என்று இன்னமும் நாங்கள் படிக்காத எழுத்துகளைக் காட்டி கேட்கிறேன். பலர் அவற்றைச் சொல்கின்றனர்.

''சரி, இவற்றைப் பின்னால் பார்ப்போம்.'' என்று அந்த இரண்டு எழுத்துகளையும் அழிக்கிறேன். ''இது என்ன எழுத்து?''

''ந!'' ஒருமித்த குரலில் பதில் வருகிறது.

**ஐந்தாவது முறை.**

குழந்தைகள் வருமுன் வகுப்பிலுள்ள கரும்பலகைகளில் நாங்கள் படிக்கப் போகும் எழுத்தை இரண்டு, மூன்று முறை எழுதுகிறேன். வகுப்பறையினுள் நுழைந்ததுமே குழந்தைகள் இதைக் கவனித்து விடுவார்கள். இது என்ன எழுத்து என்று விவாதிக்கத் தொடங்குவார்கள். பாடம் துவங்கும் போது பெரும்பான்மையினருக்கு இது நன்கு தெரிந்திருக்கும்.

''இன்று எந்த எழுத்தைப் படிக்கப் போகின்றோம்?''

அவர்கள் எல்லோரும் ஒரே குரலில் பதில் சொல்வார்கள்.

எழுத்தைப் படித்த பின் நான் குழந்தைகளுக்குப் பல்வேறு விதமான வேலைகளைத் தருவேன். இவற்றிற்கு நான் பெரும் முக்கியத்துவம் தருகிறேன்.

எழுத்துக் கட்டம் என்றழைக்கப்படும் இந்தக் கால கட்டத்தில் என் ஆறு வயதுச் சிறுவர் சிறுமியருக்குப் படிப்பதன் கஷ்டங்களைப் பற்றிச் சொல்லி அச்சுறுத்த நான் விரும்பவில்லை; எழுத்துகளில் சுவரசியமானது எதுவுமே இல்லை என்றொரு கருத்து அவர்களிடம் ஏற்பட்டால் ருஸ்தவேலி, பாரதஷ்வீலி, சாவ்சவாத்ஸே, பூஷ்கின், டால்ஸ்டாய் போன்றவர்களைப் படிக்கும் மகிழ்ச்சியை நான் அவர்களிடமிருந்து பிடுங்கியவனாவேன். எனது முயற்சிகள் இப்படி முடியக் கூடாதென விரும்புகிறேன், எனவே, எழுத்துக் கட்டத்தை விரிவுபடுத்துவது, புதியவற்றைப் பரவலாகக் கற்றுக் கொள்ளும் அக்கறைகளை வளர்ப்பது (படிக்கும் பழக்கத்தின் மூலம் இவற்றைப் பூர்த்தி செய்யலாம்) ஆகியவற்றை லட்சியமாக முன்வைக்கிறேன்.

குழந்தைகளிடம் உள்ள படிக்கும் பழக்கத்தை அதிகப் பரவலான, உட்பொருள் மிக்க, உணர்ச்சிகரமான, சுவாரசியமான அறிதல் நடவடிக்கையாக மாற்ற வேண்டும், இப்படிக்கும் பழக்கமே இறுதி லட்சியமாக இருக்கக் கூடாது, இது புதியவற்றை அறியும் சாதனமாகத் திகழுமாறு செய்ய வேண்டும்.

இந்த ''முதுமொழியின்'' அடிப்படையில் எனது வகுப்புக் குழந்தைகளுக்கான பாட முறைகளை உருவாக்கினேன்.

**முதல் பாடம்.**

கரும்பலகையில் அசைகளும் சொற்களும் செங்குத்தாக ஒரே வரிசையில் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர் கரும்பலகையிலிருந்து தள்ளி நின்று வேகமாகக் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

''மேலிருந்து மூன்றாவதாக **நர்ச** என்று எழுதப்பட்டுள்ளது. இல்லையா?''

குழந்தைகள் படித்துப் பார்த்து விட்டு நான் சொன்னது தவறு என்கின்றனர்.

''அது என்ன அசை?''

குழந்தைகள் (ஒரே குரலில்): ''**நசர்!**''

''கீழிருந்து நான்காவதாக **அகர்** என்று எழுதப்பட்டுள்ளது. சரிதானே?''

''ஆமாம்!''

''எல்லோரும் சேர்ந்து இந்த அசையைப் படியுங்கள் பார்க்கலாம்.''

குழந்தைகள் (ஒரே குரலில்): ''**அகர்!**''

''மேலிருந்து கீழாக எந்த இடத்தில் **பாய்மரம்** என்ற வார்த்தை உள்ளது?''

இந்த வார்த்தையே கரும்பலகையில் இல்லையே என்று குழந்தைகள் பார்க்கின்றனர்.

''மன்னியுங்கள்! **பம்பரம்** என்று சொல்ல விரும்பினேன்!''

''மூன்றாவது இடத்தில்!'' என்று குழந்தைகள் கத்துகின்றனர்.

**இரண்டாவது பாடம்.**

''இந்த வாக்கியத்தில் நான் என்ன தப்பு செய்துள்ளேன் என்று கண்டுபிடியுங்கள்.''

குழந்தைகள் வாக்கியத்தைப் படித்து விட்டு தப்பைத் தேடுகின்றனர்; இதில் தப்பே இல்லாமலிருக்கலாம். உண்

மையில் தப்பு உள்ளதா, இருந்தால் எந்த வார்த்தையில் உள்ளது, இதை எப்படித் திருத்துவது என்று இவர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

**மூன்றாவது பாடம்.**

கரும்பலகையில் ஐந்து, ஆறு எழுத்துகள் எழுதப் பட்டுள்ளன.


''இவற்றைக் கொண்டு ஆறு வெவ்வேறு சொற்களை எழுதலாம், எங்கே முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்!''

குழந்தைகள் வார்த்தைகளை உருவாக்கிச் சொல்ல, நான் அவற்றைக் கரும்பலகையில் எழுதுகிறேன். ஆனால் ஆறாவது வார்த்தையை அவர்களால் கண்டுபிடிக்க இயல வில்லை. இந்த எழுத்துகளை எப்படியெல்லாம் சேர்த்து எழுதலாம் என்று ஒன்றாகச் சேர்ந்து யோசித்து விட்டு, ஐந்து வார்த்தைகளுக்கு மேல் எழுத முடியாது என்ற முடி விற்கு வருகிறோம்.

**நான்காவது பாடம்.**

கரும்பலகையில் வார்த்தைகளும் படங்களும் உள்ளன, இவை ஒவ்வொன்றும் கோடுகளால் இணைக்கப்பட்டுள்ளன.

''வார்த்தைகள் சரியான படங்களுடன் இணைக்கப் பட்டுள்ளதா என்று பார்த்துச் சொல்லுங்கள்!''



வார்த்தைகள் படங்களுடன் தவறாக இணைக்கப்பட்டிருந்தால் அவற்றைச் சரி செய்ய குழந்தைகள் எனக்கு உதவுகின்றனர். சில சமயங்களில் வேண்டுமென்றே நான் தவறாக இணைத்து தப்பு செய்தேன். குழந்தைகள் என்னைத் திருத்த ஆரம்பிக்க, நான் அங்குமிங்குமாகக் கோடு போட்டேன், சரியான வார்த்தையைக் ''கண்டு பிடித்து'', வகுப்பு அமைதியாகும் வரை இப்படி செய்தேன். சுயமாக செய்து பார்ப்பதற்காக இப்படி படங்களும் எழுத்துகளும் உள்ள தாள்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அவர்கள் பெரிதும் விரும்பினர். அவர்கள் தமது விடைகளைக் கரும்பலகையில் எனது விடைகளுடன் ஒப்பிட்டு மீண்டும் என் ''தவறுகளைக்'' கண்டுபிடித்தனர்.

**ஐந்தாவது பாடம்.**

நான் கரும்பலகையில் எழுத்துகள், படங்களைக் கொண்டு எளிய ஓவிய ஒலியெழுத்துப் புதிர்களை வரைந்தேன்; வார்த்தைகளிலிருந்து குறிப்பிட்ட எழுத்துகளை எடுத்து விட்டு வார்த்தையின் எஞ்சிய பகுதியைப் படங்களின் பெயர்களுடன் இணைக்க வேண்டும். விடைகளைக் கரும்பலகையில் எழுதி இவற்றைக் குழந்தைகளுடன் சேர்ந்து சரிபார்த்தேன். தனியாகப் போட்டுப் பார்ப்பதற்காக இத்தகைய புதிர்கள் அடங்கிய தாள்களை நான் தயாரித்த போது குழந்தைகள் மகிழ்ச்சியடைந்தனர், இவற்றை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டனர்.

## முதல் பாடநூல்களை உருவாக்கும் கோட்பாடு

ஒரே பாடத்தைத் திரும்பத் திரும்பப் படிக்கும்படி நான் குழந்தைகளுக்குச் சொல்லவில்லை. படிக்கும் பாடம் இடையறாது மாற்றப்படாவிடில் படிக்கும் பழக்கம் நன்கு வராது என்பது எனது உறுதியான நம்பிக்கை. பல்வேறு நூல்கள், கட்டுரைகளிலிருந்து வெவ்வேறு விதமான விஷயங்களை அறிந்து கொள்ளதான் படிப்பு தேவையே தவிர தேவையற்ற ஒரே வாசகத்தைத் திரும்பத் திரும்பப் படிப்பதற்காக அல்ல.

எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்த அனுபவம், ஆறு வயதுக் குழந்தைகளுக்கு முதல் பாடநூலை எப்படி சிறப்பாக உருவாக்குவது என்பது சம்பந்தமாக சில கருத்துகளை

எனக்குச் சொல்லித் தந்தது. ஆறு வயதுக் குழந்தைக்கு ஒரே மாதிரியான பாடங்கள் அலுப்பு தட்டச் செய்யும், நீண்ட காலமாக—ஒரு கல்வியண்டு பூராவும்—ஒரே நூலைப் பயன் படுத்தினால் அது அவனுக்குச் சலிப்பேற்படுத்தும். சிறுவர் களுக்கான தாய் மொழிப் பாடநூல் நான்கு நூல்களைக் கொண்டதாயிருந்தால் நல்லது. முதல் நூல் குழந்தையைப் பேச்சு யதார்த்த உலகிற்கு இட்டுச் செல்லும், இரண்டாவது நூல் படிப்பு ரகசியங்களைக் காட்டும், மூன்றாவது, நான் காவது நூல்கள் படிக்கும் ஆர்வத்தை வளர்க்க உதவும். நான் முதல் நூலிலிருந்து துவங்குவேன். இதைக் கற்றுத் தேர்ந்ததும் ''பார்த்தீர்களா, நாம் வளர்ந்து விட்டோம், இப்போது இரண்டாவது நூலுக்குச் செலவோம்'' என்று கூறி இரண்டாவது நூலுக்குச் செல்வேன். இதே மாதிரி தொடரலாம். குழந்தையை இந்நூல்கள் சந்தோஷப்படுத் துமா? பெரும் சந்தோஷத்தைத் தரும். தான் எப்படி வளர்ச்சி யடைகிறோம், எப்படி முன்னோக்கி நடைபெறுகிறோம் என்று குழந்தைக்குத் தெட்டத் தெளிவாகத் தெரியும். ஒவ்வொரு முறையும் குழந்தையிடம் புதிய புதிய விஷயங் களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் வளரும்.

புதியவற்றை அறியும் மகிழ்ச்சி எனும் கோட்பாடுதான் இந்த நூல்களின் அடிப்படையாகத் திகழ வேண்டும். ஆம், மகிழ்ச்சிக் கோட்பாடு! ஆறு வயதுக் குழந்தைகளுக்கான முதல் பாடநூல்களில் நிறைய நகைச்சுவையும், குழந்தை தனது நேரத்தை நன்கு செலவிடவல்ல பல சுவாரசியமான கேள்விகளும் பயன் மிகு ஆலோசனைகளும் (உதாரணமாக, சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்களை எப்படிச் செய்வது, பெற்றோர்களை எப்படி சந்தோஷப்படுத்துவது, அம்மாவிற்கு எப்படி உதவுவது) அடங்கியிருக்க வேண்டு மென என் அனுபவம் காட்டுகிறது. ஓவிய ஒலியெழுத்துப் புதிர்கள், குறுக்கெழுத்து புதிர்கள், பல்வேறு விதமான விளையாட்டுகள், விடுகதைகள், கடகடவென சொல்லவல்ல வாசகங்கள் போன்றவை இவற்றில் இருக்கலாம். இதில் மகிழ்ச்சிகரமான, புத்திசாலித்தனமான கவிதைகளும் கதை களும் இருக்க வேண்டும். பள்ளிக்கு வருவதற்கு முன்னரே படிக்கக் கற்றுக் கொண்ட அல்லது படிப்பு வேகத்தில் முன் னிற்கும் குழந்தைகளுக்கான பக்கங்களைச் சேர்க்க நான் அஞ்ச மாட்டேன்.

சுயமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை—இந்த அடிப்படையில்தான் புதியவற்றை அறிந்து கொள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள நாட்டத்தை வளர்க்க வேண்டும். இப்படிப்பட்ட பாடநூல் இருந்தால் குழந்தைகளுக்கு அடிக்கடி பின் வருமாறு சொல்லலாம்:

''விருப்பமான புதிரைப் போடுங்கள்... ஏதாவது ஒரு கவிதையைப் படியுங்கள்... உங்களுக்கு விருப்பமான கதையைப் படியுங்கள்... பின்னர் எல்லோரும் சேர்ந்து இதைப் பார்ப்போம்!''

அப்போது வகுப்பில் காரிய ரீதியான பேச்சு நடக்கும்!

குழந்தைகள் படிப்படியாகப் படிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொள்ள வழிகோலுவது இந்நூல்களை உருவாக்குவதற்கான முக்கிய நிபந்தனையாகும்.

## எழுத்துகளே! உமக்கு நன்றி!

''குழந்தைகளே, வணக்கம்!.. நீங்கள் இன்று அலங்காரமாக ஆடையணிந்திருக்கின்றீர்களே! என்ன விஷயம்?''

''நீங்களும் தான் அழகாக ஆடையணிந்திருக்கின்றீர்கள்!''

''இன்று விழாவாயிற்றே!''

''நாம் எல்லா எழுத்துகளையும் கற்றுக் கொண்டு விட்டோம்!''

''இன்று விருந்தினர்கள் வருகின்றனர்!''

''தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையில் பாராட்டுதல் எழுதப்பட்டுள்ளதை நான் படித்தேன்... நமக்குப் படிக்கவும் எழுதவும் தெரியும் என்பதற்காக நம்மைப் பாராட்டுகின்றனர்.''

''எனக்கு புத்தகம் படிக்கத் தெரியும்.''

''இன்று கடைசி எழுத்தைப் பார்ப்போம். கடைசி எழுத்துள்ள பக்கத்தைத் திறவுங்கள்!''

சின்னஞ் சிறு பாத்தா எல்லா எழுத்துகளையும் படித்த பின் மகிழ்ச்சியோடு வீட்டிற்கு ஓடிவந்து ''பாட்டி, நான் உனக்குப் படிக்கச் சொல்லித் தரட்டுமா, இது மிகவும் சுலபம்!'' என்று கூறியது பற்றிய கதையைக் குழந்தைகள் படிக்கின்றனர்.

''சரி, இப்போது அடுத்த கதையைப் படியுங்கள்!''

''இனி பக்கங்கள் இல்லை, தீர்ந்து விட்டது.''

''இல்லையா?''

''ஆம், நாங்கள் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டோம்.''

''முற்றிலுமாக முடித்து விட்டோம்...''

மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரம்.

''அப்படியெனில் பாடநூலை மூடுங்கள்... உங்களுக்கு என்ன தெரியுமென பார்ப்போம் வாருங்கள்!''

''இது எங்களுக்கு அழகிய தாய் மொழி எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்தது.''

''படிக்கவும் எழுதவும் சொல்லித் தந்தது!''

''தாய்மொழியில் சரியாகப் பேசக் கற்றுக் கொண்டோம்!''

''எங்களுக்கு அறிவைத் தந்தது!''

''அன்பாக இருக்கவும் நட்புக் கொள்ளவும் சொல்லித் தந்தது!''

''படிக்க விரும்பவும்... புத்தகங்களை நேசிக்கவும் சொல்லித் தந்தது!''

''பெற்றோர்கள் மீது மரியாதை செலுத்தச் சொல்லித் தந்தது!''

''நாகரிகமாகப் பழக சொல்லித் தந்தது!''

''நமது தாய்நாடு எப்படிப்பட்டதென சொல்லித் தந்தது!''

''அதில் நிறைய சிரிப்பான, மகிழ்ச்சியான படங்கள் உள்ளன.''

''பல்வேறு புதிர்களும் பாடல் வாசகங்களும் உள்ளன.''

''இப்புத்தகத்தின் மீது எனக்குப் பெரும் விருப்பம். இதை வீட்டிற்கு எடுத்துச் செல்ல நீங்கள் அனுமதித்த போது இதை நான் தலையணை அடியில் வைத்துக் கொண்டு தூங்கினேன்.''

''நான் இதை எல்லோருக்கும் காட்டினேன்.''

''இப்போது குனிந்து, கண்களை மூடுங்கள்'' என்று நான் குரலைத் தாழ்த்திக் கூறுகிறேன். ''உங்களுடைய முதல் புத்தகம் உங்களுக்குப் பிடித்துள்ளது. அப்படித்தானே!''

''ஆம்'' என்று மெதுவாகச் சொல்கின்றனர் குழந்தைகள்.

''நீங்கள் இப்புத்தகத்திற்கு நன்றி சொல்ல விரும்புகின் றீர்களா?''

''ஆம்!'' என்கின்றனர் குழந்தைகள்.

''உங்கள் நன்றியை எப்படிப்பட்ட வார்த்தைகளின் மூலம் தெரிவிப்பீர்களென யோசியுங்கள்!''

ஒரு நிமிட மௌனம். குழந்தைகள் கரங்களை உயர்த்து கின்றனர்.

**மாரிக்கா:** '' 'என் அன்புப் புத்தகமே! உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்' என்று நான் சொல்வேன்.''

**லேரி:** (புத்தகத்தை தலைக்கு மேலாக உயர்த்தியபடி) ''மிக, மிக, மிக நன்றி!''

**நீத்தோ:** ''என் அன்பு நண்பனே! நான் உன்னை என்றுமே மறக்க மாட்டேன்! உனது அட்டையை நாசப்படுத்தியதற்கு, பக்கத்தைக் கிழித்ததற்கு மன்னித்து விடு! புத்தகங்களைக் கவனமாகப் பேணிக் காப்பேன் என்று உறுதி தருகிறேன். நீ உண்மையான மனிதனைப் போன்றவன்!''

**கீயா:** ''நான் நிறைய படிப்பேன், நூல்களை நேசிப் பேன் என்று கூறி உனக்கு நன்றி சொல்கிறேன்.''

**மாயா:** ''எங்கள் அன்பு முதல் புத்தகமே! நாங்கள் ஒருவேளை உன்னை இம்சித்திருக்கலாம், எங்களுக்குப் படிப் பது கடினமாக இருந்தது, நீ அனேகமாக எங்கள் மீது கோபம் கொண்டிருக்கலாம்! ஆனால் நீ அன்பான புத்தகம். நாங்கள் அனைவரும் உன்னை மிகவும் நேசிக்கின்றோம். எப்போதும் உன்னை மறக்க மாட்டோம்!''

**நீயா:** ''நீ சூரியன், நீ நூல்களின் ராணி! நீ என்றென்றும் நீடூழி வாழ்க!''

**இலிக்கோ:** ''நான் பள்ளிக்கு வந்த போது தாய் மொழி எனக்கு நன்றாகத் தெரியாது. இந்தப் புத்தகம் தாய் மொழி யில் நன்றாகப் படிக்கச் சொல்லித் தந்தது. எனவே, நான் இதை மிகவும் நேசிக்கிறேன்!''

**சான்த்ரோ:** ''நீ மிகவும் நல்ல, நேர்மையான, மிகவும் அன்பான புத்தகம். நீ எல்லோருக்கும் தாய் மொழியைச் சொல்லித் தருகிறாய், எனவே எல்லோரும் உன்னை நேசிக் கின்றனர். நானும் உன்னை நேசிக்கிறேன்!''

**தாம்ரிக்கோ:** ''நீ புத்திசாலியான புத்தகம், எங்களுக்கும் நீ இதைச் சொல்லித் தந்தாய். உனக்கு நன்றி!''

**சாஷா:** (மௌனமாக புத்தகத்தைப் பார்த்தபடி நின்று,

பின் மெதுவாகச் சொல்ல ஆரம்பிக்கின்றான்) ''இந்தப் புத்தகம் எழுத்துகளைக் கற்பித்தது, படிக்கச் சொல்லித் தந்தது. ஒருவனுக்குப் படிக்கத் தெரிந்தால் அவன் ஏராள மானவற்றைக் கற்றுக் கொள்வான், ஏனெனில், புத்தகங் களில் எல்லா விஞ்ஞானங்களும் அடங்கியுள்ளன என்று என் அம்மா கூறியிருக்கின்றாள். இது ஆசிரியராகத் திகழும் புத்தகம். நானும் இதற்கு நன்றி சொல்ல விரும்புகிறேன், இதை நான் நேசிக்கிறேன்!''

''உங்களுடைய முதல் புத்தகத்தை விட்டுப் பிரிய வருத்தமாயுள்ளதா?''

ஒரே ஏகோபித்த குரலில்: ''ஆமாம், மிகவும் வருத்த மாயுள்ளது!''

''அனேகமாக நீங்கள் இல்லாமல் அதற்கும் வருத்தமா யிருக்கும்... வேண்டுமானால் இதைப் பள்ளியின் பரிசாக வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்!''

ஒரே மகிழ்ச்சி! பலர் புத்தகத்தை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்கின்றனர்.

இது மிக முக்கிய நூல்.

''என்னுடைய புத்தகம்!'' என்று மெதுவாகக் கூறு கிறாள் தேக்கா.

மாக்தா புத்தகத்திற்கு முத்தம் தருகிறாள்.

சூரிக்கோ புத்தகத்தைத் திறந்து, ஏதோ முதன் முத லாகப் பார்ப்பதைப் போல் புரட்டுகிறான்.

இராக்ளி கிழிந்த அட்டையைச் சரிசெய்து, பக்கங்களின் மூலைகளைத் தடவித் தருகிறான்.

### பள்ளி முழுவதும் பாராட்டுகிறது

''இதிலுள்ள எல்லாவற்றையும் நான் மீண்டும் படிப் பேன்'' என்று எலேனா தன் அருகில் உள்ளவனிடம் கூறு கிறாள்.

அச்சமயம் கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. நான் இதற்காகத்தான் காத்திருந்தேன். தாத்தோ கதவைத் திறக்க, பள்ளி இயக்குநர் உள்ளே வருகிறார். குழந்தைகள் எழுந்து நின்று வரவேற்கின்றனர்:

''வணக்கம்!''

பரிபூரண நிசப்தம். பள்ளி இயக்குநர் அன்பான புன்னகை யுடன் ஒவ்வொரு குழந்தையையும் பார்க்கின்றார்.

‘‘மன்னியுங்கள், நான் ஒருவேளை உங்களுக்கு இடையூறு விளைவித்திருக்கக் கூடும். நீங்கள் இன்று அரிச்சுவடியை முடித்துள்ளதை அறிந்தேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சி, எனவே, உங்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவிக்க வந்துள்ளேன்...’’

அவர் மீண்டும் தன் பார்வையை ஒவ்வொருவர் மீதும் செலுத்துகிறார். குழந்தைகள் கவனமாகப் பார்க்கின்றனர்.

‘‘உட்காருங்கள்!’’ என்கிறார் அவர். ‘‘படிக்க கற்றுக் கொண்டு விட்டீர்களா?’’

ஒரே குரலில்: ‘‘ஆமாம்!’’

‘‘சபாஷ்! உங்களுக்குப் பாராட்டுகள்!..’’

அவர் மெதுவாக வரிசைகளின் ஊடாக நடந்து வந்து ஒரு குழந்தைக்குத் தன் கரத்தை நீட்டுகிறார். அவன் இடத்தை விட்டு எழுந்து நிற்கிறான். அவர் அச்சிறுவனின் கண்களையே பார்க்கிறார்.

‘‘உன் பெயரென்ன?.. வாழ்த்துகள், பாராட்டுகள்!’’

அவர் உண்மையாக, நன்றாக, கருத்தாழத்தோடு அவன் கையைப் பற்றிக் குலுக்குகிறார்.

இவ்வாறு பள்ளி இயக்குநர் ஒவ்வொருவரையும் தனித் தனியே அணுகுகிறார். குழந்தைகள் அவரையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர்...

‘‘நீங்கள் எல்லா எழுத்துகளையும் கற்று முடித்ததற்குப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டனர்.’’

ஒரே குரலில்: ‘‘நன்றி!’’

‘‘புதிய வெற்றிகள் உங்களை வந்தடையட்டும்!’’

ஒரே குரலில்: ‘‘நன்றி!’’

‘‘போய் வருகிறேன்!’’

குழந்தைகள் எழுந்து நிற்கின்றனர்.

ஒரே குரலில்: ‘‘போய் வாருங்கள்!’’

பள்ளி இயக்குநர் வகுப்பறையை விட்டு வெளியேறு கிறார். கதவு திறந்தபடியே இருக்கின்றது. இடைவேளைக் கான மணி அடித்தாகி விட்டது, பள்ளி வானொலியில் ஏதோ சொல்வது இப்போது வகுப்பறையில் கேட்கிறது. நான் கவனமாகக் கேட்கிறேன், குழந்தைகளும் தம் காது களைத் தீட்டிக் கொள்கின்றனர்:

‘‘அன்புள்ள தயாரிப்பு வகுப்பு மாணவமணிகளே! நீங்

கள் எல்லா எழுத்துகளையும் படித்து முடித்ததை இன்று அறிந்தோம். பாராட்டுகள்! நீங்கள் முழு பள்ளி மாணவர் கள், உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியும். உங்களோடு சேர்ந்து பள்ளியில் உள்ள அனைவரும் எல்லா ஆசிரியர் களும் கம்சமோல் உறுப்பினர்களும் பயனீர்களும் மகிழ்ச்சி யடைகின்றனர். இன்றைய கதாநாயகர்களின் பெயர்களைப் பள்ளி முழுவதும் அறியட்டும். இதோ அவர்களுடைய பெயர் கள்...''

ஒவ்வொருவர் பெயரையும் படிக்கும் போது நான் அம் முகத்தைப் பார்க்கிறேன். ''உங்களுள் என்ன நடக்கிறது?'' என்று நான் மனதில் பேசிக் கொள்கிறேன். ''நீங்கள் ஒவ் வொருவரும் கண் முன் வளருவது தெரிகிறது! இது எதனால்? கல்வியில் நீங்கள் முதல் படியைத் தாண்டி விட்டதாலா? இல்லை, அனேகமாக பள்ளி இயக்குநரின் வாழ்த்தும், உங் களுடைய பெயர்களை வானொலியில் வாசித்ததும் உங்க ளுடைய தன்னம்பிக்கையைப் பலப்படுத்தியிருக்கும், பெரிய வர்களாக வேண்டும், சமுதாய ரீதியாகப் பயனுள்ளவர் களாக வேண்டும் என்ற நாட்டத்தை உறுதிப்படுத்தியிருக் கும். சிறுவனே, நீ ஏன் சோகமாய் இருக்கிறாய்! உனது கண்கள் ஏன் சுருங்கி விட்டன? உன் பெயரை வானொலியில் சொல்ல மாட்டார்களே என்று யோசிக்கின்றாயா? பயப் படாதே, நீயும் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வாயென நிச்சயமாக நம்புகிறேன். எல்லோரையும் போல் உன்னால் செய்ய முடியாமல் போனதற்கு காரணம் நீயல்லவே. நீ பல வீனமானவன், மூளை வளர்ச்சி குன்றியவன் என்று சொல்லப் போவதில்லை, இச்சொற்கள் எனக்குப் பிடிக்காதவை. உன் விஷயத்தில் சரியானபடி செயல்படாத என் முறையை பலவீனமானது என்று கூறுவதுதான் தகும். நான் இதை மாற்றுவேன், உனக்கு உதவும் மற்ற முறைகளைத் தேடு வேன். எங்கே சிறுவனே, சிரி பார்க்கலாம், இதோ உன் பெயரையும் வானொலியில் சொல்லி விட்டார்கள். இன் றில்லாவிடினும் நாளை உன்னுள்ளும் அதிசயம் நிகழும்!..''

''இரண்டாவது பாடவேளையில் எழுத்துகளை எழுது வோம்!.. இப்போது ஓய்வெடுங்கள்! சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பது நினைவில் இருக்கட்டும்!''

மாயா நாற்காலியில் அசையாமல் உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு உடல் நிலை சரியில்லையா என்ன?

''மாயா, உனக்கு என்னவாயிற்று?''

அவள் மௌனமாக, கல்லைப் போல் உட்கார்ந்திருக்கிறாள், கண்களைக் கூட இமைக்கவில்லை.

''மாயா, பதில் சொல்!''

அவள் உதடுகளை மிகச் சிறிதளவே திறந்து முணுமுணுத்தாள்:

''தாக்குப் பிடிக்கும் திறனைப் பயிற்சி செய்து பார்க்கிறேன்.''

## குழந்தை—எல்லையற்ற திறமையின் மாடல்

இன்று ஒரு அதிசயம் நடக்கப் போகிறது.

ஒரு வேளை ''அதிசயம்'' என்பது மிகைப்படுத்தி சொல்லப்பட்டதோ? அதிசயங்கள் சாதாரணமாக நடப்பதில்லை, அதுவும் கல்வி போதிப்பதிலும் குழந்தை வளர்ப்பிலும் இது நடப்பதில்லையோ! ஆனால் 84வது பள்ளி நாளாகிய இன்று நடக்கப் போவதை வேறு எப்படிச் சொல்வது?

இன்று என்ன நடக்கப் போகிறது தெரியுமா? ''எனக்கு எது மகிழ்ச்சி தருகிறது? எது வருத்தமளிக்கிறது?'' எனும் தலைப்பில் எழுதும்படி அவர்களுக்குச் சொல்லப் போகிறேன். அவர்கள் தமது வாழ்வின் முதல் கட்டுரையை எழுதுவார்கள். என் வகுப்புக் குழந்தைகளில் பலர் எல்லா எழுத்துகளையும் படித்து முடிப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரே கவிதைகள், கதைகளைப் படிக்க ஆரம்பித்ததும் தங்கள் மனதில் தோன்றியதை எழுதத் துவங்கியதும் எனக்குத் தெரியுமென்ற போதிலும் வியப்புடனும் சந்தோஷத்துடனும் தான் இவர்களின் முதல் கட்டுரைகளைப் படிப்பேன்.

யாருக்கெல்லாம் இக்கட்டுரைகளைக் காண்பிப்பேனோ அவர்களில் பெரும்பாலோர் ஆறு வயதுக் குழந்தைகளால் இப்படி எழுத முடியாது என்பார்கள். இந்த வயதுக் குழந்தைகளிடம் இப்படிப்பட்ட திறமைகள் இருப்பதை நம்ப மாட்டார்கள், இவற்றை எழுதியது குழந்தைகள்தானா என்று சந்தேகப்படுவார்கள்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நான் முதன்முதலில் இந்த அதிசயத்தைச் சந்தித்த போது இப்படி நடந்தது. அப்போது நான் மகிழ்ச்சியோடு, உணர்ச்சி வசப்பட்டு எனது அன்றைய குழந்தைகள் எழுதியதைக் காட்ட விஞ்ஞானிகளிடம் ஓடி

னேன் (அக்குழந்தைகள் இன்று வளர்ந்து பெரியவர்களாகிப் படிக்கின்றனர், உழைக்கின்றனர்).

''இன்று இவர்கள் என்ன எழுதியிருக்கின்றார்கள் பார்த்தீர்களா!''

குழந்தைகளின் இந்த முதல் கட்டுரைகளைப் படிக்கத் தொடங்கினேன்.

திடீரென யாரோ என்னைத் தடுத்து நிறுத்தினார்.

''போதும்!'' என்று எரிச்சலோடு யாரோ சொன்னார்கள்.

வயது முதிர்ந்த, செல்வாக்குள்ள, எல்லோர் மரியாதைக்கும் உரிய ஒரு பழைய ஆசிரியை சொல்கிறார்:

''என் அன்பு சக ஆசிரியர்களே! ஏன் ஒருவரையொருவர் நாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டும்! அதுவும் ஆசிரியர் ஆலோசனைக் கவுன்சில் கூட்டத்தில்! ஆறு வயதுக் குழந்தைகள் எப்போதாவது இப்படி எழுதியிருக்கின்றார்களா!''

மற்ற விஞ்ஞானிகள் ஏளனமாக புன்னகைத்தபடி, அந்த முதிய ஆசிரியைச் சொல்வதை ஒப்புக் கொள்ளும் முகமாகத் தலையை ஆட்டியபடி ஏதோ நான் அவர்களை ஏமாற்றுவது போல் என்னைப் பார்த்தனர். ''இது எப்படி நடந்தது? விளக்கிச் சொல்'' என்று யாருமே என்னைக் கேட்கவில்லை.

ஆம், அறுபதாம் ஆண்டுகளின் மத்தியில் விஞ்ஞானிகளிடையே இப்படி நடந்தது!

''குழந்தையால் இதைக் கிரகிக்க முடியாது...''

''குழந்தைகளுடைய வயது ரீதியான சிறப்பியல்புகள்... மட்டுப்பாடுகள்...''

''குழந்தைகளுக்கு இது புரியாது... இதை அவர்களால் கிரகிக்க முடியாது...''

சில விஞ்ஞானிகள், கல்வி முறையியலர்கள், ஆசிரியர்களிடமிருந்து நான் அடிக்கடி இப்படிப்பட்ட கருத்துகளைக் கேட்கிறேன்.

நிச்சயமாக, குழந்தைகளால் எல்லாவற்றையும் கிரகிக்கவும் புரிந்து கொள்ளவும் செய்யவும் முடியாது.

உதாரணமாக, பிறந்தவுடன் எழுந்து நின்று பேச அவர்களால் முடியாது. அவர்களால் தாமாகவே உணவு சாப்பிட்டு அம்மாவை இந்த வேலையிலிருந்து விடுவிக்க முடியாது. தேவையான திறமைகள் வரும் வரை விஞ்ஞானங்களைப் பயில முடியாது. தேவையான அறிவும் அனுபவமும் கிட்டும்

வரை நகரங்கள், பாலங்கள், தொழிற்சாலைகளைக் கட்ட முடியாது, சாலைகளைப் போட முடியாது, விவசாயம் செய்ய முடியாது. சமூக அனுபவம் கிட்டும் வரை நம்முடைய பல அக்கறைகளைப் புரிந்து கொள்ள இயலாது.

குழந்தைகளின் வயது, அனுபவமின்மையால் வரும் மட்டுப்பாடுகள் உண்மையிலேயே நிறைய உள்ளன. ஆனால் மேற்கூறியபடி குழந்தைகளால் முடியாது என்று ஆணித்தரமாகச் சொல்வதில் குழந்தைகளைப் பற்றிய பழமையில் ஊறிப்போன கருத்து உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. ''முடியாது.'' ஏன்? நீண்டகாலமாக இப்படி இருந்தது, நேற்று இப்படி இருந்தது, அதனால் இன்றும் நாளையும் நாளை மறுநாளும் இப்படித்தான் இருக்க வேண்டுமா? அப்படியெனில் 21வது நூற்றாண்டுக் குழந்தைகளின் சிந்தனைகளிலும் இதே வயதுக் கட்டுப்பாடுகள்தான் வெளிப்படுமா? அப்படியென்றால் ஆசிரியரியல், கல்வி போதிக்கும் முறை, ஆசிரியரின் படைப்பாற்றல் ஆகியவற்றிற்கு என்ன விலை?

''குழந்தைகளால் முடியாது'' என்று சொல்லும் போது இதில் குழந்தைகளின் பாதுகாப்பின்மையையும் பலவீனத்தையும் காப்பாற்ற வேண்டுமே என்பதை விட இவர்களைத் தமது உண்மையான திறமைகளிலிருந்து வேலியிட்டுத் தடுக்க வேண்டும் எனும் எண்ணம்தான் மிகுந்திருப்பதாக எனக்குப் படுகிறது. அனேகமாக ''குழந்தைகளால் முடியாது'' எனும் கூற்றில் குழந்தைகளின் வளரும் திறமைகளின் மட்டுப்பாட்டை விட அவர்களைப் பற்றிய நமது கருத்துகளின் மட்டுப்பாடே அடங்கியிருப்பதாக நான் எண்ணுகிறேன்.

நமது 20ஆம் நூற்றாண்டின் சிறப்பியல்புகள் யாவை? பல்வேறு விஞ்ஞான சாதனைகள் ஒரு புறமிருக்க, குழந்தைகளுடைய மனநிலையின் கிட்டத்தட்ட எல்லையற்ற திறமைகளும் உள்ளாற்றல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கவையாகும். 30 ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இன்று ஆசிரியரியலின் வசம் பெரும் எதிர்கால வாய்ப்புள்ள, ஆழ்ந்த வளர்ச்சிப் போக்குகள் உள்ளன. குழந்தைகளின் சக்தி (நல்ல ஆக்கபூர்வமான கல்வி, குழந்தை வளர்ப்புப் போக்கில் இது வளர்ந்து வலுப்பெறும்) மீதுள்ள நம்பிக்கை நவீன சோவியத் ஆசிரியரின் பிரதான அம்சமா

கும். ஒரு சில வயது மட்டுப்பாடுகள் பற்றிய பழைய கருத்து கள் நம் கண்களிலேயே தகர்ந்து விழுகின்றன. எதிர்காலத் தில் குழந்தைகள் தமது திறமைகளால் உலகைப் பன்முறை வியப்பில் ஆழ்த்துவார்கள், குழந்தை மனதைப் பற்றிய விஞ்ஞானிகள், ஆசிரியர்களின் கருத்துகளைப் பன்முறை தகர்ப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நல்ல, ஆக்கபூர்வமான ஆசிரியரின் கவனத்தின் கீழ் இருந்தால் குழந்தைகளின் திறமைகளுக்கு எல்லைகளே கிடையாது. எனவே கீழ்வரும் ''முதுமொழியை'' நான் பின்பற்றுகிறேன், இது சிறு குழந்தைகளின் மனதையும் இதயத்தையும் நாடிச் செல்லும் போது எனக்குக் கைகொடுக்கிறது:

> குழந்தைகளின் ஆழ்ந்த உள்ளாற்றல்களை வெளிப் படுத்தி, வளர்க்க வல்ல கல்வி போதிக்கும் முறை எவ்வளவுக்கெவ்வளவு செயல் முனைப்போடு புதுப் பிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது மனிதாபி மானம் மிக்கதாய், எதிர்கால நம்பிக்கையுள்ளதாய், மகிழ்ச்சிகரமானதாய் மாறும்.

இன்றைய அதிசயத்தின் வேர் இந்த ''முதுமொழியில்'' தான் உள்ளது.

நான் இந்தக் கட்டுரைகளை யாருக்கெல்லாம் காட்டு கிறேனோ அவர்கள் இவற்றை நம்பாமல் இருக்கட்டும், இவற்றை அப்பா, அம்மாக்கள் எழுதினார்கள் என்று கூறட் டும். இதனால் என் குழந்தைகளின் வெற்றி மங்காது. இவர் களுடைய திறமைகளின் மீதும், புதிய மனிதனை உருவாக்கு வதில் ஆசிரியரியலின் வாய்ப்புகள் மீதும் எனக்குள்ள உறுதி இரு மடங்கு அதிகமாகும்.

எனது சின்னஞ்சிறு மாணவமணிகள் முதன் முதலாக வாழ்க்கையில் தமது உணர்வுகளின்,இன்ப துன்பங்களின் ஆழத் திற்குள், சென்று, ''நான்'' என்பதினுள் மூழ்கும் அந்த நிமி டத்தின் மகிழ்ச்சியையும் உணர்ச்சிப் பெருக்கையும் நான் உணருகிறேன். ஒருவேளை சாஷா அல்லது வாசிக்கோ பதி னைந்து ஆண்டுகளுக்கு முன் அதே வயதிலிருந்த நூக்ரீ எழுதி யதைப் போல எழுதலாம்:''பலவற்றைக் கண்டு மகிழ்கிறேன். உதாரணமாக, நேற்று நானும் அப்பாவும் பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்த போது அவருடைய அலமாரியை ரிப்பேர் செய்து தந்தோம். 'உங்களுடன் இருக்கும் போது எவ்வளவு

நன்றாக உள்ளது' என்றார் பாட்டி. எனது யோசனையற்ற நடவடிக்கைகளால் மற்றவர்களுக்கு வருத்தமேற்படச் செய்யும் போதும் அல்லது எதற்கு என்று எனக்குத் தெரியாத போது என்னைத் தண்டிக்கையிலும் வருத்தப்படுகிறேன்...''

முதன் முதலாக தன்னைத் தானே நன்கு உணர்வதை நான் விண்வெளி வலவர் முதன்முதலாக திறந்த விண்வெளியில் வருவதுடன் ஒப்பிடுகிறேன். தனது உணர்வுகள், எண்ணங்கள், உறவுகளை எழுத்து வடிவில் வடிப்பதன் மூலம் குழந்தை தன் மன நிலையை அறிந்துணருமாறு செய்ய நான் மேன்மேலும் பாடுபடுவேன். எனது சின்னஞ்சிறு மாணவமணிகள் தம் நடவடிக்கைகள், உற்றார் உறவினர் மீதான நேசம், தம் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றி, மக்களுக்கு எப்படி மகிழ்ச்சியை வழங்குவது, தீமையை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பதைப் பற்றி மேன்மேலும் அதிகம் சிந்திப்பார்கள்.

மற்றவர்கள் மத்தியில் தன்னைத் தானே பார்த்துக் கொள்ளக் குழந்தைக்குச் சொல்லித் தருவது, சுயவளர்ப்பிற்கு, சுயகல்விக்கு, சுயமாகத் தன் நிலையை முடிவு செய்வதற்குப் பாடுபடுவது—எழுதுவதன் மூலம் சிந்திக்கும் திறமையை, தன்னுடன் தானே உரையாடும் திறமையைக் குழந்தைகளிடம் வளர்க்கும் போது நான் முன்வைக்கும் லட்சியம் இதுதான். எழுத்துகள்—மனதின் மெழுகுவர்த்தி. தன் ஆன்மிக வாழ்வுக் கிடங்கினுள் குழந்தை அடியெடுத்து வைக்கும் போது இதை எப்படிப் பயன்படுத்துவதென சொல்லித் தர வேண்டும். எனது பணியில் இது குழந்தைகள் மத்தியில் தனிப்பட்ட குணநலன்களை வளர்க்கும் முறையாக, அவர்கள் தமது ஆன்மிக உலகைத் தாமே கண்டறிய உதவும் முறையாக மாறும்.

### ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள உரிமை

எழுதுவதற்கான தாள்கள் வினியோகிக்கப்பட்டு விட்டன, பேனாக்கள் சரிபார்க்கப்பட்டு விட்டன, வேலை விளக்கப்பட்டு விட்டது.

''எழுதத் தயாராகுங்கள்!''

அதாவது, நிமிர்ந்து நேராக உட்கார்ந்து, பேனாவை எடுத்துக் கொண்டு, ''நான் தயார்'' என்று வலது கரத்தை உயர்த்த வேண்டும்.

ஒருவனைத் தவிர எல்லோரும் எழுதுவார்கள். அவனை மட்டும் வரையச் சொல்லியிருக்கிறேன். எல்லாம் சரியாக உள்ளது.

''தொடங்குங்கள்!'' என்று நான் மெதுவாகச் சொல்கிறேன்.

இக்கட்டளைக்குப் பின் சாதாரணமாக வகுப்பறையில் பரிபூரண நிசப்தம் நிலவும். எழுதும் போது வேறெந்த அசைவுகளும் கூடாது, சத்தம் போடக் கூடாது, நண்பர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்களுக்கும் தனக்குத் தானேயும் தொந்தரவு செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லித் தந்திருக்கிறேன். யாருக்காவது எதையாவது கேட்க வேண்டுமானால் என்னிடம் வந்து மெதுவாகப் பேசட்டும் அல்லது கையை உயர்த்தினால் நானே அருகே வந்து பேசுவேன்.

குழந்தைகள் எழுதும் போது நான் பெஞ்சுகளிடையே நடக்க மாட்டேன், சத்தம் போட்டுப் பேச மாட்டேன், இன்னமும் எழுதி முடிக்காதவற்றைப் பார்க்க மாட்டேன். இதற்கு காரணம் என்ன என்பது தெளிவு. தாம் ஒரு முக்கியமான விஷயத்தில் ஈடுபட்டுள்ளோம், இதில் இடையூறு செய்ய யாருக்கும் உரிமையில்லை என்று குழந்தைகள் புரிந்து கொள்ளட்டும். மனிதன் சிந்திக்கும் போது, மூளையுழைப்பில் ஈடுபட்டுள்ள போது அவனுக்குத் தொந்தரவு தரக் கூடாது என்று அவர்கள் புரிந்து கொள்ளட்டும். ''எப்போது சிந்திக்கின்றீர்களோ, சிந்தனையில் மூழ்குகின்றீர்களோ, ஏதாவது நல்ல காரியத்தைச் செய்கின்றீர்களோ அப்போதுதான் நீங்கள் மிக அழகானவர்களாவீர்கள்'' என்று என் ஆறு வயதுக் குழந்தைகளிடம் அடிக்கடி சொல்கிறேன்.

இவ்வார்த்தைகளின் உட்பொருளை அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? ஒருவேளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம். ஆனால் இவற்றில் உள்ள கருத்தாழத்தை அவர்கள் உணருவார்கள். சில நேரங்களில் ஏதாவதொரு குழந்தையைக் கூப்பிட்டு இரகசியம் பேசுவேன், எனது கருத்துகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வேன்: ''ஏக்காவைப் பார், அவள் எப்படி சிந்தனையில் மூழ்கியிருக்கின்றாள்... உலகில் எல்லாவற்றையுமே அவள் மறந்து விட்டாள். அவளைப் பார்க்க, அவள் சிந்திப்பதை, கண்களைச் சுருக்கி கொண்டு அவள் எங்கோ நோக்குவதைக் காண எனக்கு எவ்வளவு பிடிக்கிறது! அற்புதமான

காட்சி இல்லையா?'' வேலையிலிருந்து பிரித்ததற்காக மன்னிப்புக் கேட்டு விட்டு அவனை இடத்திற்கு அனுப்புகிறேன். அவன் மெதுவாக நடந்து சென்று கவனமாக இடத்தில் அமருகிறான், ஒரு நிமிடம் கழித்துப் பார்த்தால் அவனும் நெற்றியைச் சுருக்கியபடி கண்களால் எங்கோ பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான். ஒவ்வொரு பாடமும் செல்லச் செல்ல, ''நீ இப்போது எவ்வளவு அழகாய் இருக்கின்றாய்! நான் உன்னைப் பார்த்து மகிழ்கிறேன்!'' என்ற எனது வெளிப்படையான, திருப்தியான கண்ணோட்டத்தை அவன் உணர ஆரம்பிக்கிறான்; வேலையில் ஈடுபட்டிருக்கும் போது விளையாட்டு தனத்தைக் கைவிட்டு, சிந்தனையில் மூழ்கி, சிந்திக்கும் மனிதனின் அழகைப் பெறும் முயற்சி அவனிடம் வலுப்பெற்று வருகிறது.

இந்த முறையால் குழந்தை சிந்திக்கக் கற்றுக் கொள்ளாது என்று எனக்குத் தெரியும். ஆனால், இப்படி நடந்து கொள்வதன் மூலம் குழந்தை சிந்திக்கும் மனிதனின் அழகை விரைவிலேயே பெறுகிறான், கவனத்தை ஒருமுனைப்படுத்தும் சக்தியைப் பெறுகிறான், ஒருவன் சிந்திக்கும் போது அவனைத் தொந்தரவு செய்ய யாருக்கும் உரிமையில்லை, அதே போல் தனக்கும் மற்றவர்கள் சிந்திக்கையில் இடையூறு செய்ய உரிமையில்லை என்று புரிந்து கொள்கிறான். எனது ''முதுமொழி'' பாடங்களில் தன்னிச்சையாக நான் நடந்து கொள்வதைத் தடை செய்கிறது. ஏனெனில், பாடங்கள் குழந்தைகளின் சொத்தே தவிர என் சொத்தல்ல. அந்த ''முதுமொழி'' இதுதான்:

> பாடவேளைகளின் போது தர்பார் நடத்தக் கூடாது, படிப்பில் புதியவற்றை அறியும் யோசனையில் ஈடுபட்டுள்ள குழந்தைகளின் சிந்தனையைக் குலைக்கக் கூடாது. அமைதியாக வேலை செய்ய ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள உரிமையைப் பேணிக் காக்க வேண்டும்.

நான் என் மேசையில் உட்கார்ந்து, புத்தகத்தைத் திறந்து, படிப்பது போல் பாவனை செய்கிறேன். ஆனால், குழந்தைகளுக்குத் தெரியாமலேயே அவர்களைக் கவனிக்கிறேன். பலர் ஏற்கெனவே எழுத ஆரம்பித்து விட்டனர். ஆனால் நீயா தனது முதல் கட்டுரையில் என்ன எழுதுவது என்று இன்னமும் யோசிக்கிறாள். தாத்தோ பேனாவைச்

சுற்றிக் கொண்டிருக்கிறான், இன்னமும் எழுதத் துவங்க வில்லை. மாயா உதட்டைக் கடிக்கிறாள், புருவங்களை நெறிக்கிறாள், கண்களைச் சுருக்குகிறாள், அவள் யோசிக் கிறாள்.

குழந்தைகள் பெஞ்சில் தலை குனிந்து அமர்ந்திருக் கின்றனர். சில தலைகள் மிகவும் கீழாக இருந்ததால் மூக்கு நுனி கிட்டத்தட்ட தாளைத் தொடுகிறது. இப்படி உட் காரக் கூடாது. என்ன செய்வது? எனது முதல் ஆசிரியையின் நினைவு எனக்கு வந்தது. இவரும் நாங்கள் இப்படி உட் காரக் கூடாது என்பதற்காகப் பாடுபட்டார், ஆனாலும் அவரால் நினைத்ததைச் செய்ய இயலவில்லை. அப்போது அவர் ஒரு அற்புதமான யோசனையைக் கண்டுபிடித்தார். இதன் உதவியால் நாங்கள் சரியாக உட்காரும் பிரச்சினை யை வெகு விரைவில் தீர்த்தார்.

''பாருங்கள் என் முதுகை!'' என்று சொன்ன அவர் தன் நீலநிற அங்கியைக் கழட்டிக் காட்டியபடி வரிசைகளின் ஊடாக நடந்தார்.

எங்களது அன்பு ஆசிரியையின் முதுகில் ஏதோ அசா தாரணமான ஒன்று உள்ளதை நாங்கள் தடவிப் பார்த் தோம். அவர் நேராக நிமிர்ந்து நின்றபோது, முதுகு ஒரு அசா தாரண வடிவத்தில் இருந்தது தெரிந்தது.

''இது கூன் விழுந்துள்ள இடம். இது இப்படியாகக் காரணம், நானும் சிறு வயதில் உங்களைப் போல் நேராக நிமிர்ந்து உட்காராமல் இருந்ததுதான்'' என்று சொன்ன அவர் தொடர்ந்தார்: ''யாருக்கெல்லாம் முதுகில் கூன் விழ ஆசையில்லையோ அவர்கள் எல்லாம் நேராக நிமிர்ந்து உட்காரட்டும்!''

அவர் தன் நீலநிற மேலங்கியை அணிந்து கொண்டார், அது முதுகிலிருந்த கூனை மறைத்தது. ''நேராக உட்காருங் கள்'' என்று சொல்லும் அவசியம் அதற்குப் பின் அவருக்கு ஏற்படவே இல்லை. இதோ பல ஆண்டுகளுக்குப் பின் இன்று அவரை வருத்தத்தோடும் மகிழ்ச்சியோடும் நினைத்துக் கொள்கிறேன்.

எனது ஆறு வயதுக் குழந்தைகள் தோள்பட்டைகளைக் குறுக்கி, குனிந்தபடி எழுதுகின்றனர். எப்போதும் இவர் கள் நேராக உட்காரும்படி செய்யும் நம்பகரமான வழி இல்லாதது வரை நான் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்ப

நினைவுபடுத்தியாக வேண்டும். இதோ இப்போதும் அப்படித்தான்.

''குழந்தைகளே நிமிர்ந்து நேராக உட்காருங்கள்!'' என்று நான் மெதுவாகச் சொல்கிறேன்.

உடனே எல்லோரும் நேராக உட்கார்ந்தனர்...

### அதிசயத்தின் ''ரகசியங்கள்''

இன்று அதிசயம் நடக்குமா? இதோ இப்போதுதான் எல்லா எழுத்துகளையும் கற்று முடித்த ஆறு வயதுக் குழந்தைகளால் தமது மகிழ்ச்சிகளையும் வருத்தங்களையும் எழுத்து வடிவில் வடிக்க முடியுமா? நான் உணர்ச்சி வசப்படுகிறேன். என்றாலும் சென்ற ஆண்டுகளின் அனுபவம் எனக்கு நம்பிக்கையளிக்கிறது. அவர்கள் அடிப்படை எழுத்து வடிவ அம்சங்களைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு நான் 84 நாட்கள் இவர்களைத் தயார்படுத்தினேன். இதோ எனது முறையியலுக்கான பரிசோதனை நேரம் வந்து விட்டது. இன்றைய பாடத்தின் எல்லா ''ரகசியங்களும்'' இதில்தான் அடங்கியுள்ளன.

இதோ இந்த ''ரகசியங்கள்''.

முதலில் என் வகுப்புக் குழந்தைகள் வார்த்தையின் கட்டமைப்பைப் பகுப்பாய்வு செய்யக் கற்றுக் கொள்கின்றனர். நான் செயற்கையாக நீண்டு இழுத்தபடி உச்சரிக்கும் வார்த்தைகளை இவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்கிறேன், அவர்களே இம்மாதிரி உச்சரிக்கச் சொல்லித் தருகிறேன், இவற்றில் எந்த வரிசையில் ஒலிகள் ஒலிக்கின்றன என்பதையும் கவனித்துக் கொள்கிறேன். அட்டைவில்லைகளின் உதவியால் அவர்கள் வார்த்தையின் ஒலியமைப்பைக் கண்டுபிடிக்கின்றனர். இது பின்வருமாறு நடக்கிறது: வார்த்தையை மெதுவாக, இழுத்தபடி உச்சரித்து குழந்தை முதல் ஒலியைக் கண்டுபிடித்து அட்டைவில்லையைப் போடுகிறான் —நீலநிற அட்டைவில்லை மெய்யெழுத்தையும் சிவப்புநிற அட்டைவில்லை உயிரெழுத்தையும் குறிக்கும்; வார்த்தையை மீண்டும் உச்சரித்து இரண்டாவது ஒலியைக் கண்டுபிடித்து அட்டைவில்லையைப் போடுகிறான். இதே போல் அடுத்து வரும் ஒலிகளைக் கண்டுபிடித்து அட்டைவில்லைகளைப்

போடுகிறான். இவ்வாறாக வார்த்தையின் மாடல் இதன் ஒலியமைப்புடன் கிடைக்கிறது; இதை அவன் மாற்றியமைக்கலாம், ஒலிகளை மாற்றலாம், ஒரு ஒலிக்குப் பதிலாக வேறு ஒலியை வைக்கலாம், ஏதாவதொரு ஒலியை அகற்றலாம், இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் வார்த்தை எப்படி மாறுகிறது என்று கவனிக்கலாம். இத்திறமைதான் வார்த்தைகளை எழுதும் முறையின் அடிப்படையாகத் திகழுகிறது. நான் வார்த்தைகளை எழுதும்படி குழந்தைகளுக்குச் சொல்ல, அவர்களுக்கு இன்னமும் எழுத்துகள் தெரியாதாகையால், எந்த ஒரு எழுத்திற்கும் பதிலாக வட்டத்தைப் பயன்படுத்துவார்கள். இதை நான் அரை எழுத்து என்கிறேன். ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல இந்த முறையில் வார்த்தைகளை எழுதும் திறமை வளருகிறது, ஒலிகளைக் கண்டுபிடிக்க வார்த்தைகளைப் பல முறை திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. முதல் முயற்சியிலேயே அவன் எழுதுகிறான். இவற்றையெல்லாம் குழந்தைகள் எழுத்துகளைக் கற்கும் முன்னரே கிரகிக்கின்றனர்.

பின்னர் எழுத்துகளைக் கற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ள, கலப்பு முறையில் (இதுவரை கற்ற எழுத்துகளை அப்படியே எழுதியும் இதுவரை படிக்காத எழுத்துகளுக்கு வட்டங்களைப் பயன்படுத்தியும்) வார்த்தைகளை எழுதுமாறு குழந்தைகளுக்குச் சொல்கிறேன். இவ்வாறாக ஒவ்வொரு புது எழுத்தும் உடனடியாக, எதற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அந்த முறையினுள் (வார்த்தையின் எழுத்தாக) உடனடியாகச் சேருகிறது. அரை எழுத்து படிப்படியாக முழு எழுத்தாகிறது, எழுத்துகள் வட்டங்களை வெளித் தள்ளுகின்றன. எனவே ஆறு வயதுக் குழந்தைகள் எல்லா எழுத்துகளையும் கற்றுக் கொள்ளும் முன்னரே வார்த்தைகளை எழுதக் கற்கின்றனர். எனது முறையியலின் முதல் ''ரகசியம்'' இதுதான்.

அடுத்து வாக்கியங்களைப் பற்றி பார்ப்போம். படங்களைப் பார்த்து முக்கோண அட்டைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குமாறு குழந்தைகளுக்குச் சொல்கிறேன். பின்வருமாறு வாக்கியம் உருவாக்கப்படுகிறது: குழந்தை வாக்கியத்தை உச்சரித்து, முதல் வார்த்தையைக் கண்டுபிடித்து ஒரு அட்டையை வைக்கிறான், மீண்டும் அதே வாக்கியத்தை உச்சரித்து இரண்டாவது வார்த்தையைக்

கண்டுபிடித்து மற்றொரு அட்டையை முதல் அட்டையின் அருகே வைக்கிறான், இதே போல் தொடருகிறது. இறுதியில் அவன் என்ன சொல்ல வந்தான் என்பதைப் பொறுத்து முற்றுப் புள்ளி, ஆச்சரியக் குறி அல்லது கேள்விக் குறியுடன் கூடிய அட்டையை வைக்கிறான். இவ்வாறாக வாக்கிய மாடல் கிடைக்கிறது. இதில் வார்த்தைகளை மாற்றியமைக்கலாம், ஏதாவதொரு வார்த்தையை அகற்றலாம், புதிய வார்த்தையைச் சேர்க்கலாம். ஒவ்வொரு முறையும் அர்த்தம் எப்படி மாறுகிறது, வாக்கிய அமைப்பு எப்படி மாறுகிறது, அதன் உட்பொருள் எப்படி செழுமையடைகிறது அல்லது மோசமாகிறது என்று குழந்தை கவனிக்கிறான், வார்த்தைகளை எப்படி நன்றாக சேர்ப்பது என்று சிந்திக்கிறான். பின்னர் குழந்தைகள் வாக்கியங்களை ''எழுத'' கற்றுக் கொள்கின்றனர்: வாக்கியத்தை உச்சரித்து, முதல் வார்த்தையைக் கண்டுபிடித்து, அதை ''எழுதுகின்றனர்'', அதாவது நீண்ட முக்கோணத்தை வரைகின்றனர்; மீண்டும் அதே வாக்கியத்தை உச்சரித்து, இரண்டாவது வார்த்தையைக் கண்டுபிடித்து அதே வழியில் ''எழுதுகின்றனர்''. வாக்கியத்தின் இறுதியில் முற்றுப் புள்ளியையோ, ஆச்சரியக் குறியையோ, கேள்விக் குறியையோ இடுகின்றனர். படங்களைப் பார்த்து சிறு கதைகளை ''எழுதவும்'', சொந்தக் கருத்துகள், உணர்ச்சிகளை ''எழுதவும்'' படிப்படியாக குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறேன். இவ்வாறாக இந்த 84 நாட்களில் ஒவ்வொருவரும் ஒரு சில நோட்டுப் புத்தகங்களை முடிக்கின்றனர். இதில் என்ன ''எழுதப்பட்டுள்ளது'' என்று இவர்களால் மட்டுமே படிக்க முடியும். இவர்கள் தமது ''கட்டுரைகளைப்'' பாடங்களிலும் இடைவேளைகளிலும் எனக்குப் படித்துக் காட்டினர். எனவே, எழுத்துகளைக் கற்றுக் கொண்டிருந்த கால கட்டத்திலேயே தமது மனப்பதிவுகள், உணர்ச்சிகளைப் பற்றி எழுதவும் தமது கருத்துகளை வரிவடிவத்தில் வெளியிடவும் குழந்தைகளுக்குத் தெரிந்திருந்தது என்றாகிறது. எனது முறையின் இரண்டாவது ''ரகசியம்'' இதுதான்.

அடுத்து, உணர்வு பூர்வமாகப் பேச, அதாவது எதை, எப்படி சொல்வது என்று முதலில் யோசித்து பின் பேசச் சொல்லித் தருகிறேன். இதற்கு நான் முதலில் பின்வரும் முறையைப் பின்பற்றுகிறேன்: ஏதாவது ஒரு விஷயத்தை

மெதுவாகத் திரும்பிச் சொல்ல, தம் மனப்பதிவுகள், உணர்ச்சிகளை மெதுவாக வெளியிட குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கிறேன். அதுவும், இதுவரை எனக்குத் தெரியாததைச் சொல்லும்படி குழந்தைகளிடம் கூறுகிறேன். நான் புதிய படத்தைப் பார்க்கவில்லை, குழந்தை இதை நேற்று பார்த்திருக்கிறான். எனக்கு அப்படத்தைப் பற்றி அறிய ஆவல், அவனுக்கோ என்னுடன் பேச விருப்பம். அவன் ஞாயிற்றுக் கிழமையை எப்படிக் கழித்தான் என்று எனக்குத் தெரியாது, அவனுக்கோ தான் தந்தையுடன் எப்படி உலாவினான் என்று எனக்குச் சொல்ல விருப்பம். இவ்வாறாக எங்களிடம் பேச்சு தோன்றுகிறது, ஆனால் அவன் மெதுவாக, புரியும்படி, தெளிவாக, தேவையில்லாத வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தாமல் சொல்ல வேண்டும். அவன் தன் கையில் வார்த்தை அட்டைவில்லைகளை வைத்திருக்கலாம், எனக்கோ, வகுப்பில் உள்ள அனைவருக்குமோ எதையாவது சொல்லும் போது இந்த அட்டைகளை வார்த்தைகளுக்கான அழகிய சிறு பெட்டியில் போடலாம். பகிர்ந்து கொள்ளும் இத்தேவை, எதையாவது தெரிவிக்கும் தேவை மிகவும் வலிமையானது, இது பேச்சின் உள்ளடக்கத்தை முன் கூட்டியே சிந்திப்பதில் தோன்றும் இடர்ப்பாடுகளைக் கடக்கக் குழந்தைகளுக்கு உதவும். இவையெல்லாம், தெளிவற்று, முழுமையின்றி பேச்சில் வரும் மனப்பதிவுகளை தடுத்து நிறுத்தவும் இவற்றிற்கு தெளிவைத் தரவும் இவற்றை வார்த்தைகள், சொற்றொடர்களால் அலங்கரிக்கவும் அவசியம்.

எனது நடைமுறையில், சிந்தனையையும் கருத்துக்களையும் எழுத்து வடிவில் வெளிப்படுத்தும் திறமையைக் குழந்தைகளிடம் வளர்ப்பதானது நன்கு பேசப் பழகும் போது நடைபெறுகிறது. அதுவும் பேச்சு வளர்ச்சி எழுத்து வளர்ச்சியின் ஒரு சில விதிகளின்படி நடைபெறுகிறது. எழுத்தின் அடிப்படைகளைத் தரும் நான் பேச்சுப் பழக்கத்தை அதிக விரைவாக வளர்க்க உதவுகிறேன். எழுதக் கற்றுத் தரும் எனது முறையியலின் மூன்றாவது ''ரகசியம்'' இதுதான்.

இப்போது எழுதும் விவரங்களைப் பார்ப்போம். குழந்தைகளிடம் எழுத்துப் பழக்கங்கள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கை, இவர்களிடம் எழுத்து வடிவிலான உரையாடல் திறமையை வளர்க்கும் நிகழ்ச்சிப் போக்கிலிருந்து பிரிக்காம

லிருப்பதுதான் முக்கியமென நான் கருதுகிறேன். இப்பிரச்சினையின் தீர்விற்காக பயிற்சிகள், எழுத்து மாதிரிகள் அடங்கிய நோட்டுப் புத்தகங்களை நான் தயாரித்தேன். எழுதக் கற்றுத் தரும் பொருட்டு எழுத்துகளின் தனிப்பட்ட பகுதிகளை எழுதித் தரும் பயிற்சிகளை நான் தருவதில்லை. மாறாக, தாய் மொழி எழுத்துகளை எழுதும் போது கையை எப்படியெல்லாம் அசைக்க வேண்டுமோ அத்தகைய அசைவுகளை உள்ளடக்கிய வடிவங்களை வரைவதற்குப் பயிற்சியளிக்க நான் விரும்புகிறேன். எனவே, பின்னால் எந்த ஒரு எழுத்தையும் எழுதுவதில் குழந்தைகளுக்கு இடர்ப்பாடுகள் இருக்காது. குழந்தைகள் நோட்டுப் புத்தகங்களில் நான் சுயமாக வேலை செய்யப் பல்வேறு பயிற்சிகளை அளித்துள்ளேன்: படங்களைப் பார்த்து வார்த்தைகளையும் வாக்கியங்களையும் எழுதுவது, ஒலி ஓவியப் புதிர்களைப் போடுவது, வாக்கியங்களில் விட்டுப் போன வார்த்தைகளைப் பூர்த்தி செய்வது, கொடுக்கப்பட்ட எழுத்துகளிலிருந்து இயன்ற அளவு அதிக வார்த்தைகளை உருவாக்குவது, இன்ன பிற பயிற்சிகள் இவற்றிலடங்கும். இவ்வாறாக பல்வேறு எழுத்து வேலைகளைச் செய்யும் போது குழந்தைகள் எழுதும் பழக்கத்தைப் பெறுகின்றனர். எழுதச் சொல்லித் தரும் என் முறையியலின் **நான்காவது** ''ரகசியம்'' இதுதான்.

பிரபல சோவியத் மனவியல் நிபுணர் லேவ் விகோத்ஸ்கியின் கருத்துநிலை இந்த ''ரகசியங்கள்'' அனைத்தின் அடிப்படையில் உள்ளது. எழுத்துக்கு விசேஷ மனவியல் நியதிகள் உண்டு, இதன் முறையை சாதாரணப் பேச்சு முறையோடு சேர்க்கக் கூடாது என்றார் அவர். இதனால் மனவியலின் பழைய கருத்துநிலை நிராகரிக்கப்படுகிறது. இதன்படி ''பேச்சு+எழுத்துகளில் வடித்தல்=எழுத்து'' என்றிருந்தது. இந்த எளிய, தவறான கருத்துதான் ஆரம்ப வகுப்புகளில் வழக்கமாக எழுத்துகளை கற்பிக்கும் முறையை இம்சிப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

எனது மாணவர்கள் தமது கட்டுரைகளை எனக்குத் தருகின்றனர். இவற்றில் பலவற்றில் பட்டாம் பூச்சிகள், மலர்கள், விமானங்கள், வீடுகள், வேறு படங்கள் உள்ளன. நான் கட்டுரைகளைப் படிக்கிறேன், அவற்றில் கற்பனைகளே இல்லை, எல்லாம் உண்மைகள். குழந்தைகள் தமது மனப்பதிவுகள், உணர்ச்சிகள், இன்ப துன்பங்களைப் பற்றி

எழுத முடிந்தது குறித்து எனக்கு மகிழ்ச்சி. இந்தக் கட்டத்தில் எனது லட்சியம் அடையப்பட்டு விட்டது. எனக்கு எது மகிழ்ச்சி தருகிறது என்று என்னையும் எழுதச் சொன்னால் நான் இப்படி எழுதுவேன்: ''எனது ஆறு வயதுக் குழந்தைகளின் திறமை குறித்து, அதிசயம் நடந்தது குறித்து எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி!'' இதற்கு நிரூபணமாகக் குழந்தைகளின் 37 ஒளிவுமறைவற்ற கட்டுரைகளையும் காட்டுவேன்.

## ஆறு வயதுக் குழந்தைகளின் மகிழ்ச்சிகளும் வருத்தங்களும்

ஆனால் இந்த அதிசயம் எனக்கு வருத்தத்தையும் அளித்தது. எல்லாக் குழந்தைகளின் மனதும் அமைதியாக இல்லை, பலருக்குப் பல கஷ்டங்கள் உள்ளன என்பது எனக்குத் தெரியும், இதைப் பற்றி மறைக்காமல் குழந்தைகள் எழுதுவார்களென நான் எதிர்பார்த்திருக்க வேண்டும். என் அன்புச் சிறுவனே, சிறுமியே! உண்மையிலே இப்படிப்பட்ட துக்கமா உங்களை ஆட்கொள்கிறது?

''மலர்கள், பறவைகள், என் மாஷா பொம்மை எனக்கு மகிழ்ச்சி தருகின்றன. மாஷா புத்திசாலிப் பெண். நன்கு படிக்கிறாள், நான் சொல்வதைக் கேட்கிறாள். நாங்கள் சேர்ந்து தூங்குகிறோம், நான் அவளுக்குக் கதை சொல்கிறேன். விரைவில் அம்மா திருமணம் செய்து கொள்ளப் போகிறாள். இதில் எனக்கு சம்மதமில்லை. என்னை போர்டிங் பள்ளியில் சேர்க்கப் போவதாக அம்மா சொன்னாள். அங்கு நன்றாயிருக்குமாம். ஆனால் நான் அம்மாவுடன் இருக்க விரும்புகிறேன். இரவில் அம்மா தூங்கும் போது நான் விழித்தெழுந்து அழுகிறேன்.''

அந்தத் தாய்க்கு மகளின் இக்கட்டுரையைக் காட்டுவதா? நிச்சயமாகக் கூடாது! அவளை எனக்குத் தெரியும்—அவள் தன் விருப்பப்படி செயல்படக் கூடியவள், அவளது அழகால், மனதின் முரட்டுத்தனத்தையும் இரக்கமற்ற தன்மையையும் மூடி மறைக்க முடியாது. அவள் தன் மகளின் திறந்த மனதைப் பற்றி அறிந்தால், குடும்ப ரகசியத்தை வெளிப்படுத்தியதற்காக ஒருவேளை தண்டிக்கலாம். அத்தாயோடு கலந்து பேச வேண்டுமா? ஆம், கட்டாயம் பேச வேண்டும். போர்டிங்

பள்ளியில் மகளைச் சேர்க்காமலிருக்க ஒருவேளை அவளை ஒப்புக்கொள்ளச் செய்ய முடியலாம். தன் குழந்தை யின் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் பறித்துக் கொண்டு சொந்த மகிழ்ச்சியைப் பெற முடியாது என அவளுக்கு சொல் வேன். ஆறு வயதுச் சிறுமி தாயன்பு இல்லாமல் அவதியுறும் போது அது என்ன மகிழ்ச்சி? இன்னமும் தந்தையின் அன்பை யும் அரவணைப்பையும் உணராத ஒரு குழந்தையை மறுக் கும் ஆணிற்குப் பெண்ணின் அன்பைப் பெற அருகதையில்லை என்று சொல்லலாமா? என் அன்புச் சிறுமியே! சொந்தத் தாயின் தாக்குதலிலிருந்து உனது மென்மையான இதயத்தை என்னால் காப்பாற்ற இயலுமா?..

''எனக்கு எது மகிழ்ச்சி தருகிறது என்று என்னால் இன்னமும் சொல்ல முடியாது. அம்மா என்னை உலாவ அழைத்துச் செல்லும் போது மகிழ்ச்சியடைகிறேன். என் தாய் பத்திரிகைத் துறையில் இருக்கிறாள், எனக்கு ஏராள மான சுவாரசியமான விஷயங்களைச் சொல்கிறாள். ஆனால் அம்மா சில சமயங்களில் அழுகிறாள், இது எனக்கு வருத்தம் தருகிறது. அப்பா அம்மாவோடு சண்டை போட்டு, பிரிந்து செல்ல வேண்டும் என்கிறார். முன் போல் அப்பா என்னுடன் நட்புக் கொள்வதில்லை. இனி என்ன நடக்குமென எனக்குத் தெரியாது. இன்னொரு நகரத்திற்குப் போகலாம் என் கிறார் அம்மா. எனக்கு இதில் மிகவும் வருத்தம்.''

ஓ, சிறுவனே, நீ உன் அப்பாவை எப்படி நேசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். நீ அவரைக் கண்டு பெருமிதம் அடைகிறாய். ''என் அப்பா... நானும் அப்பாவும்... அப்பா சொன்னார்'' என்றெல்லாம் நீ அடிக்கடி பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். அந்த அப்பாவா உன்னுடன் அன்பாக நடந்து கொள்ள விரும்பவில்லை?! எளிதில் காயம் பட்டு விடக் கூடிய உன் இதயத்தை விடத் தன் சொந்த உணர்ச்சி களின் மீதா இந்த அப்பா அதிக அக்கறை காட்டுகிறார்?! இது சுயநலமல்லவா! உனது மேன்மை, அம்மாவின் மீது உனக்குள்ள பிடிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமலா இவர் உன் அம்மாவைத் தாழ்த்துகிறார்?! கண்டிப்பாக உனது இதயத்தின் இந்தக் கூக்குரலை உனது அப்பாவிற்குக் காட்டுவேன். ''அப்பாவாக இருப்பது என்றால் என்ன? உன் னால் என் இடத்தில் இருக்க முடியுமா? எனது மிக நெருங்கிய முதல் நண்பனாகத் திகழும் அப்பாவை இழப்பதை உன்னால்

தாங்க முடியுமா?'' என்று சில கேள்விகளை நீ உன் அப்பா விடம் கேள். உன்னால் அப்பாவிடம் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்க முடியுமா?

பெரியவர்களின் யோசனையின்மை, ஒழுங்கீனம், தம் குழந்தைகளின் பாலான கவனமின்மை முதலியவற்றை அம் பலப்படுத்த வல்ல கேள்விகளை ஏன் குழந்தைகளால் அவர் களிடம் கேட்க முடியாது? எனதருமை சக ஆசிரியர்களே, உங்கள் வகுப்பிலுள்ள ஒரு ஆறு வயதுக் குறும்புக்காரச் சிறுவன் ஒரு நாள் வகுப்பு முடிவில் எழுந்து தீவிர முகபாவத் துடன் பின்வரும் கேள்விகளை உண்மையாகக் கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்: ''ஏன் இப்படி தயாராகாமல் பாடம் நடத்த வருகின்றீர்கள்? ஏன் இந்த மாதிரி சலிப்பான, பழைய முறையில் பாடங்களை நடத்துகின்றீர்கள்? எங் களுடைய வளர்ப்பிற்கு ஏன் உங்களை நீங்களே முற்றிலு மாக அர்ப்பணித்துக் கொள்ளவில்லை? இது எவ்வளவு நாள் நீடிக்கப் போகிறது?'' நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒரு வேளை இப்படிச் சொல்வீர்களோ: ''ஏ, கள்ளப் பையனே! என்னோடு இப்படிப் பேச என்ன தைரியம் உனக்கு?'' இந்த நகைச்சுவையைக் கண்டு பொங்கியெழுந்திருப்பீர்களோ! இப்படி நீங்கள் செய்தால் அது முரட்டுத்தனமான நடவடிக் கையாக இருக்கும். மாறாக, வெட்கத்தால் தலை குனிந்து, முகம் சிவக்க, குற்ற உணர்வோடு ''இனி அப்படிச் செய்ய மாட்டேன், வேண்டுமானால் பாருங்களேன்'' என்று கூறுவது சிறப்பாக இருக்கும்.

அன்பான பெற்றோர்களே, இதே மாதிரியான உங்கள் குறும்புக்கார மகன் உங்களிடையே வேற்றுமைகளைக் கண் டுணர்ந்து பின்வருமாறு கூறினால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்: ''அன்புள்ள அப்பா! அம்மா! நான் ஒன்றும் உங்களுடன் வந்து ஒட்டிக்கொள்ளவில்லை. நீங்கள்தான் என்னைப் பெற்றெடுத்தீர்கள். எனவே தாயன்பிற்கும், தந் தையின் கவனிப்பிற்கும், குடும்ப மகிழ்ச்சிக்கும் எனக்கு உரிமையுண்டு. நான் மனதார, நெஞ்சாரத்தான் உங்களுடன் ஒன்றி விட்டேன்! எனது உரிமை, உணர்வுகள் மீது இரக்கம் காட்டுங்கள்!'' ''தேவையில்லாத விஷயத்தில் தலை யிடாதே! நாங்கள் எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டால் உனக்கென்ன?'' என்று ஒருவேளை நீங்கள் பதில் சொல்வீர்களோ! இதன் மூலம்

மகிழ்ச்சியாக, சந்தோஷமாக இருப்பதற்கு குழந்தைக்கு உள்ள மிகப் புனிதமான உரிமையை நீங்கள் மிதித்து அழிப்ப வர்களாவீர்கள். அல்லது ஒருவேளை தந்தை வெட்கத்தால் முகம் சிவக்க, தாய் கண்ணீர் சிந்த ''ஆம், மகனே, நாங்கள் உன் முன் குற்றமிழைத்து விட்டோம்! உனது உரிமையையும் உணர்வுகளையும் பற்றி மறந்து விடாமல், மேற்கொண்டு எப்படி வாழுவது என்று சிந்திப்போம்'' என்று மகனிடம் கூறியிருப்பீர்களோ!

அன்புள்ள ஆசிரியர்களே, பெற்றோர்களே, அஞ்சாதீர் கள்! இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை உங்களுக்கு எப்போதுமே ஏற்படாது, ஏனெனில், உங்கள் குழந்தை களுக்கு உரிமை உண்டு என்றாலும் இம்மாதிரியான கேள்வி களை எப்போதுமே கேட்க மாட்டார்கள். நாம் நமது குழந்தை வளர்ப்புப் பணியைச் செம்மையுறச் செய்ய வேண் டுமென அவர்கள் மட்டும் நம்மிடம் கண்டிப்பாகக் கோரி னால் நமது வாழ்க்கையின் பல சமூகப் பிரச்சினைகள் தீர்க் கப்பட்டு விடுமென நான் உறுதியாக நம்புகிறேன். நமது கெட்ட, சிந்தனையற்ற வளர்ப்பின் பயனாய் இன்றைய சிறு வர்களிலிருந்து சில சமயங்களில் துஷ்டர்களும் அறிவிலி களும் வளர்ந்தால் அதற்குக் காரணம் பெரியவர்களை, பொறுப்பற்ற வளர்ப்பாளர்களை, தாய் தந்தையரை உரிய தருணத்தில் ''திருத்த'' குழந்தைகளால் முடியாமல் போன தேயாகும். நம்மை நாமே கேள்விகளைக் கேட்டுக் கொள்ளு மாறு குழந்தைகள் நமக்குச் சொல்கின்றனர், இவர்களின் எதிர்காலம் இக்கேள்விகளுக்கான பதில்களைப் பொறுத் துள்ளது.

விரைவில் மணியடிக்கும். குழந்தைகள் அழகிய தாள் களை என் மேசை மீது அடுக்குகின்றனர்.

''நாளை எனக்குப் பிறந்த நாள். எனவே நான் மகிழ்ச்சி யடைகிறேன். நமது சிறுவர்களின் கெட்ட நடத்தை எனக்கு வருத்தம் தருகிறது. அவர்கள் நேற்று சண்டை போட்டுக் கொண்டு தாழ்வாரத்தில் ஒருவரையொருவர் அடிக்க ஆரம்பித்தனர். இப்படிச் செய்யலாமா?'' (இயா)

''குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட என்னை முற்றத் திற்கு அனுப்பும் போது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. எனக்கு நல்ல நண்பர்கள் உள்ளனர். எங்கள் வீட்டு முற்றம் பெரியது. ஆனால் அம்மா என்னை எப்போதாவதுதான்

விளையாட அனுப்புவார். ஐந்து நிமிடம் கழித்ததும் திரும்பக் கூப்பிடுவார். எனக்கு ஒரே வருத்தமாயிருக்கும்!'' (சூரிக்கோ)

''இன்றைய விழா எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. எனக்கு எல்லா எழுத்துகளும் தெரியும், என்னால் படிக்க முடியும். விரைவில் விடுமுறை வந்ததும் கிராமத்திற்குச் சென்று பாட்டி, தாத்தாவுடன் பொழுதைக் கழிப்பேன் என்பதும் எனக்கு சந்தோஷம் தருகின்றன. எது எனக்கு வருத்தம் தருகிறது என்று தெரியவில்லை. எங்கள் பக்கத்து வீட்டுக் காரர் இறந்தது எனக்கு வருத்தம் தந்தது. என்னோடு விளை யாட கீவி மாமாவிற்குப் பிடிக்கும், அவர் அன்பானவராய், சந்தோஷமானவராய் இருந்தார்.'' (தாத்தோ)

''அப்பா வெளியூர் வேலையை முடித்து விட்டுத் திரும்பி யது எனக்கு மகிழ்ச்சியாய் உள்ளது. அவர் குழந்தைகள் பாட்டிசைக் குழுவோடு பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருந் தார். எனக்கும் அம்மாவிற்கும் பாட்டிகளுக்கும் பரிசுகளைக் கொண்டு வந்தார். வீட்டில் ஒரே மகிழ்ச்சி. படிக்கக் கற்றுக் கொண்டதும் எனக்கு மகிழ்ச்சி தருகிறது. பாட்டிக்கு உடம்பு சரியில்லாதது எனக்கு வருத்தம் தருகிறது.'' (கோச்சா)

''முதலில், எனக்கு எதெல்லாம் மகிழ்ச்சி தருகிறது என்று சொல்கிறேன். பள்ளிக்கு என்னைக் கூட்டிச் செல்லும் போது சந்தோஷமாய் உள்ளது. பாடங்கள், நண்பர்கள், ஆசிரியர் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர்களைச் சந்திக்கும் போது நான் மகிழ்கிறேன். உடம்பு சரியில்லாமல் பள்ளிக்கு வராதிருந்த போது நான் மிகவும் வருத்தப்பட்டேன். மழை பெய்யும் போதும் எனக்கு வருத்தமாயிருக்கும். மழைக்காலம் எனக்குப் பிடிக்காது. அப்போது முற்றத்தில் விளையாட முடியாது.'' (தாம்ரிக்கோ)

''தேன்கோ ஒரு மிக அழகிய பேட்ஜை எனக்குப் பரி சளித்தான். தேன்கோ என்னை சந்தோஷப்படுத்தினான். தேன்கோ, உனக்கு நன்றி! அம்மாவும் என்னை சந்தோஷப் படுத்தினாள். சனிக்கிழமை என்னை உலாவ அழைத்து செல் வதாக அவள் கூறியிருக்கிறாள். நாங்கள் மலையில் ஏறுவோம். அப்பா நேற்று நேரங்கழித்து வந்தார், நான் தூங்கி விட் டேன். சீக்கிரம் வந்து என் சைக்கிளை ரிப்பேர் செய்து தரு வதாகச் சொல்லியிருந்தார். இது எனக்கு வருத்தமளித் தது.'' (வாஹ்தாங்)

இந்த அழகிய தாள்கள் எனக்கு எவ்வளவு விஷயங்களைச் சொல்கின்றன!..

இனிய, மின்சார மணி ஒலிக்கிறது.

''குழந்தைகளே, இரண்டு இரண்டு பேராக நில்லுங்கள்! உலாவச் செல்லலாம்!''

ஆனால் அங்கு என்ன நடக்கிறது? தேயாவைச் சுற்றிக் குழந்தைகள் கூட்டம். அவள் நாற்காலியில் உட்கார்ந்திருந்ததால் அவள் தலையே தெரியவில்லை. எல்லோரும் எதையோ பார்க்கின்றனர், எதைப் பற்றியோ விவாதிக்கின்றனர். சிலர் பின்னாலிருந்து குதிக்காலால் எம்பிப் பார்க்கின்றனர். சிறுவர்கள் சிறுமியரைத் தள்ளிக் கொண்டு தேயாவை நோக்கிச் செல்கின்றனர்.

''சாஷா! போய் என்ன விஷயமென்று பார்த்து விட்டுவா!''

''என்னவென்று எனக்குத் தெரியும்!'' என்கிறான் சாஷா. ''தேயா தன் முடிகளை எண்ணுகிறாள்!''

''என்ன?!''

''நேற்றும் அவள் தன் முடிகளை எண்ணினாள்.''

தேயாவை என்னிடம் கூப்பிடுகிறேன். குழந்தைகள் புடை சூழ அவள் என்னிடம் வருகிறாள்.

''தேயா, நீ என்ன செய்கிறாய்?''

''என் முடிகளை எண்ண விரும்புகிறேன். இதோ இவ்வளவு முடியை எண்ணி விட்டேன்.''

ரிப்பனால் கட்டப்பட்டுள்ள ஒரு பிடி முடியைக் காட்டுகிறாள்.

''இதில் 200 முடிகள் உள்ளன.''


தேயாவின் தலையில் எவ்வளவு முடி இருக்க முடியும் என்று குழந்தைகள் விவாதிக்கின்றனர்: 500, 1000, மில்லியன், டிரில்லியன்... இவை சிறுவர்களின் கணிப்புகள்.

''நீ முடியை எண்ணுவது நல்லதுதான். உன் தலையில் எவ்வளவு முடி உள்ளது என்று தெரிந்து கொள்வது சுவாரசியமாயிருக்கும். பூங்காவிற்குப் போகலாம் வாருங்கள். அங்கே தொடர்ந்து எண்ணலாம்.''

நானும் எனது குழந்தைகளும் அதிசய நாட்டில் வாழவில்லையா என்ன?

இன்று அரிச்சுவடி விழா!

வருக! வருக!
அரிச்சுவடி விழா.
கிறிஸ்த்மஸ் மரம் உண்டு.
தவறாது வாருங்கள்!
நேரம்




குழந்தைகளே ஒரு கெட்டியான காகிதத்தில் எழுதிய இந்த அறிக்கையை முன் மண்டபத்தில் மாட்டுகிறோம். அங்கு இதை எல்லோரும் பார்ப்பார்கள்.

அரிச்சுவடி விழா!
கவிதைகள், விடுகதைகள், பழமொழிகள்.
பாடல்கள், நடனம்.
தாள இசைக் குழு.
பெற்றோர்களுக்கு ரகசியம்.
இவையெல்லாம் உண்டு!
எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கின்றனர்.

இதுதான் எங்கள் சுவரொட்டி. இதைத் தாழ்வாரத்தில் உள்ள சுவரில் மாட்டுகிறோம். அருகே எழுத்துகளைப் பெரிதாக ஒட்டுகிறோம். உழைப்புப் பாடத்தில் குழந்தைகளே

இவற்றை உருவாக்கினார்கள். வகுப்பறையில் டெஸ்குகளை ஓரமாகப் போடுகிறோம். அவற்றிற்குப் பின் விருந்தினர்கள் அமர்வார்கள்.

எல்லாம் தயார்.

வலேரி மாமா இப்போது வர வேண்டும். அவர் எஞ்சிய 40 நிமிடங்களில் குழந்தைகளுடன் சேர்ந்து இசை நாடக ஒத்திகையை நடத்துவார்.

''ஏன் வலேரி மாமா வரத் தாமதமாகிறது? மணி என்ன?'' என்று லேலா கவலைப்படுகிறாள்.

''அவர் ஒன்றும் தாமதிக்கவில்லை. இதோ கடிகாரம், நீயே பார்!'' என்று நான் கைப்பையில் உள்ள கடிகாரத்தை எடுத்துக் காட்டுகிறேன். அவள் யோசித்தபடியே இதைப் பார்க்கிறாள்.

''கடிகாரத்தில் மணி பார்க்கவே எனக்கு முடிய மாட்டேன் என்கிறது. என்ன பண்ணுவதென தெரியவில்லை! எனக்குக் குழந்தை பிறந்து, 'மணி என்ன?' என்று கேட்டால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது, வெட்கமாக அல்லவா இருக்கும்?''

''ஏன் வெட்கமாயிருக்கும்? நான்தான் உங்களுக்கு இதைச் சொல்லித் தரவில்லையே!''

வலேரி மாமா வருகிறார். குழந்தைகள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அவரைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

''நான் வர மாட்டேன் என்றா நினைத்தீர்கள்? எங்கே தயாராகுங்கள்!''

குழந்தைகள் விரைவாக இரண்டு வரிசைகளில் அரை வட்டமாக நிற்கின்றனர். முதல் வரிசையில் நிற்பவர்கள் சிறு நாற்காலிகளில் அமருகின்றனர், அவர்கள் முன் உள்ள மேசைகளில் கிசிலாஃபான்களும் பேரிகைகளும் உள்ளன. மற்றவர்களின் கரங்களில் மற்ற இசைக் கருவிகள் உள்ளன.

''எதிலிருந்து துவங்குவோம்?'' என்று வலேரி மாமா கேட்கிறார்.

''விருந்தினர்கள் உள்ளே வந்ததும் வால்ட்ஸ் இசையோடு அவர்களை வரவேற்போம்.''

''எல்லாம் தயாரா...''

ஒத்திகை விரைவாக நடந்தது. இதனிடையே எங்கள் வகுப்பறை அருகே தாழ்வாரத்தில் நிறைய பெற்றோர்கள், தாத்தா, பாட்டிகள், பள்ளி ஆசிரியர்கள், பயனீர்கள் குழுமி

னர். வால்ட்ஸ் இசை ஒலிக்க, அவர்கள் வகுப்பறையினுள் நுழைந்து டெஸ்கிற்குப் பின் உட்கார்ந்த போது எல்லோருக்கும் இடம் போதாதது தெரிய வந்தது. சிலர் வகுப்பறையின் உள்ளும் சிலர் தாழ்வாரத்திலும் கூட நிற்க வேண்டியிருக்கும். வகுப்பறையில் நடப்பது வெளியில் உள்ளவர்களுக்கும் கேட்பதற்காகக் கதவை அகலத் திறந்தோம்.

''அன்புள்ள அப்பாக்களே, அம்மாக்களே, தாத்தா, பாட்டிகளே! அன்புள்ள விருந்தினர்களே! எங்களை நீங்கள் பாராட்டலாம். இன்று எழுத்துகளைப் படிப்பதை முடித்தோம், எங்களால் இப்போது புத்தகங்களைப் படிக்க முடியும்!'' என்று நாத்தோ முன் வந்து கம்பீரமாக இப்படிச் சொன்னாள். கர ஒலி.

லேரியும் சாஷாவும் கவிதைகளைப் படிக்கின்றனர்.

குழந்தைகள் வரிசையாக விடுகதைகளைச் சொல்லி தாமே உடனே விடைகளையும் சொல்கின்றனர்.

வாத்திய இசைக்குழு இசைக்கிறது, குழந்தைகள் பாட்டுப் பாடுகின்றனர். ஒருவர் பின் ஒருவராகப் பழமொழிகள், வசனங்களைச் சொல்கின்றனர்.

சோம்பேறி விவசாயியைப் பற்றி இலிக்கோ கதை சொல்கிறான்.

மீண்டும் இசைக்குழு வாசிக்கிறது.

சில குழந்தைகள் நடனமாடுகின்றனர், வேறு சிலர் நகைச்சுவைக் காட்சிகளை நடித்துக் காட்டுகின்றனர், சிரிப்புக் கதைகளைப் படித்துக் காட்டுகின்றனர்.

''இப்போது—நம் ரகசியம்! அன்புள்ள பெற்றோர்களே! உங்களுக்காக நாங்கள் பரிசுகளைத் தயாரித்துள்ளோம். இந்த பாக்கெட்டுகளில் உங்களுக்காக நாங்கள் தயாரித்த பொருட்கள் உள்ளன. நாங்கள் எப்படி எழுதுகிறோம் என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றீர்களா? நாங்கள் எப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளுக்குப் பதில் சொல்கிறோம் தெரியுமா? நாங்கள் எப்படி வரைகிறோம் தெரியுமா? எல்லாம் இந்த பாக்கெட்டுகளில் உள்ளன'' என்கிறாள் தேயா. கடைசி வாக்கியத்தை எல்லா குழந்தைகளும் சேர்ந்து சொல்கின்றனர். விருந்தினர்கள் கை தட்டுகின்றனர்.

குழந்தைகள் ''அன்பு அம்மா, அப்பாவிற்கு'' என்று எழுதப்பட்ட அழகிய பாக்கெட்டுகளைப் பெற்றோர்களுக்குத் தருகின்றனர்.

''விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழியுங்கள்!'' என்று நான் வாழ்த்துச் சொல்கிறேன்.

ஒவ்வொருவராக என்னருகே வந்து முத்தமிட்டு விடை பெறுகின்றனர்.

அம்மா, அப்பாக்களின் முகங்களில் திருப்திகரமான புன்னகை. வளர்ந்து விட்ட, படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்ட தம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவர்கள் மெதுவாக வகுப்பறையிலிருந்து வெளியேறுகின்றனர்.

## கசப்பான மனப் புண்

யாரோ ஒருவர் தன் மகனைப் பற்றி என்னுடன் பேசத் துவங்குகிறார். ''அதிகாரத் தொனியுள்ள அம்மாவிற்கு'' திருப்தியில்லை: ''என் மகன் ஏன் ஒரு தடவைதான் வாசித்தான்? ஏன் அவனுக்கு கிசிலாஃபானைத் தராமல் மரக் கரண்டிகளைத் தந்தீர்கள்?'' இக்குழப்பத்தில் ஒரு சிறுமியின் அழுகை என் காதுகளை எட்டுகிறது.

''இங்கே வா, ஏன் அழுகிறாய்?''

விழாவிற்கு அவளுடைய அம்மா வரவில்லை. அதனால்தான் அழுகிறாள். வருவதாகச் சொல்லியிருந்தும் வரவில்லை. எனவேதான் அவள் நடனமாடவில்லை. இதய வேதனை மகிழ்ச்சியில் திளைக்க விடவில்லை. அச்சிறுமி என்னோடு ஒட்டிக் கொண்டு அழுகிறாள். இதோ அம்மா வந்து விட்டாள். அவள் என்னை விட்டுப் பிரியவில்லை, அம்மாவை நோக்கிப் பாயவில்லை.

''போய் வருகிறேன்!'' என்று அமைதியாகச் சொல்லி விட்டு, கண்ணீரைத் துடைத்தபடி, அம்மாவிற்கான ரகசியத்தை (பரிசை) மறந்தபடி அல்லது விட்டு விட்டு அறையிலிருந்து வெளியேறுகிறாள்.

''என்னம்மா ஆயிற்று?'' என்று தன் அக்கறையையும் கவனிப்பையும் எனக்கும் மற்ற பெற்றோர்களுக்கும் காட்டும் முகமாக அம்மா கேட்கிறாள்.

ஆனால் அச்சிறுமி பதிலளிக்கவில்லை. ஒருவேளை அம்மா இப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறாளா இல்லையா என்று அவளுக்குக் கவலையில்லையோ, ஒரு வேளை இப்போது அம்மாவை விட்டுத் தள்ளி தொலைவில், போர்டிங் பள்ளியில் சேர விரும்புகின்றாளோ!

''என் மகன் மீது அதிக அக்கறை காட்டுங்கள்!—''

''அதிகாரத் தொனியுள்ள அம்மா'' என்னை விட்டு அகல வில்லை.

நான் அவள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. ஏனெனில், அரிச்சுவடி விழா முடிந்த உடனேயே, இந்த ''அதிகாரத் தொனியுள்ள அம்மாவின்'' கற்பனைக் குறைகளைக் கேட்பதை விட வேறு முக்கிய வேலைகள் எனக்கு வந்தன. தாழ்வாரத்தில் ஒரு சிறுவன் நிற்கிறான். அனேகமாக அவனும் தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்ல யாராவது வருவார்களெனக் காத்திருக்க வேண்டும். அவன் வீட்டிலிருந்தும் விழாவிற்கு யாரும் வரவில்லை. பெரும் கோபத்துடன் அவன் ஜன்னலருகே நிற்கிறான், இப்போது அவனைப் பார்த்தால் குழந்தையைப் போலவேயில்லை. பெரிய மனிதனின் கவலைகள் அவனிடம் நிறைந்துள்ளன. அவன் எதைப் பற்றிச் சிந்திக்கிறான்? ''அப்பா முன் போல் என்னுடன் நட்பாக இல்லை.''

ஏதோ ஒரு நபர் வருகிறார்: ''நான் உன்னைக் கூட்டிச் செல்ல வந்திருக்கிறேன். பெற்றோர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்''.

''இது என் மாமா!'' என்று சிறுவன் விளக்குகிறான், என்னிடம் விடைபெற மறந்து, சன்னலருகே உள்ள பெரிய பாக்கெட்டை மறந்து செல்கிறான்.

அந்த பாக்கெட்டில் எவை இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். அதில் அவன் எழுதிய எழுத்துகளின் மாதிரிகள், நூறு, ஆயிரம், மில்லியன் வரையில் அவன் போட்ட கணக்கு கள், வரை கணித வடிவப் படங்கள் (இவற்றில் முக்கோணங் கள், சதுரங்கள் தவிர கன வடிவங்களும் பிரமீடுகளும் கூட உள்ளன), இன்னும் சில படங்கள், மாடல்கள் முதலியன இருக்கின்றன. இவற்றில் ஒரு படம் மனிதனின் உடலாகும், இதில் ஒவ்வொரு உள் உறுப்பின் அருகேயும் அதன் பெயர் எழுதப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக அவன் இடை வேளைகளில் வகுப்பறையை விட்டு வெளியே செல்லாமல் ரகசிய பாக்கெட்டைத் தயாரித்தான். வீட்டிலிருந்து சுத்த மான தாள்கள், பசை, வண்ணப் பேனாக்கள், கத்தரிக் கோல் ஆகியவற்றைக் கொண்டு வந்தான். அவன் கணக்கு களைப் போட்டான், வரைந்தான், வெட்டினான்... சில நாட்களுக்கு முன் இதே போன்ற மனித உடலமைப்பு பற்றிய படத்தை எனக்குப் பரிசளித்தான்.

''வயிற்றில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியும்! இரைப்பையினுள் உணவு எப்படி வருகிறது, அங்கு ஜீரணம் எப்படி நடைபெறுகிறது என்று எனக்குத் தெரியும்...'' என்றான் அவன்.

''நீயா இதை வரைந்தாய்?''

''ஆமாம்.''

''இது என்ன?''

''இரைப்பை!''

''அது?''

''இதயம்... இது கல்லீரல்... இங்கே உணவு ஜீரணமாகிறது.''

''உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?''

''பாட்டி சொல்லித் தந்தாள். அவள் உயிரியல் விஞ்ஞானி.''

''மிக சுவாரசியமான படம்!''

''நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்... நான் இதை உங்களுக்காக வரைந்தேன்.''

''நன்றி!''

இதோ இந்தக் கனமான பாக்கெட்டை, ''பெற்றோர்களுக்கான ரகசியத்தை'' அவன் ஜன்னலருகே வைத்துச் சென்றுள்ளான். ஒருவேளை அவனுடைய ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ள இனி யாருமில்லையோ, தனது இதயத்தை, மனதைத் திறந்து காட்ட ஒருவருமில்லையோ?

மனிதர்களின் பரஸ்பரக் கவனமும் அக்கறையும்தான் துக்கத்தைத் தாங்கிக் கொள்ளவும் மனதால் வீழ்ந்து விடாமல் இருக்கவும் புதிய சக்தி பெறவும் ஒவ்வொருவருக்கும் உதவுகின்றன. பெற்றோர்களின் தீமையோடு கலந்த, குடும்ப மகிழ்ச்சி குலைவதுடன் தொடர்புடைய துக்கத்தை குழந்தை எப்படித் தாங்குவான்? இதைத் தாங்கவல்ல எந்த ஆசிரியரியல் விஞ்ஞானம் எனக்குத் துணை புரியும்? ஒருவேளை அன்பு, பாசம், நேசம், அக்கறை, கவனம் அல்லது கண்டிப்பு —இவற்றில் எது எனக்குக் கைகொடுக்கும்? அல்லது இங்கு வேறு ஏதாவது ஒரு விசேஷ அணுகுமுறை தேவையோ?

''கடினமான குழந்தைகள்'' என்றழைக்கப்படுபவர்கள் எப்படித் தோன்றுகின்றனர் என்பதன் அடிப்படைகளைக் கண்டுபிடிப்பதில் எவ்விதக் கஷ்டமும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாம்தான் அவர்களை அப்படி

ஆக்குகின்றோம். மனதைப் பாழ்படுத்தி, இதயத்தைப் பிழிந் தெடுக்க வல்ல துக்கம் குழந்தையை ஆட்கொள்ளும் போது அவனுக்கு எப்படி உதவுவது? எனது ஆயிரக்கணக்கான சக ஆசிரியர்களைப் போன்றே நானும் இவர்களின் மனதிலும் இதயத்திலும் ஏற்பட்டுள்ள வடுவைப் போக்கும் வழிகளைத் தேட வேண்டியதாகிறது. என்னால் இது முடியுமா?

## அத்தியாயம் ஐந்து

# பள்ளி நாளின் முழு இசைக் குறியீடு (122வது நாள்)

### இசையும் ஆசிரியரியலும்

அன்றாடம் காலை நான் பள்ளிக்குச் செல்லும் போது புதிய பள்ளி நாளுக்கான திட்டத்தை என்னுடன் எடுத்துச் செல்கிறேன். முதல் நாள் இரவு இதை நான் தயாரிப்பேன். முந்தைய நாட்களை நன்கு சீர்தூக்கிப் பார்த்து விட்டு, பின் எனது சின்னஞ்சிறு மாணவர்களின் அடுத்த தினத்தை எனக்கே உரித்தான போதனை நயங்களுடன் நான் கற்பனை யில் பார்ப்பேன். ஒவ்வொரு பள்ளி நாளையும் பற்றிய இந்த சிம்பனி இசை என் காதுகளில் இனிமையாக ஒலிக் கிறது. நாள் பூராவும் நான் குழந்தைகளுடன் எப்படிக் கலந்து பழகப் போகிறேன் என்பதும் அவர்களுடைய பள்ளி வாழ்வின் காட்சிகளும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

இதற்கெல்லாம் என்னை நானே தயார்படுத்திக் கொள் ளும் போது நான் மிகவும் ஒன்றிப் போவதால், யதார்த்தத் தில் இவற்றைச் சந்திக்கும் போது ஏதோ நன்கு பழக்கமான வற்றைச் சந்திப்பது போன்ற உணர்வு ஏற்படுவதால் உறுதி யோடு செயல்படுகிறேன். இந்த யதார்த்தத்தை எனது ஆசிரியரியல் எண்ணங்களைச் செயல்படுத்தும் களமாக நான் கருதுவதால் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக, சந்தோஷ மாக, உற்சாகமாகக் கலந்து பழகுகிறேன். இந்த யதார்த்தம் மானுட மனதை மேம்படுத்தப் போவதாக நான் கருதுவதால் முழுப் பொறுப்புணர்வோடு செயல்படுகிறேன்.

அடுத்த பள்ளி நாளைத் திட்டமிடுகையில் பார்க்கும் போது, என் வகுப்புக் குழந்தைகள் பெரியவர்களாகும் நிகழ்ச்சிப் போக்கை, அறிவையும் ஒழுக்க அடிப்படைகளை யும் கற்கும் பொருட்டு இவர்கள் முன்னோக்கி நடைபோடு வதை என் மனக் கண்ணில் காண விரும்புகிறேன். எனது போதனைமுறையை நாளைய தினத்தின் ஊடாகப் பார்த்து,

இதைப் புதுப்பிக்கவும் அதன் மூலம் என்னை நானே புதுப்பித்துக் கொள்ளவும், கடந்த காலத்திலிருந்து அல்லாமல் எதிர்காலத்திலிருந்து என் வகுப்பறையில் நுழையவும் நான் விரும்புகிறேன். நான் அடிக்கடி ஆசிரியரை எதிர்கால மனிதனாகத்தான் பார்க்கிறேன்.

> தன்னால் எவற்றையெல்லாம் இனி அடைய முடியாதோ அவற்றை நோக்கி தன் மாணவர்களைத் தள்ளுபவர் உண்மையான நவீன ஆசிரியர் அல்ல. தன் மாணவர்களை ஊக்குவித்து எதிர்காலத்திற்குத் தன்னுடன் அழைத்துச் செல்வதற்காக, எதிர்கால லட்சியங்களை நிலைநாட்ட இவர்களுக்குச் சொல்லித் தருவதற்காக அந்த எதிர்காலத்திலிருந்து ''வந்தவர்தான்'' உண்மையான நவீன ஆசிரியர்

என்று எனக்குத் தோன்றுகிறது.

கல்வி-வளர்ப்புப் பணியின் அன்றாட திட்டத்தை நான் ஏன் முழு இசைக்குறியீடு என்கிறேன்? இசை அகராதியிலிருந்து எடுக்கப்பட்ட இவ்வார்த்தை எனக்குப் பிடித்துள்ளதாலா?

ஆம், இச்சொல்லும் இதன் உள்ளடக்கமும் எனக்குப் பிடித்துள்ளது. ஒரு இசைக் குழு, பாட்டிசைக் குழு, வாத்திய இசைக் குழுவிற்கான இசை படைப்பின் எல்லா பாத்திரங்கள் அல்லது குரல்களுக்காகவும் எழுதப்பட்ட முழுப் பதிவை இது குறிக்கிறது. குழந்தைகளை வளர்த்து, அவர்களுக்கு கல்வி சொல்லித் தருவதற்கான எல்லா அவசியமான, சாத்தியமான விஷயங்களின் பதிவையும் நான் பள்ளி நாளின் முழு இசைக் குறியீட்டில் பார்க்கிறேன். இவ்விஷயங்களை நிறைவேற்றும் கலையை, திறமையை நான் இதில் பார்க்கிறேன்; இதையும் இசையுலகச் சொற்களால் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தலாம்.

கேள்வி கேட்பது, விளக்குவது, மனதில் பதியச் செய்வது, வீட்டு வேலை தருவது என்ற வழக்கமான பாணியில் நான் பாட திட்டங்களைத் தீட்டி வந்த எனது பழைய நடைமுறையை நினைத்து இப்போது வியப்படைகிறேன். மேற்கூறிய அம்சங்கள் ஒவ்வொன்றிற்காகவும் ஒரு சில கேள்விகளையும் வேலைகளையும் நான் யோசித்து வைப்பது வழக்கம். இதில் சிக்கலானது ஒன்றுமேயில்லையென பெரும்பாலும் நம்பினேன். பாடம் நடக்கும் போதே உள்ள நிலவரத்தைக்

கொண்டு அங்கேயே நேரடியாகக் கூடுதல் கேள்விகளையும் மற்ற வேலைகளையும் என்னால் சிந்தித்துக் கேட்க முடியாதா என்ன? உண்மையைச் சொன்னால், இத்தகைய மேற்போக்கான திட்டங்களுக்குக் கூட நான் எதிராக இருந்தேன்: ''இவையெல்லாம் எனக்கு எதற்கு? இவையெல்லாம் சம்பிரதாயமாயிற்றே! பூர்வாங்கத் தயாரிப்பின்றி ஆரம்ப வகுப்புகளில் எந்த ஆசிரியரால் பாடம் நடத்த முடியாது!''

ஆசிரியரியலில் எளிய விஷயங்களே கிடையாது என்று குழந்தைகளும் பள்ளி வாழ்க்கையும் எனக்குச் சொல்லித் தரும் வரை நான் இப்படி நினைத்தேன். குழந்தைகள்—எனது ஆசிரியர்கள். அவர்களுடன் கலந்து பழகுவது எவ்வளது சிக்கலானது என்று பல ஆண்டுகள் அவர்கள் எனக்குப் பொறுமையாகச் சொல்லித் தந்தனர். அவர்களை வளர்ப்பது எளிதாக வேண்டுமெனில், ஒவ்வொரு பள்ளி நாளையும் கண்டு அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டுமெனில், எனது முயற்சிகள் நல்ல பயன்களைத் தர வேண்டுமெனில் நாளைய தினத்தை நான் முன் கூட்டியே திட்டமிட வேண்டும், இயன்ற அளவு தெட்டத் தெளிவாக, செயல்முனைப்போடு இதற்குத் தயாராக வேண்டும் என்று புரிந்து கொண்டேன்.

ஆனால் இது மட்டும் போதாது. இதையெல்லாம் எப்படி நடைமுறையில் நிறைவேற்றுவது என்பதைப் பற்றியும் முன் கூட்டியே தீவிரமாகச் சிந்திக்க வேண்டும், ஏனெனில் குழந்தைகள் தாம் கற்றுக் கொள்ளும் விஷயங்களை, இவ்வாறு புதியவற்றை அறிவதை, தம் ஆசிரியரை எப்படி அணுகுகின்றனர் என்பது மேற்கூறியதைப் பொறுத்துள்ளது. விஷயங்கள் எவ்வளவு சுவாரசியமானவையாகவும் முக்கியமானவையாகவும் இருந்தாலும் இவற்றைக் குழந்தைகளுக்கு எப்படிச் சொல்லித் தருகின்றோம் என்பது பெரிதும் முக்கியமானது. ஆசிரியர் குழந்தைகளை நேசிப்பது மட்டும் போதாது, இந்த நேசத்தை வெளிப்படுத்தத் தெரிந்தவராயும் அவர் இருக்க வேண்டும். இதுதான் குழந்தைகளுக்கு வேண்டும். குழந்தை வளர்ப்புக் கலை, கல்வி போதிக்கும் கலை பற்றிச் சிந்திக்க வேண்டும். இதைப் பற்றி நேரடியாக பாடத்தின் போது சிந்திப்பதானது பிரதான பாத்திரத்தில் நடிக்கும் ஒரு கலைஞன் ரசிகர்களின் முன் மேடையில் எப்படி நடிக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தால் எப்படியிருக்குமோ அதே போல் இருக்கும். பள்ளி நாளின்

முழு இசைக் குறியீட்டில் அன்றைய தினத்திற்கான திட்டம் மட்டும் அடங்கியிருக்கவில்லை, குழந்தைகளின் மீது எப்படி அக்கறை செலுத்துவது, அவர்களுக்கு எப்படி சந்தோஷத்தை அளிப்பது, எனது ஆசிரியர் வாழ்க்கையில் நான் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றிய எண்ணங்களும் இவற்றில் அடங்கியுள்ளன.

இசையும் குழந்தை வளர்ப்பும்! இசையும் கல்வி போதனையும்!

இங்கே இசை எதற்கு?

ஆம், இசைத் தத்துவத்தால், குழந்தை வளர்ப்புத் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் மனிதாபிமான சாரத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்க முடியும். பள்ளி வாழ்க்கையை, குழந்தைகளுக்கு புத்தி சொல்லிக் கொடுப்பதற்காக ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் இடையில் நடக்கும் முடிவற்ற போராட்டமாகப் பார்க்காமல் நேர்மையான மனதையும் மென்மையான இதயத்தையும் படைக்கும் மாபெரும் இசைப் படைப்பாக ஏன் பார்க்கக் கூடாது? இந்த இசை பெரும்பாலும் ஓங்கியும் சில சமயங்களில் சுருதி தாழ்ந்தும் ஒலிக்கும், சோகமும் சில நேரங்களில் தலை தூக்கும். ஆனால் இந்த இசை கண்டிப்பான, அதிகாரத் தொனியிலான, பதட்டமான, எரிச்சலூட்டக் கூடிய, முரட்டுத்தனமான இசையாக இருக்கக் கூடாது. இப்படிப் பட்ட தன்மைகள் இசைக்குத் தேவையே இல்லை, ஆசிரியரியலுக்கும் இவை அவசியமில்லை.

இசை மானுட மனதில் உள்ள மனிதாபிமானத்தின் அடிப்படை. பள்ளி நாளின் முழு இசைக் குறியீடுகளுடன் குழந்தைகளை நோக்கிச் செல்லும் ஆசிரியர், இந்த இசையைக் கேட்கும் போது, குழந்தை வளர்ப்பு எனும் மந்திரக் கோலோடு தான் நிற்பதைக் கற்பனை செய்து பார்க்கையில், தன்னைத் தானே குழந்தைகளுக்கு அர்ப்பணித்துள்ளதில் தான் குழந்தை வளர்ப்பின் ரகசியம் உள்ளது என்று நம்பும் போது—இதை விட ஆசிரியருக்கு வேறு மகிழ்ச்சி இருக்க முடியாது.

ஒரு ஆசிரியர் தீய எண்ணங்களோடு பள்ளிக்குச் செல்லாமலிருப்பது நல்லது, அப்போதுதான் குழந்தைகளின் மனதைப் பாழ்படுத்தாமலிருக்கலாம்; தெளிவான லட்சியங்களும் வளர்ப்பு எண்ணங்களும் இல்லாமல் பள்ளிக்குச் செல்

லாமல் இருப்பது நல்லது, அப்போதுதான் மலைப்பையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் விஷயங்களைக் குழந்தைகள் மீது திணிக்காமல் இருக்கலாம்; நேற்றைய தினத்திலிருந்து, தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளாமல் பள்ளியினுள் நுழையாமலிருப்பது நல்லது, அப்போதுதான் சலிப்பையும் ஒரே மாதிரியான அலுப்பேற்படுத்தும் தன்மையையும் விட்டொழிக்க முடியும்; ஆசிரியரியல் மீது நம்பிக்கையின்றி குழந்தைகளிடம் வராமலிருப்பது நல்லது, அப்போதுதான் தம் மீதும் தம் ஆசிரியர் மீதும் உறுதியின்மையை அவர்கள் மனதில் விதைக்காமலிருக்கலாம். இதெல்லாம் நல்லது, ஏனெனில் ஆசிரியர் என்பவர் ஒவ்வொரு குழந்தையின் மன நிலையின் துவக்கத்தில் நிற்கிறார், தன் சொந்தக் கரங்களால், தன் நடவடிக்கையால் எதிர்காலத்திற்கான அஸ்திவாரத்தை இடுகிறார். உற்சாகம், உறுதி, அர்ப்பணிப்பு இல்லாமல் எதிர்காலத்திற்கான அஸ்திவாரத்தை அமைக்க முடியாது.

நான் பாடவேளைகளுக்கு மட்டுமின்றி, பள்ளி நாள் முழுவதற்குமான முழு இசைக் குறியீட்டை உருவாக்குவதையே விரும்புகிறேன். பாடங்கள்தான் பள்ளி நாளின் அடிப்படை என்பதில் சந்தேகமில்லை, ஆனால் குழந்தைகள் பாடங்களுக்காக மட்டுமே பள்ளிக்கு வரவில்லை என்பது தெளிவு. இவர்கள் இடைவேளைகளுக்காகவும், பள்ளியில் தங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் புதியவற்றிற்காகவும், ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளவும், ஆசிரியரைச் சந்திக்கவும், பொதுவில் சுவாரசியமான பள்ளி விஷயங்களுக்காகவும் பள்ளிக்கு வருகின்றனர். பாடவேளைகளில் மட்டுமின்றி பள்ளி வாழ்க்கைச் சூழல் முழுமையாலும் பள்ளியில் கலந்து பழகுவதாலும் பள்ளி விஷயங்களாலும் குழந்தைகள் வளர்க்கப்படுகின்றனர்.

> பாடவேளைகளின் உணர்ச்சி பூர்வமான சூழல், புதியவற்றை அறியும் ஆர்வமும், இவர்களுடைய பள்ளி நாள் முழுவதும் எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து அதிகரிக்கின்றன அல்லது குறைகின்றன

என்று என் நடைமுறை எனக்கு காட்டுகிறது.

இளமைப் பருவத்தில் எனக்கு சாதாரணப் பாடத் திட்டங்களுடன் வகுப்பறையினுள் நுழையும் துணிவு இருந்தது,

இதில் விசேஷப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது, மற்ற வற்றை நடைமுறையே சொல்லுமென நம்பினேன்; இப் போதோ, பல்லாண்டு அனுபவத்திற்குப் பின் ஏதோ பள்ளி நாட்களின் முழு இசைக் குறியீடுகளைப் பற்றிப் பேசு கிறேன். இது விந்தையில்லையா? எப்படியோ, எனக்குத் தெரியாது. இதில் எந்த வித விந்தையையும் நான் பார்க்க வில்லை. எப்படி சிறப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் கலந்து பழகுவது என்று பூர்வாங்கமாக சிந்திக்காமல் என் சின்னஞ்சிறு மாணாக்கர்களைச் சந்திக்க நான் அஞ்சுகிறேன். கண்மூடித்தனமாக வளர்த்து, கல்வி போதிக்கப் பயப்படு கிறேன். எனது முழு அறிவையும் அனுபவத்தையும் பயன் படுத்தாமல் கலந்து பழக அஞ்சுகிறேன். இது தவிர, அப் போது எனக்கு இது ஒரு மகத்தான, ஈடு இணையற்ற ஆசிரி யரியல் இசை, இதற்கு என்னிடமிருந்து பெரும் தொழில் திறமையும் அற்புதமான வழிமுறைகளும் தனிப்பட்ட ரச னைகளும் மனிதாபிமானமும் தேவை என்பதெல்லாம் முழு மையாகப் புரியவில்லை.

பாடங்கள் பள்ளி நாளின் முழு இசைக் குறியீட்டின் ஓர் அங்கம். சிம்பனி இசையைப் போன்றே இப்பாடங்களில் தலைப்புகள் உருவாக்கப்படுகின்றன, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. எப்படிப்பட்ட தலைப்புகள்? என்ன மாதிரியான பிரச்சினைகள்? முன்னர் பாடத் திட்டங் களை உருவாக்கும் போது, உதாரணமாக, பின்வருமாறு என்னால் எழுத முடிந்தது: ''பாடத் தலைப்பு—பத்திற்குள் கூட்டலும் கழித்தலும்''. இத்தலைப்பின் அடிப்படையில் நான் பாடத்தைக் குழந்தைகள் கிரகிக்குமாறு செய்தேன், தலைப்போடு சம்பந்தப்படாத மற்றவற்றின் மீது அவர் கள் கவனம் திசை திரும்பாதவாறு சகல விதங்களிலும் காத்தேன். கூட்டல், கழித்தல் பாடத் தலைப்பிற்கும், வாழ்க் கையில் புதிதாக என்ன நடந்தது, முந்திய நாள் அவர்கள் எதன் மீது அக்கறை காட்டினர் என்ற பேச்சிற்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமா என்ன! குழந்தைகள் நேற்று எப்படித் தூங்கினார்கள், தொலைக் காட்சியில் என்ன பார்த் தார்கள், புதிதாக என்ன தெரிந்து கொண்டார்கள், வீட்டில் யாருக்கு உடல் நிலை சரியில்லை என்பவை எல்லாம் எனக்கு எதற்கு?

இவையெல்லாம் அப்போது எனக்கு உண்மையிலேயே

தேவையற்றவையாக, பாடங்களுடன் சம்பந்தப்படாதவை யாகத் தோன்றின, எனக்கு ''சின்ன விஷயங்கள்'' என்று தோன்றிய இவற்றின் மீது கவனத்தை சிதறடிக்காமலிருக்க நான் முயன்றேன். வகுப்பறையில் குழந்தை நுழையும் போது தன் மகிழ்ச்சி, ஏமாற்றம், புத்தம்புது மனப்பதிவுகள், இன்ப துன்பங்கள் ஆகியவை அடங்கிய தன் வாழ்வை பள்ளிக்கு வெளியே வைத்து விட்டு வர வேண்டும், வகுப்பில் நான் சொல்லித் தருவதன் மீது மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று நான் பாடுபட்டேன். குழந்தை யின் கவனம் திசை திரும்புகையில், சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கையில் ''என்ன யோசனை'' என்று என்னால் கண்டிப் புடன் அவனைக் கேட்க முடிந்தது. பையிலிருந்து ஒரு சிறு போர்வீரன் பொம்மையை எடுத்து அவன் விளையாடுவதைப் பார்த்து ''என்ன இது? பாடவேளையில் என்ன செய்கிறாய்?'' என்று என்னால் கூற முடிந்திருந்தது. இப்பொம்மையைக் குழந்தையிடமிருந்து பிடுங்கிக் கொண்டு பெற்றோர்களைக் கூட்டி வரும்படி சொல்ல முடிந்தது; ''உங்கள் பையன் பையில் எதை வைக்கிறான் என்று நீங்கள் ஏன் பார்ப் பதில்லை? பாடவேளையில் அவன் கவனம் திசை திரும்பு கிறது'' என்று பெற்றோர்களிடம் கூற முடிந்தது.

ஆம், என்னால் முன்னர் இப்படியெல்லாம் நடக்க முடிந் தது. ஏனெனில், நான் பின்வருமாறு நினைத்தேன்: ''பாடங் கள் என்பது அன்றாட வாழ்விலிருந்து குழந்தையின் கவனத்தைத் திசை திருப்பும் உயர் வடிவமாகும். குழந்தை வகுப்பறையில் நுழைந்து விட்டானா? அவ்வளவுதான். படி! வேறெதையும் நான் ஒப்புக் கொள்வதில்லை!'' ஆனால் இன்று, பல்லாண்டுகளுக்குப் பின் நான் இப்படி நடப் பதில்லை. நான் மாறி விட்டேன், என் போதனைமுறையும் மாறி விட்டது.

அன்புக் குழந்தைகளே! உங்களுக்கு நன்றி! நான் ஆரம்ப வகுப்புகளில் உங்களை வளர்த்தேன். உங்களுடைய ஒவ் வொரு தலைமுறையும் தன் ஆலோசனைகளையும் எச்சரிக் கைகளையும் எனக்கு விட்டுச் சென்றுள்ளது. நான்காண்டு களில் நான் உங்களுக்குப் படிக்க, எழுத, கணக்குப் போட சொல்லித் தந்துள்ளேன், உங்களுக்குப் படிப்பு சொல்லித் தந்தேன், பின், நீங்கள் எப்படி மாறி, வளர்ந்து விட்டீர் கள் என்று ஆச்சரியப்பட்டேன். அனேகமாக, உங்களுக்கு

நான் படிப்பு சொல்லித் தருவதை விட என்னை மாற்றி யமைப்பது உங்களுக்குக் கடினமாக இருந்திருக்கலாம். ஆம், ஆசிரியர்களாகிய நாங்கள் இப்படிப்பட்டவர்கள். ஒரு மாதிரி வேலை செய்யப் பழகி விட்டால், எங்களது வேலை முறை ஒரு தடவை நடைமுறையில் சரியென நிரூபிக்கப்பட்டு விட்டால், நாங்கள் தப்பே செய்யவில்லை என்றும், கல்வியிலும் குழந்தை வளர்ப்பிலும் சிகரத்தை எட்டி விட்டதாயும் எண்ணுகிறோம், ''எங்கள் போதனைமுறையை'', ''எங்கள் கோட்பாடுகளைக்'' கண்டு பெருமிதம் கொள்கிறோம். ஆசிரியர்களாகிய நாங்கள் எவ்வளவு எளிமையானவர்கள், பார்த்தீர்களா? தன் நடைமுறையில் மூடி மறைந்து கொள்ளும் ஆசிரியர் உங்களை — குழந்தைகளை — வளர்த்து, கல்வி போதிப்பதில் எப்போதாவது சர்வபொது வழிகளைக் கண்டுபிடிப்பாரென எண்ணலாமா என்ன? நீங்கள் வாழ்க்கையின் உருவகம்! இவ்வாழ்க்கையோ ஒரு நொடிப்பொழுது கூட நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

வாழ்க்கை இப்படி நிற்காமல் ஓடும் போது, இது இப்படிச் சுற்றிலும் எல்லாவற்றையும் மாற்றும் போது, நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் இப்படி புதிதாகி வரும் போது, உங்களது திறமைகளாலும் வாய்ப்புகளாலும் இப்படித் திக்குமுக்காடச் செய்யும் போது, ஏராளமான ஆறு வயதுக் குழந்தைகள் இப்படி உற்சாகமாகப் பள்ளிக்குப் பாய்ந்து வந்து பல்லாயிரக் கணக்கான வகுப்பறைகளில் உட்கார்ந்திருக்கும் போது, எவ்வித இயக்கமும் மாற்றங்களும் இன்றி தன் அறிவுச் சிகரத்தில் அப்படியே உட்கார்ந்திருக்க ஆசிரியருக்கு என்ன உரிமையுள்ளது? மாறாக, ஆசிரியர் எப்போதும் நாளைய தினத்தை நோக்கி, நாளைய மறுதினத்தை நோக்கிச் செல்ல வேண்டும், உங்களுடைய நாளைய தினத்தை சுவாசிக்க வேண்டும், உங்களை நீங்களே புதுப்பித்துக் கொள்வது போல் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ள வேண்டும், இப்படித்தான் உங்களைச் சந்திக்கப் பள்ளிக்கு வர வேண்டும். மாறுவது, தேக்கமுற்ற மாதிரிகளிலிருந்து விடுபடுவது ஆசிரியர்களாகிய எங்களுக்குப் பல நேரங்களில் அவ்வளவு சிக்கலாக இருக்கிறதே, என்ன செய்ய? எங்கே எல்லாம் மிகவும் கொதிக்கின்றதோ, எவ்வளவு முனைப்பாக இயங்குகிறதோ அங்கே நாங்கள் அமைதியான வாழ்க்கையைத் தேடுகின்றோமா என்ன? சோவியத் ஆசிரியர்

பி. பிளோன்ஸ்கி அரை நூற்றாண்டுக்கு முன் எங்களை நோக்கி கேட்ட கேள்வி எனக்கு எப்போதுமே ஆழ்ந்த மனப் பதிவை ஏற்படுத்துகிறது. ''பள்ளியைப் புதுப்பிப்பதில் அடிக் கடி நீயே முக்கியத் தடையாக இருக்கின்றாயா இல்லையா என்பதைப் பார்த்துக் கொள்'' என்று அவர் ஆசிரியர்களைப் பார்த்துச் சொன்னார். இல்லை, இப்படி இருக்கக் கூடாது! வாழ்க்கையைப் படைக்க வேண்டிய ஆசிரியர் விருப்ப மின்றியோ, தெரியாமலேயோ, அன்பாலோ, உறுதியோடோ வாழ்க்கைப் போக்கின் வேகத்தைக் குறைக்கக் கூடாது, குழந்தைகளின் முன்னோக்கிய அணிநடையைத் தாமதப் படுத்தக் கூடாது! எனவே, ஆசிரியர் தன் அனுபவத்தை (இது இருபதாண்டு, நாற்பதாண்டு அனுபவமாயிருந்தாலும் கூட) ஏதோ முழுமை பெற்ற ஒன்றாக, ஒவ்வொரு முறை யும் குழந்தைகளைச் சந்திக்கும் போது செழுமைப்படுத்தத் தேவையில்லாத ஒன்றாகக் கருதக் கூடாது. குழந்தைகளே! அப்படியே யாராவது தேக்கமுற்று நின்றாலும், நீங்கள் உறுதியாக நின்று, உங்களைப் புதிய முறையில் பார்க்க உத வுங்கள்! உங்களை வளர்த்து, கல்வி போதித்து, மனிதர் களாக்கும் எனது நல்லெண்ணங்களுக்கு இடையூறாக நிற்கும் ஒரு சக்தியாகத்தான் நான் நீண்ட காலமாக உங்களைப் பார்த்து வந்தேன். உங்களை வளர்ப்பதில் நீங்களே என் உதவியாளர்கள் என்று கண்டுகொள்ள ஒரு சில தலைமுறை கள் தேவைப்பட்டன.

> தன் வாழ்வின் அதிக சுவாரசியமான, முனைப்பான இயக்கத்திற்கான சூழ்நிலைகளைக் குழந்தை பாடங் களில் கண்டால் இவற்றை நோக்கிக் கவர்ந்திழுக்கப் படுவான்

என்பதை நான் அறிந்து கொண்டேன்.

என் வகுப்புகளில் எந்தத் தலைப்பு ஒலிக்கிறது? ஆம், முக்கியமான தலைப்பு ஒன்று உள்ளது: இது குழந்தைகளின் வளரும் வாழ்க்கை, இவர்கள் வளர்ந்து பெரியவர்களாவது. இன்றைய பாடங்களை மட்டுமின்றி 170 பள்ளி நாட்களின் எல்லா 680 பாடங்களையும் முன் நிர்ணயிக்கும் இத்தலைப் பை எப்படிக் குறிக்கலாம்? அனேகமாக, குழந்தைகளின் செழுமையான, பன்முக வாழ்விலிருந்து, பாடங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய அடிப்படையைத் தனித்துப் பிரிக்க வேண்டும். குழந்தையின் மனநிலை; புதியவற்றை

அறியும் ஆர்வம், இந்த ஆர்வம் வெளிப்படும் வடிவங்கள்— ''சுயமாகத் தேடிக் கண்டுபிடிப்பது'', ''இரகசியங்களைக்'' கண்டுபிடிப்பது, பிரச்சினையை சுயமாகத் தீர்ப்பது, ''கடினமான'' கணக்குகளைப் போடுவது, ஆசிரியரின் ''தவறுகளைத்'' திருத்துவது, சொந்தக் கருத்தை வலியுறுத்துவது போன்றவை—இந்த அடிப்படையாகும்.

குழந்தைகள் திறமைகளைக் கற்றுக் கொள்ளவும் வளர்ச்சியுறவும் பெரும் பொறுமையும் நிதானமான உழைப்பும் தேவைப்படும். ஆனால் இந்த உழைப்பு பொதுவான முன்னோக்கிய அறிதல் நடவடிக்கையில் ஒன்றிணைந்து, வெற்றியினால் ஊக்குவிக்கப்படும் போது குழந்தைகளால் நல்லபடி ஏற்றுக் கொள்ளப்படும்.

இவை நான் முன்மொழியும் போதனைமுறைக் கோட்பாடுகளின் அடிப்படையாகும்.

கல்வி போதிப்பது பற்றிய தத்துவத்தில் புதிய போதனைக் கோட்பாடுகளை முன்மொழிவது சாதாரணமானதா? அனேகமாக, கீழே குறிப்பிடப்படவிருக்கும் கருத்துநிலைகள் புதியவையாக இல்லாமலிருக்கலாம், ஆனால் இவற்றை போதனைக் கோட்பாடுகளாக்குவதை சந்தேகத்தோடு பார்க்கலாம். போதனைமுறை கோட்பாடுகளை வரையறுக்க இதுவரை உறுதியான கோட்பாடு இல்லாததால் மூன்று கோட்பாடுகளைத் துணிவோடு முன்மொழிகிறேன்.

## பாடவேளையின் போது குழந்தையின் வாழ்க்கையைத் தொடரும் கோட்பாடு

குழந்தை தன் மனப்பதிவுகளை, இன்ப துன்பங்களைப் பள்ளிக்கு வெளியே வைத்து விட்டு, படிக்க வேண்டுமென்ற தூய எண்ணத்தோடு வர முடியாது. எனவே, தான் குழந்தைக்கு படிப்பு சொல்லித் தர ஆரம்பிக்கும் போது, அந்த நிமிடம் முதல் குழந்தை தன் இன்ப துன்பங்களை மறந்து விடுவான் என்றோ, பால்கனியிலோ கொட்டடியிலோ உள்ள சைக்கிளில் சவாரி செய்யும் கற்பனையை விட்டு விடுவான் என்றோ, நேற்று குடும்பத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியை நினைவிலிருந்து அகற்றியிருப்பான் என்றோ, பையில் உள்ள போர்வீரன் பொம்மையை விட்டு எண்ணத்தை அகற்றுவான் என்றோ, நேற்று தாத்தா சொன்ன சுவாரசியமான

கதையை முற்றிலும் மறந்து விடுவான் என்றோ எந்த ஒரு ஆசிரியரும் ஒருபோதும் நினைக்க வேண்டாம். இவையெல்லாம் குழந்தையின் வாழ்க்கை. சம்பவங்கள், மனப்பதிவுகள், இன்ப துன்பங்களைத் தற்காலிகமாக மறக்கலாம், ஆனால் எல்லாவற்றையும் மறந்து விட்டு, வேறு எதையாவது ஒன்றை அறிவதில் முழுக்க முழுக்க ஈடுபடுவது என்பது எளிய காரியமல்ல. என் அன்பு சக ஆசிரியரே! குழந்தையின் கையிலிருந்து போர்வீரன் பொம்மையை ஏன் பிடுங்க வேண்டும்? அவன் அதை வைத்துக் கொண்டு பாடவேளையின் போது விளையாடக் கூடாது என்பதற்காகவா? அதன் அதிக கவனமுள்ளவனாகி, சிந்தனையை ஒருமுனைப்படுத்த வேண்டும் என்பதற்காகவா? இது நல்ல எண்ணம்தான் என்பதில் சந்தேகமில்லை, அந்தப் போர்வீரன் பொம்மையைக் குழந்தையிடமிருந்து பிடுங்குவதிலும் எவ்விதக் கஷ்டமும் இருக்காது, புருவத்தை உயர்த்தி, ''அதை என்னிடம் தா'' என்றோ, இதைப் போன்று வேறு எதையாவது சொன்னாலே போதும். ஆனால் அப்பொம்மையைப் பிடுங்குவதால் உண்டான ஏமாற்றத்தை, இதைப் பற்றிய கவலையை இதே போல் வெற்றிகரமாக அவன் தலையிலிருந்து வெளித் தள்ள முடியுமா! இதைப் பற்றி யோசிப்போம்!

ஒருவேளை நாம் இப்படியெல்லாம் செய்திருக்க வேண்டாமோ? அந்தப் பொம்மை குழந்தையின் பையிலேயே இருக்கட்டும், அவன் கற்பனையில் சைக்கிள் சவாரி செய்யட்டும், நேற்று தாத்தா சொன்ன கதையைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கட்டும்! ஒவ்வொரு குழந்தையும் தன் முழு வாழ்க்கையோடு பள்ளிக்கு வரட்டும். அவர்கள் மனதில் உள்ளதை என்னுடன்—தங்கள் ஆசிரியருடன்—பகிர்ந்து கொள்ளுமாறு அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வேன்.

அப்போது, பாடவேளையின் போது (அது எந்தப் பாடமாக இருந்தாலும் சரி) இலிக்கோ நேரடியாகத் தன் பையிலிருந்து போர்வீரன் பொம்மையை எடுப்பான். நான் அவனைப் பெரிதும் சுவாரசியமாகப் பார்ப்பேன். ''எவ்வளவு நன்றாக உள்ளது! உன்னிடம் இது மாதிரி ஒரு பொம்மை தான் உள்ளதா? வேறு இருக்கிறதா? வேண்டாம், அதை எனக்குப் பரிசளிக்காதே! உன்னிடமுள்ள போர்வீரன் பொம்மைகள் எல்லாவற்றையும் கொண்டு வா. இவற்றோடு விளையாடுவது சுவாரசியமாக இருக்கும்!'' இலிக்கோவிற்குத்

திருப்தியாக இருக்கும், நாளையே அவன் தன் போர்வீரன் பொம்மைகள் எல்லாவற்றையும் கொண்டு வருவான். நான் இதற்கேற்ற ஒரு கதையைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் சொல்வேன்.

கீகா, தன் அப்பா அலுவல் பயணத்திலிருந்து திரும்பிய தாகச் சொல்லி என்னை சந்தோஷப்படுத்துவான். ''அவர் எனக்கு ஏதோ பரிசு கொண்டு வந்தார், ஆனால் அது என்ன என்று எனக்குத் தெரியாது. அவர் களைத்துப் போயிருந் தார், பெட்டியைத் திறக்கவும் என்ன பரிசு என்று சொல்ல வும் விரும்பவில்லை. 'இது என் ரகசியம்' என்றார் அப்பா. பள்ளியிலிருந்து திரும்பியதும் அப்பா என்ன கொண்டு வந்தாரென அறிவேன்.'' ''பிறகு என்ன என்று சொல்வாயா? அது விளையாட்டு சாமானாக இருந்தால் எங்களுக்கு விளை யாடத் தருவாயா?''

ஏல்லா, நேற்று இரவு தனக்குத் தங்கை பிறந்ததாக மகிழ்ச்சியோடு அறிவிப்பாள். அப்பா மிகவும் பதட்டமா யிருந்தார், எல்லோரும் மகப்பேறுமனைக்குச் சென்றதால் அவள் மட்டும் வீட்டில் தனியே இருந்தாளாம். அவள் தூங்கி விட்டதால் அவளுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. இன்று காலை அப்பா, ''உனக்குத் தங்கை பிறந்திருக் கிறாள்'' என்றார்.

''அவளுக்கு என்ன பெயர் வைத்திருக்கின்றீர்கள்?'' என்று குழந்தைகள் கேட்பார்கள்.

''இன்னமும் யோசிக்கவில்லை.''

''ஏல்லாவின் தங்கைக்கு என்ன வாழ்த்து சொல்ல லாம்?'' என்று குழந்தைகளைக் கேட்பேன்.

''அவள் வளர்ந்து பெரியவளாகட்டும்!''

''அவள் அழகானவளாக, புத்திசாலியாக இருக்கட்டும்!''

''அன்பானவளாக, மென்மையானவளாக இருக்கட்டும்!''

''தன் பெற்றோர்களை நேசிக்கட்டும்!''

''தன் அக்காவையும் நேசிக்கட்டும்!''

''சொன்ன சொல்லைக் கேட்டு நடக்கட்டும்!''

''நன்றாகப் படிக்கட்டும்!''

''அவள் நம் வகுப்பில் படிக்கட்டும்!''

''ஏல்லா! உன் தங்கைக்கு எங்கள் நல் வாழ்த்துகளைச் சொல்!'' என்று மகிழ்ச்சியாலும் திருப்தியாலும் முகம் சிவந்த சிறுமியிடம் கூறுவேன்.

ஏல்லா புன்முறுவல் செய்வாள்.

''அவளுக்குப் புரியாது, அவள் மிகச் சிறியவள்!..''

''நீ எல்லாவற்றையும் நினைவில் வைத்து, அவள் பெரியவளானதும், அவள் பிறந்த செய்தி இன்று நாம் அனைவருக்கும் எவ்வளவு மகிழ்ச்சியளித்தது என்று சொல்!''

சூரிக்கோ, தன் தாத்தாவிற்கு நேற்று மாரடைப்பு ஏற்பட்டதாயும் அவசர மருத்துவ உதவியைக் கூப்பிட்டதாயும் கூறுவான். வீட்டில் யாருமே இரவு பூராவும் உறங்கவில்லை. ''கவலைப்படாதீர்கள், எல்லாம் சரியாகி விடும்'' என்று தாத்தா எல்லோரையும் சமாதானப்படுத்தினார். தன் தாத்தாவை அவன் எப்படி நேசிக்கிறான் என்று சூரிக்கோ கூறுவான். ''அவர் மிகச் சிறப்பாகக் கதை சொல்லுவார். வேண்டுமானால் சொல்லுங்கள், அவருக்கு உடல் நிலை சரியானதும் அவரைப் பள்ளிக்கு அழைத்து வருவேன், அவர் எல்லோருக்கும் கதை சொல்வார்.'' இன்று காலை தாத்தா தன்னை முத்தமிட்டதையும், அம்மா மீண்டும் அவசர மருத்துவ உதவி கோரி டெலிபோன் செய்ததையும் சூரிக்கோ நினைவு கூர்வான். என் முகத்திலும், மற்ற குழந்தைகளின் முகங்களிலும் சோகம் படரும். அவர் விரைவில் உடல் நலம் பெற எங்கள் வாழ்த்துகளை அவருக்குச் சொல்லுமாறு கேட்டுக் கொள்வோம், பள்ளிக்கு வந்து எங்களுக்குக் கதை சொல்லுமாறு அழைப்பு விடுப்போம், நாங்களே தயாரித்த பட அட்டைகளை அவருக்குப் பரிசாக அளிப்போம்.

இலிக்கோ திருப்தியடைவான், கீகா அமைதியாவான், ஏல்லாவிற்கு மகிழ்ச்சி அதிகமாகும், சூரிக்கோ நிம்மதி அடைவான்.

இந்தப் பாடங்களில் இல்லாமல், குழந்தைகளின் உணர்வு பூர்வமான வாழ்க்கையின் இந்த மூல ஊற்றுகளில் இல்லாமல் வேறெங்கே இரக்கம், மென்மை, கவனம், அனுதாபம், அன்பு, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை வளர்க்க முடியும்? இது இப்படியிருக்கும் பட்சத்தில் இந்த ஆசிரியரியல் இசையின் தாள நயங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் மேன்மேலும் வலிமையாக ஒலிக்கும், பாடங்கள் இவர்களது வாழ்க்கையின் உட்பொருளாகும்.

## பாடவேளையின் போது குழந்தைகளுடன் காரிய ரீதியான உறவுகளை ஏற்படுத்தும் கோட்பாடு

இதற்கு என்ன பொருள்? சோவியத் ஆசிரியரியல் நிபுணராகிய எஸ். ஷாத்ஸ்கி என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். இவரிடமிருந்துதான் இக்கருத்தை நான் பெற்றேன். ''...விஷயம் என்னவெனில், ஆசிரியரியல் பிரச்சினைகள், சாதாரண மானுடப் பிரச்சினைகளிலிருந்து பெரிதும் மாறுபடுகின்றன. ஆசிரியருக்கு தன் கேள்விக்கான பதில் தெரியும், ஆசிரியர் கேட்ட கேள்விக்கான பதில் ஆசிரியருக்குத் தெரியும் என்பதை மாணவனும் அறிவான். நாம் ஒருவரையொருவர் கேள்விகள் கேட்டுக் கொள்ளும் போது நமக்குத் தெரியாததைத்தான் கேட்கிறோம்... எனவே, ஆசிரியர் தெரிந்து கொண்டே கேள்வி கேட்கும் போது, இக்கேள்வி ஒரு விதமான பொறி என்னும் கருத்து மாணவனின் மனதில் உறுதிபெறுகிறது, அவன் சாராம்சத்தில் பதில் சொல்லாமல், ஆசிரியரின் மனதில் உள்ள பதிலைக் கண்டுபிடிக்க முயலுகிறான்... நாம் நம் மாணவர்களிடம் கேட்கும் இக்கேள்விகள் இறுதியில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் காரிய ரீதியல்லாத உறவுகளைத் தோற்றுவிக்கின்றன. ஆசிரியர் பல அணுகுமுறைகள், பொறிகளைப் பயன்படுத்துகிறார், மாணவர்களோ இவரது நோக்கங்களைப் புரிந்து கொண்டு தற்காப்பு நிலையை மேற்கொள்ள முயலுகின்றனர்... சரி, பிரச்சினையை வேறு எப்படி முன்வைப்பது? கேள்வி பதில்களில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே காரிய ரீதியான உறவுகளை, மனநிலைகளை ஏற்படுத்தலாமா? ஆசிரியர் எதைப் பற்றிக் கேட்க வேண்டும்? அவர் காரிய ரீதியான உறவுகளை ஏற்படுத்த விரும்பினால் தனக்குத் தெரியாததை, மாணவர்களுடன் கலந்து பழகுவதில் தான் அறியாததைக் கேட்க வேண்டும். மாணவர்கள் சந்தித்த இடர்ப்பாடுகளும், அவர்களது சந்தேகங்களும், மாணவர்களிடம் கல்வியின் பால் தோன்றும் ஆர்வங்களும் அல்லது வெறுப்புகளும் ஆசிரியருக்குத் தெரியாது. ஆகவே, ஆசிரியர் தன் மாணவர்களை எதைப் பற்றியாவது கேட்க விரும்பினால், அவர்களின் கஷ்டங்கள், சந்தேகங்கள், அக்கறைகள் போன்றவற்றைப் பற்றிக் கேட்பதுதான் நல்லது. இப்படிச் செய்தால், தம் பதில்களின் மீது மாணவர்

கள் பெரும் அக்கறை காட்டும்படி செய்ய முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன், அப்போது அவன் ஆசிரியர் இயன்ற வரை அதிகமாகத் தன்னைக் கேள்விகள் கேட்க வேண்டு மென விரும்புவான், ஏனெனில் இக்கேள்விகள் அவன் வேலை செய்ய உதவுகின்றன; இதில்தான் மாணவர்கள் எப்போதும் அக்கறை கொண்டுள்ளனர்; இப்படிப்பட்ட கேள்வி பதில் களுக்குப் பின் மாணவர்களுக்கு வேலை செய்வது எளிமை யாக இருக்கும்!''

மாபெரும் சோவியத் ஆசிரியரின் நூலிலிருந்து, பாட வேளையில் குழந்தைகளுடனான காரிய ரீதியான உறவு களைப் பற்றிய கருத்துக்களைக் கண்ட நான் என்னையறி யாமலேயே, நீண்ட நாட்களுக்கு முன் எப்போதோ இதே மாதிரி காரிய ரீதியற்ற கேள்விகளைக் கேட்டதையும் அக் குழந்தைகளின் முகங்களையும் எண்ணிப் பார்த்தேன். ''எனக்கு எல்லாம் தெரியும், உங்களுக்குத் தெரியுமா?'' என்பதுதான் இக்கேள்விகளின் சாரமாயிருந்தது. இச்சமயங் களில் குழந்தைகளின் முகங்களில் சலிப்புத் தென்பட்டது, கண்களில் ஒளியில்லை, குறும்புக்காரர்கள் குறைவு, கட்டுப் பாடோ சாலச் சிறந்ததாயிருந்தது, அறையில் முன்னும் பின்னும் நடந்தபடி கேள்விகளை யோசித்து கேள்! இப் படிப்பட்ட போதனைமுறைக்காக யார் குற்றஞ் சொல்ல முடியும்?

இப்போது? குழந்தைகளுடனான காரிய ரீதியான உறவு கள் பற்றிய ஏதோ கோட்பாட்டை முன்வைக்கிறேன்! இக்கருத்தை வெளியிட்டவர் இது போதனைமுறைக் கோட் பாடு என்று சொல்லவில்லையே, ஆசிரியர் தனக்குத் தெரி யாததைக் கேள்வியாக கேட்க வேண்டும் என்றுதானே சொன்னார். நானோ எனக்கும் என்னைப் பின்பற்ற விரும் பும் மற்றவர்களுக்கும் எல்லாவற்றையும் சிக்கலாக்குகிறேன். எப்படிச் சிக்கலாக்குகிறேன்? இதோ நீங்களே பாருங்கள்.

''6+2 எவ்வளவு?'' என்று குழந்தைகளிடம் கேட் கிறேன்.

''எட்டு!'' என்று ஒரே குரலில் பதில் வருகிறது.

''5+3?''

''எட்டு!'' என்று பதில் சொல்கின்றனர்.

இந்த இடத்தில் முகத்தில் வியப்பை வெளிப்படுத்து கிறேன், சிந்தனை வசப்படுகிறேன், என் உதடுகள் எதையோ

முணுமுணுக்கின்றன; குழந்தைகள் தம் கண்களை அகல விரித்தபடி ''என்ன நடக்கிறது?'' என்று என்னைப் பார்க்கின்றனர்.

''என்ன சொல்கின்றீர்கள்? 5+2 எட்டா?''

அவ்வளவுதான்:

''நீங்கள் '5+3' என்று சொன்னீர்கள்!''

''இல்லை, நான் அப்படிக் கேட்கவில்லை!'' என்று நான் உறுதியாகச் சொல்கிறேன். '''5+2' எவ்வளவு என்றுதான் கேட்டேன், நீங்கள்தான் 'எட்டு' என்றீர்கள்!''

''இல்லை, நீங்கள் '5+3' என்றீர்கள். அது 8.''

''சரி, நல்லது!'' என்றாலும் எனது குழப்பத்தை பேச்சிலும் முகத்திலும் வெளிப்படுத்தியபடி கேட்கிறேன்:

''7+1 எவ்வளவு?''

''7+1 எட்டு.''

''மன்னியுங்கள், நான் 7+1 கேட்க விரும்பவில்லை. 4+4 எவ்வளவு என்று கேட்க விரும்பினேன்.''

''4+4 எட்டுதான்.''

''என்ன நீங்கள், எல்லாவற்றிற்கும் 'எட்டு, எட்டு' என்கின்றீர்கள்! 'ஒன்பது' அல்லது 'பத்து' என்று வேறு பதில் சொல்ல முடியாதா?'' என்று உண்மையான குரலில் கேட்கிறேன்.

ஆனால் தம் ஆசிரியர் ''ஞாபகமறதியானவர்'', ''கவனக்குறைவானவர்'' என்பதற்கு குழந்தைகள் பழகி விட்டதால், நிரூபிக்கத் துவங்குகின்றனர்:

''நீங்கள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் விடை 8 தான்! அப்படியிருக்கும் போது 'ஒன்பது', 'பத்து' என்று எங்களால் எப்படிச் சொல்ல முடியும்?''

''நான் எந்த கணக்குகளைத் தந்தேன்?''

''6+2, 5+3, 7+1, 4+4!''

நான் இவற்றை கரும்பலகையில் ஒரே வரிசையில் எழுதி விட்டு சிறிதே சிந்தித்து, அவற்றின் எதிரே சமன்குறியிட்டு, எட்டு என்று பெரிதாக எழுதி விட்டு பின் எனக்குள்ளேயே கூறிக் கொள்வதைப் போல் நடிக்கிறேன்: ''ஆமாம், ஆமாம், எட்டுதான்!'' இக்கணக்குகளைப் போட்ட அந்த குறுகிய நேரத்தில் குழந்தைகளின் முகங்களில் வியப்பும் கவலையும் மகிழ்ச்சியும் பொறுமையின்மையும் மாறி மாறி வருகின்றன. கண்கள் ஒளிர்கின்றன. சில சமயங்களிலோ வகுப்பில் யார்

என்ன சொல்கின்றனர் என்பதைக் கேட்க முடியாதபடி ஒரே சத்தம். ஆனால் அவர்கள் உண்மையை அறிவதைப் பற்றி மட்டுமே பேசுகின்றனர்.

இங்கே நான் குழந்தைகளுடன் எப்படிப்பட்ட காரிய ரீதியான உறவுகளை நிலைநாட்டினேன்? நான் கேட்ட கேள்விகளுக்கான பதில்கள் எனக்குத் தெரியும், எனக்கு ஏதோ புதியதை சொல்லித் தருவதாக அவர்களும் நினைக்கவில்லை. அதாவது இங்கே புதியது எதுவும் இல்லை. ஆனாலும் உறவுகள் முற்றிலும் காரிய ரீதியாக இருந்தன என்று எனக்குத் தோன்றுகிறது. நான் முற்றிலும் காரிய ரீதியாக, கவலையோடு கணக்குகளைக் கொடுத்ததால், வேறொன்றை நிரூபிக்க முயன்றதால்தான் அவை இப்படி ஆயின. எனது ''கவனக் குறைவு'', ''ஞாபகமறதி'', ''தவறுகள்'' இவர்கள் மத்தியில் என்னைத் திருத்தும் நாட்டத்தை, என்னோடு விவாதம் புரியும் நாட்டத்தைத் தூண்டி விடுகின்றன.

ஏனெனில், உண்மையில் எனக்குத் தெரியாத கேள்விகளை மட்டுமே குழந்தைகளிடம் கேட்டுக் கொண்டிருக்க முடியாதே. எனவேதான் அவர்களுடன் கலந்து பழகுவதன் மூலம் அவர்கள் தம்மை எனக்குச் சரிசமமானவர்களாக உணர, அவர்கள் எனக்கு அவசியம், அவர்களின்றி எனக்குக் கஷ்டமாக இருக்கும் என்று புரிந்து கொள்ள நான் வாய்ப்பளிக்கிறேன். குழந்தைகளுடன் நான் கலந்து பழகி அனுபவம் கிடைக்கக் கிடைக்க, ஆசிரியரியல் என்பது குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி போதனையைப் பற்றிய விஞ்ஞானம் மட்டுமல்ல, இது குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி போதனைக் கலையைப் பற்றிய விஞ்ஞானம் என்ற விவாதத்திற்குரிய கருத்துநிலை சரியானது என்பதை மேன்மேலும் உறுதியாக நம்பி வருகிறேன். வகுப்பறையில் அமர்ந்து, என்னைப் பார்த்தபடியே, என்னிடமிருந்து முக்கியமான எதையோ எதிர்பார்த்துக் காத்திருக்கும் குழந்தைகள் உண்மையிலேயே ஒவ்வொரு பள்ளி நாளையும் மகிழ்ச்சியோடு கழிக்க வேண்டுமென நான் விரும்பினால், தாம் வளர்க்கப்படுகிறோம், தமக்கு படிப்புச் சொல்லித் தருகின்றனர் என்பதை உணராமலேயே வளர்க்கப்பட வேண்டும், கல்வி பெற வேண்டும் என்று நான் விரும்பினால், எங்களுடைய காரிய ரீதியான உறவுகள் உறுதியானவையாக, தொடர்ச்சியானவையாக இருக்க வேண்டும் என்பதன் மீது நான் கவனம் செலுத்த

வேண்டும். இந்த உறுதியையும் தொடர்ச்சியையும் பேணிக் காக்கும் அவசியம் ஏற்படும் போது நான் துணிவாக, ஈடு இணையற்ற ஆசிரியர்-நடிகராக நடிக்க வேண்டும். அதாவது, எனக்கும் குழந்தைகளுக்கும் இடையிலான காரிய ரீதியான உறவுகள் உண்மையானவையாக இருக்க வேண்டும், சுதந்திரமாக முடிவு செய்யும் உரிமையை இவை குழந்தைகளிடமிருந்து பறிக்கக் கூடாது, பாடத்தில் தமது உண்மையான பங்கேற்பின் உணர்வை அவர்களிடமிருந்து பிடுங்கக் கூடாது என்பவைதான் மேற்கூறியதன் சாரமாகும். இது ஒரு எளிய காரியமல்ல, ஆனால் நான் என் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் முன் கலந்து பேசிய யாருமே குழந்தைகளுடன் வேலை செய்வது சிக்கலான காரியமல்ல என்று எனக்கு உறுதி தரவில்லை.

எனது ஆறு வயதுக் குழந்தைகளுடன் நான் வேறு வழிகளிலும் காரிய ரீதியான உறவுகளை நிலைநாட்டுகிறேன். எந்தப் பாடத்தை எப்படி படிக்கப் போகின்றோம் என்று அவர்களுக்குச் சொல்லி, தம் கருத்தை வெளியிட வாய்ப்பளிக்கிறேன்.

''குழந்தைகளே, இன்று என்ன கணக்குகள், பயிற்சிகள் உங்களை எதிர்நோக்கியுள்ளன பாருங்கள்! இவற்றை எல்லாம் இன்று படிக்கப் போகின்றோம்!'' என்று பாட ஆரம்பத்தில் சொல்லி கரும்பலகையில் உள்ளவற்றைக் காட்டுவேன் அல்லது வாய்மொழியாக விளக்குவேன். குழந்தைகளைக் ''கவரும்படி'' இதைச் செய்வேன். ஒவ்வொரு வேலையும் முடிந்ததும், வரைபடத்திற்குத் திரும்பி, ''இதோ இதைச் செய்தாகி விட்டது, அடித்து விடலாம்'' என்பேன்.

அல்லது, ''இன்று பாடம் எப்படியிருக்க வேண்டுமென விரும்புகின்றீர்கள்!'' என்று கேட்பேன்.

''சிக்கலானதாக... கவர்ச்சிகரமானதாக... விந்தையானதாக... அதிகம் சிந்திக்க வைப்பதாக... சுயமாக வேலை செய்யத் தக்கதாக... விவாதிக்கத் தக்கதாக... சிரிக்கவும் இடமிருக்கும்படியாக...''

''இப்படிப்பட்ட பாடம் நடத்த உதவுவீர்களா?''

''கண்டிப்பாக!''

பாட இறுதியில் நான் கேட்பேன்:

''பாடம் உங்களுக்குப் பிடித்திருந்ததா?''

பாடம் பிடிக்காவிடில், பின்வருமாறு பதில் வரும்:

''ரொம்ப இல்லை... சுமார்... பரவாயில்லை... சிக்கலான கேள்விகளே இல்லை... சுயமான வேலையில்லை...''

அப்போது அவர்களிடம் உதவி கோருவேன்: ''என்ன ஆலோசனை சொல்கின்றீர்கள்? நாளைய பாடத்திற்கு எந்த மாதிரி கேள்விகள், கணக்குகளைத் தயாரிக்கட்டும்?''

பாடம் பிடித்திருந்தாலோ இப்படிப் பதில் வரும்: ''ரொம்ப... சுவாரசியமாயிருந்தது... நன்கு விவாதித்தோம்... சிக்கலான கணக்குகளைப் போட்டோம்... புதியதைக் கற்றுக் கொண்டோம்... பல்வேறு தவறுகளைத் திருத்தினோம்.''

''குழந்தைகளே! இப்படிப் பாடம் நடத்த உதவியதற்கு நன்றி!''

''உங்களுக்கும் நன்றி!''

என் அன்பு ஆசிரியர்களே! அப்போதுதான் எழுதக் கற்றுக் கொண்ட ஒரு சிறுவன் இடைவேளையில் தாழ்வாரத்தில் ''சுவாரசியமான கணிதப் பாடத்திற்காக நன்றி!'' என்று எழுதியதைப் படிக்கும் போது உங்களுக்கு எம்மாதிரியான உணர்ச்சிகள் ஏற்படும்? இந்தத் தருணத்தில் என்னிடம் எந்த உணர்வுகள் தோன்றுகின்றன என்று சொல்ல எனக்கு சக்தியிருக்காது, ஆனால் ஒவ்வொரு முறையும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் என்ன நினைக்கிறேன் என்று சொல்ல முடியும்: ''குழந்தைகள் என் பாடங்களில் நன்கு பழகுகின்றனர், அவர்களுக்கு சுவாரசியமாக உள்ளது. அப்படியெனில் நான் சரியான பாதையில் செல்கிறேன் என்று பொருள்''.

### குழந்தைகளின் வயதுச் சிறப்பியல்புகளுக்கேற்ற வேகத்தில் பாடம் நடத்தும் கோட்பாடு

ஆசிரியர் எந்த வேகத்தில் பாடத்தை நடத்த வேண்டும் என்ற பிரச்சினை உள்ளதா என்ன? ஆசிரியரியல், போதனை முறை, தனிப்பட்ட முறைகள் ஆகியவை சம்பந்தமான பாட நூல்களின்படி பார்த்தால் இப்படிப்பட்ட பிரச்சினை எதுவும் இல்லை. ஒருவேளை உண்மையிலேயே இல்லையோ? அப்படியெனில் இப்படிப்பட்டதொரு பரிசோதனையைச் செய்து பாருங்கள்: நீங்கள் அவசரப்படும் போது மிக மெதுவாகச் சென்று பாருங்கள். ஐந்து நிமிடங்கள் இப்படி நடந்து

பாருங்கள் (இதற்கு மேல் அனேகமாக உங்களால் முடியாது), சாதாரண வேகத்தில் நடந்தால் ஏற்படுவதை விட இரு மடங்கு அதிக களைப்பு தோன்றும் என உறுதியாக நம்பு கிறேன். அல்லது கூட இருப்பவருடன் மிக மெதுவாகப் பேசுங்கள்: நீங்கள் மட்டுமின்றி (சிந்தனையின் வேகத்திற்குத் தடையிடுவதால்) உங்களைக் கேட்பவரும் (நீங்கள் சொல்வதைப் புரிந்து கொள்ள மிகவும் பிரயாசைப்படுவதால்) களைத்துப் போவீர்கள். உங்களைக் கேட்பவர், அவருக்கு ஏற்ற அதிக வேகத்தில் பேசினால் கிரகிப்பதை விட மெதுவாகப் பேசும் போது குறைவாகவே கிரகிப்பார்.

ஆறு வயதுக் குழந்தையைக் குறைந்த பட்சம் ஒரு மணி நேரத்திற்கு ஓடாமல், அசையாமல், நேராக, அமைதியாக உட்காரச் சொல்லுங்களேன் பார்க்கலாம். இப்படிப்பட்ட ''ஓய்வால்'' குழந்தைக்கு ஏதாவது பயனுண்டா? இம்மாதிரியான ஒரு மணி நேர ''ஓய்வை'' அவனால் தாங்கத்தான் முடியுமா? குழந்தை ஓடுகிறான், குதிக்கிறான், அவசர அவசரமாக உரக்கப் பேசுகிறான், எப்போதும் எங்கோ விரைகிறான். ஆனால் இதையெல்லாம் அவன் வேண்டுமென்றே செய்யவில்லை. இவனுடைய வளர்ந்துவரும் தேவைகள்தான் இவ்வாறு ஓடவும் ''பொங்கியெழவும்'' வைக்கின்றன. அதனால் குழந்தையால் அங்குமிங்கும் ஓடித் திரியாமல்,உணர்ச்சிகரமாக இல்லாமல் இருக்க முடியாது. அவன் வேகமாகத்தான் வளர்ந்து வலுப்பெறுகிறான், இந்த வேகம் அதிகமானதாக நமக்குப் படலாம், ஏனெனில் இது நமது அமைதியான வேகத்திற்கு ஏற்றதாயில்லை; ஆனால் இவ்வேகம் அவனுக்கு இயல்பானது, சாதாரணமானது. குழந்தைகளுக்கென தனியான உடற்கூறு ரீதியான வேகமும் மூளை ரீதியான வேகமும் உள்ளது என்பதை நமது அமைதி மறக்கச் செய்கிறது. எனவே, பாடம் சொல்லித் தரும் வேகம், குழந்தைகளுடன் கலந்து பழகும் வேகம் எங்கெல்லாம் மெதுவான படக்காட்சிகளில் வரும் வேகத்தைப் போல் உள்ளதோ அங்கெல்லாம் குழந்தை களைப்படைவான், மெதுவாக நடக்கும்படி, அமைதியாக இருக்கும்படி, சத்தம் போடாதிருக்கும்படி அவனை கட்டாயப்படுத்தினால் எப்படிக் களைப்படைவானோ அதே மாதிரி களைப்படைவான். இறக்கைகள் மட்டும் இருந்தால் அவன் சிறகடித்துப் பறப்பான்!.. குழந்தைகளுடைய வளர்ச்சி வேகத்திற்கேற்ப, அவர்களுடைய உள்

சக்திகளின் இயக்கத்திற்கேற்ப கல்வி போதிக்க வேண்டும்.

இசையில் உள்ளதைப் போன்றே கல்வி போதிக்கும் தத்துவத்திலும் நடைமுறையிலும் விஷயங்களைத் துல்லியமாகக் குறிப்பிடும் வழிகள் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

எந்த ஒரு இசையமைப்பாளரும் இசையின் எந்தப் பகுதியை எப்படி, எந்த பாவனையில், எந்த வேகத்தில் இசைக்க வேண்டுமெனக் குறிப்பிடாமல் இசையை அமைப்பதில்லை. அப்போதுதான் இசை முழுமை பெறும், கேட்பவரின் மனதையும் உணர்ச்சிகளையும் தொடும்.

சின்னஞ்சிறு மனிதனின் மனதையும் இதயத்தையும் பாடங்கள் கவருவதில் ஆசிரியர்களுக்கும் இதே மாதிரியான அக்கறையில்லையா என்ன! எனவே, ஒவ்வொரு போதனை விஷயத்தையும் (அல்லது ''போதனை இசையையும்'') பாடத்தில் எந்த தொனியில், எந்த வேகத்தில் செய்வது என்று யோசித்து முடிவு செய்தால் நன்றாயிருக்குமோ! இவையெல்லாவற்றையும் வேகத்தின் நோக்கிலும் தொனியின் நோக்கிலும் தீர ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். நான் தனிப்பட்ட முறையில் எப்போதோ இதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

சில ஆண்டுகளுக்கு முன் வரை கூட, கணக்குகளை எப்படி குழந்தைகளுக்குத் தருவது, இந்த ''இசையை'' வகுப்பில் எப்படி இசைக்கப் போகிறேன் என்பதைப் பற்றியெல்லாம் நன்கு யோசிக்காமலேயே என்னால் பாடத் திட்டத்தை தீட்ட முடிந்திருந்தது. எப்படிப்பட்ட உணர்வற்ற தொனியில், எப்படிப்பட்ட வேகத்தில் நான் எளிய கணக்குகளை என் குழந்தைகளுக்குத் தந்தேன் என்று இப்போது யோசித்துப் பார்க்கும் போது, இவற்றைப் போட அவர்கள் ஏன் அவ்வளவு கஷ்டப்பட்டார்கள், ஏன் அவ்வளவு விருப்பமின்றி பாடங்களில் கலந்து கொண்டார்கள் என்று எனக்குப் புரிகிறது. அந்த வகுப்புகளை—போதனைமுறையை—இப்போது போதனை ''இசை'' என்று என்னால் சொல்ல முடியாது. முன்னர் என் பாடங்களை நான் பின்வருமாறு நடத்தினேன்.

''என்னைப் பாருங்கள்!'' என்று வகுப்பைப் பார்த்துக் கூறினேன்.

சிறிது இடைவெளி.

''கவனமாகக் கேளுங்கள்!..''

சொல்லித் தரும் தொனியில் அழுத்தந் திருத்தமாக உச்சரித்தேன்:

''6 உடன் எதைச் சேர்த்தால் 10 வரும்?''

கட்டளையிடும் குரலில் சொன்னேன்:

''எல்லோரும் யோசியுங்கள்!..''

மௌனம்.

''யாருக்கு விடை தெரியுமோ கையைத் தூக்குங்கள்.''

எச்சரித்தேன்:

''மற்றவர்கள்?''

கண்டிப்புடன் கூறினேன்!

''எல்லோரும்!.. எல்லோரும்!..''

வகுப்பைச் சுற்றும் முற்றும் பார்த்தபடி சொன்னேன்:

''சரி, லேரி! நீ சொல்!''

லேரி மெதுவாக, எச்சரிக்கையோடு சொல்கிறான்:

''4 ஐக் கூட்ட வேண்டும்...''

நான் எரிச்சலோடு சொன்னேன்: ''இல்லை, அப்படியில்லை! முழு பதிலைச் சொல்ல வேண்டுமென நான் சொல்லியிருக்கிறேன் அல்லவா!''

பின் மீண்டும் அதே மாதிரியான சொல்லித் தரும் தொனியில் அழுத்திக் கூறினேன்:

''ஆறுடன் சேர்க்க வேண்டும்...

கட்டளையிட்டேன்:

''தொடர்ந்து சொல்!''

லேரி: ''ஆறுடன் நான்கைச் சேர்த்தால் பத்து வரும்!''

ஏளனமாக:

''அப்படித்தான். உட்கார், எப்படி பதில் சொல்ல வேண்டுமென மறந்து விடாதே!''

இதே மாதிரியாகத் தொடரும்.

இதில் பொதுவாக விஞ்சி நிற்பது அதிகாரத் தொனி, பாடம் நடத்தப்படும் வேகம் மெதுவானது என்பதை எளிதாகக் கண்டுபிடிக்கலாம். புதியவற்றை அறியும் மகிழ்ச்சியும் ஆசிரியருடன் கலந்து பழகும் மகிழ்ச்சியும் குழந்தைகளுக்குக் கிட்டவில்லை என்பது ஒரு புறமிருக்க இப்படிப் பட்ட பாடங்கள் குழந்தைகளுக்குப் பிடிக்குமா என்ன!

இப்போது இதே மாதிரியான பாடத்தை இன்று நான் எப்படி நடத்துகிறேன் என்று பார்ப்போம்.

உறுதியோடு, விரைவாக, ஆர்வந்தரும் வகையில் சொல்கிறேன்:

''குழந்தைகளே! குனியுங்கள்! (சிறிது இடைவெளி.) கண்களை மூடுங்கள்!''

மெதுவான குரலில், சற்றே எச்சரிக்கும் குரலில் சொல்கிறேன்:

''கணக்கைத் திரும்பச் சொல்ல மாட்டேன்!''

மெதுவாக, அமைதியாக, சிறு இடைவெளிகளுடன் சொல்கிறேன்:

''நான் ஒரு எண்ணை நினைத்திருக்கிறேன்... அதனுடன் 6ஐச் சேர்த்தால் 10 வரும்.''

விளையாட்டுத் தொனியில் கேட்கிறேன்:

''நான் நினைத்துள்ள எண் எது? விரல்களால் காட்டுங்கள்!''

குழந்தைகள் தலையை உயர்த்தாமல், கண்களைத் திறக்காமல் விடையை விரல்களால் காட்டுகின்றனர். விரைவாக வகுப்பு முழுவதையும் சுற்றி வந்து, ஒவ்வொரு குழந்தையையும் அணுகுகிறேன், மெதுவாக விரல்களைத் தொட்டு சன்னமான குரலில் சொல்கிறேன் (விடை சரியானதாக இருந்தால்):

''சரி... நன்றி... சரியான விடை... நல்லது!..''

விடை தவறாயிருந்தால் நம்பிக்கையேற்படுத்தும் தொனியில் (''உன்னால் முடியும்'') காதில் சொல்கிறேன்:

''தப்பு!.. இன்னொரு முறை யோசி!.. நான் உன்னிடம் திரும்பி வருகிறேன்!..''

எல்லோரையும் பார்த்து வந்ததும் உடனே உறுதியோடு:

''இரண்டாவது கணக்கு.''

சிறு இடைவெளி.

''10லிருந்து எதைக் கழித்தேன் என்று மறந்து விட்டேன். ஆனால் எஞ்சியிருப்பது 7.''

கவர்ச்சிகரமாக, விரைவாக:

''நான் மறந்து விட்ட எண் எது?''

மீண்டும் ஒவ்வொரு குழந்தையையும் அணுகி காதில் மெதுவாகச் சொல்கிறேன்:

''சரி!.. நன்றி!.. இன்னும் ஒரு முறை யோசி!..''

பின் மெதுவாக, ரகசியமாக சொல்கிறேன்:

''விடுகதை சொல்லட்டுமா?''

குழந்தைகளும் தலையை உயர்த்தாமல், கண்களைத் திறக்காமல் சொல்கின்றனர்:

''சொல்லுங்கள்!''

உயிர்த்துடிப்போடு, உற்சாகமாக, சன்னமான குரலில் சொல்கிறேன்:

''ஒவ்வொருவரும் 1லிருந்து 5க்குள் எதையாவது ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள்!''

இடைவெளி (எண்ணை நினைத்துக் கொள்ள அவகாசம் தருகிறேன்).

மெல்லிய குரலில் கேட்கிறேன்: ''நினைத்து விட்டீர்களா?''

குழந்தைகள் சன்னமான குரலில் பதில் சொல்கின்றனர்:

''நினைத்துக் கொண்டோம்.''

''அந்த எண்ணோடு 3ஐக் கூட்டுங்கள்.''

இடைவெளி (கூட்ட நேரம் தருகிறேன்). சன்னமான குரலில்:

''கூட்டி விட்டீர்களா?''

குழந்தைகள் மெதுவாக: ''கூட்டிவிட்டோம்.''

கவர்ச்சிகரமாக, சன்னமான குரலில்: ''இன்னும் 2ஐக் கூட்டுங்கள்... கிடைத்த விடையிலிருந்து நீங்கள் முதலில் நினைத்த எண்ணைக் கழியுங்கள்!.. இன்னும் 1ஐக் கழியுங்கள்.''

இடைவெளி.

''உங்களுக்குக் கிடைத்த விடையைச் சொல்லட்டுமா?''

குழந்தைகள் ஆர்வமாக: ''சொல்லுங்கள்!''

உறுதியோடு, சந்தோஷமான குரலில் கூறுகிறேன்: ''தலையை உயர்த்தி என்னைப் பாருங்கள்!''

பின் விரைவாக, தீர்மானகரமாக கரும்பலகையில் ஒரு எண்ணை எழுதி, குழந்தைகள் பார்க்காமலிருக்க மூடுகிறேன்.

உற்சாகமாக, விரைவாக:

''என்ன விடை கிடைத்தது? எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள்!''

கையை அசைத்ததும், குழந்தைகள் உரக்க, ஒரே குரலில் பதில் சொல்கின்றனர்:

''நான்கு!''

உடனே கரும்பலகையை திறந்து காட்டுகிறேன்.

''என்ன, சரியா?''

குழந்தைகள் வியப்போடும் மகிழ்ச்சியோடும்: ''ஆம்!''

நானும் மகிழ்ச்சியாக: ''நான் எப்படிக் கண்டுபிடித்தேன் என்று சொல்லட்டுமா?''

குழந்தைகள் மகிழ்ச்சியோடும் பொறுமையின்றியும்: ''சொல்லுங்கள்!''

இதே போல் தொடரும்.

இந்த போதனை இசையின் வேகம் என்ன? இது உயிரோட்டமுள்ளது, விரைவாக முன் செல்லக் கூடியது.

தொனி எப்படிப்பட்டது? பிரதான தொனி, ஊக்கமூட்டி உற்சாகப்படுத்துவது, உறுதியளிப்பது,கவர்ச்சிகரமானது. முரட்டுத்தனம், எரிச்சல், பதட்டத்திற்கு இதில் இடமேயில்லை.

பாடம் நடத்தும் வேகமும் பாவனையும் தொனியும் குழந்தைகளிடம் கல்வியின் பாலான மகிழ்ச்சிகரமான உறவை வளர்ப்பதற்கும் அவர்கள் பாடங்களை முழுமையாக கிரகிக்கவும் பெரிதும் முக்கியமானது என்று நம்புகிறேன். எனவே, பாடவேளைகளில் பள்ளி மாணவர்களுக்கு எந்த வேகத்தில், எந்தத் தொனியில் பாடம் நடத்துவது, எந்த வேகத்தில் ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறுவது என்பதையெல்லாம் விஞ்ஞான பூர்வமாக நிர்ணயிப்பது அவசியமாகி வருகிறது. இந்த விஷயத்தில் தான் தோன்றித்தனம், தன்னிச்சையான போக்கு, குறிப்பாக அறிவின்மை ஆட்சி செலுத்தக் கூடாது!

* * *

தாழ்வாரத்தில் கரும்பலகையருகே ஒலிக்க வேண்டிய முன் தயாரிப்பையடுத்து தலா 35 நிமிடங்களுக்கு நான்கு பாடங்கள் நடக்கும் (ஜனவரி முதல் நான் மினி-பாடங்களை நடத்துவதில்லை). இரண்டு சிறு இடைவேளைகளும் ஒரு பெரிய இடைவேளையும் உண்டு. 122வது பள்ளி நாளின் திட்டத்தில் நான் எழுதியுள்ளபடி இந்தப் பாடங்கள், இடைவேளைகளின் சாரத்தை விளக்குவேன்.

### கணிதப் பாடம்

**பாடத்தின் நோக்கம்:** கணிதப் பாடத்தின் அடிப்படையில் புதியவற்றை அறியும் ஆர்வத்தையும் கல்வியின் பாலான

ஆக்கபூர்வமான அணுகுமுறையையும் மேற்கொண்டு வளர்த்தல்.

**பாடத்தின் உள்ளடக்கம்:** கவனத்தை வளர்க்கும் கணக்குகள்; பத்து வரையிலும், பத்து முதல் இருபது வரையிலும் உள்ள எண்களின் கூட்டல், கழித்தல் கணக்குகள், சுயமாகக் கணக்குகளை அமைத்துப் போடும் பயிற்சி.

I. முகமன் கூறுதல். இன்று மாணவர்களுடைய மனதில் உள்ளவற்றைப் பற்றி அவர்களுடன்அவசரப்படாமல், அன்போடு கலந்து உரையாடுதல். நேரம் 3—5 நிமிடங்கள்.

''வணக்கம் குழந்தைகளே! புதிய விஷயங்கள் ஏதாவது உள்ளனவா?''

புதிய சம்பவங்கள், மனப்பதிவுகள், மகிழ்ச்சிகள், ஏமாற்றங்கள் பற்றி குழந்தைகள் சொல்வதைக் கேட்கிறேன்.

எனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்துகிறேன், அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறேன், குழந்தைகள் சொல்வதைப் பற்றிய எல்லாவற்றிற்கும் என் கருத்தை வெளியிடுகிறேன், என்னுடனும் சக நண்பர்களுடனும் தன் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்ட ஒவ்வொரு குழந்தையின் மீதும் கவனம் செலுத்தி அன்பு காட்டுகிறேன். நிறையப் பேர் பேச விரும்பினால், இடைவேளையில் அல்லது அடுத்த பாடவேளையில் அல்லது பாடங்களுக்குப் பின் பேசலாம் என்று சாமர்த்தியமாகச் சொல்லி சமாளிக்கிறேன்.

II. பாட வேலையை முன்வைத்தல். (காரிய ரீதியான, விளையாட்டுத் தனமற்ற, நட்பு ரீதியான தொனி.) நேரம் 2 நிமிடங்கள்.

''இன்று என்ன படிக்கப் போகின்றோம் தெரியுமா? முதலில் உங்கள் கவனத்தை வளர்க்க உதவுவேன். இதோ பாருங்கள் எப்படிப்பட்ட கணக்குகளை நான் தயாரித்துள்ளேன்.''

கரும்பலகையில் எழுதியுள்ளவற்றைக் காட்டி விட்டு உடனேயே திரையால் மூடி விடுகிறேன்.

''அடுத்து, கணக்குகளைச் சரியாகப் போட்டிருக்கின்றீர்களா என்று சரிபார்க்க வேண்டும்.''

பத்து வரையிலும், பத்து முதல் இருபது வரையிலும் உள்ள கூட்டல் கணக்குகளைக் காட்டி விட்டு, திரையால் மூடுகிறேன்.

''அடுத்து, நான் கூட்டல், கழித்தல் கணக்குகளை எப்படிப் போட்டேன் என்று கண்டுபிடித்து அவை சரியா தவறா என்று சொல்ல வேண்டும்.''

நான் கரும்பலகையில் போட்டுள்ள கணக்குகளைக் காட்டி விட்டுத் திரையால் மூடுகிறேன்.

''பின் நீங்களாகவே கணக்குகளை யோசித்து தாளில் எழுதுங்கள். இவற்றிலிருந்து மிக சுவாரசியமானவற்றை, சிக்கலானவற்றைத் தேர்ந்தெடுத்து நாளை எல்லோரும் சேர்ந்து போடுவோம்.''

''இறுதியில் நாம் என்ன படித்தோம் என்று தொகுத்துப் பார்ப்போம்.''

III. கவன உணர்வை வளர்த்தல். (விரைவான வேகம், கவர்ச்சிகரமான, உற்சாகமான தொனி.) நேரம் 5 நிமிடங்கள்.

கரும்பலகையின் ஒரு பகுதியைத் திறந்து குழந்தைகளுக்குப் படத்தைக் காட்டுகிறேன்.

''கவனமாகப் பாருங்கள்! இங்கு என்னென்ன வடிவங்கள் எங்கெங்கே உள்ளன என்று நினைவில் கொள்ளுங்கள். நான் இவற்றில் ஏதாவது மாற்றங்களைச் செய்வேன், என்ன மாற்றம் என்று கண்டுபிடிக்க முயலுங்கள்!''

நினைவு வைக்க வேண்டிய நேரம் 4—5 நொடிகள்.

உறுதியோடு சொல்கிறேன்:

''குனிந்து, கண்களை மூடுங்கள்!..''

கரும்பலகையை நோக்கித் திரும்பி 2—3 நொடிகளில் படத்தில் மாற்றங்களைச் செய்கிறேன்.

கீழ்வருமாறு செய்யலாம்:

எவ்வித மாற்றமும் செய்யாமலிருக்கலாம்;
9 என்பதற்குப் பதில் 6 என்று மாற்றலாம்;
அரை வட்டத்தை முழு வட்டமாக்கலாம்;
இரண்டு வடிவங்களை இடம் மாற்றலாம்;
புதிய வடிவத்தைச் சேர்க்கலாம்.

இவற்றில் ஏதாவது 2—3 மாற்றங்களைச் செய்து


காட்டுகிறேன். ஒவ்வொரு முறையும் கரும்பலகையிலிருந்து தள்ளி நின்று உறுதியான குரலில் சொல்கிறேன்:

''தலையைத் தூக்குங்கள்! படத்தில் நான் எந்த மாற்றம் செய்துள்ளேன் என்று என் காதில் சொல்லுங்கள்!'' என்று யாரெல்லாம் பதில் சொல்ல விரும்புகின்றார்களோ அவர்களை நெருங்கி விடையைக் கேட்டு, சரியா தவறா என்று காதிலேயே சொல்கிறேன். பின் எல்லோரும் விடையை உரக்கச் சொல்லும்படி கேட்கிறேன்.

முதல் பயிற்சிக்குப் பின் அடுத்த பயிற்சிக்குச் செல்கிறேன்.

''இந்தப் படத்தைப் பாருங்கள்!''

கரும்பலகையின் இன்னொரு பகுதியில் உள்ள திரையை விலக்கி படத்தைக் காட்டுகிறேன்.



''இங்கு என்னென்ன, எவ்வளவு வரையப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்க வேண்டும். நீங்கள் தனியாக மனதில் எண்ணுங்கள், நானும் தனியே எண்ணுவேன். ஏனெனில் எனக்கும் எவ்வளவு உள்ளது என்று தெரியாது. வாருங்கள், முதலில் முக்கோணங்களை எண்ணுவோம்...''

குழந்தைகள் பார்க்கும்படி நானும் எண்ணுகிறேன்.

''ஐந்து முக்கோணங்கள் உள்ளன. சரியா?''

பதில்கள் பல மாதிரியானவையாக இருக்கலாம்: அனேகமாக, பெரும்பாலான குழந்தைகள் நான் சொல்வதையே திரும்பச் சொல்லக் கூடும்; யாராவது, அங்கே ஐந்தல்ல, ஆறு முக்கோணங்கள் இருப்பதைக் கண்டு பிடிக்கலாம், ஏனெனில் எந்த பெரிய முக்கோணத்தினுள் எல்லாம் வரையப்பட்டுள்ளதோ அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமல்லவா!

தப்பைக் கண்டுபிடித்துச் சொன்னவனுக்கு நன்றி சொல்கிறேன்.


''இப்போது புள்ளிகளை எண்ணுவோம்...''

சிறு இடைவெளி.

''அங்கே மூன்று... இல்லையில்லை, நான்கு புள்ளிகள் உள்ளன. சரியா?''

இதே போல் தொடரும்.

ஒவ்வொரு பதிலும் வந்த பின் படத்திற்கு வலது புறம் எழுதுகிறேன்:




ஒரு இடத்தில் ''தவறு'' செய்கிறேன்: ''இங்கே 4 முக்கோணங்கள் உள்ளன'' என்று கூறி விட்டு 4க்கு பதில் 5 அல்லது 6 என்று எழுதுகிறேன். எனது தவறை ''திருத்த'' குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கிறேன், முதலில் என்னைத் திருத்துபவர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

IV. பத்து வரையிலும் பத்து முதல் இருபது வரையிலும் உள்ள எண்களின் கூட்டல், கழித்தல் கணக்குகள். (திடீரென விரைந்த வேகத்திற்கு மாறுகிறேன்.) நேரம் 5 நிமிடங்கள்.

''நான் கையை அசைத்ததும், 6 உடன் எதைக் கூட்டினால் 10 வரும் என்று சொல்லுங்கள்!''

''7 உடன் எதைக் கூட்டினால் 10 வரும்?..''

''8 உடன் எதைக் கூட்டினால் 10 வரும்?..''

''5 உடன் எதைக் கூட்டினால் 10 வரும்?..''

''நன்றி! இப்போது இந்தக் கணக்குகளைப் பாருங்கள்!''

கரும்பலகையின் திரையை விலக்குகிறேன்:

14—4=
15—3=
16—5=
17—9=
18—7=
19—2=

# 10

''இக்கணக்குகளைப் போட்டதில் நான் தப்பு செய்திருக்கிறேனா என்று பாருங்கள்!''

''இரண்டாவது கணக்கிலா? 3 என்பதற்குப் பதில் 5 என்று இருக்க வேண்டுமா?.. நன்றி... மூன்றாவது கணக்கிலா? 5 என்பதற்குப் பதில் 6 என்று இருக்க வேண்டுமா? நன்றி!''

இதே போல் வேகத்தைக் கூட்டிச் செல்கிறேன்.

V. சுயமாக கணக்குகளை அமைத்து போடும் பயிற்சி. (மிதமான வேகம், நட்பு ரீதியான தொனி.) நேரம் 3—4 நிமிடங்கள்.

''எனக்கு உதவி செய்கின்றீர்களா?.. ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளைத் தாளைத் தருகிறேன். 1—2 கூட்டல், கழித்தல் கணக்குகளை எழுதுங்கள். இவற்றிலிருந்து மிக சுவாரசியமானவற்றை, சிக்கலானவற்றை நாளை வகுப்பறையில் எல்லோரும் சேர்ந்து போடுவோம். இதன் மூலம் பாடம் நடந்த நீங்கள் எனக்கு உதவுவீர்கள்!''

### முதல் 10 நிமிட இடைவேளை

குழந்தைகள் சுதந்திரமாக இயங்குவதை, கலந்து பழகுவதை, விளையாடுவதைக் கவனிக்கிறேன்.

தாய் மொழிப் பாடத்திற்குத் தேவையானவற்றைக் கரும்பலகையில் எழுதுகிறேன். அதே சமயம் குழந்தைகள் எதைப் பற்றித் தாமே பேச விரும்புகிறார்கள் என்பதையும் கேட்கிறேன். அவர்களுக்கு சுவாரசியமான பல விஷயங்களைப் பேசுகிறேன். தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையருகே நின்று விளையாட்டிலும் பொழுது போக்கிலும் ஈடுபட்டுள்ள குழந்தைகளைக் கவனிக்கிறேன்.

சாதாரண, அவசரமற்ற வேகம், பிரதான தொனி.

## தாய் மொழிப் பாடம்

**பாட நோக்கம்:** படிப்பது, பேசுவதன் அடிப்படையில் புதியவற்றை அறியும் ஆர்வத்தை மேற்கொண்டு வளர்த்தல்; நன்மை, தீமை பற்றிய கருத்துகளை உருவாக்குதல்.

**பாடத்தின் உள்ளடக்கம்:** நான் குழந்தைகளுக்கு ஏற்கெனவே படித்துக் காட்டிய தனித்தனி கவிதைகள், கதைகளிலிருந்து சிறு சிறு பகுதிகள் (''இது எதிலிருந்து என்று கண்டுபிடியுங்கள்!''); தனித்தனியான இரண்டு வாக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகள் (''இந்த வாக்கியங்களைக் கண்டுபிடியுங்கள்!''); மாற்றியமைக்கப்பட்ட நாலடிப் பாடல் வரிகள் (''இந்த நாலடிப் பாடலை எப்படி வாசிப்பது?''); பழமொழிகள், முதுமொழிகள் (''இவை உங்களுக்குப் பிடித்துள்ளனவா?''); வாக்கியத்தில் விட்டுப் போன வார்த்தையைக் கண்டுபிடிக்கும் பயிற்சி (''இங்கே என்ன வார்த்தையை எழுதலாம்?'').

**பாட அமைப்பு:**

I. பாட வேலைகளை முன்வைத்தல். (காரிய ரீதியான வேகம், கருத்தாழத்தோடு, நட்பு ரீதியான தொனி.) நேரம் 3 நிமிடங்கள்.

''பாருங்கள், உங்களுக்காக எதையெல்லாம் தயாரித்துள்ளேன்!''

இரண்டு கரும்பலகைகளின் திரைகளையும் அகற்றுகிறேன்.

''இந்த இடங்கள் எதிலிருந்து எடுக்கப்பட்டன என்று யோசித்துச் சொல்லுங்கள்!..''

''இங்கே நான் வேண்டுமென்றே இரண்டு வாக்கியங்களின் வார்த்தைகளையும் நாலடிப் பாடல் வரிகளையும் கலந்துள்ளேன். இவற்றைப் பிரித்துச் சொல்ல முடியுமா?''

''இந்த வாக்கியத்தில் இரண்டாவது வார்த்தையைக் 'காணோம்'. நீங்கள் அதைக் 'கண்டுபிடித்து' உரிய இடத்தில் வைக்க வேண்டும்.''

''இதோ நான் இங்கு வார்த்தைகளை எழுதியிருக்கிறேன். தப்பு இருக்கிறதா பாருங்கள்! சரிபார்க்க வேண்டும்!''

''இதோ இங்கே (கரும்பலகையின் திரையைத் திறந்து விட்டு உடனே மூடுகிறேன்) என் ரகசியம் உள்ளது. இதைப் பற்றிப் பின்னால் சொல்வேன்.''

‘‘உங்கள் ஒவ்வொருவரின் டெஸ்கிலும் பழமொழிகள், முதுமொழிகள் எழுதப்பட்ட சிறு அட்டை உள்ளது. இவற்றை என்ன செய்வதென்று உங்களுக்குத் தெரியும்.’’

‘‘இது தவிர, இதோ இம்மாதிரியான தாள்களை உங்களுக்காகத் தயாரித்துள்ளேன். ஒவ்வொன்றிலும் இரண்டு கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் சிறந்ததைத் தேர்ந்தெடுங்கள், பின்னால் அதை மனப்பாடம் செய்யலாம். இன்னொரு தாளில் உங்களுக்குப் பிடித்தமான வேலை உள்ளது—வார்த்தைகளையும் படங்களையும் இணைக்க வேண்டும். இரண்டு தாள்களையும் வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்.’’

‘‘சரி, எதிலிருந்து துவங்குவோம்?’’

குழந்தைகள் தமக்கு விருப்பமானதை முதலில் எடுக்கின்றனர்.

II. தனிப்பட்ட பகுதிகளிலிருந்து உரிய கவிதை, கதையைக் கண்டுபிடித்தல். (சாதாரண வேகம், கவர்ச்சிகரமாக.) நேரம் 3 நிமிடங்கள்.

‘‘முன்னர் நான் உங்களுக்குக் கதைகள், கவிதைகளைப் படித்துக் காட்டியிருக்கிறேன். இப்பகுதிகள் எவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை என்று யோசித்துச் சொல்ல முடியுமா?’’

கரும்பலகையில் மூன்று வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. குழந்தைகள் அவற்றைப் படிக்க வாய்ப்பளிக்கிறேன். அவை எந்தக் கதை, கவிதைகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன என்று அவர்களால் கண்டுபிடிக்க இயலாவிடில் ஒரு சில கதை, கவிதைகளின் பெயர்களைச் சொல்லி அவர்களுக்கு உதவுகிறேன்.

III. தனித்தனியாகப் பிரித்து எழுதப்பட்டுள்ள சொற்களிலிருந்து வாக்கியங்களை உருவாக்குதல், நாலடிப் பாடலின் மாறிய வரிகளைச் சரியாக வைத்தல். (உற்சாகமாக, விரைவான வேகம், கவர்ச்சிகரமாக.) நேரம் 5 நிமிடங்கள்.

கரும்பலகையின் ஒரு பகுதியைத் திறக்கிறேன். அங்கு இரண்டு வெவ்வேறான வாக்கியங்களின் சொற்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன: குதிரை, சமைத்தாள், அம்மா, வேகமாக, சாப்பாடு, ஓடியது, நல்ல.

''இங்கே இரண்டு வெவ்வேறான வாக்கியங்களின் சொற்கள் கலந்துள்ளன என்று விளக்கி, இவற்றிலிருந்து அந்த வாக்கியங்களை சீக்கிரம் கண்டுபிடிக்க முடியுமா?'' என்று கேட்கிறேன்.

குழந்தைகள் தம் விடைகளைச் சொன்னதும் நான் கரும்பலகையில் எழுதியிருந்ததைத் திறந்து காட்டுகிறேன்: ''குதிரை வேகமாக ஓடியது. அம்மா நல்ல சாப்பாடு சமைத்தாள்''.

பின், உறுதியோடு, சவாலாகச் சொல்கிறேன்: ''இதோ இப்போது இங்கு என்ன எழுதியுள்ளது பாருங்கள்! இங்கே ஒரு குழந்தைப் பாட்டின் வரிகள் மாறியுள்ளன. இதை ஒழுங்கான முறையில் விரைவாக உங்களால் மாற்றியமைக்க முடியுமா?''

இப்படிச் சொல்லியபடியே கரும்பலகையின் திரையை விலக்குகிறேன். அதில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

நீ ஓய்ந்திருக்கலாகாது, பாப்பா!
ஒரு குழந்தையை வையலாகாது, பாப்பா!
ஓடி விளையாடு, பாப்பா!
கூடி விளையாடு, பாப்பா!

குழந்தைகள் தம் விடைகளைச் சொல்கின்றனர். பின் நான் கரும்பலகையைத் திறந்து சரியான விடையைக் காட்டுகிறேன்:

ஓடி விளையாடு, பாப்பா!
நீ ஓய்ந்திருக்கலாகாது, பாப்பா!
கூடி விளையாடு, பாப்பா!
ஒரு குழந்தையை வையலாகாது, பாப்பா!

IV. பழமொழிகள், முதுமொழிகள் அடங்கிய சிறு அட்டைகளுடனான வேலை. (மிதமான வேகம், கருத்தாழத்தோடு, நம்பிக்கையோடு.) நேரம் 3 நிமிடங்கள்.

''உங்களுக்குப் பிரபல வார்த்தைகளும் முதுமொழிகளும் பிடித்துள்ளதைப் பார்க்க மகிழ்ச்சி. எனவே, நான் உங்களுக்காகப் புதிய மூதுரைகளைக் கண்டுபிடித்து சிறு அட்டைகளில் எழுதியிருக்கிறேன். இவை உங்கள் டெஸ்குகளின் மீது உள்ளன. இவை உங்களுக்குப் பிடிக்கும், உங்கள் நினைவில் நிலைத்திருக்குமென நம்புகிறேன்.''

சிறு அட்டைகளில் எழுதப்பட்டுள்ள மூதுரைகளை வாய் விட்டுப் படிக்கும்படி ஒரு சில குழந்தைகளிடம் சொல்கிறேன்:

உழைப்பின்றி ஊதியமில்லை.
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
உண்மை வெல்லும்.
ஆபத்தில் உதவுபவன் நண்பன்.

''இவை உங்களுக்குப் பிடித்துள்ளனவா?.. இவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று படியுங்கள். இவை உங்களுக்குக் கண்டிப்பாகப் பயன்படும்.''

V. வாக்கியத்தில் விட்டுப் போன வார்த்தைகளைப் பூர்த்தி செய்தல். (விரைவான வேகம், அன்பான தொனி.) நேரம் 4 நிமிடங்கள்.

வார்த்தை விடப்பட்ட வாக்கியம் கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள இடத்தைத் திறந்து காட்டுகிறேன்:

சூரியன் [ ] உதித்தது.

''இந்த வெற்றிடத்தில் எந்த வார்த்தையை நிரப்பலாம் என்று சொல்லுங்கள்.''

குழந்தைகள் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் கரும்பலகையில் எழுதுகிறேன்.

பின்வருமாறு இது இருக்கலாம்:

சூரியன் [ ] உதித்தது.
மினுமினுப்பாக
செந்நிறமாக
பழுப்பு நிறத்தில்
பெரிதாக
சந்தோஷமாக
ஆரஞ்சு வண்ணத்தில்
புன்சிரிப்போடு

பிரகாசமாக, அழகாக என்று நான் என் விடைகளை சேர்த்துக் கொள்கிறேன். ''சரி, இப்போது இவற்றில் எது வாக்கியத்தில் நன்கு பொருந்தி வரும்?''

குழந்தைகள் தம் முடிவை நிரூபிக்க உதவுகிறேன்.

VI. வார்த்தைகளில் உள்ள தவறுகளைத் திருத்துதல். (நம்பிக்கையளிக்கும் தொனி.) நேரம் 1 நிமிடம்.

எழுத்துப் பிழைகளுடன் வார்த்தைகள் கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள இடத்தைத் திறந்து காட்டுகிறேன்.

''இதற்கு இப்போது நேரம் செலுத்த வேண்டாம். இதை இப்படியே விட்டு வைக்கிறேன். யாருக்கு விருப்பமோ அவர்கள் இடைவேளையின் போது இதில் ஈடுபடலாம். இப்போது மிக சுவாரசியமானது நம்மை எதிர்நோக்கி யுள்ளது.''

VII. வீட்டிற்குத் தர வேண்டிய பொருட்கள்: தாமாகவே தேர்ந்தெடுக்க வசந்தத்தைப் பற்றிய கவிதைகள், வார்த்தைகளையும் படங்களையும் இணைக்கும் பயிற்சி அடங்கிய தாள்கள். (காரிய ரீதியான வேகம், நட்புத் தொனி.) நேரம்— எஞ்சிய நிமிடங்கள்.

''இந்த பாக்கெட்டுகளில் கவிதைகளும், இணைக்க வேண்டிய படங்களும் வார்த்தைகளும் அடங்கிய தாள்கள் உள்ளன. பயிற்சியை நீங்கள் ஓய்வு நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். கவிதைகளை நாளைக்குள் படித்து, இவற்றில் உங்களுக்கு எது மிகவும் பிடித்துள்ளது என்று சொல்லுங்கள்.''

VIII. பாடத்தை முடித்து வைத்தல். (அன்பாக, மகிழ்ச்சிகரமான தொனி.)

''நமது பாடவேளை முடிவை நெருங்கிக் கொண்டிருக் கிறது. எனக்கு மகிழ்ச்சி, நீங்கள் புத்திசாலியானவர்களாக, கவனமுள்ளவர்களாக, விடாமுயற்சியுள்ளவர்களாக இருந் தீர்கள்! புதியவற்றை அறியும் ஆர்வமுள்ளவர்களாக நீங் கள் இருப்பதற்கு நன்றி! நீங்கள் வெகு வேகமாக முன்னேறு கின்றீர்கள், எனவே, அனேகமாக நான் உங்களுக்கு சிக்க லான வேலைகளைத் தயார்படுத்த வேண்டும்.''

''இப்போது எழுந்திருங்கள் பார்க்கலாம்!.. சிறுவர் களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பது நினைவில் இருக் கட்டும்!.. ஓய்வெடுங்கள்!..''

### இரண்டாவது பத்து நிமிட இடைவேளை

குழந்தைகள் பூந்தொட்டிகளுக்கு நீர் ஊற்றுகின்றனர், மீன்தொட்டியைக் கவனித்து சரிசெய்கின்றனர், தாழ்வா ரத்தில் விளையாடுகின்றனர், தம் விருப்பப்படி கரும்பலகை

யில் உள்ள சொற்களில் தப்பைக் கண்டுபிடித்துத் திருத்து கின்றனர், வார்த்தைகளை சரியான படங்களுடன் இணைக் கும் பயிற்சியைச் செய்கின்றனர்.

குழந்தைகள் செய்யும் காரியங்களிலும் பொழுது போக்கு களிலும் நானும் கலந்து கொள்கிறேன், அவர்கள் செய்யும் விஷயங்கள் மீது அக்கறை காட்டுகிறேன், அவர்களுடன் பேசுகிறேன். சாதாரண வேகம், பிரதான தொனி.

## கலைப் பாடம்

அடுத்தபடியாக எனது பாடத் திட்டத்தில் கலைப் பாடத்தின் உள்ளடக்கமும் இதை எப்படி நடத்த வேண்டும் என்பதும் எழுதப்பட்டுள்ளன. இப்பாடத்தை நான் மாதத் தில் 2—3 முறை நடத்துகிறேன். நுண்கலை, இசை, நட னம், ஒப்பனை, பொம்மலாட்டம், தாள இசை, இசை நாடகங்களை அமைத்தல், பாடங்களுக்குப் பின் படித்தல், உழைப்பு ஆகிய பாடங்களுக்கு முன் அல்லது இவற்றின் சாரத்தை செழுமைப்படுத்தும் வகையில் கலைப் பாடங் களை நடத்துகிறேன். கலை, மக்களின் வாழ்வில், நம் ஒவ்வொருவரின் வாழ்வில் இதன் முக்கியத்துவம் பற்றிய பொதுவான கருத்தை இப்பாடங்களில் தர முயலுகிறேன். எனது ஆறு வயதுக் குழந்தைகளுக்குக் கிட்டக்கூடிய கலைப் படைப்புகளில் ஆசிரியரின் உணர்வுகள், உறவுகள், சிந்தனையைப் ''படிக்கும்'' திறமையை அவர்களிடம் வளர்க்கவும், தமது சிந்தனைகள், இன்ப துன்பங்களின் எதிரொலியைக் காண அவர்களுக்குச் சொல்லித் தரவும் இப்பாடங்கள் எனக்கு உதவுகின்றன.

சின்னஞ்சிறு பள்ளி மாணவர்களின் வாய்ப்புகள் கலை யின் உச்சியிலிருந்து இப்படித் ''தள்ளியிருப்பதைப்'' போன்ற ஒரு உணர்வைக் கண்டு யாரும் அஞ்ச வேண்டாம். பலநூற் றாண்டுகளாக வளர்ந்து வரும் ஒரு பெரிய மரத்தின் கீழ் விளையாடும் குழந்தைகளை நினைத்துப் பாருங்கள். குழந்தைகள் ஒருவேளை மர உச்சிக்கு ஏற விரும்பினாலும் அவர்களால் முடியாது. ஆனால் கிளைகளில் ஏறி விளை யாட அவர்களால் முடியும். இவ்வாறாக இவர்கள் இந்த மரத்தின் கீழ் (இதைக் கலையுடன் ஒப்பிடலாம்) வளருகின்ற னர். அவர்கள் மரக் கிளைகள் வரை, அதாவது கலையின்

தனிப்பட்ட பிரிவுகள் வரை எட்டிப் பிடிக்கின்றனர். இதை இவர்கள் அருகிலிருந்தும் தொலைவிலிருந்தும் பார்த்து யோசிக்கின்றனர், படிப்படியாக—ஆனால் இளம் வய திலேயே—கலையின் பன்முகத் தன்மையின் முழுமையை அறியத் துவங்குகின்றனர், மரத்தின் மீதேறி உச்சியிலிருந்து உலகைப் பார்த்து, மக்களின் வாழ்வையும் தம் வாழ்வையும் அறியக் கற்றுக் கொள்ள சக்தியைத் திரட்டுகின்றனர்.

எனது பாடத் திட்டத்தின்படி இன்றைய கலைப் பாடத் தில் குழந்தைகளுக்குப் பின்வருமாறு சொல்வேன்: ''சவ் ராசவ் எனும் ஓவியர் வரைந்த 'ரூக் பறவைகள் பறந்து வந்தன' எனும் ஓவிய மாதிரியை உங்களுக்கு காட்டுவேன், பின் லாடோ அசாதியானியின் 'வசந்தம்' எனும் கவிதை யைப் படிப்பேன், பின் இசையமைப்பாளர் செர்கேய் ரஹ் மானினவின் 'வசந்தம் நடைபோடுகிறது' எனும் இசைநாட கத்தைச் சேர்ந்து கேட்போம். வசந்தத்திற்கு அர்ப்பணிக்கப் பட்ட இந்த மூன்று படைப்புகளிலும் ஒரு ஓவியர், ஒரு கவிஞர், ஒரு இசையமைப்பாளர் ஆக மூவர் ஒரே உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் தம் படைப்புகளில் எந்த மனநிலையை வெளிப்படுத்த விரும்பினார்கள், இவர் கள் என்ன சொல்ல விரும்பினார்கள் என்று நாம் கண்டு பிடிக்க வேண்டும்.''

முதலில் ஓவிய மாதிரியைக் காட்டுவேன், கவிதையைப் படிப்பேன், பின் வகுப்பில் இசை ஒலிக்கும். குழந்தைகள் தம் உணர்வுகளில் ஆழமாக மூழ்கவும், இதன் மூலம் படைப் பாளர்களின் உணர்வுகளில் மூழ்கவும் உதவும் பொருட்டு, அவர்களுக்கு ஓவியத்தை இன்னுமொரு முறை காட்டுவேன், கவிதையைப் படிப்பேன், இசையை ஒலிக்கச் செய்வேன். பின் ஓவியர், கவிஞர், இசையமைப்பாளர் பற்றி பேசுவேன். முந்தைய கலைப் பாடங்களில் குழந்தைகள் பல்வேறு ஓவிய மாதிரிகளையும் படங்களையும் பார்த்தனர், இசையைக் கேட்டனர், கவிதைகளைப் படித்தனர். ''இவற் றின் ஆசிரியர்கள் தம் படைப்புகளில் எந்த மனநிலையைப் பிரதிபலித்துள்ளனர்? இவர்கள் சொல்ல விரும்பியது என்ன?'' என்ற என் கேள்விக்குப் பின்வரும் பதில்கள் கிடைத்தன:

'' 'அழகாயிருக்கிறது, இல்லையா!' என்கிறார் ஓவியர்.''

''இசையமைப்பாளர் தனக்கு மிகவும் சோகமாயிருப்

பதாகக் கூறுவதைப் போல் உள்ளது. நான் இந்த இசையைக் கேட்ட போது எனக்கும் சோகமேற்பட்டது.''

'' 'எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. என்னோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்!' என்கிறார் கவிஞர்.''

''ஓவியர் அனேகமாக அன்பானவராக இருந்திருக்க வேண்டும். அவருடைய படங்கள் என்னிடம் சோகத்தை ஏற்படுத்துகின்றன.''

இதற்கு மேல் என் வகுப்புக் குழந்தைகள் இதுவரை செல்லவில்லை.

### நீண்ட இடைவேளை

நாங்கள் கீழிறங்கி முற்றத்திற்குச் செல்வோம், சுவரில் இலக்கை மாட்டி விட்டு, பத்தடி தள்ளி நின்று வில்லிலிருந்து அம்பெய்ய ஆரம்பிப்போம். ஒவ்வொருவரும் எப்படி இலக்கில் படுகின்றனர் என்ற விவரங்களைப் போட்டி அட்டவணையில் எழுதுவோம்; ஐந்து நாட்களாக நடக்கும் இப்போட்டி அடுத்த வாரம் முடிவடையும். சிறுவர்கள் மத்தியில் சாஷா முன்னணியில் இருக்கிறான், அவனுக்கு அடுத்தபடியாக தாத்தோ, நான் கடைசி இடத்திற்கு முந்தைய இடத்தில் இருக்கிறேன். சிறுமிகள் மத்தியில் எலேனா, ஏக்கா, மாக்தா ஆகியோர் முன்னணியில் உள்ளனர்.

### உழைப்புப் பாடம்

இப்பாடவேளையின் போது பள்ளிக்கு அருகில் உள்ள நர்சரிப் பள்ளியிலிருந்து சிறு குழந்தைகளைக் கவனித்து கொள்ளும் பெண்மணி எழுதிய கடிதத்தைப் படித்துக் காட்டுவேன். கெட்டியான காகிதத்திலிருந்து 40 சிறு பெட்டிகளைச் செய்து தருமாறு இவர் கடிதத்தில் என் வகுப்புச் சிறுவர் சிறுமியரைக் கேட்டிருக்கின்றார்; இப்பெட்டிகளில் எண்ணுவதற்காகச் சிறு கற்களைப் போட்டு வைக்கலாம். அவர் எப்படிப்பட்ட சிறு பெட்டி செய்ய வேண்டுமென காட்டுவதற்காக ஒரு மாதிரி பெட்டியையும் அனுப்பியிருக்கின்றார். குழந்தைகள் இந்த வேண்டுகோளை மகிழ்ச்சியோடு நிறைவேற்றுவார்களென நம்புகிறேன். அவர்கள் பின்வருமாறு சொல்லும்படி நான் பேச்சு கொடுப்பேன்:

''இந்த மாதிரிப் பெட்டியை விட அழகான பெட்டிகளைச் செய்வோம்!''

''வரைதல் பாடத்தில் கற்றுக் கொண்டபடி இவற்றைச் சுற்றி அலங்கரிப்போம்!''

''ஒவ்வொருவரும் தலா 2—3 பெட்டிகளைச் செய்யட்டும். அப்போதுதான் அழகான 40 பெட்டிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.''

பின்னர் இவற்றை எப்படிச் செய்வதென நான் சொல்லித் தருவேன். நானும் எப்படிச் செய்கிறேன் என்று வாய் விட்டு சொல்லியபடியே குழந்தைகளோடு சேர்ந்து பெட்டியைச் செய்வேன், அது எப்படியுள்ளது என்று மதிப்பிடும்படி குழந்தைகளிடம் சொல்வேன். 35 நிமிடப் பாடவேளையின் போது இவ்வேலையை முடிக்க முடியாது. எனவே இதை வீட்டில் தொடருமாறு குழந்தைகளிடம் சொல்வேன். ''மூன்று நாட்கள் கழித்து இவற்றை நர்சரிப் பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென'' அவர்களிடம் கூறுவேன்.

## பாடங்களுக்குப் பின்

பின்னர் கூடுதல் பள்ளி நேரம் துவங்கும். இந்த சமயத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பெண்மணிகளும் குழந்தைகளோடு பல விதமான வேலைகளில் ஈடுபடப் போகும் பெற்றோர்களும் சேர்ந்து முடிவு செய்கின்றனர். குழந்தை வளர்ப்பு பற்றி நாங்கள் கூட்டாக வகுத்த திட்டத்தின் பொது லட்சியங்களும் கோட்பாடுகளும்தான் இங்கும் அடிப்படையில் உள்ளன. ஒவ்வொரு வார இறுதியிலும் நாங்கள் சந்தித்து ஒவ்வொருவரும் செய்து வரும் காரியத்தை ஒத்திசைவிக்கின்றோம். இன்று இசை நாடக ஒத்திகை, பூங்காவில் உலாவுதல், புத்தகம் படித்தல், கார்டூன்படம் பார்த்தல் முதலியன எங்கள் திட்டத்தில் உள்ளன.

## கல்வி முறையியல் தவறுகள்

எனது கற்பனையில், எனது முழு இசைக் குறியீட்டில் இன்றைய பள்ளி தினம் மேற்கூறியவாறுதான் காட்சியளிக்கிறது. இது இதே மாதிரி இருக்குமா? ஒருவேளை சிறிது மாறுபடலாம்.

நான் திட்டமிட்டிருந்த எல்லாவற்றையும் குழந்தைகளிடம் கேட்க முடியாமல் போகலாம். எப்போதும் அதிகமான விஷயங்களுக்கு, கேள்விகளுக்குத் தயாராவதையே நான் விரும்புகிறேன். அப்போதுதான், திடீரென ஓய்வு நேரம் கிடைத்தால் நேரடியாகப் பாடவேளையின் போதே அவ்வளவு முக்கியமற்ற, சுவாரசியமற்ற விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்வதைத் தவிர்க்கலாம். வகுப்பில் அவர்கள் செய்ய முடியாதவற்றை பின்னர் அவர்கள் தாமாகவே பதில் கண்டுபிடிக்க விட்டு விடலாம்—கரும்பலகையில் இவை எழுதப்பட்டிருந்தால் அதை அழிக்காமல் விட்டு விடலாம், தாளில் எழுதப்பட்டிருந்தால் கரங்களில் வினியோகித்து விடலாம்.

முறையியல் தவறின் காரணமாக ஏற்படும் இன்னொரு விதமான மாற்றத்தையும் எதிர்பார்க்க வேண்டும்.

இதோ ஒரு உதாரணம்.

கணக்குகளைத் தாமாகவே உருவாக்க குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்க நான் அக்டோபர் நடுவிலேயே திட்டமிட்டிருந்தேன்.

''பாடப் புத்தகத்தின் 26வது பக்கத்தைத் திறவுங்கள்... 2ம், 6ம்! அங்கே ஒரு படம் உள்ளது. அதைப் பார்த்து நீங்களே ஒரு கணக்கைத் தயாரியுங்கள்.''

அப்படத்தில் ஒரு புறம் 4 கோழிக் குஞ்சுகள் சேர்ந்தாற் போலும் ஒரு புறம் ஒரு கோழிக் குஞ்சு தனியாகவும் உள்ளன. இந்தத் தனியான குஞ்சு அந்த 4 குஞ்சுகளை நோக்கி ஓடுகிறது. எனவே, ஒரு கூட்டல் கணக்கு உருவாக்கப்பட வேண்டும்; ''முதலில் 4 கோழிக் குஞ்சுகள் இருந்தன, இன்னுமொரு குஞ்சு ஓடி வந்தது. இப்போது எவ்வளவு கோழிக் குஞ்சுகள் உள்ளன?''

முறையியல் சிபாரிசுகளின்படி, குழந்தைகள் கணக்கை உருவாக்கிய பின், நான் பின்வரும் கேள்விகளை அவர்களிடம் கேட்க வேண்டும்: ''கணக்கில் எவ்வளவு நிபந்தனைகள் உள்ளன?.. அவற்றைச் சொல்லுங்கள்!.. கணக்கில் என்ன கேள்வி உள்ளது?.. எப்படி கணக்கை எழுதுவது?.. கணக்கைப் போடுங்கள்!.. என்ன விடை கிடைத்தது?''

கணக்கு, அதன் நிபந்தனைகளைப் புரிந்து, யோசித்து முடிவு செய்ய குழந்தைகளுக்குச் சொல்லித் தருவதுதான் இதன் நோக்கம்.

''சரி, கணக்கை யோசித்து விட்டீர்களா?''

நீக்கோ பதில் சொல்கிறான்: ''கோழிக் குஞ்சுகள் தானியத்தைக் கொறிக்கின்றன''.

''இதுவல்லவே கணக்கு! கணக்கை உருவாக்க வேண்டும், வாக்கியத்தை அமைக்க வேண்டாம்.''

நீயா சொல்லுகிறாள்: ''4 கோழிக் குஞ்சுகள் இருந்தன, இன்னுமொன்று ஓடி வந்தது. ஆக 5 கோழிக் குஞ்சுகள் உள்ளன''.

''நீங்கள் கணக்கை உருவாக்க வேண்டுமே தவிர விடையைச் சொல்ல வேண்டாம்.''

ஏக்கா சொல்லுகிறாள்: ''4 கோழிக் குஞ்சுகள் இருந்தன. இன்னுமொரு குஞ்சு ஓடி வந்தது. இப்போது எவ்வளவு கோழிக் குஞ்சுகள் உள்ளன? இப்போது 5 கோழிக் குஞ்சுகள் உள்ளன''.

அதே பக்கத்தில் உள்ள இன்னொரு படத்தைப் பார்த்து ஒரு கணக்கை உருவாக்குமாறு முன்மொழிகிறேன். அதே மாதிரி நடக்கிறது.

**விக்டர்:** ''பறவைகள் மரத்தின் மீது உட்கார்ந்திருக்கின்றன.''

**நான்:** ''இது வாக்கியம். நமக்கு வேண்டியது கணக்கு.''

**தாம்ரிக்கோ:** ''மரத்தில் 5 பறவைகள் உட்கார்ந்திருந்தன. ஒரு பறவை பறந்து விட்டது. 4 பறவைகள் மீதியுள்ளன''.

**நான்:** ''நீ கணக்கிற்கான விடையை அல்லவா சொல்லுகிறாய்!''

**கியோர்கி:** ''5 பறவைகள் இருந்தன. ஒரு பறவை பறந்து விட்டது. எவ்வளவு பறவைகள் மரத்தில் மீதியுள்ளன? 4 பறவைகள் மீதியுள்ளன.''

இல்லை, இந்தக் கணிதப் பாடத்தில் கணக்குகளை உருவாக்கக் குழந்தைகளுக்கு என்னால் சொல்லித் தர இயலவில்லை, எனது கேள்விகள் அவர்களது யோசனைகளைத் தட்டி விடவில்லை.

ஆனால் எனது கேள்விகள் மட்டுமா இதற்குக் காரணம்?

இங்கே இக்குழப்பத்திற்கான இரண்டு அம்சங்களை நான் கண்டுபிடித்தேன்.

முதலாவதாக, இந்தக் கணித மினி-பாடத்திற்கான இக்கேள்விகளைக் கேட்ட போது, அதற்கு முன் தாய் மொழி

மினி-பாடம் இருந்ததை நான் கவனத்தில் கொள்ளவில்லை. தாய் மொழிப் பாடவேளையில் நாங்கள் வாக்கியங்களை அமைப்பதில் பயிற்சி பெற்றோம்: நான் அப்போது குழந்தைகளுக்குப் படங்களைக் காட்டி வாக்கியங்களை அமைக்கச் சொன்னேன். ஐந்து நிமிட இடைவேளைக்குப் பின் நாங்கள் கணிதப் பாடத்தை ஆரம்பித்தோம். ஆனால் குழந்தைகளின் மனதிலிருந்து முந்தைய பாடவேளை அகலவேயில்லை. எனவேதான், கணிதப் பாடத்தின் போது, ''கணக்கை உருவாக்குங்கள்'' என்று நான் கூறியதை ''வாக்கியங்களை அமையுங்கள்'' என்று அவர்கள் புரிந்து கொண்டனர். எனவேதான், ''கோழிக் குஞ்சுகள் தானியத்தைக் கொறிக்கின்றன'' என்று இலிக்கோவும், ''பறவைகள் மரத்தில் உட்கார்ந்திருக்கின்றன'' என்று விக்டரும் கூறினார்கள்.

இதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

''இதற்கு முன் நாம் வாக்கியங்களை அமைத்தோம். இப்போது கணக்குகளை உருவாக்குவோம்'' என்று தெளிவாக, புரியும்படி குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். மேலும், எப்படி கணக்கை உருவாக்குவது என்று நினைவுபடுத்த வேண்டும். இப்படிச் செய்தால் நாம் ஒன்று சொல்ல, குழந்தைகள் அதை வேறு மாதிரி புரிந்து கொள்ளும் குழப்பத்தைத் தவிர்க்கலாம்.

இரண்டாவது அம்சம் முறையியலிலேயே அடங்கியுள்ளது. உணர்வு பூர்வமான கல்வியை எளிதாக்குவதற்காக நாம் எல்லாவற்றையும் செய்யப்போக, சில சமயங்களில் தலைகீழாக நேர்ந்து விடுகிறது. காட்சிக் கருவி கல்வி முறை பற்றிய முற்றிலும் திட்டவட்டமானதாயில்லாத கோட்பாட்டைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி பாடநூல் எனக்கு ஒரு படத்தை முன்மொழிந்தது; இதில் 4 கோழிக் குஞ்சுகள் தனியாகவும், இவற்றை நோக்கிச் செல்லும் ஒரு குஞ்சு தனியாகவும் வரையப்பட்டுள்ளன. இன்னும் என்ன வேண்டும் என்று தோன்றும். எல்லாம் கண் முன் தெளிவாக உள்ளது. 4 கோழிக் குஞ்சுகள் இருந்தன, இன்னுமொன்று ஓடி வந்தது. இப்போது எவ்வளவு உள்ளன? ''என்ன குழந்தைகளே, இவ்வளவு எளிய கணக்கை அமைப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? எல்லாம்தான் கண் முன் உள்ளனவே! உங்கள் திறமைகளுக்கு எல்லைகளே இல்லையென்றும் உங்களால் பொதுமைப்படுத்திச் சிந்திக்க முடியுமென்றும் உங்

களுக்குக் குறிக் கணிதம் சில சமயங்களில் ஒரு விளை யாட்டு என்றும் நவீன மனவியல் நிபுணர்கள் கூறுகின்ற னரே!'' ஆனால், 20 வரை சுலபமாகக் கூட்டவும் கழிக்கவும் தெரிந்த என் வகுப்புக் குழந்தைகளுக்கு இவ்வளவு சுலப மான வேலையைச் செய்ய முடியவில்லை.

ஆனால், எண்ணிக்கை ரீதியில் இப்படி கண் முன் வைக்கப் பட்ட இந்தப் பயிற்சி உண்மையிலேயே நமது கேள் விகளின் பதில்களைக் குழந்தைகள் புரிந்து கொள்வதை எளிதாக்குகிறதா? சில சமயங்களில் கல்வி முறை குழந்தை யின் மனநிலையிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது, கண்கூடான கோட்பாட்டை எப்படிப் பரவலாகப் பயன் படுத்துகிறது என்று நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ''குழந்தைகள் பிம்பங்களின் மூலம்தான் சிந்திக்கின்றனர், மனோதத்துவ இயல் இதை நிரூபித்துள்ளது'' என்று ஒரு கல்வி முறையியல் நிபுணர் கூறி பாடநூலில் 4 கோழிக் குஞ்சுகளின் படத்தையும் இவற்றை நோக்கிச் சொல்லும் இன்னுமொரு குஞ்சின் படத்தையும் வரைவார். இதோ பிம்பம், இப்போது கணக்கை உருவாக்க வேண்டும். ஆனால் குழந்தைக்கோ கணக்கை உருவாக்க கடினமாக உள்ளது. ஏன்? பிம்பங்களின் மூலம் சிந்திக்கின்ற திறமையை அவன் இழந்து விட்டானா? இதுவல்ல விஷயம். விஷயம் என்ன வெனில், இங்கே பிம்பங்கள் கணக்கையே பொருளற்ற தாக்கி விட்டன. ஏன் கணக்கை உருவாக்க வேண்டும்? இதை உருவாக்குவதற்கான காரணம் எங்கே உள்ளது? இங்குதான் எல்லாம் தெட்டத் தெளிவாக உள்ளதே: 5 கோழிக் குஞ்சு கள். அவ்வளவுதான்! கணக்கும் விடையும். ஏதாவது தெரி யாத ஒன்றைக் கண்டுபிடிக்கத்தான் கணக்கு தேவை, இங்கே அந்தத் ''தெரியாதது'' ஏற்கெனவே தெரிந்ததாக்கப்பட் டுள்ளது. குழந்தை புத்திசாலித்தனமாகச் செயல்படுகிறான்: ''கணக்கை உருவாக்கு'' என்று நாம் சொன்னதை, ''கணக் கைப் போடு'' என்று அவன் புரிந்து கொள்கிறான். எனவே உடனே, எவ்வித பெரும் யோசனைகளும் இன்றி அதைப் போட்டு விடையைத் தருகிறான். குழந்தைகள் யோசிக்க வேண்டும் என்று நாம் விரும்பினால் நாம் கண்கூடாகத் தருபவற்றில் பதிலை கண்கூடாகக் காட்டும் அம்சம் (இது யோசிப்பதை அகற்றி விடும்) இருக்கக் கூடாது.

பார்த்தீர்களா! கல்வி போதிக்கும் நிகழ்வுப் போக்கு

எவ்வளவு சிக்கலானதாக சில சமயங்களில் மாறுகிறது.

எனது முறையியல் தவறினால் சமீபத்தில் இன்னுமொரு சுவாரசியமான சம்பவம் நடந்தது. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மனித நட்புறவு மற்றும் பரஸ்பர உறவுகளின் முக்கியத்துவம் குறித்துக் குழந்தைகளுடன் உரையாடுவதென முடிவு செய்தேன். ''மரத்திற்குப் பலம் வேர்கள், மனிதனுக்குப் பலம் நண்பர்கள்'' என்ற ஜார்ஜிய பழமொழியின் உதாரணத்தில் இதைச் செய்வதென தீர்மானித்தேன். ''மரத்திற்கு எது பலம் தருகிறது? மனிதனுக்கு எது பலம் தருகிறது?'' என்று கேள்விகள் கேட்க வேண்டும்; பின் குழந்தைகளின் பதில்களின் அடிப்படையில் இவர்களை மானுட நட்பைப் பற்றிய பேச்சிற்கு இட்டுச் செல்ல வேண்டும்; ''மனிதனுக்குப் பலம் நண்பர்கள் என்று ஏன் மக்கள் கூறுகின்றனர்?'' என்று கேட்க வேண்டும் என்பது என் திட்டம். ஆனால் எல்லாம் முற்றிலுமாக மாறியது.

நான் பழமொழியைக் கரும்பலகையில் எழுத, குழந்தைகள் அதைப் படித்தனர்.

''சரி, மரத்திற்குப் பலம் எது?'' என்று நான் கேட்டேன்.

''வேர்கள்!''

''மனிதனுக்கு?''

கோத்தே சொல்கிறான்: ''எலும்புக் கூடு.''

''என்ன?!'' என்று நான் வியப்போடு கேட்டேன்.

''மனித உடலுக்கு அடிப்படை எலும்புக் கூடு.''

பழமொழியின் மறைபொருளை கோத்தே புரிந்து கொள்ளவில்லையா என்ன?

''எலும்புக் கூட்டில் உடல் எப்படி நிலையாக ஒட்டிக் கொண்டிருக்கிறது?'' என்று மற்ற குழந்தைகள் கேட்டனர்.

''மனிதனுக்கு முதுகெலும்பு இல்லாமலிருந்தால் அவனால் நிலையாக இருக்க முடியாது. முதுகெலும்பு இங்கே ஆரம்பமாகி இங்கே முடிகிறது!'' என்று விரல்களால் சுட்டிக் காட்டியபடியே கோத்தே கூறினான்.

''கோத்தே சொல்வது சரி... வரைந்து காட்டட்டுமா?''

மனித உடலின் உள் உறுப்புகளின் அமைப்பைப் பற்றிய படத்தை எனக்குப் பரிசாக வழங்கிய அதே சிறுவன்தான் இதற்குக் காரணம். இப்போது அவன் மனித எலும்புக் கூட்டைப் பற்றிய புதிய விவரங்களை அறிந்து கொண்டிருக்கிறான். அவன் தன் படங்களைக் குழந்தைகளுக்குக் காட்டி

எங்கே விலா எலும்பு, எங்கே மண்டை ஓடு என்றெல்லாம் விளக்கினான்; கோத்தேவிடமும் தன் ஞானத்தை அவன் பகிர்ந்து கொண்டிருக்கிறான். கோத்தே புதிய விவரங்களின் மனப்பதிவில் இருந்ததால் ''மனிதனுக்கு பலம் எது?'' என்ற என் மறைமுகமான கேள்விக்கு நேரடியாகப் பதில் சொன்னான்.

இந்த விஷயம் மற்ற குழந்தைகள் மத்தியில் பேரார்வத்தை ஏற்படுத்தியது.

''அவன் எலும்புக் கூட்டை வரைந்து காட்டட்டும்!'' என்று அவர்கள் கேட்டனர்.

இவ்வாறாக, நட்புறவைப் பற்றிய ஆசிரியரியல் இசை, மனித எலும்புக் கூட்டின் அமைப்பைப் பற்றிய பேச்சால் மாற்றப்பட்டது...

### மாயா மட்டும் நோய்வாய்ப்படாதிருந்தால்...

...என்றும் போல் இன்றும் எனது பாடங்களுக்கான திட்டத்தை மேசையில் வைத்து, இதன் பல அம்சங்கள் மனப்பாடமாகத் தெரியும் என்ற போதிலும் அடிக்கடி பார்ப்பேன்.

குழந்தைகளின் பள்ளி வாழ்க்கையை எனது முழு இசைக் குறியீடுதான் வழிநடத்த வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை, ஏன் ஒருவேளை இது அவசியமற்றதாகக் கூட இருக்கலாம். ஏனெனில் எனது முழு இசைக் குறியீடு குழந்தைகளின் உண்மையான உணர்வுகள், அக்கறைகள், புதியவற்றை அறியும் ஆர்வங்கள் முதலியவற்றை பிரதிபலிக்கும், இவர்களுக்கு மகிழ்ச்சிகரமான பள்ளி நாளை வழங்கும், இவர்களின் முன்னோக்கிய அணிநடையை வழிநடத்தும், சுயமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையின் அடிப்படையில் அவர்களை வளர்க்கும். எனது பூர்வாங்க யோசனைகளுக்கும் குழந்தைகளின் விருப்பங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் தோன்றினால் அப்போது நான் தேர்ந்தெடுத்த முறையின் குறைகள் உடனே வெளிப்படும். இது குழந்தை வளர்ப்பின் புறவயப் பொருளாக குழந்தைகளையும் அகவயப் பொருளாக என்னை நானேயும் ஆழமாக அறிந்து கொள்ள அடிப்படையைத் தரும்.

* * *

நான் கரும்பலகையில் கணிதப் பாடத்திற்கான கடைசிக் கணக்குகளை எழுதிக் கொண்டிருக்கிறேன். தாழ்வாரத்திலோ ஏற்கெனவே பள்ளி நாள் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேன்மேலும் வலுத்து வரும் குழந்தைக் குரல்களில் ஒரு சில தனிப்பட்ட வார்த்தைகள் மட்டும் காதில் விழுகின்றன.

''பத்து முக்கோணங்கள்!''

''இல்லை, எட்டுதான், என்ன பந்தயம்!''

''இங்கே என்ன வார்த்தை வருமென நான் கண்டுபிடித்து விட்டேன்!''

''இது என்ன பெரிசு! நானும்தான் கண்டுபிடித்து விட்டேன்!''

''சொல்!''

''விண்வெளி!''

''இல்லை, வானொலி!''

''இங்கேயுள்ளதை என்னால் வாசிக்கமுடியும்: 111,111.''

''இந்த எழுத்துகளைக் கொண்டு நான் மூன்று வார்த்தைகளை உருவாக்கி விட்டேன்.''

''இது என்ன பெரிசு! ஐந்து வார்த்தைகளை உருவாக்கு, அப்போது பெருமையடித்துக் கொள்ளலாம்.''

''இதோ பார், எவ்வளவு சுவாரசியமான கணக்கு!''

''இதை நாம் கணிதப் பாடத்தில் போடுவோம்.''

''இந்த எண்கள் ஏன் சதுரங்களுக்குள் எழுதப் பட்டுள்ளன என்று சொல்லட்டுமா?''

''வேண்டாம், நானே கண்டுபிடிப்பேன்!''

சிலர் தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையை விட்டு அகல, புதிதாக சிலர் வந்து, இதுவரை நடந்த விவாதத்தைத் திரும்ப வேறு விதங்களில் நடத்துகின்றனர்.

இனிய மின்சார மணி ஒலிக்கிறது.

''குழந்தைகளே, வகுப்பறையினுள் வாருங்கள்! சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பது நினைவில் இருக்கட்டும்!''

கணிதப் பாடத்தை ஆரம்பிக்கிறேன்.

''குழந்தைகளே, வணக்கம்!''

''வணக்கம்!''

''என்ன புது விஷயங்கள்?''

**மாயா:** ''எனக்கு ஜுரமாக உள்ளது. அம்மா விடமாட்

டேன் என்றாள். ஆனாலும் நான் கேட்காமல் வந்துவிட்டேன்.''

**நான்:** ''ஜுரமா? இப்போது உனக்கு எவ்வளவு ஜுரம் என்று பார்ப்போம்.''

> *ஆசிரியரே! நீங்கள் வகுப்பறையில் எப்போதும் முதலுதவிப் பெட்டியை வைத்திருங்கள், குழந்தைகளின் நோய்களைப் பற்றி, குறிப்பாகத் தொற்று நோய்கள் பற்றியும் இவை எப்படித் தோன்றுகின்றன என்பது பற்றியும் அறிந்திருங்கள்! ஆசிரியரே! நீங்கள் முதலுதவி மருத்துவராயும் இருக்க வேண்டும்.*

**மாயா:** (பயந்தபடியே) ''எனக்கு ஜுரம் இருந்தால் நீங்கள் என்னை வீட்டிற்கு அனுப்பி விடுவீர்களா?''

**நான்:** ''பார்ப்போம். நீ அம்மா சொல்வதைக் கேட்க வேண்டும்!''

''நான் உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா?'' என்று அவள் கேட்கிறாள்.

''சொல்!'' என்கிறேன் நான்.

அவள் ஓடி வருகிறாள்.

''ஆனால் காதில்தான் சொல்வேன்'' என்று அவள் கூறுகிறாள்.

நான் குனிய, அவள் என் காதருகே வருகிறாள். ஆனால் ஒன்றும் பேசாமல் மௌனம் சாதிக்கிறாள்.

''இல்லை, அப்புறம் சொல்வேன்'' என்று சொல்லி விட்டுத் தன்னிடத்திற்கு ஓடுகிறாள்.

லேலா: ''நான் ஒரு புதிய படம் வரைந்திருக்கிறேன். இதை வகுப்பறையில் மாட்டலாமா?''

**நான்:** ''உனக்குப் பிடித்திருந்தால் நிச்சயம் மாட்டலாமே.''

என் வரை வகுப்புக் குறியீட்டின் இரண்டாவது பகுதிக்கு வருகிறேன்:

''நாம் இன்று என்ன படிக்கப் போகின்றோம் தெரியுமா?''

நான் என்னென்ன கணக்குகள், பயிற்சிகளை அவர்களுக்குத் தயாரித்துள்ளேன் என்று குழந்தைகள் கேட்டதும், விரைவிலேயே பாடத்தைத் துவங்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்குத் தோன்றுகிறது.

''முதலில் மாயாவிற்கு எவ்வளவு ஜுரம் என்று பார்ப்போம்.''

அவள் வெப்பமானியை என்னிடம் நீட்டுகிறாள். அதில் 38.3°C உள்ளது. உடனே மருத்துவரைக் கூப்பிட வேண்டும், பெற்றோர்களை வரவழைக்க வேண்டும்!

மாயா பதட்டப்படுகிறாள்: ''வீட்டிற்குப் போக மாட்டேன்!''

''இரண்டு, மூன்று நாட்கள் படுத்திருந்தால் சரியாகிவிடும். பின் பள்ளிக்கு வரலாம்'' என்று நான் சாந்தப்படுத்துகிறேன்.

குழந்தைகளும் பதட்டப்பட்டு, அவளை சாந்தப்படுத்துகின்றனர்:

''நோயோடு விளையாடக் கூடாது!''

''நான் உனக்கு போன் செய்து, வகுப்பில் நடந்ததை எல்லாம் சொல்வேன்.''

''மாயா, புத்திசாலிப் பெண்ணாயிரு!''

மருத்துவர் வந்து சிறுமியை அழைத்துச் செல்கிறார்.

''பார்த்தீர்களா, மாயா எப்படிப்பட்டவள், அவள் உங்கள் மீது எவ்வளவு ஆசை வைத்திருக்கிறாள், பள்ளியையும் பாடத்தையும் எவ்வளவு விரும்புகிறாள்! எனவேதான் ஜுரம் இருந்தும் இங்கு வந்திருக்கிறாள், உங்களுடன் சேர்ந்து இருக்க ஆசைப்படுகிறாள்!''

**இராக்ளி:** ''அவளைப் பார்த்தால் பாவமாயுள்ளது!''

**சூரிக்கோ:** ''அவளுக்கு சீக்கிரம் உடல்நிலை சரியாகிவிடும்!''

**நான்:** ''வாருங்கள், பாடத்தைத் தொடருவோம்!''

ஆனால் ஏற்கெனவே 15 நிமிடங்கள் கழிந்து விட்டன. எனவே, நான் திட்டமிட்டிருந்ததில் 1/3 பங்கை (கவன உணர்வை வளர்க்கும் பயிற்சிகள்) சுருக்கமாக நடத்துகிறேன். எஞ்சிய பகுதி திட்டமிட்டபடியே நடக்கிறது.

''பாடம் எப்படி இருந்தது?'' என்று பாட இறுதியில் நான் கேட்டதற்கு லாலி பின்வருமாறு பதில் சொன்னாள்:

''மாயா மட்டும் நோய்வாய்ப்படாமலிருந்தால் பாடம் இன்னமும் மகிழ்ச்சிகரமானதாயிருக்கும். நான் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். அவளுக்கு இப்போது எப்படியுள்ளது என்று தெரிந்து கொள்ள முடியுமா?''

நாங்கள் எல்லோருமே மாயாவிற்காகக் கவலைப்பட்டோம் என்று தெரிந்தது.

இதோ மருத்துவர் வருகிறார்.

''மாயாவிற்கு எப்படியுள்ளது?''

''பயம் ஒன்றுமில்லை. அவளுக்கு ஜலதோஷம். அம்மா வந்து அழைத்துச் சென்று விட்டாள். பாடத்தை விட்டுச் செல்வதற்காக அவள் அழுது கொண்டிருந்தாள்.''

குழந்தைகள் அமைதியடைந்தனர். முதல் 10 நிமிட இடைவேளை திட்டமிட்டபடியே உற்சாகமாகக் கழிந்தது. கரும்பலகையிலிருந்த கணக்குகளைப் போட்டோம். அடுத்து தாய் மொழிப் பாடத்தைத் துவக்குகிறேன்.

### ''என் அப்பாவாக இருங்கள்...''

...திடீரென:

''பாருங்கள், வெண்பனி விழுகிறது!'' என்று சாஷா சந்தோஷமாகக் கூச்சலிட்டான்.

திபிலீசி நகரத்தில் மார்ச் மாத ஆரம்பத்தில் திடீரென வெண்பனி விழுமென நான் எதிர்பார்க்கவில்லை. குளிர் காலம் பூராவும் வெண்பனியில் விளையாட வேண்டுமென்ற என் வகுப்புக் குழந்தைகளின் கனவு நிறைவேறவேயில்லை; சூரிய ஒளி மிக்க நாட்களையடுத்து மழை நாட்கள் வந்தன, குளிருக்குப் பின் கதகதப்பான நாட்கள் வந்தன. வெண்பனி, வெண்பனிப் பொம்மைகள் பற்றியும், குளிர்காலத்தில் வெண் பனியில் பனிச் சறுக்கு விளையாடுவது பற்றியும் குழந்தை கள் கவிதைகளைப் படித்தனர், கதைகளைக் கேட்டனர், ஆனால் வெண்பனி விழவேயில்லை...

''வெண்பனி, வெண்பனி, வெண்பனி!'' என்று குழந்தை கள் கத்தியபடி ஜன்னல்களை நோக்கி ஓடுகின்றனர்.

வெண்பனி பெரும் திட்டுத் திட்டாக மேகத்திலிருந்து கொட்டுகிறது. பள்ளி முற்றம் வெண்பனியால் நிரம்புகிறது. நாங்கள் எவ்வளவு நாட்களாக இதற்காகக் காத்திருந்தோம்! ஒருவேளை எனது வகுப்புக் குழந்தைகளில் சிலர் இந்த அற் புதமான காட்சியை முதன் முதலாகப் பார்த்திருக்கலாம்.

''வெண்பனியை உருட்டி வீசி விளையாடலாம் வரு கின்றீர்களா?'' என்று நான் கேட்கிறேன்.

இதில் என்ன சந்தேகம், எல்லோருக்கும் சம்மதம்!

குழந்தைகள் மேலாடைகளை அணிகின்றனர். வரிசை யாக நிற்குமாறு நான் வற்புறுத்தவில்லை. அவசரமாகச் செல்ல வேண்டுமே. நாங்கள் முற்றத்திற்கு வருகிறோம்.

மகிழ்ச்சியை வருணிக்க வார்த்தையே இல்லை!

கலைப் பாடத்திற்குப் பதில் வெண்பனியை ஒருவர் மீது ஒருவர் எறிந்து விளையாடுகிறோம், வெண்பனியில் படுத்துப் புரள்கிறோம்.

பெரிய இடைவேளையின் போது ஒரு பெரும் வெண் பனிப் பொம்மையைச் செய்கிறோம்.

உழைப்புப் பாடத்திற்குப் பதில் பூங்காவிற்குச் சென்று பனிச் சறுக்கு விளையாட்டு விளையாடுகின்றோம்.

நேயாவுடன் சேர்ந்து பனிப் பொம்மையைச் செய் கிறோம்.

''எனக்கு உங்களுடன் ஒரு விஷயம் பேச வேண்டும்!''

அவள் ஒரு பிர் மரத்தடியில் நிற்கிறாள். அந்த மரத்தைப் பற்றி நான் குலுக்க அதன் மீதுள்ள வெண்பனி அவள் மீது விழுகிறது. அவள் சிரிக்கிறாள், கீழே விழுகிறாள்.

சாப்பிடப் போகலாமா?

இல்லை, இது நேரமில்லையே!

மரங்களின் மீதுள்ள வெண்பனியையும் சுற்றிலும் வெள்ளை வெளேரனக் காட்சியளிப்பதையும் பார்த்து ரசிக் கிறோம்.

நாங்கள் களைத்து விட்டோம். வெண்பனி கொட்டுவது நிற்கிறது.

திரும்பி வருகிறோம்.

எவ்வளவு மகிழ்ச்சிகரமான முகங்கள்! கன்னங்கள் எப் படிச் சிவந்து விட்டன!

விரல் நுனிகளும் மூக்கு நுனியும் உறைந்து விட்டனவா? பயப்பட ஒன்றுமில்லை!

விரைவில் எல்லாம் சரியாகிவிடும்.

ஆனால் நமக்கு இன்று எவ்வளவு மறக்க இயலாத அனு பவங்கள் கிட்டியுள்ளன!

நேயா என்னை விட்டுப் பிரியாமல் என் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள்.

''எனக்கு உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல, வேண்டும், பிறகு சொல்வேன்'' என்று திரும்பி வரும் பாதையில் செல் கிறாள்.

வகுப்பறையில் எங்களைச் சுத்தம் செய்து கொள் கிறோம்.

''சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் அல்லவா! சிறுமிகளுக்கு உதவுங்கள்!''

சிறுமிகள் மேல் கோட்டுகளைக் கழட்டவும் காலணிகளை மாற்றிக் கொள்ளவும் சிறுவர்கள் உதவுகின்றனர்.

சிறுமிகள் சிறுவர்களின் முகங்களைத் துண்டுகளால் துடைத்து விடுகின்றனர்.

''எவ்வளவு நன்றாக உள்ளது!''

''எவ்வளவு அருமையாக உள்ளது!''

''வெண்பனி ராணியைப் பற்றிய ஒரு கதையை உங்களுக்குச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்!..''

''டெஸ்கில் வசதியாக உட்காருங்கள்... கேளுங்கள்!..''

மெதுவாக, ரகசியம் சொல்வது போன்ற குரலில் தொடங்குகிறேன்:

''ஒரு காலத்தில்...''

அது ஒரு பெரிய கதை. குழந்தைகள் அசைவின்றி கவனமாகக் கேட்கின்றனர், பலர் குனிந்து, கண்களை மூடிக் கொண்டனர், ஒரு சிலர் தூங்கிவிட்டதைப் போலிருக்கிறது.

ஆனால் சாஷா தூங்கவில்லை. அவன் கண்களை மூடுவதும் திறப்பதுமாக இருக்கிறான். எப்போதும் ஜன்னலையே பார்த்தபடி இருக்கிறான். திடீரென கதையின் குறுக்கே வருத்தத்தோடு கூவுகிறான்:

''பாருங்கள், வெண்பனி கரைகிறது!''

குழந்தைகள் கதையைப் பற்றி மறந்து விட்டு மீண்டும் ஜன்னல்களை நோக்கிப் பாய்ந்தனர்.

கூரையிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது.

சிறிது நேரத்திற்கு முன் முற்றம் முழுவதும் நிறைந்திருந்த வெண்பனி கண்கள் முன்னரே உருகி ஓடுகிறது.

சூரியன் தோன்றுகிறது.

''இந்த வெண்பனியுடன் விளையாட வேண்டுமென்று நான் சொன்னேன் இல்லையா! இப்போது பாருங்கள், வெண்பனி மறைந்து விட்டது!'' என்று சாஷா கூறுகிறான்.

குழந்தைகள் உருகியோடும் வெண்பனியை வருத்தத்தோடு பார்க்கின்றனர்.

''நமது வெண்பனிப் பொம்மையைப் பார்த்தால் பாவமாய் உள்ளது! அது எப்படி உருகுகிறது!''

''போய் வா, குளிர்காலமே!'' என்கிறாள் நேயா.

''போய் வா, குளிர்காலமே!'' என்று குழந்தைகள் திரும்பச் சொல்கின்றனர்.

இன்று இரண்டு மணி நேரத்தில் நாங்கள் குளிர் காலத்தை வரவேற்று வழியனுப்பி விட்டோம்.

இவ்வாறாக இயற்கையன்னை அந்த அற்புதமான 122வது பள்ளி நாளன்று போகின்ற போக்கிலேயே எனது முழு இசைக் குறியீட்டை மாற்றியமைக்கும்படி நிர்ப்பந்தித்தாள்.

''எனக்கு உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்!'' என்று சிறு உதடுகள் என் காதில் முணுமுணுக்கின்றன, இன்னமும் சில்லிட்டிருந்த ஒரு சின்னஞ் சிறு கரம் என்னை ஜன்னலிருந்து பிரித்து வகுப்பறையின் மூலைக்கு இட்டுச் செல்கிறது.

''உட்காருங்கள்!''

டெஸ்கில் உட்காருகிறேன்.

சின்னஞ்சிறு கைகளால் என் கழுத்தைக் கட்டிப் பிடித்து என் வலது காதருகே சிறு உதடுகளை வைத்து ஏதோ சொல்கிறாள். வெப்பமான மூச்சுக் காற்றோடு வார்த்தைகள் நடுங்கியபடியே வெளிவருகின்றன:

''வந்து... நான் என்ன சொல்ல, விரும்புகிறேன் தெரியுமா... நீங்கள் ஏன் எனக்கு அப்பாவாக இருக்கக் கூடாது?.. அப்போது அம்மா என்னை போர்டிங் பள்ளியில் சேர்க்க மாட்டாள், நானும் உங்களுடனே இருந்து விடுவேன்.''

ஆனால் அது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு விட்டது. அம்மா கல்லைப் போல் உறுதியாக இருக்கிறாள்.

நல்ல அன்பான வார்த்தைகளை நான் தேடுகிறேன்.

''நீ கவலைப்படத் தேவையில்லை, போர்டிங் பள்ளியில் மோசமாக ஒன்றும் இருக்காது. அங்கு எப்படிப்பட்ட நல்ல ஆசிரியர்களும் குழந்தை வளர்ப்பாளர்களும் உள்ளனர் என்று எனக்குத் தெரியும். அவர்கள் உன்னிடம் அன்பாக நடப்பார்கள், உனக்கும் அவர்களை உடனே பிடித்து விடும். நானும் மற்றவர்களும் உனக்குக் கடிதங்களை எழுதுவோம். நான் உன்னை வந்து பார்ப்பேன். உனக்கு அங்கே அலுப்பே ஏற்படாது.''

''அப்படியெனில், எனது அப்பாவாக இருக்க உங்களுக்கு விருப்பமில்லையா!''

என்றாலும் அவள் என் கன்னத்தில் முத்தமிடுகிறாள்.

## அத்தியாயம் ஆறு

# தனிநபர்
# (கடைசி, 170வது நாள்)

தலா இருநூறு பக்கங்களைக் கொண்ட நான்கு பெரிய நோட்டுப் புத்தகங்களில் எனது ஆறு வயதுக் குழந்தைகளுக்கு நான் படிப்பு சொல்லித் தந்ததைப் பற்றியும் குழந்தை வளர்ப்பைப் பற்றியும் எனது மனப்பதிவுகளை நாட் குறிப்பாக எழுதியுள்ளேன். என் கண் முன்னரே அவர்கள் வளர்ந்த போதிலும் எனது வியப்பை என்னால் மறைக்க இயலவில்லை: இவர்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரு பாய்ச்சல் நடந்துள்ளது. ஒவ்வொரு முறையும் கல்வியாண்டு முடிந்து நான் நீண்ட நாட்களுக்குக் குழந்தைகளிடமிருந்து விடைபெறும் போதும் ஒரு சோகமயமான மகிழ்ச்சி என்னைத் தழுவும்: அவர்களுக்காக மகிழ்ச்சியடையும் நான் அதே சமயம் அவர்களை விட்டுப் பிரிய வேண்டியுள்ளதே என்று வருந்துகிறேன். எங்களுக்குக் கவலை தந்த விஷயங் கள், மகிழ்ச்சியளித்த சம்பவங்கள், எங்கள் ஏமாற்றங்கள், நாங்கள் எப்படி வாழ்ந்தோம், கல்வி கற்பதிலும் வளர்ப் பிலும் எப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் எங்கள் முன் தோன் றின, நாங்கள் இவற்றை எப்படிச் சமாளித்தோம் ஆகிய எல்லாமே இந்தப் பெரிய நோட்டு புத்தகங்களில் உள்ளன. ஒவ்வொரு குழந்தையின் மனநிலையும் எப்படி உருவாகியது என்பது பற்றிய உண்மைகள் இதில் உள்ளன. என் வகுப்புக் குழந்தைகள் ஒவ்வொருவரையும் ஒரு தனிநபராக உரு வாக்க நான் முயன்றேன், ஏனெனில் மனிதர்களின் மகிழ்ச்சிக் கான நவீனப் போராளியை இந்தத் தனிநபரில்தான் நான் காணுகிறேன். லட்சியங்கள், நோக்கங்கள், சித்தம், அறிவு, உணர்வுகள், மனித நேயம் ஆகியவற்றின் மிகச் சிறப்பான, ஈடு இணையற்ற கலவையாகத்தான் நான் மனி தனைப் பார்க்கிறேன். எனது சின்னஞ்சிறு வகுப்பு மாணவர் களிடம் முதல் நாளிலிருந்தே இந்தக் கலவையை ஏற்படுத்த

ஆரம்பித்தேன்; மூன்றாண்டுகள் கழித்து இவர்கள் பள்ளி வாழ்க்கையின் அடுத்த படியில் காலடி எடுத்து வைப்பார்கள், அப்போது எனது சக ஆசிரியர்கள் இப்பணியைத் தொடருவார்கள் என்று நம்புகிறேன்.

ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் இந்தத் தனித்துவத்தை நான் எப்படிப் படைத்தேன்? 800 பக்கங்களில் அடங்கியுள்ள ஏராளமான விஷயங்களைப் பார்க்கிறேன்; இவை பின்வரும் முக்கிய முடிவிற்கு என்னை இட்டுச் செல்கின்றன:

> தன்னைத் தானே சுயமாக அறிந்து கொள்ளும் போது, சுயமாக தன் நிலையைத் தானே நிர்ணயம் செய்யும் போது, தன்னுடன் நடக்கும் போராட்டத்தில்தான் தனிநபர் உருவாகிறான்; குழந்தை வளர்ப்பும் கல்வி போதனையும், குழந்தையை இப்பாதையில் வழிநடத்தி, இப்போராட்டத்தில் அவன் வெற்றி பெற உதவுவதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய போராட்டத்தில் தோல்வி ஏற்படக் கூடும். ஆறு வயதுக் குழந்தைகளின் விஷயத்தில் மேற்கூறிய கருத்து நிலை திட்டவட்டமான உட்பொருளைப் பெறுகிறது; அதாவது பெரும் கவனம் தேவைப்படுகிறது, ஏனெனில், தன்னுடனேயே நடக்கும் இப்போராட்டம் தனிநபரின் உயர்விற்கு மட்டுமின்றி அழிவிற்கும் வழிகோலக் கூடும், மோசமான சூழலில் தன்னைத் தானே சுயமாக அறியும் குணமும், சுயமாகத் தன் நிலையை நிர்ணயிக்கும் தன்மையும் குழந்தையின் மனதில் கீழான கருத்துக்களையும் உறவுமுறைகளையும் தோற்றுவிக்கக் கூடும்.

இந்த நோக்கிலிருந்து என் நாட்குறிப்புகளைத் திருப்பிப் பார்ப்பதென முடிவு செய்தேன்.

### செப்டெம்பர் 5.
### வார்த்தைகள், வாக்கியங்களின் வீரதீரம்

முன்னர் நான், வார்த்தைகளும் வாக்கியங்களும் எளியவையாக, புரியக் கூடியவையாக இருக்கின்றனவா என்று பார்த்துத் தேர்ந்தெடுத்தேன். உதாரணமாக, வார்த்தைகள் தெட்டத் தெளிவானவையாக, குழந்தைகளுக்கு புரியக் கூடியவையாக இருக்க வேண்டும் (டெஸ்க், சூரியன், வெங்காயம்); வாக்கியங்களும் இதே மாதிரியானவையாக இருக்க

வேண்டும் (குழந்தைகள் முற்றத்தில் விளையாடுகின்றனர்; கீகா தோட்டத்திற்கு உலாவச் சென்றான்; அப்பா மகளுக்குப் பரிசு கொண்டு வந்தார்). இப்படிப்பட்ட வாக்கியங் களும் வார்த்தைகளும் ''இதற்கென்ன பொருள்?'' என்று அவர்களை சிந்திக்க வைக்காது; எனவே, இவை வார்த்தை கள், வாக்கியங்களைப் பகுப்பாய்வு செய்யக் கற்றுத் தர உதவுமென நான் எண்ணினேன்... ஆனால் தாய் மொழிப் பாடத்தின் போது, அதாவது நாட்டுப் பற்றையும் தனிநபர் உணர்வுகளையும் வளர்க்க வேண்டிய பாடத்தில் இப்படிப் பட்ட முழு முறையியல் விஷயங்களை ஏன் தர வேண்டும்? உள்ளடக்கத்தில் எளிய, புரியும்படியான, ஆனால் தனிநபர் உணர்வுகளைப் படைக்கும் நிபந்தனையை உட்பொருளாகக் கொண்ட வார்த்தைகள், வாக்கியங்களைக் கொண்டே குழந்தைகள் இவற்றைப் பகுப்பாய்வு செய்யக் கற்றுக் கொள்ளலாம். தாய் மொழிப் பாடப் பயிற்சிக்கு விஷயங் களைத் தேர்ந்தெடுப்பதில் இப்படிப்பட்ட அணுகுமுறையை வார்த்தைகள், வாக்கியங்களின் வீரதீரக் கோட்பாடு என்றழைக்கலாமா? வார்த்தைகள், வாக்கியங்களை இந்தக் கோட்பாட்டின்படிதான் தேர்ந்தெடுக்க வேண்டுமென நான் கூறவில்லை, ஆனால் இது பயிற்சிகளின் சாரத்தைச் செழு மைப்படுத்தும், இவற்றிற்கு பன்முகத் தன்மையை அளிக் கும், இவற்றிற்கு வளர்ப்புப் போக்கைத் தரும்.

இன்று அட்டைவில்லைகளின் உதவியோடு பின்வரும் வாக்கியத்தைக் கரும்பலகையில் ''எழுதினேன்'': ''புரோமித் தியஸ் நெருப்பை எடுத்துச் சென்றான்!''

''இந்த வாக்கியத்தை எல்லோரும் சேர்ந்து 'படியுங் கள்'!''

குழந்தைகள் ஒரே குரலில் இதைப் ''படித்தனர்''.

''புரோமித்தியஸ் யார்?'' என்று நீக்கா என்னைக் கேட்டான்.

அனேகமாக, இப்படிப்பட்ட கேள்விகள்தான் கல்வி நிபுணர்களை அச்சுறுத்தக் கூடும்; ''புரோமித்தியஸ் நெருப் பை எடுத்துச் சென்றான்'' என்ற வாக்கியத்திற்குப் பதில் ''தாத்தா நெருப்பை மூட்டினார்'' என்ற வாக்கியத்தைச் சொல்ல இவர்கள் விரும்புகின்றனர். ஆனால் இந்த அச்சம் வீணானது—இப்படிப்பட்ட கேள்விகள் வருவது நல்லது தான். நான் குழந்தைகளிடம் சொன்னேன்:

''‘புரோமித்தியஸ்’ என்ற இப்பெயரை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! வீட்டிற்குப் போனதும் புரோமித்தியஸ் பற்றிய புராணக் கதையைச் சொல்லுமாறு பெரியவர்களிடம் கேளுங்கள். சரி, இப்போது சொல்லுங்கள்: இந்த வாக்கியத்தில் எவ்வளவு வார்த்தைகள் உள்ளன?''

இந்த வாக்கியத்தில் ஒரு பண்டைய கதை அடங்கியிருப்பதானது, சரியாகச் சொன்னால், இதன் வீரதீரத் தன்மை, இதன் வார்த்தைப் பகுப்பாய்விற்கும், வார்த்தைகளை மாற்றிப் போடவும், எந்த வரிசையில் வார்த்தைகள் இருந்தால் நன்றாயிருக்கும் என்று கவனிக்கவும் சிறிது கூட இடையூறாக இல்லை.

ஒலிப் பகுப்பாய்வு முறையைக் கற்றுக் கொள்ள குழந்தைகளுக்கு ''குடிமகன்'' எனும் வார்த்தையைத் தந்தேன். இதில் ஒலிகளின் வரிசையைக் கண்டுபிடித்து, வட்டக் குறியிடுவது, ''பாட்டி'' என்று நன்கு தெரிந்த ஒரு வார்த்தையின் விஷயத்தில் இவற்றைச் செய்வதை விட எவ்விதத்திலும் அதிகச் சிக்கலானதாக இருக்கவில்லை.

வார்த்தைகள், வாக்கியங்களை எழுதும் பொது முறைகளை கிரகிப்பதில் எனது வகுப்புக் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்க நான் சில வாக்கியங்களையும் வார்த்தைகளையும் தேர்ந்தெடுத்தேன்.

வார்த்தைகள்: தாய்நாடு, மனிதன், வீரன், சித்தம், உழைப்பு, கட்டுமானம், முயற்சி, போராட்டம், கடமை, மென்மை, அன்பான, நாகரிகமான, நேர்மையான, இன்ன பிற.

வாக்கியங்கள்: நீ மனிதனாகப் பிறந்திருக்கிறாய்; நல்லதைச் செய்ய விரைந்து செல்; மக்களுக்கு மகிழ்ச்சியைத் தா; உழைப்பு மனிதனை மேன்மைப்படுத்துகிறது; சிறுவயதிலிருந்தே நேர்மையானவனாக இரு.

இந்த வார்த்தைகள், வாக்கியங்களின் உட்பொருளை நான் ஒருபோதும் குழந்தைகளுக்கு விளக்க மாட்டேன். அவசியமெனில், பெற்றோர்களிடம் சென்று கேட்குமாறு சொல்வேன். ''நேர்மை'', ''கடமை'' என்றால் என்ன, அல்லது ''நீ மனிதனாகப் பிறந்திருக்கிறாய்'' என்றால் என்ன பொருள் என்றெல்லாம் பெற்றோர்களிடம் கேட்கட்டும்.

வார்த்தைகள், வாக்கியங்களின் இப்படிப்பட்ட சாரம்

குழந்தைகளுக்கு என்ன தரும்? வார்த்தைகள், வாக்கியங்களை எழுதும் முறைகளை கிரகிக்க இது நிச்சயமாக இடையூறு செய்யாது, ஒருவேளை இன்றைய குழந்தைகள் எப்போதாவது வீரஞ்செறிந்த வகையில் சிந்திக்க உதவுக்கூடும். இவ்வாறாக, பின்வரும் ''முதுமொழியை'' எழுதுகிறேன்:

> மொழிப் பயிற்சிகளின் உட்பொருளைத் தேர்ந்தெடுக்கும் போது இன்று குழந்தை அந்தந்தப் பேச்சு, எழுத்து முறையை கிரகிப்பதை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், வெகுவிரைவிலோ, நீண்ட காலத்திற்குப் பின்னரோ அக்குழந்தை தனிநபராக மாறுவதற்குரிய அடிப்படைகளில் ஒன்றாக இது விளங்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## நவம்பர் 29.
## யாரை விருந்தினராக அனுப்புவது?

இடைவேளையின் போது மூன்றாம் வகுப்பிலிருந்து குழந்தைகள் வந்து மூன்று அழகிய அழைப்பிதழ்களைத் தந்து சென்றனர்.

''இன்று எங்கள் வகுப்பில் இசை விழா. உங்கள் வகுப்பிலிருந்து மூவரை அழைக்கின்றோம். எல்லோரையும் அழைக்க முடியாதது குறித்து மன்னியுங்கள்! இவ்விழா வகுப்பறையில் நடைபெறுவதால் எல்லோருக்கும் இடம் போதாது.''

இதுதான் என் வகுப்புக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் முதல் அழைப்பு.

''நன்றி! எங்கள் சார்பாக மூவரை அனுப்பி வைப்போம்'' என்றேன் நான்.

அவர்கள் போனதும் என் வகுப்புக் குழந்தைகள் கேள்வி மாரி பொழிந்தனர்.

''என்ன விழா?''

''யாரை அனுப்புவீர்கள்?''

நானாக யாரையும் அனுப்பப் போவதில்லை. தம் பிரதிநிதிகளைத் தாமே தேர்ந்தெடுக்குமாறு குழந்தைகளிடம் சொல்வேன். பாடம் துவங்கியதும் நான் அந்த அழகிய அழைப்பிதழ்களைக் காட்டி, அவற்றில் எழுதியுள்ளதைப்

படித்துக் காட்டினேன். இசை விழா இன்னும் 10 நிமிடங்களில் ஆரம்பமாகும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சில சமயம் என்ன நடைபெறுமென எனக்குத் தெரியும். ''யாரை அனுப்புவது'' என்று ஆசிரியர் சுற்று முற்றும் பார்க்கிறார். சில குழந்தைகள் மௌனம் சாதிக்கின்றனர், ஆனால் ''தயவு செய்து என்னைத் தேர்ந்தெடுங்களேன்! நான் நல்லவன்! பாருங்கள், நான் எப்படி நேராக உட்கார்ந்து உங்களைப் பார்க்கிறேன்!'' என்று கண்களால் கெஞ்சியபடி அகக் கிளர்ச்சியோடு அவரைப் பார்க்கிறார்கள். கேட்பவர்களின் மீது ஆசிரியர் இரக்கம் காட்ட மாட்டார் என்று அவர்களுக்கு அனுபவத்திலிருந்து தெரியும். மற்றவர்களால் தம் ஆசையை அடக்க முடியாது. ''என்னை! என்னை தயவு செய்து தேர்ந்தெடுங்கள்! நான் ஒரு தடவை கூட விருந்தினராகச் சென்றதில்லை! நீங்கள் ஒரு முறை கூட என்னைத் தேர்ந்தெடுத்ததில்லை!'' என்று அவர்கள் கெஞ்சுகிறார்கள். ''கத்தாதே! யாரை அனுப்புவது என்று எனக்குத் தெரியும். யார் நன்கு படிக்கிறார்களோ, குறும்பு செய்யாமல் சொன்ன பேச்சைக் கேட்கின்றார்களோ அவர்களை அனுப்புவேன்!'' என்று ஆசிரியருக்குக் கோபம் வருகிறது. அவர் யாரை அனுப்புவதென முடிவு செய்து, எப்படி நடந்து கொள்ள வேண்டுமென அவர்களுக்குக் கட்டளைகள் தருகிறார்.

வகுப்புப் பிரதிநிதிகளாக இவர் தேர்ந்தெடுத்த அந்த மூவர் யார்? சாதாரணமாக, இவர்கள் அவருக்கு ஏதாவது ஒரு வகையில் சரிப்பட்டு வருபவர், அவருக்குப் பிடித்தமானவர்கள். அவர்களுக்கு இது தெரியும், இதைக் கண்டு அவர்கள் பெருமிதம் கொள்கின்றனர். ஏனெனில் இந்த வயதில் குழந்தைகள் மத்தியில் ஆசிரியரின் செல்வாக்குதான் மிக முக்கியம். அவர்களுக்கு இந்த மனவியல் தன்மை தெரியாதுதான். ஆனால் தன் செல்வாக்கால் குழந்தைகளின் விருப்பத்தை, நாட்டத்தை, குழந்தைகள் புரிந்து கொள்ளும் நியாயத்தை அடக்க முடியுமென ஆசிரியருக்குத் தெரியும். ஒருவேளை அவர் தன் செல்வாக்கை குழந்தைகளுடன் தான் கலந்து பழகுவதன் தன்மையாலும் குழந்தைகளுடன் தான் கொண்டுள்ள உறவின் தன்மையாலும் பெறாமல் தான் அவர்களின் முதல் ஆசிரியர் என்பதால் பெற்றிருக்கலாம். குழந்தைகள் தாம் பள்ளிக்கு வரும் முன்னரே இவரைப் பற்றிக்

கேள்விப்பட்டிருக்கின்றனர். இவரைப் பற்றிக் குடும்பத்தில் என்ன பேசினர் என்பதைப் பொறுத்து இவர்கள் வெவ்வேறு விதமாக, கண்ணை மூடிக் கொண்டு இவரது செல்வாக்கை ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் வேறுவிதமாகத் தீர்க்க வேண்டிய முக்கியப் பிரச்சினைகளைத் தன்னிச்சையாகத் தீர்க்கும் பொருட்டு ஆசிரியர் இச்செல்வாக்கைப் பயன்படுத்தலாமா? (துர்பிரயோகம் செய்யலாமா என்று நான் சொல்லவில்லை). குழந்தைகளின் பிரதிநிதிகளை ஏன் இவர் தேர்ந்தெடுக்க வேண்டும்? ''யார் நன்றாகப் படிக்கவில்லையோ, யார் நான் சொல்வதைக் கேட்கப் போவதில்லையோ, யார் நன்றாக நடந்து கொள்ளவில்லையோ, யார் எனக்குக் கோபம் மூட்டுகின்றார்களோ அவர்களை நான் விழாவிற்கு அனுப்ப மாட்டேன்'' என்பதை குழந்தைகளிடம் இப்படி மறைமுகமாகச் சொல்லுவதற்காகவா? தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள், ஆனால் பலரின் விருப்பங்கள் நிறைவேறாததால் நீதி மற்றும் அநீதி பற்றிக் குழந்தைகளிடம் ஒரு விசேஷக் கருத்து உருவாகும். ''ஆசிரியர் யாரை விரும்புகிறாரோ அவரைத் தேர்ந்தெடுக்கிறார். அவருக்கு என் மீது விருப்பமில்லை!'' தேர்ந்தெடுக்கப்பட்டவனுக்கோ எல்லாம் நியாயமாகப் படுகிறது—''இதிலென்ன தவறு?'' தேர்ந்தெடுக்கப்படாதவனுக்கோ ஆசிரியரின் செயல் அநீதியானது —''ஏன் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை?''

இப்படிப்பட்ட போதனைமுறையால் என்ன லாபம்? ஒன்றுமேயில்லை. ஒருவேளை இதனால் குழந்தைகள் மத்தியில் ஆசிரியரின் அதிகாரம் பலப்படலாம். ஆனால் ஆசிரியரின் செல்வாக்கிற்குப் பதில் வகுப்பின் கூட்டுச் செல்வாக்கு ஒரு நாள் வருமே. அப்போது என்ன செய்வது? ஆசிரியரின் அநீதி பற்றிய எண்ணங்களும் சொந்த விருப்பங்கள் புண்பட்ட உணர்வும் குழந்தைகளிடம் எஞ்சும். ஆரம்ப வகுப்பாசிரியருக்குப் பின் கல்வியின் இரண்டாவது கட்டத்தில் வரும் ஆசிரியர்கள், இந்தக் கூட்டு உணர்வை பலப்படுத்தவும், வகுப்பின் கூட்டுச் செல்வாக்கு ஒவ்வொரு குழந்தையின் மனநிலையின் வளர்ச்சி மீதும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துமாறு செய்யவும், இன்னமும் சொந்த செல்வாக்கை வென்று நிலைநிறுத்தவும் எவ்வளவு பாடுபட வேண்டும்! குழந்தைகளின் முதல் ஆசிரியர் தனது அதிகார பூர்வமான

முறைகளால் செல்வாக்கைப் பயன்படுத்தும் போது, வகுப்பின் கூட்டு முடிவைத் தன் முடிவால் மாற்றும் போது இதைப் பற்றி நினைக்கிறாரா? இந்த அதிகாரத் தொனியும் தான்தோன்றித்தனமும் ஆசிரியருக்கு உகந்தவையல்ல.

இல்லை, என் முடிவை இவர்கள் மீது திணிக்க மாட்டேன், யார் போவதென்று தீர்மானிப்பதைக் குழந்தைகளிடமே விட்டு விடுவேன்.

''குழந்தைகளே, நாம் மூவரை அனுப்ப வேண்டும்! பின்னர் அவர்கள் வந்து தாம் பார்த்ததையும் கேட்டதையும் நமக்குச் சொல்லுவார்கள். யாரால் பொறுமையாக இருக்க முடியுமோ, கேட்கும் போது புத்திசாலித்தனமான பதில்களைச் சொல்ல முடியுமோ அவர்களை அனுப்பினால் நன்றாயிருக்கும். மூன்றாம் வகுப்பு மாணவர்களின் விழாவிற்கு யாரை அனுப்பலாம் என்று யோசியுங்கள்!''

ஒரு நிமிட இடைவெளி.

இப்போது எந்த ஒரு குழந்தையின் பெயர் முன்மொழியப்பட்டாலும் அதை ஆதரித்து, நியாயப்படுத்துவது என் கடமை. நான் வாக்குவாதம் நடத்தப் போவதில்லை, யார் ஆதரிக்கின்றனர், யார் எதிர்க்கின்றனர் என்று வாக்கெடுப்பு நடத்தப் போவதில்லை. ஒரு குழந்தையின் பெயர் முன்மொழியப்பட்டு நிராகரிக்கப்பட்டால் அது அவனுக்குக் கடும் தண்டனையாக இருக்கும், அவனோ அச்சமயம் எக்குற்றமும் செய்யவில்லை. குழந்தைகளிடமிருந்து கிடைக்கப் போகும் ஆதரவின் அடிப்படையிலான என் செல்வாக்கு இங்கே செயல்படத் துவங்கும், இத்துடன் விஷயம் முடிவடையும்.

''யோசித்து விட்டீர்களா? யாரை அனுப்பலாம், சொல்லுங்கள்!''

**சாஷா:** ''ஏக்காவை அனுப்பலாம். அவள் எப்போதும் பொறுமையானவள், புத்திசாலி, அன்பானவள். யாருக்கும் இடையூறு செய்ய மாட்டாள். அங்கும் யாரையும் தொந்தரவு செய்ய மாட்டாள்.''

''சாஷா, நீ சொல்வது சரி! ஏக்கா, இங்கே வா! எல்லோரும் உன் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் பார்!''

**விக்டர்:** ''கோத்தேயை அனுப்பலாம். அவனுக்கு இசை மிகவும் பிடிக்கும். அங்கு இசை விழா அல்லவா நடக்கிறது.''

''விக்டர், நீ சொல்வது சரி! இது பொறுமையாயும், கவனமாயும் இருக்க அவனுக்கு ஒரு சோதனையாக இருக்கட்டும்! கோத்தே, இங்கே வா!''

மாக்தா: ''நாத்தோவை அனுப்பலாம்! ஒருவேளை திடீரென பாடும்படியோ, கவிதை படிக்கும்படியோ சொல்லலாம். நாத்தோ நன்கு கவிதை படிப்பான்.''

''நன்றி, மாக்தா! நாத்தோவும் இதற்குத் தகுதியானவன்! சரி, இப்போது அவர்கள் அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டுமெனச் சொல்லுங்கள்!''

''எல்லோரையும் பார்த்து 'வணக்கம்!' சொல்ல வேண்டும்!''

''அழைப்பிற்கு நன்றி சொல்ல வேண்டும்!''

''கலைநிகழ்ச்சியின் போது சத்தம் போடக் கூடாது, பேசக் கூடாது!''

''கவனமாகக் கேட்டு எல்லோருக்கும் சொல்ல வேண்டும்!''

''பாடச் சொன்னாலோ, கவிதை வாசிக்கச் சொன்னாலோ தயங்கக் கூடாது!''

''ஏதாவது பிடிக்காவிடில் பேசி, புண்படுத்தக் கூடாது!''

நான் எங்கள் வகுப்புப் பிரதிநிதிகளிடம் அழைப்பிதழ்களைத் தருகிறேன்.

''நண்பர்கள் சொன்னதையெல்லாம் கவனமாகக் கேட்டீர்களா? அவர்கள் நம்பிக்கையை மெய்ப்பிக்க வேண்டும்! கிளம்புங்கள், தாமதமாகப் போகக் கூடாது!..''

ஒவ்வொருவரையும் தேர்ந்தெடுப்பதில், யாரிடம் எதைச் செய்யச் சொல்வது என்பதில் (கதை அல்லது கவிதையைப் புத்தகத்திலிருந்து படிப்பது, கரும்'பலகைக்குச் சென்று கணக்குப் போடுவது, பிடித்த கட்டுரையைப் பற்றி விவாதிப்பது) இந்த அணுகுமுறையை நான் வசதியான எல்லா சந்தர்ப்பங்களிலும் பின்பற்றுவேன்.

## டிசம்பர் 4.
## ரகசியக் கூட்டங்கள்

''சிறுவர்களே, எல்லோரும் எழுந்திருங்கள்.''

சிறுவர்கள் எழுந்திருக்கின்றனர்.

''நீங்கள் இன்று சீக்கிரம் கீழே சென்று சாப்பிடும் இடத்

தில் சாப்பிட்டு விட்டு உடனே மேலே வாருங்கள்! இன்று நமக்கு ஒரு ரகசிய பேச்சு இருக்கும். புரிந்ததா? உட்காருங்கள்!''

''எனதப் பற்றி? என்ன ரகசியம்?'' என்று சிறுமிகளுக்குத் தெரிந்து கொள்ள ஆர்வம்.

''இந்த ரகசியத்தைப் பற்றி நான் சிறுவர்களுடன் மட்டுமே பேசுவேன்! உங்களுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியக் கூடாது! மேற்கொண்டு கேட்காதீர்கள்! எப்படியிருந்தாலும் சொல்ல மாட்டேன்...''

நான் சிறுவர்களுடன் என்ன ரகசியமாகப் பேச விரும்புகிறேன்?

சிறுமிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

அதுவரை ஒவ்வொரு முறையும் பாடம் துவங்கவோ முடியவோ மணியடிக்கும் போது, ''சிறுவர்களே, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்பது நினைவில் இருக்கட்டும்!'' என்று கூறி, இதன் மூலம் எப்போதும் சிறுமிகள் முன் செல்ல வழி விட வேண்டும், அவர்களைப் பிடித்துத் தள்ளக் கூடாது என்று நினைவுபடுத்தினேன். சிறுமிகளுக்குத் தொந்தரவு தரக் கூடாது, இப்படிச் செய்தால் யாரையும் நான் மன்னிக்க மாட்டேன் என்பதை மூன்று மாதப் பள்ளி வாழ்க்கையில் சிறுவர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். ஆனால் சிறுவர் சிறுமியர் உறவை ஒழுங்குபடுத்தும் விஷயத்தில் இதோடு நின்றுவிடுவது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. மேற்கொண்டு எப்படிச் செல்வது? ''ஏல்லா மேல்கோட்டைக் கழற்ற உதவு! நீயாவிற்கு மேல்கோட்டை எடுத்துக் கொடு!'' என்று ஒவ்வொரு முறையும் அந்தந்த சிறுவனிடம் கூறுவதா, அல்லது சிறுமிகளுக்கு உதவுவதை வகுப்பில் ஒரு பழக்கமாக்குவதா? சில சிறுவர்களுக்கு, சிறுமிகளுக்கு உதவப் பிடிக்கவில்லையென எனக்குத் தெரிகிறது.

''இயாவிற்கு மேல்கோட்டை எடுத்துக் கொடு!'' என்று நான் கியோர்கியிடம் சொல்கிறேன்.

கியோர்கி இடத்தை விட்டு அசையவில்லை.

''சிறுமிக்கு மேல்கோட்டை எடுத்துத் தா!'' என்று நான் திரும்பச் சொல்கிறேன்.

**அவன்:** ''அவளே எடுத்துக் கொள்ளட்டும்!''

''அவளாகவே எடுத்து அணிந்து கொள்ள முடியும். ஆனால் நீ உதவினால் நன்றாயிருக்கும்.''

**அவன்:** ''உதவ மாட்டேன், அவளே எடுக்கட்டும்!..''

எலேனா தாழ்வாரத்தில் கீழே விழுந்து அழுதாள்.

''அவள் எழுந்திருக்க உதவு!'' என்று நான் தீத்தோ விடம் சொல்கிறேன்.

தீத்தோ மெதுவாக நகர்ந்து, அழும் சிறுமியிடம் சென்று எவ்வித இரக்கமும் இல்லாமல் சொல்கிறான்:

''எழுந்திரு, என்ன புலம்புகிறாய்!''

''சிறுமி எழுந்திருக்க உதவு, அவளைச் சாந்தப்படுத்து!'' என்று சூரிக்கோவை அனுப்புகிறேன்.

சூரிக்கோவும் அவசரப்படாமல் எலேனாவிடம் சென்று முரட்டுத்தனமாக கையைப் பிடித்துத் தூக்குகிறான்.

''சரி, சரி, எழுந்திரு'' என்கிறான்.

இப்படிப்பட்ட உதவியில் அச்சிறுமியால் எழ முடிய வில்லை போலும். சூரிக்கோ இரண்டு கைகளையும் விட்டு விட, அவள் மீண்டும் தரையில் விழுந்து இன்னமும் உரக்கக் கத்துகிறாள். அவன் என்னிடம் திரும்பி வந்து அவள் மீது குற்றஞ் சாட்டுகிறான்:

'''எழுந்திரு' என்று சொல்லி நான் உதவுகிறேன். அவளோ எழுந்திருக்க விரும்பாமல் அழுகிறாள்!''

இறுதியாக, நான் சொல்லாமலேயே சாஷா அவளிடம் ஓடிச் சென்று, முழங்காலிட்டு அருகே அமர்ந்து, தலை முடியைத் தடவியபடி ஏதோ அன்பாகச் சொன்னான். சிறுமி மௌனமானாள். சாஷா இரண்டு கைகளையும் நீட்ட, அவள் அவற்றைப் பற்றிக் கொண்டு எழுந்தாள். அவள் கண்ணீரைத் துடைக்கக் கூட சாஷா உதவினான்.

என் வகுப்புச் சிறுவர்கள் அனைவரும் மென்மையான உணர்வுடையவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன், சக மாணவ மாணவியர் மீது இவர்கள் அக்கறை காட்ட வேண்டுமென விரும்புகிறேன். இவர்களை இப்பாதையில் அழைத்துச் செல்வதற்காக ரகசியப் பேச்சு நடத்துவதென முடிவு செய்தேன்.

ஏன் ரகசியப் பேச்சு? இதற்கு சில காரணங்கள் உண்டு.

முதலாவதாக, சிறுவர்களிடம் நான் என்ன சொல் கிறேன் என்று சிறுமிகள் தெரிந்து கொள்ளும் அவசியம்

எதுவும் இல்லை. இல்லாவிடில், ''சிறுமிகளுக்கு மேல் கோட்டு எடுத்துத் தரும்படி சொல்லியிருக்கின்றார்கள் இல்லையா? எங்கே சீக்கிரம் தா!'' என்றெல்லாம் அவர்கள் சொல்லக் கூடும். சிறுவர்களின் அன்பான அக்கறையை அவர்கள் கண்டிப்பான கடமையாக மாற்றுவார்கள். அப்போது ஆண்களின் அக்கறை எனும் நீதி நெறி தன் அழகியல் சேவையையும் தார்மிக அடிப்படையையும் இழந்து விடும். சிறுமிகளுக்கு நாங்கள் என்ன பேசினோம் என்று தெரியாவிடில், தம் சிறுவர்களின் ஒவ்வொரு செயலையும் நன்றியுணர்வோடு ஏற்பார்கள்.

இரண்டாவதாக, கதவு மூடியிருக்கும் போது சிறுவர்களுடன் அதிக வெளிப்படையாகப் பேசி, ஆண்களின் மேன்மையைப் பற்றி நன்கு விளக்க முடியும். இந்தப் பேச்சின் ரகசியத் தன்மை, தம்மை வேறு விதமாகப் பார்க்கும்படி சிறுவர்களைக் கட்டாயப்படுத்தும்; ஏனெனில் இவர்களுடன் முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கருத்தாழத்தோடு பேசுகின்றனர், இவர்களை நம்புகின்றனர், எனவே இவர்கள் பெரியவர்களாகி விட்டனர் என்று பொருள்!

மூன்றாவதாக, குழந்தைகளுக்கு எப்போதுமே ரகசியங்கள் பிடிக்கும். இம்மாதிரியான நடவடிக்கை இவர்களது செயற்பாட்டை ஊக்குவிக்கும். ''இது நம் ரகசியம்'' என்றால் ''இது மிக முக்கியம்'' என்று பொருள். அது தவிர ரகசியம் குழந்தைகள் விளையாட்டின் மிக அழகிய அம்சங்களில் ஒன்று. குழந்தைகள் ரகசியம் பேசுகின்றனர். எதைப் பற்றி? உலகம் பூராவிற்கும் தெரிந்ததை அவர்கள் ரகசியமாகப் பேசலாம். விஷயம் என்னவெனில், ரகசியத்தின் உட்பொருள் என்ன என்பதல்ல, ரகசியம் உள்ளதுதான் முக்கியம். என் வகுப்புச் சிறுவர்களுக்கு ரகசியம் வேண்டும், சிறுமிகள் பால் அவர்கள் ஆண்களுக்கு உரிய அக்கறை காட்ட வேண்டுமென நான் விரும்புகிறேன். இப்படியாக எங்கள் ஆசைகள் சந்திக்கின்றன—நான் அவர்களுக்கு ரகசியக் கட்டளைகளை இட, அவர்கள் அவற்றை நிறைவேற்றட்டும்.

சிறுவர்கள் வகுப்பறையில் நுழைந்ததும் நான் கதவை மூடி விட்டு அவர்களை என்னருகே அமரச் செய்து மெதுவான குரலில் விளையாட்டுத் தொனியின்றி, உறுதியோடு பேசலானேன்:

''நான் நம் வகுப்பில் உண்மையான ஆண்பிள்ளைகள் சங்கத்தை ஏற்படுத்த விரும்புகிறேன். யாருக்கெல்லாம் உண்மையான ஆண்பிள்ளையாக ஆசையோ கையைத் தூக் குங்கள்!''

சிறுவர்கள் பிரமித்துப் போயுள்ளனர். முதலில் சாஷா கையைத் தூக்கினான். பிறகு எல்லோரும் கைகளை உயர்த்தி னர்.

''அப்படியெனில், உங்களில் ஒவ்வொருவரும் உண்மை யான ஆண்பிள்ளையாக விரும்புகின்றீர்கள், இல்லையா?'' என்று கேட்டபடி நான் ஒரு நிமிடம் ஒவ்வொருவரின் கண் களையும் உற்று நோக்குகிறேன். ''உண்மையான ஆண் பிள்ளை எப்படியிருக்க வேண்டுமெனத் தெரியுமா?'' என்று நான் அவர்களைக் கேட்கவில்லை. எனது வகுப்புச் சிறுவர் களுக்கு இது நிச்சயமாகத் தெரியாது. பதில் எங்களைக் குழப்ப மட்டுமே செய்யும். கூட்டங் கூடிப் பேசுவதற்காக அவர்களை நான் அழைக்கவில்லை, நிபந்தனைகளைக் கூறி அவற்றை நிறைவேற்றுமாறு கோரவே நான் அவர்களை அழைத்தேன். அடுத்த கூட்டங்களில் நாங்கள் கலந்து பேச முடியும்; அனேகமாக அவற்றில் சிறுவர்கள் ஏதாவது பழகும் விதிகளை மீறினால் அது பற்றி விவாதிக்க வேண்டியிருக் கும், அல்லது எங்கள் சிறுமிகள், அம்மாக்கள், பாட்டிமார் கள், சகோதரிகளுக்கு மகிழ்ச்சிகரமான அதிசயங்களைத் தயார்ப்படுத்த வேண்டியிருக்கும். பெண்மணியின் பால் முரட்டுத்தனமாக நடக்கும் வயது வந்த மனிதனை, பெண் மணிக்கு உதவாமல், அக்கறை காட்டாமல் தொந்தரவு செய்பவரை உண்மையான ஆண்மகன் என்று சொல்லலாமா என்பது குறித்து இப்போது பேசுவோம். குழந்தைப் பரு வத்திலிருந்துதான் உண்மையான ஆண்பிள்ளையாக வளர முடியுமெனக் குழந்தைகள் புரிந்து கொள்ளட்டும்.

''உண்மையான ஆண்பிள்ளைகள் சங்கத்தில் நீங்கள் உறுப்பினராக இருக்க விரும்பினால், இன்று முதல் நீங்கள் நமது சங்க விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதற்கு ஒப்புக் கொள்கின்றீர்களா?''

''சரி!'' என்று சன்னமான குரலில் சிறுவர்கள் கூறு கின்றனர்.

''இன்று இரண்டு விதிமுறைகளை மட்டும் கூறுவேன். முதலாவது: ஒவ்வொரு சிறுமியின் விஷயத்திலும் கவன

மானவர்களாக, மென்மையானவர்களாக, அக்கறை காட்டு பவர்களாக இருக்க வேண்டும். இந்த விதியை திருப்பிச் சொல்லுங்கள் பார்க்கலாம்!''

குழந்தைகள் திரும்பச் சொல்கின்றனர்.

''இரண்டாவது: சிறுமிகள் மேல்கோட்டு அணியவும் கழட்டவும் உதவ வேண்டும். இதை திருப்பிச் சொல்லுங் கள் பார்க்கலாம்!''

பின்னர் சிறுமிகளுக்கு எப்படி மேல்கோட்டை எடுத்துத் தருவதென்று பயிற்சி செய்து பார்க்கும்படி சிறுவர்களிடம் கூறினேன்.

''இதோ, சிறுமிகளின் மேல்கோட்டுகள் தொங்குகின்றன. அவசரப்படாமல், இழுத்துத் தள்ளாமல் நீங்கள் அந்த இடத் தை நோக்கி செல்கின்றீர்கள்.''

எப்படி மேல்கோட்டுகள் உள்ள இடத்திற்குச் சென்று, அவற்றைக் கழட்டுவது என்று நான் செய்து காட்டுகிறேன்.

''மேல்கோட்டை எடுங்கள்... சிறுமியை நெருங்குங் கள்... சிறுமி தன் கரங்களை நீட்டி அணிய வசதியாக இருக் கும்படி அதைப் பிடியுங்கள்... புரிந்ததா? எங்கே, சாஷா, நீ எப்படிச் செய்கிறாய் காட்டு!''

சாஷா சந்தோஷமாகச் செய்து காட்டுகிறான்.

''கியோர்கி, தீத்தோ, சூரிக்கோ, இப்போது நீங்கள் மூவரும் செய்து காட்டுங்கள்!''

சாஷாவும் நானும் அவர்களைத் திருத்துகிறோம், மேல் கோட்டை எப்படிப் பிடிக்க வேண்டும், எப்படி எச்சரிக்கை யாக இருக்க வேண்டுமெனக் காட்டுகிறோம்.

''இப்போது எல்லோரும் மேல்கோட்டுகள் மாட்டப்பட் டுள்ள இடத்திற்கு இடித்துத் தள்ளாமல் செல்லுங்கள் பார்க்க லாம். மேல்கோட்டைக் கீழே போடாமல் இருப்பதும், குழப்பாமல் இருப்பதும் மிக முக்கியம்.''

இதை சிறுவர்கள் சில தடவைகள் செய்து பார்த்துக் கற்றுக் கொண்டனர், இறுதியில் அமைதியாக, சரிவரச் செய்ய ஆரம்பித்தனர்.

''உட்காருங்கள்!''

மீண்டும் அருகருகே உட்கார்ந்தோம். சிறுமிகள் கத வைத் தட்டுகின்றனர்: ''கதவைத் திறவுங்கள்!''

''உண்மையான ஆண்பிள்ளை ரகசியத்தை வெளியிடக்

கூடாது'' என்று நான் சொல்கிறேன். ''நாம் எவ்வளவு பேர் என்று எண்ணுங்கள்!''

அவர்கள் எண்ணினர். என்னையும் சேர்த்து 22 பேர்கள்.

''23வது நபருக்கு நம் ரகசியம் தெரியக் கூடாது!''

மௌனம். நாங்கள் ஒருவரையொருவர் ஏதோ முக்கிய மானதை, தீவிரமானதைப் பற்றிச் சிந்திக்கும் சதிகாரர் களைப் போல் பார்க்கிறோம்.

சிறுமிகளுக்கோ பொறுமையில்லை.

''திறவுங்கள், எங்களை உள்ளே விடுங்கள்!''

நான் கதவைத் திறக்கிறேன்.

''என்ன பேசினீர்கள்?'' என்று என்னை நோக்கி கேள்வி களைத் தொடுக்கின்றனர்.

நாங்கள் தீவிர முகபாவத்தோடு இருக்கிறோம். ரகசி யத்தை வெளிவிடவில்லை.

''எதைப் பற்றியுமில்லை!''

பாடவேளை முடிந்து, சிறுமிகளுக்கு மேல்கோட்டுகளை எடுத்துத் தரும் நேரம் வந்த போது எல்லா சிறுவர்களும் உண்மையான ஆண்பிள்ளைகளாவதில் ஒருமனதான முனைப் பைக் காட்டினர். ஆனால் ஒரு சில சிறுமிகளுக்கு என்ன நடக்கிறது என்று புரியவில்லை, எப்படி நடந்து கொள்வ தென அவர்களுக்குத் தெரியவில்லை. இதைப் பார்க்க வருத்தமாயிருந்தது.

பரவாயில்லை, சிறுமிகளே! விரைவிலேயே உங்களுட னும் இது போன்ற கூட்டம் நடத்துவேன். சிறுவர்கள் மீது எப்படி அக்கறை காட்ட வேண்டும், ஆண்களின் கவனத்தை எப்படி மதிக்க வேண்டும் என்பதை நீங்களும் உணர வேண்டு மல்லவா?

## டிசம்பர் 6.
## பிறந்த நாள்

குழந்தைக்கு சந்தோஷம் தர நிறைய சாக்லேட்டு தர வேண்டுமென்றோ, நூற்றுக் கணக்கான விளையாட்டுச் சாமான்களைப் பரிசளிக்க வேண்டுமென்றோ, எண்ணற்ற முறை முத்தமிட வேண்டுமென்றோ, இடையறாது ஏராள மான அன்பு வார்த்தைகளைப் பேச வேண்டுமென்றோ அவசியமில்லை. உண்மையான மகிழ்ச்சியைப் பெற, சந் தோஷமாக இருக்க அவனுக்கு சிறிதளவே போதும். ஒரு

மணி நேரம் அவனுடன் விளையாடுங்கள்—அவன் சந்தோஷமடைவான்; சாதாரண தாளையும் எளிய பென்சிலையும் தாருங்கள்—அவன் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சியென பாருங்கள்; வீட்டிற்கு சீக்கிரம் வாருங்கள்—அவனுடைய மகிழ்ச்சிகரமான குதிப்பால் வீடே அதிரும்; இரவு அவனுக்கு ஒரு கதை சொல்லுங்கள்—அவன் உலகிலேயே மிக சந்தோஷமான மனிதனாக உறங்குவான். உங்களுடைய மென்மையான, அக்கறை மிக்க உணர்வுகளைத் தொடர்ந்து வெளிப்படுத்துங்கள், அவன் எப்போதும் சந்தோஷமானவனாக இருப்பான் என்று என்னால் உறுதி கூற முடியும், இது அவனது அன்றாட மகிழ்ச்சிகளின் தீரா மூல ஊற்றாகும். ஆண்டிற்கு ஒரு முறை, அவனுடைய பிறந்த நாளன்று, தனக்கு நெருக்கமானவர்களின் மத்தியில் தனது தனித்துவம் உயர்ந்துள்ளதை, தான் பெரியவன் ஆனதை உணரும்படி ஏதாவது செய்யுங்கள். அவனுடைய மகிழ்ச்சிக்கு முடிவே இருக்காது.

ஒவ்வொரு குழந்தையின் பிறந்த நாளையும் வகுப்பில் கொண்டாடுகிறோம். குடும்பத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றிய இந்தச் சிந்தனைகள் இதன் தொடர்பாக என் மனதில் உதித்தன.

இன்று நாங்கள் மாரிக்காவின் பிறந்த நாளைக் கொண்டாடினோம். காலையில் குழந்தைகளுக்கு முகமன் கூறிய பின் நான் கம்பீரமாக அறிவித்தேன்:

''உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. இன்று நம் மாரிக்காவிற்குப் பிறந்த நாள்!''

குழந்தைகள் சந்தோஷமாகக் கை தட்டுகின்றனர்.

''நீங்கள் அவளுக்கு என்ன வாழ்த்து சொல்ல விரும்புகின்றீர்கள்?''

**சான்த்ரோ:** ''மாரிக்கா, எப்போதும் அன்பான சிறுமியாக இரு!''

**தாம்ரிக்கோ:** ''உன் தாய்நாட்டை விரும்பு!''

**நீத்தோ:** ''உன் பெற்றோர்களை மதித்து நட. படிப்பில் உன் வெற்றிகளால் அவர்களுக்கு சந்தோஷம் தா!''

**விக்டர்:** ''மாரிக்கா, நான் உன்னைத் தொந்தரவு செய்தேன், ஞாபகம் உள்ளதா? இனி அப்படிச் செய்ய மாட்டேன்.''

**தேக்கா:** ''உன் அறிவால் நீ புகழ் பெற வேண்டும்!''

கோச்சா: ''துணிவுடைய பெண்ணாயிரு!''

ஏக்கா: ''நன்கு, அழகாக எழுது!''

நீக்கா: ''நன்கு ருஷ்ய மொழி பேசக் கற்றுக் கொள்!''

லாலி: ''நீ ஒரு முறை கூட உடல் நலம் குன்றி பள்ளிக்கு வராமல் இருக்கக் கூடாது என்று விரும்புகிறேன்.''

இராக்ளி: ''மிகச் சிக்கலான கணக்குகளை நீ முதலில் போட வேண்டும்!''

எல்லோரும் வாழ்த்துகளைக் கூறினர். அந்த நேரத்தில் மாரிக்கா கரும்பலகையருகே நின்று புன்முறுவல் பூக்கிறாள், தலையை ஆட்டுகிறாள், ''நன்றி'' என்று சன்னமான குரலில் கூறுகிறாள். கண்களில் மகிழ்ச்சி ஒளி.

''குழந்தைகளே! உங்கள் சார்பாக மாரிக்காவை வாழ்த்தி, அவளுக்கு இந்தக் கதைப்புத்தகத்தைப் பரிசளிக்கிறேன். அதில் 'எங்கள் அன்பு மாரிக்கா! உனக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்! நாங்கள் அனைவரும் உன்னை மிகவும் விரும்புகிறோம். நீ அன்பானவள்! **உன் வகுப்பு மாணவர்கள்'** என்று எழுதினேன்.''

புத்தகத்தை மாரிக்காவிற்குத் தருகிறேன். குழந்தைகள் கை தட்டுகின்றனர், மாரிக்காவிற்கோ மகிழ்ச்சி பொங்குகிறது.

''மாரிக்காவிற்காக இன்று எந்த மாதிரி கேள்விகளைத் தயாரித்திருக்கிறேன் பாருங்கள்!''

கரும்பலகையை மூடியிருந்த திரையை திறக்கிறேன். தாய் மொழிப் பாடத்திற்கான பயிற்சியில் வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும் புதிரில் உரிய எழுத்துகளை எழுதினால் ''மாரிக்கா'' என்ற பெயர் வரும். குழந்தைகள் இதை விரைவிலேயே கண்டுபிடிக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில் இதைச் சொல்லுமாறு சைகை செய்கிறேன்.

''மாரிக்கா!'' என்று வகுப்பு முழுவதும் உரக்கக் கூவுகிறது.

மற்ற சாதாரண கேள்விகள் அனைத்திற்கும் மாரிக்காவை கௌரவிக்கும் முகமாக பதில் சொல்கின்றனர்.

இடைவேளையின் போது இவளை ஒரு ஸ்டேன்ட் அருகே இட்டுச் செல்கிறோம். இது இரண்டு மீட்டர் அகலமும் ஒன்றரை மீட்டர் உயரமும் உடைய ஒரு மரப்பலகை. இதில் குழந்தைகளுக்கு ஒரு வயது கூட நிரம்பாத போது எடுத்த புகைப்படங்கள் உள்ளன. அப்படங்கள் வேடிக்கை

யாக இருக்கின்றன. குழந்தைகள் குறும்புத் தனமாகப் பார்க்கின்றனர். குழந்தைகள் இவற்றைப் பார்த்து மகிழ்கின்றனர். இப்புகைப்படங்கள் ஸ்டேன்டின் மேல் பகுதியில் உள்ளன, கீழ்ப் பகுதிக்கு ஒரு விசேஷம் உள்ளது. பிறந்த நாளன்று குழந்தையை இந்த ஸ்டேன்டின் அருகே அழைத்துச் சென்று, அவனை அருகே நிறுத்தி, உயரத்தை அளக்கிறோம், தேதியை அருகே எழுதி, பெற்றோர்கள் கொண்டு வரும் புதிய புகைப்படத்தை ஒட்டுகிறோம். ஸ்டேன்டில் பல குழந்தைகளின் பிறந்த நாள்களும் குறிக்கப்பட்டு விட்டன. இப்போது மாரிக்காவின் உயரத்தை அளந்து, அருகே தேதியை எழுதி, புகைப்படத்தை ஒட்ட வேண்டும். இந்த வைபவத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இன்னும் மூன்று முறை மாரிக்காவின் உயரத்தை அளந்து அவள் எப்படி வளர்ந்திருக்கிறாள், எல்லாக் குழந்தைகளும் எப்படி வளர்ந்துள்ளார்கள் என்று பார்ப்போம்.

கணிதப் பாடத்திலும் மிகச் சிக்கலான கணக்குகளை மாரிக்காவை கௌரவிக்கும் முகமாகப் போடுகிறோம்.

ஓவிய வகுப்பிலும் ஒவ்வொருவரும் மாரிக்காவிற்காக வரைகின்றனர். ஒரு அழகிய அட்டை தயாராக உள்ளது, குழந்தைகள் தாம் வரைந்தவற்றின் பின் வாழ்த்துகளை எழுதி இதில் வைக்கிறார்கள் (எல்லா எழுத்துகளையும் தெரிந்தவர்கள் எழுதுகிறார்கள்). பின் கர ஒலியோடு மாரிக்காவிற்கு இதை வழங்குகிறோம்.

கடைசிப் பாடவேளையின் போது கலை நிகழ்ச்சியை நடத்துகிறோம். மாரிக்காவை கௌரவிக்கும் முகமாக நடக்கும் அதில் சிலர் கவிதை வாசிக்கின்றனர், சிலர் நடனமாடுகின்றனர், சிலர் பாடுகின்றனர்.

நாள் இறுதியில் சிறுமி அடையாளம் தெரியாதபடி மாறியிருப்பாள். அவள் வேறு ஏதோ மாதிரியானவளாக, நாணம் உள்ளவளாக, சிந்தனையுள்ளவளாக மாறியிருக்கிறாள். அவளிடம் மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் மிகுந்திருக்கும்.

நாள் முடிகிறது. ஒவ்வொருவராக மாரிக்காவை நெருங்கி, மீண்டும் புன்முறுவல் பூத்து, வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றனர். வீட்டிற்குச் சென்று தம் மகிழ்ச்சியை உற்றார் உறவினருடன் பகிர்ந்து கொள்ள அவள் அவசரப்படுகிறாள்.

மாரிக்காவின் பிறந்த நாளை இப்படித்தான் கொண்டாடினோம்.

''அதிகாரத் தொனியுள்ள அம்மாவின்'' மகனின் பிறந்த நாளையும் இதே போல் கொண்டாட நான் சமீபத்தில் திட்டமிட்டிருந்தேன். அன்று அவன் விசேஷ அலங்காரத்துடன் வந்திருந்தான், எல்லோர் கவனத்தையும் கவர்ந்தான்.

''இது அயல்நாட்டுக் காலணி; இதுவும் அயல்நாட்டுக் கோட்டு! இன்று மாலை எங்கள் வீட்டிற்கு ஏராளமான விருந்தினர்கள் வருவார்கள். எனக்கு நிறைய பரிசுகள் கிடைக்கும்.''

இவ்வாறாக அவன் வகுப்புகள் துவங்கும் முன்னரே தம்பட்டம் அடிக்கத் துவங்கினான், அவனது பிறந்த நாளைப் பற்றிச் சொல்லி குழந்தைகளை மகிழ்விக்கும் சந்தர்ப்பத்தையே அவன் எனக்குத் தரவில்லை.

குழந்தைகளும் விசேஷமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தவில்லை.

''அவனுக்கு என்ன சொல்லி வாழ்த்துவது?''

குழந்தைகள் சொன்னார்கள்:

''தம்பட்டம் அடித்துக் கொண்டு திரியாமலிருக்கட்டும்!''

''சிறுமிகளுடன் எப்படிப் பழகுவது என்று தெரிந்து கொள்ளட்டும்!''

''புத்திசாலியாகட்டும்!''

''அவன் நாகரிகமாக நடக்கக் கற்றுக் கொண்டால் நாங்கள் அவனை விரும்புவோம்!''

''அவன் கத்துகிறான்! தன் குற்றத்தை மற்றவர்கள் மீது சுமத்துகிறான்!''

''பொய் பேசாமலிருக்கக் கற்றுக் கொள்ளட்டும்!''

இந்த வாழ்த்துகளை நான் தடுத்து நிறுத்த வேண்டி வந்தது. ஏனெனில் சிறுவன் தலையைக் குனிந்தபடி அழத் தயாரானான்.

''குழந்தைகளே, அவனுடைய மனது அன்பானது என்று எனக்குத் தெரியும், அவன் உங்கள் எல்லோரையும் நேசிக்கிறான். அவனுக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்லுவோம் வாருங்கள்!''

குழந்தைகள் கர ஒலி எழுப்பினர். நான் புத்தகத்தைப் பரிசளித்தேன்.

கரும்பலகையை மூடியிருந்த திரையை விலக்கி, அன்றைய பாடங்கள் முழுவதையும் அவனுக்கு அர்ப்பணித்து, குழந்தைகள் சற்று முன் அவன் மனதில் ஏற்படுத்திய காயத்

தை சரி செய்யத் தயாரானேன். அறுவைச் சிகிச்சை மருத்துவர் ''இதயத்தைத் திறந்து'' காயத்தை சரி செய்ய நுண்ணிய உபகரணங்களை எடுத்துக் கொண்டு தயாராவதைப் போல் நான் தயாரான போது, எச்சரிக்கையின்றி கதவை ஒரு தட்டுத் தட்டி உள்ளே எட்டிப் பார்த்த அந்த ''அதிகாரத் தொனியுள்ள அம்மா'' என்னை ஒரு நிமிடம் வகுப்பறையிலிருந்து வெளியே வருமாறு அழைத்தாள்.

''கதவை மூடுங்கள், இப்போது பாடம் நடக்கிறது!'' என்றேன் நான்.

''ஒரு நிமிடம் தான், நீங்கள் என்ன பயப்படுகின்றீர்கள்?''

குழந்தைகள் முன் தாறுமாறாக எதுவும் நடந்து விடக்கூடாதே என்பதற்காக நான் வெளியே தாழ்வாரத்திற்கு வந்தேன்.

இருதய அறுவை சிகிச்சையை துவங்குவதற்காக மேசையருகே இருக்கும் மருத்துவரை பல இனிப்புப் பண்டங்களை காட்டுவதற்காக இதுவரை யாரும் வெளியே அழைத்ததில்லை.

''இங்கே கேக் உள்ளது, எல்லோருக்கும் போதும், சாக்லேட்டுகள், பணியாரம், நாற்பது பாட்டில்கள் லெமனேட். இன்று என் மகனுக்குப் பிறந்த நாள்! குழந்தைகள் கொண்டாடட்டும்! நீங்களும் அவனிடம் அன்பாக இருங்கள்!''

''ஒன்றும் வேண்டாம்! எல்லாவற்றையும் திரும்ப எடுத்துச் செல்லுங்கள்!'' என்று நான் கண்டிப்புடன் கூறுகிறேன்.

**அவளோ:** ''பயப்படாதீர்கள், இவையெல்லாம் வீட்டில் செய்தது, ஒன்றும் ஆகாது!''

''எது எப்படியானாலும் பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுவதென எங்களுக்கு ஒரு முறை உள்ளது. இவையெல்லாம் இல்லாமலேயே கொண்டாடுவோம்.''

**அவள்:** ''அநாவசியம். குழந்தைகளுக்கு இனிப்பு பிடிக்கும், அவர்கள் சந்தோஷப்படுவார்கள். நீங்களும் அவர்களுக்கு சந்தோஷம் தரத்தானே விரும்புகின்றீர்கள்! இதோ உங்கள் வகுப்புக் குழந்தைகள் அனைவருக்கும் சந்தோஷம்!''

மணியடித்து, குழந்தைகள் அனைவரும் வகுப்பறையிலிருந்து வெளியே வந்தனர். ''அதிகாரத் தொனியுள்ள அம்மா'' உடனேயே அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி

னாள். குழந்தைகள் முன் அந்த அம்மாவுடன் சச்சரவை வளர்க்க நான் விரும்பவில்லை. குழந்தைகள் கேக்,சாக்லேட் ஆகியவற்றோடு அந்த ''அதிகாரத் தொனியுள்ள அம்மா வின்'' மகனுடைய பிறந்த நாளையும் ''சாப்பிட்டனர்'', ஆம், அச்சிறுவனின் பாலான தம் உறவையோ, அவனைப் பற்றிய கருத்தையோ சிறிது கூட மாற்றவில்லை.

இதைப் பற்றி நான் நிறைய நினைக்கிறேன். அப்போது தாழ்வாரத்தில் நான் எப்படி நடந்திருக்க வேண்டும்? இன்னும் கடுமையாக, உறுதியாக, முரட்டுத்தனமாக நடந்து கொண்டிருக்க வேண்டுமோ? குழந்தைகள் இனிப்புகளை வாங்கக் கூடாதென தடுத்திருக்க வேண்டுமோ? ஆனால் இப் போது இது முக்கியமல்ல, குழந்தையின் தன்மையை மேற் கொண்டு எப்படி உருவாக்குவது என்பதுதான் முக்கியம்.

## பிப்ரவரி 20.
## தனிநபரும் பேனா மையின் நிறமும்

குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்களை எந்த மை நிரப்பிய பேனாவால் திருத்துவது என்பது பற்றி முன்னர் நான் யோசித்ததில்லை. சிவப்பு மையால் திருத்தினால் என்ன? சமீபத்தில் லேலா இந்த மையின் நிறத்தை ஒரு வளர்ப்புப் பிரச்சினையாகப் பார்க்கும்படி செய்தாள்: நான் திருப்பித் தந்த கணிதப்பாட நோட்டுப் புத்தகத்தைத் திறந்த அவள் அழத் துவங்கினாள்.

''என்ன விஷயம் லேலா?'' நான் கவலையோடு கேட் டேன்.

பாடம் தடைப்பட்டது. லேலா அழுகிறாள், திறந்து கிடக்கும் நோட்டுப் புத்தகத்தின் மீது கண்ணீர் துளிகள் விழுகின்றன. அவள் செய்த தப்புகளைத் திருத்திய சிவப்பு மை அழுகிறது.

''என்னால் கணிதப் பாடத்தைப் படிக்க முடியாது!.. என்னால் கணக்குகளைப் போட முடியாது!.. நான் என்ன செய்வது? நான் எப்போதும் தப்பு செய்கிறேன்!.. என் நோட்டுப் புத்தகத்தில் வெறும் சிவப்பு மை மட்டுமே உள்ளது!..''

நான் சிறுமியை சாந்தப்படுத்தி, உற்சாகப்படுத்தினேன். ஆனால் என் முன், மையின் நிறத்திற்கும் குழந்தையின் மன

நிலை வளர்ப்பிற்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்பு பற்றிய பிரச்சினை தோன்றியது. அதாவது எழுதும் போது குழந்தை செய்யும் தப்புகளைச் சுட்டிக் காட்டித் திருத்த ஆசிரியர் சிவப்பு மையைப் பயன்படுத்துகிறார். நான் எனது பள்ளி நாட்களில் ஆசிரியர் திருப்பித் தரும் நோட்டுப் புத்தகத்தை எப்படிக் கவலையோடு திறந்தேன் என்று நினைத்துப் பார்த்தேன். அதிலிருந்த சிவப்புக் கோடுகள் என்றுமே எனக்கு சந்தோஷத்தை அளித்ததில்லை. ''மோசம்! தப்பு! உனக்கு வெட்கமாயில்லையா!'' என்றெல்லாம் என் ஆசிரியரின் குரலில் இவை என்னைப் பார்த்துக் கூறியதைப் போலிருக்கும். என் நோட்டுப் புத்தகத்தில் ஆசிரியர் சுட்டிக் காட்டிய தவறுகள் என்னை எப்போதுமே அச்சுறுத்தின, இந்த நோட்டுப் புத்தகத்தைத் தூக்கியெறிய அல்லது என்னை இழிவுபடுத்தியதாக எனக்குப் பட்ட அக்குறிகளடங்கிய பக்கத்தைக் கிழித்தெறியக் கூட நான் விரும்பினேன். சில சமயங்களில் நான் நோட்டுப் புத்தகத்தைத் திரும்பப் பெறும் போது அதில் சிவப்பு மையால் இடப்பட்ட குறிகளைத் தவிர ஒவ்வொரு வரியின் கீழும் வளைகோடுகளும் இடப்பட்டிருக்கும். இந்த வளைகோடுகள் கோபம் கொண்ட எனது ஆசிரியரின் நரம்புகளாக என் கண்களுக்குப் பட்டன.

ஆனால் நான் மாணவன் தானே, எல்லாவற்றையும் பிழையின்றி செய்ய என்னால் முடியாதே! ''மோசம்! தப்பு! வெட்கமாயில்லையா!'' என்ற இந்தப் பயங்கர சமிக்கைகளைக் கண்டு, என்னால் இந்தப் பிழைகளைத் தவிர்க்க இயலவில்லையே (அதுவும் எளியவற்றை) என்று என் மீது நானே கோபப்படுவேன். இந்த சிவப்பு மையை விரும்பும் ஆசிரியர் மீதும் எனக்குக் கோபம் வரும். ''நில்! பிழைகளைத் திருத்தாவிடில் மேற்கொண்டு முன்னால் செல்ல முடியாது!'' என்று இந்த சிவப்பு வளைகோடுகள் என்னிடம் கூறின. எனக்கோ முன்னால் செல்ல அவ்வளவு விருப்பம்! பிழைகள் இருக்கட்டுமே, என்னைத் தடுத்து நிறுத்தாதீர்கள்! ஓ, சிவப்பு மையே நீ இல்லாமலிருந்தால், இன்னும் நூறு ஆண்டுகள் விஞ்ஞானிகள் உன்னைக் கண்டுபிடிக்காமலிருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!

இந்த சிவப்புக் குறிகள் எப்படி என் மனநிலையைப் பாழ்படுத்தியிருக்கின்றன, பல சமயங்களில் எப்படிக் கண்ணீரை வரவழைத்துள்ளன! உலகில் உள்ள எல்லா ஆசிரியர்களும்

மாணவர்களின் பிழைகளை வேட்டையாடிக் கண்டுபிடித்து அதில் மகிழ்ச்சியடைவதென சதித் திட்டம் தீட்டியுள்ளனர்! இப்படி இருந்தால், நாம் அவர்களுக்கு இவ்வளவு திருப்தி தந்திருக்கலாம்: அனேகமாக நாம் நமது நோட்டுப் புத்தகங்களில் எவ்வித கஷ்டமும் ஒரு சில மில்லியன் பிழைகளைச் செய்திருக்கின்றோம்! நமது எழுத்து வேலைகளில் உடனடியாகப் பிழைகளைக் கண்டுபிடிப்பதைத் தவிர வேறு எதையும் பார்ப்பது ஆசிரியர்களின் வேலையில்லையோ என்று எனக்குத் தோன்றும். அதனால்தான் நோட்டுப் புத்தகங்களில் பிழைகளைத் ''திருத்துவது'' என்று கூறுகின்றார்களோ! ''திருத்துவது'' என்பது இந்தச் செயலின் சாரத்தை சரிவர வெளிப்படுத்தவில்லை; ''பிழைகளைக் கண்டுபிடிப்பது'' என்று கூறுவதுதான் சரியாக இருக்கும். ஏனெனில் இவர்கள் எதையும் திருத்தவில்லை.

அப்போது இந்த சிவப்புக் குறிகளை நான், எனது எதிர்காலம் பற்றிய அக்கறையால் எனது ஆசிரியர் எனக்களிக்கும் ''ஊக்கமாக'' பார்த்தேன். ஆனால் அவருக்கு எத்தகைய நல்ல நோக்கங்கள் இருந்த போதிலும் இந்த சிவப்புக் குறிகள் என்னை வருத்தமடையச் செய்தன. ஏனெனில் ஒரு பிழை கூட விடாமல் வேலையை சரிவர நான் செய்யாததால் ஆசிரியருக்கு ஏற்பட்ட எரிச்சலை நோட்டுப் புத்தகத்தில் பார்க்க நான் விரும்பவில்லை, ஆசிரியருடைய அன்பு, மென்மை, பாசம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளங்களையே நான் பார்க்க விரும்பினேன். சிவப்புக் குறிகள் என் தோல்விகளைச் சுட்டிக் காட்டின, நானோ எனது முன்னோக்கிய பாதையில் ஆசிரியருக்கு என்ன பிடித்துள்ளது என்றறியத் துடித்தேன்.

ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது, நான் ஒரு ஆசிரியராக இருக்கும் போது அதைப் பற்றியெல்லாம் மறந்து விட்டேன். நானும் மாணவனாயிருந்தேன், இந்த சிவப்பு மையை நினைத்து கஷ்டப்பட்டிருக்கிறேன் என்பதை மறந்து விட்டு அதே சிவப்பு மையால் என் மாணவர்களின் நோட்டுப் புத்தகங்களில் பிழைகளைக் கோடிட்டுக் காட்டுகிறேன். எழுத்து கோணலாக, சாய்வாக எழுதப்பட்டுள்ளதா —அதனடியில் சிவப்புக் கோடு, வாக்கியம் தவறா— அதனடியில் சிவப்பு வளைகோடு. எவ்வளவு கவனக் குறைவு, விஷயம் தெரியாமை, திறமையின்மை என்று எண்ணிக்

கோபப்படுகிறேன், பதட்டப்படுகிறேன், உணர்ச்சி வசப்படு கிறேன். நானும் ஒரு சமயம் மாணவனாக இருந்தேன் என் பதையும் ஆசிரியரின் சிவப்பு மையை அவள் எப்படிப் பார்க் கிறாள் என்பதற்கும் நான் குழந்தைப் பருவத்தில் எப்படிப் பார்த்தேன் என்பதற்கும் சிறிது கூட வித்தியாசமில்லை என் பதையும் சமீபத்தில் லேலா எனக்கு நினைவுபடுத்தினாள். இதே மாதிரியான சிவப்புக் குறிகளால், கோடுகளால் நான் இவர்களைப் பதட்டமடையச் செய்கிறேன், அழச் செய் கிறேன். நானோ எல்லாம் வேறு மாதிரியாக இருக்க வேண் டும் என்றல்லவா விரும்புகிறேன்.

என்னை இச்சிந்தனைக்கு இட்டுச் சென்ற சிறுமிக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். இது பின்வரும் ''முதுமொழிக்கு'' வழிகோலியது:

> மனிதாபிமான அடிப்படையில் குழந்தைகளை வளர்க் கும் என் முறையை நான் மேம்படுத்த விரும்பினால், நானும் ஒரு சமயம் மாணவனாக இருந்தேன் என்பதை மறக்கக் கூடாது, அன்று என்னைத் துன்புறுத்திய அதே உணர்வுகள் எனது இன்றைய சிறுவர் சிறுமியரைத் துன்புறுத்தாமலிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண் டும்.

இவ்வாறாக குழந்தையைத் தனிநபராக வளர்ப்பதில் என் முன் மையின் நிறம் பற்றிய பிரச்சினை தோன்றியது.

குழந்தை செய்யும் பிழைகளை அடிக்கடி சுட்டிக் காட்டு வது குழந்தைக்கு அதிகம் உதவுமா, அல்லது அவனது வெற்றிகளைக் குறிப்பிடுவது அதிகம் உதவுமா? எப்படிச் செய்யக் கூடாது என்பதன் மீது குழந்தையின் கவனத்தை அதிகம் திருப்ப வேண்டுமா, அல்லது எப்படிச் செய்ய வேண் டும் என்பதன் மீது கவனம் செலுத்த வேண்டுமா? தோல்வி குறித்த வருத்தமா அல்லது வெற்றியின் மகிழ்ச்சியா, எது அவன் வளர்ச்சிக்கு அதிகம் உதவும்? இக்கேள்விகள் அனைத் தையும் ஒரு பிரச்சினையாக ஒன்றிணைத்தால் அது பின்வரு மாறு ஒலிக்கக் கூடும்: ''மோசம்! தப்பு! வெட்கமா யில்லையா!'' என்பது போன்ற எண்ணற்ற குறிப்புகளாக மாறும் சிவப்பு மைக்குப் பதிலாக, ''நல்லது! மகிழ்ச்சி! அப் படியே இரு! அற்புதம்!'' என்பன போன்ற எண்ணற்ற ஊக்கு விப்புகளாக மாறும் பச்சை மையைப் பயன்படுத்தலாமா?

நிச்சயமாக, இப்பிரச்சினையை ஒரு தலைப்பட்சமாகத்

தீர்க்க முடியாது. மையின் நிறத்தின் பின் ஆசிரியரின் கருத்து நிலைகள் உள்ளன, இவற்றில் எதையாவது தேர்ந்தெடுக்க, அல்லது வேறொன்றைத் தேடத் தீவிர சிந்தனை அவசியம். லேலாவுடன் நடந்த சம்பவம் குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்களில் மையின் நிறத்தை மாற்றும்படி செய்தது. இப்போது என் மேசையில் சிவப்பு மை நிரப்பப்பட்ட பேனாவும் பச்சை மை நிரப்பப்பட்ட பேனாவும் உள்ளன. நோட்டுப் புத்தகங்களைத் திருத்தும் போது எனக்குப் பிடித்தவற்றைச் சுற்றி, நான் வெற்றி என்று கருதுவதைச் சுற்றி பச்சை மையால் கோடிடுகிறேன். இந்தப் பச்சைக் குறிகள் குழந்தைகளின் முயற்சிகளுக்கும் வெற்றிகளுக்குமான என் பாராட்டுகள். ஒவ்வொரு முறை நோட்டுப் புத்தகங்களைத் திருத்தும் போதும் நான் பச்சை மையைப் பயன்படுத்தினால், என் மனநிலை மேம்படுவதையும் அவர்களுக்கு என்ன தெரியும், அவர்களால் என்ன முடியும் என்று அதிகம் அறிய முடிவதையும் உணர்ந்தேன். நான் சிவப்பு மையால் எழுதும் போது வருவதை விட பச்சை மையால் எழுதும் போது கோடுகளும் வட்டங்களும் அடைப்புக் குறிகளும் நன்கு துல்லியமானவையாக வருவதை உணர்ந்தேன். அனேகமாக, எரிச்சலை விட சந்தோஷம் அழகானதாயிருக்க வேண்டும், எனவே குழந்தைகளுக்கு சந்தோஷம் தர வேண்டிய மையால் செய்த குறிகள் அழகானவையாக வருகின்றன.

சரி, பிழைகளை என்ன செய்வது?

குழந்தைகள் எழுதும் போது செய்யும் பிழைகளை முதலில் கல்வி போதனையின் முறையியல் மேம்பாடின்மையின் விளைவாக நான் கருதுவதால், இவற்றை என் பிழைகளாக ஏற்று, தனி நோட்டுப் புத்தகத்தில் சிவப்பு மையால் எழுதுகிறேன். கவனக் குறைவு, கவனமின்மையால் ஏற்படும் பிழைகளை, அதாவது இயந்திரகதியான பிழைகளை ஒரு பிரிவாகச் சேர்க்கிறேன். இத்தகைய பிழைகள் அதிகமிருந்தால் இந்த இயந்திரகதியான பிழைகளைத் திருத்துவதில் பயிற்சியளிக்காமல் கவனத்தை, செயல்முனைப்பை வளர்க்கும் பயிற்சிகளைத் தருகிறேன். திறமையில்லாததால், தெரியாததால், புரியாததால் செய்யும் பிழைகளை வேறு விதமானவையாகக் கருதுகிறேன். இந்தப் பிழைகளுக்கு ஏற்ப புதிய பயிற்சிகளைத் தருகிறேன், எழுத்து வேலைகளைக் கொடுக்கிறேன், அல்லது பாடத்தை மீண்டும் விளக்குகிறேன். பிழைகளைத்

திருத்துவதை புதிய பாடத்தை கிரகிக்கும் நிகழ்ச்சிப் போக்கில், புதிய வேலைகளைச் செய்வதில் சேர்ப்பது எனும் கோட்பாட்டைப் பின்பற்றுகிறேன். பாடங்களை மேற்கொண்டு படிக்கும் போக்கில் பிழைகளைத் திருத்தும் வாய்ப்பு இருந்தால், குழந்தைகளுக்கு மிக சலிப்பேற்படுத்தும் பிழைத் திருத்தம் என்றழைக்கப்படுபவற்றில் நேரத்தை வீணாக்குவதில் பொருள் இல்லை. இப்படியாக இந்தப் பழக்கமான வேலை என் பாடங்களிலிருந்து மறையும், ஆனால் இதனால் என் வகுப்புக் குழந்தைகளின் வெற்றி ஒரு சிறிதும் குறையாது.

இன்று லேலா என்னிடமிருந்து கணித நோட்டுப் புத்தகத்தைப் பெற்றதும், ''இதோ, எவ்வளவு கணக்குகளை நான் போட்டிருக்கிறேன், கணிதப் பாடம் எனக்குப் பிடிக்கும்!'' என்று மகிழ்ச்சியாகக் கூறிய போது இந்தப் புதிய அம்சத்தைப் பற்றிய குழந்தைகளின் மதிப்பீட்டை அறிந்தேன்.

## மார்ச் 7.
## ''சின்ன'' விஷயங்களைப் பற்றி

காலை. வகுப்புத் துவங்கும் மணி இன்னமும் அடிக்கவில்லை.

நான் கரும்பலகையில் பயிற்சிகளை எழுதுகிறேன்.

சில சிறுவர் சிறுமியர் என்னிடம் ஓடி வந்து ''இலிக்கோ அழுகிறான்'' என்றனர்.

இலிக்கோ பொறுமையுள்ள சிறுவன். அவன் அழுகிறான் என்றால் உண்மையில் ஏதோ நடந்துள்ளது என்று பொருள்.

''ஏன் அழுகிறான்?''

இலிக்கோ, மேல்கோட்டுகளை மாட்டும் இடத்தில் மூலையை நோக்கியபடி நிற்கிறான்.

''ஏனெனில் சான்த்ரோ அவனைத் தொந்தரவு செய்தான்!''

''இலிக்கோவிற்கு முடி வெட்டியிருக்கின்றனர், சான்த்ரோ ஏதோ கேலி செய்கிறான்!''

ஏதாவது செய்ய வேண்டும். என்ன செய்யலாம்?

சான்த்ரோவை அருகே அழைத்து, அவன் மோசமாக நடந்து கொண்டதாக எல்லோருக்கும் கேட்கும்படி சொல்லி,

இலிக்கோவிடம் மன்னிப்புக் கேட்கும்படி கூறலாம். இது ஒரு வழி.

என்னிடம் ஓடி வந்த சிறுமிகளிடம், இப்படி நண்பனுக்கு விரோதமான வகையில் நடந்து கொண்டதற்காக சான்த்ரோவை வெட்கப்படும்படி சொல்லலாம். இது இரண்டாவது வழி.

இலிக்கோவை அருகே அழைத்து, அவனுக்கு எப்படி முடிவெட்டியுள்ளனர் என்று பார்த்து, ''நீ அழகாக, உண்மையான ஆண் மகனைப் போல் ஆகியிருக்கிறாய். எனக்கும் சிறு வயதில் இப்படி முடி வெட்டிக் கொள்ளப் பிடிக்கும்'' எனலாம். யாராவது அவனைக் கேலி செய்ததை குறிப்பிடாமலிருக்கலாம். இது மூன்றாவது வழி.

இந்த சம்பவத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் தராமல், ''நான் வேலையாய் இருக்கிறேன்'' என்று சிறுமிகளிடம் சொல்லலாம். இது நான்காவது வழி.

வேறு வழிகளும் இருக்கக் கூடும்.

இதில் எதைத் தேர்ந்தெடுப்பது?

நான் சான்த்ரோவைத் தண்டித்தால் இதன் மூலம் வகுப்பு நண்பர்கள் முன் அவனை நான் இழிவுபடுத்தியதாக ஆகக் கூடும். ஒருவேளை அவன் இலிக்கோவை கேலி செய்யவே விரும்பவில்லையோ? கேலி செய்யக் கூடாது தான், ஆனால் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்வதும், நாசூக்காக, கவனமாக நடக்கத் தெரிந்து கொள்வதும் குழந்தைகளுக்கு அவ்வளவு எளிதல்ல.

சான்த்ரோவை வெட்கப்படுத்தும்படி, கண்டிக்கும்படி சிறுமிகளிடம் சொன்னால் அவர்கள் அவனை ''வெட்கப்படுத்தும் முறையில்''பின் சான்த்ரோ சிறுமிகள் மீது குற்றம் சாட்டுவான். அப்போது புதிய பிரச்சினை தோன்றும். இதைத் தீர்ப்பது இன்னமும் சிக்கலாயிருக்கும்.

நிலவரத்தைச் சுமுகமாக்க, எனது செல்வாக்கை மட்டும் பயன்படுத்தினால் (''நீ அழகாகி விட்டாய்'') ஒருவேளை மற்றவர்கள் (என்னை ஆதரிக்க வேண்டும் என்பது தெரியாமலேயே) என்னை ஆதரிக்காமலிருக்கலாம்.

இலிக்கோவின் புண்படுத்தப்பட்ட சுயமரியாதையை புனர் நாட்ட குழந்தைகள் என்னை ஆதரிக்க வேண்டியது அவசியம். இப்படி நடந்தால் சான்த்ரோ தானாகவே கண்டிக்கப்பட்டவனாவான். தன் நடத்தையைப் பற்றி

சான்த்ரோ யோசித்துப் பார்க்கும்படி செய்ய, இதே போல் எதிர்காலத்தில் நடக்காமலிருக்க நான் அவனுடன் நேருக்கு நேராக, விளையாட்டுத்தனமின்றிப் பேச வேண்டும்.

நான் தொடர்ந்து கரும்பலகையில் பயிற்சிகளை எழுதிய படியே அருகில் உள்ள சிறுவர்களிடம் சன்னமான குரலில் சொல்கிறேன்:

''நான் இப்போது இலிக்கோவை அருகே அழைத்து அவனுக்கு ஒன்று சொல்வேன். நீங்கள் என்னை ஆதரிக்க வேண்டும். சரியா?''

சிறுவனைக் கூப்பிடுகிறேன்:

''இலிக்கோ, அந்தப் பெரிய ஸ்கேலைக் கொண்டு வா!''

இலிக்கோ கண்ணீரைத் துடைத்து விட்டு, ஸ்கேலைக் கொண்டு வருகிறான்.

சான்த்ரோ தூரத்தில் நிற்கிறான். குழந்தைகள் என் னிடம் முறையிட்டது அவனுக்குத் தெரியும், எனவே, தொலைவில் நின்று என்ன நடக்கும் என்று பார்க்கிறான்.

''நீ முடி வெட்டிக் கொண்டாயா?'' என்று நான் வியப்பும் மகிழ்ச்சியுமாகக் கேட்கிறேன். ''எங்கே காட்டு பார்க்கலாம்!''

இலிக்கோ மெதுவாகத் தொப்பியைக் கழட்டுகிறான்.

''திரும்பு! உனக்கு முடிவெட்டியவர் திறமையானவர் போல் தெரிகிறது! நன்கு முடி வெட்டியிருக்கிறார்! சிறு வயதில் எனக்கு இம்மாதிரி ஒட்ட வெட்டிக் கொள்ளப் பிடிக்கும். ஆனால் அப்போதெல்லாம் இது மாதிரி அழகாக வெட்ட மாட்டார்கள். என்னைப் பார்த்து சிறுவர்கள் சிரித் தனர், கேலி செய்தனர். ஆனால் நான் இவற்றையெல்லாம் கண்டு கொள்ளவேயில்லை. இரண்டு, மூன்று வாரங்களில் தலை நிறைய முடி வளர்ந்து விட்டது... இப்படி உன்னை எனக்கு அதிகம் பிடிக்கிறது, நீ உண்மையான ஆண்மகன் போலிருக்கிறாய். அப்படித்தானே, சிறுவர்களே?''

உடனே சிறுமிகளும் சிறுவர்களும் என்னை ஒருமனதாக ஆதரித்தனர். அப்போதுதான் வகுப்பறையில் நுழைந்தவர் கள் கூட, நடந்தது என்ன என்று தெரியாமலேயே நான் சொல்வதை ஆமோதித்தனர்.

**ஏல்லா:** ''இலிக்கோ இப்படியிருப்பது எனக்குப் பிடித் துள்ளது!''

**கீகா:** ''எனக்கும் இப்படி முடிவெட்டிக் கொள்ள ஆசையாக உள்ளது!''

**இயா:** ''நன்றாகத்தானே இருக்கிறது! நீ ஏன் தொப்பியைக் கழற்ற வெட்கப்படுகிறாய்?''

''பாருங்கள், உங்களுக்காக எப்படிப்பட்ட கணக்குகளை நான் தயார் செய்கிறேன்!'' என்று வேண்டுமென்றே எல்லோர் கவனத்தையும் இலிக்கோ முடி வெட்டியதைப் பற்றிய பேச்சிலிருந்து திசை திருப்புகிறேன்.

பாடவேளையின் போது குழந்தைகள் என் காதில் தம் விடைகளைச் சொன்ன போது நான் சான்த்ரோவை அணுகி அவன் காதில் மெதுவாகச் சொன்னேன்: ''இந்தக் கணக்கை நீ சரியாகப் போட்டாய். ஆனால் நீ இலிக்கோவிடம் நடந்து கொண்ட விதம் நன்றாக இல்லை! நீ உண்மையான ஆண்மகனாக இருக்க விரும்பினால் இடைவேளையின் போது இலிக்கோவிடம் சென்று 'என்னை மன்னித்து விடு, இலிக்கோ, நான் உன்னைக் கேலி செய்ய விரும்பவில்லை' என்று சொல். நீ எப்படி இதைச் செய்கிறாய் என்று நான் பார்த்துக் கொண்டிருப்பேன்!''

சிறிது நேரம் கழித்து இலிக்கோவிடம் சென்று காதில் மெதுவாகச் சொன்னேன்: ''சான்த்ரோ உன்னிடம் வந்து மன்னிப்பு கேட்டால் மன்னித்து விடு, எல்லாவற்றையும் மறந்து விட்டதாகச் சொல். சரியா?''

இவர்கள் இதே மாதிரி நடந்து கொண்டனர்...

...முதல் இடைவேளையின் போது சிறுமிகள் தேன்கோவையும் வாஹ்தாங்கையும் என்னிடம் அழைத்து வந்தனர்.

''இவர்கள் ஒருவரை ஒருவர் கெட்ட வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தனர்'' என்று மாயா கோபத்தோடு சொன்னாள்.

நான் என்ன செய்வது? சிறுவர்களைத் தண்டிப்பதா? இவர்கள் தம் செயலைப் பற்றித் தாமே யோசித்துப் பார்க்குமாறு விடுவதுதான் நல்லது. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

''குழந்தைகளே, இப்போது நான் இவர்களுக்கு ஒரு வேலை தரப் போகிறேன். இதைச் செய்து முடித்ததும், இப்படி ஒருவருடன் ஒருவர் கலந்து பழகக் கூடாது என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்களென எண்ணுகிறேன். இந்தப்

பழமொழிகள் எழுதிய 40 தாள்கள் எல்லோருக்கும் தருவதற்காக எனக்கு வேண்டும்'' என்று குற்றம் புரிந்தவர்களைப் பார்த்துக் கூறுகிறேன். இந்தப் பக்கத்தை எடுத்துச் சென்று தலா 20 தாள்களில் எழுதி வாருங்கள். இடைவேளைகளில் உட்கார்ந்து எழுதுங்கள். நாளை மறுநாள் முடிக்க வேண்டும். நான் ஏன் இந்த வேலையை உங்களுக்குத் தருகிறேன் என்று புரியும் என எண்ணுகிறேன். இதோ தாள், இதில் எழுதுங்கள்!

ஒரு தாளில் பின்வரும் நான்கு பழமொழிகளை எழுதித் தருகிறேன்:

நல்ல வார்த்தை வாளையும் கீழே போடச் செய்யும்.
நல்ல வார்த்தையால் உலகம் ஒளிமயமாகும்.
கெட்ட வார்த்தை நண்பனையும் விரோதியாக்கும்.
தீய சொல் இதயத்தில் கல்லாக விழும்.

சிறுவர்கள் இதை வாங்கிக் கொண்டு உடனே எழுத உட்கார்ந்தனர்.

ஒரு வாரத்திற்குப் பின் ''நல்ல வார்த்தை—மருந்து'' எனும் தலைப்பில் வகுப்பில் ஒரு கலந்துரையாடலை நடத்துவேன். தேன்கோவும் வாஹ்தாங்கும் அனேகமாக அதில் தீவிரப் பங்கேற்று தம்மைப் பற்றி நிறையப் பேசுவார்களென எண்ணுகிறேன்...

...பெரிய இடைவேளையின் போது குழந்தைகளைப் பூங்காவிற்கு அழைத்துச் சென்றேன். குழந்தைகள் விளையாட ஆரம்பித்தனர். நீயாவும் ஏல்லாவும் காணாமற்போய் விட்டார்கள் என்பதை திடீரெனக் கண்டுபிடித்தோம். அவர்களைத் தேட ஆரம்பித்தோம். எனக்குக் கவலை உண்டாயிற்று. குழந்தைகளும் கவலைப்படுகின்றனர். அவர்கள் எங்கே போயிருக்க முடியும்? அனுமதியின்றி அவர்கள் எப்படிப் போகலாம் என்று குழந்தைகள் கண்டிக்கின்றனர். இடைவேளை முடிவடைகிறது. இறுதியாக அவர்கள் வயலில் பூத்த பூக்களை கைநிறையக் கொண்டு வருகின்றனர்.

''இது உங்களுக்கு!'' என்று கூறி பூக்களை என்னிடம் நீட்டுகின்றனர்.

நான் பதில் சொல்லும் முன்னரே எல்லாப் பக்கங்களில் இருந்தும் குழந்தைகளின் கோபக் குரல்கள் ஒலிக்கின்றன.

''நீங்கள் எங்கே போனீர்கள்? ஏன் அனுமதியின்றி சென் றீர்கள்? எங்கள் விளையாட்டைக் கெடுத்து விட்டீர்கள்!''

''நாங்கள் ஆசிரியருக்கு பூ பறிக்கப் போனோம்'' என்று ஏல்லா சமாதானம் சொல்கிறாள்.

''அவருக்கு பூக்கள் எதற்கு, நீங்கள் அவருக்கு எவ் வளவு வருத்தம் ஏற்படுத்தினீர்கள் தெரியுமா!''

''உங்களுக்காக அவர் எவ்வளவு கவலைப்பட்டார் தெரியுமா!''

''உங்களுக்கு வெட்கமாயில்லையா!''

''நாங்கள் எல்லா இடங்களிலும் உங்களைத் தேடி னோம்!''

குழந்தைகள் ஒருவருக்கு ஒருவர் எப்படி புத்தி சொல் கின்றார்கள் என்பதைப் பார்த்த நான், இந்தப் பொதுக் கோபத்தில் தலையிடாமல் இருப்பதுதான் நல்லது என்று முடிவு செய்தேன்.

## நீங்கள் இல்லாத வெற்று வகுப்பில் எனக்குச் சலிப்பாக உள்ளது

இன்று எங்கள் பள்ளி வாழ்க்கையின் கடைசி 170வது நாள்.

குழந்தைகள் வரும் முன் எல்லாவற்றையும் தயார் செய் யும் பொருட்டு நான் மிகவும் சீக்கிரமாகவே வந்து விட் டேன்.

தாழ்வாரத்தில் உள்ள கரும்பலகையில் குழந்தைகள் இந்தக் கல்வியாண்டில் எழுத்துப் பயிற்சியிலும் கணிதப் பாடத்திலும் செய்த முதல் மற்றும் கடைசி வேலைகளை வைக்கிறேன். முதல் எழுத்துப் பயிற்சியின் போது (செப் டெம்பர் மாதம் 8ஆம் தேதி) தெளிவற்ற கையெழுத்தில் குழந்தைகள், எழுத்துகளுக்குப் பதில் வட்டங்களால் முதல் வார்த்தைகளை ''எழுதியுள்ளனர்'': நான்கு வட்டங்கள்— ''அம்மா'', ''அப்பா'', ஐந்து வட்டங்கள்—''தாயகம்''... கடைசி வேலையை இவர்கள் நேற்று செய்தார்கள். ''நான் பள்ளியில் என்ன கற்றுக் கொண்டேன்'' எனும் தலைப் பிலான கட்டுரையாகும் இது. கணிதப் பாடத்தில் முதல் பயிற்சி (செப்டெம்பர் 9) ''ஒன்று'' என்னும் எண் வரிசை

யாக எழுதுதல், வரைகணித வடிவங்களுக்கு வண்ணம் பூசுதல். கடைசி கணிதப் பாடத்தில் (மே 16ஆம் தேதி) தாமே உருவாக்கிய கணக்குகளைப் போட்டனர், வரைகணித வடிவங்களை வரைந்தனர். ஒவ்வொரு குழந்தையின் இந்த 4 வேலைகளும் இன்று ஸ்டேன்டில் உள்ளன. அதே சுவரில் ஒரு பெரிய வெள்ளைத் தாளை மாட்டி, அருகே மேசையில் வண்ணப் பென்சில்களை வைத்தேன். தாளின் மேல் ''எனது பள்ளி வாழ்க்கை'' என்று எழுதப்பட்டுள்ளது; இதில் குழந்தைகள் வரைய வேண்டும். தாழ்வாரத்திலும் வகுப்பறையிலும் புகைப்படங்களை மாட்டினேன். இதில் ஒவ்வொரு குழந்தையும் அவனுடைய பள்ளி வாழ்க்கையின் ஒரு தருணத்தில் காட்சியளிக்கிறான்—சிலர் யோசனையில் மூழ்கியிருக்கின்றனர், சிலர் இடத்திலிருந்து எழுந்து ஏதோ கத்துகின்றனர், சிலர் கொட்டாவி விடுகின்றனர், சிலர் அருகில் உள்ளவருடன் பேசுகின்றனர், சிலர் நடனமாடுகின்றனர், சிலர் பூங்காவில் எறும்புகளைக் கவனிக்கின்றனர்... இப்படங்களை இதற்கு முன் குழந்தைகள் பார்க்கவில்லை. ஒரு சிறு ஆல்பம் நான் தயாரித்தேன், அதில் 40 பக்கங்கள், செப்டெம்பரின் முதல் நாட்களில் ஒவ்வொரு குழந்தையும் ''நான் சிறுவனாக இருந்த போது'' என்ற தலைப்பில் சொன்னவற்றைப் பற்றிக் குறிப்புகள் எழுதியுள்ளேன்.

இந்த அதிசயங்களின் மூலம் குழந்தைகள் எப்படி வளர்ந்துள்ளனர் என்று அவர்களுக்குக் காட்டவும், பெற்றோர்களுக்கு அவர்களின் குழந்தைகள் எப்படி மாறி, பெரியவர்களாகி விட்டனர் என்று காட்டவும், நான் என்ன சாதித்துள்ளேன் என்று பார்க்கவும் நான் விரும்புகிறேன்.

எல்லாம் செய்தாகி விட்டது.

நான் வெற்று வகுப்பில் குழந்தைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். டெஸ்குகளைப் பார்க்கிறேன்.

இதோ இது மாரிக்கா உட்காருமிடம். இந்தச் சின்னஞ்சிறு மாணவி வகுப்பறையில் நுழைந்ததுமே என்னிடம் வந்து, ''வணக்கம்!'' என்று சொல்லுவாள், பின் என்னைப் பற்றி ஏதாவது கேட்பாள். நான் ஏதாவது புதிதாக அணிந்திருந்தால் கண்டிப்பாகச் சொல்லுவாள்:

''இன்று எவ்வளவு அழகாக இருக்கின்றீர்கள்!'' பின் புதிய பொருளைத் தொட்டுப் பார்ப்பாள்.

''உனக்காகத்தான் இன்று நான் அழகாக உடையணிந்து

வந்திருக்கிறேன். உனக்குப் பிடித்துள்ளதா?'' என்று பதில் சொல்வேன்.

அவள் புன்முறுவல் பூத்தபடி என்னைக் கட்டிக் கொள் வாள்.

சமீபத்தில் ஒரு நாள் அவள் அம்மா வந்து, பள்ளி நேரத் திற்கு முன்னதாகவே மாரிக்காவை வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பினாள்.

''இல்லை, நான் போகமாட்டேன்!'' என்று மாரிக்கா உறுதியாக மறுத்து விட்டாள்.

அம்மா என்னென்னவோ சொல்லிப் பார்த்தாள். ஒன்றும் பயன் தரவில்லை.

''ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்?'' என்று அம்மா கோப மாகக் கேட்டாள்.

''நான் பிடிவாதம் பிடிக்கவில்லை! இது பள்ளிக்கூடம்!''

''அப்படியெனில் இனி உன்னைப் பள்ளிக்கே அழைத்து வர மாட்டேன்.''

''அழைத்து வர மாட்டாயா? நான் உன்னை வேலைக்குப் போக விடாவிடில் எப்படியிருக்கும்?''

நான் மாரிக்காவிடம் அம்மா சொல்லுவதைக் கேட்கு மாறு கூறவில்லை என்ற அதிருப்தியோடும், இன்னும் ஒரு முறை மகளை அழைத்துச் செல்ல பள்ளிக்கு வர வேண்டுமே என்ற எண்ணத்தோடும் அம்மா திரும்பிச் சென்றாள்.

இதோ இங்குதான் சுருட்டை முடியுடைய, ஓய்வற்று அலைந்து திரியும் சிறுவன் அமர்ந்திருப்பான். இவன் விஷ யத்தில் எனது போதனைமுறை எதுவும் பலிக்கவில்லை.

நவம்பர் இறுதியில் கூட அவனால் வார்த்தையில் ஒலி களைப் பிரிக்க இயலவில்லை, எழுத்துகளையும் எண்களை யும் குழப்பினான், எந்த எழுத்தையும் எண்ணையும் காட்டி னாலும் அது நான்கு என்றான். பிப்ரவரி ஆரம்பத்தில் ஒரு சில எழுத்துகளைக் கற்றுக் கொண்டாலும் இவற்றைக் கொண்ட எளிய அசைகளைக் கூட அவனால் படிக்க இயல வில்லை. நான் அவனை எதையாவது வரையச் சொன்ன போது அவன் ஒரு தாறுமாறான வடிவத்தை வரைந்தான், அது ஒரு முக்கோணம் போலிருந்தது, அதன் ஓரத்தில் சிறு வட்டங்கள் இருந்தன. ''இது வீடு, இந்த வட்டங்கள் சக் கரங்கள்'' என்றான் அவன். பின் இதே மாதிரி வரைந்து, பந்தயக் கார் என்றான். அனேகமாக, இந்தப் பல்பொருள்

படத்திலும் பல அர்த்தமுள்ள ''நான்கு'' என்ற எண்ணிலும் ஏதோ ஒரு விசேஷ அர்த்தம் இருக்க வேண்டும், இதை நான் கண்டுணர வேண்டும்.

நீண்ட காலத்திற்கு அவனால் வகுப்பு ஒழுங்குமுறைகளுக்குப் பழகிக் கொள்ள முடியவில்லை. தானாக எழுந்து வகுப்பில் அங்குமிங்கும் நடந்தான், மேல்கோட்டை எடுத்து அறையின் நடுவில் உதறுவான். ஒரு முறை அவன் வகுப்பில் விசிலடிக்கத் துவங்கிய போது மற்ற குழந்தைகளே அவனிடம் தொந்தரவு செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொண்டனர். அவனிடம் அன்புடன் நடந்து கொள்ளுமாறும் அக்கறை காட்டுமாறும் குழந்தைகளிடம் சொல்ல நான் பெரும் பாடுபடவேண்டியிருந்தது.

சிறுவனே, இந்தக் கோடை விடுமுறையின் போது நிறைய புத்தகங்களைப் படித்து, நிபுணர்களுடன் கலந்து பேசி செப்டெம்பரில் உனக்கான ஒரு போதனைமுறையுடன் கண்டிப்பாக வருவேன். இயற்கையன்னை உனக்குத் தராததை அல்லது பறித்துக் கொண்டதைத் திரும்பப் பெறுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எல்லாம் சரியாகிவிடும் என்ற நன்னம்பிக்கை எனக்குள்ளது, ஏனெனில் இது இல்லாவிடில் உனக்கு உதவ முடியாது. மேலும் நீயும் அன்பானவனாகி, படிப்படியாக படிப்பின் மீது ஆர்வம் காட்டுவதால் எனக்கு நம்பிக்கை ஊட்டுகிறாய். நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம்! எனக்கு வேறு வழியில்லை!..

...இதோ இந்தக் கடைசி டெஸ்க் தாத்தோவின் இடம்.

''தாத்தோ, நீ என்ன படிக்கிறாய்?

'' 'டாமஸ் ஸாயரின் அதிசாகசங்கள்'.''

இது நவம்பரில் நடந்தது.

''இப்போது என்ன படிக்கிறாய், தாத்தோ?''

'' 'கேக்கெல்பெரி ஃபினின் அதிசாகசங்கள்'.''

இது ஜனவரியில் நடந்தது.

''தாத்தோ, உன் கைகளில் என்ன புத்தகம்?''

'' 'ரகசியத் தீவு'.''

''இதை நீ படிக்கிறாயா?''

''பாதி படித்து விட்டேன். பெரிதும் சுவாரசியமாக உள்ளது!''

இது ஏப்ரலில் நடந்தது.

அனேகமாக, இன்று தாத்தோ தான் கோடை விடுமுறை

யில் எந்தப் புத்தகங்களைப் படிக்கப் போகிறான் என்று கூறு வான். சண்டை போடாமல் இரு, நீ படித்த புத்தகங்களைப் பற்றி நண்பர்களுக்குச் சொல், நான் உனக்கு சிக்கலான கணக்குகளைக் கொண்டு வந்து தருவேன். கொண்டு வரட் டுமா?..

...இதோ இந்த இடத்தில் இன்று யாரும் உட்கார மாட் டார்கள், ஒரு மாதமாக இந்த இடம் காலியாக உள்ளது. அம்மா தன் மகனோடு மாஸ்கோவிற்குச் சென்று விட்டாள். குழந்தைகள் இச்சிறுவனை அடிக்கடி நினைத்துப் பார்த்து ஏங்குகின்றனர். சமீபத்தில் தேன்கோ என்னிடம் சொன் னான்: ''நேற்று எனக்கு ஒரு கனவு வந்தது. அவன் நம்மிடம் திரும்பி வந்து அற்புதமான கவிதைகளைப் படித்தான். அவனால் எப்படி இவ்வளவு கவிதைகளைப் படிக்க முடிந் தது என்று நாம் ஆச்சரியப்பட்டோம். நாம் கை தட்டி னோம், பின் நான் விழித்துக் கொண்டேன்!''

நேற்று கணிதப் பாடத்தில் குழந்தைகளுக்கு மிகவும் சிக்கலான ஒரு கணக்கைத் தந்தேன். ''கரும்பலகையில் நான் இரண்டு கோடுகளை வரைந்திருக்கிறேன். நீங்கள் இவற்றைக் கற்பனையில் பார்க்க வேண்டும், ஏனெனில் இவற்றை நான் இப்போது காட்டப் போவதில்லை. ஒரு கோட்டின் நீளம் ''x'' செ.மீ., மற்றதன் நீளம் 15 செ.மீ., இரண்டின் நீளத்தையும் சேர்த்தால் 22 செ.மீ. வரும். முதல் கோட்டின் நீளம் எவ்வளவு?'' கணக்கை எழுத்து வடிவில் எழுதாமல் அவர்களால் இதைப் போட முடியவில்லை. அப் போது ஏக்கா சொன்னாள்: ''இப்போது அவன் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும், அவன் இக்கணக்கைப் போட் டிருப்பான்''. ஆம், இந்தச் சிறுவனின் தந்தைதான் தன் மகனைப் பற்றி யோசிக்காமல், தாயை விவாகரத்து செய்தார். அத்தாய் மகனுடன் மாஸ்கோ சென்றாள்.

சிறுவனே! நிச்சயம் நீ நல்ல மனிதனாவாய், மனிதர் களின் மீது உள்ள நம்பிக்கையை இழக்காதே! தந்தை இப் படி யோசனையின்றி நடந்து கொண்டதால் உனக்கு மிகவும் பிடித்தமான நபரை நீ இழந்து விட்டாய். நமது உண்மை யான ஆண்பிள்ளை சங்கத்தில் உனக்குத்தான் முதன் முத லாக புரோமித்தியஸ் பட்டம் வழங்கினோம். நீ புரோமித் தியஸ் போல் வளர்ந்து பெரியவனாவாய், சிறுவனே! நாங் கள் உனக்கு அடிக்கடி கடிதங்களை எழுதுவோம். நேற்று

உனது 38 வகுப்பு நண்பர்களும் உனக்கு கடிதங்களை எழுதினார்கள். அவர்கள் என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் இந்த 38 சந்தோஷ செய்திகளும் ஏற்கெனவே விமானத் தபாலில் அனுப்பப்பட்டு விட்டன என்று நம்புகிறேன்...

...நடுவரிசையில் உள்ள இந்த இரண்டாவது டெஸ்கும் இன்று காலியாக இருக்கும். இங்கிருந்த சிறுமியை போர்டிங் பள்ளியில் சேர்த்து விட்டனர். இவளுக்காகவும் குழந்தைகள் ஏங்குகின்றனர். இவளுக்கும் 38 கடிதங்கள் அனுப்பப்பட்டன. நானும் அந்த போர்டிங் பள்ளி இயக்குநருக்கு எழுதினேன்... நாளை நானே நேரில் சென்று பேசுவது நல்லது...

...மூன்றாவது வரிசை, மூன்றாவது டெஸ்க். இங்கே கோச்சா உட்காருகிறான்.

அவன் எப்போதும் எதையாவது, ஆமையை அல்லது சிவப்புக் கல்லைத் தேடுவான்.

சமீபத்தில் ஏதோ தலைமையகத்தை ஏற்படுத்தியுள்ளதாக சொன்னான்.

''என்ன தலைமையகம்?'' என்றேன் நான்.

''பூமியடித் தலைமையகம். நாங்கள் ஒரு குழியைக் கண்டுபிடித்தோம். அதன் மீது பெரிய அட்டைகளைப் போட்டு மூடினோம். அதைப் பெரிது செய்ய ஆரம்பித்தோம், அப்போது ஒரு செத்த நாயைக் கண்டுபிடித்தோம். அதை வெளியில் இழுத்தோம்.''

''யார் அந்த 'நாங்கள்'?''

''அது ரகசியம், ஆனால் உங்களுக்குச் சொல்லுவேன். தலைமையகத்தில் நான் இவர்களைச் சேர்த்திருக்கிறேன்...'' அவன் தன் ஆறு நண்பர்களின் பெயர்களை என் காதில் சொன்னான்.

''நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?''

''இன்னமும் தெரியாது!''

இவனுடன் என்ன செய்வதென எனக்குத் தெரியும். நீங்களே செய்த விளையாட்டுப் பறவைகளின் பந்தயம் நடத்துமாறு அல்லது விண்வெளிவீரர்கள் பற்றிய கண்காட்சி நடத்துமாறு அல்லது 1941—1945இல் பாசிசத்திற்கு எதிராக நடந்த மாபெரும் தேசபக்த யுத்த சம்பவங்கள் பற்றித் தாத்தாமார்களிடமிருந்து அறியுமாறு அல்லது கதைப் போட்டி நடத்துமாறு திடீரென உங்களுக்கு ரகசிய கட்டளை

களைப் பிறப்பிக்கலாமே! இதைப் பற்றி விரிவாகப் பேச இப்போது முடியாது, மீண்டும் கூடும் போது பேசுவோம்.

ஆனால் உனக்கு நமது பொது ரகசியம் பற்றி தெரியாது! நாங்கள் எல்லோரும் உனக்கு ''எதிராக'' சதி செய்துள்ளோம்!

''வலேரி மாமா வந்து விட்டார்!'' என்று உன் தந்தை வகுப்பறையில் நுழைந்ததும் எல்லா குழந்தைகளும் கத்தினார்கள்.

உன் நண்பர்களும் நீயும் பள்ளி வாயிலருகே அவருக்காக அடிக்கடி காத்திருக்கின்றீர்கள். அவர் உங்களுக்கான இசையுடன் மட்டுமின்றி அன்புடன், பாசத்துடன், புன்முறுவலுடன் எப்போதும் வருவார். அவர் இசையைப் பற்றி சுவாரசியமாக விளக்கினார், பியானோவில் உங்களுக்காக வாசித்துக் காட்டினார், இசை நாடக ஒத்திகைகளை நடத்தினார்... ஆனால் உன் குடும்பத்தில் நடந்த சோகத்தைப் பற்றி உனக்கு மட்டும்தான் தெரியாது.

''அவருக்கு ஒரு விபத்து நேர்ந்து தொலைதூர நகரத்தில் மருத்துவமனையில் இருக்கிறார். குணமாகும் வரை நீண்ட நாட்களுக்கு அவர் அங்கிருப்பார்!'' என்று உன்னிடம் இப்படிச் சொன்னார்கள்.

அன்றைய தினம் (நீ பள்ளியில் இல்லை) நடந்ததைக் கேள்விப்பட்டதும் குழந்தைகள் அழுதனர். உனது மென்மையான இதயத்தில் காயம் ஏற்படாமலிருக்க, உரிய நேரம் வரை இந்தப் புனிதமான பொய்யைக் காப்பதென நாங்கள் முடிவு செய்தோம்.

...இங்கே தேயா உட்காருகிறாள். எங்கே நிமிர்ந்து நேராக உட்கார்! எழுதும் போது கூன் போடக் கூடாது!..

...அருகே தேயாவின் சகோதரன் லேரியின் இடம். நிதானமாகப் பேசு, உன் கழுத்து புடைத்து விடுகிறது...

...இது தீத்தோவின் டெஸ்க். ஆண்பிள்ளையாக இரு! இருட்டில் பயப்படாதே!..

...இங்கே ரூசிக்கோ உட்காருகிறான். உனது முன் யோசனையும் திறமையும் எனக்கு மகிழ்ச்சி தருகின்றன. ஆனால் ஏன் பொய் சொல்கிறாய்? இந்தத் தீய பழக்கத்திலிருந்து உன்னை விடுவிக்க நான் வழிகளைத் தேடுகிறேன்...

...இது நீயாவின் இடம். நீ என்ன வரைகிறாய்? கையில் பூ ஏந்திய ஒரு சிறுவனின் படமா? இதை யாருக்குப் பரி

சளிக்கப் போகிறாய்? எனக்கா? நன்றி, நீயா! இதை என் அறையில் மாட்டி வைப்பேன்!..

...அருகே நாத்தோவின் இடம். நீ என்ன முணுமுணுக் கிறாய்? புதிய கவிதைகளைப் படித்து விட்டாயா? எப்போது எங்களுக்கு இவற்றைச் சொல்வாய்? இப்போதா?...

...இந்த டெஸ்கில் விக்டர் உட்காருகிறான். என்ன விஷயம், சிறுவனே? நான் உனக்கு ஒரு சிக்கலான கணக்கைத் தரட்டுமா? இது என்னிடம் தயாராயுள்ளது. மேசையிலிருந்து எடுத்துக் கொள்!..

...இது இலிக்கோவின் இடம். ஜார்ஜிய மொழி உச்சரிப்பை நன்கு கற்றுக் கொண்டாயா?..

...இங்கே எலேனா உட்காருகிறாள். அதிகமாக வெட்கப் படாதே! பயப்படாதே, உன் திறமைகளை நம்பு!

...இது ஏல்லாவின் இடம். உன் தங்கை பேச ஆரம் பித்து விட்டாளா? அவள் பேசும் முதல் வார்த்தை என்ன என்று கவனித்து சொல். என் வாழ்த்துகளை அவளுக்குச் சொல்!..

...இங்கே கோத்தே உட்காருகிறான். எங்கே பியானோவில் உன் பாட்டை வாசி, எல்லோரும் உன்னைக் கேட் கின்றனர்...

...இங்கே கீகா உட்காருகிறான். நீ ஏன் இன்று சோக மாக இருக்கிறாய்? அம்மாவை மருத்துவமனையில் சேர்த் திருக்கின்றார்களா? வருத்தப்படாதே, அவளுக்கு விரைவில் உடல்நலம் சரியாகி விடும்! அவளுக்கு உனது கதையைப் பரிசாக எடுத்துச் செல். இது அவளுக்குப் பிடிக்கும்!..

...இது லேலாவின் இடம். உனக்கு என்னம்மா ஆயிற்று? நீயே உன்னைத் தண்டித்துக் கொள்கிறாயா? எதற்காக? தப்பு செய்து விட்டாயா?எப்போது? சரி, உனக்கே தெரியும்!..

...இது ஏக்காவின் இடம். தேன்கோவையும் கோத்தேயையும் மன்னிக்க வேண்டும் என்கிறாயா? அவர்கள் இனி இப்படி செய்ய மாட்டார்களா? சரி, நல்லது...

...இது தேக்காவின் இடம். நீ என்ன எழுதியிருக்கிறாய்? 2,500+2,500=5,000? அற்புதம், சரி! ஏன் சாக்பீசால் டெஸ்கில் எழுதுகிறாய்?..

இங்கே...

ஆனால் வகுப்பில் ஒருவரும் இதுவரை இல்லை.

குழந்தைகளே, விரைவாக வாருங்கள்! நீங்கள் இல்லாத வெற்று வகுப்பில் எனக்குச் சலிப்பாக உள்ளது!

அவர்கள் பேசிவைத்துக் கொண்டா வருகிறார்கள்?

திடீரென பத்து—பன்னிரண்டு மகிழ்ச்சிகரமான புன்முறுவல்கள் வெடிக்கின்றன.

''வணக்கம்!''

''வணக்கம்!''

கண்களை மூடியபடியே ஒவ்வொரு ''வணக்கமும்'' யாரால் சொல்லப்பட்டது என்பதை என்னால் யூகிக்க முடியும்.

வகுப்பில் உயிர் வந்துள்ளது, மலர்களின் மணம்...

''வணக்கம், குழந்தைகளே!'' என்று ஒவ்வொருவரிடமும் கையை நீட்டுகிறேன்.

சாதாரணமாக, குழந்தை வகுப்பில் நுழைந்ததும் நேராக என்னிடம் வந்து முகமன் கூறுவான், நான் கை வேலையாக இல்லாமலிருந்தால் கை குலுக்குவோம். இது ஒரு பழக்கமாக எங்கள் வகுப்பில் நிலவி வருகிறது. குழந்தைகள் இந்தக் கை குலுக்கலைப் பெரிதும் மதிக்கின்றனர், இது நாள் பூராவும் எங்களது காரிய ரீதியான மற்றும் நட்பு ரீதியான கூட்டை பலப்படுத்துகிறது.

''இன்று நமக்கு நிறைய வேலைகள் உள்ளன. பெற்றோர்களும் விருந்தினர்களும் வரும் முன் இவற்றைச் செய்து முடிக்க வேண்டும்!''

''செய்து முடிப்போம்!''

''நாம் என்ன செய்ய வேண்டும், பாருங்கள்!''

நான் கரும்பலகையில் எழுதியுள்ளதைக் குழந்தைகள் வாய்விட்டுப் படிக்கின்றனர்:

**முதல் பாடம்:** ரகசிய பாக்கெட்டுகளை நிரப்பி ஒட்ட வேண்டும்.

**இரண்டாவது பாடம்:** கண்காட்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மூன்றாவது பாடம்:** மரங்களிடம் விடை பெற வேண்டும்.

**நான்காவது பாடம்:** எதிர்காலத்தைப் பற்றிப் பேச வேண்டும்.

''பின்னர்?''

''பின்னர் பெற்றோர்களும் விருந்தினர்களும் வருவார்கள். நாம் நமது நாடகத்தை நடித்துக் காட்டுவோம். பின்னர் ஒருவருடன் ஒருவர் விடை பெறுவோம்.''

''எனக்கு விடை பெற விருப்பமில்லை!''

''வாருங்கள், மணியடிப்பதற்காகக் காத்திராமல் வேலையைத் துவங்குவோம்!''

குழந்தைகள் டெஸ்குகளின் பின் அமருகின்றனர். ஒவ்வொருவரும் டெஸ்க் உள்ளிருந்து ஒரு பாக்கெட்டை எடுத்து காரியத்தில் இறங்குகின்றனர்: உள்ளிருப்பதைப் பார்த்து, சரிசெய்து, ஒழுங்குபடுத்துகின்றனர். நான் ஒவ்வொருவரையும் அருகே அழைத்து, ரகசிய பாக்கெட்டில் என்ன இருக்கிறது என்று பார்த்து, அதில் குழந்தையைப் பற்றிய விவரங்களடங்கிய தாளைப் போட்டு, அதை ஒட்ட அனுமதி தர வேண்டும்.

முதல் அரையாண்டு முடிவில் இதே போன்ற முதல் பாக்கெட்டுகளைப் பெற்றோர்கள் பெற்றனர். இது இரண்டாவது பாக்கெட். முதல் பாக்கெட்டைப் பற்றிய இவர்களுடைய கருத்துக்களை வைத்து பார்த்தால் இந்த இரண்டாவது பாக்கெட்டிற்காக இவர்கள் ஆர்வத்துடன் காத்திருக்க வேண்டும்.

இது என்ன ரகசிய பாக்கெட்? ஏன் பாக்கெட்? ஏன் ரகசியம்? இதற்கான பதில்கள் என்னிடம் உள்ளன, இவற்றிற்கு என் சிந்தனைகளும் பரிசோதனையும் ஆதாரம்.

பூர்வாங்கத் தயாரிப்பிற்காகப் பள்ளிக்கு வந்துள்ள ஆறு வயது மாணவர்களுக்கு மதிப்பெண்கள் போடக் கூடாது. எனது இளம் மாணவர்களுக்கு முதல் வகுப்பிலோ, இரண்டாவது வகுப்பிலோ, மூன்றாவது வகுப்பிலோ நான் நீண்ட நாட்களாகவே மதிப்பெண்களைப் போடுவதில்லை. என் கருத்துப்படி, மதிப்பெண்கள் காலுடைந்த போதனைமுறையின் ஊன்று கோல், ஆசிரியரின் அதிகாரத்தை நிலைநாட்டும் தடியாகும். ஊன்று கோல்களுடன் வகுப்பறையில் நுழைவது, ஆறு வயதுச் குழந்தைகளின் கண்களில் படும்படி தடியை வைத்து படிப்பு சொல்லித் தருவது என்பது எனக்கு போதனைமுறையின் ஒழுங்கின்மையாகப் படுகிறது.

இந்த மதிப்பெண்கள் யாருக்கு வேண்டும்?

''குழந்தைகளுக்கு!'' என்று ஒரு சில ஆசிரியர்கள் கூறுவது காதில் விழுகிறது.

இல்லை, என்னருமை சக ஆசிரியர்களே! இவை குழந்தைகளுக்கு வேண்டவே வேண்டாம்! மதிப்பெண்கள் என்றால் என்ன, இவை எதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டன, யாரு

டைய வாழ்க்கையை இவை எளிதாக்குகின்றன என்பதெல் லாம் இவர்களுக்குத் தெரியாது. ஆசிரியர்களும் பெற்றோர் களுமாகிய நாம்தான் குழந்தைகளுக்கு மதிப்பெண்களைப் பற்றிச் சொல்லித் தருகிறோம், இவற்றின் மீது இவர்களுக்கு வெறியையே ஏற்படுத்துகிறோம், பின்னர் இவர்கள் நல்ல மதிப்பெண்கள் வாங்கப் பாடுபடும் போது, இந்த மதிப் பெண்களுக்காகப் படிக்கத் துவங்கும் போது, ''பார்த்தீர் களா, குழந்தைகளுக்கு மதிப்பெண்கள் எப்படி அவசியம், இவை இல்லாவிடில் படிக்கவே மாட்டார்கள்'' என்று கூறு கிறோம்.

நான் பல்வேறுவிதமான மதிப்பெண்களுடன் அன்றாடம் வகுப்பிற்கு வந்தால், இதோ தமது ரகசிய பாக்கெட்டு களில் மூழ்கியிருக்கும் இந்த ஆறு வயதுக் குழந்தைகளுக்கு வாழ்க்கை எப்படியிருந்திருக்குமென என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலவில்லை. ''சிக்கலான கணக்கைத் தரட்டுமா?'' என்று எப்படி நான் அவர்களிடம் கூற முடி யும்? நானே எப்படி ''பிழை செய்யத்'' துணிவது? பாடத்தில் வாழ்க்கைக் கோட்பாடும் காரிய ரீதியான உறவுகளின் கோட் பாடும் குழந்தைகளின் முன்னோக்கிய அறிதல் வளர்ச்சிக் கோட்பாடும் எங்கு போயிருக்கும்? கசப்பையும் ஏமாற்றத் தையும் ஏற்படுத்தும் விதைகளை விதைத்து எப்படி நான் ஒவ்வொரு சிறுவனுக்கும் மகிழ்ச்சியைத் தர முடியும்?

குழந்தைகளுக்கு மதிப்பெண்களே தேவையில்லை. ஏனெ னில் படிப்பு என்பதை புதியவற்றை அறியும் முயற்சிகளின் வளர்ச்சிப் போக்காக நாம் மாற்றினால், நமது நிர்ப்பந்த நடவடிக்கைகளை அவர்கள் உணராமலிருந்தால் அவர்கள் மதிப்பெண்கள் இல்லாமலேயே படிப்பார்கள். தாங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களை விட எவ்வளவு முன்னால் இருக்கிறோம் என்றோ அல்லது மற்றவர்களிடமிருந்து பின் தங்கியுள்ளோம் என்றோ அறிந்து கொள்வதும் மாணவர் கள் ''புத்திசாலிகள்'', ''மந்தமானவர்கள்'' ''நன்கு படிப்ப வர்கள்'', ''பின்தங்கியுள்ளவர்கள்'' என்றெல்லாம் பிரிக்கப் படுவதைத் தெரிந்து கொள்வதும் குழந்தைகளுக்கு அவ சியமே இல்லை.

ஒவ்வொரு குழந்தையின் மனநிலையையும், குறிப்பாக யாரையெல்லாம் வெறுமனே ''மந்தமானவர்கள்'', ''பின் தங்கியவர்கள்'' என்று கருதுகின்றோமோ அவர்களின் மன

நிலையை நம்மால் தெரிந்து கொள்ள முடியாததற்காக, இவர்களுக்கு (இப்போது விஞ்ஞானத்தில் கூறுகின்றார்களே அதே போல்) மிகவும் ஏற்புடைய தனிப்பட்ட முறையை ஏற்படுத்த முடியாமைக்காக மேற்கூறிய பிரிவு குழந்தைகள் முன் நம்மை வெட்கமடையச் செய்யவில்லையா? சுருட்டை முடியுடைய எனது வகுப்புச் சிறுவன் ஒருவன் முன், அவன் சோகமாகப் பார்க்கும் போது நான் வெட்கித் தலை குனி கிறேன். ''என்னால் தனியாக ஒன்றும் செய்ய முடியாது! நீதான் பெரியவன் ஆயிற்றே, புத்திசாலி ஆயிற்றே. என்னைத் தொல்லையில் விடாதே!'' என்று அக்கண்கள் என்னை நோக்கிக் கூறுவது போலிருக்கும்.

''அவன் மந்தமானவன், பின்தங்கியவன்'' என்று ஆசிரி யர் கூறுகிறார். ஆனால் இது நமது பலவீனத்தை நியாயப் படுத்துவதாகாதா? நாம் அவனை பலவீனமானவனாகக் கருதினால் நம்மை நாமே எப்படி மதிப்பிடுகிறோம்? நான் ஆசிரியர்கள் நடத்தும் பல பாடங்களைப் பார்த்திருக் கிறேன், அவர்களுக்கு நிச்சயமாக பெயில் மதிப்பெண் போட்டு அதை அவர்களின் உழைப்புப் பதிவேட்டில் எழு தலாம். இப்படிப்பட்ட ஆசிரியர்களால் ''ஊன்று கோல் களும்'', ''தடிகளும்'' இல்லாமல் வகுப்பறையில் நுழைய முடியாதுதான், இவர்களோ இம்மாதிரி பாடத்தை நடத்தி இப்பாடத்தில் தம் மாணவர்களுக்கு பெயில் மதிப்பெண்களை யும் நல்ல மதிப்பெண்களையும் போடுகின்றனர்! என்ன விந்தை!

நெடுங்காலத்திற்கு முன், கையில் கம்புடன் குழந்தையை பள்ளிக்கு கூட்டிச் சென்று திரும்ப அழைத்து வருபவரை ஆசிரியர் என்றனர். ஆனால் பின்னர் இச்சொல் முற்றிலும் வேறு உள்ளடக்கத்தைப் பெற்றது: ஆசிரியர் என்றால் குழந் தைக்குப் படிப்பு சொல்லித் தந்து வளர்ப்பவர் என்றா யிற்று. ஆசிரியராக, குழந்தையை வளர்ப்பவராக மாறிய தும் இவர் தன் கம்பை விட்டெறிந்தாரா? இல்லை! மத்திய கால ஓவியங்களிலும் படங்களிலும் ஆசிரியர் தன் வலது கையில் கம்பு அல்லது பிரம்புக் கட்டையும் இடது கையில் திறந்த புத்தகத்தையும் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதைக் காணலாம். ஒருவேளை நமது மதிப்பெண்கள் உரு மாறிய கம்பு அல்லது பிரம்புக் கட் டோ? ஆரம்ப வகுப்பில் யாருக்கு மதிப்பெண்கள் வேண்டும்?

ஆறு வயதுக் குழந்தைகளுக்கா? அவர்களுக்கு இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூட விருப்பமில்லை. ஆனால் எல்லா இடங்களிலும்—பள்ளியிலும் வீட்டிலும் வெளியிலும் —அவர்கள் வாங்கிய மதிப்பெண்களைப் பொறுத்துதான் நாம் அவர்களை எடை போடுகிறோம், மதிப்பிடுகிறோம் என்று காட்டும் போது, குழந்தைகள் என்னதான் செய்வார் கள்? அவர்கள் நம்மை முழுமையாகச் சார்ந்திருப்பதைப் புரிந்து கொள்கின்றனர், நாம் இல்லாமல் வாழ அவர்கள் விரும்பவில்லை, அவர்கள் நம்மை நேசிக்கின்றனர், எனவே நம்மை திருப்திப்படுத்த, சந்தோஷப்படுத்த மதிப்பெண் களை நாடுவதைத் தவிர வேறு வழி அவர்களிடம் இல்லை.

இவ்வாறாக பிரச்சினை, குழந்தைகளுக்கு மதிப்பெண் கள் தேவை என்பதில் இல்லை; மதிப்பெண்கள் இருப்பதை ஆரம்ப வகுப்பு ஆசிரியர் மறந்து விட்டு, தன் அதிகாரத்தைக் குறிக்கும் தடியை வீசியெறிந்து விட்டு வெறுமனே வந்து குழந்தைகளுக்குக் கல்வி போதித்து வளர்க்க முடியுமா என் பதில்தான் பிரச்சினை அடங்கியுள்ளது. இதைச் செய்வது எளிதா?

இல்லை, தன் தடியையும் மதிப்பெண்களையும் விட்டுப் பிரிவது ஆசிரியருக்கு எளிதல்ல. ஏனெனில் எந்த கல்வி போதனை, குழந்தை வளர்ப்பு முறைக்கு ஆசிரியர் மிகவும் பழக்கப்பட்டு விட்டாரோ அந்த முறை இவற்றுடன் தொடர் புடையது. கல்வி முறையியலை மாற்றியமைப்பது என்றால் முறைகள், வழிகள், படிப்பு சொல்லித் தரும் வகைகளை மாற்றி யமைப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளின் தொகுப்பு என்று பொருளாகாது; ஆசிரியர் தன்னையே, தன் கண்ணோட்டங்களை, கருத்துக்களை, தன் அனுபவத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

இப்படி முறையியலையும் இதன் மூலம் தன்னைத் தானே யும் மாற்றியமைப்பது யாருக்குப் பிடிக்காது தெரியுமா? யார் ஒரே மாதிரியாக, இயந்திரகதியில் வேலை செய்கின்றார் களோ, யாருக்கு முதல் வரிசையிலும் மூன்றாவது வரிசை யிலும் உட்கார்ந்துள்ள குழந்தைகள் ஒரே மாதிரியான வர்களாகப் படுகின்றனரோ (இது எல்லோரையும் ஒரே மாதிரியாக அணுகும் ஆசிரியரின் வாழ்க்கையை எளிதாக்கு கிறது) அந்த ஆசிரியருக்குப் பிடிக்காது.

மாபெரும் ருஷ்ய எழுத்தாளா லேவ் டால்ஸ்டாய் கண்டு

பிடித்த மூன்று விதிகள் இப்படிப்பட்ட நிலையின் சாரத்தை விளக்குகின்றன. முதல் விதி:''ஆசிரியர் எப்போதுமே தன்னையறியாமல் தனக்கு மிகவும் வசதியாக பாடம் சொல்லித் தரும் முறையைத் தேர்ந்தெடுக்க விரும்புவார்''. தன்னையறியாமலேயே இதைச் செய்வது பரவாயில்லை, இதை மன்னித்து விடலாம். ஆனால் அவர் வேண்டுமென்றே, பகுத்தறிவுடன் இதைச் செய்ய முற்பட்டால் இதை அவருடைய தொழில் துரோகம் என்று கூறலாம். இரண்டாவது விதி: ''பாடம் சொல்லித் தரும் முறை ஆசிரியருக்கு எவ்வளவுக்கெவ்வளவு வசதியானதோ அவ்வளவுக்கவ்வளவு அது மாணவர்களுக்கு வசதிக் குறைவானது''. எந்த முறைகளில் ஆசிரியரின் உழைப்பு எளிதாக்கப்படுவதால் குழந்தைகள் ''இம்சிக்கப்படுவார்களோ'' அவற்றை சகல விதங்களிலும் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவு. எனவே, இதிலிருந்து மீளும் வழியைத் தேட வேண்டும். லேவ் டால்ஸ்டாயின் மூன்றாவது விதி இதைப் பற்றிக் கூறுகிறது. இதை நான் ''முதுமொழியாக'' ஏற்கிறேன்:

''எந்தப் பாட முறையில் மாணவர்களுக்குத்
திருப்தியோ அந்தப் பாட முறைதான் சரியானது.''

தன் ஆறு வயதுக் குழந்தைகளுக்கு மதிப்பெண்கள் இல்லாமல் பாடம் சொல்லித் தருவதென ஆசிரியர் முடிவு செய்யும் போது அவர் இரண்டில் ஒன்றை முடிவு செய்ய வேண்டும்: ஒன்று, குழந்தைகள் முன் உள்ள தனது புனிதமான கடமைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும், அல்லது ஆசிரியர் வேலைக்காலம் என்றழைக்கப்படும் பல ஆண்டுகளை அமைதியாக வேலை செய்து கழிக்க வேண்டும். புதிய, ஆக்கபூர்வமான பாதையைத் தேர்ந்தெடுத்த, ஒவ்வொரு குழந்தையின் மனதையும் தொடும் வழியைத் தேடும் ஆசிரியர் புத்திசாலியான, அறிவுத் தாகமுள்ள குழந்தைகளின் புதிய தலைமுறையைக் கண்டு உற்சாகமடைவார்; தன் கைகளில் தடியேந்திய ஆசிரியரோ ஒவ்வொரு ஆசிரியர் கூட்டத்திலும், ''என்ன குழந்தைகள், ஒன்றும் செய்ய விரும்புவதில்லை, படிக்க ஆசைப்படுவதில்லை! ஆறு வயதுக் குழந்தைகள் கூட, அவர்களைப் பார்த்துக் கத்தாவிடில், அச்சுறுத்தாவிடில் பாடங்களில் அமைதியாக உட்காருவதில்லை'' என்று சலித்துக் கொள்வார்.

இந்த இரண்டாவது ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்ததும் தன் ஆறு வயதுக் குழந்தைகளைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லுவார்: ''எனக்கு விளையாட்டுத்தனம் பிடிக்காது! யார் நன்றாகப் படிக்கவில்லையோ, யார் சரியாக கவனிக்கவில்லையோ அவர்களுக்கு பெயில் மதிப்பெண் போடுவேன். பெயில் மதிப்பெண் என்றால் என்ன தெரியுமா? தெரிந்து கொள்வீர்கள்! எங்கே, இப்போது கைகளைக் கட்டிக் கொண்டு கேளுங்கள்!''

முதல் ஆசிரியரோ நிச்சயமாக இப்படியெல்லாம் ஒரு போதும் சொல்ல மாட்டார். ''குழந்தைகளே, எங்கே எனக்கு சிரித்துக் காட்டுங்கள் பார்க்கலாம்! எனக்கு உங்கள் சிரிப்பு பிடிக்கும். தயவு செய்து சிரியுங்கள்! சரி, இப்போது சொல்லுங்கள், எது உங்களுக்குப் பிடிக்கும்—கதையா, கவிதையா? சரி, கதை சொல்வேன். வசதியாக உட்காருங்கள்! ஒரு ஊரில்...'' என்று இவர் கூறுவார். இந்த ஆசிரியர் குழந்தைகளின் மனதைத் தொட மிகக் கடினமான பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்: இங்கே தன் கல்வி போதனைமுறையியலையும் குழந்தை வளர்ப்பு முறையையும் தன்னைத் தானேயும் அன்றாடம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும், குழந்தைகளுடன் கலந்து பழகி மகிழ்ச்சியைத் தருவதற்காக இதைச் செய்ய வேண்டும்.

இப்படிச் செய்யும் போது, வகுப்பறையில் எப்படி ஒழுங்கைப் பேணிக்காப்பது, ''தடியின்றி'', மதிப்பெண்கள் இன்றி குழந்தைகளை எப்படி சாந்தப்படுத்துவது எனும் கேள்வி எழுகிறதா? குழந்தைகளுக்கு ஏதோ நல்லதைக் கூற விரும்புகிறோம், எதையாவது சொல்லித் தர வருகிறோம், அவர்களோ சத்தம் போடுகின்றனர்... ''அமைதியாக இருங்கள்!'' என்று கூறுகிறோம், அவர்கள் கேட்கவில்லை. என்ன செய்வது? நன்கு சத்தமாகக் கத்துவதா, விரலை ஆட்டி பயமுறுத்துவதா, நடத்தை மோசம் என்று எழுதப் போவதாகக் கூறுவதா? அப்போது எல்லாம் அடங்கி, அமைதி நிலவுமா? இங்கே உறுதியான பதிலைத் தருவதோ நேரடியான சிபாரிசுகளைக் கூறுவதோ எவ்வளவு கடினம் தெரியுமா! ஏனெனில் கட்டுப்பாட்டைப் பற்றிய பிரச்சினையே அதிகாரத் தொனியிலான கல்வி முறையில்தான் வருகிறது. அதிகாரத் தொனியில் குழந்தைகளை வளர்த்து, படிப்பு சொல்லித் தரும் போது அடிக்கடி குரலை உயர்த்த நேரிடுகிறது: ''ஏ! உன்

னால் வாயை மூட முடியுமா முடியாதா?'' ஆனால் குழந்தைகள் நடந்தவற்றை ஒரே நிமிடத்தில் மறந்து விட்டு, அதிக சுவாரசியமான காரியத்தில் ஈடுபடுவதற்காக இந்த அதிகார வலையிலிருந்து மீண்டும் விடுபட முயன்றால், வகுப்பில் ஆசிரியர் எவ்வளவு தடவைதான் மிரட்ட முடியும், திட்ட முடியும்? எனவே, இப்படி ஒழுங்கை நிலை நாட்டும் முறைகளை விட்டு விட்டுக் குழந்தைகளின் பாலான உறவு முறைகளை மாற்றலாம்; கல்வி போதித்தல், குழந்தை வளர்ப்பு முறைகளை மாற்றலாம், வகுப்பில் பொதுவில் நல்ல சூழ் நிலையை ஏற்படுத்த முயலலாம்.

இவை எல்லாவற்றையும்தான் லேவ் டால்ஸ்டாய் ''பள்ளியின் ஆன்மா'' என்றார், இவருடைய கருத்துப்படி இது தான் ''கல்வியின் சாரம், வெற்றி''. ''இந்த ஆன்மா ஒரு சில விதிகளுக்கும் ஆசிரியரின் தீய செல்வாக்கிற்கும் உட்பட்டது, அதாவது இந்த ஆன்மாவை அழிக்காமலிருக்க ஆசிரியர் ஒரு சில விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக, பள்ளியின் ஆன்மா எப்போதும் மாணவர்களின் சிந்தனையில் ஆசிரியரின் தலையீட்டிற்கு தலை கீழ் விகிதத்திலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு நேர் விகிதத்திலும், பாட நேரத்திற்கு தலை கீழ் விகிதத்திலும் இருக்கும், இத்தியாதி. இந்த பள்ளியின் ஆன்மா என்பது ஒரு மாணவனிடமிருந்து இன்னொரு மாணவனுக்கு விரைவில் செல்வது, ஆசிரியருக்கும் கூடச் செல்வது, அனேகமாகக் குரலொலிகளிலும் கண்களிலும் இயக்கங்களிலும் போட்டியின் உக்கிரத்திலும் வெளிப்படுவது; இது ஏதோ ஒரு பெரும் உணர்வு, அவசியம், விலை மதிப்பற்ற ஒரு விஷயம், எனவே, ஒவ்வொரு ஆசிரியரின் லட்சியமாக இருக்க வேண்டியது. உமிழ் நீர் உணவு செரிக்க அவசியம், ஆனால் உணவு இல்லாத போது இது தேவையற்றதாய், அசிங்கமானதாய் இருக்கும். அதே போல் உணர்ச்சிகரமான புதிய ஆன்மா வகுப்பிற்கு வெளியே சலிப்பானது, விரும்பத் தகாதது, ஆனால் மூளைக்கான உணவை கிரகிக்க அவசியமானது'' என்று டால்ஸ்டாய் எழுதினார்.

குழந்தைகளுடனான உறவில் இந்த மனநிலையை நிலை நாட்டினால் வகுப்பில் ஒழுங்குமுறை பற்றிய பிரச்சினை முற்றிலும் வேறு விதமாக நிற்கும்: ''இந்தப் புத்தூக்கம் பாடமாக இருந்தால் இதை விட சிறந்தது வேறெதுவும் வேண்டாம். இந்தப் புத்தூக்கம் வேறு ஒரு விஷயமாக மாறி

னால், இதை சரிவர வழிநடத்தாத ஆசிரியர்தான் குற்ற வாளி. இந்தப் புத்தூக்கத்திற்குத் தொடர்ந்து உணவளித்து, படிப்படியாக ஊக்குவிப்பதுதான் ஆசிரியரின் கடமை...''.

சரி, ஆறு வயதுக் குழந்தைகளுக்கு மதிப்பெண்கள் வேண்டுமா இல்லையா?

இல்லை, குழந்தைகளுக்கு இவை தேவையில்லை. ஏனெனில் இவை இவர்களின் அறிவுத் தாகத்திற்கு இடையூறாக உள்ளது, பள்ளியில் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வாழத் தொந்தரவாக உள்ளது.

ஆசிரியர்களுக்கு மதிப்பெண்கள் வேண்டுமா?

தமக்குத் தேவையா இல்லையா என்று என் சக ஆசிரியர்களே தீர்மானிக்கட்டும். என்னைப் பொறுத்த மட்டில், குழந்தைகளுடன் நான் ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும் மகிழ்ச்சியடைய இவை இடையூறாக இருக்கும்.

இப்படியெனில், தம் குழந்தைகள் எப்படிப் படிக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகப் பெற்றோர்களுக்கு மதிப்பெண்கள் தேவையோ?

ஒளிவு மறைவின்றிச் சொல்வேன்: தம் குழந்தைகள் எப்படிப் படிக்கின்றனர் என்பது பற்றிய மதிப்பெண்களைப் பெற்றோர்களுக்குத் தருவது நல்லதல்ல. இந்த மதிப்பெண்களை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள்? வெறும் மதிப்பெண்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்கின்றனரா, படிக்கவில்லையா என்பது குறித்து திட்டவட்டமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. உதாரணமாக, கணிதப் பாடத்தில் ''பெயில்'' என்றால் இவர்கள் என்ன புரிந்து கொள்வார்கள்? பத்துக்குள் கூட்ட குழந்தைக்குத் தெரியாது, ''கடைக்கு எட்டு கூடை ஆப்பிள்கள் வந்தன, சில கூடைகள் விற்றுப் போயின, மூன்று கூடைகள் எஞ்சியுள்ளன. எவ்வளவு கூடைகள் விற்றுப் போயின?'' என்பது போன்ற கணக்குகளைப் போடும் போது பிழை செய்கிறான் என்றெல்லாம் இந்த மதிப்பெண் பெற்றோர்களுக்கு விளக்குமா என்ன? ''கணக்கில் முதல் கூட்டும் எண் எங்கே, இரண்டாவது கூட்டும் எண் எங்கே, மொத்தம் எவ்வளவு?'' என்ற ஆசிரியரின் கேள்விகளுக்கு ஏன் இன்று குழந்தை பதில் சொல்லவில்லை என்பதை இந்த மதிப்பெண் விளக்குமா? குழந்தைக்கு எப்படி உதவுவது என்று இந்த மதிப்பெண் பெற்

றோர்களுக்கு ஆலோசனை கூறுமா? மதிப்பெண்களால் இப்படிப் பேச முடியாது. ஆனால் இவை உள்ளவற்றை மிகைப் படுத்திச் சொல்ல வல்லவை: ‘‘குழந்தையை கவனி! அவன் ஒன்றையும் சொல்ல விரும்பவில்லை!’’ நல்ல, உயர்ந்த மதிப்பெண்கள் பெரும் மகிழ்ச்சியைத் தருமென்று நினைக்கின்றீர்களா? பல சமயங்களில் இவை பெற்றோர்களை சாந்தப்படுத்தி குழந்தை வளர்ப்பு விஷயத்தில் பெரும் சுய திருப்தியை ஏற்படுத்தும்: ‘‘இவன் எவ்வளவு புத்திசாலி! நன்றாகப் படிக்கிறான், எனவே நமது உதவி இவனுக்குத் தேவையே இல்லை!’’

இப்போது ஒரு வருத்தம் தரத்தக்க சந்தர்ப்பத்தை நினைத்துப் பார்ப்போம். குழந்தைக்கு உடல் நலமில்லை. அப்போது ஆசிரியரைக் கூப்பிட மாட்டோம், மாறாக மருத்துவரை அழைத்து குழந்தையின் உடல் நலத்தைப் பரிசீலிக்கச் சொல்வோம். மருத்துவர் தொண்டையைப் பார்த்து விட்டு, நாக்கைப் பரிசோதித்து விட்டு, நுரையீரலை காதுக் குழாய் மூலம் கேட்டு விட்டு, ஜுரத்தை அளந்து விட்டு, பின் குழந்தையின் உடல்நிலைக்கு ‘‘பெயில் மதிப்பெண்’’ போட்டு விட்டுப் போகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அம்மா இந்த மதிப்பெண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வாள்? இதை மாத்திரையாக உள்ளுக்குள் விழுங்க முடியாது, தைலமாக உடலின் மீது பூச முடியாது. ‘‘குழந்தைக்கு உடல்நிலை மோசம்! அவனுக்கு உதவ வேண்டும்!’’ என்று மட்டுமே இந்த பெயில் மதிப்பெண் கத்துகிறது. குழந்தையின் மோசமான உடல்நிலை பற்றிய இந்த மதிப்பீடு பெற்றோர்களை சரியான சிகிச்சைப் பாதைக்கு அழைத்துச் செல்லுமா? நிச்சயமாக இப்படிப்பட்ட உத்தரவாதம் கிடையாது, எனவே உடல் நலம் சரியில்லாத குழந்தையின் பெற்றோர்களுக்கு பெயில் மதிப்பெண் தருவது பெரிதும் ஆபத்தானது. இது எல்லோருக்கும் புரியக் கூடியது, எனவே உடல் நலத்தைப் பற்றி மதிப்பெண்களின் மூலம் அறிய யாரும் நினைக்கக் கூட மாட்டார்கள். நோய்வாய்ப்பட்ட குழந்தையை பரிசீலித்த பின் நல்ல, அன்பான டாக்டர் குழந்தைக்கு என்ன நோய், இதற்கான காரணங்கள் என்ன, சிக்கலின்றி விரைவில் குணமடைய என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் பெற்றோர்களுக்கு விளக்குவார். இந்த டாக்டர் தன் பையிலிருந்து சீட்டை எடுத்து மருந்து எழுதுவார்,

இதை எப்படி, எவ்வளவு முறை சாப்பிடவேண்டும் என்று விளக்கிச் சொல்லுவார்.

கணிதப் பாடத்தில் பெயில் மதிப்பெண்பெற்ற குழந்தையின் பெற்றோர்களிடம் யார் வந்து, வீட்டில் என்ன, எப்படி சொல்லித் தர வேண்டும் என்று விளக்குவார்? பெற்றோர்கள் மந்திரவாதி-ஆசிரியர்களாக மாற வேண்டும்; இவர்களின் ஒரே வழி எப்போதும் போல் பொழுதுபோக்கு இன்பங்களைத் தடை செய்வதாகும். மந்திரவாதி-மருத்துவரின் மருந்துகள் மனிதனின் உடல் நலத்திற்கு எப்படி ஆபத்தானவையோ அதே போல் மந்திரவாதி-ஆசிரியரின் வழிகளும் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவையாகும். சில சமயங்களில் இந்த இரண்டு துறைகளிலுமே எல்லாம் நன்றாக முடியும்— குழந்தை வளர்ப்பு முறை சரியானதாகப்படும், மருந்தும் நோயைக் குணப்படுத்தக் கூடும். ஆனால் இது தற்செயலானது, ஒரு நியதியல்ல.

எனவே, பள்ளியின் ஆன்மாவைக் குலைக்காமல் இருக்க குழந்தைகளின் படிப்பைப் பற்றிய எவ்வித மதிப்பெண்களையும் பெற்றோர்களுக்குத் தராமலிருப்பதே நல்லது.

### பெற்றோர்களுக்கு பாக்கெட்டுகள்

ஆனால் தம் குழந்தைகள் பள்ளியில் எப்படிப் படிக்கின்றனர் என்று தெரிந்து கொள்ளப் பெற்றோர்களுக்கு உரிமையுண்டு. குடும்பத்தில் குழந்தை வளர்ப்பு, குழந்தைக்கு உதவி புரிவது பற்றி நாம் அவர்களுக்கு உபயோககரமான ஆலோசனைகளைத் தர வேண்டும். எங்களுடைய பாக்கெட்டுகளின் நோக்கம் இதுதான், இவற்றை ஒட்டுவதில்தான் குழந்தைகள் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

''லாலி, உனது பாக்கெட்டைக் கொண்டு வா!''

லாலி என்னருகே வந்து பாக்கெட்டின் உள்ளே இருப்பதை எடுக்கிறாள் (மொத்தம் 23 தாள்கள்): இரண்டு கையெழுத்து மாதிரிகள், அவளே உருவாக்கிய இரண்டு கதைகள், வாசகத்தில் சேர்ப்பதற்காகத் தேர்ந்தெடுத்த வார்த்தைகள் அடங்கிய மூன்று பயிற்சிகள், அவளே உருவாக்கிய கணக்குகள், வரைகணிதப் படங்கள், ஐந்து ஓவியங்கள், இரண்டு ஒட்டுப் படங்கள், ''தாய் மொழிப் பாடங்களில்

நான் என்ன கற்றுக் கொண்டேன்'', ''எனக்குக் கணிதத்தில் என்ன தெரியும்'' என்ற தலைப்புகளில் நான்கு பக்கங்களில் குறிப்புகள்.

பார்த்து விட்டு ஆமோதிக்கிறேன்.

''இதோ உன் சான்றிதழ்!'' என்று டைப் செய்யப்பட்டு நானும், பாடப்பிரிவுத் தலைமையாளரும் கையொப்பமிட்ட தாளைத் தருகிறேன். அதில் பின்வருமாறு எழுதப் பட்டுள்ளது:

''லாலி அன்பான, உழைப்பார்வமுள்ள சிறுமி. நண்பர்கள் இவளை விரும்புகின்றனர்.

இவள்தான் வகுப்பில் மருத்துவத் தாதி. நீக்கா விரலை அறுத்துக் கொண்ட போது லாலிதான் அயோடின் தடவிக் கட்டுப் போட்டாள்.

லாலி சுவாரசியமாகப் பேசுவாள். இவளால் கோர்வையாகப் பேச முடியும் என்றாலும் வார்த்தைகள், வாக்கியங்களுக்கு இடையில் ''ஆஆஆ'' என்று கூறுவதைத் தவிர்த்தால் நன்றாயிருக்கும்.

பல கவிதைகள் இவளுக்குத் தெரியும். பாவனை நயத்தோடு இவள் கவிதை வாசிப்பது நண்பர்களுக்குப் பிடிக்கும்.

முழு வார்த்தைகளாகப் படிக்கிறாள், படிப்பதைப் புரிந்து கொள்கிறாள். இவள் ஏற்கெனவே நான்கு புத்தகங்களைப் படித்து முடித்துள்ளது குறித்து எங்களுக்கு மகிழ்ச்சி.

அழகாக எழுதுகிறாள், எழுத்துகளுக்கு இடையில் சீரான இடைவெளி விட்டால் இன்னமும் சிறப்பாயிருக்கும்.

எழுத்து மூலம் தன் எண்ணங்களை வெளியிட இவளுக்குத் தெரியும். ''வசந்தம் அழைக்கிறது'' எனும் இவளுடைய கதையை வகுப்பில் வாசித்தோம். நண்பர்கள் கூறிய ஆலோசனைகள் லாலிக்கு நினைவில் இருக்கின்றன.

கணக்குகளைப் போடக் கற்றுக் கொண்டிருக்கிறாள். வரை கணித வடிவங்களை நன்கு வரைகிறாள்.

ருஷ்ய மொழி இவளுக்குப் பிடித்துள்ளது. வாக்கியங்களை அமைக்க இவளால் முடியும், கவிதைகள், பழமொழிகள், விடுகதைகள் மீது விருப்பம் உண்டு. ருஷ்ய மொழி உச்சரிப்பின் மீது கவனம் செலுத்தினால் நல்லது.

இவள் வரைந்த ஓவியங்களும் உழைப்புப் பாடத்தில் செய்த பொருட்களும் வகுப்புக் கண்காட்சியில் வைக்கப்

பட்டுள்ளன; இவை அனைவருக்கும் பிடிக்கும்.

லாலி இசை நாடகத்தில் பங்கேற்பவள்.

அவள் விரைவாகப் படிக்க கற்றுக் கொண்டால் நன்றாயிருக்கும். கோடை விடுமுறையில் 6—7 குழந்தை நூல்களைப் படிக்க வேண்டும். எழுதிப் பழகினால் நேர்த்தியாக எழுத வரும்.

லாலி! நீ முதல் வகுப்பிற்கு மாறிச் செல்வது குறித்து பாராட்டுதல்கள்! முக்கிய விஷயங்கள் உன்னை எதிர் நோக்கியுள்ளன!''

இந்த விவரங்களடங்கிய தாளை பாக்கெட்டில் போடுகிறேன். இது அழகாகக் காட்சி தருகிறது: மேலே மலர்களும், சிரிக்கும் சூரியனும் வரையப்பட்டுள்ளன, ''அன்புப் பெற்றோர்களுக்கு—லாலியிடமிருந்து'' என்று வண்ணப் பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது.

''பாக்கெட்டை ஒட்டலாம்... வாஹ்தாங், உனது பாக்கெட்டைக் கொண்டு வா!''

வாஹ்தாங்கின் பாக்கெட்டில் 19 தாள்கள் உள்ளன. உள்ளேயுள்ள எல்லாவற்றையும் பார்க்கிறேன்.

''நான் உன்னிடத்தில் இருந்தால் இந்த எழுத்துகளை மாற்றி எழுதுவேன். உன்னால் அழகாக எழுத முடியுமே.''

அவனைப் பற்றிய விவரங்களடங்கிய தாளைத் தருகிறேன். இதில் ஆலோசனைகள் உள்ளன: முழு வார்த்தைகளாகப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், எழுதும் போது கவனமாக இருக்க வேண்டும், எழுத்துகளை விட்டு விடக் கூடாது, நண்பர்களுடன் வாய்ச் சண்டை போடக் கூடாது.

''தாம்ரோ, உனது பாக்கெட்டைக் கொண்டு வா!''

அவளுடைய பாக்கெட்டில் 26 தாள்கள் உள்ளன.

நர்சரிப் பள்ளியிலுள்ள குழந்தைகளின் பால் இவள் எவ்வளவு அக்கறை காட்டினாள் என்று நன்னடத்தைச் சான்றிதழில் எழுதப்பட்டுள்ளது.

''பாக்கெட்டின் மீது எழுதப்பட்டுள்ளதில் பிழையைப் பார்க்கிறேன். இதைக் கண்டுபிடித்து, திருத்து!''

இவ்வாறாக ஒவ்வொருவரும் தம் பாக்கெட்டுடன் என்னிடம் வருகின்றனர்.

''உங்களது பாக்கெட்டுகளை டெஸ்குகளின் மீது வைத்துச் செல்லுங்கள். உங்கள் பெற்றோர்களை உங்கள்

இடங்களில் உட்கார வைப்பீர்கள். நீங்கள் தயாரித்துள்ள அதிசயங்களை அவர்களே பார்ப்பார்கள்.''

இந்தப் பாக்கெட்டுகளை குழந்தைகள் கடந்த இரண்டு வாரங்களாகத் தயாரித்தனர். ஒவ்வொரு நாளும் ஒரு தனிப் பாடவேளையின் போது இவர்கள் விசேஷமாக இதற்கென எழுதினார்கள், உருவாக்கினார்கள், படைத்தார்கள், வரைந்தார்கள், ஒட்டினார்கள், தேர்ந்தெடுத்தார்கள், இவற்றைத் தத்தம் பாக்கெட்டுகளில் போட்டார்கள். பல குழந்தைகள் இடைவேளையின் போது வெளியே கூடப் போகாமல் டெஸ்கிலிருந்து பாக்கெட்டை எடுத்து அதில் மூழ்கிப் போனதைப் பார்த்தேன். இதை அவர்கள் அக்கறையோடும் உற்சாகத்தோடும் செய்தார்கள். இது தம் பெற்றோர்களுக்கான பரிசு ஆயிற்றே: ''எனக்கு என்னவெல்லாம் தெரியும் பார்த்தீர்களா! நான் எப்படிப்பட்டவன், பார்த்தீர்களா!''

பாக்கெட்டுகள் ஏன் ரகசியமானவை தெரியுமா? ஏனெனில் பெற்றோர்களுக்கு திடீர் மகிழ்ச்சியைத் தர குழந்தைகளுக்குப் பிடிக்கும். எனவேதான் இவை ரகசியமானவை என்று வகுப்பில் கூறுகிறோம், ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளில் தலை சிறந்தவற்றையும் ஆசிரியர் தரும் சான்றிதழையும் இப்பாக்கெட்டுகளில் போட்டு ஒட்டுகின்றனர்.

பெற்றோர்கள் இந்தப் பாக்கெட்டுகளை வைத்துக் கொண்டு என்ன செய்வார்கள்?

இதைத் திறப்பார்கள். எனது ஆலோசனையை ஏற்றுக் கொண்டால் பின்வருமாறு செய்ய வேண்டும்: குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி குழந்தை தயாரித்துள்ள ஒவ்வொன்றையும் கவனமாகப் பார்க்க வேண்டும், சான்றிதழை யாராவது ஒருவர் எல்லோருக்கும் கேட்கும்படி படிக்க வேண்டும். பழைய பாக்கெட்டை பத்திரமாக வைத்து இரண்டையும், இரண்டின் உள்ளடக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாயிருக்கும். பின் குழந்தை அவர்களுக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தந்துள்ளான், எப்படி எழுதுகிறான், எந்த மாதிரியான கணக்குகளைப் போடுகிறான், எந்தக் கவிதைகள் தெரியும், எப்படி வரைகிறான், பொதுவில் எப்படி வளர்ந்து வருகிறான் என்பதைப் பற்றியெல்லாம் பேச வேண்டும். அவன் இன்னமும் அதிகம் தெரிந்து கொள்ள, விரைவாக முன்னேறி, சிறப்பானவனாக

இருக்க, உற்சாகமானவனாக, அன்பானவனாக, உழைப் பார்வம் உள்ளவனாக வளர அவனுக்கு எப்படி உதவுவது என்று பேச வேண்டும். குழந்தை ஏதாவது தப்பு செய் திருந்தால் இந்தக் குடும்ப ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு போதும் குழந்தையைத் திட்டக் கூடாது. இவையெல்லா வற்றையும் குழந்தை பெரும் அன்புடனும் பொறுப்புணர்வுட னும் தயாரித்திருக்கிறான், தற்போது தன்னால் என்னவெல் லாம் செய்ய முடியும் என்று இவற்றின் மூலம் வெளிப்படுத்து கிறான் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண் டும். மறு நாள் தந்தை இந்த பாக்கெட்டை தன் வேலை யிடத்திற்கு எடுத்துச் சென்று, ''எனது மகன் எப்படிப்பட்ட வன், பாருங்கள்'' என்று தன் நண்பர்களிடம் கூற விரும்ப லாம். தாயும் இதே மாதிரி ஆசைப்படலாம். வீட்டிற்கு யாராவது வரும் போதும், அண்டை அயலாருக்கும் பாக் கெட்டைக் காட்டி ''எங்கள் பள்ளிச் சிறுவன் எங்களை எப் படி சந்தோஷப்படுத்தியுள்ளான் பாருங்கள்'' என்று பெற் றோர்கள் கூறலாம். பின்னர் முதல் பாக்கெட்டைப் போன்றே இதையும் ஒரு பத்திரமான இடத்தில் வைத்து பேணிக் காப்பார்கள். இவற்றோடு குழந்தையின் எதிர்காலப் பரிசு களும் சேரும்.

பெற்றோர்களுக்கான வெளிப்படையான வகுப்புகள் பலவற்றை நான் நடத்தியிருக்கிறேன், குழந்தைகள் எப்படி, என்ன பயிலுகின்றனர் என்று இவர்கள் வந்து பார்த்துள்ள னர், தம் குழந்தையைப் பார்த்திருக்கின்றனர். குழந்தை வளர்ப்பில் முக்கிய பிரச்சினைகள் குறித்து நாங்கள் அடிக்கடி கூட்டாகக் கலந்தாலோசித்திருக்கிறோம், படிப்பு சொல்லித் தருவதிலும் குழந்தை வளர்ப்பிலும் கூட்டு முயற்சிகளைப் பற்றிப் பேசியிருக்கின்றோம். பெற்றோர்களுக்கான விரி வுரைகளில் குடும்பத்தில் குழந்தை வளர்ப்பைப் பற்றிய சிபாரிசுகளை வழங்கியிருக்கிறேன், குழந்தைகளுடன் கலந்து பழகுவதன் சிறப்பியல்புகளைப் பற்றிக் கூறியிருக்கிறேன்.

இன்று பெற்றோர்களுக்கு வழங்கப்படும் தடிமனான பாக்கெட்டுகளும் சான்றிதழ்களும், நாங்கள் பள்ளியில் எப்படி வாழ்ந்தோம், குழந்தைகள் எப்படி வளர்ந்தனர், என்ன கற்றுக் கொண்டுள்ளனர், எதில் முன்னேறியுள்ளனர், எப்படிப்பட்ட விருப்பங்கள் தோன்றுகின்றன என்பதையெல் லாம் பற்றிய எங்களது அறிக்கையாகும்.

இன்று பெற்றோர்கள் கூட்டத்தில் ''அன்புள்ள பெற்றோர்களே! ஒருவேளை இந்த பாக்கெட்டுகளைத் திறக்க வேண்டாமோ? மதிப்பெண் அட்டவணைகள் பெற விரும்புகின்றீர்களா? நான் இவற்றைத் தயார் செய்யட்டுமா?'' என்று நான் கூறினால் அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா?

இதற்கு என்ன பதில் சொல்வார்கள் என்று எனக்கு என் அனுபவத்திலிருந்து தெரியும்.

## எங்களுடைய கண்காட்சி

தாழ்வாரத்தில் நான்கு மேசைகளைக் கொண்டு வந்து போடுகிறோம். தயாரான பொருட்களைக் குழந்தைகள் வகுப்பறையிலிருந்து வெளியே கொண்டு வந்து மேசைகளில் வைக்கின்றனர். எப்படி வைத்தால் பார்க்க வசதியாயிருக்கும், அழகாயிருக்கும் என்று விவாதிக்கின்றனர்.

முதல் மேசையில் நான்கு அழகிய தொகுப்பேடுகள்: ''அறிவின் மூல ஊற்று'' (முதல் பிரிவும் இரண்டாவது பிரிவும்); ''மக்கள் கவிதை'' (முதல் பிரிவும் இரண்டாவது பிரிவும்).

வகுப்பிலும் தாழ்வாரத்திலும் உள்ள கரும்பலகைகளில் நான் குழந்தைகளுக்கு அடிக்கடி பழமொழிகளையும் முதுமொழிகளையும் எழுதியிருக்கிறேன். குழந்தைகள் இவற்றை இடைவேளைகளின் போது படிப்பார்கள், பலர் மனப்பாடம் கூடச் செய்து விட்டனர். ஒரு நாள் நான் அவர்களிடம் ''வாருங்கள், பழமொழிகளையும் முதுமொழிகளையும் தேடுவோம்! இவற்றில் மக்களின் பகுத்தறிவு உள்ளது'' என்று முன்மொழிந்தேன். வீட்டில் பெரியவர்களிடம் கேட்டு தெரிந்த பழமொழிகள், முதுமொழிகளைச் சேகரிக்குமாறு கூறினேன். குழந்தைகள் தாள்களில் எழுதப்பட்டிருந்த பழமொழிகளையும் முதுமொழிகளையும் வகுப்பிற்குக் கொண்டு வரத் தொடங்கினர். சிலர் வாசகத்தின் அருகே மலர்களையும் வேறு பல வடிவங்களையும் வரைந்தனர். ஒரு விசேஷ காலைப் பாடம் நடத்தி அதில் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த பழமொழிகளைப் படிக்கலாம் என்று முன்மொழிந்தேன். இதில் நான் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினேன்:

''வாருங்கள், இப்படிச் செய்யலாம்: நீங்கள் பழமொழிகள், முதுமொழிகளை எழுதியுள்ள தாள்களை எல்லாம் சேர்த்துத் தைப்போம். விக்டர் இவற்றை நாடாவால் கட்டுவான், பழமொழிகள், முதுமொழிகளின் அழகிய தொகுப்பு நூல் கிடைக்கும். இதற்கு என்ன பெயர் வைப்பது?''

''அறிவின் மூல ஊற்று'' என்ற பெயரை வைப்பது என்று முடிவு செய்தோம். உடனடியாக அட்டைக்கு ஏற்பாடு செய்யுமாறு நீயாவிடமும் மாக்தாவிடமும் கூறினோம். இவ்வாறாக பழமொழிகள், முதுமொழிகளடங்கிய இரண்டு தொகுப்பு நூல்கள் கிடைத்தன. ஒவ்வொரு தொகுதியிலும் தலா 50 பழமொழிகள் உள்ளன.

இந்தத் தொகுப்பு நூல்கள்தான் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

பெரியவர்களின் உதவியோடு கிராமியக் கவிதைகளைக் கண்டெடுத்து, மனப்பாடம் செய்து, விசேஷ காலைப் பாடத்தில் படிக்குமாறு ஏப்ரலில் நான் குழந்தைகளுக்கு ஆலோசனை கூறினேன். விசேஷ காலைப் பாடம் சுவாரசியமானதாக இருந்தது. பின் இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து, இரண்டு அழகிய அட்டைகளைத் தயாரித்தோம், இரண்டு கவிதைத் தொகுப்பு நூல்கள் கிடைத்தன. வீட்டில் உள்ளவர்களுக்குக் காட்டுவதற்காக இவற்றை குழந்தைகள் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். இப்படித்தான் இந்த நான்கு புத்தகங்களும்—இவை குழந்தைகளின் சந்தோஷத்தையும் பெருமிதத்தையும் உள்ளடக்கியுள்ளன—தோன்றின.

இரண்டாவது மேசையில் ஒரு ஆல்பத்தை வைத்தோம். ''விருப்பமிருந்தால் நம்புங்கள், இல்லாவிட்டால் வேண்டாம்!'' என்று இதற்குத் தலைப்பு தந்தோம். இதில் அசாதாரண இயற்கைச் சம்பவங்கள் பற்றிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வந்த பத்து செய்திகள் கத்தரித்து ஒட்டப்பட்டுள்ளன. சமீபத்தில்தான் சிறுவர்கள் இதைத் துவங்கினர், அடுத்த கல்வியாண்டில் இதைத் தொடருவார்கள்.

மூன்றாவது மேசையில் குழந்தைகள் தாமாகவே செய்த வேலைகளின் முதல் ''தொகுப்புகள்'' இருக்கின்றன. ஜனவரியில் என் குழந்தைகளிடம் பின்வருமாறு கூறினேன்:

''நூலாசிரியர்களாக விரும்புகின்றீர்களா?'' என்று கேட்டு, இதற்கு என்ன பொருள் என்று விளக்கினேன். ''இந்த நூல்களில் உங்களுடைய சிறந்த எழுத்துப் பயிற்சி

களையும், நீங்கள் போட்ட சிறந்த கணக்குகளையும் சேர்க்கலாம். உங்களுடைய கருத்துக்கள், கதைகள், நீங்களே கண்டுபிடித்துப் போட்ட புதிர்கள், உங்களுடைய கணக்குகள், படங்கள், மாடல்கள் ஆகியவற்றைச் சேர்க்கலாம். அதாவது உங்களுக்கு மிகவும் பிடிக்கும் எல்லாவற்றையும் இவற்றில் சேர்க்கலாம். பக்கங்களை நீங்கள் அழகுபடுத்தலாம்... நூலிற்குப் பெயரை நீங்களே யோசித்து முடிவு செய்யுங்கள்!''

எனது முந்தைய ஆறு வயதுக் குழந்தைகளின் ஒரு சில நூல்களை நான் காட்டினேன்.

''உங்களுடைய நூல்கள் இப்படி இருக்கும்!''

இந்நூல்களைக் கண்டு குழந்தைகள் பரவசமடைந்தனர்.

**லேரி:** ''ஏன் இங்கு 'முதல் தொகுதி' என்று எழுதப் பட்டுள்ளது?''

''ஏனெனில் தமது இரண்டாவது நூலை, இரண்டாவது தொகுதியை இரண்டாவது வகுப்பிலும் மூன்றாவது தொகுதியை மூன்றாவது வகுப்பிலும் நான்காவது தொகுதியை நான்காவது வகுப்பிலும் உருவாக்கினார்கள்.''

இந்தத் தடிமனான, அழகிய நூல்களைக் குழந்தைகள் முன் வைக்கிறேன்.

எனது ஆறு வயதுக் குழந்தைகள் நிச்சயமாக தம் சொந்த நூல்களின் ஆசிரியர்களாக விரும்பினர். எனது ''முதுமொழிகளில்'' ஒன்று பின்வருமாறு ஒலிக்கிறது:

> உடனடியாக செய்யத் தக்க சுவாரசியமான விஷயங்களைத் தான் குழந்தைகளுக்கு முன்மொழிய வேண்டுமே தவிர எப்போதாவது செய்ய வேண்டியவற்றை முன்மொழியக் கூடாது; இந்த விஷயங்களை நிறைவேற்றும் முகமாக இவர்கள் எடுத்து வைக்கும் முதலடிகள் முதல் வெற்றிகளுக்கு இவர்களை இட்டுச் செல்ல வேண்டுமே தவிர முதல் கசப்பான தோல்விகளுக்கு இட்டுச் செல்லக் கூடாது.

''நாங்கள் எப்போது எங்கள் நூல்களைச் செய்வோம்?'' இக்கேள்வி உடனேயே வகுப்பின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்தது.

''ஏன் தள்ளிப் போட வேண்டும்! இப்போதே துவங்குவோம்!''

குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்கள், ஓவியங்கள், மாடல்கள் அடங்கிய கோப்புகளை ஒவ்வொருவருக்கும் அளித்தேன். அவர்கள் அலமாரியிலிருந்து கோந்து, கத்தரிக் கோல், வண்ணப் பேனாக்கள், காகிதம் முதலியவற்றை எடுத்தனர். எப்படித் தேர்ந்தெடுப்பது, வெட்டுவது, ஒட்டுவது, அழகுபடுத்துவது, காகிதங்களை வரிசைப்படுத்துவது, நாடாவால் கட்டுவது என்றெல்லாம் அவர்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறேன். குழந்தைகள் தங்கள் நூலின் தலைப்பைப் பற்றியும் அட்டையை எப்படி அழகுபடுத்துவது என்பதைப் பற்றியும் என்னுடன் ஆலோசனை செய்தனர். உழைப்புப் பாடவேளையிலும் ஓவியப் பாடவேளையிலும் எல்லோரும் உற்சாகமாக காரியத்தில் மூழ்கினர். அன்று ஒவ்வொருவரிடமும் ''தூக்கணாங்குருவி'', ''ரோஜா'', ''கழுகு'', ''சூரியன்'', ''மகிழ்ச்சி'', ''நட்சத்திரம்'', ''வசந்தம்'', ''ஓடை'', ''மலர் தோட்டம்'' என்று தனித் தனி நூல்கள் உருவாயின.

நாங்கள் வகுப்பறையில் இந்த நூல்களுக்காக ஒரு மேசையை ஒதுக்கினோம். ஒவ்வொருவரும் தத்தம் நூல்களை எடுத்து அதில் புதியவற்றைச் சேர்க்கலாம், நண்பரின் நூலை எடுத்துப் பார்க்கலாம்.

குழந்தைகளின் உற்சாகத்தை வழிநடத்தும் அவசியமே எனக்கு இல்லாமல் போயிற்று. நான் மேசையை நெருங்கி ஏதாவது ஒரு நூலை எடுத்துப் புரட்டிப் பார்ப்பேன், பின் எப்போதாவது (இடைவேளையில், உலாவும் போது அல்லது ஒருவேளை பாட நேரத்தில் அவர்கள் பதில் சொல்லும் போது) ''உனது 'வசந்தம்' ('நட்சத்திரம்'...) நூலின் புதிய பக்கம் எனக்குப் பிடித்துள்ளது. இன்னும் என்னவற்றையெல்லாம் இதில் சேர்க்கப் போகிறாய்?''

சில சமயங்களில் இடைவேளையின் போது நான் 2—3 நூல்களை எடுத்து வந்து புரட்டிப் பார்ப்பேன். அப்போது குழந்தைகள் என்னைச் சூழ்ந்து நின்று ''இது யாருடைய நூல்? உங்களுக்குப் பிடித்துள்ளதா?'' என்று கேட்டபடி இருப்பார்கள். சில சமயம் ஒரு நூலை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அந்த நூலின் ஆசிரியரிடம் அனுமதி கேட்பேன்: ''என் பிள்ளைகளுக்குக் காட்டுவேன்''. யாரை வேண்டுமானாலும் அழைத்து ''குழந்தைகளின் இந்த நூல்கள் எவ்வளவு சுவாரசியமானவை பாருங்கள்'' என்று கூறுவேன்.

ஆம், எல்லாம் இவ்வளவு எளிமையானவையாக இருந்தன, மழைக்குப் பின் காளான்கள் வளருவதைப் போல் நூல்கள் விரைவாக அதிகரித்தன.

இந்நூல்கள் எல்லாம்தான் இப்போது மூன்றாவது மேசையில் உள்ளன.

நான்காவது மேசையில் சின்னஞ் சிறு நூல்கள் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகம். ஒரு பத்திரிகையின் பக்கத்தில் பாதி அளவுள்ள ஒரு தாளில் கதை டைப் செய்யப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள். 8 பக்கமுள்ள ஒரு நூல் கிடைக்க, தாளை மூன்று முறை மடித்து, பக்கங்களை ஒட்ட வேண்டும், முதல் பக்கத்தில் நூல் ஆசிரியரின் பெயர், கதையின் பெயர், தேதி முதலியவற்றை எழுத வேண்டும்; கதையை கவனமாகப் படித்து உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; கதைக்கேற்றபடி அட்டையின் மேலும் பின்னும் அலங்கரிக்க வேண்டும்; அட்டையின் இரண்டாவது பக்கத்தில் அலங்கரித்த ஓவியரின் பெயரை எழுத வேண்டும்; பத்திகள் ஆரம்பமாகும் போது முதல் எழுத்துகளை அலங்கரிக்க வேண்டும்; மேற்கோளில் உள்ள வார்த்தைகளின் பொருளை எழுத வேண்டும்; காலியான பக்கங்களில் கதைக்கேற்ற படங்களை வரைய வேண்டும்; கதையின் இறுதியில் கதைப் பொருளுக்கு ஏற்ற சில கேள்விகளை எழுத வேண்டும்; இப்படி வடிவமைக்கப்பட்ட நூலை நண்பர்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

இப்படி வடிவமைக்கப்பட்ட நூலைப் பற்றி வகுப்பில் விவாதம் நடத்தினோம். ஓவியங்கள், அட்டைகள், மேற்கோள் வார்த்தைகளின் விளக்கங்கள், கதையின் பொருளுக்கேற்ற கேள்விகள் ஆகியவற்றை, இவ்வாறாக கதையையே விவாதிப்போம். இவ்வாறாக மூன்று கதைகள் உருவாயின. இம்மாதிரியாகப் புதியவற்றை அறிவது குழந்தைகளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று...

...கண்காட்சி வேலைகள் முடிந்தன.

''வாருங்கள், எல்லாம் சரியாக உள்ளனவா என்று பார்ப்போம்!'' என்கிறாள் மாயா.

நாங்கள் ''கண்காட்சி அரங்கைச்'' சுற்றி வருகிறோம். தம் புகைப்படங்களைக் கண்டதும் குழந்தைகளுக்கு ஒரே மகிழ்ச்சி. தம் முதல் எழுத்து வேலைகளைக் கண்டதும் இவர்களுக்கு சந்தோஷம், வியப்பு. இவர்களுக்கு தம் கண்

காட்சியில் திருப்தி. ஆங்காங்கே சில மாற்றங்களைச் செய்கின்றனர். தமது இசை நாடக அறிவிப்பைத் தொங்க விடுகின்றனர்.

''இப்போது நாம் நம் மரங்களிடம் செல்லலாம்!'' என்று நான் சொல்லியதும் வாளியையும் இரண்டு மண்வெட்டிகளையும் எடுத்தபடி நாங்கள் சத்தமிட்டுக் கொண்டு மாடிப்படியில் இறங்குகிறோம்.

## மரங்களுடன் விடைபெறுதல்

மரங்கள் சரிவில் நன்கு நிமிர்ந்து நிற்கின்றன. இவை எங்கும் போய்விடவில்லை, இவற்றால் எங்கும் ஓட முடியாது, ஏனெனில் எங்களுக்காகக் காத்திருக்கின்றன.

இந்த மரங்கள் எங்களுடைய நண்பர்கள்.

நாங்கள் பிப்ரவரியில் இவற்றை நட்டோம். பெற்றோர்கள் நல்ல நாற்றுகளைக் கொண்டு வந்தனர், நாற்பது குழிகளைத் தோண்ட பயனீர்கள் உதவினர், நாற்பத்து ஒன்றாவது குழியை நானே தோண்டினேன். நாங்கள் கவனமாக நாற்றுக்களை நட்டோம்.

''யார் எந்த மரத்தை நட்டது என்று எப்படி அறிவது! இவற்றிற்குப் பெயரிடலாமே'' என்றான் தேன்கோ.

ஒவ்வொரு மரத்தையும் யார், எப்போது நட்டது என்ற விஷயங்கள் எழுதிய சிறு இரும்பு வில்லையை ஒவ்வொருவரும் மரங்களில் கட்டித் தொங்க விட்டனர்.

அன்றாடம் சாதாரணமாக பெரும் இடைவேளையின் போது எங்கள் பூங்காவிற்கு வந்து மரங்களைப் பராமரிப்போம்; மண்ணைக் கொத்துவோம், தண்ணீர் ஊற்றுவோம். இவற்றைத் தடவிக் கொடுத்து, பேசவும், முதல் இலைகள் எப்போது வருகின்றன என்று கவனிக்கவும் வந்தோம்.

ஒரு முறை மழை பெய்த போது பூங்காவிற்கு சென்று எங்கள் மரங்களைப் பார்க்க முடியவில்லை. அவற்றிற்கு யாராவது எதாவது தீங்கு செய்திருந்தால் என்ன செய்வது என்று குழந்தைகள் கவலைப்பட்டனர்.

''சரி, நம் மரங்கள் எப்படியிருக்கின்றன என்று பார்க்க மூவரை அனுப்பலாம்'' என்றேன் நான்.

தாத்தோ, கோத்தே, இலிக்கோ ஆகிய மூவரையும் அனுப்பினோம். சிறுவர்கள் திரும்பி வந்து மரங்கள் நன்றாக

இருப்பதாயும் எங்களுக்கு வாழ்த்து சொல்வதாயும் தெரிவித்தனர்.

இம்மரங்களில் முதல் இலைகள் தோன்றிய போது குழந்தைகள் பேரானந்தமடைந்தனர். லாலி காலையில் பள்ளிக்கு வந்த போது பூங்காவிற்கு சென்று இதை கவனித்து வந்தாள். எனவே மூன்றாவதாக இருந்த உழைப்பு பாடத்தை முதலுக்கு கொண்டு வந்து உடனே குழந்தைகளைப் பூங்காவிற்கு அழைத்துச் சென்றேன். குழந்தைகள் வழி பூராவும் லாலியை நோக்கிக் கேள்வி கேட்ட வண்ண மிருந்தனர்:

''எனது மரத்திலும் முதல் இலைகள் வந்து விட்டனவா? நீ பார்த்தாயா?''

''ஒருவேளை எனது மரம் காய்க்காவிடில் என்ன செய்வது?'' என்று சிலர் கவலைப்பட்டனர்.

...இன்று மீண்டும் எங்கள் மரங்களைச் சந்தித்தோம். குழந்தைகள் அவற்றுடன் பேசுகின்றனர், இலைகளைத் தடவித் தருகின்றனர், மண்ணைக் கொத்துகின்றனர்.

''சரி, நீ எப்படியிருக்கிறாய்?'' என்று லாலி தன் மரத்திடம் கேட்கிறாள். ''இங்கு வளர பிடித்துள்ளதா? உன்னருகே இயாவின் மரம் உள்ளது, வலது புறம் கோத்தேயின் மரம்... ஓ, உனக்கு எல்லோரையும் தெரியுமா? இன்று பள்ளியில் கல்வியாண்டின் கடைசி தினம் தெரியுமா? நீ பயப்படாதே, நான் உன்னை அடிக்கடி வந்து பார்ப்பேன், என் வீடு பக்கத்தில்தான். உன் நண்பர்களுக்கும் உதவுவேன்!..''

என் வகுப்புக் குழந்தைகள் தம் மரங்களுடன் பேசக் கற்றுக் கொண்டு விட்டனர். தன் மகிழ்ச்சி, ஏமாற்றம், எண்ணங்கள், கனவுகள் எல்லாவற்றையும் இவற்றிற்குச் சொல்லலாம். நூலைக் கூடப் படித்துக் காட்டலாம். நல்ல கதைகளும் கவிதைகளும் எல்லோருக்கும்—மரங்களுக்கும் கூட—பிடிக்கும்.

குழந்தைகள் தங்கள் மரங்களுடன் பேசும்படி நான் ஊக்குவிக்கிறேன்; என் மரத்துடன் பேசுகிறேன், மற்றவற்றைத் தடவித் தருகிறேன்.

''குழந்தைகளே, உங்களுடைய மரங்களை நேசியுங்கள். அவை உயிருள்ளவை, உங்கள் பேச்சை அவை கேட்கின்றன, அவை உங்களுக்காக எப்போதும் காத்திருக்கும். இயற்கைக்கு மனித அன்பும் அக்கறையும் வேண்டுமே தவிர இதன்

அழகைப் பற்றிய பாராட்டுதல்கள் வேண்டாம். நீங்கள் நிரந்தர அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தினால் உங்கள் மரங்கள் விரைவாக, சுதந்திரமாக வளரும், அழகாகும் என்று உறுதி கூறுகிறேன். யாராவது இவற்றை மறந்தால், அவை நோய்வாய்ப்படும், வேர்களும் தண்டுகளும் அழுகும். என்ன செய்யலாம் தெரியுமா? நீங்கள் வெகு தொலைவில் இருந்து, உங்களால் அடிக்கடி வர முடியாமல் இருந்தால் அங்கே வளரும் மற்ற மரங்களை, இவற்றின் சகோதர, சகோதரி மரங்களைப் பராமரித்து அன்பு காட்டுங்கள்! காற்று உங்கள் அன்பைப் பற்றிச் செய்தி சொல்லும், உங்கள் மரங்கள் எப்போதும் நோய்வாய்ப்படாது. ஏனெனில் இந்த சின்னஞ் சிறு மரங்களுக்குப் பெரிய இதயங்கள்; இவை உங்களை நேசிக்கின்றன, உங்கள் ஒவ்வொருவரையும் அன்பானவனாக, பரந்த மனப்பாங்குள்ளவனாகப் பார்க்க விரும்புகின்றன. இப்போது உங்களைப் போன்றே இவை சிறியவை, ஆனால் இவை விரைவில் உங்களை விட விரைவாக வளரும். ஏன் தெரியுமா? இந்தச் சிறு வில்லைகளோடு உங்களுடைய தனித்துவத்தையும் உயர்த்திக் காட்டுவதற்காக! 20—30 ஆண்டுகள் கழித்து இங்கு வந்து இத் தோப்பில் இளைப்பாறுங்கள் உங்கள் மரங்களின் மீது சாய்ந்தபடி (இப்போது இவற்றின் மீது சாயக் கூடாது) வாழ்க்கையில் நீங்கள் சாதித்ததைப் பற்றிக் கூறுங்கள்!'' மரங்களைப் பராமரிக்கவும், இவற்றைக் கண்டு நேசிக்கவும் எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணவும் நாங்கள் இங்கு வந்த போது இவ்வாறு நான் என் வகுப்புக் குழந்தைகளிடம் கூறினேன்.

''ஏன் நம் மரங்களுக்காக நாம் ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தக் கூடாது!'' என்று கோத்தே திடீரெனக் கேட்கிறான். அவன் லேலா அருகில் நின்றபடி அவள் தன் மரத்துடன் பேசுவதைக் கேட்கிறான்.

''நடத்தலாமே!'' என்று நான் ஆதரவு தெரிவிக்கிறேன். குழந்தைகள் உடனேயே இதைப் பற்றிப் பேசுகின்றனர்:

''கலை நிகழ்ச்சி நடத்துவோமா!''

''நடத்துவோம்!''

''மரங்களே, எங்கள் கலை நிகழ்ச்சியைப் பார்க்கின்றீர்களா?''

''எப்படித் துவங்குவது?''

''பாடலிலிருந்து!''

மரங்களின் நடுவே நான் மட்டும் இருக்க, குழந்தைகள் சற்றுத் தள்ளிச் சரிவில் உள்ளனர். குழந்தைகள் சந்தோஷ மான பாட்டைப் பாடுகின்றனர், சிலர் கவிதைகளை வாசிக் கின்றனர், சிலர் நடனமாடுகின்றனர். நானும் மரங்களும் கை தட்டுகிறோம்...

## எனக்கு 114 கடிதங்கள் வரும்

நான்காவது பாடவேளையின் கடைசி நிமிடங்கள்.

கோடை விடுமுறையை எப்படி கழிக்க வேண்டும் என்பது குறித்துக் குழந்தைகளுடன் ஏற்கெனவே பேசியாகி விட்டது.

புத்தகங்களை வாசிக்க வேண்டும்! வெளியில் விளையாட வேண்டும்! பொறுமை, வீரப் பயிற்சிகள் செய்ய வேண்டும்! கணிதத்தை கவனத்திலிருந்து நழுவ விடக் கூடாது! பெரிய வர்களுக்கு உதவ வேண்டும்! உங்கள் கருத்துக்களைப் பற்றி எழுதுவீர்கள் என்று நம்புகிறேன். கோடையில் சேகரித்து, காய வைத்த இலைகள், மலர்கள் மற்றும் சுவாரசியமான விஷயங்களைப் பள்ளிக்கு விடுமுறைக்குப் பின் கொண்டு வாருங்கள்!

கோச்சா: ''விடுமுறையில் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''உங்களுடனான சந்திப்பிற்குத் தயாராவேன்.''

நாத்தோ: ''எப்படி?''

ஏக்கா: ''ஏன்?''

''வேறென்ன செய்வது? அடுத்த கல்வியாண்டில் நாம் என்ன செய்ய வேண்டுமென நான் திட்டமிட வேண்டும் அல்லவா?''

நீக்கா: ''இது பெரிய வேலையா?''

''ஆம், பெரிய வேலை.''

கீயா: ''நீங்கள் ஓய்வெடுக்காவிடில் களைப்பேற்படுமே!''

''நானும் ஓய்வெடுப்பேன்.''

மாக்தா: ''எனக்கு விடுமுறையில் செல்ல விருப்பமில்லை! ஏன் தான் விடுமுறையைக் கண்டுபிடித்தார்களோ!''

''உங்கள் உடல் நலத்திற்கு, வளர்ச்சிக்கு இவை அவ சியம். விடுமுறை என்றால் ஒரு வேலையும் இல்லையென்று பொருளாகாது. நீங்கள் 3 மாதங்கள் 10 நாட்கள் ஓய்வு எடுப்பீர்கள்.''

இலிக்கோ: ''அதாவது 100 நாட்கள்!''

''ஆமாம், இலிக்கோ, நீ சொல்வது சரி.''

சூரிக்கோ: ''ஓ, நான் 100 நாட்களில் மிகவும் சலித்துப் போவேனே!''

''எனக்கும் நீங்கள் இல்லாமல் கடினமாக இருக்கும். நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள், எப்படி ஓய்வெடுக்கின்றீர்கள், என்ன படிக்கின்றீர்கள் என்று கூட எனக்குத் தெரியாது.''

கியோர்கி: ''நாங்கள் உங்களுக்குக் கடிதங்களை எழுதுவோம்.''

''அப்படியா? இது எனக்குத் தோன்றவில்லையே! நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு தலா 3 கடிதங்களை எழுதினால்...''

இலிக்கோ: ''உங்களுக்கு 114 கடிதங்கள் வரும்! அதாவது அன்றாடம் கடிதம் வரும், சில சமயங்களில் இரண்டு கடிதங்கள் கூட வரும்.

''எவ்வளவு நல்லது! 114 கடிதங்கள்!''

மாயா: ''உங்களுக்குக் கடினமாக இருக்காது!''

''அப்போது எனக்குக் கடினமாக இருக்காது! நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள், என்ன செய்கின்றீர்கள் என்றெல்லாம் எனக்குத் தெரியும்.''

லேலா: ''எங்களுக்கு உங்கள் விலாசம் தெரியாதே!''

''ஒவ்வொருவரும் ஒரு தாள் எடுத்துக் கொள்ளுங்கள். இதோ சொல்கிறேன். எழுதிக் கொள்ளுங்கள்.''

குழந்தைகள் எழுதுகின்றனர்.

இனிய மின்சார மணி ஒலிக்கிறது.

எங்களுடைய கடைசி 680வது பாடவேளை முடிந்தது.

நான் வகுப்புக் குழந்தைகளைப் பார்த்து பேசுகிறேன்.

''குழந்தைகளே, எழுந்திருங்கள்!''

எல்லோரையும் பார்க்கிறேன். கம்பீரமான குரலில், உணர்ச்சி ததும்பச் சொல்கிறேன்:

''நீங்கள் முதல் வகுப்பை வெற்றிகரமாக முடித்தது குறித்து வாழ்த்துகள், பாராட்டுதல்கள்!''

''நன்றி!'' என்று மகிழ்ச்சியாக, சந்தோஷமாக, ஒருமித்த குரலில் பதில் வருகிறது.

வரிசைகளின் ஊடாகச் சென்று ஒவ்வொருவர் கையையும் குலுக்குகிறேன், முகத்தையும் கண்களையும் உற்றுப் பார்க்கிறேன். ஒவ்வொருவரையும் ஏதோ முதன் முதலாகப்

பார்ப்பது போல் பார்க்கிறேன். இவர்கள் எல்லோரும் எப்படி வளர்ந்து விட்டனர்!..

...170வது பள்ளி நாள் தொடருகிறது.

பெற்றோர்களும் விருந்தினர்களும் வந்தனர். ஏராள மானவர்கள்—கிட்டத்தட்ட 80 பேர்கள்—வந்தனர். இவர் களை எங்கே உட்கார வைப்பது? எல்லோரும் தம் கரங் களில் அழகிய அழைப்பிதழையும் நிகழ்ச்சி நிரலையும் வைத் துள்ளனர். இவற்றைக் குழந்தைகளே தயாரித்து யாருக்கு விருப்பமோ அவர்களுக்கு அனுப்பினர். வகுப்பறையில் இல் லாமல் பள்ளியின் விழா அரங்கில்தான் நிகழ்ச்சியை நடத்த வேண்டும்.

பெற்றோர்களும் விருந்தினர்களும் எங்கள் கண்காட்சி களை—குழந்தைகளின் செப்டெம்பர், மே மாத வேலை களையும் புகைப்படங்கள், சின்னஞ் சிறு நூல்கள், சொந்த படைப்புகள், ஆல்பம் ஆகியவற்றை — சுற்றிப் பார்க் கின்றனர். குழந்தைகள் விளக்கம் தருகின்றனர்.

அம்மாமார்களுக்கு எவ்வளவு சந்தோஷம்!

அப்பாக்களுக்கு என்ன பெருமிதம்!

பாட்டிமார்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

விருந்தினர்களுக்கு என்ன வியப்பு!

தம் குழந்தைகளின் டெஸ்குகளிலிருந்து பெற்றோர்கள் ரகசிய பாக்கெட்டுகளை எடுக்கின்றனர். ஆவலுடன், எச் சரிக்கையாக இவற்றைத் திறக்கின்றனர். ஒவ்வொரு தாளை யும் கவனமாகப் பார்க்கின்றனர். நான் அவர்களின் முகங் களைப் பார்க்கிறேன். எல்லாம் புரிகின்றதா? இன்னும் விளக் கங்கள் தேவையா?

''மதிப்புள்ள பெற்றோர்களே!'' என்று எல்லோருக்கும் கேட்கும்படி கூறுகிறேன். ''இன்று பெற்றோர் கூட்டம் நடத்த வேண்டிய அவசியமில்லையென எண்ணுகிறேன். நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம் என்று நினைக் கிறேன். ஆனால் உங்களில் யாருக்காவது என்னுடன் பேச வேண்டிய அவசியம் இருந்தால் இவ்வாரம் உங்களுக்கு வசதி யான நேரத்தில் வாருங்கள்! எங்கள் வகுப்பில் நான் இருப் பேன். இப்போது பள்ளிக் கலை அரங்கிற்குப் போகலாம், வாருங்கள், அங்கு இசை நாடகம் நடக்கும்.''

குழந்தைகள் மேடையில் சின்னஞ் சிறு நாற்காலிகளில் தத்தம் இசைக் கருவிகளுடன் அமர்ந்திருக்கின்றனர்.

இசை முழங்க, குழந்தைகள் பாடுகின்றனர்...

கலை நிகழ்ச்சிக்குப் பின் நாங்கள் முற்றத்திற்கு இறங்கி வந்து புகைப்படமெடுத்துக் கொண்டோம்.

ஒவ்வொருவரும் என்னிடம் வந்து விடைபெறுகின்றனர்.

ஏல்லாவும் விடைபெறுகிறாள். ஆனால் திரும்பி வருகிறாள்.

''நான் மோசமாக நடந்ததற்கு மன்னியுங்கள்! திரும்பி வந்ததும் நான் இப்படியெல்லாம் நடக்க மாட்டேன்! நான் உறுதி கூறுகிறேன்! பிடிவாதக்காரியாக இல்லாமல் இருக்க இந்த 100 நாட்களும் நான் பயிற்சி செய்வேன்!'' என்று வெட்கப்பட்டுக் கொண்டே கூறுகிறாள்.

''ஏல்லா, நான் நிச்சயமாக உன்னை நம்புகிறேன்!''

குழந்தைகள் போய் விட்டனர்.

அவர்கள் தம்முடன் என்ன எடுத்துச் சென்றனர்?

# ஆறு வயதுக் குழந்தைகளின் நாளைய தினம் பற்றிய சிந்தனைகள்

எனது பழைய, விசுவாசம் மிக்க மேசையே, வணக்கம்! அன்றாடம் குழந்தைகளை விட்டுப் பிரிந்ததும், அன்றைய தினம் நடந்ததைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் அடுத்த நாளைத் திட்டமிடவும் உன்னிடம் விரைந்து வந்தேன். உன் மேல் நோட்டுப் புத்தகங்கள், படங்களைப் பரப்பி வைத்து அவற்றில் மூழ்கினேன், சின்னஞ் சிறு பள்ளி மாண வர்களுக்கான பயிற்சிகளை உருவாக்கினேன், இவர்களுடன் எம்மாதிரியான பேச்சுகள் வரும் என்று கற்பனையில் பார்த் தேன், மொத்தத்தில் அடுத்த நாளுக்கான பாடத் திட்டத் தைத் தீட்டினேன்.

ஒரு ஆற்றில் குச்சி அடித்துச் செல்லப்படுவதைப் போல் ஒரு நாள் ஆசிரியரை இட்டுச் சென்றால் அது ஆசிரியருக்கு ஏற்ற நாளாகாது; ஒரு ஆற்றில் ஒருவன் இலக்கை நோக்கி படகை ஓட்டுவது போல் ஆசிரியர் நாளைத் திட்டமிட்டுச் செலவிட்டால்தான் ஆசிரியருக்கேற்ற நாளாகும். இங்கே ஆற்றை வாழ்க்கையோடு ஒப்பிடலாம்.

எனது ஆறு வயதுக் குழந்தைகளின் குழந்தைப் பருவத் தைப் பற்றி நான் யோசித்துப் பார்த்தேன். அவர்களை டெஸ்கில் உட்கார வைத்ததன் மூலம் நான் அவர்களின் குழந்தைப் பருவத்தைப் பிடுங்கியதாகப் பல சமயங்களில் எனக்குப் பட்டது. ஆசிரியர்களும் குழந்தை வளர்ப்பாளர் களும் பெற்றோர்களும், குழந்தைகளுக்கு படிக்கவும் எழுத வும் கணக்குப் போடவும் சொல்லித் தருவதற்காகக் குழந்தை களை எங்கே உட்கார வைத்தாலும் இந்த சின்னஞ் சிறியவர்களிடம் குழந்தைப் பருவத்தைப் பிடுங்கியதாக எனக்குத் தோன்றியது.

எனது சிந்தனைகளில் எனது சக ஆசிரியை நத்தாலியா மிஹைலவ்னா கார்ச்சாவுலியை நினைத்துப் பார்த்தேன்.

இருபது வருடங்களுக்கு முன் இவர் ஜார்ஜியாவில் முதன் முதலாக ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்பும் ஆரம்பக் கணிதமும் நர்சரிப் பள்ளிகளில் சொல்லித் தர துவங்கிய போது இவருக்கு வயது எழுபதைக் கடந்திருந்தது. ஒரு முறை அவர் வகுப்பில் அமர்ந்து குழந்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்த போது நத்தாலியா மிஹைலவ்னா திடீரென என் காதில் மெதுவாகக் கூறினார்: ''இக்குழந்தைகள் நிறைய சாதிப்பார்கள். ஆறு வயதுக் குழந்தைகளுக்கு உண்மையான குழந்தைப் பருவத்தைத் தர இவர்களுக்கு படிப்பு சொல்லித் தர வேண்டும்!''

அப்போது இந்தச் சொற்கள் முரணுரையாகத் தோன்றின. ''குழந்தைகளின் குழந்தைப் பருவத்தில் ஒரு வருடத்தை ஏன் பிடுங்க வேண்டும்? எதற்கு அவசரம்?'' என்று ஒரு சில விஞ்ஞானிகள் கூறினர். உண்மையான குழந்தைப் பருவத்தை இவர்களுக்கு அளிப்பதற்காகப் படிப்பு சொல்லித் தர வேண்டும் என்றார் ஆசிரியை.

இதற்குப் பின் பல்லாண்டுகள் உருண்டோடி விட்டன, பல விஷயங்கள் நடந்து விட்டன. ஒரு வருடம் முன்னதாக குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தர வேண்டுமா இல்லையா என்று யாரும் விவாதிப்பதில்லை. ஆறு வயதுக் குழந்தைகளின் படை பள்ளியை நோக்கிப் பாய்கிறது; இவர்களில் ஒரு பகுதியினர் ஏற்கெனவே பள்ளியில் நுழைந்து, மிகச் சிறந்த வகுப்பறைகளில் அமர்ந்து, ''படிப்பு சொல்லித் தாருங்கள்'' என்று அன்பான, அறிவுக் கூர்மையுள்ள ஆசிரியர்களிடம் கோரினர்; இன்னொரு பகுதியினர் நர்சரிப் பள்ளிகளில் தமது சிறு மேசைகளின் முன் அமர்ந்து கொண்டு குழந்தை வளர்ப்பாளர்களிடம் நல்ல உணவைக் கேட்பதோடு, ''படிப்பு சொல்லித் தாருங்கள்'' என்றும் கேட்கின்றனர்; மூன்றாவது பகுதியினர் சாக்லேட்டுகள், விளையாட்டு சாமான்களோடு கூடப் புத்தகங்கள், அரிச்சுவடிகள், ஸ்கேல்கள் முதலியவற்றையும் வாங்கித் தருமாறு தம் பெற்றோர்களிடம் நச்சரிக்கின்றனர்; இன்னுமொரு பகுதியினரோ ஒருவருக்கொருவர் தெரிந்ததைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் வரும் எழுத்துகளையும் கடைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் உள்ள எழுத்துகளையும் படிப்பதன் மூலமும் தம் அறிவுத் தாகத்தை தீர்த்துக் கொள்வதென முடிவு செய்துள்ளனர்.

இன்றுள்ள குழந்தைகள் எப்படிப்பட்டவர்கள் பார்த்தீர்களா!

இந்த ஆறு வயதுக் குழந்தைகள் யார்?

இவர்களுக்கு குழந்தைகளாக இருக்கப் பிடிக்கவில்லையா! இயற்கையன்னை இவர்களுடைய வயதிற்கு உரித்தான குணங்களை மாற்றி விட்டாளா என்ன!

இல்லை, இயற்கை ஒன்றையும் மாற்றவில்லை.

இவர்கள் 80ஆம் ஆண்டுகளின் புலப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றனர். இவர்கள் தம் குழந்தைப் பருவத்தை விட்டுப் பிரிய விரும்பவில்லை, மாறாக புத்திசாலித்தனமான குழந்தைப் பருவத்தைப் பெற முயலுகின்றனர். எனது முதிய ஆசிரியையின் வார்த்தைகளின் பொருள் அனேகமாக இதுவாகத்தான் இருக்க வேண்டும். புதிய புதிய தலை முறைகளைச் சேர்ந்த ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தரவும் அவர்களை வளர்க்கவும் நான் துவங்கிய பின் இதை மேன்மேலும் அதிகமாக உணர்ந்தேன்.

குழந்தைப் பருவம் என்றால் என்ன? சந்தோஷமான, உற்சாகமான குழந்தைப் பருவம் என்றால் என்ன? ''குழந்தைகளின் குழந்தைப் பருவத்தைப் பாதுகாக்க வேண்டும்'' என்ற அறை கூவலை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்? எனது ஆசிரியர் மனசாட்சியை சாந்தப்படுத்தி, ஊக்குவிக்க இக்கேள்விகளுக்குப் பதில்களைப் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

ஆறு வயதுக் குழந்தைகளைக் கவனித்த போது ஒன்று தெரிந்தது. குழந்தைப் பருவம் என்பது வெறும் குறிப்பிட்ட வயதுப் பருவம் மட்டுமல்ல. இப்பருவத்தில் இவர்களுக்கு விளையாட, குதிக்க, ஓடியாடப் பெரும் விருப்பமிருக்கும், இவர்கள் கவலையற்று, பல நேரங்களில் பொறுப்பற்றுத் திரிவார்கள் என்பதெல்லாம் ஒருபுறம். ஆனால் உண்மையான குழந்தைப் பருவம் என்பது பெரியவர்களாகும் ஒரு நிகழ்ச்சிப் போக்காகும்; இதில் மனித வாழ்க்கை ஒரு குணாம்ச மட்டத்திலிருந்து வேறொரு உயர் மட்டத்திற்கு மாறுகிறது. குழந்தை தானாகவே இதைப் பற்றி யோசிப்பதில்லை, ஆனால் அவனுடைய வளர்ந்து வரும் சக்திகள் அவனை இத்திசையில் உந்தித் தள்ளுகின்றன. இச்சக்திகளால் பெரியவர்களாக்கும் நிகழ்ச்சிப் போக்கை முழுமையாக்க முடியாது. குழந்தைகளின் மீது அக்கறையுள்ள, பெரியவர்

களாக வேண்டிய அறிவுத் தீனியையும் அனுபவத்தையும் தரவல்ல பெரியவர்களின் உதவி இக்குழந்தைகளுக்கு வேண்டும்.

குழந்தைகள் வாழ்க்கையின் மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் மூல ஊற்று அவர்கள் இவ்வாறு பெரியவர்களாவதில்தான் உள்ளதென்று எனக்குத் தோன்றுகிறது. பரிசுகள், உலாவுதல் மூலம் மட்டும் குழந்தைகளுக்கு சந்தோஷம் தரலாமென சில நேரங்களில் நாம் நினைப்பது தவறாகும். 80ஆம் ஆண்டுகளின் ஆறு வயதுக் குழந்தையை இப்படிப்பட்ட அதிசயங்களால் மட்டும் சந்தோஷப்படுத்த முடியாது என்பது எனக்குத் தெட்டத் தெளிவாகி வருகிறது. கதைகளைப் படிக்க அவனுக்குச் சொல்லிக் கொடு, யதார்த்தத்தை அறியும் வழிகளைச் சொல்லிக் கொடு, அவன் தனது எதிர்காலத்தோடு கலந்து பழகுவது குறித்து மகிழ்வான் என்று அனுபவம் காட்டுகிறது. பெரியவனாகும் பாதையில் இவன் பெரியவர்களின் உதவியோடு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவனுக்கு மகிழ்ச்சிகரமான மலர்ச்செண்டாகும்.

இவ்வாறாக நான் ஒரு ‘‘முதுமொழிக்கு’’ வந்தேன். ஒருவேளை அதை நியதியாகக் கருதலாம்.

> குழந்தையின் வளர்ந்து வரும் சக்திகளுக்கேற்ப இவன் பெரியவனாக உதவுவது என்றால் இவனுடைய குழந்தைப் பருவத்தை மகிழ்ச்சிகரமானதாக, கவர்ச்சிகரமானதாக, உணர்ச்சிகள் நிறைந்ததாக ஆக்குவது என்று பொருள். மாறாக, குழந்தையின் குழந்தைப் பருவத்தைப் பறிக்கக் கூடாது என்ற மாயையான தர்க்கத்தைக் காட்டி குழந்தைக்கு முழு சுதந்திரம் அளித்து, பெரியவனாகும் இயக்கப் போக்கின் வேகத்தைக் குறைப்பது என்றால் குழந்தைப் பருவ மகிழ்ச்சிகளை அனுபவிக்கும் உண்மையான உணர்வை அவனிடமிருந்து பிரிப்பது என்றாகும்.

இவற்றிற்கெல்லாம் ஒரு விளக்கம் தரலாம்: குழந்தையின் இயல்பு மாறவில்லை, சூழ்நிலை மாறியுள்ளது, குழந்தையின் இயல்பு மீது தாக்கம் செலுத்தும் நமது வாழ்க்கை மாறியுள்ளது, நவீன வாழ்க்கையின் புதிய சூழ்நிலைகளில் குழந்தை வளருகிறான். இந்த மாற்றங்களின் ஒரு வெளிப்பாடாகத்தான் ஆறு வயதுக் குழந்தைகளுக்குப் படிக்கவும்

எழுதவும் கணக்குப் போடவும் கற்றுக் கொள்ள வேண்டுமென விருப்பம் தோன்றியது. அதாவது இவர்கள் பெரியவர்களாக, மனித நடவடிக்கையின் அதிக சிக்கலான வடிவங்களை கிரகிக்க விரும்புகின்றனர்.

ஆறு வயதுக் குழந்தைகள் படிக்க ஆசைப்படுகின்றனர். இவர்களைத் தயாரிப்பு வகுப்பிற்கு அனுப்பும் பெரியவர்களாகிய நாம், இவர்களுக்கு பள்ளியில், கல்வியில் சலிப்பு ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும். ஓராண்டு பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பிற்குப் பின் பள்ளி வாழ்க்கையை இவர்கள் எப்படி அணுகுவார்கள், படிப்பை எப்படிப் பார்ப்பார்கள் என்பதெல்லாம் வீண் கேள்விகள் அல்ல, இவைதான் முக்கிய சாரமாகும்.

ஆரம்பக் கட்டப் போதனைமுறை முழு எதிர்கால நம்பிக்கையுடையதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தன் சக்திகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும், ஒவ்வொரு பள்ளி நாள் குறித்தும் மகிழ வேண்டும், ஒவ்வொரு முறை ஆசிரியரைச் சந்திக்கும் போதும் சந்தோஷப்பட வேண்டும், ஒவ்வொரு முறை பாடத்திற்கு மணியடிக்கும் போதும் உற்சாகப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளி வாழ்க்கை அவனுடைய வாழ்க்கையின் சாரமாக இருக்க வேண்டும். சத்தம் போடுதல், திட்டுதல், அச்சுறுத்தல், முரட்டுத்தனம் ஆகிய விஷயங்கள் குழந்தைகளுடன் கலந்து பழகுவதில் தலைகாட்டவே கூடாது.

எனது கருத்துப்படி, ஆரம்பக் கட்டத்தில் உண்மையான கல்வி போதிக்கும் முறை, குழந்தைகள் மீது உண்மையான அன்புடன் படிப்பு சொல்லித் தந்து, வளர்க்கும் முறை மனிதாபிமான அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர அதிகாரத் தொனியிலான, கட்டாய, நிர்ப்பந்த அடிப்படையில் அமையக் கூடாது.

தமது ஆசிரியர்களுக்குக் கோபமேற்படுத்தவோ, தமக்குப் படிப்பு சொல்லித் தந்து வளர்ப்பதற்கு இடையூறு செய்யவோ குழந்தைகள் பிறக்கவில்லை. யதார்த்தத்தை அறியும் திறமைகளும் வாய்ப்புகளும் இவர்களிடம் கிட்டத்தட்ட எல்லையற்று உள்ளன, அறிவுத் தாகம் இவர்களிடம் மிகுந்துள்ளது என்பதை நாம் நம்ப வேண்டும். எனது கருத்துப்படி, ஆரம்ப வகுப்புகளில் கல்வி-வளர்ப்புப் பணியை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முழுவதும் குழந்தைகளின்

பாலான மனிதாபிமான உறவைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இது குழந்தை வளர்ப்பின் விதியாக வேண்டும்.

ஆறு வயதுக் குழந்தைகள் படிக்க விரும்புகின்றனர். ஆனால் நாம் எப்படி சொல்லித் தந்தாலும் இவர்கள் படிப்பார்கள் என்பது இதன் பொருளல்ல. அதிகாரத் தொனியோடு, கட்டாயப்படுத்தி இவர்களுக்குப் படிப்பு சொல்லித் தந்தால், முரட்டுத்தனமாக இவர்களுடன் கலந்து பழகினால், படிப்பார்வத்தை ஒரு வருடம் முன்னதாகவே இவர்களிடமிருந்து பிடுங்கியவர்களாவோம், இவர்களின் வளர்ச்சியை செயற்கையாகத் தடுத்து நிறுத்துவோம். விளையாட வேண்டுமென்ற தங்கள் தேவையை குழந்தைகளால் விட முடியாது என்பதை நாம் மறந்தால் நமது போதனைமுறை, அவர்களுடைய அறிதல் உலகில் வழிகாட்டியாக இருக்காது, இரவு நேரத்தில் தன்னந்தனியாக தன் மகளை தண்ணீர் எடுத்துவர காட்டிற்கு அனுப்பிய மாற்றாந்தாய் போலிருக்கும்.

குழந்தைகளுக்கு விளையாட்டுக்கள் மூலம் படிப்பு சொல்லித் தர வேண்டுமா, இதனால் இவர்களுக்கு என்ன பயன் என்று விஞ்ஞானிகள் இன்று வரை விவாதிக்கின்றனர். அதிகாரத் தொனியை விரும்பும் பலர் இப்படிப்பட்ட முறை குழந்தைகளுக்குத் தீங்கிழைக்க மட்டுமே செய்யும், ஏனெனில் படிப்பே ஒரு விளையாட்டு என்ற கருத்து இவர்களிடம் ஏற்படக் கூடும் என்கின்றனர். படிப்பு எவ்வளவு கடினமானது, சிக்கலானது என்று குழந்தைகள் முதலிலேயே நன்கு புரிந்து, உணர்ந்து, அனுபவிப்பது நல்லதாகும் என்று இதற்குப் பொருளாகாதா? ஒருவேளை, படிப்பே ஒரு வேதனை, இம்சை என்று குழந்தைகளுக்குத் தோன்றினால் என்ன செய்வது?

என் கருத்துப்படி, பிரச்சினையை இப்படி வைக்கக் கூடாது. விளையாட்டின் மனவியல் சாரத்தை வெளிப்படுத்தி, இந்த அடிப்படையில் கல்வி போதிப்பதைப் பற்றித் தெளிவுபடுத்துமாறு பிரச்சினை முன்வைக்கப்பட வேண்டும். விளையாட்டில் முக்கியமான அம்சம் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு. குழந்தை தானாகவே ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து, சலிப்பேற்படும் வரை விளையாடுகிறான், தன் தேவை பூர்த்தியானதாக உணர்ந்த

தும் இதை நிறுத்துகிறான். என் கருத்துப்படி, சுதந்திர மாகத் தேர்ந்தெடுக்கும் உணர்வுதான் விளையாட்டின் மன வியல் அடிப்படையாகும். ஆனால் தேர்ந்தெடுக்கும் உரிமை யைப் பயன்படுத்தும் குழந்தை கடினமற்ற நடவடிக்கை களை மட்டும்தான் விளையாட்டில் தேர்ந்தெடுக்கிறான் என்று இதற்குப் பொருளாகாது. விளையாட்டைத் தேர்ந் தெடுக்கும் குழந்தை இதன் மூலம் இடர்ப்பாட்டையும் தேர்ந்தெடுக்கிறான், இதைக் கடப்பதில் அவன் தன் கவனத் தையும் முயற்சிகளையும் ஒன்று திரட்டி செயல்முனைப் போடு இயங்குகிறான். இடர்ப்பாடுகளைக் கடக்கும் அம்சம் தான் குழந்தையைப் பொறுத்த மட்டில் விளையாட்டை உணர்ச்சிகரமானதாய், லட்சிய நோக்குடையதாய் ஆக்கு கிறது. விளையாட்டில் ஏற்படும் அதே உணர்ச்சிகளை, கல்வி கற்கும் போதும் குழந்தை அனுபவிப்பதில் என்ன தப்பு? அப்போது நாம் விளையாட்டுப் படிப்பைப் பற்றிப் பேச மாட்டோம், மாறாக, குழந்தைகளின் நிலைகளின் அடிப் படையிலான, இந்த நிகழ்வுப் போக்கில் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உணர்வை குழந்தைகள் அனுபவிப்பதன் அடிப்படையில் கல்வி போதிப்பதைப் பற்றிப் பேசுவோம். குழந்தை விளையாட்டினால் மகிழ்ச்சியடைகிறான் இல்லையா? படிப்பைக் கண்டும் அவன் மகிழ வேண்டும். ஆசிரியர்கள், குழந்தை வளர்ப்பாளர்களாகிய நாம் இந்த சந் தோஷத்தைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும். இது தான் ஆறு வயதுக் குழந்தைகள் விஷயத்தில் எனது பணி யின் அடிப்படைகளில் ஒன்று.

பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பை நாம் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தரவும் அவர்களை வளர்க்கவும் அதிக பட்சம் பயன்படுத்த வேண்டும். குழந்தைகளின் திறமை களை உரிய நேரத்தில் வளர்ப்பதற்கு அனுகூலமான சூழ் நிலைகளை ஏற்படுத்துவதற்காக மட்டுமே அவர்களை டெஸ்குகளில் உட்கார வைக்க வேண்டும். இத்திறமைகள் இந்த வயதில்தான் முளை விடுகின்றன, புதியவற்றை அறி யும் போக்கில் குழந்தைகளின் வெற்றிகரமான முன்னோக் கிய இயக்கத்திற்கு இவை பெரிதும் முக்கியமானவை. குழந்தை நன்கு படிக்க இவனுக்கு என்ன தேவை? குழந் தைக்குப் படிக்கவும் படித்ததைப் புரிந்து கொள்ளவும் தெரிய வேண்டும், தன் மனப்பதிவுகளை எழுதத் தெரிய

வேண்டும், படிப்பதை, பார்ப்பதைப் புரிந்து, கிரகிக்க குறிப்பிட்ட கண்ணோட்டம் வேண்டும், சுற்றியுள்ள ஏராளமான நிகழ்வுப் போக்குகளிலிருந்து, பொருட்களிலிருந்து மேற்கூறியவற்றைப் பிரித்தெடுக்கத் தெரிய வேண்டும், தான் பார்த்ததை வார்த்தைகளில் சொல்லத் தெரிய வேண்டும். இப்படிப்பட்ட திறமைகளையும் இவற்றோடு தொடர்புடைய ஞானத்தையும் கிரகிப்பதானது கல்விக்குக் குழந்தை தயார் என்று காட்டுகிறது. குழந்தைக்குப் பேச்சு வராவிடில் எப்படிப் படிக்க முடியாதோ அதே போல் மேற்கூறியது இல்லாமல் பள்ளியில் கல்வியை நிறைவேற்ற இயலாது. மேற்கூறிய திறமைகள் குழந்தையின் கல்வி-அறிதல் நடவடிக்கைக்கு அவசியமான கருவிகள் ஆகும். இவை எவ்வளவுக்கெவ்வளவு முழுமையானவையாக உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றிகரமாக அவனால் விஞ்ஞானக் கருத்துக்களையும் நடவடிக்கைகளையும் புரிந்து, கிரகிக்க முடியும். குழந்தைகள் இத்திறமைகளைப் பெறுவதை—இது எந்த சூழ்நிலையில் நடைபெற்றாலும், பள்ளியில் நடைபெற்றாலும் கூட—கல்வி என்று இச்சொல்லின் கண்டிப்பான பொருளில் கூற முடியாது. குழந்தை படிக்க, எழுத, எளிய கணக்குகளைப் போடக் கற்றுக் கொள்வதை கல்வி என்று அடிக்கடி அழைத்தாலும் இதை புதிய மட்டத்துக்கு இட்டுச் செல்லும் வளர்ச்சிப் போக்காகத்தான் கருத வேண்டும். படிப்பது, எழுதுவது, எளிய கணக்குகளைப் போடுவது—இவையெல்லாம் இன்றைய உலகில் குழந்தையின் வளர்ச்சிப் போக்கில் புதிய மட்டங்கள் மட்டுமே. நடக்கவும் பேசவும் குழந்தை எந்த சமூக-மனவியல் அடிப்படையில் கற்றுக் கொண்டானோ அதே அடிப்படையில்தான் இவற்றையும் கற்றுக் கொள்கிறான்.

வாழ்க்கை அனுபவம், உறுதி, பேச்சின் உள்ளடக்கமும் ஆழமும், வார்த்தைகளின் எண்ணிக்கை, நடவடிக்கைகளின் திடீர் எழுச்சி ஆகியவற்றில் ஆறு வயதுக் குழந்தைகள் ஏழு வயதுக் குழந்தைகளிடமிருந்து கணிசமாக மாறுபடுகின்றனர். முக்கியமானது என்னவெனில் விளையாட்டின் மீதுள்ள நாட்டமும் தேவையும் மாறுபடுவதாகும். ஓராண்டு வித்தியாசம், அல்லது இதற்கும் குறைவான வயது வேறுபாடு நம்மைக் குழப்பாமல் இருக்கட்டும்.

இவ்வாறு ஆறு வயதுக் குழந்தைகளுக்கும் ஏழு வயதுக்

குழந்தைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளாததானது இன்னொரு தவறான கருத்திற்கும் இட்டுச் செல்கிறது. அதாவது ஆறு வயதுக் குழந்தைகளின் தயாரிப்பு வகுப்பை முழு முதல் வகுப்பாக்க வேண்டுமென சொல்லப்படுகிறது. இதனால் ஆறு வயதுக் குழந்தைகளைப் பற்றிய பிரச்சினை மறைகிறது, பாடத்திட்டங்கள், பாட நூல்கள், முறையியல் சிபாரிசுகளை உருவாக்குபவர்கள் முன் தோன்றக் கூடிய சிக்கலான பிரச்சினைகளும் இதன் மூலம் ''அகற்றப்படுகின்றன''. இப்படியிருக்கும் பட்சத்தில் ஆறு வயதுக் குழந்தைகளைத் தவிர மற்ற அனைவருக்கும்—ஆசிரியர்கள், முறையியல் நிபுணர்கள், ஆணையாளர்கள் எல்லோருக்கும்—வசதியாகவும் எளிதாகவும் ஆகிறது. ஆறு வயதுக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பிரச்சினையை இப்படி எளிதாகத் ''தீர்ப்பதை'' நான் குழந்தை வாழ்க்கையை மட்டுமின்றி, குழந்தைகளின் மனவியல், ஆசிரியரியல், முறையியல் போன்ற விஞ்ஞானங்களையும் அதிகார முறையில் அணுகுவதாகப் பார்க்கிறேன்.

பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்புகளை ஆரம்பிப்பதை ஏதோ மூன்றாண்டு ஆரம்பக் கல்வி முறை சரிப்பட்டு வராததால், நான்காண்டு ஆரம்பக் கல்விக்குத் திரும்பி வருவதாகக் கருதக் கூடாது. இதை மூன்றாண்டு ஆரம்பக் கல்வியாகவும் (ஒவ்வொரு வகுப்பிலும் வயது வரம்பு ஓராண்டு குறைக்கப்பட்டுள்ளது) கருதக் கூடாது. உண்மையில் பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பு கல்வி முறையில் குணாம்ச ரீதியான மாற்றத்திற்கு வழிகோல வேண்டும். இது பிந்தைய வகுப்புகளுடன் ஒரே தொடர்ச்சியாக விளங்க வேண்டும்; அதே சமயம் குழந்தைகளின் விசேஷ வயதின் காரணமாக விசேஷ கடமைகளை ஏற்க வேண்டும், அதாவது மாணவன் எனும் சிக்கலான வேலைக்கு குழந்தையை மனவியல், தார்மீக, சமூக ரீதியாக, மூளைவளர்ச்சி ரீதியாக தயார்படுத்த வேண்டும். இந்த அம்சங்களும் ஆறு வயதுக் குழந்தைகளுடனான எனது பணியின் அடிப்படையாகத் திகழ்ந்தன.

பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பை அமல்படுத்துவதால் ஆரம்ப வகுப்புகளில் ஐந்து நாள் கல்வி வாரத்தை நிறைவேற்றுவது சாத்தியமாகிறது. ஐந்து நாள் கல்வி என்றால் வெறுமனே பாட நேரத்தைக் குறைக்க வேண்டுமென்றோ, இவற்றை ஐந்து நாட்களுக்கு ஏற்றபடி மாற்றியமைக்க

வேண்டுமென்றோ பொருளாகாது. ஐந்து நாள் கல்வி வாரத்தில் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தரும் தரம் உயர வேண்டும். ஐந்து நாள் வாரம் என்பது கல்வி-வளர்ப்பு போக்கு, பாடத்திட்டங்கள், பாடநூல்கள், முறையியல் அம்சங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டின் விளைவாக இருக்க வேண்டும். பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் ஒருவேளை ஐந்து நாள் வாரத்தை அமல்படுத்துவதால் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் கல்வி-வளர்ப்புப் போக்கை குணாம்ச ரீதியாக மேம்படுத்தாமல் இருந்தால், பிந்தைய வகுப்புகளில் ஆசிரியருக்கு நேரம் பற்றாக் குறையாக இருக்கையில் குழந்தைகளின் தயாரிப்பு மட்டத்தை உரிய அளவில் வைப்பது கடினமானதாக இருக்கும். அதே சமயம் குடும்ப வளர்ப்பின் பயன்தன்மையை எப்படி மேம்படுத்துவது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். பெற்றோர்களுக்கு சில அடிப்படை விஷயங்களை சொல்லித் தருவதோடு கூட மேல் வகுப்பு மாணவர்கள் மற்றும் விசேஷ தொழில்நுட்பக் கல்லூரி, உயர் கல்விக்கூட மாணவர்கள் ஆகியோருக்குக் குடும்ப வளர்ப்பு அடிப்படைகளைச் சொல்லித் தருவது சிறந்ததாய் இருக்கும். இந்த ஞானத்திற்குச் சமுதாய முக்கியத்துவம் உண்டு, இதை நாடு தழுவிய அளவில் இளைஞர்களுக்கு ஊட்ட வேண்டும். இரண்டு நாள் விடுமுறையின் போது குழந்தைகளின் ஓய்வு, உழைப்பு, பொழுது போக்கிற்குச் சமுதாய ரீதியாக ஏற்பாடு செய்யும் பிரச்சினையும் தோன்றுகிறது.

பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் கல்வி போதனை எவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பது வகுப்பறையில் உள்ள ஆசன இருக்கைகளைப் பெரிதும் பொறுத்துள்ளது. மற்ற சாதனங்கள், கருவிகளோடு சேர்ந்து இவையும் கல்வி முறையின் இயல்பான அங்கமாக இருக்க வேண்டும், குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு ஆசிரியருக்கு உதவ வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆரம்ப வகுப்புகளில் விசேஷ ஆசன இருக்கைகள் பிரச்சினை ஸ்தல விஷயமாகவே இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆரம்ப வகுப்பிலும் (பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பு உட்பட) ஒரு சில நவீன, போதனைமுறைக்கு ஏற்ற வசதியான கரும்பலகைகள், ஆசிரியருக்கு வசதியான மேசை, குழந்தைகளுக்குத் தனித்தனி சிறு அலமாரிகள் முதலியன தேவை. டெஸ்க்குகள்? பூர்

வாங்கத் தயாரிப்பு வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை நான்காண்டுகளுக்கு குழந்தை ஒரே டெஸ்கில்—அதுவும் முதலில் இதன் கால்கள் ஆடும், பின் இதன் மீது சாய வேண்டும்—உட்கார வேண்டும் என்பதை சகித்துக் கொள்ள இயலுமா? குழந்தைகளின் உயரத்திற்கேற்ப டெஸ்குகளைப் போடவும், வேறு வேலைகளின் போது இவற்றை மடித்து வைத்து இடமேற்படுத்தவும் என்னால் முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இந்த டெஸ்குகளை மேடைகளை அமைக்க, வீடுகள், கப்பல்களைக் கட்டி விளையாட குழந்தைகளால் பயன்படுத்த முடியும் என்றால் பள்ளி வாழ்க்கை எவ்வளவு சுவாரசியமானதாக, உணர்ச்சிகரமானதாக மாறும்?

பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் எப்படி செயல்பட வேண்டும் என்பது சம்பந்தமாக என் அனுபவம் பத்து கேள்விகளை என் முன் வைத்துள்ளது. இவற்றிற்கு என்னால் உறுதியாக ''வேண்டாம்'' (''முடியாது'', ''இல்லை'') என்றோ ''ஆம்'' (''முடியும்'', ''அவசியம்'') என்றோ பதில் சொல்ல முடியும்.

பின்வரும் கேள்விகளுக்கு நான் எதிர்மறையில் பதில் அளிப்பேன்:

1. முதல் வகுப்புப் பணியின் அனுபவத்தை மாற்றமின்றி அப்படியே பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் பயன்படுத்தலாமா?—கூடாது.

2. ஆசிரியரின் கட்டளைகள், ஏவல்களை உடனடியாக நிறைவேற்றுமாறு குழந்தைகளைக் கட்டாயப்படுத்தலாமா?—கூடாது.

3. கட்டாய வீட்டுப் பாடங்களைக் குழந்தைகளுக்குத் தரலாமா?—கூடாது.

4. குழந்தைகளுக்கு மதிப்பெண்களைப் போடலாமா?—கூடாது.

5. வகுப்பில் யார் மற்றவரை விட நன்றாகப் படிக்கின்றனர் என்று சொல்லலாமா?—கூடாது.

6. வகுப்பில் குழந்தைகள் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார வேண்டும் என்று கோரலாமா?—கூடாது.

7. குழந்தை வகுப்புக்குக் கொண்டு வந்த விளையாட்டு சாமானைப் பிடுங்கலாமா?—கூடாது.

8. குழந்தையைப் பெயில் செய்யலாமா?—கூடாது.

9. சீருடையில்தான் பள்ளிக்கு வர வேண்டுமென குழந்தைகளிடம் சொல்லலாமா?—கூடாது.

10. ஆறு வயதாக 2—3 மாதங்கள் உள்ள குழந்தைகளை பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் சேர்த்துக் கொள்ளலாமா?—கூடாது.

பின்வரும் கேள்விகளுக்கு ''ஆம்'' என்று பதில் தருவேன்:

1. பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பிற்கு விசேஷ முறை வேண்டுமா?—ஆம்.

2. நர்சரிப் பள்ளியில் மூத்த வயது குழந்தை வளர்ப்புப் பணியில் கிடைத்த அனுபவத்தை பூர்வாங்கத் தயாரிப்பு வகுப்பில் பயன்படுத்தலாமா?—ஆம்.

3. பாடங்களைப் படிப்பதில் குழந்தைகள் ஆசிரியரை விஞ்ச அவர்களுக்கு ஊக்கம் தரலாமா?—ஆம்.

4. குழந்தைகள் கண்டுபிடித்து, திருத்த வேண்டும் என்பதற்காக ஆசிரியர் வேண்டுமென்றே தப்பு செய்யலாமா?—ஆம்.

5. குழந்தைகளுடனான பணியில் ஆசிரியர் கலைத்திறமையை வெளிப்படுத்த வேண்டுமா?—ஆம்.

6. குழந்தைகள் சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதற்காக பல்வேறு விதமான வேலைகளைத் தரலாமா?—ஆம்.

7. குழந்தைகளின் சுய வேலையை அதிகப்படுத்த வேண்டுமா?—ஆம்.

8. குழந்தைகள் பாடங்களை மதிப்பிட வேண்டுமா?—ஆம்.

9. குழந்தைகளைப் பற்றிய சான்றிதழ்களைப் பெற்றோர்களுக்கு வழங்க வேண்டுமா, குழந்தைகளின் வேலைகள் அடங்கிய பாக்கெட்டுகளைத் தயாரிக்க வேண்டுமா?—ஆம்.

10. பெற்றோர்களுக்கான வெளிப்படையான பாடங்களை நடத்த வேண்டுமா?—ஆம்.

இந்த ''ஆமாம்'', ''கூடாது'' எனும் பதில்களையும் குழந்தைகளுடனான வேலையின் போது தோன்றக் கூடிய இது போன்ற பிறவற்றையும் எனது கருத்துப்படி மிக முக்கியமான, ஒரே சரியான ஆசிரியரியல் நிலையிலிருந்து பெறுகிறேன். இதையே இனியும் தொடர்ந்து பின்பற்றுவேன்:

> குழந்தைகளை ஆசிரியர் முழு மனதோடு நேசிக்க வேண்டும், இவர்களை இப்படி நேசிக்க, இந்த நேசத்தை எப்படி வெளிப்படுத்த வேண்டுமென இவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பள்ளி நாளையும் ஒவ்வொரு பாடவேளையையும் ஆசிரியர் குழந்தைகளுக்கான பரிசாக யோசித்துச் செயல்பட வேண்டும். குழந்தை ஆசிரியருடன் ஒவ்வொரு முறை கலந்து பழகும் போதும் இது மகிழ்ச்சியையும் எதிர்கால நம்பிக்கையையும் அவன் மனதில் ஊட்ட வேண்டும்.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துகளையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136, அண்ணா சாலை, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.